அம்மா வழியில் நல்லாட்சி
அதற்கு ஓராண்டு சாதனையே சாட்சி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்

பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள்

அம்மா வழியில் நல்லாட்சி - அதற்கு
ஓராண்டு சாதனையே சாட்சி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள்

பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில்

ஆற்றிய உரைகள்

சிறப்பு வெளியீடு எண். 18

தமிழரசு

இலவச வெளியீடு

ஜனவரி 2018

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :

அரசு மைய அச்சகம்

சென்னை – 600 079.

பொருளடக்கம்

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
1.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 04.03.2017 அன்று சென்னை மண்டலத்திற்கான அரசு திட்டங்களை துவக்கி வைத்து ஆற்றிய உரை	1
2.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 06.03.2017 அன்று டாக்டர் ராதாகிருஷ்ணன் நகரில் நடைபெற்ற விழாவில் கச்சா எண்ணெய் கசிவால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரண உதவித் தொகை வழங்கி ஆற்றிய உரை	9
3.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 07.03.2017 அன்று சேலம் மண்டலத்திற்கான அரசு திட்டங்களைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை	18
4.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 07.03.2017 அன்று திருச்சி மண்டலத்திற்கான அரசு திட்டங்களைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை	27
5.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 08.03.2017 அன்று திருநெல்வேலி மண்டலத்திற்கான அரசு திட்டங்களைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை	39

வ. எண்	உரை விவரம்	பக்கம் எண்
6.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 08.03.2017 அன்று மதுரை மண்டலத்திற்கான அரசு திட்டங்களைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை	51
7.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 18.03.2017 அன்று கோயம்புத்தூர் மண்டலத்திற்கான அரசு திட்டங்களைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை	63
8.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 31.03.2017 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், ஊனமாஞ்சேரியில் அமைந்துள்ள தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் நடைபெற்ற பயிற்சி உதவி ஆய்வாளர்களின் பயிற்சி நிறைவு அணிவகுப்பு விழாவில் ஆற்றிய உரை	84
9.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 01.04.2017 அன்று திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர், எஸ்.ஆர்.எம். மேல்நிலைப் பள்ளியில் பள்ளிக் கல்வித் துறை சார்பில் நடைபெற்ற விரிவுரையாளர்கள் பணியிடங்களுக்கான நியமன ஆணைகளை வழங்குதல், பேரிடர் மேலாண்மை விழிப்புணர்வு குறித்த மாநில அளவிலான போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசு வழங்குதல், பல்வேறு பள்ளிக் கல்வி திட்டங்கள் தொடக்க விழாவில் ஆற்றிய உரை	98

வ. எண்	உரை விவரம்	பக்கம் எண்
10.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 01.04.2017 அன்று திருவள்ளூர் மாவட்டம், கொரட்டூரில் நடைபெற்ற அரசு விழாவில் பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு மின்னணு குடும்ப அட்டைகளை பயனாளிகளுக்கு வழங்கி ஆற்றிய உரை	107
11.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 18.04.2017 அன்று சென்னை மாநிலக் கல்லூரியின் 175ஆவது ஆண்டு நிறைவு விழா, கல்லூரி ஆண்டு விழா மற்றும் விளையாட்டு விழாவில் ஆற்றிய உரை	116
12.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 23.04.2017 அன்று புது தில்லியில் நடைபெற்ற நீத்தி ஆயோகின் (NITI Aayog) மூன்றாம் ஆளுமை குழுக் கூட்டத்தில் ஆற்றிய உரை	128
13.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 05.05.2017 மதுரையில் அரசு திட்டங்களைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை	151

வ. எண்	உரை விவரம்	பக்கம் எண்
14.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 14.05.2017 அன்று திருமங்கலம் மெட்ரோ இரயில் நிலையத்தில் நடைபெற்ற விழாவில், திருமங்கலம் முதல் நேரு பூங்கா வரையிலான சென்னை மெட்ரோ இரயில் பச்சை வழித்தடம் சுரங்கப்பாதையில் பயணிகள் சேவையைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை	160
15.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 19.05.2017 அன்று 121ஆவது உதகை மலர்க்காட்சி தொடக்க விழாவில் ஆற்றிய உரை..	169
16.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 27.05.2017 அன்று 42ஆவது ஏற்காடு கோடை விழா மலர்க் கண்காட்சியில் ஆற்றிய உரை..	178
17.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 03.06.2017 அன்று இந்திய தொழில் கூட்டமைப்பின் CII மூன்றாவது தென்மண்டல மாநாட்டில் ஆற்றிய உரை	191
18.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 09.06.2017 அன்று புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரியை துவக்கி வைத்து, கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டடங்களைத் திறந்து வைத்து ஆற்றிய உரை	197

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
19.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 11.06.2017 அன்று ஈரோட்டில் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரை	210
20.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 14.07.2017 அன்று சென்னை, ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற அவ்வையார் திருவுருவச்சிலை திறப்பு விழாவில் ஆற்றிய உரை	227
21.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 23.07.2017 அன்று சேலம் மாவட்டம், எடப்பாடியில் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரை	234
22.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் சேலம் அரசுப் பொருட்காட்சி தொடக்க விழாவில் 23.07.2017 அன்று ஆற்றிய உரை	243
23.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 26.07.2017 அன்று நபார்டு வங்கி 36ஆவது ஆண்டு மற்றும் சுயஉதவிக்குழுக்கள் பரிசளிப்பு விழாவில் ஆற்றிய உரை	256
24.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 27.07.2017 அன்று டாக்டர் A.P.J. அப்துல் கலாம் மணிமண்டபம் திறப்பு விழா, ராமேசுவரம் – அயோத்தி விரைவுத் தொடர் வண்டி துவக்க விழா, ஆழ்கடல் மீன்பிடிப்பினைப் பரவலாக்கும் திட்ட துவக்க விழாவில் ஆற்றிய உரை	266

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
25.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 28.07.2017 அன்று திருவொற்றியூர் – மாட்டுமந்தை இரயில்வே மேம்பாலத்தை திறந்து வைத்து ஆற்றிய உரை	275
26.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 07.08.2017 அன்று 3வது தேசிய கைத்தறி தின விழாவில் ஆற்றிய உரை	279
27.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் சுதந்திர தின உரை (15.08.2017)	288
28.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 15.08.2017 அன்று தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கங்கள் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரை	298
29.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 26.08.2017 அன்று தென் மண்டல துப்பாக்கி சுடும் சாம்பியன்ஷிப் போட்டியில் பரிசுகள் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரை	305
30.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 05.09.2017 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் ஆற்றிய உரை	313

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
31.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 16.09.2017 அன்று சென்னை உயர்நீதிமன்ற பாரம்பரிய கட்டடத்தின் 125–வது ஆண்டு விழாவில் ஆற்றிய உரை	323
32.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 21.09.2017 அன்று சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா கலையரங்கத்தில் நடைபெற்ற ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கும் விழாவில் ஆற்றிய உரை	330
33.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 08.10.2017 அன்று சேலம் மாவட்டம், எடப்பாடியில் நடைபெற்ற பல்வேறு அரசு துறைகளுக்கு அடிக்கல் நாட்டும் விழா மற்றும் அரசு நலத் திட்டங்கள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை	342
34.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 08.10.2017 அன்று பள்ளிப்பாளைம் – ஈரோடு இடையே புதிதாக கட்டப்பட்டுள்ள உயர் மட்ட பாலத்தை திறந்து வைத்து ஆற்றிய உரை	350
35.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 16.10.2017 அன்று சென்னை ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை	361

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
36.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 16.10.2017 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்ட .... சீருடைப் பணியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி ஆற்றிய உரை	365
37.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 01.11.2017 அன்று கோயம்புத்தூரில் நடைபெற்ற விழாவில், நெடுஞ்சாலைத் துறை சார்பில் கட்டடப்பட்டுள்ள மேம்பாலத்தை திறந்து வைத்து ஆற்றிய உரை	374
38.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 06.11.2017 அன்று தினத்தந்தி நாளிதழின் பவள விழாவில் ஆற்றிய உரை	377
39.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 13.11.2017 அன்று, சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற பள்ளி மாணவ, மாணவியருக்கு பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்பு தொடக்க விழா மற்றும் கையேடு வெளியீட்டு விழாவில் ஆற்றிய உரை	384
40.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 21.11.2017 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மருத்துவர்கள் மற்றும் அமைச்சு பணியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி ஆற்றிய உரை	394

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
41.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 24.11.2017 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற உடல் உறுப்பு தானம் – வார விழாவில் ஆற்றிய உரை	400
42.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்* ***திரு எடப்பாடி கே.பழனிசாமி*** *அவர்கள் 2.12.2017 அன்று சேலத்தில் ரூபாய் 26.77 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள திருவாக்கவுண்டனூர் மேம்பாலத்தை திறந்து வைத்து ஆற்றிய உரை*	409
43.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 12.12.2017 அன்று கன்னியாகுமரி மாவட்டம், தூத்தூர் கிராமத்தில், மீனவ கிராமப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களை சந்தித்து, "ஒகி" புயலால் பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு ஆறுதல் கூறி, சிறப்பு நிவாரண உதவிகளை அறிவித்து ஆற்றிய உரை	413
44.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்* ***திரு. எடப்பாடி கே.பழனிசாமி*** *அவர்கள் 05.01.2018 அன்று சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிகிச்சை சிறப்பு மருத்துவமனை கூட்ட அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 390 கிராம சுகாதார செவிலியர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி ஆற்றிய உரை*	419

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
45.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் 13.01.2018 அன்று சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் புனரமைக்கப்பட்ட மேட்டூர் அணை பூங்கா மற்றும் காவிரி நடுவர்மன்ற இறுதி ஆணையினை மத்திய அரசிதழில் வெளியிட செய்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சாதனையை போற்றிடும் நிறுவப்பட்ட நினைவுத் தூண் ஆகியவற்றை திறந்து வைத்து ஆற்றிய உரை*	427
46.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 16.01.2018 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை	435

❖ ❖ ❖

சென்னை மண்டலத்தில் ரூ.1,486.12 கோடி செலவில் நிறைவுபெற்ற பணி மற்றும் புதிய திட்டப்பணிகள் துவக்கம்!

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி இந்த இனிய விழாவிற்கு வருகைப் புரிந்துள்ள மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

வரவேற்புரை நிகழ்த்திய தலைமைச் செயலாளர் அவர்களே!

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

தமிழ்நாடு அரசு உயர் அலுவலர்களே!

காவல்துறை அதிகாரிகளே!

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!

வணக்கத்துக்குரிய பொதுமக்களே!

உங்கள் அத்தனை பேருக்கும் பணிவான வணக்கத்தை சமர்ப்பிக்கிறேன்.

மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக உலகமே போற்றும் அளவுக்கு உன்னத ஆட்சியை வழங்கிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியின் தொடர் சாதனைகளாக, இன்று பல்வேறு அரசு திட்டங்களை தொடங்கி வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பொதுமக்கள் பலன்அடையும் வகையில் நாட்டுக்கு அர்ப்பணிக்கும் நிகழ்வில் கலந்துகொள்வதில் பெருமிதம் கொள்கிறேன். இந்த அரிய வாய்ப்பை எனக்கு வழங்கிய, மறைந்தும் மறையாமல் எல்லோர் உள்ளங்களிலும் நிறைந்திருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வாழும் திசை நோக்கி மீண்டும் வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண எண்ணிலடங்கா திட்டங்களை உடனுக்குடன் நடைமுறைப்படுத்தி கடைகோடி மக்களும் பலனடையும் வகையில் செயலாற்றி முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விளங்கினார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் எண்ணங்களை நிறைவேற்றும் வகையில், இத்திட்டங்களை இப்போது நான் தொடங்கி வைக்க அம்மா அவர்களால் பணிக்கப்பட்டிருப்பதாகவே உணர்கிறேன். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியின் தொடர்ச்சியாகவே, இத்திட்டங்களை மக்களுக்கு நாங்கள் அர்ப்பணிக்கிறோம்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு தமிழ்நாட்டின் முதலமைச்சராக பதவியேற்று, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் முனைப்போடு, 2016ஆம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலுக்கான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற

கழகத்தின் தேர்தல் அறிக்கையில் மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவும், தமிழ்நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், பதவியேற்ற முதல் நாளிலேயே 5 சிறப்பு திட்டங்களுக்கான கோப்புகளில் நான் கையெழுத்திட்டேன். அதற்கான அரசாணைகளும் வெளியிடப்பட்டுள்ளது.

❖ பணியிடங்களுக்கும், பிற வேலைகளுக்கும் எளிதில் செல்லும் வகையில் ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சம் உழைக்கும் மகளிர் பயன்பெறும் வகையில் சுமார் 200 கோடி ரூபாய் செலவில் "அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தை", அறிமுகப்படுத்தினோம்.

❖ ஆண்டொன்றுக்கு சுமார் ஆறு இலட்சம் தாய்மார்கள் பயனடையும் வகையில், ஏழைக் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்பட்டு வந்த டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி 12 ஆயிரம் ரூபாயிலிருந்து 18 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது,

❖ தமிழ்நாட்டில் மீனவர்களுக்கான தனி வீட்டுவசதி திட்டத்தைச் செயல்படுத்தும் விதமாக, ஒரு வீட்டிற்கு ஒரு இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பில் 5 ஆயிரம் வீடுகள் கட்ட உத்தரவிடப்பட்டுள்ளது.

❖ வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வழங்கப்பட்டுவந்த மாதாந்திர உதவித்தொகையை இருமடங்காக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. இதன்மூலம் 55 ஆயிரத்து 228 இளைஞர்கள் உயர்த்தப்பட்ட உதவித்தொகையினைப் பெறுவர்,

❖ மதுவிலக்கு படிப்படியாக அமல்படுத்தப்பட்டு, பூரண மதுவிலக்கு என்ற நிலை எய்தப்படும் என்ற அடிப்படையில் ஏற்கெனவே மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு, 500 மதுபானக் கடைகள் மூடப்பட்டன. அதனைத்தொடர்ந்து, இப்பொழுது மேலும் 500 மதுபானக் கடைகள் மூடப்பட்டுள்ளன.

❖ மாண்புமிகு அம்மாவின் ஆசியோடு பதவியேற்ற அரசு குறுகிய நாட்களிலேயே மேலும் பல திட்டங்கள் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாட்டில் நடப்பாண்டு பருவ மழை பொய்த்த காரணத்தினால் கடும் வறட்சி ஏற்பட்டு, விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களது இன்னல்களைப் போக்கும் வண்ணம், விவசாயிகளுக்கு 2,247 கோடி ரூபாய் பயிர் இழப்பு வறட்சி நிவாரண உதவித்தொகை வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.

❖ மாநிலத்திலுள்ள நீர் ஆதாரங்களை திறம்பட மேலாண்மை செய்து, தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்தி வறட்சியினை எதிர்கொள்ளவும் மழை நீரை சேமித்தும் புதிய நீர் ஆதாரங்களை உருவாக்கியும், பயனீட்டாளர்களின் பங்களிப்புடன் நீர் நிலைகளைப் புனரமைக்க பண்டைய "குடிமராமத்து" திட்டத்திற்கு புத்துயிர் அளித்து நடப்பு நிதியாண்டில் 100 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்திட ஆணையிடப்பட்டுள்ளது.

❖ 28.01.2017 அன்று சென்னை எண்ணூர் பகுதியில் ஏற்பட்ட எண்ணெய்க் கசிவு காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 30 ஆயிரம் மீனவக் குடும்பங்களுக்கு தலா 5,000 ரூபாய் வீதம் இடைக்கால நிவாரணம், 15 கோடி ரூபாய் வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

❖ மத்திய அரசின் ஏழாவது ஊதியக் குழு பரிந்துரைத்துள்ள திருத்திய ஊதிய விகிதங்களை, தமிழக அரசுப் பணியாளர்களுக்கும் மாற்றியமைப்பதற்கு தேவையான பரிந்துரைகளை அளித்திட அலுவலர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

எனவே, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காட்டிய வளர்ச்சிப் பாதையில் செயல்படும் அம்மா அரசு, தொடர்ந்து அப்பாதையில் சென்று சீரிய திட்டங்களை செயல்படுத்தும்.

கேட்டு செய்கின்ற அரசு அல்ல இது. மக்களின் எண்ணங்களை அறிந்து கேட்காமலேயே செய்கின்ற அரசு அம்மா அரசு. சொன்ன திட்டங்களை மட்டுமல்ல, சொல்லாத திட்டங்களையும் நிறைவேற்றும் அம்மா அரசு.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு."

என்ற திருக்குறளுக்கு ஏற்றாற்போல் மாண்புமிகு புரட்சிதலைவி அம்மாவின் ஆட்சி உலகமே போற்றும் அளவிற்கு சிறப்பாக அமைந்திருந்தது. அதனை உறுதிப்படுத்தும் வகையில்தான் பல்வேறு அரசு திட்டங்களின் தொடக்க விழாவாகவும், நிறைவேற்றப்பட்ட திட்டங்களின் திறப்பு விழாவாகவும் இப்போது இந்த விழா நடைபெற்று கொண்டிருக்கிறது.

இன்று, சென்னை, கடலூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், விழுப்புரம், வேலூர் ஆகிய 7 மாவட்டங்களில், 1,375 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவு செய்யப்பட்ட 7,506 திட்டப்பணிகளை தொடங்கி வைப்பதிலும், 111 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுவதிலும் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

❖ சென்னை மாவட்டத்தில் அயோத்தியா குப்பத்தில் 81 கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவில் 1,128 குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் உட்பட மொத்தம் 577 கோடியே 34 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்,1583 பணிகள் இன்று மக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

❖ கடலூர் மாவட்டத்தில், 6 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மீன் இறங்கு தளங்கள் 7 கோடியே

16 இலட்சம் ரூபாய் மதிப்பிலும் 110 KV துணை மின்நிலையம் உட்பட மொத்தம் 53 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 208 பணிகள் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

❖ காஞ்சிபுரம் மாவட்டத்தில், இருங்காட்டுக்கோட்டை மற்றும் வல்லம், வடகல் பகுதியில் சரக்கு வாகன முனையம், 21 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், 57 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் நெடுஞ்சாலைத்துறை மூலம் கட்டி முடிக்கப்பட்டுள்ள வண்டலூர் கூடுவாஞ்சேரிக்கிடையில் இரயில்வே மேம்பாலம் உட்பட மூன்று பாலங்கள், ஆக மொத்தம் 205 கோடியே 42 இலட்சம் செலவில் 96 பணிகள் மக்களின் பயன்பாட்டிற்காக தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

❖ திருவண்ணாமலை மாவட்டத்தில் 45 கோடியே 53 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள துணை மின்நிலையங்கள் இதர கட்டடங்கள் என மொத்தம் 192 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3,112 பணிகள் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

❖ திருவள்ளூர் மாவட்டத்தில், 71 கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் மூலமாக கூடப்பாக்கம் கிராமத்தில் 1,024 குடியிருப்புகள் உட்பட மொத்தம் 285 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1,731 பணிகள் இன்று மக்கள் பயன்படுத்த தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

❖ வேலூர் மாவட்டத்தில், இச்சிபுதூர் கிராமத்தில் 12 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் துணை மின்நிலையம் ஒன்றும், காவல் துறை வீட்டுவசதி வாரியம் மூலமாக 23 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில் 164 குடியிருப்புகள் மற்றும் 4 காவல் நிலையங்கள் உட்பட 92 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 307 பணிகள் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

❖ விழுப்புரம் மாவட்டத்தில், காவல் துறை வீட்டுவசதி வாரியம் மூலமாக 29 கோடியே 77 இலட்சம் ரூபாய் செலவில் 92 குடியிருப்புகள் மற்றும் 4 காவல் நிலையங்கள் உட்பட 81 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 471 பணிகள் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

ஆக, 1,486 கோடியே 12 இலட்ச ரூபாய் செலவில் நிறைவுப் பெற்ற பணிகளையும், புதிய திட்ட பணிகளையும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு தொடங்கி வைப்பதில் நான் பெருமை கொள்கிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றத்தின் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 110 விதியின்படி அறிவிக்கப்பட்ட திட்டங்கள் எதுவும் செயல்படுத்தப் படுவதில்லை என்று எதிர்கட்சிகளின் குற்றச் சாட்டுகளில் உண்மையில்லை. இங்கே நான் தொடங்கி வைக்கின்ற திட்டங்களில் பெரும்பாலனவை 110 விதியின்கீழ் அறிவிக்கப்பட்ட திட்டங்களாகும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் 110 விதியின்கீழ் அறிவிக்கப்பட்ட அனைத்து திட்டங்களும் தமிழ்நாட்டு மக்களின் தலைவிதியையே மாற்றியது என்பதை யாராலும் மறுக்கமுடியாது.

பதவியேற்ற இருவாரங்களிலேயே இத்தனை பணிகளையும் எங்களால் செய்ய முடிகின்றது என்றால் அதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சிதலைவி அம்மா அவர்கள் எங்களுக்கு அளித்த பயிற்சியும், வழிகாட்டுதலும்தான் காரணம்.

“மக்களால் நான் மக்களுக்காகவே நான்” என்ற மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தாரக மந்திரத்தை பின்பற்றி, ஏழை எளியோரின் தேவையறிந்து, அவர்களை மகிழ்விக்கின்ற அளவிற்கு இத்திட்டங்கள் வகுக்கப் பெற்றுள்ளன. இதயதெய்வம் அம்மா அவர்களால் விரைவாக நிறைவேற்றப்பட்ட திட்டங்களை

அனைத்து தரப்பு மக்களும் பாராட்டியிருக்கின்றன. அந்தப் பாராட்டுகள் அனைத்தும் அம்மா ஆசியுடன் அம்மா வழியில் நடக்கும் இந்த அம்மா அரசுக்கும் கிடைக்கும் என்பது நிச்சயம். அதற்காக மாண்புமிகு அமைச்சர் பெருமக்களோடு நானும் அரசு அலுவலர்களும் மக்களோடு இணைந்து ஒருமித்து உழைத்து புரட்சித்தலைவி அம்மா அவர்களின் எண்ணங்களை ஈடேற்றுவோம் என்று இந்த நேரத்தில் நாம் அனைவரும் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்

தமிழர்களின் கோரிக்கைகளை வென்றெடுக்க, தமிழக மக்களின் உரிமைகளை நிலைநாட்ட, “அமைதி, வளம், வளர்ச்சி” என்ற பாதையில் தமிழகத்தை அழைத்துச் சென்ற மாண்புமிகு அம்மா அவர்களுக்கு வழங்கிய ஒத்துழைப்பைப் போலவே, அம்மா வழியில் நடக்கும் அம்மா அரசுக்கும் தொடர்ந்து ஆதரவு நல்க வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விழா சீரோடும் சிறப்போடும் நடைபெற ஒத்துழைத்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் என்னுடைய மனைமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி!

வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
04.03.2017 அன்று சென்னை மண்டலத்திற்கான
அரசு திட்டங்களை துவக்கி வைத்து ஆற்றிய உரை.

மீனவர்களை பாதுகாப்பதில் எப்போதும் விழிப்புடனும், விவேகத்துடனும் செயல்படும் அரசு!

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்கி, இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு ஒரு சிறப்பான உரையாற்றிய மீனவக் குடும்பத்திலே பிறந்து, மீனவ மக்களுடைய நலனுக்காக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அமைச்சரவையிலும், இப்போது அம்மா அவர்களுடைய அரசிலும் தொடர்ந்து அமைச்சராக இருந்து, இந்தப் பகுதியிலுள்ள மீனவ மக்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை அரசின் மூலமாக பெற்றுத் தந்து சிறப்புரையாற்றிய நிதி மற்றும் மீன்வளத்

துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் திரு. ஜெயகுமார் அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. கருப்பண்ணன் அவர்களே, இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

தலைமைச்செயலாளர் அவர்களே,

அரசு உயர் அதிகாரிகளே,

காவல்துறை அதிகாரிகளே,

பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே,

மாண்புமிகு அம்மாவின் பாசத்திற்குரிய

மீனவ பெருமக்களே, மற்றும் கூடியுள்ள பொதுமக்களே

உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

புரட்சித்தலைவர் பொன்மனச்செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள்

“தரை மேல் பிறக்க வைத்தான்
எங்களை தண்ணீரில்
பிழைக்க வைத்தான்”

என்று படகோட்டி படத்தின் வாயிலாக, மீனவர்களின் வாழ்க்கையை தெளிவாக படம் பிடித்து காட்டினார்கள்.

மீனவர்களின் நலத்திலும், வளத்திலும் புரட்சித்தலைவர் அவர்கள் கொண்ட ஈடுபாடும் அக்கறையும் போலவே, மாண்புமிகு அம்மா அவர்களும், மீனவர்களின் பாதுகாப்பிற்கும் வாழ்வாதாரத்திற்கும் பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி, மீனவர்களுக்கு உற்ற தோழராகவும், பாதுகாவலராகவும் விளங்கினார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடு நடைபெறும் நல்லாட்சியில், மீனவரின் வாழ்க்கையை மேலும் மேம்படுத்தும் வகையில் பல்வேறு நலத் திட்டங்கள் நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது.

❖ மாண்புமிகு அம்மா அவர்களின் விருப்பப்படி, மீனவர்களுக்கான தனி வீட்டுவசதி திட்டத்தை செயல்படுத்த, 85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5,000 வீடுகள் கட்டுவதற்கு முதலமைச்சராகப் பொறுப்பேற்று, தலைமைச்செயலகம் வந்த அன்றே ஆணை வெளியிடப்பட்டது. இது ஒன்றே மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அரசு மீனவர்களின் நலப் பணிகள் தொடர்ந்து செயல்படுத்தும் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

❖ மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மீனவர்களின் நலன் மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் மீன் வள மேம்பாட்டிற்கும் அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது.

❖ அம்மா அவர்கள் சொன்னதையெல்லாம் செய்ததோடு, சொல்லாத பலவற்றையும் செய்து காட்டி சாதனை படைத்ததை நீங்களெல்லாம் அறிந்ததே.

❖ முந்தைய தி.மு.க. அரசால் 2010–2011ஆம் ஆண்டில் மீன் வளத்துறைக்காக ஒதுக்கப்பட்ட தொகை 193 கோடியே 33 இலட்சம் ரூபாய்.

❖ மக்களால் நான், மக்களுக்காகவே நான் என்று தவ வாழ்வு வாழ்ந்த மாண்புமிகு அம்மா அவர்கள் 2016–2017ஆம் ஆண்டில் 744 கோடி ரூபாயாக பன்மடங்கு உயர்த்தி மீனவர்கள் வாழ்வுக்கு வளமூட்டினார்கள்.

❖ மாநிலத்தின் மீன்வள உட்கட்டமைப்பு வசதிகளை முனைப்புடன் மேம்படுத்தும் விதமாக, மாண்புமிகு அம்மா

அவர்களின் அரசு கடந்த 5 ஆண்டுகளில் எப்பொழுதும் இல்லாத வகையில் அதிகபட்சமாக 1,105 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகளை முடித்துள்ளது.

❖ இந்தியாவிலேயே தமிழ்நாட்டினை முதன்மை மாநிலமாக்கிட அயராது பாடுபட்ட மாண்புமிகு அம்மா அவர்கள் மீனவர் மேம்பாட்டிற்காக பல்வேறு முன்னோடி திட்டங்களை தொடர்ந்து அறிவித்து செயல்படுத்தினார்கள்.

❖ மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தியாவிலேயே முதன் முறையாக, மீன்பிடிப்பு குறைந்த காலங்களில் ஒவ்வொரு மீனவ குடும்பத்திற்கும் அரசு நிவாரணமாக 4,000/– ரூபாய் வழங்கி வந்ததை 5,000/– ரூபாயாக உயர்த்தினார்கள்.

❖ மீன்பிடித் தடை காலங்களில் நிவாரணமாக 2,000/– ரூபாய் வழங்கியதை 5,000/–ரூபாயாகவும் உயர்த்தி வழங்கி மீனவர் வாழ்க்கையில் ஒளி ஏற்றினார்கள்.

❖ மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிக்க புதிய தூண்டில் முறை சூரை மீன்பிடி படகுகள் கட்டுவதற்கு 30 இலட்சம் ரூபாய் வரை அதிகபட்ச மானிய உதவி வழங்கும் திட்டத்தையும் மாண்புமிகு அம்மா அவர்கள் தான் தந்தார்கள்.

❖ இதே ஆர்.கே.நகர் தொகுதியில் மட்டும் மீனவர்களுக்காக பல்வேறு திட்டப்பணிகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து செய்து வருகிறது. குறிப்பாக ஒருசிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

❖ புதிய சூரை தூண்டில் மற்றும் செவுள் வலை மீன்பிடி விசைப் படகுகளைக் கட்டிட 50 சதவீத மானியமாக அதிக பட்சமாக 30 இலட்சம் ரூபாய் வழங்கும் திட்டத்தின் கீழ் 11 பயனாளி குழுக்களுக்கு 3 கோடியே 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு படகு கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

❖ மீன்பிடிப்பு குறைவு கால சிறப்பு நிவாரணமாக 2016–2017 ஆண்டில் து4,524 மீனவ குடும்பங்களுக்கு 22 கோடியே 62 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

❖ தேசியகடல்மீனவர்சேமிப்புமற்றும்நிவாரணத்திட்டத்தின்கீழ் 2016–2017இல் 7,129 மீனவர்களுக்கு 64 இலட்ச ரூபாய் மாநில அரசு நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாடு கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் 2016–2017இல் 8,206 மீனவ மகளிருக்கு ஒரு கோடியே 47 இலட்சம் ரூபாய் தமிழ்நாடு அரசால் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

❖ தமிழக மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கும்போது, அவர்களது பாதுகாப்பினை உறுதிசெய்ய, கம்பியில்லா தொலைதொடர்பு வசதிகளை உருவாக்கி ஒவ்வொரு மீன்பிடி படகிற்கும் VHF சாதனம் வழங்கும் திட்டம் தந்தார்கள்.

❖ இந்தியாவிலேயே முதலாவதாக மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், 2012ம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக் கழகம் துவக்கப்பட்டது.

❖ மீனவர்களுக்கு தொழில்நுட்ப உதவிகள் வழங்குவதிலும் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

பாக் வளைகுடாப் பகுதியில் தமிழ்நாட்டு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையினை நிலைநாட்டுவதிலும், தி.மு.க. ஆட்சியில் தாரைவார்க்கப்பட்ட கச்சத்தீவினை மீட்டெடுப்பதிலும் மாண்புமிகு அம்மா அவர்களின் உறுதியான நிலைப்பாட்டினை, தற்போதுள்ள அம்மாவின் அரசு தொடர்ந்து வலியுறுத்தும் விதமாக, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை 27.02.2017 அன்று புதுடெல்லியில் நேரில் சந்தித்து மீண்டும் ஒரு கோரிக்கை மனு அளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படையினரின் தொடர் தாக்குதல் நிகழ்வுகள், துன்புறுத்துதல், சிறை பிடித்தல், ஆகிய சம்பவங்கள் நடப்பதை தடுத்திடவும், தீர்க்கமான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்கவேண்டி வலியுறுத்தியும் இதுவரை மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு மாண்புமிகு அம்மாவின் அரசால் 115 கடிதங்கள் எழுதப்பட்டுள்ளன. இதன் காரணமாக 2011 முதல் இலங்கை அரசால் சிறை பிடிக்கப்பட்ட 2,541 தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். 357 மீன்பிடி படகுகள் விடுவிக்கப்பட்டு தமிழகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

தற்போது இலங்கை சிறைகளில் உள்ள 85 மீனவர்களை 128 படகுகளுடன் விரைவில் மீட்டு தமிழகம் அழைத்து வருவதற்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

❖ ஆர்.கே. நகர் தொகுதியில், சென்னை மீன்பிடித் துறைமுகப் பணிகள் 92 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவிலும், கத்திவாக்கம் நெடுஞ்சாலை மற்றும் காக்ரேன் பேசின் சாலை ரயில்வே சந்திப்பு மேம்பாலம் 16 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டு மாண்புமிகு அம்மா அவர்களால் ஏற்கனவே திறக்கப்பட்டது.

❖ ஆர்.கே.நகர் தொகுதியிலுள்ள பவர்குப்பம் பகுதியில் பழைய குடிசை மாற்று வாரிய வீடுகளுக்கு மாற்றாக 23.27 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட 556 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளும், அரங்கநாதபுரம் திட்டப்பகுதியில் பழுதடைந்த 360 குடிசை மாற்று வாரிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு மாற்றாக 480 புதிய குடியிருப்புகள் 40.71 கோடி ரூபாய் செலவில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளிடம் வழங்கப்பட்டுள்ளது.

❖ தண்டையார்பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு 2 கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டிடம் கட்டப்பட்டு மாண்புமிகு அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டதுடன்

தண்டையார்பேட்டை புதிய வருவாய் கோட்டத்தையும் உருவாக்கினார்கள்.

❖ ஆர்.கே.நகர் பகுதியிலுள்ள மாணவர்கள் பயன்பெறும் வகையில் அரசு தொழில் பயிற்சி நிலையத்தினை மாண்புமிகு அம்மா அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

❖ மாண்புமிகு அம்மா அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட ஒரு சில திட்டங்களையும், முடிக்கப்பட்ட பணிகளை மட்டுமே இங்கே நான் குறிப்பிட்டுள்ளேன்.

❖ சமீபத்தில் சென்னையை தாக்கி கோரதாண்டவம் ஆடிய 'வர்தா' புயலால் கடலில் படகு மூழ்கிய விபத்தில் உயிரிழந்த மற்றும் காணாமல் போன மீனவர்களின் குடும்பங்களுக்கும் மற்றும் பிற மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் தனித்தனி சம்பவங்களில் மீன் பிடித்தபோது உயிர் இழந்ததனால் அவர்களின் குடும்பங்களுக்கும் தலா ஒரு இலட்ச ரூபாய் வீதம் நிவாரணம் இன்று வழங்கப்படுகிறது.

28.01.2017 அன்று எண்ணூர் காமராஜர் துறைமுகத்திற்கு அருகில் இரண்டு தனியார் கப்பல்கள் எதிர்பாராத விதமாக நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் ஆனு டான் காஞ்சிபுரம் என்ற கப்பலிலிருந்து கச்சா எண்ணெய் கசிவு ஏற்பட்டு கடலில் பரவியதால் திருவள்ளூர், சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு மிகுந்த சிரமத்திற்கு உள்ளானார்கள்.

இந்த எண்ணெய் கசிவால் திருவள்ளூர், சென்னை மற்றும் காஞ்சீபுரம் மாவட்டங்களில் 28 கிலோ மீட்டரும், சென்னை மாவட்டத்தில் 19 கிலோ மீட்டரும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 57 கிலோ மீட்டர் நீளத்திற்கும் ஆக மொத்தம் 104 கி.மீ. நீளம் கொண்ட கடற்கரை மற்றும் அதனைச் சார்ந்த கடல் பகுதிகளில் பாதிப்பு ஏற்பட்டது.

பாதிக்கப்பட்ட மூன்று மாவட்டங்களில், மீனவர்கள் கடலுக்கு சென்று மீன்பிடித்து வந்த மீன்களுக்கு போதிய விலை கிடைக்காமல் மீனவர்களும், மீன்பிடிப்பு சார்ந்த தொழில் புரிவோரும் பாதிப்படைந்தனர்.

“மாசுபடுத்தியவரே மாசு நிவர்த்திக்கான செலவினத்தை மேற்கொள்ளவேண்டும்” என்ற கொள்கை அடிப்படையில் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வாதார இழப்பீடாக மாநில அரசால் மதிப்பீடு செய்யப்பட்ட 135 கோடியே 35 இலட்ச ரூபாயினை இந்த இழப்பீட்டை உரிய காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பெறும் பொருட்டு அதற்கான கடிதத்தை இந்திய அரசின் கப்பல் போக்குவரத்து இயக்குநர் / தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதற்கிடையில் எண்ணை கசிவால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் துயரினை விரைந்து நீக்கும் வகையில் இடைக்கால நிவாரணமாக 75 கோடி ரூபாய் வழங்கிட கேட்டு மாண்புமிகு மத்திய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. நிதின் கட்காரி அவர்களை புதுடில்லியில் 28.02.2017 அன்று நேரில் சந்தித்து கோரியுள்ளேன்.

மீனவர்களின் துயரினை களையும் பொருட்டு மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நடக்கும் தமிழக அரசு, சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட ஒவ்வொரு மீனவ குடும்பத்திற்கும் 5,000/– ரூபாய் வீதம் 30,000 குடும்பங்களுக்கு மொத்தம் 15 கோடி ரூபாய் இடைக்கால நிவாரணமாக வழங்க ஆணை வெளியிடப்பட்டு, அதனை செயல்படுத்தும் விதமாக இன்று நேரில் நிவாரணம் வழங்க வந்துள்ளேன்.

டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய ஆட்சி காலத்திலும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக்காலத்திலும் பல்வேறு நலத்திட்டங்களால் மீனவர்களின் வாழ்வாதாரமும், பொருளாதாரமும் பன்மடங்கு முன்னேறியது.

மீனவர்களுக்கு இயற்கை இடற்பாடுகளால், துயரம் ஏற்படும்போதெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைந்து உதவிக்கரம் நீட்டி அரவணைத்து வந்திருக்கிறது.

“கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு”

என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்கள், நல்ல அரசும் சிறந்த அமைச்சர்களும் எப்படி இருக்க வேண்டும் என்று இலக்கணம் வகுத்து எங்களுக்கு பயிற்சி அளித்த வண்ணம் இந்த அரசு இப்போது மக்களின் எண்ணமறிந்து ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணப்படி மீனவர்களை பாதுகாப்பதில் இந்த அரசு எப்போதும் விழிப்புடனும், விவேகத்துடனும் செயல்படும் என்று இந்த இனிய விழாவிலே நான் உறுதி கூறுகிறேன்.

இந்த விழா ஏற்பாடுகளை சிறப்பாக செய்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
06.03.2017 அன்று டாக்டர் ராதாகிருஷ்ணன் நகரில்
நடைபெற்ற விழாவில் கச்சா எண்ணெய் கசிவால்
வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு
நிவாரண உதவித் தொகை வழங்கி ஆற்றிய உரை.

சேலம் மண்டலத்தில் ரூ.330.84 கோடி மதிப்பீட்டில் 3,971 முடிக்கப்பட்ட திட்டப் பணிகள் துவக்கம்!

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

இவ்விழாவில் கலந்து கொண்ட மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு.பி. தங்கமணி அவர்களே, மாண்புமிகு உயர்கல்வி துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்களே, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் டாக்டர் வி. சரோஜா அவர்களே, மாண்புமிகு கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் திரு.பி. பாலகிருஷ்ண ரெட்டி அவர்களே,

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

அரசு உயர் அதிகாரிகளே!

காவல்துறை அதிகாரிகளே!

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!

அனைவருக்கும் எனது முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வாழும் திசை நோக்கி பணிந்து வணங்குகிறேன்.

அடுக்கடுக்கான திட்டங்கள் மிகக்குறுகிய காலத்திலேயே நிறைவுசெய்யப்பட்டு அதற்கான தொடக்கவிழாக்களை அடுத்தடுத்து தொடர்ச்சியாக நடத்தும் அரிய வாய்ப்பினை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியால் இந்த அரசு பெற்றிருக்கிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசும் போது: "தமிழக மக்களிடம் நாங்கள் காட்டும் விசுவாசத்திற்கு கிடைத்த வெகுமதிதான், தமிழக மக்கள் எங்கள் மீது வைத்த நம்பிக்கை – எங்களுக்கு அளித்த மகத்தான ஆதரவு – எங்களுக்கு அளிக்கப்பட்ட ஆட்சிப் பொறுப்பு" என்றார்கள்.

மற்றொரு கூட்டத்தில் பேசும் போது: "என்னை நம்பி வாக்களித்தவர்களுக்கு, நான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதே என்னுடைய புனிதக் கடமையாகக் கருதுகிறேன். ஏழை எளிய மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற நான் ஒரு போதும் தவறியதில்லை" என்று மாண்புமிகு அம்மா அவர்கள் கூறினார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வாக்குப்படியே இந்த ஆட்சிப் பொறுப்பை நாங்கள் புனிதப் பணியாக ஏற்று செயல்படுகிறோம்; செயல்படுவோம்.

மாண்புமிகு அம்மா அவர்கள் விதி 110ன் கீழ் அறிவித்த பல்வேறு திட்டங்கள் விரைவாக செய்து முடிப்பது மட்டுமின்றி அதனை பொது மக்களின் பயன்பாட்டிற்கு உடனடியாக கொண்டு வர வேண்டும் என்ற முனைப்பாக இருந்தார்கள்.

அந்த வேத வாக்கினை நாங்கள் சிரமேற்கொண்டு தமிழ்நாட்டை ஐந்து மண்டலங்களாகப் பிரித்து அந்தந்த மண்டலத்தில் முடிக்கப்பட்ட திட்டப்பணிகளை தொடங்கி வைத்தும், தொடங்கப்போகும் பணிகளை அடிக்கல் நாட்டியும் வருகிறோம்.

“தமிழக அரசு, மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு அதற்குண்டான திட்டங்களைத் தீட்டி மக்கள் வாழ்வு வளம் பெறவும், அவர்கள் நலன் பேணிப் பாதுகாக்கவும் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. அதன் காரணமாகத்தான் நான் முதலமைச்சராகப் பதவியேற்று கொண்ட அன்றே மக்கள் பயன் பெறத்தக்க திட்டங்களில் கையெழுத்திட்டேன்”.

மாண்புமிகு அம்மா அவர்கள் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய இந்த பேச்சையே நான் கட்டளையாக ஏற்று தலைமைச் செயலகத்தில் அரசு பதவி ஏற்ற முதல் நாளே ஐந்து சிறந்த திட்டங்களுக்கு கையெழுத்திட்டேன். முதல் நாள் நான் கையெழுத்திட்ட அனைத்து திட்டங்களையும் தமிழக மக்கள் நன்கு அறிவார்கள்.

அம்மா அரசு பதவியேற்ற குறுகிய நாட்களிலேயே அடுக்கடுக்கான பல மக்கள் பணிகளை செய்து வருவதைப் பற்றி நீங்கள் அறிவீர்கள்.

கடந்த **04.03.2017** அன்று சென்னை மண்டலத்திற்குட்பட்ட ஏழு மாவட்டங்களில் **1,486** கோடியே **12** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு துறைகளைச் சார்ந்த புதிய திட்டப் பணிகளின் தொடக்க விழாவும், அடிக்கல் நாட்டு விழாவும் சிறப்பாக நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து, சேலம், திருச்சிராப்பள்ளி மண்டலத்திற்கு உட்பட்ட அரியலூர், கரூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருவாரூர் மாவட்டங்களில் பல்வேறு திட்டப் பணிகள் தொடங்கி வைக்கப்படுகிறது.

இத்திட்டங்களில் பெரும்பாலானவை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த விதி 110இன் கீழ் அறிவிக்கப்பட்ட திட்டங்களாகும்.

சேலம் மாவட்டத்திற்கு பல சிறப்புகள் உண்டு. குறிப்பாக சேலத்தையே மையமாகக் கொண்டு தான் திராவிட இயக்கத்தின் தொடக்கமும் வளர்ச்சியும் இருந்திருக்கிறது.

தமிழ்நாட்டுக்கு சேலம் ஒரு கதம்ப மாலையைப் போன்றது. இந்த மாவட்டத்தில் விவசாயம், சிறு குறு தொழில்கள், இரும்பு மற்றும் டெக்ஸ்டைல்ஸ் தொழிற்சாலைகள் என்ற பலவகையான தொழில்களும் இங்கே சிறப்பாக நடந்து வருகிறது. கனரக வாகனங்கள் அதிகமாக இருக்கும் மாவட்டமாக நாமக்கல் திகழ்ந்து கொண்டிருக்கிறது. பொருளாதாரத்தில் ஏற்றத்தாழ்வுடன் கூடிய அனைத்து தர மக்களும் இங்கே வசிக்கிறார்கள்.

இதே மாவட்டத்தைச் சேர்ந்த நான் இந்த திட்டங்களை துவக்கி வைக்கும் அரிய வாய்ப்பை மாண்புமிகு அம்மா அவர்கள் எனக்கு வழங்கி இருக்கிறார்கள். இந்தப் பகுதியிலிருந்து சட்டமன்றத்திற்கு அனுப்பி வைத்த உங்களுக்கு இந்த இனிய விழாவின் மூலம் என் உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் நகராட்சி நிருவாகத் துறை சார்பில் 12 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 13 திட்டப் பணிகள் உள்ளிட்ட பல துறை திட்டப் பணிகளையும் சேர்த்து 115 கோடியே 71 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 462 திட்டப்பணிகள் இன்று

தொடங்கி வைக்கப்பட்டும், அடிக்கல் நாட்டியும் மக்களுக்கு அர்ப்பணிக்கப்படுகிறது.

நாமக்கல் மாவட்டத்தில் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, ஊரக வளர்ச்சித் துறை சார்பில் ஊராட்சி மன்ற அலுவலகங்கள், அங்கன்வாடி கட்டிடங்கள், பசுமை வீடுகள், ஊராட்சி சேவை மையங்கள் என 1,432 பணிகளை உள்ளடக்கிய மொத்தம் 1,479 திட்டப் பணிகள் 61 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் முடிக்கப்பெற்று அவை இன்று தொடங்கி வைக்கப்படுகிறது.

தருமபுரி மாவட்டம் அரூரில் உயர்கல்வி துறையின் சார்பில் பெரியார் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியும், கரிமங்கலத்தில் அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரியும் 14 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், பள்ளிக்கல்வி துறை சார்பில் பென்னகரத்தில் 2 மாதிரி பள்ளிகளும், அரூரில் 3 புதிய பள்ளிகளும், பாப்பிரெட்டிபட்டியில் அனைவருக்கும் கல்வி திட்டத்திற்கான கட்டிடங்களும், இதர கட்டிடங்களும் 19 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் நிறைவு செய்யப்பட்டு இன்று திறந்து வைக்கப்படுகிறது. ஆக பல துறைகளின் சார்பாக தருமபுரி மாவட்டத்தில் 60 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மொத்தம் 113 திட்டப் பணிகள் இன்று திறந்து வைக்கப்படுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வேளாண்மைத்துறை, கால்நடை, பால்வளம் மற்றும் மீன் வளத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, வணிக வரி மற்றும் பதிவுத்துறை, மின்சாரத்துறை, தொழில் துறை, உயர் கல்வித்துறை, நகராட்சி நிர்வாகத்துறை, பள்ளிக்கல்வித் துறை, வருவாய்த்துறை, நெடுஞ்சாலைத்துறை, ஊரக வளர்ச்சித் துறை சார்பில் 93 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1,917 திட்டப் பணிகள் இன்று துவக்கி வைக்கப்படுகிறது.

ஆக மொத்தம், இப்போது சேலம் மண்டலத்திற்கு உட்பட்ட சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் 330 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்ட 3,971 திட்டப்பணிகள் இங்கே தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மானாவாரி சாகுபடியினை விவசாயிகள் வெற்றிகரமாக மேற்கொள்ளவேண்டும் என்ற நல்ல எண்ணத்தில், இந்தியாவிலேயே முதன் முறையாக, நடப்பாண்டு முதல் நான்கு ஆண்டுகளுக்கு செயல்படுத்திடும் விதமாக மானாவாரி வேளாண்மை இயக்கம் என்னும் மிகப்பெரும் திட்டத்தினை 803 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியினை மையமாகக் கொண்டு, தொகுப்புக்கு 1,000 எக்டர் என்ற அளவில் 1,000 தொகுப்புகள் மூலம் எதிர்வரும் நான்காண்டுகளில் 10 இலட்சம் எக்டரில் மானாவாரிநில மேம்பாட்டுப்ப பணிகள் மேற்கொள்ள அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்த ஆண்டு பருவமழை பொய்த்த காரணத்தினால் அனைத்து மாவட்டங்களிலும் வறட்சி நிலவுகிறது. விவசாய பெருமக்கள் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். அவர்களின் இன்னல்களை எல்லாம் போக்கும் விதமாக மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த இந்த அரசு உடனடி திட்டங்கள் தீட்டி வறட்சியிலிருந்து மக்களை பாதுகாக்க நிவாரணங்களை விரைந்து வழங்கி வருகிறது.

விவசாய பெருமக்களின் இன்னல்களைப் போக்கும் வண்ணம் விவசாயிகளுக்கு 2,247 கோடி ரூபாய் பயிர் இழப்பு வறட்சி நிவாரணத் தொகை வழங்கிட மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த அரசு உடனடியாக உத்தரவிட்டது. இந்த நிவாரணத்தொகை வழங்கும் பணி நேற்று (06.03.2017) சென்னையில் துவக்கி வைக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒவ்வொரு விவசாயி வரவழைக்கப்பட்டு அவர்களுக்கு நிவாரணத்

தொகை வழங்க உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாண்புமிகு அமைச்சர்கள் மூலம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகைக்கான உத்தரவுகளை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளேன். மேலும் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நிவாரணத் தொகை உடனடியாக செலுத்தப்படும். இதனால் வறட்சியால் பாதிக்கப்பட்ட 32 இலட்சத்து 30 ஆயிரத்து 191 விவசாயிகள் பயனடைவார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

வறட்சி காரணமாக வேலை வாய்ப்பின்றி பாதிக்கப்பட்டுள்ள விவசாய தொழிலாளர்களுக்கு, போதிய வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், 100 நாட்கள் பணி வரம்பு என்பது 150 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

வறட்சி காரணமாக கிராமப்புறங்களில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் நீர் ஆதாரங்கள் மற்றும் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணிகள் 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த ஆணையிடப்பட்டு, பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

வறட்சி காரணமாக நகர்ப்புறங்களில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் நீர் ஆதாரங்கள் மற்றும் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணிகள் 160 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த ஆணையிடப்பட்டு, பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

பொதுப்பணித் துறை மூலமாக நிலத்தடி நீர்த்தேக்கும் அமைப்பு, நிலத்தடி நீர் செறிவூட்டும் அமைப்பு போன்ற நீராதாரங்களை மேம்படுத்த 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இப்படிப்பட்ட திட்டங்கள் அனைத்தும் ஏழை எளிய மக்களை மையமாக வைத்து இந்த அரசு செயல்படுத்தி வருகிறது.

“அரசு நலத்திட்ட உதவியினைப் பெறுகின்ற பயனாளிகள் அனைவரும் அவற்றை வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான அடிப்படையாகக் கருதி மேன்மேலும் உழைத்து, வாழ்க்கையில் முன்னேறி, எல்லா நலன்களையும் பெற வேண்டும்”

என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவுறுத்தலின்படி மக்கள் அனைவரும் இந்த திட்டங்களால் கிடைக்கும் பலனை சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா நல்லாட்சியில் சேலம் மாநகராட்சிக்குட்பட்ட திருவாக்கவுண்டனூர், ஏ.வி.ஆர். ரவுண்டானா, ஐந்து ரோடு, குரங்குசாவடி, மணல்மேடு ஆகிய இடங்களில் உயர்மட்ட பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இதன் காரணமாக நகர பகுதிகளில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசல் குறைக்கப்படுகிறது. சூரமங்கலம் பகுதியில் கீழ் மட்ட பாலம் கட்டும் பாலம் பணி நடைபெற்றுள்ளது. நாமக்கல் மாவட்டத்தில் நாமக்கல் திருச்செங்கோடு ஆகிய இடங்களில் புறவழிச்சாலை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. மேலும் நாமக்கல் திருச்செங்கோடு சாலை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தவும், பரமத்திவேலூர் திருச்செங்கோடு சாலை அகலப்படுத்தும் பணியும் நடைபெறவுள்ளது. போக்குவரத்து நெரிசல் மிகுந்த நாமக்கல், கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ள சாலைகள் அகலப்படுத்தப்படவுள்ளது. சேலம் மாவட்டத்தில் புதிய உயர்மட்ட பாலங்கள் விரைவில் வரவுள்ளது. இதன்மூலம் போக்குவரத்து நெரிசல் இல்லாத மாவட்டமாக மாற்றும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நூற்றுக்கணக்கான கோடியை தந்துள்ளார்கள்.

அண்மையில் மத்திய அமைச்சர் நிதின்கட்கரி அவர்களை டெல்லியில் சந்தித்த போது சேலம் மாநகராட்சிக்கு சுற்றுச்சாலை வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது. இந்த கோரிக்கையை கனிவுடன் பரிசீலிப்பததாக உறுதியளித்துள்ளார்கள். இது போன்ற எண்ணற்ற சாலைப்பணிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

“நமது இலட்சியம் உயர்வானது, நமது பார்வை தெளிவானது, நமது வெற்றி முடிவானது” என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் தாரக மந்திரத்தோடு தான் இந்தத் திட்டங்களையெல்லாம் இந்த அரசு தொடங்கி வைத்திருக்கிறது.

இத்திட்டங்களால் பயனடையப்போகும் பயனாளிகளுக்கு என்னுடைய வாழ்த்துக்கள்.

இத்திட்டங்கள் செயல்வடிவம் பெறுவதற்கு உழைத்த அனைத்து உள்ளங்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

இந்த இனிய விழாவிலே கலந்துகொண்டு நாங்கள் மேலும் பல திட்டங்களை செயல்படுத்த ஊக்கமும், உற்சாகமும் அளிக்கும் உங்களுக்கு நன்றி.

இந்த விழாவை இத்தனை சிறப்பாக நடத்துவதற்குக் காரணமாக இருந்த அத்தனை இதயங்களுக்கும் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
07.03.2017 அன்று சேலம் மண்டலத்திற்கான
அரசு திட்டங்களைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை.

திருச்சி மண்டலத்தில் ரூ.623.56 கோடி செலவில் 2,603 நிறைவு செய்யப்பட்ட திட்டப்பணிகள் துவக்கம்!

இந்த இனிய விழாவிற்கு வருகை புரிந்துள்ள மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.ஆர். காமராஜ் அவர்களே,

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஓ.எஸ். மணியன் அவர்களே,

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்களே,

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி ந. நடராஜன் அவர்களே,

மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் திரு.எம்.ஆர். விஜயபாஸ்கர் அவர்களே,

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி எஸ். வளர்மதி அவர்களே,

மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் திரு. ஆர். துரைகண்ணு அவர்களே,

ஆகிய அமைச்சர் பெருமக்களே,

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

அரசு உயர் அதிகாரிகளே,

காவல்துறை அதிகாரிகளே,

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே,

அனைவருக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வாழும் திசை நோக்கி பணிந்து வணங்குகிறேன்.

அடுக்கடுக்கான திட்டங்கள் மிகக்குறுகிய காலத்திலேயே நிறைவுசெய்யப்பட்டு அதற்கான தொடக்கவிழாக்களை அடுத்தடுத்து தொடர்ச்சியாக நடத்தும் அரிய வாய்ப்பினை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியால் அம்மா அரசு பெற்றிருக்கிறது.

இத்திட்டங்களில் பெரும்பாலானவை மாண்புமிகு அம்மா அவர்கள் விதி 110இன் கீழ் அறிவித்த திட்டங்களாகும். இத்திட்டங்கள் பல நிறைவு செய்யப்பட்டு விட்டன. மீதம் விரைவாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மக்களின் முதல்வராக விளங்கினார்கள். உலக தலைவர்களுக்கெல்லாம் ஒரு முன் மாதிரி தலைவராக விளங்கினார்கள்.

மாண்புமிகு அம்மாவின் அயராத உழைப்பால் தான் தமிழகம் தொடர்ந்து இந்தியாவிலேயே இன்னும் முதன்மை மாநிலமாக விளங்கி வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியின் தொடர்ச்சி தான் இந்த ஆட்சி. எனவே, அம்மாவின் எண்ணங்களையும், விருப்பங்களையும் ஈடேற்றும் அரசாகவே இந்த அரசு செயல்படும்.

கடந்த 04.03.2017 அன்று சென்னை மண்டலத்திற்கு உட்பட்ட 7 மாவட்டங்களில் 1,375 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவு செய்யப்பட்ட 7,506 திட்டப் பணிகளை தொடங்கி வைத்தேன். 111 கோடியே 3 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 2 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினேன்.

சென்னை மண்டலத்தைத் தொடர்ந்து, இன்று காலை சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் 330 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பில் 3,971 திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தேன்.

அதனைத் தொடர்ந்து தற்போது திருச்சி மண்டலத்தில் நடைபெறும் திட்டப்பணிகளுக்கான தொடக்க விழாவில் கலந்து கொள்வதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் திருச்சிக்கு வரும்போதெல்லாம் மகிழ்ச்சி பொங்க வருவார்கள்.

ஒருமுறை திருச்சியில் நடந்த பொதுக்கூட்டத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் பேசுகிறபோது, “நான் சென்னை ஜார்ஜ் கோட்டையில் ஆட்சி புரிந்தாலும் என் மனம் என்னவோ திருச்சி மலைக்கோட்டையையே சுற்றிசுற்றி வருகிறது” என்று மனம் மகிழ்ந்து மனம் திறந்து பேசினார்கள்.

இப்போது திருச்சிராப்பள்ளி மண்டலத்திற்கு உட்பட்ட அரியலூர், கரூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருவாரூர் மாவட்டங்களில் 623 கோடியே 55

இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் **2,603** திட்டப் பணிகள் தொடங்கி வைக்கும் இந்த நிகழ்வு தெய்வமாக திகழும் அம்மாவின் புகழை ஓங்கி ஒலிக்கச் செய்யும்.

இன்று திருச்சியில் தொடங்கி வைக்கப்படும் திட்டப்பணிகளால் ஏழை எளிய மக்கள் மிகவும் பயனடைவார்கள். மாண்புமிகு அம்மாவின் அரசை மனதார மக்கள் போற்றுவார்கள் என்பது நிச்சயம்.

தமிழக வரலாற்றில் திருச்சி மாவட்டத்திற்கு தனி இடம் உண்டு. மொழிப்போரில் உயிர் தியாகம் செய்த சின்னசாமியை எதிர்கால சந்ததியினருக்கு நினைவூட்டும் வகையில் அவருடைய சிலையை மாண்புமிகு அம்மா அவர்கள் தான் இங்கு திறந்து வைத்தார் என்று சொல்வதில் பெருமைப்படுகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக சேவையாற்றிய ஸ்ரீரங்கம் தொகுதியில் தேசிய சட்டப்பள்ளியை நிறுவி அதன் மூலம் தமிழ்நாட்டுக்கே பெருமை சேர்த்தார்கள்.

மேலும், ஸ்ரீரங்கம் பொறியியல் கல்லூரி, ஸ்ரீரங்கம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, இந்தியாவிலேயே முதன்முதலாக மகளிருக்கென்று தனியாக தோட்டக்கலைக் கல்லூரி, ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயிலுக்கு வெளியூரிலிருந்து வருகை தரும் பக்தர்களின் வசதிக்காக யாத்திரி நிவாஸ் என்ற பயணியர் விடுதி, அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயிலில் நாள் முழுவதும் அன்னதானம், மொண்டிப்பட்டியில் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகிதத் தொழிற்சாலை என்று இன்னும் ஏராளமான திட்டங்களால் திருச்சி மாவட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்கள்.

மாண்புமிகு அம்மாவின் ஆசியால் பொறுப்பேற்ற இந்த அரசு குறுகிய நாட்களிலேயே பல திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

குறிப்பாக இந்த அரசு காவிரி படுகையிலுள்ள மாவட்டங்களை மேம்படுத்தும் வகையில் வேளாண்மை திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் தருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள் விவசாயத்திற்கு தண்ணீர் தேவையை சமாளிக்கும் விதமாக நுண்ணீர் பாசன அமைப்பை ஏற்படுத்த சிறு குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியம் வழங்க உத்தரவிட்டார்கள். 2011–2012 ஆண்டிலிருந்து இன்று வரை 1,83,251 விவசாயிகளுக்கு 1,000 கோடி ரூபாய்க்கு மேல் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்குவதற்கு மாண்புமிகு அம்மாவின் ஆட்சியில் 347 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த சட்டமன்ற தேர்தலின் போது மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளின்படி சிறு குறு விவசாயிகளின் பயிர்க்கடன், பண்ணை சார்ந்த நீண்ட கால கடன் என 5,318 கோடியே 73 இலட்சம் கோடி ரூபாய் அளவிலான கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. இதனால் 12 இலட்சத்து 2 ஆயிரத்து 75 விவசாயிகள் கடனிலிருந்து விடுதலை பெற்று மாண்புமிகு அம்மாவை மனதார வாழ்த்திக்கொண்டு இருக்கிறார்கள்.

காவிரி நீர் பங்கீட்டு பிரச்சினையில் மாண்புமிகு அம்மா அவர்களின் தொடர் முயற்சியால் 19.02.2013 அன்று மத்திய அரசிதழில் காவிரி நடுவர் மன்ற இறுதி ஆணை வெளியிடப்பட்டது. நடுவர் மன்றத்தின் இறுதி ஆணை பரிந்துரையின்படி காவிரி மேலாண்மை வாரியம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழுவை உடனடியாக அமைக்கும்படி மாண்புமிகு அம்மா அவர்கள் மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்கள். மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த இந்த அரசு மாண்புமிகு அம்மாவின் குரலாகவே தொடர்ந்து ஒலித்து விரைவில் வெற்றி பெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டில் கருநாடக மாநிலத்திலிருந்து உரிய நீர் கிடைக்கப் பெறாததால் மேட்டூர் அணை வழக்கமான தேதியில் திறக்க இயலவில்லை. டெல்டா மாவட்ட விவசாயிகள் குறுவை சாகுபடியினை எவ்வித குறையுமின்றி மேற்கொள்வதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் **54** கோடியே **65** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குறுவை சாகுபடி தொகுப்பு திட்டத்தை அறிவித்தார்கள். அதன் காரணமாக மேட்டூர் அணை காலதாமதமாக திறந்த காலங்களில் இதுவரை இல்லாத அளவாக **3.16** இலட்சம் ஏக்கர் பரப்பளவில் குறுவை நெல் சாகுபடியை டெல்டா மாவட்ட விவசாயிகள் மேற்கொண்டு, வெற்றிகரமாக அறுவடை மேற்கொண்டு **7.53** இலட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து கருநாடக மாநிலத்திலிருந்து நமக்கு வரவேண்டிய பாசனநீர் கிடைக்கப் பெறாததால் சம்பா சாகுபடி பருவத்தில் நேரடி நெல் விதைப்பினை பெருமளவில் பிரபலப்படுத்தி, டெல்டா மாவட்ட விவசாயிகள் சம்பா நெல் சாகுபடி மேற்கொள்ள வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் ரூபாய் **64** கோடியே **30** இலட்சம் மதிப்பீட்டில் சம்பா சிறப்பு தொகுப்பு திட்டத்தினையும் அறிவித்து செயல்படுத்தினார்கள். இதன் காரணமாக, சென்ற ஆண்டு கடினமான நீர்ப்பற்றாக்குறை இருந்த போதிலும், கிடைக்கும் பருவ மழையினை திறம்பட பயன்படுத்தி நேரடி நெல் விதைப்பு விவசாயிகளிடையே பிரபலப்படுத்தப்பட்டது. இதன் காரணமாக, சம்பா, தாளடி பருவத்தில் டெல்டா மாவட்டங்களில் **11.92** இலட்சம் ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டது.

வடகிழக்கு பருவமழை இயல்பைவிட மிகக்குறைவாக பெறப்பட்டதால் விவசாயிகள் பயிர் இழப்பினால் பாதிப்படையக்கூடுமென முன்கூட்டியே எதிர்நோக்கி, புதிய பயிர்காப்பீட்டு திட்டத்தினை விவசாயிகளிடையே, குறிப்பாக டெல்டா மாவட்ட நெல் விவசாயிகளிடையே, பிரபலப்படுத்த அரசு அதிக முயற்சியை மேற்கொண்டது. இதற்காக, **410** கோடி ரூபாய் காப்பீட்டு கட்டண மானியமாக விவசாயிகளின் நலனுக்காக காப்பீட்டு

நிறுவனங்களுக்கு தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டது. டெல்டா மாவட்டங்களில் நெல் சாகுபடி செய்த பரப்பில் 90 சதவிகிதத்திற்கும் அதிகமான பரப்பில் 4.99 இலட்சம் விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டனர். தற்போது, இத்திட்டத்தின்கீழ், விவசாயிகளுக்கு பயிர் இழப்பீட்டுத் தொகையினை விரைவாக வழங்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் மானாவாரி சாகுபடியினை விவசாயிகள் வெற்றிகரமாக மேற்கொள்ளவேண்டும் என்ற நல்ல எண்ணத்தில், இந்தியாவிலேயே முதன் முறையாக, நடப்பாண்டு முதல் நான்கு ஆண்டுகளுக்கு செயல்படுத்திடும் விதமாக மானாவாரி வேளாண்மை இயக்கம் என்னும் மிகப்பெரும் திட்டத்தினை 803 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியினை மையமாகக் கொண்டு, தொகுப்புக்கு 1,000 எக்டர் என்ற அளவில் 1,000 தொகுப்புகள் மூலம் எதிர்வரும் நான்காண்டுகளில் 10 இலட்சம் எக்டரில் மானாவாரி நில மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

வறட்சி காரணமாக வேலை வாய்ப்பின்றி பாதிக்கப்பட்டுள்ள விவசாய தொழிலாளர்களுக்கு, போதிய வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், 100 நாட்கள் பணி வரம்பு என்பது 150 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

வறட்சி காரணமாக கிராமப்புறங்களில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் நீர் ஆதாரங்கள் மற்றும் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணிகள் 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த ஆணையிடப்பட்டு, பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

வறட்சி காரணமாக நகர்ப்புறங்களில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் நீர் ஆதாரங்கள் மற்றும் குடிநீர்

விநியோகத்தை மேம்படுத்தும் பணிகள் 160 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த ஆணையிடப்பட்டு, பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

பொதுப்பணித் துறை மூலமாக நிலத்தடி நீர்த்தேக்கும் அமைப்பு, நிலத்தடி நீர் செறிவூட்டும் அமைப்பு போன்ற நீராதாரங்களை மேம்படுத்த 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

கூட்டுறவு வங்கிகள் மூலம் 3,028 கோடி ரூபாய் பயிர்க் கடனாக கடந்த ஆண்டு மட்டும் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் நடப்பாண்டு பருவமழை பொய்த்த காரணத்தினால் கடும் வறட்சி ஏற்பட்டு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களின் இன்னல்களைப் போக்கும் வண்ணம் விவசாயிகளுக்கு 2,247 கோடி ரூபாய் பயிர் இழப்பு வறட்சி நிவாரணத் தொகை வழங்கிட மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த அரசு உடனடியாக உத்தரவிட்டது. இந்த நிவாரணத்தொகை வழங்கும் பணி நேற்று (06.03.2017) சென்னையில் துவக்கி வைக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாண்புமிகு அமைச்சர்கள் மூலம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகைக்கான உத்தரவுகளை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளேன். மேலும் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நிவாரணத் தொகை 09.03.2017 அன்று செலுத்தப்படும். இதனால் வறட்சியால் பாதிக்கப்பட்ட 32 இலட்சத்து 30 ஆயிரத்து 191 விவசாயிகள் பயனடைவார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

டெல்டா மாவட்டங்கள் உட்பட தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் வட்டார அளவில் உலர் தீவனக் கிடங்குகள் திறக்கப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமல்ல, மாநிலத்திலுள்ள நீர் ஆதாரங்களை திறம்பட மேலாண்மை செய்து வறட்சியினை எதிர்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நீர் நிலைகளைப் புனரமைக்க பண்டைய குடி மராமத்து திட்டத்திற்கு புத்துயிர் அளித்து இந்த நிதியாண்டில் மட்டும் 100 கோடி ரூபாய் மதிப்பில் திட்டப்பணிகள் செயல்படுத்தப்படும். வரும் ஆண்டில் 300 கோடி ரூபாய் மதிப்பில் மக்கள் இயக்கமாக திட்டப் பணிகள் செயல்படுத்தப்படும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நகராட்சி நிர்வாகத்துறை சார்பில் 51 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3 குடிநீர் திட்டப் பணிகள் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை சார்பில் 26 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1,100 பசுமை வீடுகள், 10 கிராம பஞ்சாயத்து சேவை மையங்கள், 2 பாலங்கள் உள்ளிட்ட 1,112 பணிகளை உள்ளடக்கி இம்மாவட்டத்தில் மட்டும் 1,328 திட்டப்பணிகள் 147 கோடியே 99 இலட்சம் ரூபாய் செலவில் முடிக்கப்பட்டு அவை இன்று துவக்கி வைக்கப்படுகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் மின்சாரத்துறை சார்பில் 42 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 110 kv துணை மின் நிலையம் இரண்டும், ஊரக வளர்ச்சித்துறை சார்பில் 17 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய பாலம், அங்கன்வாடி கட்டடங்கள், பசுமை வீடுகள், கிராம பஞ்சாயத்து சேவை மையங்கள் மற்றும் இதர கட்டடங்கள் உள்ளிட்ட 473 நிறைவடைந்த திட்டங்களை உள்ளடக்கி மொத்தம் 534 திட்டப் பணிகள் 132 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இன்று துவக்கி வைக்கப்படுகிறது.

அரியலூர் மாவட்டத்தில், ஊரக வளர்ச்சித் துறை சார்பில் 1 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட அங்கன்வாடி கட்டடங்கள், பள்ளி கட்டடங்கள் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் ஒரு கோடியே 7 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாணவர் விடுதி உள்பட 7 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 34 திட்டங்கள் இன்று துவக்கி வைக்கப்படுகிறது.

கரூர் மாவட்டத்தில் நெடுஞ்சாலைத் துறை சார்பில் 13 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமராவதி நதிக்கு குறுக்கே கட்டப்பட்ட மேல்நிலை பாலம்,

ஊரக வளர்ச்சித் துறை சார்பில் 7 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய கட்டிடங்கள், அங்கன்வாடி கட்டிடங்கள், கிராம பஞ்சாயத்து சேவை மையங்கள் உள்ளிட்ட 45 திட்டப்பணிகள் உட்பட 46 கோடியே 79 இலட்சம் ரூபாய் மதிப்பில் 97 திட்டப்பணிகள் இன்று துவக்கி வைக்கப்படுகின்றன.

நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யத்தில் பள்ளிக்கல்வித்துறை சார்பில் 12 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய பள்ளிகள், இதர பள்ளிக் கட்டிடங்கள்,

நெடுஞ்சாலைத் துறை சார்பில் வெள்ளப்பள்ளம் உப்பனாருக்கு குறுக்கே 10 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பணி உள்ளிட்ட 178 திட்டப்பணிகள் 61 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு அவை இன்று துவக்கி வைக்கப்படுகிறது.

பெரம்பலூரில் பால் வளத்துறை சார்பில் 36 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய பால் பண்ணையும், பள்ளிக்கல்வித்துறை சார்பில், பல்வேறு பகுதிகளில் 11 கோடியே 97 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 5 புதிய பள்ளிகள் உட்பட 85 கோடியே 69 இலட்சம் ரூபாய் மதிப்பில் 212 திட்டங்கள் இன்று துவக்கி வைக்கப்படுகிறது.

தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங்கோட்டையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் சார்பில் 27 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு கட்டிடங்கள்,

பள்ளிக்கல்வித் துறை சார்பில் ஒரத்தநாடு மற்றும் கும்பகோணத்தில் 2 புதிய பள்ளிகள் மற்றும் இதர பள்ளி கட்டிடங்கள் என 19 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பில் 18 திட்டப்பணிகள் உள்ளிட்ட 110 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தஞ்சாவூர்

மாவட்டத்தில் மட்டும் மொத்தம் 171 திட்டப்பணிகள் இன்று துவக்கி வைக்கப்படுகிறது.

திருவாரூர் மாவட்டத்தில் உயர்கல்வித்துறை சார்பில் நன்னிலத்தில் 7 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாரதிதாசன் பல்கலைக்கழக கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், பொதுப்பணித்துறை சார்பில் 4 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் நீர் மேலாண்மை பணிகள் உள்ளிட்ட மொத்தம் 49 திட்டப்பணிகள் 31 கோடியே 87 இலட்சம் ரூபாய் செலவில் முடிக்கப்பட்டு அவை இன்று திறந்து வைக்கப்படுகிறது.

ஆக மொத்தம், இன்று திருச்சி மண்டலத்திற்கு உட்பட்ட அரியலூர், கரூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், திருச்சிராப்பள்ளி ஆகிய எட்டு மாவட்டங்களில் 623 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவு செய்யப்பட்ட 2,603 திட்டப்பணிகள் தொடங்கி வைக்கப்படுகிறது.

விவசாயிகளுக்கு எப்போதெல்லாம் இயற்கை இடர்பாடுகள் ஏற்படுகிறதோ, அப்போதெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு நலத்திட்டங்களையும், நிவாரணங்களையும் வழங்கி விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல் பாதுகாத்தார்கள்.

இது மாண்புமிகு அம்மாவின் அரசு என்பதனால் நாங்கள் விவசாயிகளை கனிவோடு பாதுகாப்பதில் அதிக அக்கறை எடுத்துக்கொள்கிறோம்.

புதுக்கோட்டை நெடுவாசலில் நடைபெறும் ஹைட்ரோ கார்பன் திட்டத்திற்கு நெடுவாசல் கிராமத்தில் வணிக ரீதியாக உற்பத்தி செய்வதற்கு பெட்ரோலியம் சுரங்க குத்தகை உரிமம் மாநில அரசு வழங்கவில்லை எனவும், விவசாயிகள் இத் திட்டத்தால் தங்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என தெரிவித்துள்ளதால் நெடுவாசல் கிராமத்தில் இத் திட்டத்திற்கு மாநில அரசு அனுமதி வழங்காது என்றும், எனவே நெடுவாசல் மக்களும், விவசாயிகளும் எந்த அச்சமும்

கொள்ள தேவையில்லை எனவும் தெரிவித்தேன். தமிழகத்தில் விவசாயிகள் பாதிப்படையக் கூடிய எந்தத் திட்டமானாலும், அதனை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தாது எனவும் மாநில அரசின் இந்த உறுதியை ஏற்று, நெடுவாசலில் நடைபெற்று வரும் போராட்டத்தை கைவிட வேண்டுமென்றும் நெடுவாசல் கிராமப் பிரதிநிதிகளை கேட்டுக் கொண்டேன்.

இது மக்கள் அரசு. மக்களுக்காக பல்வேறு கோரிக்கைகளுக்கு செவி சாய்ந்து விரைந்து செயல்படுத்தும் அரசு என்பதால் மீண்டும் நான் உறுதி கூறுகிறேன், விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கும் எந்த திட்டத்தையும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம்.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகளில் ஒருசிலவற்றை மட்டுமே இங்கே என்னால் குறிப்பிட முடிந்தது. மாண்புமிகு அம்மாவின் ஆட்சியே தொடர்வதால், இன்னும் ஏராளமான திட்டப் பணிகளும் தொடரும் என்பதை இங்கே நான் உறுதியுடன் கூறுகிறேன்.

அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களும், அரசு அலுவலர்களும் உள்ளன்போடும், உறுதியோடும் உங்களுக்காக உழைப்பார்கள் என்று உறுதி கூறுகிறேன்.

இந்த விழா ஏற்பாடுகளை சிறப்பாக செய்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் என்னுடைய மனதார வாழ்த்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
07.03.2017 அன்று திருச்சி மண்டலத்திற்கான
அரசு திட்டங்களைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை.

திருநெல்வேலி மண்டலத்தில் ரூ.235.51 கோடி மதிப்பீட்டில் 1,098 நிறைவு செய்யப்பட்ட திட்டப்பணிகள் துவக்கம்!

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்கி, இந்த இனிய விழாவினை தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருக்கிற மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே,

இந்த இனிய விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்திக் கொண்டிருக்கிற மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜூ அவர்களே,

மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் திரு.எம்.ஆர். விஜயபாஸ்கர் அவர்களே,

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி வி.எம். ராஜலட்சுமி அவர்களே, மற்றும் நிகழ்ச்சியில் பங்கு பெற்றுள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

அரசு செயலாளர்களே, அரசு உயர் அதிகாரிகளே,

காவல்துறை அதிகாரிகளே!

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களே,

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களே,

கூட்டுறவு சங்க நிருவாகிகளே,

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!

பெரியோர்களே, கழக உடன்பிறப்புகளே அனைவருக்கும் எனது பணிவான வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் சக்தியை உந்து சக்தியாகக் கொண்டு, மகா சக்தியாக தமிழகத்தை ஆண்ட, மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற உன்னத குறிக்கோளுடன், பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் காட்டிய பாதையில், தமிழகத்தில் நல்லாட்சி நடத்திய இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்!

தலை நிமிர்ந்த தமிழ் இனத்தின்
உரிமைக் குரலாய் ஒலித்த
ஒப்பில்லா தெய்வம்!
தடுக்கப்பட்ட நீதிகளை தமிழருக்கு பெற்றுத் தந்த காவல் தெய்வம்!
பெண் இனத்திற்கு பெருமை சேர்த்த அற்புதத்தின் மறு பிறப்பு!

திரையரங்கம் முதல் திருவரங்கம் வரை, வெற்றி ஒன்றையே தனதாக்கிக் கொண்ட, ஈடு இணையற்ற தலைவர்! மாண்புமிகு

இதய தெய்வம் அம்மா அவர்கள்!

இன்று சர்வதேச மகளிர் தினம். இந்த நன்நாளில் பெண்களுக்கு எல்லாம் காவல் தெய்வமாக விளங்கும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வாழும் திசை நோக்கி பணிந்து வணங்குகிறேன்.

பல நூறாண்டுகள் பேசும் சாதனைகளை அடுக்கடுக்கான திட்டங்கள் மூலம் மிகக் குறுகிய காலத்திலேயே நிறைவு செய்து அதற்கான தொடக்க விழாக்களை அடுத்தடுத்து தொடர்ச்சியாக நடத்தும் அரிய வாய்ப்பினை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியால் அம்மா அரசு பெற்றிருக்கிறது.

இத்திட்டங்களில் பெரும்பாலானவை மாண்புமிகு அம்மா அவர்கள் நித்தம் நித்தம் யோசித்து விதி 110இன் கீழ் அறிவித்த புத்தம் புதிய திட்டங்களாகும்.

மாண்புமிகு அம்மா அவர்களால் 110 விதியின் கீழ் அறிவிக்கப்பட்ட திட்டங்களில் பல நிறைவு செய்யப்பட்டு உள்ளன.

மீதம் விரைவாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்தில் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சிலர், அரசியல் ஆதாயத்திற்காக வாக்குறுதிகளை அள்ளி வீசிவிட்டு அதனை செயல்படுத்த முடியாமல் திணறியதையெல்லாம் நீங்கள் நன்கு அறிவீர்கள்.

ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள், ஒரு திட்டத்தை அறிவிப்பதற்கு முன்னால் அதனை அலசி ஆராய்ந்து, இந்த திட்டத்தினால் எத்தனை மக்கள் பயனடைவார்கள்,

எத்தகைய மக்கள் பயனடைவார்கள், எத்தனை விரைவாகப் பயனடைவார்கள் என்பதை முதலில் ஆழ்ந்து சிந்தித்த பிறகு தான் திட்டத்தினை செயல்படுத்த நடவடிக்கை எடுப்பார்கள்.

அதனால் தான் அம்மா அவர்கள் தீட்டிய திட்டங்கள் அனைத்தும் வரலாற்றில் இடம் பிடித்தன.

மக்களால் நான் – மக்களுக்காகவே நான் என முழங்கிய மாண்புமிகு அம்மா அவர்கள் – மக்களின் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தார்கள்.

இதன் காரணமாகவே அம்மா அவர்கள் தமிழ்நாட்டின் தலையெழுத்தையே மாற்றி தமிழகத்தை வளம் மிக்க மாநிலமாகவும், வசதி மிக்க மாநிலமாகவும், மக்கள் மகிழ்ச்சியோடு வாழத்தக்க மாநிலமாகவும் முன்னேற்றி, மக்கள் மனதில் நீக்கமற நிறைந்திருக்கிறார்கள். இந்த பூமி உள்ள வரை, மனிதர் உள்ள வரை, மாண்புமிகு அம்மாவின் புகழ் நிலைத்து நிற்கும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியும் தொடர்ந்து நிலைத்து நிற்கும். மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணங்களை நிறைவேற்றும் வகையில், தமிழ்நாட்டை பல மண்டலங்களாகப் பிரித்து முடிவுற்ற திட்டப் பணிகளையும், தொடங்கப்போகும் பணிகளையும் தொடங்கி வைக்க மாண்புமிகு அம்மா அவர்களால் இந்த அரசு பணிக்கப்பட்டிருப்பதாகவே உணர்கிறேன்.

கடந்த சட்டப்பேரவை தேர்தலுக்கான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் தேர்தல் அறிக்கையில் மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவும், தமிழ்நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், முதலமைச்சராக பதவியேற்ற முதல் நாளிலேயே 5 சிறப்பு திட்டங்களுக்கான கோப்புகளில் நான் கையெழுத்திட்டேன்.

❖ பணியிடங்களுக்கும், பிற வேலைகளுக்கும் எளிதில் செல்லும் வகையில் ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சம் உழைக்கும் மகளிர் பயன்பெறும் வகையில் சுமார் 200 கோடி ரூபாய் செலவில் "அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தை" அறிமுகப்படுத்தினோம்.

❖ ஆண்டொன்றுக்கு சுமார் ஆறு இலட்சம் தாய்மார்கள் பயனடையும் வகையில், ஏழைக் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்பட்டு வந்த டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி 12 ஆயிரம் ரூபாயிலிருந்து 18 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாட்டில் மீனவர்களுக்கான தனி வீட்டுவசதி திட்டத்தைச் செயல்படுத்தும் விதமாக, 85 கோடி ரூபாய் செலவில் 5 ஆயிரம் வீடுகள் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது.

❖ 55 ஆயிரத்து 228 இளைஞர்கள் பயன்பெறும் வகையில், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர உதவித்தொகையை இரு மடங்காக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

❖ மதுவிலக்கு படிப்படியாக அமல்படுத்தப்பட்டு, பூரண மதுவிலக்கு என்ற நிலை எய்தப்படும் என்ற அடிப்படையில் ஏற்கெனவே மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு, 500 மதுபானக் கடைகள் மூடப்பட்டன. அதனைத் தொடர்ந்து, இப்பொழுது மேலும் 500 மதுபானக் கடைகளை மூடியுள்ளோம்.

❖ மாண்புமிகு அம்மாவின் ஆசியோடு பதவியேற்ற மாண்புமிகு அம்மாவின் அரசு, குறுகிய நாட்களிலேயே மேலும் பல நல்ல திட்டங்களை செயல்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாட்டில் நடப்பாண்டு பருவ மழை பொய்த்த காரணத்தினால் கடும் வறட்சி ஏற்பட்டு, விவசாயிகள் பாதிக்கப்பட்டதால், அவர்களது இன்னல்களைப் போக்கும் வண்ணம், விவசாயிகளுக்கு 2,247 கோடி ரூபாய் பயிர் இழப்பு வறட்சி நிவாரண உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

❖ மாநிலத்திலுள்ள நீர் ஆதாரங்களை திறம்பட மேலாண்மை செய்து, தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்தி வறட்சியினை எதிர்கொள்ளவும், மழை நீரை சேமித்தும் புதிய நீர் ஆதாரங்களை உருவாக்கியும், பயனீட்டாளர்களின் பங்களிப்புடன் நீர் நிலைகளைப் புனரமைக்க பண்டைய "குடிமராமத்து" திட்டத்திற்கு புத்துயிர் அளித்து நடப்பு நிதியாண்டில் மட்டும் 100 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்திட ஆணையிடப்பட்டுள்ளது.

28.01.2017 அன்று சென்னை எண்ணூர் பகுதியில் ஏற்பட்ட எண்ணெய்க் கசிவு காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 30 ஆயிரம் மீனவக் குடும்பங்களுக்கு தலா 5,000 ரூபாய் வீதம் இடைக்கால நிவாரணம், 15 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் ஏழாவது ஊதியக் குழு பரிந்துரைத்துள்ள திருத்திய ஊதிய விகிதங்களை, தமிழக அரசுப் பணியாளர்களுக்கும் மாற்றியமைப்பதற்கு தேவையான பரிந்துரைகளை அளித்திட அலுவலர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த அரசு பதவியேற்ற குறுகிய நாட்களிலேயே அடுக்கடுக்கான பல மக்கள் பணிகளை செய்து வருவதை நீங்கள் அறிவீர்கள்.

கடந்த 04.03.2017 அன்று சென்னை மண்டலத்திற்குட்பட்ட ஏழு மாவட்டங்களில் 1,486 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு துறைகளைச் சார்ந்த புதிய திட்டப் பணிகளின் தொடக்க விழாவும், அடிக்கல் நாட்டு விழாவும் சிறப்பாக நடைபெற்றது.

நேற்று காலை சேலம் மண்டலத்திற்கு உட்பட்ட சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் 330 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்ட 3,971 திட்டப்பணிகள் தொடங்கி வைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து நேற்று பிற்பகல் திருச்சிராப்பள்ளி மண்டலத்திற்கு உட்பட்ட அரியலூர், கரூர், நாகப்பட்டினம்,

பெரம்பலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், திருச்சிராப்பள்ளி ஆகிய எட்டு மாவட்டங்களில் **623** கோடியே **55** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவு செய்யப்பட்ட **2,603** திட்டப்பணிகளை நான் தொடங்கி வைத்தேன்.

அதன் தொடர்ச்சியாக இன்று, திருநெல்வேலி மண்டலத்திற்கு உட்பட்ட திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி ஆகிய **3** மாவட்டங்களின் முடிவுற்ற திட்டப்பணிகளை துவக்கி வைத்ததில் நான் மிக்க மன நிறைவு கொள்கிறேன்.

வேளாண் குடிமக்களும், தோட்டத் தொழிலாளர்களும் அதிகமாக வசிக்கக்கூடிய மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம். சங்க இலக்கியத்தில், நில அமைப்பிற்கு ஏற்றாற்போல் நிலத்தை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்து வகையாகப் பிரித்தார்கள். இந்த ஐந்து வகை நிலங்களும் ஒரே மாவட்டத்தில் அமைந்திருப்பது என்பது அரிது. ஆனால், இந்த ஐந்து வகை நிலங்களையும் உடையது திருநெல்வேலி மாவட்டம் தான். இங்கே மலைகள் இருக்கிறது, காடுகள் இருக்கிறது, வயல்கள் இருக்கிறது, கடற்பகுதி இருக்கிறது. அதே நேரம் வறண்ட பகுதிகளும் இருக்கிறது. இத்தகைய சிறப்பு மிக்கது திருநெல்வேலி மாவட்டம். மற்றும் ஒரு சிறப்பு திருநெல்வேலிக்கு உண்டு. திருநெல்வேலி மாவட்டம் அதிக பள்ளிகளையும் கல்லூரிகளையும் பெற்றது. அதனால் தான் பாளையங்கோட்டையை "தென்னிந்தியாவின் ஆக்ஸ்போர்டு" என்று அழைக்கிறார்கள். "கல்வி சிறந்த தமிழ்நாடு" என்று பாடிய மகாகவி பாரதியார் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்தவர். இவ்வளவு சிறப்பு மிக்கது திருநெல்வேலி மண்டலம்.

உலகம் போற்றும் சுவாமி விவேகானந்தர் ஞானம் பெற உந்துதலாக இருந்த இடம் கன்னியாகுமரி. எனவே இன்று இந்த விழாவில் கலந்து கொள்வது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கிறது.

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில், **27** கோடியே **60** இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள குழந்தைகள் நல

ஒப்புயர்வு மையம் ஒன்றும், மற்றும் செவிலியர் பயிற்சி பள்ளி விடுதி கட்டடம், 14 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள துப்புரவு பணியாளர்கள் குடியிருப்புகள், அலுவலக கட்டடங்கள் மற்றும் குடிநீர் மேம்பாட்டுப் பணிகள், கரந்தனேரியில் 110 கிலோவாட் மின்திறன் கொண்ட துணை மின் நிலையம் உள்ளிட்ட 102 பணிகள் 88 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவு செய்யப்பட்டு இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் உயர்கல்வித்துறையின் சார்பாக நாகலாபுரத்திலுள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிக்கான கட்டடங்கள், மாணவர் விடுதிகள், வ.உ.சி. பொறியியல் கல்லூரி மாணவர் விடுதி ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், அங்கன்வாடி கட்டடங்கள், பசுமை வீடுகள், பஞ்சாயத்து சேவை மையங்கள் உள்ளிட்ட 124 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 822 திட்டப் பணிகள் இன்று தொடங்கி வைக்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டம், திங்கள் சந்தை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 500 மெட்ரிக் டன் சேமிப்புக் கிடங்கு 50 இலட்சம் ரூபாய் செலவிலும், கைவினைஞர்களின் தரமான தயாரிப்புகளை நியாயமான விலையில் விற்பனை செய்ய 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் கன்னியாகுமரியில் நகர்ப்புற கண்காட்சி / குடில், 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் சுகாதாரப் பணியாளர்கள் குடியிருப்பு, நாகர்கோவிலில் பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம் உள்ளிட்ட 174 பணிகள் 22 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

ஆக மொத்தம், 1,098 திட்டப்பணிகள், 235 கோடியே 61 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவு செய்யப்பட்டு, இன்றைய தினம் மக்களின் பயன்பாட்டுக்கென துவக்கி வைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மீனவ நண்பனாக விளங்கினார். அவர்களுடைய வழியில் மாண்புமிகு அம்மா அவர்களும் மீனவர்களுக்கெல்லாம் தாயாக விளங்கினார். மீனவர்களுக்கு எப்போதெல்லாம் இடர்பாடுகள் ஏற்படுகிறதோ, அப்போதெல்லாம் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டு இன்னல்கள் தீர்க்கப்படுகின்றன.

மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த நடவடிக்கைகளினால் 2,541 மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். கடந்த 6ஆம் தேதி இராமேஸ்வரம் மீனவர்கள் பாக் வளைகுடாவில் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது இலங்கை கடற்படையினரால் சுடப்பட்டார்கள். இந்த துப்பாக்கி சூட்டில் திரு. பிரிட்ஜோ உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன். உயிரிழந்த மீனவரின் குடும்பத்திற்கு உடனடியாக 5 இலட்சம் ரூபாய் நிதி வழங்க உத்தரவிட்டு, துப்பாக்கி சூட்டில் காயமடைந்த மற்றவருக்கு தொடர் சிகிச்சை அளிக்க மாவட்ட நிர்வாகத்திற்கு உத்தரவிட்டேன். இலங்கை கடற்படையினரின் அத்துமீறலை உடனடியாக நிறுத்த பாரதப் பிரதமரை வலியுறுத்தி கடிதம் எழுதியுள்ளேன். அதற்கிணங்க, மத்திய அரசும் இலங்கை அரசிடம் விளக்கம் கோரியுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் வந்த அம்மா அரசும் மீனவர்களுக்கு எப்போதும் உறுதுணையாகவும், நேசமாகவும், பாசமாகவும் இருக்கும் என்பதை உறுதியாக கூறுகிறேன்.

இன்றைக்கு, தமிழ்நாட்டில் 140 ஆண்டுகளுக்கு பின்னர் வரலாறு காணாத அளவில் வறட்சி ஏற்பட்டு உள்ளது. இந்த வறட்சியால் விவசாயிகளை பாதுகாக்கும் விதமாக, விவசாய பெருமக்களின் இன்னல்களைப் போக்கும் விதமாக அவர்களுக்கு இரண்டாயிரத்து இருநூற்று நாற்பத்தேழு கோடி ரூபாய் பயிர் இழப்பு வறட்சி நிவாரணத் தொகை வழங்கிட மாண்புமிகு அம்மாவின் அரசு உடனடியாக உத்தரவிட்டது. இந்த நிவாரணத்தொகை வழங்கும் பணி 06.03.2017 அன்று சென்னையில் துவக்கி

வைக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மூலம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகைக்கான உத்தரவுகள் வழங்கப்பட்டு, விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நிவாரணத் தொகை உடனடியாக செலுத்தப்படும். இதனால் வறட்சியால் பாதிக்கப்பட்ட 32 இலட்சத்து 30 ஆயிரத்து 191 விவசாயிகள் பயனடைவார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

வறட்சி காரணமாக வேலை வாய்ப்பின்றி பாதிக்கப்பட்டுள்ள விவசாய தொழிலாளர்களுக்கு, போதிய வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், 100 நாட்கள் பணி வரம்பு என்பது 150 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

வறட்சி காரணமாக கிராமப்புறங்களில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் நீர் ஆதாரங்கள் மற்றும் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணிகளுக்காக 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த ஆணையிடப்பட்டு, பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

வறட்சி காரணமாக நகர்ப்புறங்களில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் நீர் ஆதாரங்கள் மற்றும் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணிகள் 160 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது. பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

பொதுப்பணித் துறை மூலமாக நிலத்தடி நீர்த்தேக்கும் அமைப்பு, நிலத்தடி நீர் செரிவூட்டும் அமைப்பு போன்ற நீராதாரங்களை மேம்படுத்த 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இப்படிப்பட்ட திட்டங்கள் அனைத்தும் ஏழை எளிய மக்களை மையமாக வைத்து மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகிறது.

அதிலும் குறிப்பாக மகளிருடைய நலனுக்காகவும், பாதுகாப்புக்காகவும் மாண்புமிகு அம்மாவின் அரசு ஏராளமான திட்டங்களை வகுத்துள்ளது. “மகளிரும், குழந்தைகளும் என் இரு கண்கள்” என்பார் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா வழியில் வந்த இந்த அரசு பொறுப்பேற்ற முதல் நாளிலேயே கையெழுத்திட்ட ஐந்து திட்டங்களில் இரண்டு திட்டங்கள் மகளிரின் நலனுக்குரியது என்பதை நான் என்னுடைய உரையின் தொடக்கத்திலேயே குறிப்பிட்டு இருந்தேன். இதை ஏன் நான் இந்த நேரத்தில் குறிப்பிடுகிறேன் என்றால், இன்று சர்வதேச மகளிர் தினம். சர்வதேச மகளிர் தினத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் வந்த அம்மாவுடைய அரசு இங்கே வருகை தந்திருக்கிற மகளிர் உள்ளிட்ட அனைத்து மகளிருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் பெண்களின் நலனுக்காக கொண்டு வந்த திட்டங்களை எல்லாம் இங்கே நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். தொட்டில் குழந்தை திட்டம், பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம், மகளிர் சுய உதவிக் குழுக்கள், இந்தியாவிலேயே முதன்முறையாக அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், அனைத்து மகளிர் அதிரடிப்படை மற்றும் அனைத்து மகளிர் காவல் படை, தாயின் முதல் எழுத்தை குழந்தையின் தலைப்பு எழுத்தாக பயன்படுத்துதல், வீரதீர பெண்மணிக்கு கல்பனா சாவ்லா விருது, ஏழை பெண்களுக்கான திருமண உதவித் திட்டம், பெண்களை ஊக்கப்படுத்தும் வகையில் பட்டம் மற்றும் பட்டயம் பெற்ற பெண்களுக்கான திருமண உதவித் தொகை, பெண்களின் வேலை பளுவைக் குறைக்கும் வகையில் விலையில்லா மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின் விசிறி, இளம் பெண்களின் சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் விலையில்லா சானிடரி நாப்கின் திட்டம், மகளிர் சுகாதார வளாகங்கள், 24 மணி நேர மகப்பேறு மருத்துவ

சேவை அளிக்கும் திட்டம், இன்னும் பல திட்டங்களை மகளிருக்கு அள்ளி அள்ளி வழங்கிய ஒரே அரசு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு தான் என்பதை நான் சொல்லி உங்களுக்கு தெரிய வேண்டியது இல்லை. இன்னொரு சிறப்பு, ஒவ்வொரு ஆண்டும் சமூக தொண்டு செய்யும் பெண்களை ஊக்குவிக்கும் வகையில் உயரிய விருதான ஔவையார் விருதினை மாண்புமிகு அம்மா அவர்கள் தான் உருவாக்கி வழங்கினார்கள்.

“எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்” என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களின் மகத்தான கொள்கை. அந்த கொள்கை வழியில், மக்கள் மேம்பாட்டிற்கு அயராது பாடுபட எங்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் பயிற்சி அளித்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் வந்த இந்த அரசு எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்பதற்காக அல்லும் பகலும் அயராது உழைத்து வருகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அரசு செயல்படுத்தும் திட்டங்கள் அனைத்தும் ஏழை, எளிய மக்கள் நலனையே மையமாகக் கொண்டது. எனவே மக்கள் அனைவரும் இந்தத் திட்டத்தின் பயன்களை முழுமையாகப் பெற்று அவர்கள் வாழ்வில் முன்னேற வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்விழா மிகச் சிறப்பாக நடைபெற அனைத்து ஏற்பாடுகளையும் செய்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், அரசு உயர் அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து நல் இதயங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
08.03.2017 அன்று திருநெல்வேலி மண்டலத்திற்கான
அரசு திட்டங்களைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை.

மதுரை மண்டலத்தில் ரூ.1,004.13 கோடி மதிப்பீட்டில் 6,874 நிறைவு செய்யப்பட்ட திட்டப்பணிகள் துவக்கம்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா என்ற தெய்வத்தை வணங்கி, இந்த சிறப்பான நிகழ்ச்சியினை தலைமை தாங்கி நடத்தி கொண்டிருக்கிற மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே,

இந்த எழுச்சியோடு நடைபெற்று கொண்டிருககிற இந்த விழாவிலே கலந்து கொண்டு சிறப்பித்திக் கொண்டிருக்கிற மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்களே,

மாண்புமிகு கூட்டுறவு மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. செல்லூர் கே. ராஜு அவர்களே,

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார் அவர்களே,

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்களே,

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் எம். மணிகண்டன் அவர்களே,

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் திரு. ஜி. பாஸ்கரன் அவர்களே,

விழாவில் பங்குகொண்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

அரசு செயலாளர்களே,

காவல்துறை அதிகாரிகளே,

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

முன்னாள் ஊராட்சிமன்ற பிரதிநிதிகளே,

கூட்டுறவு சங்க நிருவாகிகளே,

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே,

அனைவருக்கும் எனது பணிவான வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை மாநகருக்கு மற்றொரு பெயர் தூங்கா நகரம். இதற்குக் காரணம், இரவு முழுவதும் தூங்காமல் கண் விழித்து வணிகம் செய்கிறார்கள் மதுரை மாநகர மக்கள்.

மீன் தூங்குவது இல்லை. மீனைப்போன்ற கண்களையுடைய அனைவரையும் காக்கும் அருள்மிகு மீனாட்சி தாயும் தூங்காமல் கண் விழித்து மதுரை மக்களை காப்பாற்றி வருகிறார் என்ற மற்றொரு பொருளிலும் மதுரையை தூங்கா நகரம் என்று அழைக்கிறோம். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின்

ஆணி வேராகத் திகழ்ந்த மாண்புமிகு அம்மா எங்களுக்கு மகா சக்தியாக விளங்கி தமிழக மக்களை காப்பாற்ற கண் துஞ்சாமல் அயராது உழைத்தார்கள்.

வடக்கே டில்லியைப் போல தெற்கே பல மன்னர்களால் ஆளப்பட்ட ஒரு நகரம் மதுரை. குறிப்பாக பாண்டியர்களாலும், சோழர்களாலும், நாயக்கர்களாலும், இந்நகரம் பல கால கட்டங்களில் ஆளப்பட்டுள்ளது. அந்தந்த மன்னர்கள் தங்கள் கலை, கலாச்சாரம், கட்டடக்கலை, மொழி, பண்பாடு அனைத்தையும் இங்கு நினைவு சின்னங்களாக விட்டுச் சென்றிருக்கிறார்கள். அதனால் தான் மதுரை ஒரு கலைகளின் சங்கமமாக இன்றும் விளங்கி வருகிறது.

இத்தனை சிறப்புகள் மிக்க மதுரைக்கு இன்னொரு சிறப்பு என்னவென்றால், தனி ஒரு பெண்ணால் சர்வ அதிகாரமும் படைத்த அரசனையே எதிர்த்து நீதி பெற முடியும் என்று நிரூபித்தது மதுரை தான் நம் மதுரை. அதே வழியில் தான், தனியொரு பெண்மணியாக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழக மக்களுக்காக போராடிப் போராடி பல வெற்றிகளைத் தேடித் தந்தார்கள் என்பதை இந்த உலகம் அறியும். தமிழக மகளிருக்கு சகலவித உரிமைகளும் வாய்ப்புகளும் கிடைத்து, அவர்கள் வேகமாக முன்னேறி இன்று பல சாதனைகளை படைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனை சர்வதேச மகளிர் தினமான இன்று கூறிக் கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

ஒரு பெண்ணின் சிரமம் மற்றொரு பெண்ணுக்குத் தான் தெரியும் என்பார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதில் இருந்து மகளிருடைய அல்லல்களை எல்லாம் தீர்க்கும் விடிவெள்ளியாக பல்வேறு மகளிர் நலத் திட்டங்களை அடுக்கடுக்காக செயல்படுத்தினார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் அம்மா அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் நாளே, கையெழுத்திட்ட ஐந்து சிறப்பான திட்டங்களில் இரண்டு மகளிருக்கானது என்பதிலிருந்தே இந்த அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு என்பது விளங்கும்.

பெண்கள் நாட்டின் கண்கள் என நினைத்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசும்போது, "பெண்கள் நினைத்தால் தங்கள் தலையெழுத்தை மட்டுமல்ல, மற்றவர்களின் தலையெழுத்தையும் மாற்ற முடியும். அவர்களுக்குத் தேவை வாய்ப்புகள். அந்த வாய்ப்புகளை அவர்களுக்கு வழங்குவதே எனது லட்சியம்" என்று முழங்கினார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் லட்சியத்தைப் போன்றே வேறு எந்த நாட்டிலும், எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு பல்வேறு நலத் திட்டப் பணிகளை மகளிருக்கு அள்ளி அள்ளிக் கொடுத்தது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் அரசு மட்டுமே. எனவே, அம்மாவின் வழியில் வந்த அம்மா அரசு மகளிருக்கு ஏராளமான நலத் திட்டப் பணிகளை வழங்கக் காத்திருக்கிறது என்ற உறுதியுடன், சர்வதேச மகளிர் தினமான இன்று அனைத்து மகளிருக்கும் என் உளமார்ந்த மகளிர் தின நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த ஊர் இந்த மதுரை. தமிழை பக்தி இலக்கியத்துடன் வளர்த்த பூமி இந்த பூமி. அதனால் தான் தொலைநோக்கு பார்வையுடன் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் உலகத் தமிழ்ச் சங்கத்தை மதுரையிலே நிறுவ உத்தரவிட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் உலக தமிழ்ச் சங்கம் நிறுவும் திட்டத்திற்கு புத்துயிர் கொடுத்து, நிதி ஒதுக்கி இத்தனை பிரம்மாண்டமான கட்டடத்தை நிறுவி சாதனை படைத்தார்கள்.

இந்த விழா உலகத் தமிழ்ச் சங்க வளாகத்திலே நடைபெறுவதை வரலாற்று சிறப்பாக கருதுகிறோம். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் அறிவிக்கப் பெற்ற உலகத் தமிழ்ச் சங்க வளாகம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் 14.5 ஏக்கர் நிலப் பரப்பில் நிறுவப் பெற்று 37 கோடியே 25 இலட்ச ரூபாய் செலவில் இந்தக் கட்டடம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கரங்களால் 01.03.2016 அன்று திறந்து வைக்கப்பட்டது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே பகிர்ந்து கொள்கிறேன். அதன் பிறகு, இவ்வளாகத்தில் நடைபெறும்

மிகப்பெரிய அரசு நிகழ்ச்சி இதுதான் என்பதனையும் நினைவூட்ட கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கப் பெற்று, நிறைவு செய்யப்பட்ட பல்வேறு திட்டப் பணிகளை இந்த வளாகத்திலே தொடங்கி வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மதுரை மாவட்டத்தில், புரட்சித்தலைவர் காலனி திட்டப்பகுதியில் 20 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் 276 குடிசை மாற்று வாரிய அடுக்குமாடிக் குடியிருப்புகள், 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கம் உட்பட 91 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவிலான 1,641 பணிகள் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

தேனி மாவட்டம், பெரியகுளத்தில் 15 கோடியே 53 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர் திட்டம் மற்றும் 110 கிலோவாட் மின்திறன் கொண்ட துணை மின் நிலையம் உள்ளிட்ட 84 கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவிலான 333 பணிகள் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மாநகராட்சியில் 5 கோடி ரூபாய் செலவில் புதிய அலுவலக கட்டடம், நத்தம் பேரூராட்சியில் 4 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் புதிய பேருந்து நிலையம் மற்றும் 2 கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட திண்டுக்கல் (கிழக்கு) வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் உள்ளிட்ட 103 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவிலான 1,644 பணிகள் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

சிவகங்கை மாவட்டத்தில் 7 கோடி ரூபாய் செலவில் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் இயந்திரம், காரைக்குடி, அழகப்பா பல்கலைக் கழகத்தில் 3 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் மகளிர் விடுதிக் கட்டடங்கள், கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் உட்பட 45 கோடியே ஒரு இலட்சம் ரூபாய் செலவிலான 548 பணிகள் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

இராமநாதபுரம் மாவட்டத்தில், 22 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள பாம்பன் மீன் இறங்குதளம்,

முகுந்தராயர் சத்திரம் மீன் இறங்குதளம், வேதாளை மீன் இறங்கு தளம் மற்றும் பரமக்குடி மற்றும் நீராவியில் 3 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவியர் விடுதிகள் உள்ளிட்ட 600 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவிலான 1,398 பணிகள் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை மற்றும் சாத்தூரில் 14 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மதுரை காமராஜர் பல்கலைக் கழக உறுப்பு கலை மற்றம் அறிவியல் கல்லூரி கட்டடங்கள், 11 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில் அச்சங்குளம் மற்றும் கோட்டைப்பட்டியில் கட்டப்பட்டுள்ள தடுப்பணைகள், விருதுநகர் மாவட்ட தலைமையிடத்து மருத்துவமனையில் 3 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பிலான கட்டடங்கள் உள்ளிட்ட 79 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவிலான 1,310 பணிகள் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

ஆக மொத்தம், மதுரை மண்டலத்திற்கு உட்பட்ட மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர் ஆகிய 6 மாவட்டங்களில், பல துறைகளின் சார்பில் 1,004 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 6,874 திட்டப்பணிகள் நிறைவு செய்யப்பட்டு, அதற்கான துவக்க விழா இன்று நடைபெறுகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்திற்குட்பட்ட இராமேஸ்வரத்தில் மீன்பிடித் தொழில் முதன்மை தொழிலாக நடந்து வருகிறது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மீனவர்களின் நலனிலும் பாதுகாப்பிலும் அதிக அக்கறை கொண்டு பல்வேறு நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தினார்கள்.

முந்தைய தி.மு.க. அரசால் 2010–2011ஆம் ஆண்டில் மீன் வளத்துறைக்காக ஒதுக்கப்பட்டிருந்த 193 கோடியே 33 இலட்சம் ரூபாயை, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் 2016–2017ஆம் ஆண்டில் 743 கோடியே 79 இலட்சம் ரூபாயாக பன்மடங்கு உயர்த்தி மீனவர்கள் வாழ்வுக்கு வளமூட்டினார்கள் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

மாநிலத்தின் மீன்வள உட்கட்டமைப்பு வசதிகளை முனைப்புடன் மேம்படுத்தும் விதமாக, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு கடந்த 5 ஆண்டுகளில் எப்பொழுதும் இல்லாத வகையில் 1,104 கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணிகளை செய்து முடித்துள்ளது.

புதிய சூரை தூண்டில் மற்றும் செவல் வலை மீன்பிடி விசை படகுகள் கட்ட 50 விழுக்காடு மானியமாக அதிகபட்சமாக 30 இலட்சம் ரூபாய் வழங்கும் திட்டத்தின் கீழ் 11 பயனாளி குழுக்களுக்கு 3 கோடியே 30 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு படகு கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மீன்பிடிப்பு குறைவு கால சிறப்பு நிவாரணமாக 2016–2017 ஆம் ஆண்டு 4,524 மீனவ குடும்பங்களுக்கு 22 கோடியே 62 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூரில் சுமார் 114 கோடி ரூபாய் செலவில் மீன்பிடி துறைமுக கட்டுமானப் பணிகளுக்கு மாண்புமிகு அம்மா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு தற்போது பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பாக் வளைகுடாப் பகுதியில் தமிழ்நாட்டு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையினை நிலைநாட்டுவதிலும், தி.மு.க. ஆட்சியில் தாரைவார்க்கப்பட்ட கச்சத்தீவினை மீட்டெடுப்பதிலும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உறுதியான நிலைப்பாட்டினை தற்போதுள்ள அம்மாவின் அரசு தொடர்ந்து வலியுறுத்தும் விதமாக, 27.02.2017 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை புதுடெல்லியில் நேரில் சந்தித்து மீண்டும் ஒரு கோரிக்கை மனு அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கடந்த 6ந்தேதி இராமேஸ்வரம் மீனவர்கள் பாக் வளைகுடாவில் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது இலங்கை கடற்படையினரால் சுடப்பட்டார்கள். இந்த துப்பாக்கி சூட்டில் திரு. பிரிட்ஜோ உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன். உயிரிழந்த மீனவரின் குடும்பத்திற்கு உடனடியாக

5 இலட்சம் ரூபாய் நிதி வழங்க உத்தரவிட்டு, துப்பாக்கி சூட்டில் காயமடைந்த மற்றவருக்கு தொடர் சிகிச்சை அளிக்க மாவட்ட நிர்வாகத்திற்கும் உத்தரவிட்டேன். இலங்கை கடற்படையினரின் அத்துமீறலை உடனடியாக நிறுத்த பாரதப் பிரதமரை வலியுறுத்தி கடிதம் எழுதியுள்ளேன். அதற்கிணங்க, மத்திய அரசும் இலங்கை அரசிடம் விளக்கம் கோரியுள்ளது.

மீனவர்களின் நலத்திலும், வளத்திலும் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் கொண்ட ஈடுபாடும் அக்கறையும் போலவே, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மீனவர்களின் பாதுகாப்பிற்கும் வாழ்வாதாரத்திற்கும் பாதுகாவலராக விளங்கியதைப் போல, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் வந்த இந்த அரசு மீனவர்களுக்கு உறுதுணையாக இருக்கும் என உறுதிபடக் கூறிக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் நடப்பாண்டு பருவமழை பொய்த்த காரணத்தினால் கடும் வறட்சி ஏற்பட்டு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களின் இன்னல்களைப் போக்கும் வண்ணம் விவசாயிகளுக்கு 2,247 கோடி ரூபாய் பயிர் இழப்பு வறட்சி நிவாரணத் தொகை வழங்கிட மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த அரசு உடனடியாக உத்தரவிட்டது. இந்த நிவாரணத்தொகை வழங்கும் பணி 06.03.2017 அன்று சென்னையில் துவக்கி வைக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகைக்கான உத்தரவுகளை மாண்புமிகு அமைச்சர்கள் வழங்க உள்ளார்கள். விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நிவாரணத் தொகை செலுத்தப்பட உள்ளது. இதனால் வறட்சியால் பாதிக்கப்பட்ட 32 இலட்சத்து 30 ஆயிரத்து 191 விவசாயிகள் பயனடைவார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டு தமிழகத்தில் பருவ மழை பொய்த்ததால் ஏற்பட்ட கடும் வறட்சியின் காரணமாக கால்நடைகளுக்கு தீவனம் கிடைப்பதில் ஏற்பட்டுள்ள சிரமங்களை களையும் பொருட்டு டெல்டா மாவட்டங்கள் உட்பட தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும்

வட்டார அளவில் உலர் தீவனக் கிடங்குகள் திறக்கப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமல்ல, மாநிலத்திலுள்ள நீர் ஆதாரங்களை திறம்பட மேலாண்மை செய்து வறட்சியினை எதிர்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நீர் நிலைகளைப் புனரமைக்க பண்டைய குடி மராமத்து திட்டத்திற்கு புத்துயிர் அளித்து இந்த நிதியாண்டில் மட்டும் 100 கோடி ரூபாய் மதிப்பில் திட்டப்பணிகள் செயல்படுத்தப்படும். வரும் ஆண்டில் 300 கோடி ரூபாய் மதிப்பில் மக்கள் இயக்கமாக திட்டப் பணிகள் செயல்படுத்தப்படும்.

வறட்சி காரணமாக வேலை வாய்ப்பின்றி பாதிக்கப்பட்டுள்ள விவசாய தொழிலாளர்களுக்கு, போதிய வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், 100 நாட்கள் பணி வரம்பு என்பது 150 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

வறட்சி காரணமாக கிராமப்புறங்களில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் நீர் ஆதாரங்கள் மற்றும் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணிகள் 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த ஆணையிடப்பட்டு, பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

வறட்சி காரணமாக நகர்ப்புறங்களில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் நீர் ஆதாரங்கள் மற்றும் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணிகள் 160 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த ஆணையிடப்பட்டு, பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

பொதுப்பணித் துறை மூலமாக நிலத்தடி நீர்த்தேக்கும் அமைப்பு, நிலத்தடி நீர் செறிவூட்டும் அமைப்பு போன்ற நீராதாரங்களை மேம்படுத்த 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அரசு, மாண்புமிகு அம்மா வழியிலேயே, மாண்புமிகு அம்மாவின் எண்ணங்களை எல்லாம் நிறைவேற்றி, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எப்பொழுதுமே விசுவாசமாக இருக்கும் என்று உறுதியளிக்கிறேன். விசுவாசம் என்றால் என்ன என்பதை விளக்குவதற்கு ஒரு சிறிய சுருக்கமான கதை.

"ஒரு காட்டில் ஒரு பெரிய மரம் இருந்தது. அந்த மரத்தின் நிழலில் பல பறவைகள் கூடுகட்டி மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தன. அந்த மரத்தின் மீது அன்பு கொண்டிருந்தன. ஆனால் இறைவன் இந்த மரத்தில் வாழும் பறவைகள் யாவும் அந்த மரத்தின் மீது உண்மையிலேயே அன்பு கொண்டிருக்கின்றனவா என்பதை சோதிக்க நினைத்தார்.

எனவே மாயையாக அந்த மரத்தை பட்டுப் போகச் செய்தார். இந்த காட்சியை கண்ட ஒரு கிளி மட்டும் திடுக்கிட்டது. அம்மரத்தின் நிலை அறிந்து கண்ணீர் விட்டது. இத்தனை நாள் இந்த மரத்தின் பொந்தில் எவ்வித ஆபத்துமின்றி அமைதியுடன் என் வாழ்க்கையை கழித்தேன். எனக்கு குடியிருக்க இடம் தந்த இந்த மரம் என் பசியைப் போக்கி வைக்கக் கனிகள் தந்தது, என்னை அலங்கரித்துக் கொள்ள பூக்களை தந்தது என தவித்தது.

இதில் வசித்த மற்ற பறவைகள் அனைத்தும் செழுமையான இடத்தை நோக்கி பறந்தன; ஆனால் கிளி மட்டும் அந்த மரத்தை விட்டு செல்லவில்லை. அந்த மரத்திலேயே தொடர்ந்து வசித்து வந்தது.

இந்த கிளியின் உறுதியினை அறிந்த இறைவன் அதன்முன் தோன்றி "நீ தங்கியிருக்கும் இந்த மரம் தற்பொழுது பாதிக்கப்பட்டுள்ளது. எனவே பசுமையான வேறு இடத்திற்கு செல்லாமல் இங்கேயே இன்னும் ஏன் வாழ்ந்துக் கொண்டிருக்கிறாய்" எனக் கேட்டார்.

அதற்கு அந்தக் கிளி "இந்த மரத்தில் தான் என் தாய் என்னை ஈன்றாள். அதன் பின்னர் இந்த மரமே எனக்குத் தாயாகவே இருந்து எனக்கு உணவூட்டியது, உற்ற நண்பனைப்போல என்னிடம் இணைந்து பிணைந்து உறவாடியது. இயற்கை சீற்றங்களிலிருந்து என்னைக் காப்பாற்றியது, எனவே தற்சமயம் இந்த மரத்திற்கு ஒரு பாதகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கலாம், என் தாயைப் போன்று ஒத்திருக்கும் இந்த மரத்தினை விட்டு செல்வது தர்மம் ஆகாது" எனக் கூறியது.

"என்னிடம் இது காட்டிய அன்பிற்காக நான் பெரியதாய் கடமைப்பட்டுள்ளேன். எனவே என்னை தயவு செய்து இந்த மரத்தை விட்டு போ என்று மட்டும் கூறாதீர்கள்" என்று கிளி கூறியது, இந்த கிளியின் வார்த்தையைக் கேட்டு இறைவன் மிகவும் மகிழ்ந்து போனான். தன்னுடைய நலனை கருதாமல் தன்னைப் பேணிக்காத்த மரத்திற்கு விசுவாசமாக இருக்க நினைக்கும் இந்தக் கிளி ஆபூர்வமானது, வணங்கத்தக்கது என எண்ணிய இறைவன், "சரி, இந்த மரத்தை விட்டு போக வேண்டாம். வேறு என்ன வரம் வேண்டும். கேள்" என்றார். அதற்கு அந்தக் கிளி "இந்த மரத்தை பழையபடியே பசுமையாக்க வேண்டும்", எனக் கேட்டது.

உடனே இறைவன் கிளியிடம் "இந்த மரம் உண்மையிலேயே பாதிப்புக்கு உள்ளாகவில்லை. இங்கு வசிக்கும் பறவைகளின் எண்ணங்களை அறியவே நான் ஒரு மாயையை உருவாக்கினேன். கிளியான நீ மரத்தின் மீது கொண்டிருந்த விசுவாசத்தினை கண்டு மெய் சிலிர்த்து, மாயை விலக்கி மீண்டும் முன்போல் இந்த மரத்தை பூத்து குலுங்கச் செய்கிறேன்", என்றார்.

ஒரு சிறிய கிளியானது, தன்னை வளர்த்து ஆளாக்கிய மரத்தின் மீது மிகுந்து அன்பு கொண்டிருக்கிறது, அதற்காக இறைவனிடம் வாதாடி அந்த மரத்தை மீண்டும் பூத்துக் குலுங்கச் செய்தது. ஆனால் சில மனிதர்களோ, தங்களுடைய சுயநலத்தை கருத்தில் கொண்டு, தாங்கள் வந்த பாதையை மறந்து எங்கெங்கோ சென்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்

.... தன்னலம் கருதாமல், விசுவாசமாக இருந்தால், இறைவன் நம்மை உயர்த்துவார். நன்றி பாராட்டுவது, விசுவாசமாக இருப்பது, இறைவனையே அழைத்து வரும்'' என்பதை நாம் மறக்கக் கூடாது.

மாண்புமிகு அம்மா அவர்கள் அடிக்கடி கூறுவார்கள், "என் எண்ணங்கள் மக்களைச் சுற்றியே அமைந்திருக்கின்றன, என்னுடைய செயல்பாடுகள் மக்களை மையப்படுத்தியே அமைந்திருக்கிறது'' என்பார்கள். "ஏழைகள் ஏழைகளாகவே இருந்து விடக்கூடாது. அவர்களுடைய நிலை உயர வேண்டும். அதற்காகவே அல்லும் பகலும் நான் உழைத்து வருகிறேன்'' என்று கூறி, தன்னைப் பின்பற்றுகிறவர்களையும் மக்களுக்காக உழைக்க ஊக்கப்படுத்தியவர்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் எங்களிடம் விட்டுச் சென்ற மக்கள் பணிகள் அனைத்தையும் நாங்கள் நிறைவேற்றி விசுவாசமாக நடந்து கொள்வோம் என இந்த விழாவில் உறுதியளிக்கிறோம்.

இந்த இனிய விழாவிலே கலந்துகொண்டு நாங்கள் மேலும் பல திட்டங்களை செயல்படுத்த ஊக்கமும், உற்சாகமும் அளிக்கும் உங்களுக்கு நன்றி.

இந்த சிறந்த விழாவிற்கு ஏற்பாடு செய்த அனைத்து நல் இதயங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
08.03.2017 அன்று மதுரை மண்டலத்திற்கான
அரசு திட்டங்களைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை.

கோயம்புத்தூர் மண்டலத்தில் ரூ.1,313.20 கோடி மதிப்பீட்டில் 8,031 நிறைவு செய்யப்பட்ட திட்டப்பணிகள் துவக்கம்!

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி இந்த இனிய விழாவிற்கு வருகை புரிந்து சிறப்பான கருத்துகளை இங்கே எடுத்துரைத்த மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே!

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புதிட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ்.பி.வேலுமணி அவர்களே!

மாண்புமிகு சுற்றுச்சூழல்துறை அமைச்சர் திரு.கே.சி.கருப்பணன் அவர்களே! மற்றும் மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்களே!

மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர் அவர்களே!

மாண்புமிகு சட்டப் பேரவை துணைத்தலைவர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களே! மற்றும் இந்த நிகழ்ச்சியிலே, மேடையிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

அரசு தலைமைச் செயலர் அவர்களே!
அரசு உயர் அதிகாரிகளே!
காவல்துறை அதிகாரிகளே!
மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற
முன்னாள் அமைச்சர் பெருமக்களே,
முன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களே,
முன்னாள் உள்ளாட்சி அமைப்பு சார்ந்த பிரதிநிதிகளே,
கூட்டுறவு சங்க நிருவாகிகளே,
வணக்கத்திற்குரிய தாய்மார்களே!
பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!

எனதருமை பொதுமக்களே!

கோவை, ஈரோடு, திருப்பூர், நீலகிரி மாவட்டங்களைச்

சார்ந்த உழைப்பாளர் உடன்பிறப்புகளே!

உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

❖ ‘அம்’ என்றால் தெய்வீகம், ‘மா’ என்றால் அளவில்லாத ... என்று பொருள். அளவிடற்கரிய தெய்வத்தன்மை பொருந்தி, உலகத் தமிழர்களின் உள்ளங்களில் சக்தியாக வாழ்ந்து கொண்டிருப்பவர் நமது இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

❖ மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆசியுடன் நடைபெறும் இந்த அரசு பொறுப்பேற்ற குறுகிய காலத்திற்குள்ளேயே பல்வேறு திட்டப்பணிகளை தொடங்கி வைக்கும் பேரினை அம்மா அவர்களின் நல்லாசியோடு நான் பெற்றிருக்கிறேன்.

❖ கடந்த 04.03.2017 அன்று சென்னை மண்டலத்திற்குட்பட்ட ஏழு மாவட்டங்களில் 1,486 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 7,508 பணிகளின் தொடக்க விழாவும், அடிக்கல் நாட்டு விழாவும் சிறப்பாக நடைபெற்றது.

❖ கடந்த 07.03.2017 அன்று காலை, சேலம் மண்டலத்திற்கு உட்பட்ட சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் 330 கோடியே 84 இலட்சம் மதிப்பீட்டில் 3,971 திட்டப்பணிகள் துவக்கி வைக்கப்பட்டன.

❖ 07.03.2017 அன்று மாலை, திருச்சிராப்பள்ளி மண்டலத்திற்கு உட்பட்ட அரியலூர், கரூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருவாரூர் மாவட்டங்களில் 623 கோடியே 55 இலட்சம் மதிப்பீட்டில் 2,603 திட்டப்பணிகள் துவக்கி வைக்கப்பட்டன.

❖ அதனைத் தொடர்ந்து, 08.03.2017 அன்று காலை, திருநெல்வேலி மண்டலத்திற்குட்பட்ட திருநெல்வேலி,

கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களில் 235 கோடியே 61 இலட்சம் மதிப்பீட்டில் 1,098 திட்டப்பணிகள் துவக்கி வைக்கப்பட்டன.

❖ அதே நாள் மாலை, மதுரை மண்டலத்திற்குட்பட்ட ஏழு மாவட்டங்களில் 1,004 கோடியே 13 இலட்சம் மதிப்பீட்டில் 6,874 திட்டப்பணிகள் துவக்கி வைக்கப்பட்டன.

❖ இத்திட்டங்களில் பெரும்பாலானவை மாண்புமிகு அம்மா அவர்கள் விதி 110இன் கீழ் அறிவித்த திட்டங்களாகும். இத்திட்டங்கள் பல நிறைவு செய்யப்பட்டு விட்டன. மீதம் விரைவாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

“திட்டத்திற்காக அல்ல மக்கள்
மக்களுக்காகவே திட்டங்கள்”

என்ற உயர்ந்த நோக்கத்துடன், துறைகள் தோறும் சாதனை நிகழ்த்தி சரித்திரம் படைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். திக்கற்றவருக்கு தெய்வம் துணை இருப்பது போல் துயருறும் மக்களுக்கு மாண்புமிகு அம்மா துணையாக இருந்தார்கள்.

மாண்புமிகு அம்மாவைத் தொடர்ந்து ஏழைகளை முன்னேற்ற அம்மாவின் அரசு துணையாக இருக்கும்.

“தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன் ஆள்பவர்க்கு.”

என்ற குறளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மக்களின் நலன் கருதி நல்ல பல திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றி வந்தார்கள்.

எண்ணிப் பார்க்கிறோம்...

தானே புயலால் அனைத்தையும் இழந்த மக்களின் துயர் போக்க போர்க்கால அடிப்படையில் விரைந்து செயலாற்றி அழிவின் தடயமே தெரியாத அளவிற்கு மாற்றி சாதனை படைத்தார் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாய பெருமக்களுக்கு இந்தியாவிலேயே முதன்முறையாக வரலாறு காணாத அளவிற்கு நிவாரணம் அளித்து விவசாயிகளின் வாழ்க்கையில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் பசிப்பிணி போக்கும் மருத்துவராக உழைக்கும் மக்களுக்கு மலிவு விலை உணவகங்கள், ஆலயங்களில் அன்னதானம், விலையில்லா அரிசி, இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் வேலைவாய்ப்புகள், ஏழை பெண்களுக்கு 8 கிராம் தாலிக்குத் தங்கம், திருமண உதவித்தொகை, விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி, கறவை மாடுகள், ஆடுகள், சூரியசக்தியுடன் கூடிய பசுமை வீடுகள், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு திட்டம், மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள், உழவர் திருவிழா மற்றும் உழவர் பாதுகாப்புத்திட்டம் இப்படி எண்ணற்ற தொலைநோக்கு திட்டங்களை வழங்கி ஏழைகளின் சிரிப்பினில் இறைவனைக் கண்டார். அம்மா அறிவித்த திட்டங்களை தொடங்கி வைக்கும்போது ஏழைகள் சிரித்து மகிழ்ந்தார்கள். அந்த சிரிப்பில் மாண்புமிகு அம்மாவையே நாம் இறைவனாக பார்க்கிறோம்.

“மக்களால் நான்
மக்களுக்காக நான்”

என்று உலகில் முதன்முதலாக புரட்சி முழக்கமிட்டு நாள்தோறும் திட்டங்கள், நாள்தோறும் சாதனைகள் என்று தமிழ்நாட்டை தலைசிறந்த மாநிலமாக மாற்றி வரலாற்றில் முத்திரைப் பதித்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். அவர்களின் தொடர்ச்சியாக, இந்த

அரசு கோயம்புத்தூர் மண்டலத்திற்கு உட்பட்ட கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், நீலகிரி மாவட்டங்களில், திட்டப்பணிகளை தொடங்கி வைப்பதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகிறது.

வாழ்வாதாரத்திற்கு விவசாயம் எவ்வளவு முக்கியமோ, அந்த அளவிற்கு பொருளாதாரத்திற்கு தொழில் மிகவும் முக்கியம் என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள். அதனால் தான், மாண்புமிகு அம்மா அவர்கள் வேளாண்மைத் துறைக்கும், தொழிற்துறைக்கும் அதிகம் முக்கியத்துவம் கொடுத்து, அதிக நிதியை ஒதுக்கி, அதிக திட்டங்களை வகுத்து அவற்றையெல்லாம் விரைவாக செயல்படுத்தினார்கள்.

தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் இந்த கோயம்புத்தூர் நகரம், தமிழ்நாட்டில் பெரிய தொழில் நகரமாக திகழ்கிறது. கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் ஆட்டோமொபைல் மற்றும் ஜவுளித் தொழிலில் அதிகம் பேர் ஈடுபடுகிறார்கள்.

தமிழ்நாட்டின் பொருளாதாரத்திலும் தொழில் உற்பத்தியிலும் ஜவுளித் தொழில், அதிலும் குறிப்பாக, கைத்தறி, முக்கிய பங்கு வகிக்கிறது. கைத்தறித் துறையை மேம்படுத்தவும், நெசவாளர்கள் வாழ்வு வளம் பெறவும், பல்வேறு திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்படுத்தி வருகின்றது.

மாண்புமிகு அம்மா அவர்கள் நெசவாளர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றும் விதமாக நெசவாளர்களுக்கென 10,000 சூரிய சக்தியுடன் கூடிய, பசுமை வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மின் மோட்டார் பொருத்தப்பட்ட 6,000 பெடல் தறிகள், வழங்கப்பட்டுள்ளன. மின் மோட்டார் பொருத்திய தார் மற்றும் இயந்திரங்கள் 25,000 நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு, மின்சார பாவு சுற்றும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. நெசவாளர்கள் தொழில் முதலீடு மற்றும்

நடைமுறை மூலதனக்கடன் பெறும் வகையில் நெசவாளர்களுக்கான கடன் அட்டை வழங்கும் திட்டம் 2012–2013ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம், நெசவாளர்கள் 2 இலட்சம் ரூபாய் வரை கடன் பெற இயலும். வட்டியில் 3 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையில் தெரிவித்தபடி, அனைத்து வீட்டு இணைப்புகளுக்கும் 100 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் வழங்கியும், கைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு கட்டணமில்லாமல் 100 யூனிட் அளவுக்கு வழங்கப்பட்டு வந்த மின்சாரத்தை 200 யூனிட்டுகளாகவும், விசைத்தறி நெசவாளர்களுக்கு கட்டணமில்லாமல் 500 யூனிட் அளவுக்கு வழங்கப்பட்டு வந்த மின்சாரத்தை 750 யூனிட்டுகளாகவும் உயர்த்தி ஆணையிட்டார். இதனால் அனைத்து தரப்பு மக்களும் பயன் பெற்று வருகின்றனர்.

கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் ஆகிய மாவட்டங்கள் தொழில் வளமிக்க மாவட்டங்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் 2015ஆம் ஆண்டு முதன்முறையாக உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி 4 கோடியே 70 இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கக்கூடிய வகையில் 2 கோடியே 42 இலட்சம் ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. மாண்புமிகு அம்மா அவர்களைத் தொடர்ந்து அவர்களின் ஆசியுடன் அடுத்த முதலீட்டாளர்கள் மாநாட்டை இந்த அரசு நடப்பாண்டில் வெற்றிகரமாக நடத்தும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த அரசு ஒற்றைச் சாளர முறையினை (Single Window System) செம்மைபடுத்தி முதலீட்டாளர்களுக்கு தேவையான அனைத்து அனுமதிகளையும் உடனடியாக வழங்கி, உள்நாடு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கான வழிவகை செய்து வருகிறது.

தொழில் துறையில் சிறுதொழிலின் பங்கு மிகவும் பெரியது. அதனால்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் சிறு தொழில் புரட்சிக்கு

வித்திடும் வகையில் தொழிற் பூங்காக்களை உலகத்தரத்தில் உருவாக்கினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களால் வெளியிடப்பட்ட தொலைநோக்குத் திட்டம் 2023–ல் சிறுதொழில் துறைக்கென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அந்த இலக்கினைத் தமிழ்நாடு எய்தும் வகையில், இலட்சியத்துடனும், ஆர்வத்துடனும், விடா முயற்சியுடனும், தன்னம்பிக்கையுடனும் நாங்கள் முன்னெடுத்துச் செல்வோம் என நான் உறுதியாக கூறுவதில் பெருமை கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டம், குந்தா வட்டம் எடக்காடு மட்டத்தில் நடைபெற்ற குந்தா தொழில் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலையில் 04.01.2013 அன்று நடைபெற்ற பொன்விழாவில், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆற்றிய உரையில், இமை கொட்டாமல் ரசிக்கும் இயற்கை அழகையும், உடலை வருடும் இதமான தென்றலையும், வானத்தைத் தொடும் அளவு வளர்ந்திருக்கும் மரங்களையும், காற்றோடு கலந்து வீசும் ரம்யமான யூகலிப்டஸின் நறுமணத்தையும் வெகுவாக பாராட்டி மகிழ்ந்தார்கள். நீலகிரி மாவட்டத்திற்கு வரும்போதெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் புத்துணர்வு பெறுவார்கள். நீலகிரி தேயிலை தொழிலாளர்களுடன் பேசி மகிழ்வார்கள்.

தேயிலை தொழிலாளர்களின் வாழ்க்கையில் மிகவும் அக்கறை கொண்டு பல்வேறு நலத்திட்டங்களை வழங்கினார்கள்.தனியார் தேயிலை ஏல மையங்களில் விற்பனை செய்யப்படும் தேயிலைத் தூளுக்கு நல்ல விலை கிடைப்பதில்லை என்பதால், தமிழ்நாடு அரசு ஒரு தனி ஏல மையத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், 2003ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம், உலகிலேயே முதன் முறையாக கணினி மயமாக்கப்பட்ட "டீ சர்வ்" , என்ற புதிய தேயிலை மையம் மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த ஏல மையம், கடந்த 10 ஆண்டுகளாகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

மக்கள் தொகைப் பெருக்கத்தாலும், தொழில் மயமாக்கலும் வன விலங்குகளின் இயற்கை வாழ்விடங்கள் பாதிக்கப்படுகின்றன. வன

விலங்குகள் அடிக்கடி காடுகளை விட்டு வெளியேறி மனிதர்கள் வாழும்பகுதிகளுக்குள்நுழைவதால்,பயிர்ச்சேதம்,உடமைகள்சேதம், கால்நடைகள் இழப்பு போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். சில நேரங்களில் வன விலங்குகளால் தாக்கப்படுவதால், மனித உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன.

வன விலங்குகளால் மனிதர்களுக்கு உயிர் இழப்போ அல்லது நிரந்தர ஊனமோ ஏற்படும்போது வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை 1.50 இலட்சம் ரூபாயில் இருந்து 4 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் எனவும், பயிர்ச் சேதம், உடமைகள் சேதம், கால்நடைகள் இழப்பு ஆகியவற்றிற்கான இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி வழங்கவும் மாண்புமிகு அம்மாவின் அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது. வனப்பகுதிகளில் வறட்சி காலங்களில் வனஉயிரினங்களுக்கு தேவையான நீரினை வழங்குவதற்கு தடுப்பணைகள் மற்றும் கசிவுநீர் குட்டைகள் அமைத்துக் கொடுக்கும் திட்டத்தை முதன்முதலில் கொண்டு வந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

திருப்பூர் மாவட்டத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு திட்டப்பணிகளை நிறைவேற்றியிருந்தாலும், குறிப்பாக, அம்மாவின் செயற்கரிய செயல் ஒன்றை மட்டும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திருப்பூர் பின்னலாடை தொழிலின் ஏற்றுமதியில் முக்கியத்துவம் வாய்ந்த மையமாக விளங்குகிறது. அங்கு நடைபெறும் பின்னலாடை தொழிலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் அளவிற்கு திருப்பூரில் சாயப்பட்டறை கழிவுநீர் பிரச்சினை விஸ்வரூபம் எடுத்தது.

மாண்புமிகு அம்மா அவர்கள் தனது தேர்தல் அறிக்கையில் திருப்பூர் விளை நிலங்களுக்கும், நீர்நிலைகளுக்கும் மாசு ஏற்படுத்தி வந்த சாயப்பட்டறை கழிவுநீர் பிரச்னைக்கு விரைவாக தீர்வு காணப்படும் என்று உறுதி அளித்திருந்தார்கள். திருப்பூர்

சாயப்பட்டறைகள் உரிமையாளர்கள் சங்கம் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் நிதிச்சுமையைக் குறைக்கவும், பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை திறக்கவும் அரசின் உதவியினைக் கோரின. இக்கோரிக்கையின் அடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்களின் பங்காக 112 கோடியே 50 இலட்சம் ரூபாயை மானியமாக வழங்கி 18 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவியது. சாயப்பட்டறை கழிவுநீர் வெளியேற்றத்தில் பூஜ்ய நிலையை கொண்டு வரும் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி பல ஆண்டுகளாக நிலவி வந்த பிரச்சினைக்கு தீர்வு கண்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் மதிநுட்பத்தால் திருப்பூர் ஜவுளித் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் புதிய வாழ்க்கை கிடைத்தது என்பதை நீங்கள் யாரும் மறக்க முடியாது.

பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் நடைபெற்று வரும் பூஜ்யநிலை கழிவு நீர் பணியானது பல்வேறு நிலைகளில் உள்ளது. இப்பணிகள் செப்டம்பர் 2017க்குள் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திருப்பூர் நகரில் போக்குவரத்து நெரிசலை குறைத்திடும் பொருட்டு பேருந்து நிலையம் அருகில் அவிநாசி–திருப்பூர்–பல்லடம்–பொள்ளாச்சி–கொச்சி (வழி) மீன்கரை சாலை மேம்பாலம் அமைக்கும் பணி 43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இந்தப் பணிகள் நவம்பர் 2017க்குள் நிறைவடையும்.

மாண்புமிகு அம்மாவின் ஆட்சியின் தொடர்ச்சியே இந்த அரசு. அம்மா எண்ணிய, விரும்பிய திட்டங்களை செயல்படுத்துவதையே பெரும்பணியாகவும், பெருமையாகவும் நாங்கள் கருதுகிறோம். மாண்புமிகு அம்மாவின் திட்டங்கள் அனைத்துமே இனியும் தொடரும் என கூறிக் கொள்வதில் பெருமிதம் அடைகிறேன்.

பவானி மற்றும் அதன் கிளை நதிகளில் கேரள அரசு தடுப்பணைகள் கட்ட முயற்சிப்பதை தடுத்து நிறுத்தும் வகையில்

தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் 01.02.2017 அன்று ஒரு இடைக்கால மனுவை தாக்கல் செய்துள்ளது. நான் 27.02.2017 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் அளித்த கோரிக்கை மனுவில், கேரள அரசு பாம்பாறு மற்றும் பவானி ஆறுகளின் குறுக்கே மேற்கொண்டு வரும் அணை கட்டுமானப் பணிகளை உடனடியாக நிறுத்தி வைக்க வேண்டியும் மற்றும் காவிரி மேலாண்மை வாரியம் நடைமுறைக்கு வரும் வரையிலும் மற்றும் வழக்குகள் இறுதியாக்கம் பெறும் வரையிலும் கேரள அரசு காவிரிப் படுகையில், எந்த ஒரு புதிய திட்டங்களையும் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளக் கூடாது என அறிவுரை வழங்குமாறு கேட்டுக் கொண்டேன்.

பவானி ஆற்றை நம்பி இருக்கும் நமது விவசாயப் பெருமக்களின் உரிமையை பாதுகாக்க, மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த இந்த அரசு, எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இந்த அரசு எப்போதும் விவசாயிகளின் பக்கம்தான் இருப்பதோடு, அவர்களுக்கு அரணாகவும் விளங்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ், தமிழர் என்று சொன்னவர்களெல்லாம் எதையும் செய்யவில்லை. சொல்வதைச் செய்வோம் செய்வதைச் சொல்வோம் என்பார்கள். அவர்கள் இதுவரை சொல்லிக் கொள்ளும்படியாக எதையாவது செய்திருக்கிறார்களா? என்றால் அதுதான் இல்லை. இதனால் தமிழ்நாட்டுக்கும், தமிழர்களுக்கும் பல தொல்லைகள் தான் விளைந்தன.

இலட்சக்கணக்கான தொண்டர்கள் வாழ்த்தொலிக்க
கோடிக்கணக்கான நல்லிதயங்கள் பாராட்டிசைக்க
மெலிந்தவர் – நலிந்தவர் மகிழ,
சிறந்தவர்–சிந்தனையாளர் புகழ,
முத்தமிழின் சுவையாக –
முழுநிலவின் அழகாக–
மாண்புமிகு அம்மா அவர்கள்

தமிழகத்தின் முதலமைச்சராக
ஆட்சிப் பொறுப்பேற்றார்கள்.

தமிழக சட்டமன்றத் தேர்தலில் வாக்குப் புரட்சியின் வாயிலாகப் பெற்ற பெரு வெற்றியின் மூலம் அனைத்துப் பிரிவு மக்களின் வாழ்வில் ஏற்றம் தர, தமிழக முதலமைச்சராக மக்களுக்கு தொண்டு செய்யும் தமது பணியைத் தொடர்ந்தார்கள்.

தேர்தல் நேரத்தில் வாக்காளர் நன்மதிப்பைப் பெற்றிட அரசியல் கட்சிகள் தேர்தல் அறிக்கைகள் வெளியிடுவது வழக்கம். ஆனால் மக்கள் நம்பிக்கையைப் பெற்று ஆட்சிக்கு வந்ததும், கொடுத்த வாக்குறுதிகளை மறந்துவிட்டு, தங்கள் குடும்ப நலனுக்கு மட்டுமே பாடுபடுவதைக் கண்கூடாகக் கண்டோம். ஆனால், அரசியல் வரலாற்றிலேயே முதன்முறையாக, தனது தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றவும், நிறைவேற்றப்பட்ட திட்டங்களின் பயன்கள் மக்களுக்கு விரைவாக சென்றடைவதை உறுதிப்படுத்தியது நமது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் புனிதமானவை; அவற்றை நிறைவேற்றுவது எனது தலையாய கடமை – என்று செயல்பட்டவர் நமது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். ஆகவே, தம்முடைய தேர்தல் அறிக்கையில் அறிவித்த அத்தனை வாக்குறுதிகளையும் காலத்தோடு நிறைவேற்ற உறுதி பூண்டார்கள். அந்த உறுதியினை, அம்மாவின் வழியில் வந்த அம்மா அரசும் கட்டாயம் கடைபிடித்து, தேர்தல் வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

உளப்பூர்வமான ஊக்கம்
விரைவான செயல்பாடு
வெளிப்படையான நிருவாகம்–

இதுவே ஆற்றல்மிகு
மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிமுறை.
மாண்புமிகு அம்மாவின் வழியில்
மக்கள் நலனுக்காக–
தமிழக அரசின் கதவுகள்
தட்டாமலேயே திறக்கும்!
தமிழக அரசின் கரங்கள்
கேளாமலேயே கொடுக்கும்!

மாண்புமிகு அம்மா அவர்கள் வரலாற்று சிறப்பு மிக்க திட்டங்களுக்கு கையெழுத்திட்டதைப் போலவே, மாண்புமிகு அம்மா வழியில் வந்த இந்த அரசு பொறுப்பேற்ற முதல்நாளே மாண்புமிகு அம்மாவின் எண்ணங்களை ஈடேற்றும் வகையில் 5 திட்டங்களில் கையெழுத்திட்டு, இது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு என்பதை நிரூபித்துள்ளோம்.

மாண்புமிகு அம்மா அவர்கள் மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தர ஏராளமான திட்டங்களை அடுக்கடுக்காக வழங்கி அதை செயல்படுத்தி தமிழ்நாட்டை ஒரு வளர்ச்சி அடைந்த மாநிலமாக மாற்றினார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களைத் தொடர்ந்து அவர்கள் வழியில் வந்த இந்த அரசும் ஏழை எளிய மக்களை, உழைப்பாளர் பெருமக்களை மையமாக வைத்து செயல்படும் என்று உறுதி கூறுகின்றேன்.

“எதிர்க்கட்சி என்றால் அரசின் கொள்கைகளை திட்டங்களை எதிர்க்கின்ற கட்சி என்ற பொருள் இல்லை. அரசுத் திட்டங்களின் நிறை குறைகளை எடுத்துச் சொல்லி, குறைகளைக் களைவதற்கான ஆலோசனைகளை வழங்குவதுதான் எதிர்க்கட்சிக்கு இலக்கணமாக அமைய வேண்டும்” என்று மாண்புமிகு அம்மா அவர்கள் கூறினார்கள்.

எந்த ஒரு பிரச்சினையிலும் பல்வேறு வகையான கருத்துகள் வெளிப்பட்டால் தான், அந்தக் கருத்துகளை சீர்தூக்கிப் பார்த்து பெரும்பான்மை யோருக்கு பயனளிக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க இயலும்" என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எதிர்க்கட்சி பற்றிய இலக்கணத்தை தெளிவாக எடுத்துரைத்தார். அந்த வாக்கையே வேத வாக்காக கொண்டு செயல்படும் எதிர்க்கட்சிகளையே மக்கள் மதிப்பார்கள். ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவது ஒன்றையே நோக்கமாக கொண்டு அரசியல் நடத்துவது மக்கள் விரோதச் செயலாகும். ஆளுங்கட்சி மீது அவதூறு பேசுவதுதான் எதிர்க்கட்சியின் பணி என்று நினைத்துக் கொண்டு செயல்படுபவர்களை மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். தாங்கள் இல்லையென்றால் நாடே இயங்காது என்று பலர் மக்களிடையே ஒரு மாயையை உருவாக்கி வருகின்றனர். அப்படிப்பட்டவர்கள் தங்கள் எண்ணத்தை மாற்றிக்கொள்ள... இங்கே அம்மா சொன்ன ஒரு கதை என் நினைவுக்கு வருகிறது.

ஓர் ஆறு அமைதியாக, அதே நேரத்தில் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. அதற்கு ஒரே இலட்சியம்! போகும் பாதையில் இருக்கும் அத்தனை வயல்களையும், வளம் கொழிக்கச் செய்ய வேண்டும்; அந்த தேசம் வற்றாத செல்வத்தோடு விளங்க வேண்டும்; மக்கள் வயிறார உண்டு பசியாற வேண்டும்; எத்தனை எத்தனை மக்களுக்கு நன்மை செய்ய முடியுமோ, அத்தனை பேருக்கும் நன்மை செய்ய வேண்டும்; எவ்வளவு சீக்கிரம் செய்ய முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் அதைச் செய்துவிட வேண்டும் – இதுதான் அந்த நதியின் இலட்சியம்! அப்படிப் போய்க் கொண்டிருந்தது அந்த ஆறு! அப்போது, கரையோரம் அடித்த காற்றில், ஆற்றிலே ஒரு துரும்பு வந்து விழுந்தது.

அது அற்பமான துரும்பு தான்! அதற்கு ஆணவம் அதிகம்! வாயாடித்தனமோ மிகவும் அதிகம்!

எந்தக் காற்று தன்னைத் தள்ளிக் கொண்டு ஆற்றில் போட்டதோ, அந்தக் காற்றிடம் அந்தத் துரும்பு சொன்னதாம்! என்னைப்பார்!

இந்த ஆற்றை ஓட விடாமல், நான் தடுத்துக் கொண்டிருக்கிறேன். இன்னும் கொஞ்சம் நேரத்தில், என்ன நடக்கிறது பார்! ஆற்றை அப்படியே நிறுத்திவிடப் போகிறேன். ஆறு என்னைப் பார்த்து கெஞ்சப் போகிறது. நான் இதனிடம் இரக்கம் காட்ட மாட்டேன். ஓர் அங்குலம் கூட நகரமுடியாமல், நான் இந்த ஆற்றை நிறுத்திவிடப் போகிறேன்'' என்றது.

காற்று கைகொட்டிச் சிரித்தது, ''என்ன சிரிக்கிறாய்? என்று ஆத்திரத்தோடு கேட்டது துரும்பு. இந்த துரும்பின் அகங்காரப் பேச்சுக்கு, காற்று பதில் சொல்ல விரும்பவில்லை. துரும்புக்கு ஆணவம் இன்னும் தலைக்கு ஏறியது, ''காற்றே! நான் நினைத்தால், உன்னையும் நிறுத்திவிடுவேன் தெரியுமா?'' என்று கொக்கரித்தது.

அதே சமயம், ஆற்றில் ஒரு சுழல் ஏற்பட்டது. ஆணவத் துரும்பு, அந்தச் சுழலிலே அகப்பட்டுக் கொண்டு, படாதபாடு பட்டது. கண நேரத்தில் அதன் கதை முடிந்து விட்டது. அந்தத் துரும்பு எங்கே போயிற்று என்று யாரும் கவலைப்படவில்லை. ஆறோ, தன் போக்கில் போய்க் கொண்டிருந்தது. அப்படி ஒரு சம்பவம் நடந்ததையே அது கவனிக்கவில்லை. அந்த நதியைப்போல வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் அம்மாவின் ஆட்சிக்கு, தமிழ்நாட்டை வளமாக்கும் பணிதான் முக்கியம் என்பதை இந்த தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசு மக்கள் அரசு!
இந்த அரசு அம்மாவின் அரசு!
விவேகத்துடன் விரைந்து செயல்படும் அரசு!
உங்கள் நியாயமான பொது நல கோரிக்கைகளையே
திட்டங்களாக வடிவமைக்கிற அரசு!

என்பதால் உங்கள் கோரிக்கைகளில் இருந்து உருவான வைகளையே மாண்புமிகு அம்மா அவர்கள் விதி 110இன்கீழ் அறிவித்த திட்டங்களாகும். இப்போது இங்கே துவக்கி வைக்கப்பட்ட கோவை மண்டலத்திற்கான திட்டங்களில் பல விதி 110இன்கீழ் அறிவிக்கப்பட்ட திட்டங்களாகும்.

அவிநாசி, அன்னூர், திருப்பூர் மற்றும் பல்லடம் ஆகிய வறண்ட பகுதிகளின் மக்களின் நீண்ட கால கோரிக்கையான, அப்பகுதி மக்களுக்கு பயன்பெறும் வகையில் பில்லூர் அணையிலிருந்து அத்திக்கடவு என்ற இடத்தில் வெள்ளக் கால்வாய் அமைப்பதற்கான விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அத்திக்கடவு – அவிநாசி திட்டம் என்று பெயரிடப்பட்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியால் இந்த திட்டம் துவங்கப்பட்டது.

அத்திக்கடவு – அவிநாசி திட்டத்தின் முக்கிய நோக்கம், கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள 31 பொதுப்பணித்துறை ஏரிகள், 40 ஊராட்சி ஒன்றிய ஏரிகள் மற்றும் 538 குளங்களை நிரப்பி நிலத்தடி நீரை செறிவூட்டுவதாகும்.

அத்திக்கடவு–அவிநாசி திட்டத்தை நிறைவேற்றுவது தொடர்பாக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து மத்திய அரசின் ஒப்புதலை கேட்டுள்ளேன். அத்திட்டம் விரைவில் நிறைவேற்றும் வகையில், முதற்கட்டமாக 2017–2018ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் 250 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியினை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் 140 வருடங்களாக இல்லாத வறட்சி ஏற்பட்டுள்ளது. அதனை போர்கால அடிப்படையில் சரிசெய்யும் பணியினை இந்த அரசு ஏற்றுள்ளது. தமிழ்நாட்டில் அனைத்துப் பகுதிகளுக்கும் சீராக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. நீர்நிலைகளை புனரமைக்க பண்டைய காலத்தில் இருந்த குடிமராமத்து திட்டத்திற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு புத்துயிர் கொடுத்துள்ளது.

இந்த திட்டம் விவசாயக் குழுக்களை வைத்து தொடங்கப் படுகின்றது. மாண்புமிகு அம்மா அவர்கள் நிலத்தடி நீரை உயர்த்தி

வறட்சியை சமாளிக்க தொலைநோக்கு திட்டமான மழைநீர் சேகரிப்பு திட்டத்தை எப்படி ஒரு மக்கள் இயக்கமாக உருவாக்கினார்களோ! அதைப்போல, குடிமராமத்துத் திட்டத்தை விவசாயிகளின் ஒருங்கிணைப்போடு இந்த அரசு ஒரு மக்கள் இயக்கமாக நடத்தும் என்று உறுதி கூறுகிறேன்.

முதற்கட்டமாக நடப்பு நிதி ஆண்டில் தமிழ் நாட்டில் 30 மாவட்டங்களில் 1519 குடிமராமத்துப் பணிகள் 100 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்படுகின்றது. இது 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரிவுபடுத்தப்படும். இந்தியாவில் கோவை ஒரு சிறந்த வணிக மையமாக திகழ்கிறது.

இங்கு பெருகிவரும் மக்கள் தொகையை கணக்கில் கொண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி உள்ளார்கள். குறிப்பாக உக்கடம்–சுண்டக்காமுத்தூர் மேம்பாலம், டாக்டர் நஞ்சப்பா சாலை மற்றும் சின்னசாமி சாலை, ஆகியவற்றில் மேம்பாலம், உயர் நடை மேம்பாலம் (sky walk) மூன்று குடிநீர் திட்டங்கள், வீடில்லாத ஏழைகளுக்கு வீடுகள் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஏராளமான திட்டங்களை கோவைக்கு வழங்கி செயல்படுத்தி இருக்கிறார்கள்.

கோவை மாநகரில் காந்திபுரத்தில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க ஏதுவாக 162 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய மேம்பாலம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. முதல் அடுக்கு மேம்பாலத்தில் 90 சதவீதம் பணிகள் முடிவுற்றுள்ளது. இரண்டாம் அடுக்கு பொறுத்தவரை 10 சதவீதம் பணி முடிவுற்று மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. முதல் அடுக்கு பாலம் ஏப்ரல் 2017இல் முடிவடைந்து போக்குவரத்து பயன்பாட்டிற்கு திறக்கப்படும் என்பதை இந்த தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டாம் அடுக்கு டிசம்பர் 2017இல் முடிவடையும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை மாநகரில் ஆத்துப்பாலம் முதல் உக்கடம் வரை மேம்பாலம் அமைக்கும் பணிக்காக நில எடுப்பு மற்றும் பயன்பாட்டு சாதனங்களை மாற்றி அமைக்க 88 கோடியே 61 இலட்சம் ரூபாயும், மேம்பால கட்டுமான பணிக்காக 121 கோடியே 82 இலட்சம் ரூபாயும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தற்போது நில எடுப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

கோவை மாநகர் – அவிநாசி சாலையில், உப்பிலிப்பாளையம் முதல் சின்னியம் பாளையம் – கல்லாப்பட்டி விமான நிலையம் வரை 340 கோடியே 53 இலட்சம் மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் கட்டும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை ஆலோசகர் மூலம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை மாநகரில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் பொருட்டு புதிதாக 320 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கு வட்டச்சாலை அமைப்பதற்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. தற்போது இந்த மேற்குவட்டச் சாலைக்கான நில எடுப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

கோவை, திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் தென்னை விவசாயம் முக்கிய பங்கு வகிக்கின்றது. இம்மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்திற்கு தென்னை மரம் இன்றியமையாததாக விளங்குகிறது. தென்னை மரத்திலிருந்து பெறப்படும் புதிய சாறு "நீரா" எனப்படும். இது ஆல்கஹால் இல்லாத இயற்கையான சத்து மிகுந்த ஆரோக்கிய பானம். தென்னையில் இருந்து கிடைக்கும் மற்ற லாபத்தை விட, நீராவும் அதன் உபபொருள்களும் விவசாயிகளுக்கு மிகுந்த லாபத்தையும் பலனையும் அளிக்கக்கூடியது என்பதால் "நீரா" தயாரிக்க அனுமதிக்க வேண்டுமென்று தென்னை விவசாயிகள் கோரி வருகின்றனர். இம்மாவட்டங்களைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மரியாதைக்குரிய நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இதனை என்னுடைய கவனத்திற்கு கொண்டு

வந்து நீரா தயாரிக்க அனுமதி அளிக்க வேண்டுமென வலியுறுத்தி வருகின்றனர். அதன் அடிப்படையில், நீரா தயாரிக்க அனுமதி அளிப்பது தொடர்பாக அரசு பரிசீலித்து வருகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

தேங்காய் விலை வரலாறு காணாத அளவுக்கு வீழ்ச்சி அடைந்தது. அதனால் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது. ஆகவே அம்மா அவர்கள் இந்த விலை வீழ்ச்சியை தடுப்பதற்கு கூட்டுறவுத் துறை மூலமாக விலை நிர்ணயம் செய்யப்பட்டு இன்றைக்கு அவைகள் எல்லாம் கொள்முதல் செய்யப்பட்டன என்கிற செய்தியினை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈரோடு தொழிற்சாலைகள் மற்றும் வணிக வளாகங்கள் நிறைந்த நகரமாக விளங்குகிறது. விசைத்தறி கைத்தறி மற்றும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. இதனைக் கருத்தில் கொண்டுதான் மாண்புமிகு அம்மா அவர்களால் ஈரோடு ஜி.எச். ரவுண்டானா அருகில், ஈரோடு–பெருந்துறை–காங்கேயம் மேம்பாலத்திற்கு 20.01.2014 அன்று நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து தற்போது 58 கோடியே 54 இலட்சம் ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. விரைவில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பணி தொடங்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயம்புத்தூர் மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களில் திட்டப்பணிகளை தொடங்கி வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் மின்சாரத்துறை சார்பில் 450 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 5 துணை மின் நிலையங்கள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை சார்பில் 354 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 6,496 குடியிருப்புகள் உட்பட 1,047 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 6,626 பணிகள் இன்று துவக்கி வைக்கப்படுகின்றன.

ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர் மற்றும் நம்பியூர் ஒன்றியங்களில் 5 ஊராட்சிகளில் 88 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் 11 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை சார்பில் 20 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கால்நடை தீவன ஆலை உட்பட 108 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 361 திட்டப் பணிகள் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

திருப்பூர் மாவட்டத்தில், அறிவொளி நகரில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை சார்பில் 19 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 288 குடியிருப்புகள், பள்ளிக் கல்வித்துறை சார்பில் பல்வேறு பகுதிகளில் 14 கோடியே 82 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு புதிய பள்ளி மற்றும் 6 புதிய பள்ளிக் கட்டடங்கள் உட்பட 89 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 815 திட்டப் பணிகள் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

நீலகிரி மாவட்டத்தில், வருவாய்த்துறை சார்பில் 27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கட்டடம், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை சார்பில் 14 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பழங்குடியினர் கலாச்சார மையம் உட்பட 67 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 229 திட்டப் பணிகள் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

ஆக மொத்தம், இன்று கோயம்புத்தூர் மண்டலத்திற்கு உட்பட்ட ஈரோடு, நீலகிரி, திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் 1,313 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவு செய்யப்பட்டுள்ள 8,031 திட்டப் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

“அரசு நலத்திட்ட உதவியினைப் பெறுகின்ற பயனாளிகள் அனைவரும் அவற்றை வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான அடிப்படையாகக் கருதி மேன்மேலும் உழைத்து, வாழ்க்கையில் முன்னேறி, எல்லா நலன்களையும் பெற வேண்டும்”

என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவுறுத்தலின்படி மக்கள் அனைவரும் இந்த திட்டங்களால் கிடைக்கும் பலனை சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

“நமது இலட்சியம் உயர்வானது, நமது பார்வை தெளிவானது, நமது வெற்றி முடிவானது” என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் தாரக மந்திரத்தோடு தான் இந்தத் திட்டங்களையெல்லாம் அம்மா அரசு தொடங்கி வைத்திருக்கிறது.

இத்திட்டங்களால் பயனடையப்போகும் பயனாளிகளுக்கு என்னுடைய வாழ்த்துக்கள்.

இத்திட்டங்கள் செயல்வடிவம் பெறுவதற்கு உழைத்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

இந்த இனிய விழாவிலே கலந்துகொண்டு நாங்கள் மேலும் பல திட்டங்களை செயல்படுத்த ஊக்கமும், உற்சாகமும் அளிக்கும் உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றி.

இந்த விழாவை இத்தனை சிறப்பாக நடத்துவதற்குக் காரணமாக இருந்த அத்தனை இதயங்களுக்கும் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
18.03.2017 அன்று கோயம்புத்தூர் மண்டலத்திற்கான
அரசு திட்டங்களைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை.

சட்டம் ஒழுங்கை காப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு காவல்துறையினருக்கு முழு சுதந்திரம் அளித்து வரும் அரசு!

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா என்னும் தெய்வத்தை வணங்கி, இந்த இனிய விழாவிற்கு வருகைப் புரிந்துள்ள மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

தலைமைச் செயலாளர் அவர்களே!

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

வரவேற்புரை ஆற்றிய தமிழ்நாடு அரசு உள்துறை முதன்மைச் செயலர் அவர்களே!

காவல்துறை தலைமை இயக்குநர் அவர்களே !

நன்றியுரை ஆற்ற உள்ள காவல் துறை இயக்குநர்– பயிற்சி அவர்களே!

தமிழ்நாடு அரசு உயர் அதிகாரிகளே!

காவல்துறை அதிகாரிகளே!

இன்று பயிற்சியினை நிறைவு செய்யும் காவல் உதவி ஆய்வாளர்களே!

இந்த நிகழ்ச்சியில் பங்குபெற்றுள்ள பெரியோர்களே, தாய்மார்களே!

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!

உங்கள் அத்தனை பேருக்கும் எனது பணிவான வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

"முயற்சி தன் மெய்வருத்த கூலி தரும்"

என்பது திருவள்ளுவர் வாக்கு.

"பயிற்சி தன் மெய்வருத்த கூலி தரும்"

என்பது காவல்துறைக்கே உரித்தான வாக்கு.

உடல்வருத்தி பயிற்சி மேற்கொள்பவர்களுக்கு நிச்சயமாக பலன் கிட்டும் என்பது தான் இதற்கான பொருள். முயற்சியும் பயிற்சியும் தான் ஒரு சாதாரண மனிதனை சாதனை மனிதனாக மாற்றும் என்பார்கள். நீங்கள் சாதனையாளர்களாக மாறுவதற்கான தொடக்கம் தான் இந்த ஓர் ஆண்டுகால பயிற்சி.

உங்கள் அனைவரது சிந்தனையும் செயல்பாடும் ஒருங்கிணைந்து ஒரே நோக்கத்திற்காக இருக்க வேண்டும் என்பதற்காக தான் இந்த பயிற்சியும் இந்த அணிவகுப்பும். இந்த பயிற்சியின் ஒரே நோக்கம், நமது தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கை சிறப்பாக நிலைநிறுத்துவதாக இருக்க வேண்டும். ஓர் ஆண்டு கால காவல் பயிற்சியை நிறைவு செய்திருக்கின்ற உங்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகிறேன்.

இந்த மிகச் சிறந்த அணிவகுப்பானது, உங்களது திறமை, மேன்மையான நோக்கம், உடல் மற்றும் மனத்திடம், ஆகியவற்றை வெளிப்படுத்தும் வண்ணம் விளங்குகிறது. பேரறிஞர் அண்ணா கூறிய கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை உங்கள் பணிகாலங்களில் கடைப்பிடிப்பதுடன், இன்றைய தினம் நீங்கள் எடுத்துள்ள உறுதிமொழியையும் கடைபிடித்து, உலகளவில் தலைசிறந்து விளங்கும் தமிழ்நாடு காவல் துறையின் திறனை மேலும் உயர்த்த நீங்கள் அனைவரும் பாடுபட வேண்டும்.

உலகத்தரம்வாய்ந்த, இந்த தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் 1,027 தாலுக்கா உதவி ஆய்வாளர்கள் மற்றும் 1 ஆயுதப்படை உதவி ஆய்வாளர் என ஒரே நேரத்தில் 1,028 உதவி ஆய்வாளர்கள், தங்களது ஒரு வருட பயிற்சியினை கடந்த 26.02.2016 அன்று துவங்கி இன்று நிறைவு செய்திருப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

மூன்றாம் பாலினத்தவர்களின் மேல் மாண்புமிகு அம்மா அவர்கள் மிகுந்த பாசமும் அக்கறையும் கொண்டவர் என நீங்கள் அனைவரும் அறிவீர்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் செயல்படும் இந்த ஆட்சியில் இந்தியாவிலேயே முதன்முறையாக திருநங்கை ஒருவர் இன்று உதவி ஆய்வாளர் பயிற்சியை வெற்றிகரமாக முடித்துள்ளார் என்பது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

இந்தப் பயிற்சியில், 254 பெண் உதவி ஆய்வாளர்களும் தங்களது பயிற்சியினை இன்று நிறைவு செய்திருக்கிறார்கள். "ஆணுக்கு இங்கே பெண் இளைப்பில்லை காண்" என்ற பாரதியாரின் வாக்கின்படி பெண்களும் இந்த கடினமான பயிற்சியை மேற்கொண்டு காவல் பணிக்கு தங்களை தகுதியாக்கி கொண்டிருப்பது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை தருகிறது.

1650களில் தமிழ்நாடு தலைமைச் செயலகம் இருக்கும் புனித ஜார்ஜ் கோட்டை முள்வேலிகளால் சூழப்பட்டிருந்தது. யாரும்

அத்துமீறி உள்ளே நுழைந்துவிடக் கூடாது என்பதற்காக சுற்றிலும் காவலர்களை நிறுத்தி வைத்தார்கள். அந்தக் காவலர்கள்தான் இந்தியாவின் முதல் ஆயுதப்படையாக கருதப்பட்டார்கள்.

இந்தியாவின் முதல் ஆயுதப்படை நமது புனித ஜார்ஜ் கோட்டையில் தான் ஆரம்பித்தது. அந்த முதல் ஆயுதப்படை தான் காவல் துறையாகவும் மலர்ந்தது. இது ஒவ்வொரு தமிழனும் பெருமைப்படக் கூடிய வரலாறு ஆகும்.

தமிழ்நாடு காவல்துறை பல்வேறு ஆட்சிக் காலங்களை கடந்து படிப்படியாக வளர்ச்சியடைந்துள்ளது. அந்த வளர்ச்சிக்கெல்லாம் முத்தாய்ப்பாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, தமிழ்நாடு காவல்துறை புதிய எழுச்சியையும், மலர்ச்சியையும் பெற்றது.

1991ஆம் ஆண்டு, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதல் முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற போது, இந்தியாவிலேயே காவல் துறையை நவீனமயமாக்கும் முன்னோடி திட்டத்தினை செயல்படுத்தினார்கள்.

தமிழ்நாட்டிலுள்ள பெண்கள் பொதுவாக காவல்நிலையத்திற்கு செல்லவே அச்சப்படுவார்கள். தமிழகத்தில் பெண்கள் எந்தவிதமான அச்சமோ, தயக்கமோ இன்றி காவல்நிலையங்களுக்கு சென்று தங்களுக்கு உள்ள குறைகளை எடுத்துக் கூறி, அவற்றிற்கு நிவாரணம் தேட வேண்டும் என்பதற்காகவே, 1992இல் சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியில், முதல் அனைத்து மகளிர் காவல்நிலையத்தை திறந்து வைத்து பெண்களுக்கு பெருமைச் சேர்த்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். நாட்டிலேயே முதல் பெண் கமாண்டோ படையினை 21 பெண் காவலர்களை கொண்டு 2002ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

வீட்டைக் காப்பது போல இந்த நாட்டையும் மகளிர் காத்து வருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் தொலைநோக்கு பார்வை தான் காரணம். எனவேதான், மாண்புமிகு அம்மா அவர்களை பெண்கள் தங்கள் வீட்டு குலதெய்வமாக போற்றி வருகிறார்கள்.

அமைதி, வளம், வளர்ச்சி என்பது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தாரகமந்திரம். ஒரு நாட்டில் அமைதி நிலவினால் தான் வளமும் வளர்ச்சியும் இருக்கும். நாட்டில் அந்த அமைதியை ஏற்படுத்தக் கூடியவர்கள் காவல்துறையினர் தான். உங்கள் பணியை முதலில் வைத்து மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த தாரக மந்திரத்தை குறிப்பிட்டார்கள்.

அமைதி ஒன்று தான், ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், தனி மனித மேம்பாட்டிற்கும் காரணமாக விளங்குகிறது. அத்தகைய அமைதி சூழலை ஏற்படுத்துவதில் காவல் துறை முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே தான், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தன்னுடைய ஆட்சி காலங்களில் காவல்துறைக்கு மிக முக்கியத்துவம் அளித்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தினார்கள்.

❖ இரவு பகல் பாராமல், லட்சியத்துடன் ஓய்வில்லாமல், பணியாற்றும் காவல் துறையினர், ஓய்வு பெற்ற பிறகு அமைதியான சூழலில் மன நிம்மதியுடன் வாழ வேண்டும் என்பதன் அடிப்படையில் “உங்கள் சொந்த இல்லம்” திட்டத்தின் கீழ் இதுவரை 4,644 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளது.

❖ இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டிலுள்ள காவலர்கள், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறை பணியாளர்களுக்கு குறைந்த விலையில் அனைத்து பொருட்களும் கிடைக்கக்கூடிய வகையில் 47 காவலர் பல்பொருள் சிறப்பு அங்காடிகள் இயங்கி வருகின்றன.

❖ 26 ஆயுதப்படை தலைமையிடங்களிலும், 10 தமிழ்நாடு சிறப்பு காவல் பட்டாலியன் தலைமையிடங்களிலும் காவல்துறையினருக்கான மருத்துவ சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

❖ 40 வயதைக் கடந்த அனைத்து காவல் துறையினரும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினரும், வருடம் ஒரு முறை கட்டணம் எதுவுமில்லாமல் ஒட்டு மொத்த உடல் பரிசோதனை செய்து கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2016–2017ஆம் ஆண்டு 81 சதவீதத்தினர் உடல் பரிசோதனை மேற்கொண்டு பயன்பெற்றுள்ளனர்.

❖ காவலர் மற்றும் அவர்தம் குடும்பங்கள் மருத்துவ சிகிச்சை பெற ஏதுவாக தமிழகத்தில் 13 காவலர் மருத்துவமனைகள் திறம்பட செயல்பட்டு வருகின்றன.

❖ பல்வேறு போட்டிகளில் பங்கேற்று பதக்கம் பெறும் காவலர்களை ஊக்குவிக்கும் வகையில் பரிசுத் தொகைகள் பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ளன.

❖ இப்படி மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் வழங்கப்பட்ட ஏராளமான திட்டங்களால் காவல்துறையினர் மகிழ்ச்சியும் மனநிறைவும் பெற்று சட்டம் ஒழுங்கை செம்மையாக காத்து வருகிறார்கள்.

❖ அத்துடன், தமிழக காவல்துறையினரின் பணியினை மேம்படுத்திடவும், காவல் துறையை நவீனப்படுத்தும் நோக்கிலும்,

❖ சென்னை மாநகரத்தின் அனைத்துப் பகுதிகளிலும் காவலர்களின் கண்காணிப்பு பணி இடைவிடாது இருக்க, அதிக அளவு ரோந்து வாகனங்களை வழங்கியது;

❖ குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் வலைபின்னல் முறை நடைமுறைப்படுத்தியது;

❖ தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்திற்கு நுண்ணலை இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது;

அதிக மக்கள் கூடும் திருவிழாக்கள், முக்கியத் தலைவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் போது தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்; முக்கிய குற்றங்களில் தடயங்கள் குறித்து அறியவும் மற்றும் இயற்கை பேரிடர்களின் போது சேதங்கள் குறித்து அறிந்து மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்து விரைவு படுத்தவும் ஆளில்லா வானவூர்திகள் வாங்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டன;

குற்றங்களைத் தடுக்கும் விதமாகவும், குற்றங்கள் நிகழ்ந்த இடத்தில் தடயங்களை சேகரிக்க உதவிடும் வகையிலும் பொது இடங்களில் 1,42,229க்கும் அதிகமான கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன;

மே 2011 முதல் இதுநாள் வரை 1,219 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 14,227 காவல்துறை குடியிருப்புகளும், 197 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 416 காவல் நிலையங்களும், 304 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 229 காவல்துறைக்கான இதர கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளன.

இப்படி எண்ணற்ற திட்டங்களை காவல்துறை மேம்பாட்டிற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்தினார்கள்.

சட்டம் – ஒழுங்கை காப்பதற்கும், காவலர்கள் எவ்வித அச்ச உணர்வோ இடையூறோ இல்லாமல் தங்கள் பணிகளை நேர்மையாகவும், திறமையாகவும், செம்மையாகவும், உண்மையாகவும், சட்டப்படியும் ஆற்றிடவும் உகந்த சூழ்நிலையை மாண்புமிகு

புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காவல்துறைக்கு ஏற்படுத்தி தந்தார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் அம்மா அரசு காவல்துறை நலனில் தனி அக்கறை செலுத்துவதோடு, குற்றவாளிகள் மீது காவல்துறையினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் தலையிடாமல், காவல்துறையினருக்கு முழு சுதந்திரம் அளித்து, சட்டம் ஒழுங்கை காப்பதையே குறிக்கோளாக கொண்டுள்ளது. அதனால் தான், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலும், அம்மா வழியில் செயல்படும் இந்த ஆட்சியிலும் தமிழ்நாடு அமைதிப் பூங்காவாக, மக்கள் மகிழ்ச்சியோடு வாழத்தகுந்த நாடாக விளங்கி வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

காவலர்கள் பணியாற்றுவதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதுடன், அவர்கள் தங்கள் பணியினை திறம்பட ஆற்றிட பயிற்சி மிகவும் அவசியம் ஆகும்.

பயிற்சி தான் மனிதனை பக்குவப்படுத்தும். எந்தத் துறையாக இருந்தாலும், அதில் பயிற்சி பெற்றால் தான் ஒருவர் தன்னுடையப் பணியை திறமையாகவும், செம்மையாகவும் ஆற்ற இயலும்.

இதனை கருத்தில் கொண்டு, உலகத் தரம் வாய்ந்த காவல் உயர் பயிற்சியகம் தமிழ்நாட்டில் நிறுவப்பட வேண்டும் என்பது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கனவாக இருந்தது. அந்தக் கனவை நனவாக்கும் விதமாக, தொட்டதை துலங்க வைக்கும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் 2004ஆம் ஆண்டு இந்த ஊனமாஞ்சேரியில் தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்தப் பயிற்சியகம், இயற்கை சூழலுடன், சிறந்த கட்டமைப்பு வசதிகளுடன், திறமையான பயிற்சியாளர்களையும் கொண்டிருக்கிறது. பல்வேறு புது உத்திகளுடன் இங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் முதல் கணினி தொடர்பான குற்றங்கள் வரை பல்வேறு குற்ற நிகழ்வுகளை கையாளுவதற்கான பயிற்சிகளும் இங்கு அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சியின் மூலம், களப்பணி, தலைமைப் பண்பு, ஆய்வுத் திறன், மென் கணினித் திறன் ஆகியவற்றை நீங்கள் நன்கு பெற்று இருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்.

ஆயுதங்களை கையாளுதல்; குறி பார்த்து சுடுதல்; நுண்ணறிவுத் தகவல்களை சேகரித்தல்; பொதுமக்களின் உணர்வுகளை ஆய்ந்தறிதல்; பண்புடன் நடந்து கொள்ளும் திறன் என மாறுபட்ட கோணங்களில் நீங்கள் பயிற்சி பெற்று இருப்பீர்கள். இந்த பயிற்சியின் மூலம், சட்டம் ஒழுங்கை எப்படி பராமரிக்க வேண்டும்; பொதுமக்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் நீங்கள் முழுமையாக கற்றிருப்பீர்கள்.

“ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்” என்பது வள்ளுவர் வாக்கு. காவல் துறையினருக்கு ஒழுக்கம் மிகவும் அவசியம். ஒழுக்கம் இருந்தால் தான், விருப்பு வெறுப்பு இன்றி; வேண்டியவர் வேண்டாதவர் என்ற வேறுபாடு இல்லாமல்; காவல் துறையினர் தங்கள் கடமையை ஆற்ற முடியும். அவ்வாறு கடமையாற்றினால் தான், காவலர்களை மக்கள் மனதார பாராட்டுவார்கள்.

காவல்துறைக்கு சட்டம் என்பது ஆயுதமாக கருதப்படுகிறது. சட்டம் மனித சேவைக்காக உருவாக்கப்பட்டது தான் என்பதை முதலில் நீங்கள் உணர வேண்டும். இந்தப் பயிற்சியின் மூலம், மனித நேயத்துடன் கூடிய அணுகுமுறையை நீங்கள் நிச்சயம் பெற்று இருப்பீர்கள். நீங்கள் அனைவரும் சட்டத்தை கடைப்பிடித்து கடமை உணர்ச்சியுடனும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் பணியாற்ற வேண்டும்.

மக்கள் இரவில் நிம்மதியாக தூங்கி எழ, தூங்காமல் விழித்திருந்து பாதுகாக்கும் தியாக உணர்வுமிக்க தாயைப்போல, மக்கள் மீது அன்பும், அக்கறையும் கொண்டு உள்ளத்தைக் கவரும் நண்பனைப் போல, மக்களுக்காக அல்லும் பகலும் உழைக்கும் காவல் துறையினரான நீங்கள் தான் இந்த நாட்டின் அரிய சொத்துகளாக மதிக்கப்படுகிறீர்கள்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், “சட்ட திட்டத்தை மதிப்பவர்களுக்கு உற்ற நண்பனாகவும்; சட்டத்தையும், மற்றவர்களின் உரிமைகளையும் மீறுபவர்களுக்கு அச்சத்தைக் கொடுக்கக் கூடிய எதிரியாகவும் காவலர் விளங்க வேண்டும். அதாவது, காவலர் என்பவர் நாணயத்தின் இரு பக்கம் போன்றவர். சட்டப்படி நடப்பவருக்கு நண்பர் எனும் பக்கம் தெரிய வேண்டும். சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிரி என்ற பக்கம் தான் தெரிய வேண்டும்” என்று காவல்துறை எவ்வாறு செயல்பட வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்கள்.

ஒரு பிரச்சினைக்கு உடல் வலிமையை கொண்டு தீர்வு காண்பதைவிட, அறிவுக்கூர்மையைக் கொண்டு தீர்வு காண்பதே சிறந்தது என்பது நம் எல்லோருக்கும் தெரியும். எனவே, காவல்துறையினர் காலத்திற்கு ஏற்றார்போல் உடல் வலிமையோடு அறிவுக்கூர்மை மிக்கவர்களாக தங்களை தகுதிப்படுத்தி கொள்ள வேண்டும். இக்காலத்தில் படித்தவர்கள் கூட தங்களுடைய கல்வி அறிவை தவறான வழியில் பயன்படுத்தி நுட்பமான முறையில் குற்றங்களில் ஈடுபடுகிறார்கள். அதை தான் White Collar Crime என்கிறோம். அப்படிப்பட்ட குற்றங்களை தடுத்து நிறுத்தி குற்றவாளிகளை கண்டறிவதற்கு காவல்துறையினருக்கு தற்கால தொழில்நுட்ப அறிவு மிகவும் தேவையாக இருக்கிறது. எனவே நீங்கள் கணினி மற்றும் இணைய தொழில்நுட்ப அறிவை ஒவ்வொரு

நாளும் புதுப்பித்து கொள்ள வேண்டும் என்பதை இந்த நேரத்திலே வலியுறுத்த விரும்புகிறேன்.

"மண்ணுக்கு மரம் காவல்", "மரத்துக்கு இலை காவல்", "பயிருக்கு வேலி காவல்", "கண்ணுக்கு இமை காவல்", "கடலுக்கு கரை காவல்" என்பதைப் போல் மக்களுக்கு காவலாக விளங்குவது காவல் துறை என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காவல்துறையின் சிறப்பை எடுத்துரைத்தார்கள்.

காவல்துறையினர் பணியின் போது இறந்தாலும், உடல்நலக்குறைவால் இறந்தாலும், அரசு தரும் குடும்ப நல நிதியைத் தவிர, அவர்களது குடும்பத்தினருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்தும் 3 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு, அதனை தொடர்ந்து செயல்படுத்தி வந்தார்கள் என்பதலிருந்தே, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காவல்துறையை தன் கண் போல பாவித்தார்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளலாம். இதனை மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்படும் அம்மா அரசும் நடைமுறைப்படுத்தி வருகிறது.

காவல்துறை மேம்பாட்டிற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பலப்பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. ஸ்காட்லாண்ட் யார்டு காவல் துறைக்கு இணையாக புகழப்படும் தமிழ்நாடு காவல்துறை பணிகளை துவக்கி வைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்று காணொலி காட்சி வசதி திட்டம் 6 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம், அனைத்து காவல் ஆணையாளர்கள், மண்டல காவல்துறை தலைவர்கள், சரக காவல்துறை துணைத்தலைவர்கள் மற்றும் மாவட்ட

காவல் கண்காணிப்பாளர்கள், தனிப்பட்ட முறையிலோ அல்லது அனைவரும் ஒன்று சேர்ந்தோ தொடர்பு கொண்டு கலந்துரையாடல் செய்து தகவல்களை பரிமாறிக் கொள்ள முடியும். இது தவிர பவர் பாயின்ட் விளக்கக்காட்சி மூலமாகவும் தகவல்களை பரிமாறிக் கொள்ள முடியும்.

சேலம் மாநகரம் முழுவதும், இராமேஸ்வரம் கோவில், ஏர்வாடி தர்கா மற்றும் காரைக்குடி நகரம் ஆகிய இடங்களில் உட்சுற்று கண்காணிப்பு கேமராக்கள் (சிசிடிவி) பொருத்தும் திட்டம் இன்று தொடங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம், சேலம் மாநகரத்தில் 3 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவிலும், இராமேஸ்வரம் கோவில், ஏர்வாடி தர்கா மற்றும் காரைக்குடி நகரம் ஆகிய இடங்களில் 3 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவிலும் தொடங்கப்பட்டுள்ளது. இந்த இடங்களில் நடக்கும் நிகழ்வுகளை காவல்துறை அதிகாரிகள் கண்காணித்து, சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளை தீர்க்கவும், பெண்கள், மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்ற நிகழ்வுகள் நடைபெறாமல் தடுக்கவும், போக்குவரத்து நெரிசல்களை சரிசெய்யவும், போக்குவரத்து விதிமீறல்களை கண்காணித்து தக்க நடவடிக்கை எடுக்கவும் பயன்படுத்த முடியும்.

இந்தத் திட்டத்தின் கீழ் சேலம் மாநகரத்தில் அமைந்துள்ள 56 சந்திப்புகளில், 192 வலைதள வசதியுள்ள கேமராக்கள், 8 சுழலும் கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது. ஏர்வாடி தர்காவில் வலைதள வசதியுள்ள 15 கேமராக்கள், காரைக்குடி நகரில் 29 கேமராக்கள் மற்றும் இராமேஸ்வரம் கோவிலில் 70 கேமராக்களும் பொருத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் 30 நாட்கள் ஒளிப்பதிவை சேமித்து வைக்கும் வசதி கொண்ட கருவிகள் பொருத்தப்பட்டுள்ளதால், எதிர்கால புலன் விசாரணைகளுக்கு இத்திட்டம் உதவிகரமாக இருக்கும்.

248 காவல் நிலையங்களுக்கு உட்சுற்று கண்காணிப்பு கேமிராக்கள் (சிசிடிவி) பொருத்தும் திட்டம் 5 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் இன்று தொடங்கப்பட்டுள்ளது. மக்களுக்கு காவல் துறையின் மேல் நன்மதிப்பை ஏற்படுத்தும் பொருட்டும் மற்றும் வெளிப்படையான தன்மையை எடுத்துக்காட்டும் பொருட்டும், காவல் நிலையங்களில் 6 வலைதள வசதியுள்ள கேமராக்கள், 1 ஒளிப்பதிவு கருவி, 30 நாட்கள் ஒளிப்பதிவை சேமித்து வைக்கும் வசதி கொண்ட கருவிகள், மானிட்டர் மற்றும் தடையில்லா மின்சாரம் வழங்கும் உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் காவல் நிலையங்களில் நடைபெறும் சம்பவங்களை பதிவு செய்து தேவைப்படும் நேரத்தில் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

ஆக மொத்தம் இன்று 18 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்கள் இங்கு தொடங்கி வைக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டைப் பாதுகாப்பதில் ராணுவத்தினருக்கு எத்தனை பங்கு இருக்கிறதோ, அதே அளவு பங்கு காவல் துறையினருக்கும் இருக்கிறது. நாட்டுக்குள்ளே மக்களோடு மக்களாக நல்லவர்களைப் போல வாழ்ந்து கொண்டிருக்கின்ற தேச விரோதிகளையும், குற்றவாளிகளையும் கண்டறிவது என்பது காவல்துறையினருக்கு பெரும் சவாலாகும். அவர்களை இனம் கண்டறிய வேண்டுமென்றால், காவல் துறையினருக்கு நுண்ணறிவு தேவை. அத்தகைய நுண்ணறிவும் பகுத்தறிவும் மிக்கது தமிழ்நாடு காவல்துறை என்பது பலமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது. அதே வழியில், தமிழ்நாடு காவல்துறையின் மாண்பையும் சாதனையையும் நீங்கள் மேலும் சிறப்படைய செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

இலக்குகள் நமது வாழ்க்கைக்கு ஒரு குறிக்கோளைத் தருகின்றன. வெற்றி பெறுவதற்கான துவங்குமிடம் இதுவேயாகும். நீங்கள் அடைய வேண்டிய இலக்கினை நீங்கள் நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். ஆதலால், குறிக்கோளுடன் வாழுங்கள். சிறந்த காவல் அதிகாரிகள் என்ற நற்பெயரை பெறுவதையே இலட்சியமாக கொள்ளுங்கள்.

நீங்கள் இத்தனை சிறப்போடு இந்த பயிற்சியை நிறைவு செய்திருக்கிறீர்கள் என்றால் அதற்கு காரணமாக திகழும் இந்த பயிற்சியகத்தை சேர்ந்த அனைத்து அதிகாரிகளையும், அலுவலர்களையும் மனதார பாராட்டி, உங்கள் எதிர்காலம் சிறந்து விளங்க எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
31.03.2017 *அன்று காஞ்சிபுரம் மாவட்டம்,*
ஊனமாஞ்சேரியில் அமைந்துள்ள
தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் நடைபெற்ற
பயிற்சி உதவி ஆய்வாளர்களின் பயிற்சி நிறைவு
அணிவகுப்பு விழாவில் ஆற்றிய உரை .

நாட்டிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்க அரசு பணியாளரும், ஆசிரியரும் என்னோடு இணைந்து செயலாற்ற வேண்டும்!

அன்பின் உருவம், ஆற்றலின் இருப்பிடம், இன்றும் என்றும் என்றென்றும் மாணவர்கள் மற்றும் மக்களின் மனதை விட்டு நீங்காத மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வாழும் திசை நோக்கி பணிந்து வணங்குகிறேன்.

இந்த இனிய விழாவிற்கு வருகைப் புரிந்துள்ள மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

தலைமைச் செயலாளர் அவர்களே!

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

வரவேற்புரை ஆற்றிய பள்ளிக்கல்வித் துறை செயலர் அவர்களே!

தமிழ்நாடு அரசு உயர் அலுவலர்களே!

நன்றியுரை ஆற்ற உள்ள மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் அவர்களே!

கல்வித்துறை அதிகாரிகளே!

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!

உங்கள் அத்தனை பேருக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

உயர்ந்த சிந்தனையும் உன்னத நோக்கமும் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசிகளோடு நடைபெறுகின்ற, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஆகியவற்றில் விரிவுரையாளர் பணி இடங்களுக்கான பணிநியமன ஆணை வழங்குதல், பேரிடர் மேலாண்மை விழிப்புணர்வு குறித்த மாநில அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்குதல் மற்றும் பல்வேறு பள்ளிக்கல்வித் திட்டங்கள் தொடக்க விழாவில் கலந்துகொண்டு உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

மாணவர்களின் அறிவுக்கண்ணைத் திறந்து, வாழ்வில் சமூக சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றல் மிக்கவர்களாக அவர்களை உருவாக்குவது கல்வியே ஆகும்.

அத்தகைய சிறப்பு மிக்க கல்வியை சற்றும் சிரமம் இல்லாமல் அனைவரும் பெற வேண்டும் என்பதற்காகவும், ஏழை மக்களின் கல்விச் செலவு சுமையை குறைத்திடவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இலவசப் பேருந்து பயண அட்டை, விலையில்லாச் சீருடைகள், விலையில்லா பாடநூல்கள், விலையில்லாக் க்ரேயான்கள், விலையில்லா வண்ணப் பென்சில்கள், கணித உபகரணப் பெட்டி,

விலையில்லா நில வரைபட நூல், விலையில்லாப் புத்தகப் பை, விலையில்லாக் காலணிகள், விலையில்லா மிதி வண்டிகள், விலையில்லா மடிக்கணினி, மதிய உணவில் 16 வகையான சத்தான ஆகாரம், இடைநிற்றலைக் குறைப்பதற்கான சிறப்பு ஊக்கத்தொகை, மலைப்பிரதேச மாணவர்களுக்கு கம்பளிச்சட்டை, நோட்டுப் புத்தகங்கள், வருவாய் ஈட்டும் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு நிதியுதவி போன்ற பல்வேறு வகையான மாணவ நலத்திட்டங்களைச் செயல்படுத்தினார்கள். புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசும் பல்வேறு நலத்திட்டங்களைச் செவ்வனே செயல்படுத்தி வருகிறது.

ஒரு நாட்டின் வளர்ச்சியும் பொருளாதார முன்னேற்றமும் அந்த நாட்டின் மக்களின் கல்வி நிலையை அடிப்படையாக கொண்டவை என்பதை உணர்ந்த நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒவ்வொரு குழந்தையையும் மதிப்புள்ளவர்களாக மாற்றிடும் நலனில் அக்கறை காட்டினார்கள்.

ஒரு நாட்டின் தலை எழுத்து வகுப்பறைகளில் தான் நிர்ணயிக்கப்படுகிறது. உயிரும் உணர்வும் கொடுத்தவர்கள் பெற்றோர்களாக இருக்கலாம். ஆனால், இந்த வெளி உலகத்தைக் காண சன்னல்களாகவும் வாழ்க்கையில் முன்னேறிச் செல்ல ஏணிகளாகவும் இருப்பவர்கள் நமது ஆசிரியர் பெருமக்களே.

ஒரு மனிதனுக்கு தாய் தந்தை நிலைக்கு அடுத்த நிலையில் குரு வைத்துப் போற்றப்படுகிறார். அதனால்தான் மாதா, பிதா, குரு, தெய்வம் என்று நமது முன்னோர்கள் வரிசைப்படுத்தினார்கள்.

ஆசிரியர் தொழில் என்பது ஒரு சிற்பியின் தொழிலைப் போன்றது. மாணவர்களை அறிவுச் சிற்றுளியால் தெய்வப் பதுமையாக மாற்றும் புனிதப் பணி உங்களுடையது. அந்தப் புனிதப் பணியை ஊக்கப்படுத்தும் விதமாகத்தான் தமிழ்நாடு அரசு முன்மாதிரியான ஆசிரியர்களுக்கு டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது வழங்கி சிறப்பிக்கின்றது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்வித் துறையை ஒரு மனிதசக்தியை வளப்படுத்தும் ஒரு துறையாக வளர்ச்சியடைச் செய்திருக்கிறார்கள். அனைத்துத் துறைகளையும் விட கல்வித் துறைக்கு அதிகப்படியான நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். தமிழ்நாட்டை 100 சதவீதம் கற்றவர்கள் நிரம்பிய மாநிலமாக மாற்ற பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தினார்கள்.

அனைத்துப் பள்ளி வயதுக் குழந்தைகளுக்கு இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வியை எளிதில் பெறும் பொருட்டு, புதிய பள்ளிகளைத் தொடங்குதல், தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்துதல், உண்டு உறைவிடப் பள்ளிகளை தொடங்குதல், பள்ளிகள் திறக்க வாய்ப்பு இல்லாத குடியிருப்புகளில் குழந்தைகளுக்கு போக்குவரத்து, பாதுகாவலர் வசதிகளை அளித்தல் போன்ற நலத்திட்டங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு செயல்படுத்தியதன் காரணமாக தொடக்கக் கல்வித் துறையில் நிகர சேர்க்கை விகிதம் 2015–2016இல் 99.85 விழுக்காடாகவும், நடுநிலை வகுப்புகளில் 99.11 விழுக்காடாகவும் அதிகரித்துள்ளது. இவ்வகையில் 2011–2012 முதல் 2016–2017ஆம் ஆண்டு வரை 226 புதிய தொடக்கப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டதோடு 115 தொடக்கப் பள்ளிகள் உயர் தொடக்கப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டன.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாட்டில் 1 முதல் 9 வகுப்பு வரை முப்பருவ கல்விமுறை நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. இம்முப்பருவக் கல்வி முறையால் மாணவர்களின் புத்தகச்சுமை குறைந்ததோடல்லாமல், கற்றலிலும் கூடுதல் கவனம் ஏற்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை தமிழக கல்வி வரலாற்றில் ஒரு மைல் கல் எனலாம்.

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்படி, தனியார் பள்ளிகளில் 25 சதவிகித இட ஒதுக்கீட்டில் மாணவர் சேர்க்கை நடைபெறுவதை தமிழக அரசு உறுதி செய்கிறது. இதன் காரணமாக சுயநிதிப் பள்ளிகளில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளை பள்ளிகளில் சேர்ப்பது

கடந்த மூன்று ஆண்டுகளாக உயர்ந்து வருகிறது. இவ்வகையில் மாணவர் சேர்க்கை 2013–2014ஆம் கல்வியாண்டில் சேர்க்கை 49,864 ஆகவும், 2016–2017இல் 97,506 ஆகவும் இருமடங்காக உயர்ந்துள்ளது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மாணவர்களுக்காக செயல்படுத்திய பல்வேறு திட்டங்களின் காரணமாக, 10 மற்றும் 12ஆம் வகுப்புப் பொதுத்தேர்வில் மாணவர்களின் கல்விச் செயல்பாடு குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்து வருகிறது. 2015–2016ஆம் கல்வியாண்டில் தேர்ச்சி விகிதம் 10 ஆம் வகுப்பில் 93.6 விழுக்காடாகவும், 12ஆம் வகுப்பில் 91.4 விழுக்காடாகவும் உயர்ந்துள்ளது. மேலும், 10ஆம் வகுப்புப் பொதுத்தேர்வில் 1,467 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளும், 12ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் 266 அரசு மேல்நிலைப் பள்ளிகளும் 100 விழுக்காடு தேர்ச்சியைப் பெற்றுள்ளன என்பதை நான் இங்கே பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆசிரியர் இல்லாத காரணத்தினால் மாணவர்களின் கற்றல் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசால் பள்ளிக் கல்வித் துறையில் கடந்த ஐந்து ஆண்டுகளில் 74,316 ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசின் தொலை நோக்குப் பார்வையில் கல்வியே முன்னிலை வகித்து வருகிறது என்பதற்குச் சான்று, 2017–2018ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் பள்ளிக் கல்வித்துறைக்கென 26 ஆயிரத்து 932 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதே ஆகும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளின் கல்வித் தரத்தினை மேம்படுத்தும் நோக்கில் 2012ஆம் ஆண்டு ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தை (DTERT) மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமாகத் (SCERT) தரம் உயர்த்தினார்கள்.

இந்தத் தரம் உயர்த்தப்பட்ட மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், ஆசிரியர்களின் பணி மேம்பாடு மற்றும் மாணவர்களின் தரமான கற்றலை உறுதிப்படுத்துவதோடு மட்டுமின்றி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் "தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023" இன்படி தமிழகத்தை இந்தியாவின் அறிவுசார் தலைநகரமாக மாற்றி, சமூகப் பொருளாதார நிலையில் தமிழகத்தை முன்மாதிரி மாநிலமாக உருவாக்கிடும் உயரிய நோக்கத்தோடு செயல்பட்டு வருகிறது.

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் 9 துறைகள் புதியதாகத் தோற்றுவிக்கப்பட்டு, கூடுதலாக 36 கல்வியாளர் பணியிடங்கள் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. தரமான தொடக்கக் கல்வி ஆசிரியர்களை உருவாக்கத் தரமான கல்வியாளர்களை நியமிக்க மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களான மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களுக்காக ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தெரிவு செய்யப்பட்ட 11 முதுநிலை விரிவுரையாளர், 80 விரிவுரையாளர், 18 இளநிலை விரிவுரையாளர், என மொத்தம் 109 நபர்களுக்கு நேற்று 31.03.2017 அன்று கலந்தாய்வு நடத்தப்பட்டு அவர்களுக்குப் பணி நியமன ஆணைகள் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் என்னால் இன்று வழங்கப்பட்டது.

இந்த இனிமையான நேரத்தில், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் கல்வி வளர்ச்சிக்கு ஆற்றி வரும் பல்வேறு பணிகள் குறித்து குறிப்பிட கடமைப்பட்டுள்ளேன்.

❖ கடந்த 2015ஆம் ஆண்டு ஏற்பட்ட பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை உள்ளிட்ட மாவட்டங்களில் பயின்ற மாணவர்கள் தங்கள் பாடநூல் உள்ளிட்ட உடைமைகளை இழந்து தவித்தபோது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பொதுத்தேர்வு எழுதும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு உதவும் வகையிலான கற்றல் கையேடுகளைத் தயாரித்து வழங்க

ஆணையிட்டார்கள். அதன்படி இந்த நிறுவனம் கையேடுகள் தயாரிக்கும் பணியினை சிறப்பாகச் செய்து முடித்து மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களே அக்கையேட்டினை வெளியிட்டார்கள். இதனால் வெள்ள பாதிப்பின் பயமின்றித் தேர்வினை எதிர்கொண்ட மாணவர்கள் சிறப்பான தேர்ச்சியைப் பெற்றதோடு இந்த மாவட்டங்களின் தேர்ச்சி விழுக்காடும் அதிகரித்தது பாராட்டுக்குரியதாகும்.

❖ இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக மெய்நிகர் வகுப்பறைகளை (Virtual Class rooms) 770 பள்ளிகளிலும் 11 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களிலும் நிறுவியுள்ளது.

❖ தற்காலக் கணினி யுகத்தின் டிஜிட்டல் தேவைகளைப் பூர்த்தி செய்ய மாணவர்களுக்குத் தேவையான பாடப்பொருள் சார்ந்த 950 காணொலிகள் உருவாக்கப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

❖ மாணவர்களின் கற்றலை இனிமையாக்க ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரையிலான தமிழ்ப் பாடல்களை அரசுப் பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களைக் கொண்டு காணொலியாக உருவாக்கப்பட்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வெளியிடப்பட்ட “தாயெனப்படுவது தமிழ்” என்னும் குறுந்தகடு அனைவரின் வரவேற்பையும் பெற்றுள்ளது.

இவை போன்ற பல பணிகளை ஆற்றி வரும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் பணி மேலும் சிறக்க என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அம்மாவின் வழியில் வந்த இந்த அரசு, அம்மாவின் எண்ணங்களை ஈடேற்றும் வகையில் தொடர்ந்து கல்விக்காக சிறந்த திட்டங்களை செயல்படுத்தும் என்று இந்த நேரத்திலே உறுதியளிக்கிறேன்.

இங்கே பணிநியமன ஆணை பெற்ற விரிவுரையாளர்களுக்கு நிறைவாக ஒன்றை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

காலத்திற்கேற்றார்போல், மாணவர்களை ஒழுங்குபடுத்தி அவர்களை இந்நாட்டு மன்னர்களாக உருவாக்கும் சக்தி உங்களிடம் தான் இருக்கிறது. அதை நீங்கள் சரியாக செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. இது சம்பந்தமாக எனக்கு ஒரு கதை நினைவிற்கு வருகிறது.

ஒரு காட்டிலுள்ள ஆசிரமத்தில் முனிவர் ஒருவர் இருந்தார். அவர் ஏழை பணக்காரர் என்ற வித்தியாசம் இல்லாமல் அனைத்து பிள்ளைகளுக்கும் கல்வி கற்பித்து வந்தார். அந்நாட்டு அரசரும் தன் பிள்ளையை அந்த ஆசிரமத்திற்கு கல்வி கற்க அனுப்பி இருந்தார். ஆண்டுகள் பல கடந்ததால், தன்னுடைய பிள்ளையின் கல்வி கற்கும் நிலையை அறிந்திட அரசர் ஆசிரமத்திற்கு நேரில் சென்றார். அங்கு தனது மகன் விறகு வெட்டுவதும், துடைப்பத்தை கொண்டு ஆசிரமத்தை தூய்மை செய்வதையும் கண்ட அரசர் திடுக்கிட்டு இது குறித்து மகனிடம் கேட்டார். அப்போது அவரது மகன், தந்தையே இது என்னுடைய குருதேவரின் உத்தரவு. இங்கே அரசரும் ஒன்று தான், ஆண்டியும் ஒன்று தான். குருதேவர் சொல்வதை மறுக்காமல் செய்வது தான் எங்கள் கடமை என்று தெரிவித்தான்.

அந்த சமயத்தில் முனிவரும் அங்கே வந்து, "அரசே! உங்களுடைய பிள்ளை என்னுடைய எல்லா தேர்விலும் வெற்றி பெற்று விட்டான். பெரியோர் சொல்லை கேட்பது தான் ஒருவனின் உயர்ந்த குணம். இந்தக் குணத்தை உங்கள் மகன் பெற்று விட்டதால், எத்தகைய கடினமான வேலையை அவனிடம் கூறினாலும், அதை தட்டாமல் செய்து முடிக்கும் திறமை அவனுக்கு வந்து விடும். இந்தக் குணமும், விவேகமும் உங்கள் மகனுக்கு மன உறுதியை ஏற்படுத்தும். அதன்மூலம் அவன் நாட்டு மக்களின் பிரச்சினைகளை நன்கு உணர்ந்து சிறந்த முறையில் ஆட்சி செய்து பேரும் புகழும் பெறுவான்". என்று வாழ்த்தி அனுப்பினார்.

இந்த கதையில் வரும் முனிவரைப் போல, ஆசிரியர்களாகிய நீங்கள் இருக்க வேண்டும். இந்த கதையில் வரும் அரசனின் மகனைப் போன்ற மாணவர்களை நீங்கள் உருவாக்க வேண்டும். வருங்கால மன்னர்களாகிய மாணவச் செல்வங்களுக்கு கல்வியுடன்,

நற்சிந்தனை, ஒழுக்கம், பெரியோர் சொல் கேட்டு நடப்பது, போன்ற பண்புகளை கற்பித்து அவர்களை நல்ல குடிமக்களாக உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களுக்கு இருக்கிறது. அதனை உணர்ந்து நீங்கள் செயல்பட்டால் நம் நாடு ஒரு பெரிய வல்லரசு நாடாக மலரும் என்பதில் சந்தேகம் இல்லை.

“நாட்டிலேயே முதன்மையான மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்ற என்னுடைய கூர்நோக்கை மெய்யாக்குவதில் ஒவ்வொரு அரசுப் பணியாளரும், ஆசிரியரும் என்னோடு இணைந்து செயலாற்ற வேண்டும்” என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நமக்கு அன்பு கட்டளையிட்டார்கள். அம்மா அவர்களுடைய கட்டளையை ஏற்று அரசுப் பணியாளர்களும் ஆசிரியர்களான நீங்களும் தமிழகத்தின் கல்வி வளர்ச்சிக்காக இந்த அரசுக்கு முழுமையான ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

மாணவர்களின் எதிர்காலத்திற்கு நன்முறையில் அடித்தளமிடும் ஆசிரியர்களை உருவாக்கவுள்ள கல்வியாளர்களுக்கும் பரிசு பெற்ற அத்தனை மாணவச் செல்வங்களுக்கும் மீண்டும் ஒருமுறை என் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இந்த சிறப்பான விழாவினை ஏற்பாடு செய்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
01.04.2017 அன்று திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர், எஸ்.ஆர்.எம். மேல்நிலைப் பள்ளியில் பள்ளிக் கல்வித் துறை சார்பில் நடைபெற்ற விரிவுரையாளர்கள் பணியிடங்களுக்கான நியமன ஆணைகளை வழங்குதல், பேரிடர் மேலாண்மை விழிப்புணர்வு குறித்த மாநில அளவிலான போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசு வழங்குதல், பல்வேறு பள்ளிக் கல்வி திட்டங்கள் தொடக்க விழாவில் ஆற்றிய உரை.

ரூ.330 கோடி செலவில் 1.89 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு மின்னணு குடும்ப அட்டைகள்!

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா என்னும் தெய்வத்தை வணங்குகிறேன்.

இந்த இனிய விழாவிற்கு வருகை புரிந்துள்ள மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

தலைமைச் செயலாளர் அவர்களே!

வரவேற்புரை நிகழ்த்திய கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மை செயலாளர் அவர்களே!

நன்றியுரை ஆற்ற உள்ள உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் அவர்களே!

தமிழ்நாடு அரசு உயர் அலுவலர்களே!

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!

வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே!

உங்கள் அத்தனை பேருக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் நடைமுறையில் இல்லாத விலையில்லா அரிசி வழங்கும் உன்னத திட்டத்தை குடும்ப அட்டைதாரர்களுக்கு நடைமுறைப்படுத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். வறுமை கோட்டிற்கு மேல் உள்ளோர், வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளோர் என்ற பாகுபாடு எதுவுமில்லாமல் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தை அறிவித்து, தமிழக மக்களின் பசிப்பிணியைப் போக்கியதுடன், அவர்களது உணவு பாதுகாப்பையும் உறுதி செய்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். அதனால் தான், மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு, அனைவருக்குமான பொதுவிநியோகத் திட்டத்தை தமிழ்நாட்டில் தொடர்ந்து செயல்படுத்தும்.

பொது விநியோகத் திட்டத்தை மேலும் செம்மைபடுத்தும் நோக்கில் 330 கோடி ரூபாய் செலவில் 1 கோடியே 89 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து, காணொலி மூலம் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிக்கும் பணியையும் தொடங்கி வைத்ததில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

“தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில்
ஜகத்தினை அழித்திடுவோம்”

என்று பாரதியார் தனிமனித உணவு உரிமைக்காக குரல் கொடுத்தார்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், புரட்சித்தலைவி அம்மா அவர்களும் ஏழைகள் மகிழ வேண்டுமென்றால், ஏழைகளின் வயிறு நிறைய வேண்டும், அதற்கான திட்டங்கள் தான் மற்ற எல்லா திட்டங்களை விட நாட்டுக்கு மிக மிக அவசியமான திட்டம் என்றார்கள். தங்கள் ஆட்சி காலங்களில் பாமர அடித்தட்டு மக்கள், அன்றாட கூலி தொழிலாளர்கள், விவசாய பெருங்குடி மக்களை, மகிழ்விக்கும் திட்டங்களையே தொடர்ந்து செயல்படுத்தினார்கள்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஏழை குழந்தைகள் பசியாற சத்துணவு திட்டத்தையும், புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏழை மக்கள் பசியாற அம்மா உணவகத்தையும் தமிழ்நாட்டில் தொடங்கி வைத்து பிற மாநிலத்தை சேர்ந்தவர்களையும், வெளிநாட்டினரையும் வியக்க வைத்தார்கள்.

தானத்தில் சிறந்தது அன்னதானம் என்பார்கள். அன்னதானத்தின் சிறப்பினை விளக்கும் மகாபாரதக் கதை என் நினைவிற்கு வருகிறது.

கொடை என்றால் நம் நினைவிற்கு முதலில் வருபவர் கர்ணன் தான். கர்ணன் இறந்து சொர்க்கத்தில் இருந்த போது, அவருக்கு கடும் பசி ஏற்பட்டது. சொர்க்கத்தில் பசி என்பது யாருக்குமே இருக்காது. ஆனால் தனக்கு மட்டும் பசி ஏற்பட காரணம் என்ன என்று நாரதரிடம் கேட்டார்.

அதற்கு நாரதர், "பூலோகத்தில் நீ எல்லாவிதமான தான தர்மங்களையும் செய்தாய். ஆனால் அன்னதானம் மட்டும் செய்யவில்லை. ஒருநாள் ஒரு வழிப்போக்கன் அன்னதான சத்திரம் எங்கே இருக்கிறது என்று கேட்டான். அதற்கு நீ உன் ஆள்காட்டி விரலால் அன்னதான சத்திரத்தை சுட்டிக்காட்டினாய். நீ நேரடியாக அன்னதானம் செய்யாவிட்டாலும், அன்னதானம் நடந்த இடத்தை காட்டியமையால் உன் ஆள்காட்டி விரல் அன்னதானம் செய்த பலனைப் பெற்றது. எனவே, இப்போது நீ உன் ஆள்காட்டி விரலை உனது வாயில் வைத்தால் பசி நீங்கிவிடும்", என்று நாரதர் கூறினார்.

அன்னதானம் செய்யாமலேயே, அன்னதானம் நடைபெறும் இடத்தை சுட்டிக்காட்டிய ஆள்காட்டி விரலுக்கு இந்த புண்ணியம் கிட்டியது என்றால், அன்னதானம் செய்தால் கிடைத்திடும் பலனை அளவிட முடியாது என்பதை நாம் இதில் இருந்து புரிந்து கொள்ளலாம்.

நமது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வீடுதோறும் விலையில்லா அரிசி, ரம்ஜானுக்கு நோன்புக்கஞ்சி அரிசி, கோயில் தோறும் அன்னதான திட்டத்திற்கு அரிசி வழங்கி ஏழை மக்களின்

பசியினை போக்கி புண்ணியம் பெற்று வந்தார்கள். அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு அம்மா அவர்கள் கொண்டு வந்த அன்னதான திட்டங்களை மேலும் செம்மைப்படுத்தும் என்பதை உறுதி கூறுகிறேன்.

உணவு உற்பத்தியில் மிகை மாநிலங்களான ஆந்திரா, சத்தீஷ்கர், பஞ்சாப், மேற்குவங்காளம் போன்ற மாநிலங்களில் கூட குடும்ப அட்டைதாரர்களுக்கு விலைக்குதான் அரிசி வழங்கப்படுகிறது. அதே சமயம் நமது தமிழ்நாட்டில் மட்டும் தான் குடும்ப அட்டைதாரர்களுக்கு 01.06.2011 முதல் விலையில்லா அரிசி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. உணவுத்துறைக்கு ஆண்டு ஒன்றுக்கு 5,500 கோடி ரூபாயை மானியமாக ஒதுக்கி எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றி வரும் ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டும்தான் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.

தானிய சேமிப்பு கட்டமைப்புகளை உருவாக்குவதில் படைக்கப்பட்ட சாதனைகளுக்காக 2013 மற்றும் 2014ம் வருடங்களில் மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட அனைத்து பரிசுகளும் தமிழ்நாட்டிற்கே வழங்கப்பட்டன. உணவு உற்பத்தியில் சாதனை, விவசாயிகளுக்கு நெல்லுக்கு ஊக்கத்தொகை வழங்குவதில் சாதனை, நுகர்வோர் குறைதீர் முகாம்கள் நடத்தி அன்றைய தினமே குறைகளை நிவர்த்தி செய்து சாதனை என சாதனை தலைவியாக விளங்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் திட்டங்களை தீட்டி செயல்படுத்துவதில் மட்டும் சாதனையாளராக விளங்கவில்லை, அந்த திட்டங்கள், கடைகோடி பாமர மக்களுக்கும் தடையில்லாமல் பலனளிக்கிறதா என்று கண்காணிக்கும் வல்லமை கொண்டவராக இருந்தார்கள். அதனால் தான் மக்களுக்கு பயனளிக்கும் பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாடுகள் அனைத்தையும் முழுமையாக கணினிமயமாக்கி, ஆதார் எண் விவரங்களுடன் அவர்களுக்கு தடையின்றி, தட்டுபாடின்றி உணவுப் பொருட்களை வழங்கிட ஆவன செய்தார்கள்.

தற்போது தமிழ்நாட்டில் சுமார் 1 கோடியே 89 இலட்சம் குடும்ப அட்டைகள் புழக்கத்தில் உள்ளன. கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாகவும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகவும் செயல்பட்டு வரும் 34 ஆயிரத்து 840 நியாயவிலைக் கடைகள் வாயிலாக, அத்தியாவசியப் பொருட்களான அரிசி, கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய் மற்றும் சிறப்பு பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ், பருப்பு மற்றும் பாமாயில் எண்ணெய் ஆகியவை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்குவதற்கு தற்போது தாளில் அச்சிடப்பட்ட குடும்ப அட்டைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 2005–ஆம் ஆண்டு வழங்கப்பட்டு ஆண்டுதோறும் நீட்டிக்கப்பட்டு வந்தது.

மேலும், நியாயவிலைக் கடைகளில் தேவையான அளவு அத்தியாவசியப் பொருட்கள் இருப்பு வைப்பதை உறுதிப்படுத்தவும், போலிக் குடும்ப அட்டைகள் மற்றும் போலிப் பட்டியலிடுதல் ஆகியவற்றை தவிர்க்கவும், ஒரு முழுமையான கண்காணிப்பு அவசியம் எனக் கருதப்பட்டது. பொது விநியோகத் திட்டத்தினை முழுமையாக கணினிமயமாக்கி, அனைத்து அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களை கணினி மூலம் ஒருங்கிணைத்து, அனைத்து நடவடிக்கைகளையும் முழுமையாக கண்காணித்து, இணையதளம், மின்னஞ்சல், குறுந்தகவல், தொலைபேசி வாயிலாக நுகர்வோரின் குறைகளை பெற்று அவற்றை தீர்க்கும் வகையில் இணையவழி சேவைகள் ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டது.

இதனை கருத்தில் கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2013–ஆம் ஆண்டு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி எண் 110–ன் கீழ் இந்திய உணவுக் கழகம் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமான கிடங்குகளில் இருந்து நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் எடுத்துச் செல்லப்படுவதை கண்காணிக்கும்

பொருட்டு பொதுவிநியோகத் திட்டம் கணினிமயமாக்கப்படும் என அறிவித்திருந்தார்கள்.

மேலும் 2012–2013 மற்றும் 2013–2014 ஆகிய ஆண்டுகளில் உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை மானியக் கோரிக்கையின் போது, தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பு பதிவேடு விவரங்களின் அடிப்படையில் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து 2015–ஆம் ஆண்டு 330 கோடி ரூபாய் செலவில் பொதுவிநியோகத் திட்டத்தினை முழுமையாக கணினிமயமாக்கவும், அதனை ஐந்தாண்டு காலம் பராமரிக்கவும், ஒரு திட்ட ஒருங்கிணைப்பாளர் நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு, கணினிமயமாக்கும் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், 2015ஆம் ஆண்டு பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் உள்ள நியாயவிலைக் கடைகளில் விற்பனை முனைய இயந்திரங்கள் நிறுவப்பட்டு பொதுவிநியோகத் திட்ட செயல்பாடுகள் அனைத்தும் இணையவழியே கண்காணிக்கப்பட்டன. அதனை தொடர்ந்து, 2016ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இத்திட்டம் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

தற்போது நடைமுறையில் உள்ள குடும்ப அட்டைகளுக்கு மாற்றாக மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கும் பொருட்டு, விற்பனை முனைய இயந்திரங்கள் வாயிலாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களின் ஆதார் எண் விவரங்கள் சேகரிக்கப்பட்டு, புதிய தரவு தொகுப்பு (New Data Base) உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் பதிவு செய்யப்பட்ட குடும்ப அட்டைகளில் உள்ள சுமார் 6 கோடியே 90 இலட்சம் உறுப்பினர்களில், சுமார் 5 கோடியே 85 இலட்சம் உறுப்பினர்களின் ஆதார் எண் விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இதன்படி 1 கோடியே 89 இலட்சம் குடும்ப அட்டைகளில் 1 கோடியே

17 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு முழுமையான ஆதார் விவரங்களும், 70 லட்சம் குடும்ப அட்டைகளுக்கு குறைந்தபட்சம் ஒரு ஆதார் எண் விவரங்களும் பெறப்பட்டுள்ளன. மொத்த குடும்ப அட்டைகளில், 99 சதவிகித குடும்ப அட்டைகளுக்கு குறைந்தபட்சம் ஒரு உறுப்பினரின் ஆதார் எண் விவரங்களாவது சேகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சேகரிக்கப்பட்ட ஆதார் எண் விவரங்களின் அடிப்படையில் மின்னணு குடும்ப அட்டைகள் தயாரிக்கப்பட்டு தற்போது வழங்கப்படவுள்ளது. இந்த மின்னணு குடும்ப அட்டைகளின் விலையை தமிழ்நாடு அரசே ஏற்றுக் கொண்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையின்றி வழங்கப்படும்.

குடும்ப அட்டைதாரர்கள், அவர்களுடைய குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்பட்ட அத்தியாவசியப் பொருட்களின் விவரங்களை அவ்வப்போது குறுஞ்செய்தி வாயிலாக அறியும் வகையில் இதுவரை 1 கோடியே 67 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களின் கைபேசி எண்களும் சேகரிக்கப்பட்டு விவரங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிக்கப்பட்ட விவரத்தினை குடும்ப அட்டைதாரர்களுக்கு குறுஞ்செய்தி வழியாக அவர்களின் கைபேசிக்கு அனுப்பப்படுவதன் மூலம் போலிப் பட்டியலிடுதல் தவிர்க்கப்படும்.

பொதுவிநியோகத் திட்டம் முழுமையாக கணினி மயமாக்கப்பட்டு உள்ளதால், நியாய விலைக் கடைகளுக்கான அத்தியாவசியப் பொருட்களின் மாதாந்திர ஒதுக்கீடுகள் இணையவழி மூலம் மேற்கொள்ளவும், கிடங்குகள் முதல் நியாயவிலைக் கடைகள் வரையிலான அத்தியாவசியப் பொருட்களின் நகர்வினை உடனுக்குடன் கண்காணிக்கவும் இயலும்.

மேலும் ஒரு நபர், ஒன்றிற்கு மேற்பட்ட குடும்ப அட்டைகளில் அவரின் பெயர் இடம்பெறுவது தவிர்க்கப்படுவதால், போலி குடும்ப அட்டைகள் மற்றும் போலி பட்டியலிடுதல் போன்ற தவறுகள் தவிர்க்கப்பட்டு, அத்தியாவசியப் பொருட்கள் தகுதியான நபர்களுக்கு வழங்கப்படுவது உறுதி செய்யப்படும். குடும்ப அட்டைதாரர்கள்

பொதுவிநியோகத் திட்டம் சார்ந்த குறைகளை தெரிவிப்பதற்கு ஏதுவாக "1967" மற்றும் "1800 425 5901" ஆகிய கட்டணமில்லா தொலைபேசி சேவைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பொதுவிநியோகத் திட்டம் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டதன் மூலம் பொதுமக்கள் புதிய குடும்ப அட்டைகள் குறித்த மனுக்கள், குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்குதல், முகவரி மாற்றம் குறித்த மனுக்கள் ஆகியவற்றை இணையவழி மூலமாக சமர்ப்பிக்கலாம். இத்தகைய மனுக்களை துறை அதிகாரிகள் இணையவழியாக ஆய்வு செய்து, தகுதியுள்ளவர்களுக்கு குடும்ப அட்டைகள் தொடர்பான சேவைகள் விரைவில் கிடைத்திட வழி ஏற்படும். மேலும், இத்தகைய சேவைகளை பொதுசேவை மையங்கள் மூலமாகவும் பொதுமக்கள் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம், கொரட்டூரில் இன்று தொடங்கப்பட்ட மின்னணு குடும்ப அட்டை வழங்கும் பணி, இன்னும் இரண்டு மாதங்களில் அதாவது ஏப்ரல், மே மாதத்திற்குள் மாநிலம் முழுவதும் வழங்கி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மின்னணு குடும்ப அட்டை பெறுகிறவரை தற்போது புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகள் மூலம் ரேசன் பொருட்களை பெற்றுக்கொள்ளலாம். குடும்ப அட்டைதாரர்களுக்கு அவர்களது கைபேசியில் SMS மூலம் தகவல் வந்ததற்கு பின்னால், குடும்ப அட்டைதாரர்கள் அங்காடிகளுக்கு நேரில் சென்று தங்களது மின்னணு குடும்ப அட்டைகளை பெற்றுக்கொள்ளலாம்.

மாண்புமிகு அம்மா அவர்கள் விட்டுச்சென்ற மக்கள் நல திட்டங்கள், தமிழ்நாட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்பதை உறுதிப்படுத்தும் விதமாகவே இந்த நிகழ்ச்சியில் தொடங்கி வைக்கப்பட்ட இந்த திட்டம் அமைந்துள்ளது.

மிக அதிகமானவர்களுக்கு மிக அதிக நன்மைகளைப் பயப்பது தான் உண்மையான மக்களாட்சி என்பதால், மாண்புமிகு அம்மாவின் மக்களாட்சியில் இங்கே தொடங்கி வைக்கப்பட்டிருக்கிற மின்னணு

குடும்ப அட்டை வழங்கும் திட்டத்தின் மூலம் அதிகமான மக்கள் பயன்பெறுவார்கள்.

தாயின் அன்பினை உணர்த்துவதில் உணவு உன்னதமானது. சிலர் சாப்பிடும் போது, இது எங்கள் அம்மா சமைத்தது போல உள்ளது என்று பெருமைப்பட்டு கொள்வார்கள். காரணம், அம்மா சமைத்த உணவுக்குள்ளே உணர்வுகளும் கலந்திருக்கின்றன. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், இந்த நாட்டிற்கே அன்னபூரணி அம்மாவாக திகழ்ந்து, ஏழைகளுக்கும், ஏழை குழந்தைகளுக்கும் அன்னமிடும் பல திட்டங்களை செயல்படுத்தினார்கள். இப்போதும், எப்போதும் மாண்புமிகு அம்மா அவர்கள் மக்களோடு மக்களாக, மக்களுக்கெல்லாம் தாயாக இருந்து வருகிறார்கள். அம்மா அவர்கள் வழியில் வந்த இந்த அரசில் அன்புக்கு பஞ்சம் இருக்காது, அன்னத்திற்கும் பஞ்சம் இருக்காது. ஏழைகளே இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்குவதே அம்மா அரசின் தலையாய குறிக்கோள் ஆகும். மாண்புமிகு அம்மாவிடம் பயிற்சி பெற்ற நாங்கள் அதனை முழு முனைப்போடு நிறைவேற்றுவோம் என்று இந்த நேரத்திலே உறுதி கூறிக் கொண்டு, இந்த வரலாற்று சிறப்புமிக்க இவ்விழாவினை ஏற்பாடு செய்த நல் இதயங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு.**எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
01.04.2017 அன்று, திருவள்ளூர் மாவட்டம், கொரட்டூரில் நடைபெற்ற அரசு விழாவில் பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு மின்னணு குடும்ப அட்டைகளை பயனாளிகளுக்கு வழங்கி ஆற்றிய உரை.

மாநிலக் கல்லூரியானது பல நூற்றாண்டுகள் கல்வி பணியாற்றி சாதனையாளர்களை உருவாக்கி தமிழ்நாட்டிற்கு தொடர்ந்து பெருமை சேர்க்க வேண்டும்!

அன்பின் உருவம், ஆற்றலின் இருப்பிடம், இன்றும் என்றும் என்றென்றும் மாணவர்கள் மற்றும் மக்களின் மனதை விட்டு நீங்காத மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வாழும் திசை நோக்கி பணிந்து வணங்குகிறேன்.

இந்த இனிய விழாவிற்கு வருகைப் புரிந்துள்ள மாண்புமிகு மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி. ஜெயக்குமார் அவர்களே!

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்களே!

மாண்புமிகு மத்திய சென்னை நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர் திரு.எஸ்.ஆர். விஜயகுமார் அவர்களே!

உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு. சுனீல் பாலீவால் அவர்களே!

கல்லூரி கல்வி இயக்குநர் முனைவர் ஜெ. மஞ்சுளா அவர்களே!

வரவேற்புரை ஆற்றிய மாநிலக் கல்லூரி முதல்வர் முனைவர் த. பிரம்மானந்த பெருமாள் அவர்களே!

தமிழ்நாடு அரசு உயர் அலுவலர்களே! கல்லூரி பேராசிரியர்களே!

உயர்கல்வித்துறை அதிகாரிகளே!

நன்றியுரை ஆற்ற உள்ள முனைவர் தாராபாய் தாட்சாயணி அவர்களே !

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!

மாணவ, மாணவிகளே!

வருகை தந்திருக்கிற நண்பர்களே!

உங்கள் அத்தனை பேருக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாற்று சிறப்புமிக்க மாநிலக் கல்லூரியின் 175ஆம் ஆண்டு கொண்டாட்ட நிறைவு விழா, கல்லூரி ஆண்டு விழா மற்றும் விளையாட்டு விழாவில் கலந்து கொண்டு இக்கல்லூரியின் 175ஆம் ஆண்டு நினைவு வளைவிற்கு அடிக்கல் நாட்டும் வாய்ப்பினையும் பெற்றமைக்காக நான் பெருமைப்படுகின்றேன். 175 ஆண்டுகள் பழமையும், பெருமையும் வாய்ந்த இந்த மாநிலக் கல்லூரியில் பணியாற்றும் பேராசிரியப் பெருமக்களையும், மாணவ மணிகளையும் வாழ்த்துகிறேன்.

மாநிலக் கல்லூரியானது, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தென்னிந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் கல்லூரி என்ற

பெருமை பெற்று விளங்குவதோடு, சென்னைப் பல்கலைக்கழகம் தொடங்கப்படுவதற்கு முன்னரே நிறுவப்பட்ட ஒரே அரசு கல்லூரி என்ற பெருமைக்குரியது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த மாநிலக் கல்லூரியில் உள்ள ஒவ்வொரு வகுப்பறையும் எத்தனை எத்தனையோ அறிஞர் பெருமக்களையும், அறிவியல் மேதைகளையும் உருவாக்கி இந்த நாட்டிற்கும், உலகத்திற்கும் அர்ப்பணித்திருக்கிறது. அத்தனை சாதனையாளர்களையும் இங்கே பட்டியலிட நேரம் போதாது என்றாலும், ஒரு சிலரை மட்டும் இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

இந்தக் கல்லூரியில் பயின்று இராமன் விளைவு (Raman Effect) என்கிற அலை நீள மாற்றத்தை கண்டறிந்து, இயற்பியல் துறைக்கான நோபல் பரிசு பெற்ற திரு.சர்.சி.வி. இராமன் அவர்கள்;

விண்மீன்கள் பற்றிய ஆய்விற்காக இயற்பியல் துறைக்கான நோபல் பரிசு பெற்ற திரு. S. சந்திரசேகர் அவர்கள்;

கணித இயலில் நோபல் பரிசுக்கு நிகரான ஏபல் பரிசினைப் பெற்ற திரு. எஸ்.ஆர். ஸ்ரீனிவாச வரதன் அவர்கள்;

இந்தியாவின் உணவு தன்னிறைவுக்கு வித்திட்ட திரு. C. சுப்பிரமணியம் அவர்கள்;

எளிமையின் இருப்பிடம், எழுச்சியின் பிறப்பிடம் சிந்தனை சிற்பி திரு.சிங்காரவேலர் அவர்கள் உள்ளிட்ட ஏராளமான சாதனையாளர்களையும், பல சிறந்த ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ். அதிகாரிகளையும், தொழில் அதிபர்களையும் உருவாக்கிய பெருமை இந்த கல்லூரிக்கு உண்டு.

இக்கல்லூரியில் பயின்ற மாணவர்கள் சாதனையாளர்களாக உருவாக காரணமாக இருந்த பேராசிரியர் பெருமக்களில் ஒருவர்தான், தமிழ்நாட்டில் மூலைமுடுக்குகளுக்கு எல்லாம் அலைந்து திரிந்து சிதைந்து கிடந்த தமிழ் ஓலைச்சுவடிகளை

சேகரித்து, தமிழ் இலக்கியத்திற்கு புத்துயிர் ஊட்டிய ‘தமிழ்த்தாத்தா’ என்று எல்லோராலும் போற்றப்படும் திரு.உ.வே. சாமிநாதய்யர்.

இந்தக் கல்லூரி இன்னும் எத்தனையோ சாதனையாளர்களை உருவாக்க காத்திருக்கிறது. எனவேதான், இந்தக் கல்லூரி நிகழ்ச்சியில் கலந்து கொள்வதை நானும் பெருமையாக கருதுகிறேன்.

‘இந்தக் காட்டில் எந்த மூங்கில் புல்லாங்குழல்’ என்பது போல..... இங்கே எதிரில் அமர்ந்திருக்கின்ற உங்களில் பலர் தான் நாளைய அறிவியல் மேதைகளாகவும், அறிஞர் பெருமக்களாகவும், தலைவர்களாகவும் உயரப்போகிறீர்கள். அத்தகைய பெருமைமிக்க உங்களை இப்போது சந்திப்பதில் பெருமிதம் கொள்கின்றேன்.

ஒரு நாட்டின் எதிர்காலம் வகுப்பறையில் தான் உருவாக்கப்படுகிறது என்பார்கள். ஏட்டுக் கல்வி மட்டும் ஒருவருடைய எதிர்காலத்தை நிர்ணயித்து விடாது, அவருடைய சமுதாயக் கல்வி தான் அவரை முழுமனிதனாக உருவாக்குகிறது. நாம் அதிகமாக கற்கிறோம். ஆனால் குறைவாகத்தான் செயல்படுகின்றோம். இந்த நிலை மாற வேண்டும். இந்த கணிணி யுகத்தின் சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றலும், அறிவு கூர்மையும் கொண்ட கல்வியை தான் ஒவ்வொரு கல்வி நிறுவனமும் வழங்க வேண்டும். கல்வி என்பது தேர்வுக்காக மட்டும் இருக்கக் கூடாது, வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் அமைய வேண்டும். அத்தகைய வாழ்வியல் கல்வியை வழங்கியதால் தான் இக்கல்லூரி வரலாற்றில் சிறப்பான ஓர் இடத்தை பெற்றிருக்கிறது.

இந்தக் கல்லூரியின் வழியாக தோன்றிய சாதனையாளர்களை நினைவு கூர்ந்து பெருமைப்படுகிற இந்த தருணத்தில், அவர்களை வெற்றியாளர்களாக உருவாக்கிய பேராசிரியர் பெருமக்களையும் நாம் போற்றி வணங்க வேண்டும். விருட்சமாக விரிந்து பரந்து வளர்ந்திருக்கிற உயர்ந்த மரத்திற்கு வெளியில் தெரியாத வேர்களாக, தியாகத்தின் மறு உருவமாக திகழ்பவர்கள் ஆசிரியர்கள்.

அதனால்தான், வேறு எந்த பணியையும் அறப்பணி என்று நாம் சொல்வதில்லை. ஆசிரியப் பணியை மட்டும்தான் அறப்பணி என்கிறோம். இதைக் கொண்டே ஆசிரியப் பணியின் மகத்துவத்தை நாம் புரிந்து கொள்ளலாம்.

ஆசிரியப் பணியின் சிறப்பைக் குறித்து பேசும் போது எனக்கு ஒரு வரலாற்று நிகழ்வு ஞாபகத்திற்கு வருகிறது.

கிரேக்க மன்னன் பிலிப் தன்னுடைய குரு அரிஸ்டாட்டிலிடம், தனது மகன் அலெக்சாண்டரை கல்வி கற்க அனுப்பி வைத்தார். ஒருசமயம், அரிஸ்டாட்டில் அலெக்சாண்டரை மலையடிவாரத்திற்கு கூட்டிச் சென்றார். அப்போது திடீரென வெள்ளம் வந்தது. அரிஸ்டாட்டிலுக்குப் பின்னால் வந்த மாணவன் அலெக்சாண்டர், “குருவே.... வெள்ளம் அதிகமாய் வருகிறது, நான் முன்னே செல்கிறேன். நீங்கள் பின்னே வாருங்கள்’ என்றான். ‘எது மேடு, எது பள்ளம் என்று தெரியாத அளவிற்கு வெள்ளம் அதிகமாகி விட்டது. வெள்ளம் உன்னை இழுத்துப் போய்விடும், முன்னால் செல்ல வேண்டாம்” என்றார் அரிஸ்டாட்டில்.

“குருவே... அரிஸ்டாட்டிலாகிய நீங்கள் நினைத்தால் ஆயிரம் அலெக்சாண்டர்களை உருவாக்க முடியும். ஆனால் ஆயிரம் அலெக்சாண்டர்கள் சேர்ந்தாலும் ஒரு அரிஸ்டாட்டிலை உருவாக்க முடியாது. எனவே, நான் முதலில் செல்கிறேன்”, என்றான் அலெக்சாண்டர்.

இதிலிருந்து ஆசிரியப் பெருமக்களின் முக்கியவத்துவத்தை நாம் தெரிந்துக் கொள்ளலாம். ஒவ்வொரு ஆசிரியரும் அரிஸ்டாட்டிலை போன்று நாட்டிற்கு பெருமை சேர்க்கிற சாதனையாளர்களை உருவாக்க பணியாற்ற வேண்டும். அதேபோன்று, ஒவ்வொரு மாணவரும் அலெக்சாண்டர் போன்று ஆசிரியப் பெருமக்களிடம் பணிவுடன் மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை இந்த நிகழ்வின் மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம்.

இந்த இனிய நேரத்தில் பெற்றோர்களின் எதிர்பார்ப்பையும், உணர்வுகளையும் மாணவர்கள் நினைவு கூர்ந்து பார்க்க வேண்டும். ஆயிரம் கனவுகளோடு உங்களை கல்லூரிக்கு பெற்றோர்கள் அனுப்பி வைக்கிறார்கள். அவர்களுடைய எண்ணங்களை ஈடேற்றும் வகையில் மாணவர்கள் நடந்து கொள்ள வேண்டும். எந்த நிலையிலும் உங்களுக்கு கவனச் சிதறல் ஏற்படாத வகையில், கல்வியில் மட்டுமே கவனம் செலுத்தி, நீங்கள் வாழ்வில் முன்னேற வேண்டும். அதுதான் உங்கள் பெற்றோர்களுக்கு நீங்கள் காட்டும் நன்றிக் கடனாக நான் நினைக்கிறேன்.

இளைஞர்களாகிய உங்கள் வாழ்க்கையை ஒளிமயமாக்க ஒரு தூண்டுகோல் தேவை. வாழ்க்கையின் முதல்படியில் கால் பதிப்பதற்கு தூண்டுகோலாக இருப்பவர்கள் ஆசிரியர்கள் தான்.

ஆசிரியர் ஒருவர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். **500** ரூபாய் நோட்டை எடுத்து மாணவர்களிடம் காட்டி, “இந்தப் பணம் வேண்டும் என்பவர்கள் கையை உயர்த்தலாம்”, என்றார். எல்லோரும் கையை உயர்த்தினர். பிறகு அந்த ரூபாய் நோட்டைச் சுருட்டி, கசக்கி, அழுக்காக்கி அதை உயர்த்திப் பிடித்து “யாருக்கு இது வேண்டும் ?” என்று மீண்டும் கேட்டார். இப்போதும் எல்லோரும் கையை உயர்த்தினர்.

அப்போது அந்த ஆசிரியர் சிரித்தபடி, “முதல் முறை நான் காட்டிய புத்தம் புதிய நோட்டின் மதிப்பு ஐநூறு ரூபாய். நோட்டை சுருட்டிக் கசக்கினாலும், கீழே போட்டு அழுக்காக்கியபோதும், அதன் மதிப்பு சிறிதும் குறையவில்லை. இதுபோன்றே நமது வாழ்க்கையில் சோதனைகள், துன்பங்கள், இழப்புகள், தோல்விகள், அவமானங்கள் என்று எவ்வளவு கசப்பான அனுபவங்கள் ஏற்பட்டாலும், நமது உண்மையான மதிப்பு ஒருபோதும் குறைவதில்லை. இந்த உண்மையை உணர்ந்தால், அதுவே ஒரு பெரிய தூண்டுகோலாகி, எந்த நிலையில் இருந்தாலும், தளராமல் உழைத்து, தடைகளைத் தாண்டி நாம் முன்னேற உதவும்”, என்று கூறினார்.

பள்ளியில் மாணவர்களாக நுழையும் நீங்கள், கல்லூரியிலிருந்து மனிதர்களாக வெளியேறுகிறீர்கள். பள்ளிக்கல்வி உங்களுக்கு படிப்பை சொல்லித் தருகிறது. உயர்கல்விதான், நீங்கள் சிறப்புடன் வாழ்வதற்கு வழி அமைத்துக் கொடுக்கிறது.

நாட்டை வளப்படுத்துவதிலும், மக்களை மேம்படுத்துவதிலும், அறிவு சார்ந்த சமுதாயத்தை உருவாக்குவதிலும் உயர்கல்வி முக்கியப் பங்கு வகிக்கிறது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த உயர்கல்வியை தமிழகத்தில் உள்ள ஏழை, எளிய மாணவ, மாணவியரும் பெறும் வண்ணம், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையுடன் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தினார்கள்.

அவற்றில், ஒரு சிலவற்றை மட்டும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

❖ தமிழ்நாட்டில் உள்ள மாணவர்கள், குறிப்பாக கிராமப்புற மாணவர்கள், குறைந்த கட்டணத்தில் உயர் கல்வி பெற வேண்டும் என்ற நோக்கத்தில் 2011 முதல் மார்ச் 2017 வரை 4 அரசு பொறியியல் கல்லூரிகள், 44 அரசு மற்றும் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 16 அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள், தேசிய சட்டப் பள்ளி மற்றும் இந்திய தகவல் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனம் துவக்கப்பட்டது;

❖ தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பொறியியல் கல்லூரிகளிலும், ஒற்றைச் சாளர கலந்தாய்வு மூலம், முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு நேரடி சேர்க்கை பெற்ற மாணவ மாணவியர்களில், முதல் தலைமுறை பட்டதாரி மாணவ மாணவியர்களுக்கு, இரண்டாயிரத்து எழுநூற்று இருபத்து இரண்டு கோடி ரூபாய்க்கு கல்விக் கட்டணச் சலுகை வழங்கியது;

❖ அரசு கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை விகிதம் கணிசமாக உயர்வதை கருத்தில் கொண்டு, 2011 முதல் மார்ச் 2017 வரை புதிதாக 959 பாடப்பிரிவுகளைத் தொடங்கியது;

❖ அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு ஆறு இலட்சத்து மூன்றாயிரத்து முன்னூற்று அறுபத்து ஐந்து விலையில்லா மடிக்கணினிகளை வழங்கியது;

❖ 2011 முதல் மார்ச் 2017 வரை அரசுக் கல்லூரிகளில் படிக்கும் 8 இலட்சத்து 51 ஆயிரத்து 542 மாணவர்களுக்குக் கட்டணமில்லா பேருந்து அனுமதி அட்டை வழங்கியது;

❖ இந்தியாவிலேயே முதன்முதலாக, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், வெளிநாட்டில் ஒரு பருவம் பயிலும் 'அயல்நாட்டில் கல்வி கற்கும் திட்டத்தின்' கீழ் 74 மாணவ–மாணவியர்கள் மற்றும் 15 ஆசிரியர்கள் இங்கிலாந்திற்கு அனுப்பியது;

❖ பொருளாதாரத்தில் நலிந்த 177 ஏழை மாணவ மாணவியர்கள், இளநிலை பொறியியல் மற்றும் இளநிலை தொழில்நுட்பப் படிப்புகளை தொடர்வதற்கு, ஒரு மாணவருக்கு 25 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது;

❖ கட்டணமில்லாக் கல்வி முறை திட்டத்தின் மூலம் கடந்த ஐந்தாண்டுகளில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், இளநிலையில் பயிலும் 4 லட்சத்து 63 ஆயிரத்து 63 மாணவர்களும் அரசு கல்லூரிகளில் முதுநிலையில் பயிலும் 30 ஆயிரத்து 403 மாணவர்களும் பயனடைந்தது;

❖ உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் தொழில் நிறுவனங்களையும் மாணவர்களையும் இணைக்கும் பல்கலைக்கழகம் – தொழில் நிறுவனங்கள் கூட்டிணைவு மையங்கள் அமைக்கப்பட்டது;

❖ எளிதாக வேலைவாய்ப்பினை பெற்றிடும் வகையில், ஆளுமைத்திறன், பேச்சுத்திறன், குழுப்பணித்திறன் போன்ற மென்திறன்களை (soft skills) மாணவர்களுக்கு கற்பிக்க

62 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்கல்லூரிகளில் மென்திறன் மையங்களை உருவாக்கியது;

❖ அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பல்வேறு பாடப்பிரிவுகளில் முழுநேர ஆராய்ச்சிப் படிப்பினை மேற்கொள்ளும் மாணவருக்கு, ஆண்டுதோறும் 36 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கியது. இத்திட்டத்தின் கீழ் 514 மாணவ–மாணவியர்கள் பயன் பெற்றனர்.

❖ அகில இந்தியக் குடிமைப் பணித் தேர்வுகளை எழுதும் மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில் சென்னை இராணிமேரி கல்லூரி மற்றும் மதுரை அருள்மிகு மீனாட்சி அரசு மகளிர் கல்லூரி ஆகியவற்றில் கட்டணமில்லாப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது.

❖ அரசு கல்லூரிகளில் பயிலும் தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மெதுவாகக் கற்கும் மாணவர்களுக்கு ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களைப் நன்கு படிக்க சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் கடந்தாண்டு பத்தாயிரத்து ஐநூற்று தொண்ணூற்று எட்டு மாணவ மாணவிகள் பயன்பெற்றுள்ளனர்.

❖ இதுபோன்ற இன்னும் பல திட்டங்களை இங்கே குறிப்பிடலாம். நேரமில்லாத காரணத்தினால் ஒரு சிலவற்றையே நான் குறிப்பிட்டுள்ளேன். அம்மாவினுடைய ஆட்சியில் தான் இவ்வளவு திட்டங்களும் நிறைவேற்றப்பட்டன.

இதனால்தான் இந்தியாவில் உயர்கல்விக்கான மொத்த சேர்க்கை விகிதம் 24.50 என்கிற அளவில் இருக்கும்போது தமிழ்நாட்டின் மொத்த சேர்க்கை விகிதம் 44.30 ஆக உயர்ந்திருக்கிறது. ஆகவே, இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்வியிலே ஒரு புரட்சி, மறுமலர்ச்சி, மாணவர்களுக்கு

செய்திட்ட நலத்திட்ட உதவிகள் வாயிலாக இன்றைக்கு உயர்கல்வி படிக்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை தமிழகத்தில் தான் உயர்ந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தன்னிகரற்ற கல்வித் திட்டங்களால் உயர்கல்வித் துறையில் மாபெரும் சாதனைகள் நிகழ்ந்துள்ளன. அதன் காரணமாக தான், இக்கால இளைஞர்கள் முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு உயர்கல்வியில் பல சாதனைகள் படைத்து வருவதோடு இன்று உலகம் முழுவதும் பரவி வளமாகவும், நலமாகவும் வாழ்ந்து வருகிறார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2015ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி, 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் மூலம் 2 இலட்சத்து 42 ஆயிரத்து 160 கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், இந்த ஆண்டு இறுதியில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு மீண்டும் நடத்தப்படவுள்ளது. இதனால் அதிக அளவில் தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டு, படித்த பட்டம் பெற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கி தரப்படும்.

வரலாற்று சிறப்பு மிக்க மாநிலக் கல்லூரி, 175 ஆண்டு நிறைவு செய்ததை நினைவுபடுத்தும் வகையில், ரூ.40 இலட்சம் செலவில் ஒரு நினைவு வளைவு அமைக்க, அடிக்கல் நாட்டுவதில் நான் மிக்க பெருமை கொள்கிறேன்.

மேலும், இக்கல்லூரியின் விக்டோரியா விடுதி 117 வருடம் வரலாற்று சிறப்பு மிக்கது ஆகும். இவ்விழாவிற்கு என்னை அழைத்தபோது, இக்கல்லூரி முதல்வர் மற்றும் பேராசிரியர்கள், கூடுதலாக ஒரு புதிய விடுதிக் கட்டடம் வேண்டும் என கோரிக்கை வைத்தனர். மாணவர்களின் தேவையைக் கருத்தில் கொண்டு, உடனடியாக விடுதிக்கு கூடுதலாக ஒரு புதிய கட்டடம் கட்டுவதற்கு

ரூபாய் 10 கோடி ஒதுக்கீடு செய்து நான் உத்தரவிட்டுள்ளேன். இப்பணிகள் இந்த ஆண்டிலேயே துவங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு, உங்களுடைய கல்லூரி முதல்வரும் ஒரு சிலவற்றை குறிப்பிட்டு அதை நிறைவேற்றி தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதுவும் அரசினுடைய பரிசீலனையில் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

“ஒரு மாநிலம், நிறைந்த பொருளாதார வளர்ச்சி அடைய வேண்டும் என்றால், அங்கு மனித வள மேம்பாட்டிற்கு, குறிப்பாக, அறிவுசார் மனித வள மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். அறிவுசார் மனித வள மேம்பாட்டில் முக்கிய அங்கம் வகிப்பது கல்வி அறிவு தான்” என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அத்தகைய சிறப்பு மிக்க கல்வி வளர்ச்சியை தமிழகம் அடைந்திட பேராசிரியப் பெருமக்களும், மாணவச் செல்வங்களும் இந்த அரசுக்கு முழுமையான ஒத்துழைப்பை நல்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே, இங்கே படிக்கின்ற மாணவர்கள் கொடுத்து வைத்தவர்கள். ஏனென்றால் இது வரலாற்று சிறப்புமிக்க கல்லூரி. இந்த மாநிலக் கல்லூரியில் படிப்பதே ஒரு பெருமை. நானும் மேடையிலே வீற்றிருக்கக்கூடிய மரியாதைக்குரிய நிதி மற்றும் மீன்வளத் துறை அமைச்சர், உயர்கல்வித் துறை அமைச்சர்கள் எல்லாம் படிக்கின்ற காலத்திலே இப்படிப்பட்ட வசதிகள் கிடையாது. கிட்டத்தட்ட 38 ஆண்டுகளுக்கு முன்பு நான் ஈரோட்டிலே ஸ்ரீ வாசவி கல்லூரியில் படித்தேன். அப்போது எல்லாம் எங்களுக்கு போக்குவரத்து வசதியே கிடையாது. அந்தக் காலக்கட்டத்திலே தான் நாங்கள் எல்லாம் பயின்றோம். ஆகவே இன்றைக்கு இந்த நிலைக்கு உயர்ந்திருக்கிறோம் என்று சொன்னால், உழைப்பு, உழைப்பு, உழைப்பு. எங்கு உழைப்பு இருக்கின்றதோ, அங்கு உயர்வு நிச்சயம் கிட்டும். நாங்கள் எல்லாம் கிராமத்திலே பிறந்தவர்கள். மரியாதைக்குரிய அண்ணன் ஜெயக்குமார் அவர்கள், எளிமையான

குடும்பத்திலே பிறந்தவர். மரியாதைக்குரிய உயர்கல்வித் துறை அமைச்சர் கிராமத்திலே பிறந்தார். ஆகவே நாங்கள் எல்லாம் இந்த அளவிற்கு உயர்ந்ததற்கு காரணம், நாங்கள் எங்களுடைய ஆசிரியப் பெருமக்கள் காட்டிய வழிகாட்டுதலின்படி நடந்த காரணத்தினாலே இவ்வளவு உயர்விற்கு இன்றைக்கு உயர்ந்திருக்கிறோம். ஏதோ ஒரு கிராமத்திலே பிறந்தவர்கள் முதலமைச்சராக வரவேண்டும் என்றால் நீங்கள் எண்ணிப் பாருங்கள். ஆக, இன்றைக்கு இந்த சமுதாயத்திலே சாதாரண கிராமத்திலே பிறந்து வளர்ந்து கடினமான உழைப்பின் காரணமாக நாங்கள் உயர்ந்திருக்கிறோம். அதைப்போல இங்கே இருக்கின்ற மாணவச் செல்வங்கள் சிறந்த முறையிலே படித்து நீங்கள் எதிர்காலத்திலே உங்கள் வாழ்க்கையை வளமாக ஆக்கிக் கொள்ளுங்கள். நாட்டிற்கும் உங்கள் வீட்டிற்கும் நன்மை பயக்கும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

175ஆவது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடும் இந்த மாநிலக் கல்லூரியானது, மேலும் பல நூற்றாண்டுகள் கல்விப் பணியாற்றி சாதனையாளர்களை உருவாக்கி, தமிழ்நாட்டிற்கு தொடர்ந்து பெருமை சேர்க்க வேண்டும் என்று வாழ்த்தி, இந்த விழாவில் பரிசு பெற்ற மாணவ மாணவிகளுக்கு என் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இந்த சிறப்பான விழாவினை ஏற்பாடு செய்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
18.04.2017 அன்று சென்னை மாநிலக் கல்லூரியின்
175ஆவது ஆண்டு நிறைவு விழா, கல்லூரி ஆண்டு
விழா மற்றும் விளையாட்டு விழாவில் ஆற்றிய உரை.

நீத்தி ஆயோகின் செயல்பாடானது நீடித்த வளர்ச்சி இலக்குகளை நிலைநாட்ட ஐக்கிய நாடுகளின் முயற்சியுடன் ஒத்து இருக்க வேண்டும்!

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களே,

மாண்புமிகு மத்திய அமைச்சர்களே,

மாண்புமிகு முதலமைச்சர்களே மற்றும் துணைநிலை ஆளுநர்களே,

நீத்தி ஆயோகின் துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களே,

மூத்த அதிகாரிகளே,

வணக்கம்.

தமிழக மக்களின் நெஞ்சங்களில் என்றும் நிறைந்திருக்கும் மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா

அவர்கள் காட்டிய நல்வழியைப் பின்பற்றி, வளர்ச்சிப் பாதையில் பீடு நடை போட்டுக் கொண்டிருக்கும் தமிழ்நாடு அரசின் சார்பில், நீத்தி ஆயோகின் மூன்றாம் ஆளுமை குழுக் கூட்டத்தில் (Governing Council) உரையாற்றுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

2. நீத்தி ஆயோகின் ஆளுமை கூட்டமானது, கடந்த ஈராண்டுப் பணிகளை ஆய்வு செய்வதற்காக நடத்தப்பெற்றாலும், இக்கூட்டம் ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு மாற்றாகத் திகழப்போகும் மாற்றுத்திட்டத்தின் 'நோக்கம், உத்தி மற்றும் செயல் ஆவணங்களின் வரையறைகள் குறித்து விவாதிப்பது தான் முக்கிய நோக்கமாகும். நீத்தி ஆயோகால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் தயாரிக்கப்பட்ட அறிக்கைகள், இக்குழுவின் நோக்கம், உத்தி மற்றும் செயல் ஆவணங்களின் வரைவுகளைத் தயாரிப்பதில் துணைபுரியும் என்பதில் ஐயமில்லை.

3. திட்டமிடப்பட்ட செலவினத்திற்கும் திட்டம் சாராச் செலவினத்திற்கும் இடையேயிருக்கும் செயற்கையான வேறுபாட்டைக் களைவதற்காகக் குரல் கொடுத்த மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று என்பதால், ஐந்தாண்டுத் திட்டங்களை நீக்கியதற்கு தமிழக அரசு ஆதரவு தெரிவிக்கின்றது. இருப்பினும், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு தடை ஏற்படுத்தும் முக்கிய விவகாரங்களைக் கருத்தில் கொண்டு, அவற்றை எதிர்கொள்ளவும் அவற்றுக்குத் தீர்வு காணும் வழிகளைக் கண்டறியவும், மத்திய மற்றும் மாநில அரசுகளின் ஒருமித்த இசைவோடு குறிப்பிட்ட காலக்கட்டத்திற்குள் எய்தவேண்டிய நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் குறித்து, தெளிவான திட்ட வரையறை ஒன்றைத் தயாரிப்பதற்கான ஒரு வலுவான காரணம் இருப்பதை நீத்தி ஆயோக் உருவாக்கப்பட்டபோதே நாங்கள் வலியுறுத்தினோம். இதற்கு நீண்டகால உத்தி சார்ந்த பார்வை மற்றும் நடுத்தர காலப் பார்வை ஆகிய இரண்டும் தேவைப்படுகின்றன.

4. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011ஆம் ஆண்டு

மே மாதத்தில் பதவியேற்ற பின்னர், 'தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023' குறித்த அறிக்கையின் வரைவைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் உடனடியாகத் தொடங்கப்பட்டு, 24.03.2012 அன்று அத்திட்ட அறிக்கை வெளியிடப்பட்டது. இவ்வறிக்கை, "முன்னோக்குத் திட்டம்" (Perspective Plan) தயாரிப்பதற்கு சிறந்த மாதிரியாக விளங்குகிறது.

5. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023இன் இலக்குகள் மற்றும் கருப்பொருள்கள், வளமான வேலைவாய்ப்பினை உருவாக்குவதன் வாயிலாக வருமானத்தைப் பெருமளவில் அதிகரித்தல், உயர்ந்த தரத்திலான உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளுக்கு வகைசெய்வதன் வாயிலாக வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், மாநிலம் முன்மாதிரியான அனுகூலத்தைப் பெற்றுள்ள துறைகளின் வளர்ச்சியில் கவனம் செலுத்துதல், இவையனைத்திற்கும் மேலாக, அமைதி, வளமை மற்றும் நலிந்தோரின் பாதுகாப்பு ஆகியவற்றை அதிகரித்தல் உட்பட, மக்களின் வாழ்வில் நேரடியாகத் முன்னேற்றம் ஏற்படுத்துகிற வகையில் மிகவும் கவனத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

6. தமிழக மக்களின் நியாயமான விருப்பங்கள் முறையாக உரியவாறு அங்கீகரிக்கபட்டுள்ளனவா என்பதை உறுதி செய்வதற்கும், அவற்றை நிறைவேற்றுவதற்கும் நீண்டகால இலக்குகள் திட்டமிடப்பட்டுள்ளன. வளர்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவை அனைவருக்கும் பயன்படுகின்ற முறையில் எய்தப்பட வேண்டும்.

7. தமிழ்நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் உலகத் தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு வகை செய்வதே, தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023இன் முக்கிய நோக்கமாகும். இரண்டு முக்கிய காரணங்களின் அடிப்படையில், உட்கட்டமைப்பின் மீதான முக்கியத்துவம் இங்கு அவசியமாகியுள்ளது. உட்கட்டமைப்பு மேம்பாடானது அதிக அளவிலான முதலீட்டை ஈர்த்து, அதிக அளவிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கி, அதன்

வாயிலாக பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கச் செய்வது. மேலும், மிக முக்கியமாக, அனைத்துத் துறைகளிலும் பொருளாதாரம் மற்றும் சமுதாய வளர்ச்சிக்கு ஊக்கம் அளிப்பதன் வாயிலாக உட்கட்டமைப்பு மேம்பாடுகள் பொருளாதாரத்தில் மிகப்பெரிய அளவிலான ஆதாயமிக்க வெளிச்சூழல்களை உருவாக்குகிறது.

8. அத்தகைய குறிக்கோள் சார்ந்த வளர்ச்சி விகிதங்களை எய்துவதற்கு புதிய முறைகள் ஒரு திறவுகோலாக அமையும் என்பதையும் கவனத்தில் கொண்டு, நாட்டின் "அறிவுசார் தலைநகரமாக" மற்றும் "புத்தாக்க" மையமாக தமிழ்நாட்டை மென்மேலும் உருவாக்குவதற்கு, இத்தொலைநோக்குத் திட்டம் வகை செய்கிறது. புதுமைகளுக்கும் அறிவூட்டங்களுக்கும் வகைசெய்கிற உரிய சுற்றுச்சூழலை உருவாக்குவதும் அதனை ஊக்குவிப்பதும் இதற்கு அவசியமாகிறது.

9. "இந்திய தொலைநோக்குத் திட்டம் 2030"–க்கான ஆவணத்தைத் தயாரிக்கும்போது, தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டத்தின் I மற்றும் IIஆம் பகுதிகளையும் ஆய்வு செய்யுமாறு நித்தி ஆயோக் (NITI Aayog)–கிற்கு நான் பரிந்துரை செய்கிறேன். இத்தொலைநோக்குத் திட்டத்தை உத்தியுடன் இணைப்பதற்காக எடுத்துரைக்கப்பட்ட அடிப்படைக் கருத்துக்கள் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் தேசிய அளவில் எளிதாக எதிரொலிக்கக் கூடியது.

10. இந்தியாவிற்கான எங்கள் தொலைநோக்குப் பார்வையானது, தமிழ்நாடு தொலைநோக்குப் பார்வைக்கு ஒத்ததாகவே உள்ளது. 2030ஆம் ஆண்டுக்குள், வறுமை மற்றும் இல்லாமையை ஒழித்து, உலகின் மிகப்பெரிய பொருளாதார நாடாக இந்தியாவைக் காண நாங்கள் விழைகிறோம். நம் நாடு, வளர்ச்சி மற்றும் பொருளாதார வெற்றியின் பலன்கள் அனைத்துப் பகுதிகளுக்கும், அனைத்து சமூக–பொருளாதார பிரிவினருக்கும் கிடைக்கும் வண்ணம், உயர் நடுத்தர பொருளாதார நிலையை (Uppere middle income) அடைய வேண்டும். 2030 இல், தனி நபர் வருமானம் ரூபாய். 10,00,000 (USD

15,000) (இன்றைய விலையில்) என்கிற அளவினை எய்துவதற்கு நாம் முயல வேண்டும். இந்த இலக்கினை அடைவதற்காக, நமது வளர்ச்சி வீதத்தை இரட்டை இலக்கத்தில் உயர்த்தி, அடுத்த 15 ஆண்டுகளுக்கு இந்த வளர்ச்சிப் பாதையை நீடித்து தக்க வைத்துக் கொள்ளவேண்டும். நாம், இந்த இலக்கை நிச்சயமாக எய்த முடியும் என்று நம்புகிறேன்.

11. அறிவார்ந்த மற்றும் திறமையான மனித வளங்களைக் கொண்ட உலக மையமாக இந்தியா திகழ வேண்டும் என்பதையும், புதிய முயற்சிகள் மற்றும் நிறுவனத்திற்கான ஊற்றாக உலக அளவில் மீண்டும் புத்துயிர் பெறவேண்டும் என்பதையும் நான் எதிர்பார்க்கிறேன். பாதுகாப்பை உறுதி செய்வதுடன் தனது குடிமக்களின் நலனுக்காகவும் ஒட்டுமொத்த மனித குலத்திற்கான புவியியல்—அரசியல் மற்றும் பொருளாதார பேச்சுவார்த்தைகளை நெறிப்படுத்தி உலக அரங்கில் முதன்மை நாடாக இந்தியா வளர்ந்து வருவதை நான் காண்கிறேன்.

12. இந்த குறிக்கோள் சார்ந்த தொலைநோக்குத் திட்டத்தினை நான் முன்மொழியும் பொழுது, நாம் சந்திக்கவுள்ள சவால்களையும் நான் அறிவேன். இருப்பினும், இது தொடர்புடைய அனைத்துப் பொறுப்பாளர்களையும் ஒருங்கிணைத்து ஈடுபடுத்துவதன் வாயிலாக இதனை சாதிக்க இயலும் என்று நான் நம்புகிறேன். மாநிலங்கள் தங்களுக்காக பட்டியலிட்டிருக்கும் வளர்ச்சி உத்திகளை செயல்படுத்துவதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்துவதில் இந்திய அரசு, மாநில அரசுகளுடன் நெருக்கமாக பணியாற்ற வேண்டும். இந்திய அரசு “அனைவருக்கும் ஒரே அளவு” (one size fits all) மாதிரியை தொடர்ந்து பின்பற்றாமல் மாநிலங்கள், அவற்றின் அதிகார வரம்பிற்குக் கீழுள்ள முன்னுரிமைகளுக்கேற்பத் திட்டமிடவும், நிருவகிக்கவும் அவற்றை அனுமதிக்க வேண்டும். இந்தத் தொலைநோக்கம், உத்தி மற்றும் செயல் திட்ட ஆவணங்கள், அவற்றின் பெரிய நடுத்தர அளவிலான திட்டங்களை மேம்படுத்துவதற்குப் போதிய வழிவகைகளை செய்ய வேண்டும். “தமிழ்நாடு தொலை நோக்குத் திட்டம் 2023” யே பின்பற்ற தமிழ்நாடு விழைகிறது.

13. இந்த உத்திமுறை சார்ந்த ஆவணத்தில், முயற்சி மேற்கொள்வதற்காக, கொள்கை ஒருங்கிணைப்பு எவ்வாறு எய்தப்பட வேண்டும், வள ஆதாரங்கள் எவ்வாறு திரட்டப்பட வேண்டும் மற்றும் நீண்டகால இலக்குகளை எய்துவதற்காக உருவாக்கப்பட்ட அமைப்புகள் எவ்வாறு செயல்படுத்தப்படவேண்டும் என்பவை குறித்து வலியுறுத்தப்பட வேண்டும். எனவே திட்டங்கள், முதலீட்டில் மட்டுமே கவனம் செலுத்தாமல், துறை சார்ந்த இலக்குகளை அடைவதில், தனியார் துறை பங்கேற்பாளர்கள், பொருளாதார வளர்ச்சியில் அவர்களின் பங்களிப்பை வழங்குவதற்கான கொள்கை நடவடிக்கைகளிலும் கவனம் செலுத்த வேண்டும்.

14. நித்தி ஆயோகின் இந்த செயல்பாடானது, 'நீடித்த வளர்ச்சி இலக்குகளை' (Sustainable Development Goals) நிலைநாட்டுவதற்கு ஐக்கிய நாடுகளின் (United Nations) முயற்சிகளுடன் ஒத்து இருக்க வேண்டும். இதனை, **2015**ஆம் ஆண்டிற்குள் எய்துவதற்காக அமைக்கப்பட்ட ஆயிரம் ஆண்டு வளர்ச்சி இலக்குகளுக்கு (Millenium Development Goals) பதிலாக, **2030**ஆம் ஆண்டிற்குள் எய்த வேண்டும். ஆயிரம் ஆண்டு வளர்ச்சி இலக்குகளின் கீழ் இந்தியாவின் செயல்பாட்டில், குறிப்பாக தமிழ்நாட்டின் செயல்பாடு மிகுந்த பாராட்டுக்குரியது. எனவே, தொலைநோக்குத் திட்டத்திற்கான வளர்ச்சியைக் கண்டறிந்து, அளவிடுவதற்கான கட்டமைப்பின் அடிப்படையிலான நீடித்த வளர்ச்சி இலக்குகளைப் பின்பற்றுவதை நான் வரவேற்கிறேன்.

15. தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் முயற்சிகளுக்கேற்ப கட்டமைப்பு அடிப்படையிலான நீடித்த வளர்ச்சி இலக்குகளின் கீழ் **17** இலக்குகள் மற்றும் **169** குறிக்கோள்களை செயல்படுத்துவதற்கான நடைமுறைகளை, தமிழ்நாடு அரசு ஏற்கனவே துவக்கியுள்ளது. இந்தக் கட்டமைப்பு மூலம் பரிந்துரைக்கப்பட்ட இலக்குகளில் பலவும் தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் **2023**இல் குறிப்பிடப்பட்டு ஏற்கனவே முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். ஐக்கிய

நாடுகளால் குறிப்பிடப்பட்ட காலவரையறைக்கு முன்பாகவே, மாநிலத்திற்கான இத்தகைய இலக்குகளை அடைவதற்கு என்னுடைய தலைமையிலான அரசானது உறுதி பூண்டுள்ளது. நீடித்த வளர்ச்சிகளின் இலக்குகளை அடைவதில் கண்டறியப்பட்ட இடைவெளிகளை நிரப்புவதற்கு தேவைப்படும் திட்டங்களுக்கு நித்தி ஆயோக் மற்றும் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என நான் உறுதியாக வலியுறுத்துகிறேன்.

16. குறிப்பிடப்பட்ட காலவரையறைக்குள், நாடு முழுவதற்குமான தற்போதைய நீடித்த வளர்ச்சி இலக்குகள் தொடர்பான தரவுகளை (Data) சேகரிப்பதற்கும், தொகுப்பதற்கும், ஆய்வு செய்வதற்கும், ஒருங்கிணைந்த தரவு மேலாண்மை ஏற்பாட்டு முறை ஒன்றை, நித்தி ஆயோக் மற்றும் மத்திய அரசு அமைக்க வேண்டும். இந்த நோக்கத்திற்காக, திட்டவட்டமான குறியீடுகள் கூடிய விரைவில் உருவாக்கப்பட்டு, மாநிலங்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

17. இந்திய தொலைநோக்குத் திட்டம் தயாரிக்கப்படும் போது துறைவாரியாகச் செயல் திட்டங்கள் வகுக்கக்ப்பட வேண்டும் என நித்தி ஆயோக் அமைப்பை நான் வலியுறுத்துகிறேன். பெரிய அளவிலான பணியாக இது இருப்பதால், தொடக்கத்தில் கல்வி, சுகாதாரம், வேளாண்மை, உட்கட்டமைப்பு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகிய சில முக்கிய துறைகளில் கவனம் செலுத்தப்படவேண்டும்.

18. தொலைநோக்குத் திட்டம், உத்தி, செயல்திட்ட ஆவணங்கள் ஆகியவற்றைத் தயாரித்தல் குறித்து நித்தி ஆயோக், மாநிலங்களுடன் விரிவான கலந்தாலோசனையில் ஈடுபட்டுள்ளது என நிகழ்ச்சி நிரல் தெரிவிக்கிறது. தொலைநோக்குத் திட்டத்தை செயல்படுத்துவதில் ஒட்டுமொத்த அணுகுமுறை குறித்த கருத்துகளை தமிழ்நாடு அரசு அளித்துள்ளபோது, சில துறைகளுக்கு மட்டுமே துறைவாரியான ஆலோசனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

19. வருங்காலங்களில் உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக இந்தியா உருவாக இருப்பதால், அதற்குத் தேவைப்படும் உணவை வேறு எந்தவொரு நாடும் உற்பத்தி செய்ய இயலாததால், இந்திய வேளாண் துறை தொடர்ந்து முக்கியத்துவம் பெருகிறது. உழவர்களின் வருமானத்தை மேம்படுத்துவதே நாட்டின் முக்கியமான பொருளாதார உத்தியாக இருக்க வேண்டும்.

உழவர்களுக்கு மறுபயிற்சி அளித்தல், நவீன வேளாண் தொழில்நுட்பப் பயன்பாட்டினை ஊக்குவித்தல், பலதரப்பட்ட வேளாண் நடைமுறைக்கு ஆதரவளித்தல் மற்றும் பாசன உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் போன்றவை இத்தகைய சவால்களை எதிர்கொள்வதற்கு உதவக்கூடிய சில நடவடிக்கைகளாகும்.

20. இந்தக் கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலானது, வேளாண் துறையில் இரு குறிப்பிட்ட திட்டங்களுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கிறது. அவையாவன, வேளாண் வளர்ச்சி குறித்த சிறப்பு பணிக் குழுவின் அறிக்கை மற்றும் 'உழவர் வருமானத்தை இரட்டிப்பாக்குதல்' குறித்த அறிக்கை. கடந்த பல ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு தமிழ்நாடு கடும் வறட்சியினால் பாதிக்கப்பட்டு உள்ளது. 2016 ஆம் ஆண்டு, வடகிழக்கு பருவ காலத்தின் மழைப்பொழிவு 62 சகவீதம் குறைந்தது. இதன் காரணமாக, தமிழ்நாடு வரலாறு காணாத கடும் வறட்சியை எதிர் நோக்குகின்றது. இதனால், இம்மாநில உழவர்கள் வேதனையில் உள்ளனர். உழவர்களின் பிரதிநிதிகள் புது தில்லியில் கூட அவர்களுடைய குறைகளுக்காக குரல் கொடுத்து வருகின்றனர். நியாயமான குறைகளுக்கு, இந்திய அரசு செவி சாய்க்க வேண்டியது அவசியமானது.

21. தமிழ்நாடு, பாசனம் மற்றும் குடிநீர் வழங்கலுக்கான நீர்த்தேவையை நிறைவு செய்வதற்கு, மாநிலங்களுக்கிடையேயான ஆறுகளை, குறிப்பாக, காவேரி ஆற்றை சார்ந்துள்ளது. காவேரி நீர் விவகாரங்கள் தீர்ப்பாயத்தின் இறுதி ஆணையைச் செயல்படுத்துவதற்காக காவேரி மேலாண்மை வாரியம் மற்றும்

காவேரி நீரை முறைப்படுத்தும் குழுவினை உடனடியாக அமைப்பதற்கான கோரிக்கையை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

22. நம் நாட்டிலுள்ள நீர் வளங்களை சரியான மற்றும் சமமான முறையில் பகிர்ந்து கொள்வதை உறுதி செய்வதற்கான நீண்ட காலத் தீர்வு என்பது ஆறுகளை ஒன்றிணைப்பதேயாகும். தீபகற்ப ஆறுகள் மேம்பாட்டு ஆக்கக்கூறுகளின் கீழ், நம் மதிப்பிற்குரிய தலைவி, மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணாறு, பாலாறு, காவிரி, வைகை மற்றும் குண்டாறு ஆகிய ஆறுகளை ஒருங்கிணைப்பதற்கு இந்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்கள். மேலும், மேற்கு நோக்கி பாயக்கூடிய பம்பை மற்றும் அச்சன்கோவில் ஆறுகளின் உபரி நீரை வைப்பாறுக்கு திருப்பி விடுவதற்கும் வலியுறுத்தி வந்தார்கள். 27.02.2012 ஆம் நாளிட்ட உச்ச நீதிமன்ற ஆணையின் அடிப்படையில், எங்களின் தொடர்ச்சியான வேண்டுகோள் என்னவென்றால், ஆறுகளை ஒருங்கிணைப்பதற்காக இந்திய அரசால் அமைக்கப்பட்ட சிறப்புக் குழு, இன்னும் சிறந்த முறையில் முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்பதேயாகும். மாநிலங்களுக்கிடையேயான அனைத்து ஆறுகளும் தேசியமயமாக்கப்பட வேண்டும் என்ற எங்களுடைய மதிப்பிற்குரிய தலைவி மறைந்த புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நியாயமான மற்றும் முறையான கோரிக்கையை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். இதன் மூலம், நாட்டின் நீர் வள ஆதாரங்கள் உரிய முறையில் பயன்படுத்தப்படும்.

23. பயிர் சாகுபடி, தோட்டக்கலை, கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளம் உள்ளிட்ட துணை செயல்பாடுகளிலிருந்தும் வருமானங்களை அதிகரிக்கின்ற கூட்டு நடவடிக்கைகள் வாயிலாக உழவர்களின் வருமானங்களை இரு மடங்காக அதிகரிக்கும் இலக்கினை எய்த முடியும். இந்திய அரசினால் வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த துறைகளுக்கு, குறிப்பாக, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்திற்கான நிதி ஒதுக்கீடு கணிசமாகக்

குறைந்துள்ளது. தமிழ்நாடு அரசு, பண்ணை வருவாய்களை பெருக்குவதற்கு விலையில்லா கறவை மாடுகள், வெள்ளாடுகள் மற்றும் ஆடுகள் வழங்குவதன் வாயிலாக கால்நடைப் பராமரிப்பினை மேம்படுத்த எண்ணற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கால்நடைப் பராமரிப்பு உட்கட்டமைப்பினை மேம்படுத்த கடந்த 6 ஆண்டுகளாக சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. தரிசு நில உழவர்களின் வருவாயை நிலைப்படுத்த தரிசு நில வேளாண் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. தோட்டக்கலைப் பயிர்களுக்கு உதவுவதன் மூலம் பலவகை பயிர்கள் ஊக்குவிக்கப்படுகிறது. உழவு உற்பத்தியாளர்கள் அமைப்புகளுக்கு அடிப்படையாக உள்ள சுழற்சி வழங்கல் மேலாண்மை சந்தை ஒருங்கிணைப்பு மற்றும் உழவு உற்பத்தியாளர்கள் குழுக்களுக்கு ஆதரவு ஆகிவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசு வேளாண்–செய்முறைத் தொகுப்புகள் மற்றும் தொழில் பிரிவுகள் மேம்படுத்துவதற்கான திட்டத்தினை மீண்டும் செயல்படுத்த வேண்டும். இத்தகைய நடவடிக்கைகள் உழவர்களின் வருவாயை அதிகரிப்பதுடன் பண்ணைச் செயல்பாடுகளை நீண்டகாலத்திற்கு நிலைத்திட செய்யும்.

24. இந்த வறட்சி ஆண்டில், உழவர்களின் நடப்பு வருவாய் அளவாவது பாதுகாக்கப்படுகிறது என்பதை உறுதி செய்வதற்கேனும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும், இதற்கு வேளாண் காப்பீடு உதவியாக இருக்க வேண்டும். பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டத்தை மேம்படுத்துவதற்காக ரபி பருவத்தில், 15 இலட்சம் விவசாயிகள் 30 இலட்சம் ஏக்கர் பரப்பளவின் பயிர்களை பதிவு செய்துள்ளனர். 2017ஆம் ஆண்டின் நடவுப்பணிகளை அவர்கள் மேற்கொள்ளும் பொருட்டு ஏற்கனவே பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு காப்பீட்டு தொகையை விரைவாக வழங்க மாநில அரசு அனைத்து பொறுப்பாளர்களுடன் ஒருங்கிணைந்து செயலாற்றி வருகிறது. பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் உழவர்களிடையே நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில், வழிகாட்டிக் குறிப்புகளின்படி பயிர் அறுவடைப் பரிசோதனைகளினடிப்படையில்,

விளைச்சல் குறித்த தரவு பெறப்பட்ட 3 வார காலங்களுக்குள், 2016–2017ஆம் ஆண்டிற்கான காப்புறுதிக் கோரிக்கைகள், காப்புறுதி நிறுவனங்களால் தீர்வு காணப்பட வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். தேவையான தகவல் அளிக்கப்பட்டுள்ளதால் 2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முடிவடைவதற்கு முன்னர் தமிழ்நாட்டிலுள்ள உழவர்களுக்கு 2016–2017ஆம் ஆண்டிற்கான சம்பா பருவகாலத்திற்கான காப்புறுதி இழப்பீட்டுத் தொகையை வழங்கிட காப்பீட்டு நிறுவனங்களுக்கு உடனடியாக உத்தரவிட வேண்டும்.

25. தற்போது தமிழ்நாட்டில் பாக் நீரிணைப்பு நெடுகிலும் உள்ள மீனவர்கள் அதிக பாதிப்பிற்கு உள்ளாகிறார்கள். கடலை நம்பி வாழ்கிற இவர்களுடைய வாழ்வாதாரம் இலங்கை கடற்படையினரின் தீவிரமான நடவடிக்கைகளினால் மீண்டும் மீண்டும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி உள்ளது. பாக் நீரிணைப்பிலுள்ள இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், அவர்களுடைய பாதுகாப்பு உறுதி செய்யப்படவேண்டும் என்றும் நான் வலியுறுத்துகிறேன். கைப்பற்றப்பட்ட மீன்பிடி படகுகளை நீண்டகாலமாக விடுவிக்காமலிருப்பது மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கச் செய்து, அவர்களுடைய மிகவும் முக்கியமான உடைமையை மீட்க இயலாத நிலையை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை அரசால் பிடித்து வைக்கப்பட்டுள்ள 133 படகுகளை சீரமைக்கப்பட்ட நிலையில் உடனடியாக விடுவிக்குமாறு மத்திய அரசிடம் நான் ஆணித்தரமாக வலியுறுத்துகிறேன். இந்த நீண்டகால பிரச்சினைக்குரிய நிரந்தரத் தீர்வு கட்சத்தீவை மீட்பது தான். மீன்வளத்தை பல்திறப்படுத்துவதற்கான (Diversification) விரிவான தொகுப்புதவித் திட்டத்திற்கு விரைவில் அனுமதி அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் நான் வலியுறுத்துகிறேன். பாக் நீரிணைப்பில் உள்ள அசாதாரண சூழ்நிலையை எளிதாக்குவதற்கான வழி சாதாரண மீன்பிடி இழுவை படகுகளை ஆழ்கடல் டூனா மீன்பிடி நீராவிக் கப்பல்களாக மாற்றுவது ஆகும்.

26. அதிக எண்ணிக்கையில் வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதற்கு உற்பத்தித் துறையின் பங்கினை அதிகரிப்பது என்பது காலத்தால் உறுதிசெய்யப்பட்ட ஓர் உத்தியாகும். பல்வேறு உற்பத்திப் பொருட்களுக்கு ஒருங்கிணைந்த உலகளாவிய மற்றும் வட்டார மதிப்பினை உருவாக்குவதற்காக வணிகர்களுடன் மத்திய அரசு நெருக்கமாக ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும். அதன் மூலம் இந்தியாவை உற்பத்தித் துறையில், உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சந்தைகளாக உருவாக்க இயலும்.

27. உட்கட்டமைப்பு உருவாக்கம் மற்றும் அவற்றின் நீடிப்புத்தன்மை, பொருளாதார முன்னேற்றத்திற்கு மிகவும் இன்றியமையாததாகும். இரயில்வே, சாலைகள், விமானநிலையங்கள், துறைமுகங்கள், நீர்வழிகள் மற்றும் மின்சக்தி போன்ற பன்னாட்டு உட்கட்டமைப்பு திட்டங்களில் முதலீட்டிற்கு மத்திய அரசு மிகுந்த முக்கியத்துவம் அளிக்குமேயானால் அது, மாநிலங்களும் தனியார் துறையும் செயல்படுத்தி வருகிற திட்டங்களுக்கு சரியான தூண்டுதலை அளிக்கும். மாநிலங்கள் தங்கள் பங்கிற்கு பணியாக, கிராமங்கள் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் வாழும் மக்களுக்கு உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திதர பாடுபட வேண்டும்.

28. இந்தியாவின் மிகப்பெரிய பலம் அதனுடைய மனித வளமாகும். சுகாதாரம் மற்றும் கல்வி ஆகிய துறைகளை எடுத்துக்கொண்டால் நமது மக்கள், உலகத் தரம்வாய்ந்த சேவைகளை பெறும் வகையில் சிறந்த சேவைகளை வழங்குவது மத்திய, மாநில அரசுகளின் கடமையாகவும் உள்ளது.

29. சுகாதாரத் துறையில் மாநில அரசின் செயல்பாடுகள் இத்துறைக்கான "வரைவு தொலைநோக்குத் திட்டத்தில்" கோரப்பட்டன. அனைவருக்கும் சுகாதார பாதுகாப்பை வழங்கும் ஒட்டுமொத்த நோக்கம் பெரிதும் பாராட்டப்படக்கூடியது என்றாலும், வரைவு தொலைநோக்குத் திட்டத்தில் சில பிரச்சினைகளும் உள்ளன. அவற்றை எடுத்துக்கூற வேண்டியுள்ளது. சுகாதாரத் துறையில், மத்திய மற்றும் மாநில அரசுகள் இரண்டுமே

திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருப்பதால் தான், நாட்டில் குறைவான சுகாதார பாதுகாப்பு முறைகளுக்கு வழிவகுத்திருப்பதாக ஒரு தவறான கருத்து ஏற்படுத்தப்பட்டுள்ளது. உண்மையில், சுகாதாரத் துறையில் ஒருங்கிணைந்த முறையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதால் தான், தமிழ்நாடு போன்ற சில மாநிலங்களில், இத்துறைக்கு முன்னுரிமை அளித்து வலுவான பொது சுகாதார அமைப்புகளை உருவாக்க முடிந்தது. மத்திய அரசின் தற்போதைய அணுகுமுறையானது, அரசின் பங்கை இனி வருங்காலங்களில் சுகாதாரத் துறையை வரன்முறைபடுத்தவதும், சேவைகளை காப்பீடுகளின் வாயிலாக கொள்முதல் செய்வதை அதிகரிப்பதாக உள்ளது. பொது சுகாதாரத் துறை மற்றும் தனியார் சுகாதாரத் துறைகள் சமமான போட்டியாளர்களாக சுகாதார சேவைகளை வழங்க வழிவகை செய்யப்படுகின்றது. தமிழ்நாடு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் போன்ற அரசால் செயல்படுத்தப்படும் சுகாதார காப்பீட்டுத் திட்டங்கள் முக்கியமாக இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை உள்நோயாளிப் பிரிவுகளுக்கு நல்ல பயனளிக்கிறது. இந்த பொது சுகாதார அமைப்புமுறைகள் தொடர்ந்து செயல்பாட்டில் இருப்பதால் சுகாதார சேவைகளின் விலை கட்டுப்பாட்டில் வைக்கப்படுவதுடன், மிகவும் நலிவுற்றோருக்கும் சுகாதார சேவைகள் கிடைப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. ஊரக மற்றும் புறநகர் பகுதிகளில் ஆரம்ப சுகாதாரம் மற்றும் புற நோயாளிகளுக்கான சேவைகள் தற்போது முழுமையாக அனைத்துப் பகுதிகளிலும் பொது சுகாதாரத் துறையின் வாயிலாக செயல்படுத்தப்படுகிறது. அனைவருக்கும் சுகாதார பாதுகாப்பு எனும் நோக்கத்தை தமிழ் நாட்டில் எய்துவதற்கு தற்போது செயல்பாட்டிலுள்ள பொது சுகாதார அமைப்பை வலுப்படுத்தி, எங்கெல்லாம் பற்றாகுறை உள்ளதோ, அவற்றை மட்டும் தனியார் மூலம் நிவர்த்தி செய்வது சால சிறந்ததாகும் என நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

30. கல்வியைப் பொறுத்தமட்டில், தற்போதுள்ள அனைவரையும் உள்ளடக்கிய, சமஉரிமைகளை உறுதி செய்யும் எல்லோருக்கும்

கல்வி உலகமயமாக்கல் மற்றும் மாநில மொழி மற்றும் பண்பாட்டை பாதுகாக்கும் கொள்கைகளைக் கொண்டுள்ள தற்போதைய கல்விக் கொள்கையை பாதுகாக்க வேண்டியது அவசியம் என்று தமிழ்நாடு அரசு உறுதியாக நம்புகிறது. இச் சூழலில், நீட் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டிருப்பது மாநிலத்தின் உரிமைகளுக்கு குந்தகம் விளைவிப்பதாக உள்ளது. தமிழகத்தில் நன்கு செயல்பட்டு வரும், தமிழ்நாடு அரசின் வெளிப்படையான மருத்துவக் கல்லூரிக்கான மாணவர் சேர்க்கை முறையின் மூலமாக பயனடைந்து வரும் தமிழ்நாடு மாணவர்களுக்கு, மாபெரும் அநீதி இழைப்பதாகவும் இது அமைந்துள்ளது. தமிழ்நாடு அரசு மருத்துவ கல்லூரிகள் உட்பட தொழிற் பிரிவுகளில் சேர்க்கை நடைமுறையை முறைப்படுத்துவதற்காக 2005 ஆம் ஆண்டு முதல் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கவனமான பரிசீலனைக்குப் பின்னர் மாநிலத்திலுள்ள இளநிலை (தொழிற்கல்வி) பிரிவுகளில் 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்களின் சேர்க்கை சட்டத்தின் வாயிலாக நுழைவுத் தேர்வுகளை ரத்துசெய்தது. இது அரசமைப்பு சட்டத்தின் 254(2) ஆம் பிரிவின் கீழ் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றுள்ளது. உச்சநீதி மன்றம் வரையிலான சட்டப்பூர்வ சவால்களையும் எதிர்கொண்டு வெற்றிகண்டுள்ளது. தமிழ்நாட்டின் மாணவர் சேர்க்கை முறையானது குறிப்பாக, நலிவுற்ற பிரிவுகள் மற்றும் கிராமப்புறப் பகுதிகளிலிருந்து வரும் மாணவர்களின் நலனை பாதுகாக்கிறது. ஏனெனில், அத்தகைய மாணவர்களால் பொது நுழைவுத் தேர்வுகளில் நகர்ப்பகுதி உயர்பிரிவு மாணவர்களுடன் போட்டியிட இயலாது. பொது நுழைவுத் தேர்வை தடைசெய்யும் தமிழ்நாடு அரசின் முடிவினால் பெருவாரியான எண்ணிக்கையில், சமூகரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பின்தங்கிய, தகுதிவாய்ந்த கிராமப்புற மாணவர்கள் பயன் பெற்றிருக்கின்றனர். பட்டமேற்படிப்பு சேர்க்கையைப் பொறுத்தவரையில், ஊரகப் பகுதிகளில் பணியாற்றி வருபவர்களுக்கு, தமிழ்நாடு அரசு கூடுதல் முன்னுரிமை அளித்து வருகிறது மேலும், மலைப்பகுதிகள் மற்றும் பழங்குடியினர் பகுதிகளில் பணியாற்றியவர்களுக்கு கூடுதல்

முன்னுரிமை அளித்து வருகிறது. “நீட்” தேர்வினை அறிமுகம் செய்வது இத்தகைய கொள்கை முயற்சிகள் செயல்படுத்தப்படுவதை பயனில்லாமல் செய்வதுடன், மேற்கொண்டு மாநிலத்தின் சமூக–பொருளாதார நோக்கங்களை வீணாக்கிவிடும். அரசு மருத்துவ மற்றும் பல்மருத்துவக் கல்லூரிகள் பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்புக்கான நடைமுறையிலுள்ள சேர்க்கை கொள்கையை பாதுகாப்பதற்கு, தமிழ்நாடு சட்டமன்றம் இரு சட்டமுன்வடிவுகளை அண்மையில் ஒருமனதாக நிறைவேற்றியது. இதற்கு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 254(2)ஆம் ஷரத்தின் கீழ், மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவரின் அனுமதி வேண்டப்பட்டுள்ளது. மாநிலத்தில் அரசு மருத்துவக் கல்லூரிகள், பல்மருத்துவக் கல்லூரிகள் மற்றும் தனியார் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில், தற்போது நடைமுறையில் உள்ள நியாயமான மற்றும் வெளிப்படையான சேர்க்கை முறையை தொடர்வதற்கு ஏதுவாக இந்த இரு சட்ட முன்வடிவுகளுக்கு உடனடியாக ஏற்பளிக்குமாறு நான் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன். மேலும் ஒவ்வொரு மாநிலத்தில் நிலவும் சூழலை கருத்திற்கொள்ளாமல், பொறியியல் மற்றும் கால்நடை மருத்துவ அறிவியல் உள்ளிட்ட ஏனைய தொழிற்படிப்புகளுக்கு, பொது நுழைவுத் தேர்வினையும் கட்டாயமாக்க வேண்டாமென்றும் இந்திய அரசினை நான் வலியுறுத்துகிறேன்.

31. நமது மனித வளத்தின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கும், கிராமங்களிலிருந்து வேலை வாய்ப்பைத் தேடி இடம்பெயர்கின்ற லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு நல்ல வேலைவாய்ப்பினை உருவாக்கித் தரவேண்டிய அவசரத் தேவை எழுந்துள்ளது. திறன் மேம்பாட்டுத் துணைக் குழுவின் உறுப்பினர்களுள் தமிழக முதலமைச்சரும் ஒருவர். தமிழ்நாடு தெரிவித்த ஏராளமான முக்கிய கருத்துக்கள் துணைக்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. திறன் மேம்பாட்டு திட்டங்களை மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் நேரடியாக செயல்படுத்துவதால், ஒவ்வொரு அரசின் பங்கினை தெளிவுபடுத்துவது இன்றியமையாதது என்ற கருத்தை தமிழ்நாடு

அரசு குழுவின் முன் வைத்தது. தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் போன்ற நிறுவனங்கள் (NSDC) பயிற்சி அளிப்பவர்களை நேரடியாக பணியமர்த்தி நிதியுதவி அளிக்கின்றன. மாநில அமைப்புகளும் இதே பணியை செயல்படுத்துகின்றன. இரண்டு அரசுகளின் இவ்வகையான செயல்பாட்டினால், இரட்டிப்பான முயற்சிகள், குறைவான மேற்பார்வை மற்றும் அதிக முதலீட்டு செலவுகள் ஆகியவற்றினை எதிர்கொள்ள நேரிடுகிறது. தேசிய திறன் மேம்பாட்டுக்கழகம் போன்ற மத்திய அரசின் அமைப்புகள், தேசிய அளவிலான நிலைப்படுத்தல், அங்கீகாரம், சான்றளிப்பு செயல்பாடுகள், நிதியளித்தல், கொள்கை மற்றும் கட்டமைப்புப் பணிகளை உருவாக்குதல் ஆகியவற்றில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும் என தமிழ்நாடு கருதுகிறது. திறன் மேம்பாட்டை நாடும் இளைஞர்களை கண்டறிந்து பயிற்சி அளிக்க மாநில அரசின் அமைப்புகள் மட்டுமே சிறந்த நிலையில் இருப்பதால் பயிற்சி அளிக்கும் பணி, அந்நிறுவனங்களுக்கே வழங்கப்பட வேண்டும். பிரதம மந்திரி கௌஷல் விகாஸ் திட்டத்தின் கீழ், ஒட்டு மொத்த பயிற்சியையும் மாநில அரசு அமைப்புகளால் மேற்கொள்ளப்பட வழிவகை செய்யப்பட வேண்டும். அதே போன்று, SANKALP திட்டத்தின் கீழ், பயிற்றுநர்கள் மேம்பாடு உட்பட திறன் வளர்ப்பு கட்டமைப்பினை வலுப்படுத்த தேவையான நிதியுதவி வழங்கப்பட வேண்டும்.

32. மத்திய அரசு நிதி வழங்கும் திட்டங்களை முதலமைச்சரின் துணைக் குழுவின் அறிக்கை அடிப்படையாக கொண்டு சீரமைக்கப்பட்டன. இந்த சீரமைப்பு முறையானது, அதிகளவு தாராள நிதி விகிதாச்சாரம், ஆறு முக்கிய (Core to Core) திட்டங்களுக்கான நடைமுறையிலுள்ள நிதி பங்கீட்டு நடைமுறையை தொடர்தல் உட்பட பல நேர்மறை அம்சங்களை கொண்டுள்ளது. மத்திய அரசின் பங்கு, 50 சதவீதத்திற்கு குறையாமல் இருப்பதை உறுதி செய்கிறது. எனினும், பல பிரச்சனைகள் தொடர்கின்றன.

33. அனைத்து முக்கிய திட்டங்களுக்கான மாநில நிதிகளின் பங்குத் தொகை 40 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது ஒரு

முக்கிய பிரச்சனையாகும். 14ஆவது நிதி ஆணையம், மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கை 42 சதவீதமாக உயர்த்தி வழங்கி உள்ளது இதற்கு முக்கியமான காரணம் என கூறப்படுகிறது. 14 வது நிதி ஆணையத்தின் பரிந்துரைகளால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட மாநிலமாக தமிழகம் உள்ளது. ஏனெனில், மாநிலங்களுக்கிடையேயான பங்கீட்டில், தமிழகத்தின் பங்கு ஏறத்தாழ 20 சதவீதம் வரையில் குறைக்கப்பட்டுள்ளது. அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய வரிவசூல் கூட்டப்பட்டபோதும், தமிழ்நாட்டிற்கு எவ்வித பயனும் இல்லை. பல்வேறு மத்திய வரிகள் மீது வரி மீது வரி மற்றும் மேல்வரிகள் விதிக்கின்ற போக்கு நிலைமையை மேலும் மோசமாக்கி உள்ளது. எனவே, மத்திய அரசால் நிதி வழங்கப்படும் திட்டங்களுக்கு மாநில அரசின் கூடுதல் பங்கான 40 சதவீதம் வழங்குவது, தமிழ்நாட்டிற்கு ஒரு சவாலாக உள்ளது.

34. சில முக்கிய திட்டங்களுக்கு மத்திய நிதிநிலை அறிக்கையில் குறைவாக நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது, மாநிலங்களின் இடர்களை அதிகப்படுத்தி உள்ளது. குறிப்பாக, அனைவருக்கும் கல்வி இயக்கம், தேசிய இடைநிலை கல்வி இயக்கம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு மெட்ரிக் படிப்பிற்கு கல்வி உதவித்தொகை திட்டம் போன்ற திட்டங்களின்பால் உங்கள் கவனத்தை நான் ஈர்க்க விழைகிறேன்.

35. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பினருக்கான மெட்ரிக் படிப்புக்கு பிந்தைய கல்வி உதவித் தொகை குறித்த நேர்வில், 2015–2016ஆம் ஆண்டு வரை இந்திய அரசால், வழங்கப்பட்ட நிதிகளுக்கான பயன்பாட்டு சான்றிதழ்களை தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. 2015–2016ஆம் ஆண்டுக்கான நிலுவைத் தொகை ரூ.669.47 கோடியையும், 2016–2017ஆம் ஆண்டிற்கான கேட்புத் தொகை ரூ.1,882.04 கோடியையும் வேண்டி கோரிக்கை அளிக்கப்பட்டும், இத்தொகை சமூக நீதி மற்றும் மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தால் இதுவரை வழங்கப்படவில்லை தமிழ்நாட்டின் கோரிக்கைகளை அமைச்சகம் ஏற்றுக் கொண்ட நிலையில்,

வரவு–செலவுத் திட்டத்தில் போதுமான ஒதுக்கீடுகள் இல்லாத காரணத்தினால் நிதி வழங்கப்படவில்லை. இப்பிரச்சினையின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, இத்திட்டத்திற்காக வரவு–செலவுத் திட்டத்தில் போதுமான ஒதுக்கீடுகள் செய்யப்பட வேண்டும் என்றும், மேலும் எவ்வித காலதாமதமுமின்றி மாநிலங்களுக்கு நிதிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன். மெட்ரிக் படிப்புக்கு பிந்தைய கல்வி உதவித் தொகை திட்டத்திற்காக மத்திய அரசின் முழு அளவிலான தற்போதைய ஆதரவு 31.03.2017 அன்றுடன் முடிவடையும் 12ஆவது ஐந்தாண்டு திட்டக் காலத்திற்கு பின்னரும் பேணுவது உறுதி செய்யப்பட வேண்டும்.

36. அனைவருக்கும் கல்வி மற்றும் இடைநிலை கல்வி திட்டத்தை குறித்த நேர்வில், மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகம் ஒப்புதல் அளிக்கப்பட்ட மத்திய வரவு செலவுத் திட்டத்தின் நிதிகளை குறைப்பதன் காரணமாக, அமைச்சகத்தினால் ஆண்டு செயல் திட்டங்களுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட அதன் நிதி பங்களிப்பை வழங்க இயலவில்லை. 31.03.2017 வரையிலான கால அளவிற்கான, இரண்டு திட்டங்களின் கீழ், ரூ.1,862.34 கோடி தமிழ்நாட்டிற்கு வழங்குவது நிலுவையாக உள்ளது. இதுபோன்ற கல்வித் திட்டங்களை செயல்படுத்துவதற்காக, கல்விக்கான மேல் வரியை மத்திய அரசு விதித்துள்ள போதிலும், இந்நிலை தொடர்ந்து வருத்தத்திற்குரியதாகும். ஒப்புக் கொள்ளப்பட்ட மத்திய நிதியுதவி பங்கினை வழங்காதது, மாநிலத்தின் நிதி நிலையை மோசமாக பாதிப்பது மட்டுமன்றி, மிக முக்கியமான, சமூக முன்னேற்றத்திற்கான திட்டங்களை திறம்பட செயல்படுத்துவதில் சுணக்கத்தை ஏற்படுத்துகிறது. இதுபோன்ற பாதகமான செயல்பாடுகளால் தான், பல மாநிலங்களில் நிதி பற்றாக்குறை நிலவுகிறது.

37. வேளாண்மை, ஊரக குடிநீர் வழங்கும் திட்டம் மற்றும் வறுமை ஒழிப்பு போன்றவை மத்திய அரசு நிதி வழங்கும் திட்டங்களில், முக்கிய திட்டங்களாகும். முன்னுரிமை அளிக்கப்படும் இத்துறைகளுக்கு, மிகச் சொற்ப அளவில் நிதி ஒதுக்கீடு செய்வது வருந்தத்தக்க ஒன்றாகும். எனவே, மத்திய அரசு நிதி வழங்கும் முன்னுரிமைத்

திட்டங்களில், அதன் நீடித்த பயன்களை உறுதி செய்து, அதற்கேற்ப வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்வதை உறுதி செய்யப்பட வேண்டும்.

38. மத்திய அரசு திட்டங்களை சீரமைக்கும்போது பல சிறிய திட்டங்கள் குறைந்த நிதி ஒதுக்கீடுடன், துணை திட்டங்களாக தொடர்வதால், தேசிய அளவில் எவ்வித பயனுமில்லை. அத்தகைய நேர்வுகளில், ஒதுக்கீடுகள் பயனுள்ள அளவிற்கு அதிகரிக்க வேண்டும் அல்லது துணைத் திட்டங்கள் கைவிடப்பட வேண்டும்.

39. மிகவும் நலிவுற்றவர்களையும், ஏழைகளையும் அக்கறையுடன் பேணி காக்கும் கருணை தான் இந்தியாவை ஒரு மகத்தான நாடாக உயர்த்தும் ஒரு சிறந்த அடையாளம். எனவே, ஏழ்மை நிலையை அகற்றி நலிவுற்றோருக்கு சமூக பாதுகாப்பு வழங்குவதில் உலகத்திலேயே இந்தியாவை முதன்மையான நாடாக மாற்ற நாம் பாடுபடவேண்டும். தற்போது தேசிய அளவில், ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஒரு சில தெரிவு செய்யப்பட்ட ஒன்றியங்கள் மற்றும் நகரங்களில் தான் செயல்படுத்தப்படுகின்றன. மேலும், கிராம வறுமை ஒழிப்பு குழுக்களுக்கு வழங்கப்படும் நிதி வழங்கும் அளவுகோலும் கணிசமாக மாறுபடுகிது. தமிழ்நாட்டில் மாநில நிதிகள் மற்றும் பன்னாட்டு நிதி உதவி மூலம் இத்திட்டங்களுக்கு கூடுதல் நிதி வழங்கப்படுகிறது. ஆகையால், தேசிய ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கங்கள் நாடு முழுவதும் செயல்படுத்துவதும், கூடுதல் நிதி ஒதுக்கீடு அளிப்பதும், வறுமை ஒழிப்பு முயற்சிக்கு இன்றியமையாததாகும்.

40. இந்திய பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட மத்திய சரக்குகள் மற்றும் சேவைவரி, ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டுச் சட்டங்களின் மூலமாக மறைமுக வரிகளில் வரலாற்றுப் புரட்சி ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் சரக்கு மற்றும் சேவை வரிச்சட்ட வரைவு, விரைவில் மாநில சட்டமன்றப் பேரவையின் முன் வைக்கப்பட உள்ளது. சரக்கு மற்றும் சேவை வரியின் அறிமுகம், தமிழ்நாடு போன்ற நிகர

ஏற்றுமதி மற்றும் உற்பத்தி மிகு மாநிலத்திற்கு, நிரந்தர வருவாய் இழப்பு ஏற்படுத்தும் எனவும் மாநிலத்தின் நிதி நிலையை வெகுவாக பாதிக்கும் என தமிழ்நாடு அரசு தொடர்ந்து தெரிவித்து வருகிறது. அரசியலமைப்பின் 101 ஆவது திருத்தத்திற்குப் பின்னர் மாநிலங்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன என்பதை உறுதிசெய்ய சரக்கு மற்றும் சேவை வரி குழுவினோடு தமிழ்நாடு தொடர்ந்து முனைப்பாக பங்கேற்று வருகிறது. சரக்கு மற்றும் சேவை வரியின் குழுவிற்கான கூட்டங்களில் தமிழ்நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த பரிந்துரைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது, மகிழ்ச்சி அளிக்கிறது. எஞ்சியுள்ள விவகாரங்களும் இதே போன்று விட்டுக்கொடுத்து செயல்படுத்தப்படுவதை நான் வலியுறுத்துகிறேன்.

41. சரக்கு மற்றும் சேவை வரியினை செயல்படுத்துவதனால் ஏற்படும் வருவாய் இழப்புகள், மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நிதி ஆதாரங்களை பாதிக்கக்கூடும் என சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாநிலங்கள், சரக்கு மற்றும் சேவை வரியினை செயல்படுத்துவதில் ஏற்படக்கூடிய வருவாய் இழப்பிற்கான கட்டாய இழப்பீட்டை தவிர, நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையிலான நிதிப்பகிர்வாகவும், மத்திய அரசு திட்டங்களுக்கான மத்திய நிதி பங்கீடாகவும் நிதி பெறுகின்றன. சரக்கு மற்றும் சேவை வரி கட்டமைப்பிற்குள்ளாக மாநிலங்களின் இழப்பீட்டிற்கான நிதிகளின் அளவு, நிர்ணயிக்கப்பட்டதைவிட மிக அதிகமாக இருக்கக்கூடும். இத்தகைய சூழலில், ஒட்டுமொத்த நிதிகளின் பரிமாற்றத்தில் தொகையை குறைப்பது மாநிலங்களின் வளர்ச்சியை கடுமையாக பாதிக்குமென்பதால், சரக்கு மற்றும் சேவை வரி செயல்படுத்துவதற்காக மாநிலங்களுக்கு இழப்பீடு வழங்கும்போது, மத்திய அரசின் இதர நிதி பரிமாற்றங்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதை உறுதிசெய்யப்பட வேண்டும் என மத்தி அரசை வலியுறுத்துகிறேன்.

42. நிருவாக வசதிக்காகவும் மக்களின் நலனை உறுதிசெய்வதற்காகவும் எண்மத் தொழில்நுட்பத்தை (Digital

Technology) முழுமையாக பயன்படுத் தமிழக அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மாநிலத்தில் 99 விழுக்காட்டிற்கு மேலான உரிய வயதடைந்த அனைவருக்கும் ஆதார் எண்கள் வழங்கப்பட்டுள்ளது. 0–5 வயது வரையிலான மாணவர்கள் மற்றும் குழந்தைகளின் பயோமெட்ரிக் கணக்கெடுக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இது விரைவில் நிறைவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆதார் எண் இணைக்கப்பட்ட குடும்ப அட்டைகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. முதியோர் ஓய்வூதியம், தொழிலாளர் நலன், நில பதிவுருக்கல் மற்றும் உதவித் தொகைகள் உள்ளிட்ட மக்கள் தொகை தரவுதளங்களும், ஆதார் எண்களுடன் இணைக்கப்பட்டு வருகின்றன.

43. முதியோர் ஓய்வூதியம், கல்வி உதவித்தொகை, மகப்பேறு பலன், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்திரவாத திட்டத்தின் கீழ் ஊதியம் மற்றும் இயற்கை சீற்றங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணத்தொகை வழங்குதல் உள்ளிட்டவற்றை வங்கி கணக்குகளுக்கு மாற்றி, ரொக்கமாக வழங்குவதற்கு பதிலாக நேரடி பலனை பெறும் வகையில் பணப்பரிமாற்றத்தை தொடக்க காலத்திலேயே பின்பற்றிய மாநிலம் தமிழ்நாடு ஆகும். இருப்பினும், பயனாளிகளுக்கான பணம் வழங்குதல் வங்கி பரிமாற்றங்களுக்கு பிறகு போதுமான வங்கியாளர்களின் வங்கி கட்டமைப்பு இல்லாததினால், ஊரக பகுதிகளின் வங்கி கணக்கில் பொதுமக்கள் தங்களுடைய பணத்தினை எடுப்பதில் இடர்பாட்டினை எதிர்கொள்கின்றனர். மேலும், உணவு, உரம் மற்றும் எரிபொருள் ஆகியவற்றிற்கான மானியத்தினை ரொக்கமாக வழங்குவதை நாங்கள் விரும்பவில்லை. இத்தகைய நேர்வுகளில், பலன்களின் அளவை காட்டிலும் நேரடியாக பொருட்கள் கிடைப்பது ஒரு சவாலாகும்.

44. இந்திய அரசின் ‘பாரத் நெட்’ திட்டத்தின் கீழ் அனைத்து ஊராட்சிகளையும் சேர்க்கும் பொருட்டு, தமிழக அரசு இந்திய

அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. இவ்வளைதள அமைப்பை தொடங்குவதற்கான பணி தொடங்கப்பட்டுள்ளது.

45. எண்மய முறையில் பணம் செலுத்துவது தொடர்பாக, மாநிலத்தில் சுமார் 10,000 இ–சேவை மையங்களில் POS இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. பயனீட்டாளர்கள் விவரங்களுடன் ஆதார் அட்டையை இணைப்பதனால் AEPS முறையை நன்றாக செயல்படுத்த உதவுகிறது. இ–சேவை மையங்களில், இணையம் வாயிலாக **140**க்கும் மேற்பட்ட சேவைகளை தமிழக அரசு வழங்கி வருகிறது. மேலும் **2** மாதங்களுக்குள், கூடுதலாக **300** சேவைகள் வழங்க வகை செய்யப்படும். கடந்த மூன்று ஆண்டுகளாக அரசு இ–சேவை மையங்கள் மூலம் இணையம் வாயிலாக **3** கோடிக்கும் மேலான பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

46. நித்தி ஆயோக் அமைப்பை ஏற்படுத்தியபோது, மாநிலங்களின் தீவிர பங்களிப்பு, கூட்டாண்மை அதிகார செயல்பாட்டிற்கு வகைசெய்யும் பொருட்டு, நிறுவனத்தின் அதிகாரத்தில் வெவ்வேறு நிலையில் மாநிலங்களின் கருத்துக்களை கருத்தில் கொண்டு, முறையான அமைப்பு முறையை ஏற்படுத்த வேண்டுமென தமிழ்நாடு அரசு வலியுறுத்தியிருந்தது. நித்தி ஆயோக் இப்பணியினை திறமையாக செய்து வருகிறது. தயாரிக்கப்பட்டு எங்கள் முன் வைக்கப்பட்ட துணை தொகுப்பு அறிக்கைகள் மற்றும் ஏனைய அறிக்கைளின் மாநில அரசுகளின் கருத்துகள் முறையாக இடம் பெற்றுள்ளன. மத்திய அமைச்சகங்கள் உருவாக்கும் திட்டம் மற்றும் கொள்கைகளில் மாநில அரசுகளின் கருத்துக்களை பிரதிபலிக்கும் அளவிற்கு நித்தி ஆயோக்கிற்கு போதுமான அதிகாரம் வழங்கப்படுவது அவசியமாகிறது. மாநில அரசுகளுடன் நித்தி ஆயோக் குழு நடத்துகின்ற அனைத்து கலந்துரையாடல்களிலும், மத்திய அமைச்சகங்களின் முனைப்பான பங்கேற்றால், அது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

47. தேசிய வளர்ச்சி மையத்தைப் போன்று நித்தி ஆயோக்கின் ஆளுமைக்குழு கூட்டங்களும் சம்பிரதாய நடவடிக்கைகளாக

மாறவில்லை என்பதை உறுதி செய்வதில் நாம் கவனமுடன் இருக்க வேண்டும். பெயருக்காக கூட்டப்பட்டு, கருத்துக்கள் பெறப்பட்டு, ஆனால் நடவடிக்கைகள் எடுக்கப்படாத கூட்டமாக இல்லாமல், அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய கொள்கைகள் மற்றும் திட்டங்கள் குறித்து கலந்துரையாடுவதற்கும், விவாதிப்பதற்கும், புதிய கொள்கைகள், திட்டங்களை கொண்டு வருவதற்கும் மாநிலங்களை அழைப்பதற்கான ஒரு மன்றமாக இது இருக்க வேண்டும். முதலமைச்சர்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டு உரிய முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும்.

48. தமிழ்நாட்டில், பேரறிஞர் அண்ணா, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் மற்றும் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையின் கீழ், நாட்டின் வளர்ச்சி, மாநிலங்களின் நிதி தன்னாட்சி ஆகியவற்றில் மாநிலங்களுக்கு அதிக பங்களிப்பு இருக்க வேண்டும் என்று நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளோம். வலிமையான மாநிலங்கள் மூலம் தான் வலிமையான நாடு உருவாகும் என்பதே எங்களது ஆழ்ந்த நம்பிக்கையாகும். ஆதலால், இந்தியாவின் ஆளுகை அமைப்பு முறை இன்னும் பற்பல கூட்டாட்சி சிறப்புகளை வெளிப்படுத்த வேண்டும்.

49. இந்த பெருமை வாய்ந்த குழுக் கூட்டத்தில், தமிழ்நாடு அரசின் கருத்துக்களை நான் முன்வைத்துள்ளேன். எங்கள் கருத்துக்களுக்கு உரிய மதிப்பளித்து, நாட்டின் வளர்ச்சி நடவடிக்கைகளில், மாநிலங்களும் தங்களது முழு பங்களிப்பை நல்க வழிவகை செய்து, நாம் அனைவரும் ஒற்றுமையுடன் இணைந்து, நமது நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல இந்த முயற்சி உதவும் என நான் நம்புகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
23.04.2017 அன்று புது தில்லியில் நடைபெற்ற நீத்தி ஆயோகின் (NITI Aayog) மூன்றாம் ஆளுமை குழுக் கூட்டத்தில் ஆற்றிய உரை.

மதுரை மாவட்டத்தில் ரூ.53.33 கோடி மதிப்பீட்டில் பல்வேறு துறையின் சார்பில் திட்டப்பணிகள்!

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி, இரு பெரும் தலைவர்களுடைய திருநாமத்தின் பெயரிலே இரண்டு பாலங்கள் மதுரை மாநகர் பகுதியிலே திறக்கின்ற நிகழ்ச்சி மற்றும் பல்வேறு பணிகள் முடிவுற்ற நிகழ்ச்சி,

இந்த இனிய நிகழ்ச்சியிலே வரவேற்புரை நிகழ்த்திய தலைமைச் செயலாளர் அவர்களே,

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்களே,

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களே,

இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. செல்லூர் ராஜு அவர்களே,

மற்றும் இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. ராஜேந்திரபாலாஜி அவர்களே,

இங்கே சிறப்பான உரை நிகழ்த்திய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்களே,

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு அவர்களே,

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. ராஜலட்சுமி அவர்களே,

மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திரு.பாஸ்கர் அவர்களே,

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. மணிகண்டன் அவர்களே,

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேவூர் S.ராமச்சந்திரன் அவர்களே,

மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் திரு.V.V.ராஜன் செல்லப்பா அவர்களே,

மற்றும் இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

அரசு செயலாளர்களே,

காவல்துறை அதிகாரிகளே,

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

முன்னாள் உள்ளாட்சி அமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகளே, மாவட்ட நிருவாகிகளே,

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே,

பாசத்திற்குரிய பெரியோர்களே! வணக்கத்திற்குரிய தாய்மார்களே!

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே,

அனைவருக்கும் எனது பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

நமது நாட்டின் பண்டைய நகரங்களில் ஒன்றான மதுரையில், அன்பே வடிவங்களாக இங்கே கூடியிருக்கின்ற உங்களையெல்லாம் சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இருபடை வீடுகள் மதுரைக்கு சொந்தமானது. ஒன்று திருப்பரங்குன்றம், மற்றொன்று பழமுதிர்ச்சோலை. குன்றும்–சோலையும் சூழ்ந்து இயற்கை எழில் கொஞ்சும் மாவட்டமாகவும், அறிவார்ந்த அறிஞர் பெருமக்களையும், கலை வித்தகர்களையும், வீரம் செறிந்த வேந்தர்களையும், ஒருங்கே பெற்ற மதுரைக்கு வருவதென்றால் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு மிகவும் பிடிக்கும். மதுரையிலே நடைபெறுகிற கூட்டங்களில் மனநிறைவோடு கலந்து கொள்வார்கள். முகம் மலர பேசுவார்கள். மதுரை மாநகரம் மட்டுமல்ல, மதுரை மாவட்டத்திற்கான பல்நோக்கு திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் தருவார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடு நடைபெறும் இந்த அரசும், அதே நிலையில்தான் மதுரைக்கு அதிக முக்கியத்துவம் தருகின்றது.

மதுரை, கூடல், மல்லிகை நகர், தூங்கா நகரம் என்று பல சிறப்புப் பெயர்களைப்பெற்றஒருதனிப்பெரும்நகரம்மதுரையாகும்.பரஞ்சோதி முனிவரால் இயற்றப்பட்ட திருவிளையாடல் புராணம் உட்பட பல இலக்கியங்களில் மதுரை மாநகரின் வடிவமைப்பு மற்றும் அழகு பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இந்த மாநகரின் பழமையையும், பெருமையையும் அறிந்த அறிஞர்கள் மதுரைக்கு வருகை தந்திருக்கிறார்கள். குறிப்பாக மூன்றாம் நூற்றாண்டில் மதுரைக்கு வருகை தந்த மேகஸ்தனீஸ், கௌடில்யர் போன்ற அறிஞர்கள் தங்கள் பயணக்கட்டுரைகளில் மதுரையைப்பற்றி மிக தெளிவாக விவரித்துள்ளார்கள். புராணங்களாலும், இதிகாசங்களாலும், இன்னும் பல இலக்கியங்களாலும், வரலாறுகளாலும், புகழப்படும் மதுரைக்கு

வருவதென்றாலே எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. காரணம், மதுரை மாநகரம் உழைப்பவர்களுக்கும், உண்மையானவர்களுக்கு, உயரத்துடிப்பவர்களுக்கும் புத்துணர்வு அளிக்கக்கூடிய நகரம் மதுரை மாநகரம்.

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த ஊர் இந்த மதுரை. தமிழை பக்தி இலக்கியத்துடன் வளர்த்த பூமி இந்த பூமி. அதனால் தான் தொலைநோக்கு பார்வையுடன் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், உலகத் தமிழ் சங்கத்தை மதுரையிலே நிறுவினார்கள். “யார் போற்றினாலும், தூற்றினாலும், என் கடன் பணி செய்து கிடப்பதே. தமிழ்நாட்டின் வளர்ச்சி, தமிழக மக்களின் வளர்ச்சி தான் என்னுடைய வளர்ச்சி என்ற முறையில் நான் தொடர்ந்து பணியாற்றுவேன்” என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். ஆனால், தமிழின் பெயரைச் சொல்லி வளர்ந்தவர்களெல்லாம் தமிழுக்காக எதையும் செய்யவில்லையென்பதற்கு மதுரை உலகத் தமிழ்சங்கத்தை தங்கள் ஆட்சிக் காலங்களில் புறந்தள்ளியதை கொண்டே நாம் தெரிந்து கொள்ளலாம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் தமிழையும் தமிழர்களையும் இரண்டு கண்களாக நினைத்து, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் உருவாக்கப்பட்ட உலகத் தமிழ்ச்சங்கத்திற்கு புத்துயிர் கொடுத்து ரூ.37.25 கோடி மதிப்பீட்டில் 14.5 ஏக்கர் பரப்பளவில் பெருந்திட்ட வளாகத்தை கட்டி, மதுரைக்கும், தமிழுக்கும் மேலும் சிறப்பு சேர்த்தார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் தமிழ்ப் பற்றையும், அவர்களின் வழியில் வந்த மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் தமிழ்த்தொண்டையும் நாம் நினைத்துப் பார்த்து, உண்மையான தமிழின தலைவர் யார் என்பது தெள்ளத் தெளிவாகிறது.

கடந்த 08.03.2017 அன்று மதுரை மண்டலத்திற்கான அரசுத் திட்டங்களை துவக்கி வைக்கும் அரிய வாய்ப்பினை நான் பெற்றேன்.

மதுரை மாவட்டத்தில், புரட்சித்தலைவர் காலனி திட்டப்பகுதியில் 20 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் 276 குடிசை மாற்று வாரிய அடுக்குமாடிக் குடியிருப்புகள், 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கம் உட்பட 91 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவிலான 1,641 பணிகள் உட்பட மதுரை மண்டலத்திற்கு உட்பட்ட மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர் ஆகிய 6 மாவட்டங்களில், பல துறைகளின் சார்பில் 1,004 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 6,874 திட்டப்பணிகள் நிறைவு செய்யப்பட்டு, துவக்கி வைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, இந்த குறுகிய காலத்திலேயே மதுரை மாவட்டத்தில், மேலும் பல நிறைவு பெற்ற திட்டங்களை தொடங்கி வைப்பதற்காக வந்திருப்பது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி அளிக்கிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் "மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவைப்படும் பல்வேறு உள்கட்டமைப்புகளில் சாலை உள்கட்டமைப்பு மிக முக்கியப் பங்கு வகிக்கிறது என்றும் ஒரு மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கும் மனித வள மேம்பாட்டிற்கும் சாலைக் கட்டமைப்பின் வளர்ச்சி அடிப்படையாக உள்ளது என்றும் ஒரு மாநிலத்தில் உள்ள ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பினைக் கொண்டே அம்மாநிலத்தின் வளர்ச்சியைக் கணிக்க இயலும் என்ற மாபெரும் கருத்தினை விளக்கிக் கூறினார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னதை, செய்து காட்டுவதில் வல்லவர் என்பதால்தான், சாலை மற்றும் மேம்பாலத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளித்தார்கள்.

நகராட்சி நிருவாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை சார்பில் மதுரை மாநகராட்சி, ஆரப்பாளையம் முதல் அருள்தாஸ்புரம் வரை உயர்மட்ட பாலம் மற்றும் திருமலையார் பாடித்துறையில் இருந்து செல்லூர் வரை மற்றுமொரு மேம்பாலம் ஆக இரண்டு மேம்பாலங்கள் 30 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவு செய்யப்பட்டு இன்று திறந்து வைக்கப்படுகிறது.

மற்றும்பல்வேறுதுறையின்சார்பில்நிறைவேற்றப்பட்ட53கோடியே 33 இலட்சத்து 92 ஆயிரம் மதிப்பீட்டிலான திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணப்படி நடக்கின்ற இந்த அரசு மக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறது. மேலும், மாண்புமிகு அம்மா அவர்களின் விருப்பப்படி ஏழை, எளிய மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை 1 கோடியே 6 இலட்சத்து 47 ஆயிரம் ரூபாய்க்கு வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மதுரை மாநகரத்தில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு எடுத்துள்ள முக்கிய நடவடிக்கைகளை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக, பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து ஆனைக்கால் வரை உயர்மட்டப்பாலம் கட்டுதல். இப்பணிக்கு, 38 கோடி செலவில் நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெறுகிறது. இரண்டு காலவாசல் சந்திப்பில் 192 கோடி செலவில் உயர்மட்ட மேம்பாலம், இப்போது வடிவமைப்பு இறுதி செய்யப்பட்டுள்ளது. மூன்றாவது, தேவர் சிலை அருகில் கோரிப்பாளையம் சந்திப்பில் மேம்பாலம், இப்பணிக்கு 165 கோடி செலவில் நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சிந்தாமணி சாலை மேம்பால பணி விரைவில் தொடங்கப்பட உள்ளது. மதுரை–தொண்டி சாலை பாண்டிக்கோயில் அருகே மேம்பாலம், இறுதி செய்யப்பட்டு மதிப்பீட்டுத் தொகை ஒப்பளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மதுரை சுற்றுச்சாலை சுமார் 214 கோடி செலவில் நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு பணி தொடங்கப்படவுள்ளது. இதேபோன்று, மதுரை மாநகரில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை தெரிவிக்கின்ற இந்த நல்லவேளையில் மேலும் ஒரு தகவலை உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் நெடுஞ்சாலைத்துறை மூலமாக கடந்த **5** ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் **2,338** சிறு மற்றும் உயர்மட்டப் பாலங்கள் கட்டி சரித்திரம் படைத்த ஆட்சி அம்மாவுடைய ஆட்சி என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆண்கள் ஆதிக்கம் நிறைந்த அரசியல் களத்தில் தனியொரு பெண்மணியாக புரட்சித்தலைவி அம்மா அவர்கள் போராடி போராடிப் பெற்ற வெற்றிகள்தான் இன்று தமிழக மக்களுக்கு நலத்திட்டங்களாக கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

மதுரை மக்களின் நெஞ்சங்களில் அருள்மிகு மீனாட்சி எப்படி குடிகொண்டிருக்கிறாளோ, அப்படியேதான் புரட்சித்தலைவி அம்மா அவர்களும் மதுரை மக்களால் நேசிக்கப்படுகிறார். அந்த நேசிப்பில் சிறிதும் குறைவு இல்லாமல் அம்மா வழியில் வந்த இந்த அரசு ஆட்சி நடத்தும், என்று இந்த நேரத்தில் உறுதி கூறிக் கொள்கிறேன்.

எந்த ஒரு செயலையும் வெற்றிகரமாக செய்து முடிக்க வேண்டும் என்றால் அந்த செயலில் ஈடுபடுகிறவர்களுக்கு ஒருமித்த கருத்துடன் கூடிய ஒற்றுமை அவசியம். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் அரசை வெற்றிகரமாக கொண்டுசெல்ல அனைவருடைய ஒத்துழைப்பு அவசியம். ஒத்துழைப்பு என்றதும் எனக்கு ஒரு சிறுகதை நினைவுக்கு வருகிறது.

கூட்டம் கூட்டமாக வந்து இரை தேடும் புறாக்களை வேடன் ஒருவன் பிடிக்கத் திட்டமிட்டான். ஒரு நாள் அவற்றில் ஒரு சில புறாக்களை மட்டுமாவது பிடித்துவிட வேண்டுமென்ற எண்ணத்தில் வலை விரித்தான். அவன் விரித்த வலையில் ஒரு சில புறாக்கள் மட்டும் மாட்டிக்கொண்டன. வேடன் அந்த புறாக்களையும் பிடிக்க விரைந்து வந்து கொண்டிருந்தான். இதை பார்த்துக் கொண்டிருந்த மற்ற புறாக்கள், வலையில் சிக்கிய புறாக்களையும் காப்பாற்ற

முனைந்து, தாங்களும் அந்த வலைக்குள் சென்று, அனைத்து புறாக்களும் ஒன்றிணைந்து வலையையே தூக்கிக் கொண்டு பறந்து சென்றன. வேடன் ஏமாந்தான். புறாக்களின் ஒற்றுமையைக் கண்டு வியந்தான். இந்தக் கதையில் வரும் புறாக்களைப் போல், நாம் ஒற்றுமையாக இருந்து, மாண்புமிகு அம்மாவின் அரசுக்கு தொடர்ந்து வெற்றியைக் கொடுத்த தமிழக மக்களின் நலனை பேணிக் காத்து, அவர்களுக்கு விசுவாசமாக நற்பணிகள் ஆற்றிட வேண்டும் என அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நான் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் சீரிய வழிகாட்டுதலின்படி, திறம்பட அமைச்சர் பணியில் பணியாற்றினேன். அவர்கள் வழிகாட்டுதலின்படியே இன்றைக்கு முதலமைச்சர் பணியில் அமர்ந்து துரிதமாகவும், திறம்படவும் மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றுகின்றேன். பல்வேறு மாவட்ட அரசு நிகழ்ச்சிகளுக்கு நேரில் வந்து கலந்து கொள்கிறேன். காரணம், மாண்புமிகு அம்மா அவர்களின் விருப்பமான, தமிழக மக்களின் நலனை பேணிக்காப்பது. என்னிடம் வரும் கோப்புகளுக்கு உடனுக்குடன் ஒப்புதல் அளிக்கப்படுகிறது. அதனால், அரசு இயந்திரம் முழுமூச்சில் செயல்படுகிறது. பல முக்கிய தேர்வுகளில் துறைச் செயலாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் ஆலோசித்து தமிழ்நாடு வளர்ச்சிக்குத் தீர்வு காணப்படுகிறது.

தமிழ்நாடு அரசின் மூலமாக பல்வேறு மணல் குவாரிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த குவாரிகள் எல்லாம் இனிமேல் அரசே முழுமையாக எடுத்து செயல்படுத்தும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். ரோடு காண்ட்ராக்ட் அதாவது மணலை லாரியில் நிரப்புவது, அதைப்போல ஸ்டாக்யார்டு மணலை சேமித்து வைப்பது, இரண்டையும் இனிமேல் அரசினுடைய மேற்பார்வையில் எடுத்து செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பை இங்கே இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இதன்மூலம் மணல் விலை கட்டுப்படுத்தப்படும். அதைப்போல, பொதுமக்களும் கட்டுமான

தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களும் அரசுக்கு முழு ஒத்துழைப்பை நல்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, மணல் இருந்தால் தான் நிலத்தடி நீர் உயரும். ஆகவே, பொதுமக்கள் இனி தாங்கள் கட்டுகின்ற கட்டடங்களுக்கு எம்சேண்ட் பயன்படுத்தவேண்டுமென்றும், கட்டுமானத் தொழில் ஈடுபட்டிருக்கின்றவர்களும் படிப்படியாக எம்சேண்ட்—க்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், 2, 3 ஆண்டுகளில் முழுமையாக மணல் நிறுத்தப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய தமிழகத்திலே நிலத்தடி நீர் உயர்த்தப்படவேண்டும். மழை அளவு குறைவாக உள்ளதால், மணல் இருந்தால் தான் அந்த நீரை சேமிக்க முடியும் என்பதை தெரிவித்துக் கொண்டு, மிகச்சிறப்பான எழுச்சியான இருபெரும் தலைவர்வர்களுடைய பெயர், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய பெயர், பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர் அவர்களுடைய பெயர் இரண்டு பாலங்களுக்கு சூட்டப்பட்டு இன்றைக்கு திறக்கப்பட்டதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன் என்பதைச் சொல்லி இந்த இனிய விழாவை ஏற்படுத்திய அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*

05.05.2017 அன்று, மதுரையில் அரசு திட்டங்களைத்

துவக்கி வைத்து ஆற்றிய உரை.

திருமங்கலம் முதல் நேருபூங்கா வரை மெட்ரோ இரயில் பச்சை வழித்தட சுரங்கப்பாதை பணிகளின் சேவை துவக்கம்!

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி. இந்த இனிய விழாவில் பங்கேற்க வருகை புரிந்துள்ள மாண்புமிகு மத்திய நகர்ப்புற மேம்பாடு, வீட்டு வசதி, நகர்ப்புற வறுமை ஒழிப்பு மற்றும் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் மதிப்பிற்கும் மரியாதைக்குரிய திரு.வெங்கையா நாயுடு அவர்களே,

மாண்புமிகு மத்திய சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் கப்பல் போக்குவரத்துத்துறை இணை அமைச்சர் திரு.பொன்.ராதாகிருஷ்ணன் அவர்களே,

மாண்புமிகு தமிழ்நாடு அரசின் மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி. ஜெயக்குமார் அவர்களே,

மாண்புமிகு தமிழ்நாடு அரசின் தொழில் துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்களே,

இந்த இனிய விழாவிலே வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,

பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களே,

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே சிறப்பிக்க வருகை தந்துள்ள பாரதிய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவர் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய டாக்டர் திருமதி தமிழிசை சௌந்தரராஜன் அவர்களே,

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் அவர்களே,

Secretary to Government of India, Ministry of Urban Development, Thiru Rajiv Gauba, IAS, அவர்களே,

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன் அவர்களே,

மத்திய அரசின் உயர் அதிகாரிகளே,

Mr.Kenko Sone, Minister in Japan Embassy at New Delhi,

Mr.Seiji Baba, Consul General of Japan in Chennai,

Mr.Takema Sakamoto, Chief Representative, JICA at New Delhi.

வரவேற்புரை ஆற்றிய திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, முதன்மைச் செயலாளர் திரு. ச.கிருஷ்ணன் அவர்களே,

நன்றியுரை ஆற்ற உள்ள, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு.பங்கஜ் குமார் பன்சல் அவர்களே,

அரசு அலுவலர்களே,

வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே,

உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக அரசின் மீதும் தமிழக மக்களின் மீதும் அதிக அக்கறையும் ஈடுபாடும் கொண்ட மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பாசத்திற்குரிய மத்திய நகர்ப்புற மேம்பாடு, வீட்டு வசதி, நகர்ப்புற வறுமை ஒழிப்பு மற்றும் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு.வெங்கையா நாயுடு அவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் இடைவிடாத முயற்சி காரணமாக மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம், தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்திற்கு டிஜிட்டல் உரிமம் வழங்கியது. இந்த டிஜிட்டல் உரிமத்தை தமிழ்நாடு அரசு பெறுவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்த மாண்புமிகு மத்திய நகர்ப்புற மேம்பாடு, வீட்டுவசதி, நகர்ப்புற வறுமை ஒழிப்பு மற்றும் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு.வெங்கையா நாயுடு அவர்களுக்கு தமிழ்நாட்டு மக்களின் சார்பாக எனது மனமார்ந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கோயம்பேடு முதல் நேரு பூங்கா வரையிலான முதல் சுரங்க வழித்தடத்தில் உள்ள 7 சுரங்கப்பாதை மெட்ரோ ரயில் நிலையங்களைத் திறந்து வைத்து அவ்வழித்தடத்தில் பயணிகள் சேவையை மாண்புமிகு மத்திய

நகர்ப்புற மேம்பாடு, வீட்டு வசதி, நகர்ப்புற வறுமை ஒழிப்பு மற்றும் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு.வெங்கையா நாயுடு அவர்களுடன் இணைந்து, இன்று நான் துவக்கி வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

சென்னை பெருநகரப் பகுதியில் பெருகிவரும் மக்கட்தொகை மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை ஆகியவற்றால், போக்குவரத்து நெரிசல் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இதற்கு ஒரு தீர்வாக சென்னை மெட்ரோ இரயில் திட்டம் மத்திய மாநில அரசுகளின் உதவியுடனும் மற்றும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை கடனுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கான சாத்தியக்கூறு ஆய்வு 2003ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசால் மேற்கொள்ளப்பட்டு, அந்த ஆய்வின் அடிப்படையில் வண்ணாரப்பேட்டை முதல் சென்னை விமான நிலையம் வரையிலான 23 கிலோ மீட்டர் தூர வழித்தடம் மற்றும் சென்ட்ரல் இரயில் நிலையம் முதல் பரங்கிமலை வரையிலான 22 கிலோ மீட்டர் தூர வழித் தடம் என இரு வழித் தடங்கள் தெரிந்தெடுக்கப்பட்டன. இந்த நடவடிக்கையின் மூலம் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்தான் வித்திட்டார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 29.06.2015 அன்று கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரையிலான 10.15 கி.மீ. உயர்த்தப்பட்ட வழித்தடத்தில் சென்னை மெட்ரோ இரயிலின் பயணிகள் சேவையை துவக்கி வைத்ததோடு, சென்னை மெட்ரோ இரயிலின் கோயம்பேடு பணிமனை மற்றும் கோயம்பேடு, சென்னை புறநகர்ப் பேருந்து நிலையம் (CMBT), அரும்பாக்கம், வடபழனி, அசோக்நகர், ஈக்காட்டுத்தாங்கல் மற்றும் ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையங்களையும் திறந்து வைத்தார்கள்.

மேலும், வண்ணாரப்பேட்டை முதல் திருவொற்றியூர் – விம்கோ நகர் வரையிலான சென்னை மெட்ரோ இரயிலின் முதல் கட்ட நீட்டிப்புத் திட்டத்திற்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 23.07.2016 அன்று அடிக்கல் நாட்டினார்கள். 3,770 கோடி ரூபாய் செலவு மதிப்பீட்டில் 9.05 கி.மீ. தூரம் நீட்டிப்பதற்கான இத்திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதலைப் பெறுவதில் முக்கிய பங்காற்றியவர் மாண்புமிகு மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.வெங்கையா நாயுடு என்று, இத்திட்டத்தை அடிக்கல் நாட்டி துவக்கிவைத்த போது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்கள். மேலும் இத்திட்டத்திற்கு 93 கோடி ரூபாய் மூலதன பங்களிப்பை பெற பேருதவியாக இருந்த மாண்புமிகு மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர், மரியாதைக்குரிய திரு.வெங்கையா நாயுடு அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மெட்ரோ ரெயில் சேவையை மேலும் விரிவுபடுத்திட, 21.09.2016 அன்று சென்னை விமான நிலையம் முதல் சின்னமலை வரையிலான 8.6 கி.மீ. நீளத்திலான இரண்டாவது உயர்த்தப்பட்ட மெட்ரோ இரயில் பகுதியிலும், ஆலந்தூர் முதல் பரங்கிமலை வரையில் 1.2 கி.மீ. நீளத்திலான பகுதியிலும், பயணிகள் சேவையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துவக்கி வைத்ததோடு, சென்னை விமான நிலையம், மீனம்பாக்கம், நங்கநல்லூர் சாலை, கிண்டி, சின்னமலை மற்றும் பரங்கிமலை மெட்ரோ இரயில் நிலையங்களையும் திறந்து வைத்தார்கள். மக்கள் சேவையே மகேசன் சேவையாகக் கருதி பயணிகள் சேவையை மாண்புமிகு அம்மா அவர்கள் அன்று துவக்கி வைத்தார்கள்.

14,600 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் முதல் கட்டத்திற்கு, 2006ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு மே மாதம் வரை அப்போதைய தி.மு.க.

ஆட்சியில் 1,143 கோடி ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டது. 2011ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை 13,787 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மாவின் ஆட்சியில்தான் செலவிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்கு தேவையான நிதியை ஒவ்வொரு ஆண்டும் முழுமையாக ஒதுக்கி, திட்டப் பணிகள் குறித்த காலத்தில் முடிவுறத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது.

2011ஆம் ஆண்டு வரையிலான அப்போதைய தி.மு.க. ஆட்சியில் சென்னை மெட்ரோ இரயில் கட்டுமானப் பணிகளில் 3 சதவீதமே முடிவடைந்திருந்தது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா தலைமையிலான அரசு 2011ஆம் ஆண்டு மே மாதம் பொறுப்பெற்ற பின்னர், பணிகளை விரைந்து செயல்படுத்தியதன் காரணமாக உயர்த்தப்பட்ட வழித் தடங்கள், மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் பணிமனையைப் பொறுத்தவரை அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.

சுரங்க வழித்தடத்தின் முதல் பகுதியான 7.4 கி.மீ. தூரம் உள்ள கோயம்பேடு முதல் நேரு பூங்கா வரையிலான பயணிகள் சேவை இன்று துவக்கி வைக்கப்படுகிறது.

விரைவான, வசதியான, நவீன போக்குவரத்து திட்டத்தினை வழங்குவதே சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் நோக்கமாகும் என்பதால் குளிர்சாதன வசதி, தானியங்கி இரயில் பாதுகாப்பு, தானியங்கி ரயில் இயக்கம், சிறப்பு இருக்கை வசதி, மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு வசதிகள், பயணிகளுக்கு நிறுத்தம் குறித்த தகவல், அவசரகால வெளியேறும் வசதி, பயணிகளின் பாதுகாப்பிற்காக கண்காணிப்பு கேமராக்கள் உள்ளிட்ட சிறப்பம்சங்களுடன் இரயில் நிலையங்களும் இரயில் பெட்டிகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

மெட்ரோ இரயில் முதற்கட்டத்தில், மீதமுள்ள சுரங்க வழித்தடமான நேரு பூங்கா முதல் சென்னை சென்ட்ரல் வழித்தடம் மற்றும் சுரங்கப்பாதை ரயில் நிலையங்களின் கட்டுமானப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. மொத்தம் தோண்டப்பட வேண்டிய 36.4 கி.மீ. சுரங்கப்பாதையில் 34.3 கி.மீ. சுரங்கப்பாதைப் பணிகள் முடிந்துவிட்டன. இவ்வழித்தடம் இந்த ஆண்டின் இறுதிக்குள்ளும், எஞ்சியுள்ள சின்னமலை முதல் வண்ணாரப்பேட்டை வரையிலான சுரங்க வழித்தடம் 2018ஆம் ஆண்டு மத்தியிலும் முடிக்கப்பட்டு, மெட்ரோ இரயில் சேவை துவக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் முதல் கட்டத்தில், 54 கி.மீ. நீளத்திலான மெட்ரோ ரயில் வழித்தடங்கள் திட்டமிடப்பட்டு, தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு சென்னை நகரின் விரிவாக்கத்தை கருத்தில் கொண்டு, மெட்ரோ இரயில் சேவையை மக்களின் பயன்பாட்டிற்காக மேலும் விரிவுப்படுத்திட இரண்டாம் கட்டமாக, மூன்று மெட்ரோ இரயில் வழித்தடங்களைச் செயல்படுத்த முடிவு செய்து, வரைவு சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான நிருவாக ஒப்புதல் வழங்கியிருந்தது. அதனடிப்படையில் விரிவான திட்ட அறிக்கையை திருவாளர்கள் ரைட்ஸ் நிறுவனம் அரசிற்கு தயாரித்து அளித்துள்ளது. அவ்வறிக்கையில் 107.55 கி.மீ. நீளத்திலான மூன்று வழித்தடங்கள் –அதாவது, மாதவரம் முதல் சிறுசேரி வரையில் ஒரு வழித்தடமும், சென்னை புறநகர் பேருந்து நிலையம் முதல் கலங்கரை விளக்கம் வரை ஒரு வழித்தடமும் மற்றும் மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரை ஒரு வழித்தடமும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இவ்விரிவான திட்ட அறிக்கையை ஏற்றுக்கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு, அவ்வழித்தடங்களை 85,047 கோடி ரூபாய் செலவு மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்கு கொள்கை அளவிலான ஒப்புதலை வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவி, மற்றும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் கடனுதவி பெறவும், மத்திய நகர்ப்புற அமைச்சகத்திற்கு பரிந்துரை செய்து அனுப்பப்பட்டுள்ளது. இதற்கிடையில் இத்திட்டம் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் 2016–2017 ஆம் ஆண்டுக்கான சுழல் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த விரிவாக்க திட்டத்திற்கு விரைவில் மத்திய அரசின் ஒப்புதல் வழங்க வேண்டும் என இத்தருணத்தில் மாண்புமிகு மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

2011ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அப்போதைய தி.மு.க ஆட்சியின் போது மத்திய அரசு, மாநில அரசு மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கிடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதில் பல ஷரத்துகள் மாநில அரசின் நலன்களுக்கு எதிராக இருப்பதாலும், திட்ட செயலாக்க காலத்திற்குப் பின்னரும் தொடர்ந்து பாதிப்பு ஏற்படுத்தும் என்பதாலும் இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் அளித்த கோரிக்கை மனுக்கள் வாயிலாக கேட்டுக்கொண்டார். இது பற்றி விரிவான விவரங்களை மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு நான் அனுப்பியிருந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளேன். இது குறித்து மாநில அரசு பாதிக்கப்படாத வகையில் இந்த ஒப்பந்தத்தை மாற்றி அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென மத்திய அரசை நான் இத்தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வழித்தடங்கள் தற்போது பயன்பாட்டிலுள்ள புறநகர் இரயில், வெளியூர் பேருந்து, மாநகரப் பேருந்து மற்றும் மெட்ரோ இரயில் நிலையங்களுடன் ஒருங்கிணைக்கும் வகையில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் சென்னை பெருநகரப் பகுதியில் பொதுப் போக்குவரத்தின் பங்கு கணிசமான அளவு உயரும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டங்களால் சென்னை மாநகரம் உலகத்தரம் வாய்ந்த பன்னாட்டு சுற்றுலா பயணிகளை கவர்ந்து ஈர்க்கும் வகையில் ஒரு நவீன நகரமாக திகழும்.

இந்த திட்டம் முழுமையாக நிறைவேற அல்லும் பகலும் அயராது உழைத்து வரும் அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும், உழைப்பாளர் நண்பர்களுக்கும், இந்த இனிய விழாவிற்கு சிறப்பாக ஏற்பாடு செய்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும், மனதார நன்றி கூறுகிறேன்.

நன்றி!

வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

*திரு.**எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*

14.05.2017 அன்று, திருமங்கலம் மெட்ரோ இரயில் நிலையத்தில் நடைபெற்ற விழாவில், திருமங்கலம் முதல் நேரு பூங்கா வரையிலான சென்னை மெட்ரோ இரயில் பச்சை வழித்தடம் சுரங்கப்பாதையில் பயணிகள் சேவையைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை.

மக்களின் நலனுக்காகவே செயல்படும் அரசு! உங்கள் அரசு! உங்கள் நலன் பேணும் அரசு!

121ஆவது உதகை மலர்க் கண்காட்சி துவக்க விழா நிகழ்ச்சியிலே கலந்து கொண்டதிலே நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். முதலிலே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் ஒரே வாரிசு, உலகம் போற்றிய உன்னதத் தலைவி மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்று இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு நடைபெறும் இவ்விழாவில் கலந்து கொள்வதில் நான் பெருமைப்படுகின்றேன்.

இந்த இனிய விழாவிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்களே,

இங்கே, சிறப்பான, அற்புதமான பல கருத்துக்களை இங்கே எடுத்துரைத்து அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களே,

காலத்தினுடைய நேரம் கருதி சுருக்கமாகச் சொன்னாலும், சிறப்பான கருத்தை எடுத்துரைத்து அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்களே,

இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு, சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற வேளாண்மைத்துறை அரசு முதன்மை செயலாளர் அவர்களே,

மாநிலங்களவை உறுப்பினர், திரு.கே.ஆர்.அர்ஜுனன் அவர்களே,

நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய, திரு. கோபாலகிருஷ்ணன் அவர்களே,

மாநிலங்களவை உறுப்பினர், திரு.ஏ.கே.செல்வராஜ் அவர்களே,

சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.ராமு அவர்களே,

உதகை சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.கணேஷ் அவர்களே,

மற்றும் இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற சட்டப்பேரவை உறுப்பினர் மரியாதைக்குரிய திரு.கனகராஜ் அவர்களே,

மரியாதைக்குரிய சகோதரி கஸ்தூரி வாசு அவர்களே,

மரியாதைக்குரிய சகோதரர் ஈஸ்வரன் அவர்களே,

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் இணைய தலைவர் முன்னாள் அமைச்சர் திரு.அ.மில்லர் அவர்களே,

தோட்டக்கலை துறை இயக்குநர் அவர்களே,

நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் பொ.சங்கர் அவர்களே,

அரசு அலுவலர்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே,

வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே,

புரட்சித்தலைவி அம்மா அவர்களின் இரத்தத்தின் இரத்தமான அருமை உடன்பிறப்புகளே, உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

உதகமண்டலம் உலக அளவில் தலைசிறந்த சுற்றுலா மையம். புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 1995ஆம் ஆண்டு நூற்றாண்டு மலர்க்கண்காட்சியினை பிரம்மாண்டமாக நடத்தியதால் பெருமை பெற்ற நகரத்தில் இன்று நடைபெறும் 121ஆவது மலர் கண்காட்சியினைத் துவக்கி வைப்பதில் பெருமை அடைகிறேன்.

இயற்கை எழில் கொஞ்சும் உதகை மாண்புமிகு அம்மா அவர்களுக்கு பிடித்தமான இடம்.

மலைகளின் கம்பீரத்தையும், வளைந்தோடும் ஆறுகளின் அழகையும், மணக்கின்ற பூக்களின் வாசத்தோடும், சிற்றோடைகளையும் காணும் போது நமது களைப்பு மறைகிறது. கவலைகள் பறந்தோடுகிறது. மனம் மகிழ்ச்சியில் திளைக்கிறது என மாண்புமிகு அம்மா அவர்கள் உதகையில் பேசினார்கள்.

அதே மகிழ்ச்சியை இங்கு வந்துள்ள அனைவருமே பெற்றுள்ளீர்கள் என்று நம்புகிறேன்.

தமிழ்நாட்டில் உயரமான இடமான
உதகையில் வாழும் மக்கள் அனைவரும்
உயர்ந்த எண்ணங்களையே கொண்டுள்ளீர்கள்

என்பதை நினைத்து பெருமை அடைகிறேன்.
சுற்றுலாவுக்கு உகந்த, அமைதியான
பாதுகாப்பான இடமாக உதகை திகழ்கிறது.

ஆண்டுதோறும் நடைபெறும் இந்த மலர்க்கண்காட்சியை 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் பார்த்து மகிழ்கின்றனர். நீலகிரி மலையை மலைகளின் அரசி என்று கூறுவர். ஆனால், இந்த அரசிக்கு யாருமே மகுடம் சூட்டவில்லை ஆனால், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்தான் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் மூலம் இந்த மலையரசிக்கு மகுடம் சூட்டி பெருமைப்படுத்தினார்.

ஸ்ரீராமனின் பாதம் பட்டதால் அகலிகை உயிர் பெற்றார் குறிஞ்சியின் உச்சிமுகடாக விளங்கும் நீலகிரிமலையில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பாதம் பட்ட பிறகுதான் நீலகிரி மலை வளர்ச்சியையும், மலர்ச்சியையும் பெற்றது.

குறிப்பாக ஆசிய துணைக்கண்டத்திலேயே எங்குமில்லாத அற்புதமான 4,000 இரகங்களைக் கொண்ட ரோஜா தோட்டத்தை இம்மாவட்டத்திற்கு வழங்கியவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். அதோடு மட்டுமல்லாமல்,

❖ பைக்காரா இறுதி நிலை புனல் நீர் மின் திட்டம் உருவாக்கம்.

❖ 8 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுலா மேம்பாட்டுப்பணிகள். 27 கோடி ரூபாய் செலவில் உதகை நகரில் அலங்கார விளக்கு, பாதாள சாக்கடை, கழிவறை போன்ற அடிப்படை வசதிகள்.

❖ தேயிலை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த 5 கோடி ரூபாயில் நஞ்சநாடு தேயிலை தொழிற்சாலை, 5 கோடியே 40 இலட்சம் ரூபாயில் அரசு தேயிலை தொழிற்சாலைகளை நவீனமயப்பட்டுள்ளது.

❖ 15 கோடி ரூபாயில் சிறுமுகை தேயிலை குழுமத்திற்கு நிதியுதவி வழங்கப்பட்டது. உற்பத்தியை அதிகரித்து, விவசாயிகள் பொருளாதார முன்னேற்றம் அடைய தும்மன்ட்டியில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணை உயர்ரக கார்னேசன் தாய்செடிகளை இறக்குமதி செய்து மானிய விலையில் வழங்க ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாய் நிதி உதவி.

❖ பொலிவிழந்த ஊட்டி ஏரி 6 கோடியே 89 இலட்சம் ரூபாய் செலவில் மேம்பாடு செய்யப்பட்டது.

❖ அதே போல, 80 இலட்சம் செலவில் தொட்டபெட்டாவில் தேயிலை பூங்கா அமைப்பு.

❖ உலகிலேயே முதன்முறையாக கணினி மயமாக்கப்பட்ட "டீ சர்வ்" என்ற ஒரு தனி ஏல மையம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது என்பதை இந்த நேரத்தில் நினைவு கூர விரும்புகிறேன்.

❖ எப்போதெல்லாம் தேயிலை விலை குறைகிறதோ, அப்போதெல்லாம் கிலோவிற்கு 2 ரூபாய் மானியம் வழங்கி தேயிலைத் தோட்ட தொழிலுக்கு ஊக்கம் கொடுத்தவர் நம் புரட்சித்தலைவி அம்மா.

❖ உலக பிரசித்திப் பெற்ற இந்த தாவரவியல் பூங்காவை மேம்படுத்த 8 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ 27 கோடி ரூபாய் செலவில் அரசு துறைகள் ஒரே இடத்தில் செயல்பட மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூடுதல் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

❖ 6 கோடியே 3 இலட்சம் செலவில் அலுவலக குடியிருப்புகள் அமைத்துக் கொடுத்தது அம்மாவின் அரசு.

❖ 15 கோடி ரூபாய் செலவில், தோடர், இருளர், குறும்பர், கோத்தர், பனியர் மற்றும் காட்டுநாயக்கர் என ஆறு பழங்குடியினத்தவர்களை பெருமைப்படுத்த பழங்குடியினர் பண்பாட்டு மையம் அமைத்துக் கொடுத்ததும் நம் அம்மா அவர்களே.

இந்த மலர்க் கண்காட்சியின் சிறப்பம்சமே பலவகையான மலர்கள் 15,000 தொட்டிகளில் ஒரே இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்களின் மனதை கவரும் வகையில் பல்வேறு வடிவங்களில் அமைக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது.

மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பலவகையான உருவ அமைப்புகள் சுற்றுலா பயணிகளை கவர்ந்து இழுக்கின்றன.

இந்த மலர்க்கண்காட்சியின் சிறப்பம்சமாக 25 அடி உயரத்தில், 26 அடி நீளத்தில் மலர்களைக் கொண்டு மகாபலிபுரம் கடற்கரை கோவிலின் உருவமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது.

மலர்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள நுழைவு வாயில் இம்மலர்க்கண்காட்சிக்கு மேலும் சிறப்பு சேர்க்கிறது.

பல வண்ணங்களை கொண்ட மலர்கள், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிய வகை மலர்கள், நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் கொய் மலர்களில் ஒன்றான லில்லியம் மலர்களின் தொகுப்புகளின் காட்சிகள் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் உள்ளது.

மலர்க்கண்காட்சியை ஊக்குவிக்க பல போட்டிகள் நடத்தப்பட்டு சிறந்த தோட்டங்கள் மற்றும் பூங்காக்களுக்கு பரிசுகள் வழங்கப்பட உள்ளது.

சுமார் 150 முதல் 200 போட்டியாளர்கள் வரை இப்போட்டிகளில் பங்கேற்றுள்ளனர். வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகள் இம்மலர்க்

கண்காட்சியின் நிறைவு நாளில் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் வழங்கப்பட உள்ளது.

மேலும், இந்தப் பரிசுகள் தோட்ட ஆர்வலர்களையும், பொதுமக்களையும் ஊக்கப்படுத்துவதாக அமைகிறது. இம்மலர் கண்காட்சிக்கு வரும் அனைத்து சுற்றுலா பயணிகளும், பொதுமக்களும் தோட்டம் அமைத்தல் பற்றிய விழிப்புணர்வை அடைவதோடு பல அரிய வகை பூக்களையும் காண ஏதுவாக உள்ளது.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் உதகையில் எத்தனை வண்ணங்களில் மலர்கள் பூக்கின்றனவோ, அத்தனை வண்ணங்கள் அளவிற்கு விதவிதமான திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் மக்களுக்கு தந்துள்ளார்கள்.

இக்கண்காட்சியை நல்ல முறையில் ஏற்பாடு செய்த மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் பொ.சங்கர் மற்றும் தோட்டக்கலைத்துறை அலுவலர்களுக்கும் மனமார்ந்த பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். "பொதுமக்களுக்கு என்னென்ன வழிகளில் எல்லாம் நன்மை செய்ய இயலுமோ அந்த வழிகளைப் பற்றியே நான் எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்", என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கூறுவார்கள்.

அந்த வழியில் இந்த அரசு செயல்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

"கடவுள் நம் பக்கம் இருக்கிறாரா என்பதை விட கடவுளின் பக்கம் நாம் இருக்கிறோமா என்பதுதான் எப்போதும் என்னுடைய சிந்தனையாக இருக்கிறது" என்று ஆப்ரகாம் லிங்கன் கூறுவார்.

எந்த அரசு மக்கள் பக்கம் இருக்கிறதோ, அந்த அரசின் பக்கம் மக்களும் இருப்பார்கள், கடவுளும் இருப்பார்.

எனவே, அம்மாவின் அரசு மக்கள் பலத்தையும் கடவுளின் கருணையையும் பெற்ற சிறந்த அரசாகத் திகழ்கிறது.

ஒரு சிறு கதையோடு என் உரையை நிறைவு செய்கின்றேன். ஒரு பக்தன் காட்டிலே கடும் தவம் புரிந்தான். கையில் கதாயுதத்தோடு அவன் கண்முன்னே கடவுள் திடீரென்று தோன்றி, “பக்தா! உனக்கு என்ன வேண்டும்? கேள்!” என்றார்.

“கடவுளே! என் முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கின்ற எதிரிகளை உங்கள் கதாயுதத்தால் தாக்கி வீழ்த்தி அழிக்க வேண்டும்”, என்று பக்தன் வேண்டினான்.

கடவுளும் அவ்வாறே வரம் கொடுத்தார். சற்று நேரம் கழித்து கதாயுதம் மட்டும் காற்றில் பறந்து வந்து வரம் கேட்ட பக்தனின் மார்பைத் தாக்கியது.

அதிர்ச்சியடைந்த பக்தன், குறிதவறி வந்து வரம் கேட்ட என்னையே இந்த கதாயுதம் தாக்குகிறதோ என்ற அச்சத்தில் திரும்பவும் தவம் மேற்கொண்டான்.

இறைவன் காட்சியளித்தார். “பக்தனே! நீ கேட்டபடிதான் நான் கதாயுதத்தை வீசினேன். மற்றவர்களை அழித்து நீ முன்னேற நினைக்கும் உன் மனம்தான் உனக்குப்பகை என்பதால்தான் என் கதாயுதம் உன் எண்ணத்தை அழிக்க முற்பட்டது. இப்போது உன் தீய எண்ணத்தை விட்டொழித்தாயா?”, என்று கேட்டது.

தர்மத்தைப் பற்றிய பேசுகிறவர்கள் அதர்மத்தைச் செய்தால், மக்கள் கதாயுதம் வடிவத்தில் வந்து பாடம் கற்பிப்பார்கள்.

நன்றியோடு நடந்துகொள்வதே ஒரு தர்மம்தான்..

இந்த அரசு மாண்புமிகு அம்மா வழியில் செயல்படும் அரசு. அம்மா அவர்களின் எண்ணங்களை நிறைவேற்றும் அரசு. மக்கள் நலத்திட்டங்களை அம்மாவின் வழியில் செயல்படுத்தி வரும் அரசு.

மக்களின் நலனுக்காகவே செயல்படும் அரசு இது உங்கள் அரசு உங்கள் நலன் பேணும் அரசு எனச் சொல்லி “மக்கள் என் பக்கம் இருக்கிறார்கள். நான் மக்கள் பக்கம் இருக்கிறேன்” என்ற புரட்சித்தலைவி அம்மாவின் பொன்மொழிக்கேற்ப இந்த அரசு மக்களின் சேவகனாகப் பணியாற்றும் என்பதை தெரிவித்து, ஊட்டி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கோபாலகிருஷ்ணன் அவர்களும், மாநிலங்களவை உறுப்பினர் திரு.கே.ஆர்.அர்ஜுனன் அவர்களும் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள், உதகை பேருந்து நிலையத்தை நவீனப்படுத்தித் தரவேண்டுமென கோரிக்கை வைத்தார்கள். இந்தக் கோரிக்கை கனிவோடு பரிசீலிக்கப்பட்டு, உதகை பேருந்து நிலையத்தை மேம்படுத்தி நவீனப்படுத்த ரூபாய் 2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்ட மகளிர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 145 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூபாய் 5.76 கோடி கடன் உதவியை வழங்கினேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

*திரு.**எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*

19.05.2017 அன்று, 121ஆவது உதகை மலர்க்காட்சி

தொடக்க விழாவில் ஆற்றிய உரை.

மக்களுக்கு என்ன தேவையோ அதை செய்து கொண்டிருக்கும் அம்மாவின் அரசு!

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்கி, 42ஆவது ஏற்காடு கோடை விழா மலர்க்கண்காட்சியிலே கலந்துகொண்டு மிகச்சிறப்பான உரையாற்றி, என்னோடு அமர்ந்திருக்கின்ற இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவுடைய அமைச்சரவையிலே வேளாண் துறை அமைச்சராக பொறுப்பேற்று அன்று முதல் இன்று வரை வேளாண்மைத் துறையிலே பல்வேறு சாதனைகள் படைத்து, ஒரு விவசாயக் குடும்பத்திலே பிறந்திருந்தாலும், இந்த வேளாண்மைத் துறையின் மூலமாக வேளாண் பெருமக்களுக்கு என்ன நன்மைகளை செய்யமுடியுமோ, அத்தனை நன்மைகளையும் நல்லவிதத்தில் மேற்கொண்டு வருகின்ற மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்களே, இந்த சிறப்பான விழாவில்

வரவேற்புரையாற்றியுள்ள சுற்றுலாத்துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு.ஆபூர்வ வர்மா அவர்களே, கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கே.காமராஜ் அவர்களே, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வி.பன்னீர்செல்வம் அவர்களே, ஏற்காடு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி. கு. சித்ரா அவர்களே, சேலம் மேற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி. வெங்கடாசலம் அவர்களே, சேலம் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ.பி.சக்திவேல் அவர்களே, வீரபாண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி. பி. மனோன்மணி அவர்களே, சங்ககிரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர், திரு. எஸ்.ராஜா அவர்களே, ஓமலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். வெற்றிவேல் அவர்களே, கெங்கவல்லி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. அ. மருதமுத்து அவர்களே, ஆத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர்.எம்.சின்னதம்பி அவர்களே, சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் திரு.ஆர். இளங்கோவன் அவர்களே, சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய தலைவர், திரு.ஆர். சின்னுசாமி அவர்களே, சுற்றுலாத்துறை ஆணையர் திரு.பழனிக்குமார் அவர்களே, தோட்டக்கலைத்துறை இயக்குநர் திருமதி அர்ச்சனா பட்நாயக் அவர்களே, நன்றியுரை நிகழ்த்தவுள்ள சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வா.சம்பத் அவர்களே, அரசு அலுவலர்களே, பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே, அனைவருக்கும் பணிவான வணக்கத்தினை இந்த நேரத்திலே தெரிவித்து,

ஏற்காடு என்பது சேலம் மாவட்டத்தில் அமைந்துள்ள மலை நகரம் ஆகும். இதை ஏழைகளின் ஊட்டி என்றும் அழைப்பார்கள். ஏரிக்காடு

என்பதே ஏற்காடு என்று மருவி ஆகிவிட்டது. ஏற்காட்டில் உள்ள தேசிய தாவரவியல் பூங்காவில் 3,000 வகையான மரங்களும் 1,800 வகையான செடிகளும் உள்ளன. இந்த பூங்கா 1963ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. ஏற்காடு சுற்றுலா தலம் மட்டுமல்ல... ஆலயங்கள் சூழ்ந்த ஒரு ஆன்மீக பூமியாகவும் திகழ்கிறது. வரலாற்றுச் சிறப்புமிக்க மேட்டூர் அணையைத் தன்னகத்தே கொண்டது இந்த சேலம் மாவட்டம். டெல்டா மாவட்ட விவசாயத்திற்காக இம்மாவட்டத்தில் அணையை அமைத்த தாராள குணம் படைத்த நல்ல மனம் படைத்த மக்கள் நீங்கள். மலர்களின் அணிவகுப்பைப் போல் இங்கு மலர்ந்த முகத்தோடு கூடியிருக்கிற உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

சேலம் என்றால் நம் நினைவுக்கு வருவது மாங்கனி, அடுத்து சேலம் மாவட்டம் என்றால் நம் நினைவுக்கு வருவது ‘இரும்பு’ தான். காரணம் சேலம் இரும்பு ஆலையில் வார்க்கப்படும் இரும்பு உலகப்புகழ் பெற்றது. கிரேக்க மன்னன் அலெக்ஸாண்டருக்கு புருசோத்தமன் என்ற மன்னன் சேலத்து இரும்பில் செய்த ஒரு வாளைப் பரிசாக தந்தான் என்பது வரலாறு.

மக்களுக்கு வேண்டிய அனைத்து அடிப்படை தேவைகளையும் நிறைவேற்றிய பின்புதான், நம்மை மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டு சென்றுள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் விட்டுச்சென்ற பணிகளை நாங்கள் அம்மாவின் வழியில் விரைந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு அம்மா அவர்கள் இப்போதும் நம்மிடையே இருப்பது போலவே இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆளும்போதும் திருக்குறளில் சொல்லப்பட்டது போல் அரசனுக்குரிய அத்தனை

இலக்கணங்களையும் கொண்டு ஆண்டார்கள். அதனால்தான் உலகில் திருக்குறள் பரவியிருக்கிற அத்தனை இடங்களிலும் அம்மாவின் புகழும் பரவியிருக்கிறது.

இந்த உலகத்தில் கடுமையான உழைப்பாலும் அதனால் பெற்ற உயர்வாலும் கிடைத்த புகழ்மட்டுமே என்றைக்கும் நிலைத்து நிற்கக் கூடியதாகும் என்கிறது திருக்குறள். மாண்புமிகு அம்மாவின் புகழ் இந்த உலகம் உள்ளவரை நிலைத்து நிற்கும். அம்மா அவர்களின் புகழ் மேலும் மேலும் பரவ அம்மா வழியில் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற இந்த அரசு உங்களுக்காக உங்கள் நல்லாதரவுடன் மக்கள் பணியாற்றி வருகிறது. நான் 07.03.2017 அன்று சேலம் மண்டலத்திற்கு உட்பட்ட சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் 330 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3,971 திட்டப்பணிகளை தொடங்கி வைத்தேன். 28.04.2017 அன்று நடைபெற்ற விழாவில் 30 புதிய கட்டிடங்கள் ரூ.19.72 கோடி மதிப்பில் திறந்து வைத்தேன். 42 பணிகள் ரூ.16.35 கோடி மதிப்பில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் 8,852 கைத்தறி நெசவாளர்களுக்கு 11 கோடியே 31 இலட்சம் ரூபாய் அளவிற்கு கட்டணமில்லா மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் வறட்சி தாக்கத்தினை குறைக்கும் நோக்கத்தில் பண்டைய மராமத்து திட்டத்திற்கு இந்த அரசு புத்துயிர் அளித்து வருகிறது. அதன்படி சேலம் மாவட்டத்தில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் 48 பணிகள் 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகிறது.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும், நீர் ஆதாரத்தை அதிகரிக்கும் வகையிலும், மேட்டூர் அணை 1934ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

83 ஆண்டுகளுக்கு பிறகு தமிழக வரலாற்றில் முதல்முறையாக மேட்டூர் அணையில் தூர்வாரும் பணி நாளைய தினம் என்னால் துவக்கி வைக்கப்படுகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியினை இந்த தருணத்தில் இந்த விழாவின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் இந்த அரசு பொற்றுப்பேற்று 100 நாட்கள் இன்றைய தினம் 101 நாளில் அடியெடுத்து வைத்துள்ளது. சேலம் மாவட்டத்தில் மட்டும் ஏழைப்பெண்களின் திருமணத்திற்கு ரூ.25,000 நிதியுதவியுடன் 1,191 பயனாளிகளுக்கு 2 கோடியே 97 இலட்சம் ரூபாயும், தாலிக்குத் தங்கமும் வழங்கப்பட்டுள்ளது. அம்மா அவர்களின் மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 6,143 பயனாளிகளுக்கு 12.11 கோடி ரூபாய் செலவில் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் 19 கோடியே 97 இலட்சம் மதிப்பீட்டில் ஏழை, எளிய குடும்பங்களுக்கு சூரிய மின் சக்தியுடன் கூடிய 951 பசுமை வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 1 இலட்சத்து 41 ஆயிரத்து 272 விவசாயிகளுக்கு 65 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே முதன் முறையாக நுண்ணீர் பாசனத்திற்கு சிறு, குறு தோட்டக்கலை மற்றும் வேளாண் பயிர் பயிரிடும் 1,870 விவசாயிகளுக்கு 12 கோடியே 59 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

சேலம் நெடுஞ்சாலை கோட்டத்தின் மூலம் 21 கோடியே 56 இலட்சம் ரூபாய் செலவில் 45.607 கி.மீ சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. 10 கோடியே 76 இலட்சம் செலவில் 88 கி.மீ. தூரம் சாலைகள் அகலப்படுத்துதல் பழுது பார்த்தல் பணிகள் நடைபெற்றுள்ளன. சேலம் நெடுஞ்சாலைத்துறை மூலம் 45 கோடியே

82 இலட்சம் ரூபாய் செலவில் 3 பாலங்கள் கட்டப்பட்டு வருகிறது. எடப்பாடி நெடுஞ்சாலை கோட்டத்தின் மூலம் 104 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் 121 கி.மீ. நீளச் சாலைகள் மற்றும் பாலங்கள் கட்டப்பட்டுள்ளன.

சேலம், ஜாகீர்அம்மாபாளையத்தில் அமைந்துள்ள தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மூலம் 50,000 சதுரடி பரப்பளவில் 19 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்ப கட்டடம் சேலம் நகரத்தை சுற்றிலும் அதிகளவில் பொறியியல் மற்றும் கலைக் கல்லூரிகளின் வளர்ச்சிக்கு பேருதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், ஒரு சிறு கதையை இந்த நேரத்தில் கூறுவது பொருத்தமாக இருக்கும் என கருதுகிறேன்.

எறும்புகள் எல்லாம் கூடி மாநாடு நடத்தின. தங்களின் தனிப்பட்ட உயர்வுக்காக ஒரு எறும்பை அகில உலக தலைவராக தேர்வு செய்தன.

தலைவர் எறும்புக்கு இறைவனிடம் பக்தி அதிகம் அதனால் திடீரென்று தியானம் செய்ய ஆரம்பித்து விட்டது அந்த தலைமை எறும்பு. எறும்புகளின் தலைவராச்சே என்று இறைவன் தோன்றி "உனக்கு என்ன வரம் வேண்டும்" என்று கேட்டார். இறைவனே நம் கண்முன் வந்துவிட்டாரே என்ற கர்வத்தில், "இறைவா, என்னை கடித்தால் இறந்துவிட வேண்டும்" என்று அந்த எறும்பு வரம் கேட்டது.

இறைவனும் உடனே வரம் கொடுத்தார். அந்த எறும்புத் தலைவனுக்கு கர்வம் தலைக்கேறியது. இறைவன் கொடுத்த வரம்

பலிக்கிறதா என்பதை உடனே சோதனை செய்துவிட வேண்டும் என்று அவசரப்பட்டது.

அப்போது அந்த இடத்தில் வேறு யாரும் இல்லை. இறைவன்தான் இருந்தார். சரி இறைவனையே கடித்துவிட வேண்டியதுதான். அவர்தான் வரம் கொடுத்துவிட்டாரே! அவரால் என்னை என்ன செய்துவிட முடியும்! என்று ஓடிப்போய் இறைவன் காலை அந்த தலைமை எறும்பு கடித்தது. இறைவன் எறும்பை தட்ட எறும்பு சுருண்டு விழுந்து "இறைவா! உன் வரம் பலிக்கவில்லையே. நானல்லவா இறக்கப் போகிறேன்! என்று கேட்டது. அதற்கு இறைவன் சொன்னார் "கடித்தால் இறந்து விடவேண்டும் என்றுதானே நீ கேட்டாய். கடிபட்டவர் இறந்துவிட வேண்டும் என்று நீ கேட்கவில்லை. ஆதனால்தானே உனக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது" என இறைவன் சொன்னார்.

இறைவன் சொன்னதற்குமேல் நான் ஒன்றும் சொல்லத் தேவையில்லை என நினைக்கிறேன். உங்களுக்கு எல்லாமே தெரியும், புரியும். தலைவராக இருப்பவருக்கு பொறுமையும் அடக்கமும் தேவை சிந்திக்காமல் கர்வத்துடன் எதையும் பேசிவிடக்கூடாது என்பது நமக்குப் புரிகிறது.

தமிழ்நாட்டிலுள்ள 32 மாவட்டங்களுக்கும் கிடைக்காதது நமது சேலம் மாவட்டத்திற்குக் கிடைத்திருக்கிறது. சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த நான் தற்பொழுது தமிழகத்தின் முதல்வராக பொறுப்பேற்று, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சி தொடர்ந்து நடைபெற ஒரு பெரும் வாய்ப்பைப் பெற்றுள்ளேன். அதனால், மற்ற மாவட்ட மக்களுக்குக் கிடைக்காத ஒரு வாய்ப்பு சேலம் மாவட்ட மக்களுக்குக் கிடைத்துள்ளது. மாவட்ட மக்கள் நேரடியாக முதல்வராகிய என்னை சந்தித்து அவர்களது குறைகளை தெரிவிக்க நல்வாய்ப்பு சேலம் மாவட்ட மக்களுக்குக் கிடைத்துள்ளது.

நான் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் அமைச்சராக இருந்த பொழுதே, மாண்புமிகு அம்மா அவர்களிடம் சிறப்பு அனுமதி பெற்று, பின்தங்கிய மாவட்டமான சேலம் மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கையான குடிநீர் வசதி, சாலை வசதி, பாலங்கள், பாதாள சாக்கடை மற்றும் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றியுள்ளேன். சேலம் மாநகரில் மேலடுக்கு சாலை பாலம், ஒரே பாலத்திற்கு மட்டும் 340 கோடி ரூபாய் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அனுமதி தந்து, அந்தப் பணி துவங்கப்பட்டு இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதேபோல, இரயில்வே பாலங்கள், தனிக்குடிநீர் திட்டம், மாவட்டம் முழுவதும் ஆறு, வாய்க்கால்கள் இடையே பாலங்கள், குறுகிய பாலங்களை அகலபடுத்துதல், தரமான சாலைகள், பாதுகாக்கப்பட்ட நீர் உட்பட அனைத்து அடிப்படை தேவைகளும் நிறைவேற்றப்பட்டன.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு நம்முடைய சேலம் மாவட்டத்தில் நம்முடைய மக்களுக்கு தேவையான சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதற்காக இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலேதான் பல்வேறு சட்டமன்ற தொகுதிகளிலே இன்றைக்கு நம்முடைய அம்மாவினுடைய ஆட்சியிலே, கிராமப்புறங்களிலெல்லாம் ஆரம்ப சுகாதார நிலையங்கள் துவங்கப்பட்ட ஆட்சி அம்மாவினுடைய ஆட்சி என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்த ஆட்சியிலும் இல்லாத அளவிற்கு, கிராமப்புற மக்களுக்கு அந்தப் பகுதியிலேயே தகுந்த சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதற்காக அதிக அளவிலே ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறந்த அரசு அம்மாவினுடைய அரசு என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சேலம் மாவட்டம் ஒரு முன்னோடியான மாவட்டமாக மக்கள் அனைத்து அடிப்படை தேவைகளையும் பூர்த்தி செய்ய அனைத்து

முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்பதை இந்த தருணத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பழங்கால முறையான குடிமாராமத்து திட்டம், நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, முதற்கட்டமாக, 1,539 ஏரிகள் அந்த குடிமாராமத்து திட்டத்தின் மூலமாக எடுக்கப்பட்டு அந்த ஏரிகளின் கரையை பலப்படுத்துவது, அதோடு தூர்வாருதல் போன்ற பணிகள் ரூபாய் 100 கோடி திட்டத்திலே துவங்கப்பட்டு, அந்தப் பணிகள் நிறைவடைகின்ற நிலையிலே இருக்கின்றது. மேலும், கூடுதலாக 2,065 ஏரிகள் இன்றைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அதற்காக ரூபாய் 300 கோடி நிதிஒதுக்கீடு செய்யப்பட்டு, கரைகளை பலப்படுத்துதல், சீர்செய்தல், தூர்வாருதல் இப்படிப்பட்ட பணிகள், விவசாயிகள் குழுக்களின் பங்களிப்போடு அரசே இந்தத் திட்டத்தை மேற்கொள்ள இருக்கின்றது. இது ஒரு மிகப்பெரிய திட்டம். இந்தத் திட்டத்தின் மூலமாக, பொழிகின்ற மழைநீர் அதிக அளவிலே சேமித்து வைத்து, வறட்சியான நேரத்திலே பயன்படுத்த முடியும். இதன்மூலமாக நிலத்தடி நீர் உயருகிறது, குடிநீர் பிரச்சினையை தீர்க்க முடிகிறது, விவசாயிகளுக்கு தேவையான நீர் கிடைக்கின்றது, விவசாயம் செழித்து ஓங்க, வளம்பெற இந்தத் திட்டத்தை நாங்கள் கொண்டு வந்திருக்கின்றோம் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, ஏற்கனவே நான் குறிப்பிட்டதைப்போல, மேட்டூர் அணை 1934ஆம் ஆண்டு கட்டப்பட்டது. கிட்டத்தட்ட 83 ஆண்டுகள் தூர் வாரப்படவில்லை. தூர்வாரப்பட்டால், கிட்டத்தட்ட 10 சதவீதம் தண்ணீர் கூடுதலாக சேமித்து வைக்க முடியும். அதற்காக அம்மாவினுடைய அரசு, நாளைய தினம் மக்களோடு, விவசாயிகளோடு இணைந்து, மிகப்பெரிய திட்டமான தூர்வாருகிற திட்டத்தினை மேட்டூர் அணையில் துவங்கப்படும். மேட்டூர் அணை

மட்டுமல்ல, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அணைகள், ஏரிகள், குளங்கள் அனைத்திலுமே விவசாயிகளுடைய பங்களிப்போடு விவசாயிகளுக்குத் தேவையான வண்டல் மண் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. இந்த வண்டல் மண் எடுத்து விவசாயிகள் பயன்படுத்தினால், விளைச்சல் கூடுதலாகக் கிடைக்கும், இயற்கை உரமாக இருக்கும். அதனால், மக்களுக்கு எவ்வித நோய்களும் வராமல் தடுக்கப்படும் என்ற அடிப்படையிலே, வண்டல் மண் எடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் அரசால் எடுக்கப்பட்டு வருகிறது இந்த தருணத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதுமட்டுமல்ல, இந்த அரசு அம்மாவினுடைய அரசு. புரட்சித்தலைவி அம்மாவினுடைய திருவுருவப் படத்தை சட்டமன்றத்திற்குள் வைப்பதற்காக பாரதப் பிரதமர் அவர்களிடத்திலே அழைப்பு விடுத்திருக்கின்றேன். ஆனால், ஒரு சில கட்சித்தலைவர்கள், ஏதோ உள்நோக்கத்தோடு, இதயதெய்வம் அம்மாவினுடைய படத்தை சட்டமன்றத்தில் வைப்பது தவறு என்ற எண்ணத்தோடு தெரிவிக்கின்றார்கள். இதை மக்கள் ஏற்றுக்கொள்வார்களா ? ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 6 முறை தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்று சிறந்த முறையில் பணியாற்றினார்கள். இன்றைக்கு இந்திய நாடே வியக்கின்ற அளவிற்கு, இந்திய நாட்டிலுள்ள முதலமைச்சர்களுக்கெல்லாம் சூப்பர் முதலமைச்சராக இருந்து இன்றைக்கு தன் வாழ்நாள் முழுவதும் மக்களுக்காக உழைத்து மறைந்த தலைவர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். பல அரசின் சூழ்ச்சியின் காரணமாக அவர் மீது வேண்டுமென்றே பழி சுமத்தி, வேண்டுமென்றே ஆதாயம் தேடுபவர்களுக்கெல்லாம்

ஒரு முற்றுப்புள்ளி வைத்தார்கள் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். ஆகவே, சட்டமன்றத்திற்குள் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய திருவுருவப் படத்தை வைத்தால்தான், அந்த மன்றத்திற்கே ஒரு பெருமை கிடைக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒருவர் பிறப்பார், வாழ்வார், இறப்பார். இடைப்பட்ட காலத்திலே மக்கள் மனதிலே யார் குடிகொண்டிருக்கிறார்களோ, அவர்கள் தான் சிறந்த தலைவர், அந்தவகையில் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மக்கள் மனத்திலே நிறைந்திருக்கின்றார். இன்றைக்கு வேண்டுமென்றால் அந்தத் தலைவர்கள், சென்னையிலே இருக்கின்ற இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய நினைவிடத்திற்குச் சென்று சற்று நேரம் பார்க்கட்டும். காலையிலிருந்து, மாலை வரை 30,000 பேர், விடுமுறை நாட்களிலே கிட்டத்தட்ட 50,000 பேர் அந்த நினைவகத்திற்குச் சென்று அஞ்சலி செலுத்துகின்ற காட்சியைப் பார்க்கட்டும். ஆகவே, இன்றைக்கு ஆயிரக்கணக்கான மக்கள் அங்கே சென்று அஞ்சலி செலுத்திவருகின்ற, அம்மா அவர்களுடைய திருவுருவப் படத்தை சட்டமன்றத்திலே வைப்பதில் என்ன தவறு இருக்கிறது ? நீதிமன்றமே தீர்ப்பு கொடுத்திருக்கின்றது. அதற்குமேல் என்ன தீர்ப்பு வேண்டும். இந்த நாட்டுக்கு உழைத்த தலைவர்களுக்கு பெருமை சேர்ப்பது தான் நம்முடைய பாரம்பரிய எண்ணம். அந்தவகையிலே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய திருவுருவப்படத்தை சட்டமன்றத்திற்குள் வைப்பதில் எந்த தவறும் இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். யார் மக்கள் மனதில் குடிகொண்டிருக்கிறாரோ, அவருடைய படத்தைத் தான் நாங்கள் சட்டமன்றத்திலே வைக்கின்றோம் என்பதை அந்த தலைவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்ல, நம்முடைய பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா அரசின் சார்பாக தமிழகத்தின் 32 மாவட்டங்களிலும் சிறப்பாகக் கொண்டாடப்படும். இறுதியாக, டிசம்பர் மாதத்திலே, சென்னையிலே, பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும். அந்த விழாவிலே பாரதப்பிரதமர் பங்கேற்க வேண்டுமென்று அழைப்பு விடுத்திருக்கிறோம். அவரும் பங்கேற்பார் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். ஆகவே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும், பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் நம்முடைய அம்மாவினுடைய புகழ் சேர்க்கும், சேர்க்கும் என்று இந்த நேரத்திலே தெரிவித்து, எவர் தடுத்தாலும் அம்மாவினுடைய ஆட்சி சிறந்து செயல்படும். இன்னும் சொல்லப்போனால், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்னென்னவோ கணக்கு போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது அரசு விழாவாக இருக்கின்றது, ஆகவே, இங்கு பேசக்கூடாது என்று நினைக்கின்றேன். ஆனால், தினந்தோறும் ஏதாவது ஒரு அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். தூர்வாருவது நான், அதற்கு நிதிஉதவி செய்வது அம்மாவினுடைய அரசு. ஆகவே, அம்மாவினுடைய அரசு மக்களுக்கு என்ன தேவையோ அதைச் செய்து கொண்டிருக்கிறது. ஆனால் ஒரு சில தலைவர்களுக்கு அதைக்கூட பொறுக்க முடியவில்லை. மக்களிடத்திலே ஏதாவது செல்வாக்கு வந்துவிடுமோ என்ற எண்ணத்தின் அடிப்படையிலே அவர்களும் தூர்வாருகின்றார்கள். பரவாயில்லை, வரவேற்கத்தக்கது. எதிர்க்கட்சிகூட அம்மா அரசு கொண்டு வந்த திட்டத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதற்கு நன்றி என்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தபொழுது,

அப்பொழுதிருந்த எதிர்க்கட்சித் தலைவர் கிண்டலடித்தார். அந்த திட்டத்திற்கு முட்டை போட்டவரும் அவர்கள் தான், சிறந்த திட்டம் என்று ஏற்றுக் கொண்டவரும் அவர்தான். அதைப்போல இன்றைக்கு அம்மாவினுடைய அரசு குடிமராமத்து என்ற அற்புதமான திட்டத்தை விவசாய மக்களுக்கு இன்றைக்கு அளித்திருக்கிறது. அந்தத் திட்டத்திற்கு அவர்களும் வரவேற்பு தந்ததற்கு இந்த நேரத்திலே நன்றி தெரிவித்து

மாண்புமிகு அம்மா வழியில் செயல்படும் இந்த அரசு அம்மா அவர்களின் எண்ணங்களை நிறைவேற்றும் அரசு மக்கள் நலத்திட்டங்களை அம்மாவின் வழியில் தொடர்ந்து செயல்படுத்தி வரும் அரசு மக்களின் நலனுக்காகவே செயல்படும் அரசு இது உங்கள் அரசு உங்கள் நலன் பேணும் அரசு எனச் சொல்லி இந்த விழாவை நல்லமுறையில் ஏற்பாடு செய்த மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தோட்டக்கலைத்துறை மற்றும் சுற்றுலாத்துறை அலுவலர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுதல்களை தெரிவித்துக் கொண்டு இந்த அரசு உங்களின் சேவகனாக தொடர்ந்து பணியாற்றும் என்பதை தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

*திரு.**எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*

27.05.2017 அன்று, 42ஆவது ஏற்காடு கோடை விழா மலர்க் கண்காட்சியில் ஆற்றிய உரை.

நமது மாநிலம் வளர்ச்சி பாதையில் தொடர்ந்து வேகமாக பயணிக்கும்

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. தங்கமணி அவர்களே,

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. சம்பத் அவர்களே,

சி.ஐ.ஐ. தென் மண்டல தலைவர் திரு. விக்ரம் கிர்லோஸ்கர் அவர்களே,

சி.ஐ.ஐ. தென் மண்டல துணைத் தலைவர் திரு. தினேஷ் அவர்களே,

தமிழ்நாடு சி.ஐ.ஐ. இன் தலைவர் திரு. ரவிச்சந்திரன் அவர்களே,

சி.ஐ.ஐ. தென் மண்டலத்தின் மண்டல இயக்குநர் திரு. சதீஷ் ராமன் அவர்களே,

மற்றும் இங்கு வருகை புரிந்துள்ள தொழிலதிபர்களே,

பல்வேறு நிறுவனங்களின் தலைமை அலுவலர்களே,

அரசு அதிகாரிகளே, பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சித் துறை நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் வணக்கம்!

இன்று நடைபெறும் இந்திய தொழில் கூட்டமைப்பின் மூன்றாவது தென்மண்டல மாநாட்டில் கலந்து கொள்வதில் நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.

தொழில் துறையில் மட்டுமின்றி அனைத்து துறைகளிலும் தமிழகத்தை ஒரு முன்னோடி மாநிலமாக திகழச் செய்ய வேண்டுமென்ற மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சீரிய கொள்கையின்படி இந்த அரசு செயல்பட்டு வருகின்றது.

2015 ஆம் ஆண்டில், செப்டம்பர் 9 மற்றும் 10 தேதிகளில், உலகமே பாராட்டும் வகையில், தமிழ்நாட்டில் உலக முதலீட்டாளர் மாநாடு, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டதை அனைவரும் அறிவோம். இந்த மாநாட்டினை செம்மையான முறையில் நடத்திட சிஐஐ (CII) ஆற்றிய அரும் பங்கினை நான் இத்தருணத்தில் நினைவு கூற விரும்புகிறேன்.

தகவல் தொழில் நுட்பம், உற்பத்தித் துறை மற்றும் சேவைத்துறை என அனைத்து துறைகளிலும் சிறப்பான வளர்ச்சியினை காணும் வகையில் முதலீட்டுக்கு தேவையான ஓர் உகந்த சூழல், தமிழகத்தில் எப்போதும் திகழ்ந்து வருகிறது. இந்த வளர்ச்சியினை மேலும் அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும் வகையில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வகுத்துத் தந்த “விஷன் 2023” என்ற தொலைநோக்குத் திட்டம், பல்வேறு துறைகளில், நமது

மாநிலம் எய்த வேண்டிய இலக்குகளையும், செயல்படுத்த வேண்டிய திட்டங்களையும் மிகத் துல்லியமாக குறிப்பிட்டுள்ளது.

இந்த இலக்குகளை எய்தவும், நீண்ட நாள் வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை கொண்டு செல்லவும், அரசுடன் இங்கு வருகை புரிந்துள்ள உங்களைப்போன்ற தொழில் நிறுவனங்களும், தொழில் கூட்டமைப்புகளும் இணைந்து செயல்பட வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். அந்த வகையில் இன்று நடைபெறும் இந்த மாநாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இத்தருணத்தில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2001இல் தொடங்கி வைத்த "Connect" என்ற தகவல் தொழில் நுட்பத் துறை சார்ந்த கருத்தரங்கை தமிழ்நாடு அரசும், சிஐஐயும் இணைந்து கடந்த 16 ஆண்டுகளாக நடத்தி வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தொழில் துறையில் பல முக்கிய செயல் திட்டங்களை, தமிழ்நாடு அரசு தற்போது வகுத்து வருகிறது. மாறி வரும் உலக பொருளாதார சூழ்நிலைகளுக்கேற்ப, இந்த மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பாக, தமிழகத்தில் தொழில் தொடங்கிட, ஏற்கனவே உள்ள உகந்த சூழ்நிலையை மேலும் எளிமைபடுத்தும் வகையில், தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான ஒப்புதல்கள் மற்றும் உரிமங்களை ஒரே விண்ணப்பத்தின் மூலம் ஆன்லைனில் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விரைவில் இது நடைமுறைக்கு கொண்டு வரப்படும். அது மட்டுமன்றி, தேவைப்படின், இதற்கு ஏற்ற சட்டங்களும் இயற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு சான்றாக, மத்திய அரசு தேசியப் பயனுறு பொருளாதார ஆய்வுக் குழு (National Council of Applied Economic Research) வெளியிட்ட மாநில முதலீட்டு உள்ளாற்றல் குறியீட்டு (State Investment Potential Index) அறிக்கையின்படி, நடுத்தர முதலீட்டு முடிவுகளில், அகில இந்திய அளவில் மூன்றாவது இடத்தில் தமிழ்நாடு உள்ளது என்பதை

மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அறிக்கை, தொழிலாளர் எண்ணிக்கை, தரம், திறன், உள்கட்டமைப்பு வசதிகள், மாநிலத்தின் பொருளாதார சூழ்நிலை, அரசியல் ஸ்திரத் தன்மை, ஆளுமை, சட்டம் மற்றும் ஒழுங்கு நிலவரம், தொழில் நிறுவனங்களின் உணர்வுகள் ஆகியவைகளைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது.

தொழில் கொள்கைகளை வகுப்பதில் இதயதெய்வம் புரட்சித்தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் ஏனைய மாநிலங்களுக்கு ஒரு வழிகாட்டியாக திகழ்ந்தவர். கடந்த 2014ஆம் ஆண்டில், தொழில் கொள்கை, தானியங்கி மற்றும் தானியங்கி உதிரிபாகங்களுக்கான தொழில் கொள்கை மற்றும் உயிரி தொழில் நுட்பக் கொள்கை (Biotechnology Policy) ஆகியவற்றை தமிழ்நாடு அரசு வெளியிட்டது. காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் சிப்காட் வளாகத்தில் சுமார் 267 ஏக்கர் பரப்பளவில் வான்வெளி பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது என்பதையும், இத்திட்டம் தமிழக அரசின் டிட்கோ நிறுவனத்தால் செயல்படுத்தப்படுகிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் அடுத்த கட்டமாக, விரைவில் புதிய வான்வெளி மற்றும் பாதுகாப்பு துறை தொழில் கொள்கை (Aerospace and Defence Policy) வெளியிடப்படவுள்ளது. தமிழகத்தின் மிக சிறந்த உட்கட்டமைப்பு வசதிகள், அதாவது சிறப்பான சாலை வசதி, நான்கு பெரிய துறைமுகங்கள், 20 சிறிய துறைமுகங்கள், 7 விமான நிலையங்கள் மற்றும் தடையில்லா தரமான மின்சாரம் ஆகியவை தமிழ்நாட்டினை எப்போதுமே முதலீட்டுற்கு உகந்த மாநிலமாக திகழ வைத்துள்ளது. மேலும், தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியினை மேம்படுத்தும் வகையில், மதுரை – தூத்துக்குடி “தொழிற் பெருவழிச்சாலை திட்டம்” ஒன்றினைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. இதற்குத் தேவையான நில எடுப்பு இரண்டு மாவட்டங்களில் நிறைவுபெற்றுள்ளது என்பதையும் மன நிறைவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிற்கு வரும் புதிய தொழில் முதலீடுகள், துவங்கப்படும் புதிய நிறுவனங்கள் குறித்த ஒரு சிறந்த அளவுகோல் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு துறையினால் வழங்கப்பட்ட தொழில் துவங்குவதற்கான அனுமதி (Consent to Operate) ஆகும். மே, 2011 முதல் மே, 2017 வரை இத்துறையினால் வழங்கப்பட்ட அனுமதி (Consent to Operate) 15,671 ஆகும். அதுமட்டுமல்லாமல், 2011 முதல் 2017ஆம் ஆண்டு வரை, தமிழகத்தில் அளிக்கப்பட்ட புதிய உயர் அழுத்த மின் இணைப்புகள் 2472 ஆகும். மேற்கண்ட கால கட்டத்தில், தமிழகம் ஈர்த்த மொத்த அந்நிய நேரடி முதலீடு 1,25,970 கோடி ரூபாய் ஆகும். மே, 2011 முதல் டிசம்பர் 2016 வரையிலான காலத்தில், மாநிலம் ஈர்த்த அந்நிய நேரடி முதலீட்டு வளர்ச்சி விகிதம், 263 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம் வெளியிட்டுள்ள தகவலின்படி, 2011 முதல் 2017 வரை தமிழ்நாட்டில் உறுதி செய்யப்பட்ட முதலீடு 3,07,457 கோடி ரூபாய். இது மட்டுமன்றி, மத்திய அரசு மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி ஆகியவற்றுடன் இணைந்து விசாகப்பட்டினம் – சென்னை – தூத்துக்குடி – கன்னியாகுமரி வரை ஒரு தொழிற் பெருவழிச்சாலை அமைப்பதற்கு பணிகள் நடைபெற்று வருகின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்படி திட்டங்கள் செயலாக்கத்திற்கு வரும்பொழுது தமிழகம் முழுவதும் வரலாறு காணாத மிகப்பெரிய பொருளாதார மாற்றமும் வளர்ச்சியும் ஏற்படும் என்பது உறுதி.

உலக முதலீட்டாளர் மாநாட்டில், கையொப்பமிடப்பட்ட ரூ.2.42 இலட்சம் கோடி மதிப்பிலான 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில், ரூ.62,738 கோடி மதிப்பிலான 61 திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் செயலாக்கத்தில் உள்ளன என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் 76,777 நபர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி திட்டங்கள் அனைத்தும் உன்னிப்பாக தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, அவைகள் விரைந்து செயலாக்கத்திற்கு கொண்டுவருவதற்கு தேவையான அனைத்து ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளையும் தமிழக அரசு எடுத்து வருகிறது. கடந்த உலக முதலீட்டாளர் மாநாடு வெற்றிகரமாக நடத்தப்பட்டதைத் தொடர்ந்து, அடுத்த உலக முதலீட்டாளர் மாநாட்டினை 2018 ஆம் ஆண்டில் மிகச் சிறப்பாக தமிழ்நாடு அரசு நடத்தும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியினை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதற்கு தேவையான கொள்கை அளவிலான மாற்றங்கள், புதிய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், தொழில் துவங்கி நடத்தும் சூழ்நிலையை எளிமைபடுத்துதல், மனித வள மேம்பாட்டிற்கு மேலும் முன்னுரிமை அளித்தல் ஆகியவற்றினை இந்த அரசு தொடர்ந்து செய்யும் என்றும், இந்த பணியினைச் செயல்படுத்துவதற்கு, தொழில் முனைவோர் மற்றும் சிஐஐ போன்ற தொழில் கூட்டமைப்புகளின் ஒத்துழைப்பினை நான் இத்தருணத்தில் கோருகிறேன். நாம் இணைந்து செயலாற்றும் பொழுது, நமது மாநிலம் வளர்ச்சி பாதையில் தொடர்ந்து வேகமாக பயணிக்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

இந்த நல்ல வாய்ப்பினை எனக்கு நல்கிய சிஐஐ அமைப்பின் தலைவர் மற்றும் அனைத்து நிருவாக பொறுப்பாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சி சிறப்பாக நடக்கவும், நிகழ்ச்சியின் பலன் நமது மாநிலத்திற்கு கிடைக்கவும், எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
03.06.2017 அன்று இந்திய தொழில் கூட்டமைப்பின்
CII மூன்றாவது தென்மண்டல மாநாட்டில் ஆற்றிய உரை.

தமிழ்நாடு அரசு நோயில்லா மாநிலமாக உருவாக உழைத்த ஒரு தாயின் கனவுதான் இந்த மருத்துவக்கல்லூரி!

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்கி, இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

மக்கள் போற்றும் மகத்தான தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு இவ்விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு மக்களவை துணை சபாநாயகர் முனைவர் மு.தம்பிதுரை அவர்களே,

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்களே,

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

விழாவில் வரவேற்புரையாற்றியுள்ள மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் அவர்களே,

திருச்சிராப்பள்ளி நாடாளுமன்ற உறுப்பினர், திரு.ப.குமார் அவர்களே,

இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர், திரு.எ.அன்வர்ராஜா அவர்களே,

சிவகங்கை நாடாளுமன்ற உறுப்பினர், திரு.பி.ஆர்.செந்தில்நாதன் அவர்களே,

அறந்தாங்கி தொகுதி சட்டமன்ற உறுப்பினர், திரு. இ. எ. இரத்தினசபாபதி அவர்களே,

கந்தர்வகோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர், திரு.பா.ஆறுமுகம் அவர்களே,

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்களே,

நன்றியுரை நிகழ்த்தவுள்ள புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் அவர்களே,

அரசு அலுவலர்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே,

வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே,

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்ட மக்களின்பால் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு எப்பொழுதும் அளவு கடந்த அன்பும், பாசமும் உண்டு.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரியாசனம் செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் இருந்தாலும் அவர்களின் எண்ணம் புதுக்கோட்டையின் வளர்ச்சியைச் சுற்றியே இருந்தது. அதற்கான காரணத்தை தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் புதுக்கோட்டையின் வரலாற்றை திரும்பிப் பார்க்க வேண்டும்

புதுக்கோட்டை மாவட்டத்தை கி.பி. 9ஆம் நூற்றாண்டிலிருந்து 19ஆம் நூற்றாண்டு வரை பாண்டியர்களும், சோழர்களும், மதுரை நாயக்கர்களும் தொண்டைமான் மன்னர்களும் ஆட்சி செய்தார்கள்.

பல மன்னர்கள் பல காலகட்டங்களில் டெல்லி செங்கோட்டையை ஆண்டது போல புதுக்கோட்டையையும் பல மன்னர்கள் ஆண்டுள்ளார்கள். அதனால்தான் இம்மாவட்டத்தில் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பல நினைவுச் சின்னங்கள் கிடைத்திருக்கின்றன.

சுமார் 1200 கல்வெட்டுகள் பல குடவரைக் கோயில்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில்தான் அதிக எண்ணிக்கையில் உள்ளன. தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள 38 பாரம்பரியமிக்க இடங்களில் இம்மாவட்டத்தில் உள்ள சித்தன்னவாசலும் ஒன்று. புதுக்கோட்டை மாவட்டத்தின் புகழை பறைசாற்ற சித்தன்னவாசல் ஓவியங்கள் மட்டுமே போதும்.

ஆன்மீக திருக்கோயில்களையும் அழகான சுற்றுலா இடங்களையும் அதிகமாக கொண்டது இம்மாவட்டம். கருநாடக சங்கீத விதிகளை விளக்குகின்ற கல்வெட்டு இந்த மாவட்டத்தில்தான் உள்ளது.

அருணகிரிநாதரால் பாடல் பெற்ற விராலிமலையை உள்ளடக்கியது இந்த மாவட்டம். இங்குள்ள பழம் பெருமை மிக்க நார்த்தா மலை சிவன் கோயில் இப்போதும் பன்னாட்டு பக்தர்களை ஈர்த்து வருகிறது.

மாணிக்கவாசகர்வரலாற்றோடுதொடர்புடையதிருப்பெருந்துறை ஆவுடையார்கோவில் இந்த மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கிறது. இங்கு நடைபெறும் தேர்த்திருவிழாவில் முஸ்லீம் பெரியவர் ஒருவரின் சமாதியில் சந்தனகூடுவிழா நடத்துவதின் மூலம் சமய நல்லிணக்கத்திற்கு இம்மாவட்டம் இப்போதும் எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

எல்லையூர் பூதபாண்டி, ஆலூர் மூலங்கிழார், மாடலன் மதுரைக் குமரன் போன்ற சங்ககால பெரும்புலவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் பிறந்து தமிழுக்கும் தமிழருக்கும் பெருமை சேர்த்தார்கள்.

புதுக்கோட்டை மாவட்டம் தமிழக வரலாற்றிலும், தமிழ் இலக்கியத்திலும் முக்கிய இடத்தைப் பிடித்த ஒரு பெருமைக்குரிய மாவட்டம். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள் புதுக்கோட்டையில் பிறந்து, சாதித்து வரலாற்று பக்கங்களில் இடம் பிடித்தவர். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள் தமிழகத்தின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர் என்ற பெருமைக்குரியவர்.

இப்பெருமைக்குரிய புதுக்கோட்டை நகரின் புதிய மருத்துவமனை திறந்து வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், 25.08.2015 அன்று சட்டமன்றப் பேரவையில், பேரவை விதி எண் 110இன் கீழ் புதுக்கோட்டையில் ஒரு புதிய அரசு மருத்துவக் கல்லூரி தொடங்கப்படும் என்று அறிவித்ததற்கு இணங்க, புதுக்கோட்டையில் 231 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய மருத்துவக் கல்லூரியை உருவாக்கி அதை இன்று தொடங்கி வைக்கும் அரிய வாய்ப்பை நான் பெற்றிருக்கின்றேன் .

இம்மருத்துவக் கல்லூரியில் இயல் கூடம், விரிவுரை அரங்கம், நூலகம், கூட்ட அரங்கம், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தங்கும் விடுதிகள், சிறப்பாக கட்டப்பட்டுள்ளன.

அதுமட்டுமின்றி, 700 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனை, புறநோயாளிகள் பிரிவு, நிருவாக பிரிவு, நவீன சமையல் கூடம் போன்ற பல வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளன. புதுக்கோட்டை மருத்துவக் கல்லூரி, நமது மாநிலத்தில் 22ஆவது அரசு மருத்துவக் கல்லூரியாக செயல்படும்.

ஏழை எளிய மக்களுக்கு தங்கு தடையின்றி சுகாதார சேவைகள் வழங்கப்பட வேண்டும் என்பதே மறைந்த மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் செயல்படும் அம்மாவின் அரசின் உயர்ந்த குறிக்கோளாகும்.

மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் படிப்படியாக அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட வேண்டும் என்பது இந்த அரசின் கொள்கையாகும்.

இதன்படி, சிவகங்கை, திருவண்ணாமலை, சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகம் மற்றும் கோயம்புத்தூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை ஆகிய நான்கு இடங்களில் தலா 100 மருத்துவ மாணவர்கள் சேர்க்கையுடன், நான்கு புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.

கடந்த ஆறு ஆண்டு காலத்தில், எப்பொழும் இல்லாத அளவிற்கு, தமிழ்நாட்டில் கூடுதலாக 1000 மருத்துவப் பட்டப்படிப்பு இடங்களை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது. அதுமட்டுமல்லாமல்,

அரசு மருத்துவக் கல்லூரிகளில் 403 முதுநிலை பட்ட மேற்படிப்பு இடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதில் இந்த ஆண்டு மட்டும் 305 இடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அரசு உயர்நிலை மருத்துவமனைகளின் கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதற்காக இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மாவின் அரசு 1,489 கோடியே 33 இலட்சம் ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

மேலும், 212 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் 175 கோடி ரூபாய் செலவில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இந்திய நாட்டிலேயே

முதன்முதலாக, மாநிலத்தில் சுகாதாரத் துறைக்கென தனியாக மருத்துவப் பணிகள் தேர்வு வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.

இதுவரை 8 ஆயிரத்து 692 மருத்துவர்கள், 9 ஆயிரத்து 190 செவிலியர்கள் உட்பட 20 ஆயிரத்து 852 பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ், கருவுற்ற தாய்மார்களுக்கு வழங்கப்படும் நிதி உதவி 12,000 ரூபாயிலிருந்து 18,000 ரூபாயாக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் வாயிலாக இதுவரை 3,687 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில், 39 இலட்சத்து 59 ஆயிரம் கர்ப்பிணிப் பெண்கள் பயனடைந்துள்ளனர். கிராமப்புற வளர் இளம் பெண்கள், பெண் சிறைக் கைதிகள், அரசு மனநல மருத்துவமனையில் சிகிச்சை பெறும் பெண் நோயாளிகள் ஆகியோருக்கு விலையில்லா 'சானிட்டரி நாப்கின்' கடந்த ஆறு ஆண்டுகளில் 330 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்களால் புதியதாக "அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம்" என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு இது வரை, 9.34 இலட்சம் தாய்மார்களுக்கு அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது.

அது போன்று, அம்மா ஆரோக்கிய திட்டம் என்ற புதிய திட்டம் 03.03.2016 அன்று தொடங்கப்பட்டு, மே, 2017 வரை 20 இலட்சத்து 89 ஆயிரத்து 159 நபர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

ஏழை எளிய மக்களுக்கு நவீன மருத்துவ வசதிகள் வழங்கப்படவேண்டும் என்பதற்காகவும், அனைவருக்கும் சுகாதார வசதி கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1.58 கோடி குடும்பங்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. அரசு மருத்துவமனைகள் உட்பட 751 மருத்துவமனைகள் சிகிச்சை அளித்து வருகின்றன.

சிறப்பு சிகிச்சைகளுக்கு தற்போது வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை 1.5 இலட்சம் ரூபாயிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

இதுவரை, 19 இலட்சத்து 4 ஆயிரம் நபர்களுக்கு 3 ஆயிரத்து 969 கோடி ரூபாய் செலவில் மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

உடல் ஆரோக்கியத்தை கண்டறிய அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம் முன்னோடித் திட்டமாக சென்னை அரசு மருத்துவமனையில் 01.03.2016 அன்று தொடங்கப்பட்டது.

மகளிருக்கு என்று தனியாக அம்மா மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனை திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் இதுவரை 15,997 நபர்கள் பரிசோதனை செய்து கொண்டுள்ளனர்.

சுகாதாரத்தில் இந்தியாவில் முதன்மை மாநிலமாக்கிய பெருமை புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு. மாண்புமிகு அம்மா அவர்கள் 2001ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் அமைக்கும் உன்னத திட்டத்தினை இந்தியாவிற்கே அறிமுகப்படுத்தினார்கள்.

இதன்மூலம் ஊரக சுகாதார புரட்சிக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் வித்திட்டார்.நாட்டில் சுகாதாரமான சூழ்நிலையை 2003ஆம் ஆண்டு அம்மா அவர்கள் “தூய்மையான கிராம இயக்கம்” என்ற ஒரு மகத்தான திட்டத்தை துவக்கி வைத்தார்கள்.

அம்மா அவர்களின் நோக்கம் வெற்றியடைய நாம், நம்முடைய கிராமத்தையும், நகரத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று அன்பாக வேண்டிக் கொள்கிறேன்.

நீட் தேர்வை அறிமுகப்படுத்துவது, மாநிலத்தின் உரிமையை மீறும் செயலாகும். கிராமப்புற மாணவர்களும், வறிய சமூக பொருளாதார அமைப்பிலிருந்து வரும் மாணவர்களும் பொது நுழைவுத் தேர்வில் நகர்புற மாணவர்களுடன் போட்டி போட முடியாது; மேலும் நகர்புற மாணவர்களுக்கு உதவும் வகையில் இந்த தேர்வு வடிவமைக்கப்பட்டுள்ளது.

கிராமப்புற மாணவர்களுக்கு நகர்புற மாணவர்களைப் போல் போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தாலும், பயிற்சி நிறுவனங்களில் சேர்ந்து பயிலும் வாய்ப்பினை கிராமப்புற இளைஞர்கள் பெறமுடியாமல் இருப்பதாலும், அது அவர்களுக்கு மிகுந்த பின்னடைவை ஏற்படுத்தும்.

தமிழ்நாடு அரசு மருத்துவ மாணவர் சேர்க்கைக்கு பொது நுழைவுத் தேர்வை ரத்து செய்தால் சமூக பொருளாதார நிலையில் பின்தங்கியிருந்த பெருவாரியான மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

இதனால் பொது நுழைவுத் தேர்வை தொடர்ந்து தமிழ்நாடு அரசு எதிர்த்து வருகிறது. 'நீட்'—லிருந்து தமிழகத்திற்கு நிரந்தர விலக்கு அளிக்குமாறு பாரதப் பிரதமர் அவர்களை கோரியுள்ளேன். மாநிலத்தில் மருத்துவம் மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளில் தற்போதுள்ள நியாயமான மற்றும் வெளிப்படையான மாணவர்கள் சேர்க்கை முறையை தொடரும் பொருட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ள இரண்டு சட்ட வரைவுகளுக்கும் விரைவாக ஒப்புதல் அளிக்கும்படி மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை இந்த நேரத்தில் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் 27.2.2017 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களையும் மாண்புமிகு மத்திய சட்டம் மற்றும் நீதித் துறை அமைச்சர் அவர்களையும் நேரில் சந்தித்து வலியுறுத்தியுள்ளேன். நல்ல தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

பண்டைய மன்னர்களின் குடிமராமத்துத் திட்டத்திற்கு புத்துயிர் கொடுத்து நீர்நிலைகளை பராமரிக்கும் விதமாக ஏரி, குளங்களை

தூர்வாரும் பணியை நான் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொடங்கி வைத்தேன்.

வண்டல் மண்ணை கட்டணமில்லாமல் எடுத்து விவசாயப் பெருமக்கள் தங்கள் நிலங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம் என்றேன். இன்று தமிழ்நாடு முழுவதும் குடிமராமத்துப்பணிகள் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மக்கள் விவசாயிகள் பங்களிப்புடன் சிறப்பாக நடந்து வருகின்றன.

புதுக்கோட்டை மாவட்டத்தை பொறுத்தவரை 192 பணிகள், 13 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. அதன் விளைவாக வருகிற பருவமழையில், நீர் வீணாகாமல் சேமிக்கப்பட்டு மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் என்று நம்புகின்றேன்.

இதனால் விவசாயிகளுக்கு நிலத்தடி நீர் உயரும். இதனால் தேவையான நீர் கிடைத்து விவசாய பெருகுடிமக்கள் பயன்பெறுவார்கள் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம் 1974ஆம் ஆண்டு புதிய மாவட்டமாக மலர்ந்தது. ஆனால், 1912ஆம் ஆண்டே புதுக்கோட்டை நகராட்சி உருவாக்கப்பட்டு விட்டது.

2012ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மாவின் ஆட்சியின் போது புதுக்கோட்டை நகராட்சி நூற்றாண்டுகள் நிறைவு செய்திருந்தது. அதனை நினைவு கூரும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் புதுக்கோட்டை நகராட்சியின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக தாயுள்ளத்தோடு 50 கோடி ரூபாய் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழங்கினார்கள்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் குடுமியான்மலையில் 50 கோடி ரூபாய் செலவில் வேளாண்மைக்கல்லூரி தொடங்கப்பட்டு கடந்த நான்கு ஆண்டுகளாக இயங்கி வருகிறது.

அதில் 174 மாணவ மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். 617 கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவில் 3,517 குக்கிராமங்கள் பயன்பெறும் வகையில் காவிரி கூட்டுக்குடிநீர் திட்டப்பணிகள் இரண்டு கட்டங்களாக நடைபெற்று வருகிறது.

இப்பணிகள் விரைவில் முடிவுற்று 10 இலட்சம் இம்மாவட்டத்திலுள்ள மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். கந்தர்வ கோட்டையில், 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2014ஆம் ஆண்டு அரசு பாலிடெக்னிக் தொடங்கப்பட்டு 650 மாணவர்கள் இன்றைக்கு பயன் பெறுகின்றனர்.

விராலிமலையில், 2015ஆம் ஆண்டு ஐ.டி.ஐ. தொடங்கப்பட்டு வருடத்திற்கு 192 மாணவர்கள் பலனடைந்து வருகிறார்கள்.

மேலும், கந்தர்வ கோட்டை வட்டத்தில் மருதகோன் விடுதியில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டு 800 மாணவர்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

அதே போல், ஆவுடையார்கோயிலிலும் 2 கோடி ரூபாயில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டு 800 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். இப்படிப்பட்ட பல்வேறு திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு புதுக்கோட்டை மாவட்டத்திற்காக தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

வறட்சியிலிருந்து மக்களை காப்பாற்றுவதையே தலையாயக் கடமையாகக் கொண்டு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு உழைத்து வருகிறது. எங்களுக்கு அம்மா சொன்ன தாரக மந்திரம் அதிகமாக பேசாதீர்கள்!

அதிகமாக செயல்படுங்கள்! உங்கள் எண்ணம் முழுவதும் மக்கள் பணியாகவே இருக்க வேண்டும், என்றார்கள்!

எங்களைப் பொறுத்தவரை, மக்கள் பணிதான் முக்கியம். அம்மா வழியில் நாங்கள் ஒத்த கருத்தோடு, ஒருமித்த எண்ணத்தோடு அயராது உழைப்போம் என்று இந்த நேரத்தில் உறுதிகூற கடமைப் பட்டிருக்கிறேன்.

நிறைவாக ஒரு கதையைக் கூறி என் உரையை நிறைவு செய்ய விரும்புகின்றேன்.

ஒரு காட்டில் ஓநாயும், நரியும் நண்பர்கள் அவை இரை ஒன்றும் கிடைக்காமல் அலைந்து திரிந்து கொண்டிருந்தன. மனவிரக்தியில் தனித்து வாழ்ந்து கொண்டிருந்த ஒரு புலியோடு ஓநாயும், நரியும் கூட்டு வைத்துக் கொள்ள தீர்மானித்து பேச்சு வார்த்தை நடத்தியது. “மூன்று பேரும் ஒருதாய் மக்களாக ஒற்றுமையாக இருக்க வேண்டும்! எந்த இரை கிடைத்தாலும் அதை பங்கு போட்டு சாப்பிட வேண்டும்” என்று ஒப்பந்தம் செய்து கொண்டன.

நமக்கு ஒரு வலிமையான தலைவன் கிடைத்துவிட்டான் என்று ஓநாயும், நரியும் ஊளையிட்டு.. ஊளையிட்டு.. தன் மகிழ்ச்சியை காடு முழுவதும் தெரிவித்து வந்தன. ஒரு நாள் புலிக்கு ஓநாய், நரி மீது சந்தேகம் வந்தது. “ஒரு மானை வேட்டையாடினால் அதை எப்படி பங்கு போட்டுக் கொள்வது ?” என்று கேட்டது.

அதற்கு ஓநாய் “புலியே! நீதான் எங்கள் தலைவன், அதனால் மானின் தலை உங்களுக்கு, இந்த நரி, வேகமாக ஓடக்கூடியது.. அதனால் மானின் நான்கு கால்களும் இந்த நரிக்கு கொடுக்கலாம். மீதியிருப்பது உடம்புதான்.. அதை நான் எடுத்துக்கொள்வேன்!” என்றது. ஓநாயின் சூழ்ச்சியைத் தெரிந்து கொண்ட புலி ஓநாய் தலையில் ஓங்கி அடித்தது. ஓநாய் வலி தாங்காமல் ஊளையிட்டது.

“நரியே நீ எப்படி பங்கு போடுவாய்!” என்று புலி நரியிடம் கேட்டது.

இந்தக் காட்டுக்கே தலைவரான சிங்கத்தை நாட்டாமையாக வைத்து நாம் பிரித்துக் கொள்ளலாம்” என்றது நரி.

மூன்று பேரும் சிங்கத்தை அணுகினார்கள் சிங்கம் மூன்றுபேரும் சொல்வதை கேட்டு “நாட்டாமைக்கும் ஒரு பாகம் தர வேண்டும்” என்ற நிபந்தனையோடு “நீங்கள் வேட்டையாடிய மானை இங்கே கொண்டு வந்து போடுங்கள் நான் பிரித்துக் காட்டுகிறேன்” என்றது.

மற்ற மூன்று பேரும் ஒன்றை ஒன்று பார்த்து திருதிருவென விழித்தபடி "இனிமேல்தான் வேட்டையாட வேண்டும்" என்று கூறின. கிடைக்காத ஒன்றுக்காக இத்தனை போராட்டமா ? ஆரவாரமா ?

"புலியே! இந்த விலங்குகளின் நயவஞ்சக பேச்சைக் கேட்டு நீ உன் இனத்தை விட்டு பிரிந்து வந்தது தப்பு, உடனே உன் இனத்தோடு சேர்ந்து விடு" நாட்டாமையே தீர்ப்பு சொன்ன பிறகு புலி பதுங்குவதும், தயங்குவதும் ஏன் என்று தெரியவில்லை.

மாண்புமிகு அம்மா அவர்கள் உலகமே வியக்கும் அளவிற்கு நிருவாகத்திறமை உடையவர்கள்.

கனிவையும் கண்டிப்பையும் இரு கண்களாகக் கொண்டவர்கள். தவறு செய்தவர்கள் திருந்தி வந்தால் மனதார ஏற்றுக் கொள்வார்கள்,

அம்மா எப்படியோ, அதுபோல் அம்மாவின் பிள்ளைகளாகிய நாங்களும் நடந்து கொள்வோம்.

தமிழ்நாட்டில் அம்மாவின் பொற்கால ஆட்சி நிரந்தரமாக நடைபெற அவர்களுடைய பிள்ளைகளாகிய நாம் அனைவரும் ஒன்றிணைந்து, ஆட்சிக்கு துணையாகவும், தூணாகவும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இது அம்மாவின் அரசு! "மக்களால் நான், மக்களுக்காக நான்" என்ற அம்மாவின் வேத வாக்கை ஏற்று, மக்களுக்காக உழைக்கும் அரசு தமிழ்நாடு நோயில்லா மாநிலமாக உருவாக உழைத்த ஒரு தாயின் கனவுதான் இந்த புதுக்கோட்டை மருத்துவக் கல்லூரி. மாண்புமிகு அம்மா அவர்களின் கனவாகவும் நினைவாகவும் மலர்ந்திருக்கின்ற இந்த மருத்துவக்கல்லூரியை திறந்து வைத்ததில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

இது உங்கள் அரசு உங்கள் நலன் பேணும் அரசு எனச் சொல்லி மணல் குவாரியை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று மக்கள் கோரிக்கை வைத்தார்கள்.

இந்த மக்களுடைய நீண்ட கால கோரிக்கையை ஏற்று, அதன் அடிப்படையில் அம்மாவுடைய அரசு மணல் குவாரியை ஏற்று நடத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் பொதுமக்களுக்கு கட்டுமான பணிகளுக்கு தடையின்றி எளிதாக மணல் கிடைக்கும் வகையில் தமிழக அரசால் அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது செயல்பட்டுவரும் 28 மணல் குவாரிகளிலிருந்து தினசரி சுமார் 5000 லோடு மணல் பொதுப்பணித் துறை மூலம் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. இன்னும் ஒரு சில நாட்களில் கூடுதல் மணல் குவாரிகளை திறந்து பொதுமக்களுக்கு தங்குதடையின்றி மணல் விநியோகம் செய்யப்படும் என்ற கருத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். மணல் குவாரிகளில் இரண்டு யூனிட் மணல் ரூபாய் 1050 என்ற விலைக்கு விற்கப்படுகிறது. எனவே, யாரேனும் கூடுதல் விலை வைத்து பொதுமக்களுக்கு விற்பனை செய்தால், அவர் மீது அரசு கடும் நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, மிகச் சிறப்பாக, மிக அற்புதமாக இந்த விழாவை நடத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய விஜயபாஸ்கர் அவர்களுக்கும், அவரோடு இணைந்து பணியாற்றிய நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அனைத்து கழக உடன்பிறப்புகளுக்கும், அரசு அதிகாரிகளுக்கும், மருத்துவத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் எனது நன்றியை தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி!

வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு.**எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
09.06.2017 அன்று, புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரியை துவக்கி வைத்து, கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டடங்களைத் திறந்து வைத்து ஆற்றிய உரை.

★ ரூ.692.3 கோடி மதிப்பீட்டில் 4,161 பணிகளுக்கு அடிக்கல்!

★ ரூ.31.60 கோடி மதிப்பீட்டில் 50 பணிகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறப்பு!

★ ரூ.13.25 கோடி மதிப்பீட்டில் 3,701 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்கி, திராவிட கட்சிகளின் தொடக்கப்பள்ளியான இந்த ஈரோடு மண்ணுக்கு வந்து உங்களையெல்லாம் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

மக்கள் போற்றும் மகத்தான தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு ஈரோட்டில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா, முடிவுற்ற பணிகளை துவக்கி வைக்கும் விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா என முப்பெரும்விழாவாக இவ்விழா சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது.

இந்த இனியவிழாவில் தலைமையுரையாற்றிய மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே,

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.பி. தங்கமணி அவர்களே,

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி அவர்களே,

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. கே.சி.கருப்பணன் அவர்களே,

ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர், திரு. எஸ். செல்வகுமார சின்னையன் அவர்களே,

ஈரோடு மேற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர், திரு. கே.வி.ராமலிங்கம் அவர்களே,

ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர், திரு. கே.எஸ்.தென்னரசு அவர்களே,

மொடக்குறிச்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.வே.போ.சிவசுப்பிரமணி அவர்களே,

அந்தியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. இ.எம்.ஆர்.ராஜா (எ) கே.ஆர்.ராஜாகிருஷ்ணன் அவர்களே,

காங்கேயம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.உ. தனியரசு அவர்களே,

பவானிசாகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.சு.ஈஸ்வரன் அவர்களே,

வரவேற்புரை வழங்கிய ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் எஸ். பிரபாகர் அவர்களே,

நன்றியுரை வழங்கவுள்ள ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் திரு.மு.சீனிஅஜ்மல்கான் அவர்களே,

அரசு அலுவலர்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே,

வணக்கத்திற்குரிய பெரியோர்களே,

தாய்மார்களே, பயனாளிகளே,

உங்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு, இன்றைக்கு ஈரோடு என்று சொன்னாலே அம்மாவினுடைய கோட்டை. 2016 சட்டமன்ற தேர்தலிலே மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவால் நிறுத்தப்பட்ட அனைத்து சட்டமன்ற வேட்பாளர்களும் வெற்றி பெற்று இருக்கக்கூடிய ஒரே மாவட்டம் நம்முடைய ஈரோடு மாவட்டம். அம்மாவுக்கு பெருமை சேர்த்த மாவட்டம், அம்மாவினுடைய எஃகு கோட்டையாக விளங்குகின்ற மாவட்டம் ஈரோடு மாவட்டம் என்று இந்த நேரத்திலே குறிப்பிட்டு அப்படி அம்மாவினுடைய கோட்டையாக விளங்குகின்ற இந்த மாவட்டத்திலே நான் வந்து உரையாற்ற நல்வாய்ப்பினை உருவாக்கித் தந்த, இங்கே மேடையிலே இருக்கின்ற அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் முதலிலே, மீண்டும் நன்றியை தெரிவித்துக் கொண்டு,

அன்னிய ஆதிக்கத்துக்கு எதிராக போரிட்டதற்காக வெள்ளையர்களால் தூக்கிலிடப்பட்ட தீரன் சின்னமலை என்ற ஈரோட்டு வீரமகனை நினைவு கூரும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஈரோட்டு ஓடாநிலையில் மணிமண்டபமும், அவர் தூக்கிலிடப்பட்ட சேலம் சங்ககிரியில் நினைவு சின்னமும் அமைத்தார்கள்.

பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே நதிநீர் இணைப்பிற்கு வித்திட்ட காளிங்கராயன் அவர்களுக்கு பெருமை சேர்க்கும் விதத்தில் அவருக்கு மணிமண்டபம் அமைத்திட, மாண்புமிகு அம்மா அவர்கள் **2016–ம்** ஆண்டு ஒரு கோடியே **65** இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்தார்.

இம்மணி மண்டபத்தில் **6** அடி உயரத்தில் காளிங்கராயன் அவர்களது முழுஉருவ வெண்கலச்சிலை அமைக்கப்பட்டு இந்த ஆண்டு இறுதிக்குள் மணிமண்டபம் திறந்து வைக்கப்படும். அந்த மண்டபத்தையும் ஆரம்பித்தவர் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். உலக புரட்சி சிந்தனையாளர்கள் வரிசையில் ஒருவராக விளங்கி, தமிழரின் வழிகாட்டியாக திகழ்ந்த, பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் இந்த ஈரோட்டு மண்ணில் பிறந்து ஈரோட்டை உலகம் அறியச் செய்தார்.

தமிழக அரசியலை மாற்றி அமைக்க தன் நாவையும், எழுதுகோலையும் பயன்படுத்திய தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணாஅவர்கள் சில வருடங்கள் தந்தை பெரியாருடன் ஈரோட்டில் தங்கி எழுத்துப் பணியாற்றியுள்ளார்.

இலக்கியம், வரலாறு, தொல்பொருள் என பல்வேறு சிறப்புகளைப் பெற்ற ஈரோட்டுக்கு வந்துபோவதால் என்னைப் போன்ற பொதுவாழ்க்கையில் ஈடுபடுபவர்களுக்கு புத்துணர்ச்சி ஏற்படுகின்றது.

பழமையும், பெருமையும் மிக்க ஈரோடு மாநகரம் கட்டமைப்பிலும், சாலை மேம்பாட்டிலும் சிறந்து விளங்க வேண்டும் என்பது மாண்புமிகு அம்மாவின் விருப்பமாக இருந்தது. அம்மாவின் விருப்பத்தை நிறைவு செய்வது எங்கள் கடமை. ஈரோடு மாநகரம், தொழிற்சாலைகள் மற்றும் வணிக வளாகங்கள் நிறைந்த நகரமாக விளங்குகிறது.

விசைத்தறி, கைத்தறி மற்றும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை இங்கு ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது.

இதனை கருத்தில் கொண்டுதான் இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் போக்குவரத்து நெரிசலை சீர்படுத்துவதற்கு ஈரோடு–பெருந்துறை–காங்கேயம் சாலை சந்திப்பில் மேம்பாலம் அமைப்பதற்காக நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறைக்கு 58 கோடியே 54 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்தார்கள்.

இந்த மேம்பாலம் அமைக்கும் பணிக்கு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாசியோடு, இன்று அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்விடத்தில் மேம்பாலம் அமைப்பதினால் வணிக நகரமான ஈரோட்டிற்கு பெருந்துறை, காங்கேயம், பழனி, திருப்பூர், கோயம்புத்தூர், சேலம், நாமக்கல், கரூர் ஆகிய நகரங்களிலிருந்து வரும் வாகனங்கள் தடையின்றி சென்று வர பயனுள்ளதாக அமையும்.

அலுவலகம் மற்றும் வணிகத்திற்கு செல்லும் பொது மக்கள், கல்லூரிகள், பள்ளிகளுக்கு செல்லும் மாணவ மாணவிகள் மற்றும் அவசர உதவிக்கு எதிர்ப்புறமுள்ள மருத்துவமனைக்குச் செல்லும் ஊர்திகள் இந்த சந்திப்பை கடந்து செல்லும் கட்டாயம் உள்ளதால் அவர்களுக்கு இப்பாலம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இந்த மேம்பாலம் பிரஃப் ரோடு – பெருந்துறை மார்க்கத்தில் இருவழித் தடமாகவும், தாராபுரம் மார்க்கத்தில் இடைவழி தட பாலமாகவும் அமைக்கப்படவுள்ளது.

இம் மேம்பாலத்தில் பயன்பாட்டு சாலைகள், நடைபாதை வசதிகள் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கப்படவுள்ளது. இச்சந்திப்பில் 30 மீட்டர் விட்டம் கொண்ட ரோட்டரி அமைத்து, நீரூற்று மற்றும் இயற்கை நிலக்காட்சி அமைத்து மேம்பாடு செய்யப்படவுள்ளது.

பாதசாரிகள் செல்லவும் மற்றும் பயன்பாட்டு சாதனங்களை கொண்டு செல்லவும் பாலத்தின் இருபுறங்களிலும் கான்கிரீட் பாதைகள் அமைக்கப்படவுள்ளன.

மேலும், ஈரோடு மாநகராட்சி பகுதியில் வசிக்கும் மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் விதத்தில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் அம்ருத் திட்டத்தின் கீழ் 484 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய குடிநீர் திட்டத்திற்கு இன்று அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டம் ஒரு மிகப்பெரிய திட்டம். இந்தத் திட்டத்தை விரைந்து முடிப்பதற்கு நம்முடைய உள்ளாட்சித்துறை அமைச்சர் பேருதவியாக இருந்தார். இந்தத் திட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட காவிரி தண்ணீர் உடனடியாக வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்ததன் விளைவாக, விரைந்து இத்திட்டத்தை முடிப்பதற்காக இந்த திட்டம் குறுகிய காலத்திலே, அதற்கு அனுமதி அளிக்கப்பட்டு, டெண்டர் விடப்பட்டு, பணி துவங்கக்கூடிய சூழ்நிலையை அம்மாவினுடைய அரசு எடுத்திருக்கிறது. ஆகவே, ஈரோடு மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட காவிரி தண்ணீர் இந்த திட்டத்தின் மூலமாக வழங்குவதற்கு, அம்மாவினுடைய அரசால் விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், ஈரோடு மாநகராட்சி துப்புரவு பணியாளர்களுக்கு 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடியிருப்பு கட்டும் பணியையும், 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீன இறைச்சிக் கூடம் கட்டும் பணியும் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாநகராட்சி பெண்கள் மேனிலைப் பள்ளியில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. அம்ருத் திட்டத்தின் கீழ் ஈரோடு மாநகராட்சி பகுதியில் நான்கு இடங்களில் 2 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விளையாட்டுத் திடல் அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

பொதுப்பணித்துறையின் மூலமாக பள்ளிக் கல்வித் துறையில் உள்ள 12 உயர்நிலை பள்ளிகளுக்கு 20 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டும் பணி என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பின் சார்பில் கீழ்பவானி பாசனத் திட்டத்திற்கு உட்பட்ட 15 ஆயிரத்து 743 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும் வகையில் காளிங்கராயன் வாய்க்கால் 36 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கும் பணி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் தாய் திட்டத்தின் கீழ் 18 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 513 பணிகளும், அம்மா பூங்கா திட்டத்தின் கீழ் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 15 பூங்காக்கள் அமைக்கும் பணியையும்,

அம்மா உடற்பயிற்சி கூடம் திட்டத்தின் கீழ் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 15 உடற்பயிற்சி கூடங்கள் அமைக்கும் பணியையும், பசுமை வீடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 10 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 593 பசுமை வீடுகள் கட்டும் பணியையும், பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் 50 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2 ஆயிரத்து 998 வீடுகள் கட்டும் பணியையும் நான் இன்று துவக்கி வைத்துள்ளேன்.

இன்றைய தினம், மொத்தம் 4,161 பணிகள் 692 கோடியே 3 இலட்சத்து 84 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

மேலும், ஈரோடு மாநகராட்சியில் அம்ருத் திட்டத்தின் கீழ் 4 இடங்களில் 2 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல் அமைக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் வீடற்ற சாலையோரம் வசிப்பவர்களுக்கு இரவு நேர தங்கும் விடுதி 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பொதுப்பணித்துறையின் சார்பில் தரம் உயர்த்தப்பட்ட 12 அரசு உயர்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள், புதிய கட்டடங்கள் மற்றும் ஆய்வகக் கட்டடங்கள் 18 கோடியே 43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன.

பெருந்துறை வட்டம் சிப்காட் தொழில் வளர்ச்சி மையத்தில் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு மாவட்ட அலுவலகம் மற்றும் ஆய்வுக் கூடம் 2 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு, திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்ட வேளாண் மற்றும் வேளாண் வணிகத் துறையின் சார்பில் அந்தியூர் வட்டம், அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஊரக கட்டமைப்பு மேம்பாட்டு நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட 600 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட பரிவர்த்தனை கூடம் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பெருந்துறை வட்டம், திண்டல் வித்யா நகரில் ஈரோடு விற்பனை கூட நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட மாநில அக்மார்க் ஆய்வகத்திற்கு 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு, திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு துறையின் சார்பில் ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் திண்டல் பகுதியில் 14 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் குளியல் அறைகள் மற்றும் கழிப்பறைகள் கட்டப்பட்டு, திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் 20 ஊராட்சிகளில் 3 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கிராம ஊராட்சி சேவை மைய கட்டடங்களையும், 7 ஊராட்சிகளில் 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய அங்கன்வாடி கட்டடங்களும் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

ஆக மொத்தம், இன்றைய தினத்தில், 31 கோடியே 60 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 50 பணிகள், பொதுமக்களின் பயன்பாட்டிற்காக, திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இதைத்தவிர, வருவாய் துறையின் சார்பில் 1,688 நபர்களுக்கு 2 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வீட்டுமனைப் பட்டாக்கள், தையல் இயந்திரங்கள், சலவைப் பெட்டிகள், வன நில உரிமைச் சான்றுகள் உள்ளிட்ட உதவிகளும், ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டம் மற்றும் பசுமை வீடு வழங்கும் திட்டத்தில் 7 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வீடு கட்டுவதற்கான ஆணைகள் வழங்கப்படுகிறது.

சமூக நலத்துறையின் சார்பில் திருமண நிதியுதவியாக 198 பட்டதாரி பெண்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் வீதம் 99 இலட்சம் ரூபாயும், 102 பட்டதாரி அல்லாத பெண்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் வீதம் 25 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும் ஆக மொத்தம்

300 பெண்களுக்கு 1 கோடியே 24 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவியாகவும், தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தின்கீழ் 74 இலட்சத்து 15 ஆயிரத்து 500 ரூபாய் மதிப்பீட்டில் நபர் ஒருவருக்கு 8 கிராம் வீதம் 2,400 கிராம் தங்க நாணயங்களும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 34 நபர்களுக்கு 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு உபகரணங்களும் வழங்கப்படுகிறது.

அதுமட்டுமல்ல, மாற்றுத்திறனாளிகளுக்கு, மாண்புமிகு அம்மாவினுடைய அரசால், அவர்களுடைய வேலைவாய்ப்பு 4 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறி மற்றும் துணி நூல் துறையின் சார்பில் மகாத்மா காந்தி புன்கர் பீமா யோஜனா காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் மறைந்த 5 உறுப்பினர்களின் குடும்பத்தினர்களுக்கு தலா 60 ஆயிரம் ரூபாய் வீதம் 3 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளும் வழங்கப்படுகிறது.

தொழிலாளர் நலத்துறையின் சார்பில் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியம் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர் நலவாரிய உறுப்பினர்களின் வாரிசுதாரர்கள் 10 மற்றும் 12–ம் வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்று உயர்கல்வி பயில கல்வி உதவித்தொகை,

ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு உதவித்தொகைகள் 1,212 நபர்களுக்கு 29 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும் தாட்கோ திட்டத்தின் கீழ் 30 நபர்களுக்கு 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

ஆக மொத்தம் இன்று இவ்விழாவில் 3,701 நபர்களுக்கு 13 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈரோடு மாவட்டத்தில் 2011–லிருந்து 2017 வரை 834 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2062.93 கி.மீ. நீளமுள்ள சாலைகளும், 81 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 47 பாலங்களும், ஆக மொத்தம் 915 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

இதைத்தவிர 306 கி.மீ. நீளமுள்ள சாலைப்பணிகள் 246 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், 89 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 6 பாலங்களும், 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 5 சிறு பாலங்களுக்குமான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

சாஸ்திரி நகரில் சென்னிமலை சாலையிலிருந்து பெரிய சடையம்பாளையம் செல்லும் சாலையில் 10 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு மேம்பாலமும், பெரிய கொடிவேரி மற்றும் அக்கரை கொடிவேரிக்கு இடையே பவானி ஆற்றின் குறுக்கே 13 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு பாலமும், கட்டும்பணி நடைபெற்று வருகின்றன.

இதைத்தவிர, ஈரோடு நகரத்திற்கு வெளிவட்டச்சாலை, 76 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் சட்டப்பேரவை விதி 110ன்கீழ் அறிவிக்கப்பட்டு அப்பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், கடந்த ஓராண்டில் ஈரோடு மாவட்டத்தில் மாண்புமிகு அம்மாவின் பொற்கால ஆட்சி பல சாதனைகளை செய்து வருகிறது.

அவை அனைத்தையும் சொல்ல நேரமில்லையென்றாலும் ஒரு சிலவற்றை இங்கு குறிப்பிட எனக்கு கடமை உள்ளது.

108 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 361 முடிவுற்ற திட்டப் பணிகள் திறந்து வைக்கப்பட்டது.

வீடுகளுக்கு 100 யூனிட் இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தில் 6 இலட்சத்து 62 ஆயிரத்து 739 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

36 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் 98.17 கி.மீ நீள நீர்வரத்து வாய்க்கால் தூர்வாரும் பணி, அணைகள் மற்றும் தடுப்பணைகள் புனரமைப்பு பணியும் இங்கு சிறப்பாக செய்து முடிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 16,872 நபர்களுக்கு 30 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் கீழ் 14,125 கர்ப்பிணி பெண்களுக்கு 12 கோடியே 5 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் 31,658 விவசாயிகளுக்கு 245 கோடியே 35 இலட்சம் ரூபாய் பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.

307 கோடியே 37 இலட்சம் ரூபாய் கூட்டுறவு விவசாயக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டு 52,994 விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். 3,203 ஏழைப் பெண்களுக்கு 18 கோடியே 60 இலட்சம் ரூபாய் திருமண நிதி உதவியுடன் 12,812 கிராம் தாலிக்குத் தங்கம் வழங்கப்பட்டுள்ளது.

1,33,880 வேளாண்மை மற்றும் தோட்டக் கலைப்பயிர் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு 59 கோடியே 65 இலட்சம் ரூபாய் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது

உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 10,229 நபர்களுக்கு 10 கோடியே 51 இலட்சம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

வறட்சி பாதித்த பகுதிகளில் 17 கோடியே 87 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. 165 கோடியே

68 இலட்சம் ரூபாய் செலவில் 289 கி.மீ நீளச்சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டுள்ளன. 4 கோடியே 91 இலட்சம் ரூபாய் செலவில் 56 குடிமராமத்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

குளம், ஏரிகளை தூர்வாரும் திட்டத்தின் கீழ் 10,665 விவசாயிகள் வண்டல் மண் எடுத்து பயனடைந்து உள்ளனர்.

ஆகவே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு, விவசாயிகள் நீண்டகாலமாக கோரிக்கை வைத்த, நம்முடைய நிலங்களைப் பண்படுத்த வேண்டுமென்பதற்காக, அந்தந்தப் பகுதியிலே உள்ள ஏரிகள், குளங்கள், அணைகளிலிருந்து வண்டல் மண் எடுத்து நாங்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்று அம்மா அரசுக்கு வேண்டுகோள் வைத்தார்கள். அதை அம்மா அரசு இன்றைக்கு நிறைவேற்றியிருக்கிறது என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகள், தங்கள் பகுதிக்கு அருகேயுள்ள அணைகள், குளங்கள், ஏரிகளிலிருந்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் அனுமதி பெற்று, அவர்களுக்குத் தேவையான வண்டல் மண்ணை இலவசமாக அள்ளிக்கொள்ள அரசு அனுமதியளித்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லஇன்றைக்குமணல்விலைஅதிகரித்துக்கொண்டு செல்வதாக என்னிடம் கருத்து தெரிவித்தார்கள். ஏற்கெனவே, பொதுமக்கள் கோரிக்கை வைத்தார்கள். அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அம்மாவினுடைய அரசு, இந்த மணல் குவாரிகளை அரசே ஏற்றும் நடத்தும் என்ற அறிவிப்பை நாங்கள் வெளியிட்டு, அரசே நடத்தி வருகிறது. இன்னும் ஒரு வார காலத்திற்குள், சீர் செய்யப்பட்டு, மணல் குறைந்த விலையிலே உங்கள் இல்லம் தேடி வரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுக்கு தேவையான அளவிற்கு, மணலை, அரசு வழங்கும் என்பதை இந்த தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் மீது அளவுகடந்த பற்றுடையவர்கள் ஈரோடு மாவட்ட மக்கள் என்பதை நீங்கள் எப்படி பல சந்தர்ப்பங்களில் எடுத்துக் காட்டினீர்களோ, அதைப்போல் மாண்புமிகு அம்மா அவர்களும், அம்மா அவர்களுக்குப் பிறகு அம்மா வழி வந்த இந்த அரசும் ஈரோடு மக்கள் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அடுக்கடுக்காக வழங்கி வருகிறது.

இன்னும் பல திட்டங்களையும் வழங்க இருக்கிறது என்பதையும் இங்கு நான் தெரிவித்துக் கொள்வதில் பெருமைப்படுகின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த மாவட்டத்திற்கு செய்ய வேண்டுமென்று விட்டுச் சென்ற பணிகளை நாங்கள் தொடர்ந்து செய்வோம். என்று உறுதியளிக்கின்றேன்.

ஈரோடு நகரத்தில், குறுகிய சாலையாக இருப்பதால், போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது என்று கோரிக்கை வைத்தார்கள். ஆகவே, போக்குவரத்து நெரிசலை முற்றிலும் குறைக்க வேண்டுமென்பதற்காக, ஏற்கெனவே இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், அரசு மருத்துவமனைக்கு அருகிலே, ஒரு உயர்மட்டப்பாலம் அறிவித்து, அதற்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இது போதாது, இந்த ஈரோடு பெருந்துறை சாலை மிகுந்த போக்குவரத்து நெரிசல் உள்ள சாலை. விழா காலங்களிலும், திருமண நாட்களிலும் வாகனங்கள் அதிகமாக செல்கின்ற காரணத்தினால், போக்குவரத்து நெரிசல் அதிகரிக்கிறது. ஆகவே, உயர்மட்டப்பாலம் வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். ஆகவே, இப்பொழுது அரசு மருத்துவமனைக்கு அருகில் கட்டப்பட்டுள்ள பாலத்திலிருந்து, எவ்வளவு தூரம் பாலம் வேண்டுமோ, அவ்வளவு தூரம் உயர்மட்டப்பாலம் அமைத்துக் கொடுக்கப்படும் என்ற நற்செய்தியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் போக்குவரத்து நெரிசல் இல்லாத சூழ்நிலை ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, இந்த ஈரோடு, பெருந்துறை

சாலையிலிருந்து, ஈரோடு–கோபியை இணைக்கின்ற சாலையை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். எனவே, ஈரோட்டிலிருந்து, சிற்றோடு வழியாக கோபி செல்கின்ற சாலை, கனிராவுத்தர்குளம் வரை விரிவுபடுத்தப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியினை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், கோபியிலே ஒரு புறவழிச்சாலை, மொடக்குறிச்சி சட்டமன்ற பகுதிக்கு ஒரு பேருந்து நிலையம், அந்தப் பகுதியில் ஒரு கூட்டுக் குடிநீர் திட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் போதிய இடவசதி இல்லாமல் இருக்கிறது என பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அதையும் அரசு பரிசீலிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த மாவட்டம், அம்மாவினுடைய மாவட்டம். அம்மாவினுடைய கோட்டையாக விளங்கிக் கொண்டிருக்கும் மாவட்டம். இந்த மாவட்ட மக்களுக்கு திட்டங்களை நிறைவேற்றுவது எங்களது கடமை என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கொங்கு மண்டலத்தின் மையப்புள்ளியாக விளங்கும் இந்த ஈரோடு மாநகரத்திலுள்ள பொன்விழா கண்ட ஸ்ரீவாசவி கல்லூரியில்தான் நான் படித்தேன்.

என் கல்லூரி நாட்களில் பல நண்பர்கள் எனக்குக் கிடைத்தார்கள். அவர்களெல்லாம் உண்மையானவர்களாகவும், நம்பிக்கைக்குரியவர்களாகவும், உள்ளன்புமிக்கவர்களாகவும் இருந்தார்கள். அப்படிப்பட்ட நட்பும் நம்பிக்கையும் தான் எதிர்காலத்தில் எனது பொது வாழ்க்கைக்கு பலமாக இருந்தது. இதை கூறுகிறபொழுது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒருவன் தன் ஊரை அடைய காட்டு வழியே நடந்து கொண்டிருந்தான். இருட்டிவிட்டது. இருட்டிலே நடந்தால் மிருகங்கள் அடித்துவிடும் என்று நினைத்து ஒரு மரத்தடியில்

உட்கார்ந்தான். அவனைப்போல இன்னொருவன் தனியாக வந்து கொண்டிருந்தான்.

இரண்டுபேரும் எதிர்பாராமல் சந்தித்து நண்பர்களாகி ஒருவருக்கு ஒருவர் துணையாக காட்டைக் கடந்து விடலாம் என்று நடக்க ஆரம்பித்தார்கள்.

வழியில் எந்த ஆபத்து வந்தாலும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து கொள்ள வேண்டும் என்றும் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள்.

சிறிது தூரத்தில் கரடி ஒன்று வந்தது. அதைப் பார்த்ததும் ஒப்பந்தத்தை மறந்து ஒருவன் ஓடிப்போய் மரத்தில் ஏறிக்கொண்டான்.

மற்றவனுக்கு மரம் ஏறத்தெரியாது. திடீரென்று கீழே விழுந்து மூச்சை தம் கட்டிக் கொண்டு கிடந்தான். கரடி கீழே கிடந்தவனை முகர்ந்து பார்த்து, இவன் இறந்துவிட்டான் என்று திரும்பியது.

மரத்திலிருந்து இறங்கியவன், கீழே கிடந்தவனிடம் "கரடி உன் காதில் ஏதோ கூறியதே, அது என்ன ?" என்று கேட்டான்.

'ஒப்பந்தத்தை மீறிய உன்னை மாதிரி நம்பிக்கை துரோகிகளிடம் இனிமேல் நட்பு வைத்துக் கொள்ளக்கூடாது!' என்று கரடி சொன்னதாக அவன் கூறினான்.

நெருக்கடி வருகிறபோது உதவிக்கரம் நீட்டுகிறவர்கள்தான் உண்மையான நண்பர்கள் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

என் நண்பர்களை நான் முழுமையாக நம்புகிறேன்.

அந்த நம்பிக்கைதான் என்னை இந்த அளவிற்கு உயர்த்தியிருக்கிறது. என்னாலும் என் நண்பர்கள் உயர்வார்கள் எனக்கூறி...

இது விவசாயிகள் நிறைந்த மாவட்டம். விவசாயிகளுக்கு என்னென்ன தேவை என்பதை அறிந்து அதை உங்களுக்குச் செய்வது என்னுடைய கடமை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, நானும் ஒரு விவசாய குடும்பத்தில் பிறந்து, வளர்ந்ததால், விவசாயிகளுக்கு என்ன இடர்பாடுகள் ஏற்படும் என்றெல்லாம் நன்கு அறிந்தவன். ஆகவே, விவசாயிகளின் உற்ற தோழனாக அம்மாவினுடைய அரசு இருக்கும், தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கும், வழங்கும் என்று இந்த நேரத்திலே தெரிவித்து, இந்த மாவட்ட மக்கள் உழைப்பாளர்கள், விசுவாசிகள், அவர்கள் அம்மாவினுடைய அரசுக்கு தொடர்ந்து நல்லாதரவு வழங்க வேண்டுமென்று கேட்டு, சிறப்பான, எழுச்சியான இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு.**எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
***11.06.2017** அன்று, ஈரோட்டில் நடைபெற்ற*
அரசு விழாவில் ஆற்றிய உரை.

தாயின் அறிவையும், அரவணைப்பையும் தன் பாடல்களின் வாயிலாக உலகுக்கு காட்டியவர் அவ்வையார்!

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். பெண்ணினத்திற்கே பெருமை சேர்த்த பெரும்புலவர், முதுபுலவர் அவ்வையார் அவர்களின் திருவுருவச்சிலை திறப்புவிழாவில் கலந்துகொள்வதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

கடந்த ஜுன் மாதம் 18ஆம் நாள் ஆளுநர் மாளிகையில் தமிழர்களின் அடையாளமாகத் திகழ்கின்ற தெய்வப் புலவர் திருவள்ளுவர் அவர்களின் திருவுருவச்சிலையை திறந்து வைத்து தமிழர்களுக்கெல்லாம் பெருமை சேர்த்த மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு இந்த நேரத்திலே நான் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது ஆத்திச்சூடி பாடிய அவ்வையாரின் திருவுருவச் சிலையையும் இதே வளாகத்தில் நிறுவி மாண்புமிகு ஆளுநர் அவர்கள் அதனை தன்னுடைய பொற்கரத்தால் திறந்து வைத்து தமிழ் மீதும், தமிழ் மக்கள் மீதும் உள்ள ஈடுபாட்டை மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறார்கள். அதனால், ஒட்டுமொத்த தமிழர்கள் சார்பில் மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு மீண்டும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பாக முன்னிலை உரையாற்றிய மாண்புமிகு உயர்நீதிமன்ற தலைமை நீதியரசர் குமாரி இந்திரா பானர்ஜி அவர்களுக்கும் என் வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மக்களவை துணை சபாநாயகர் அவர்களுக்கும், இந்த விழாவிற்கு வருகை தந்து பெருமைப்படுத்திக் கொண்டிருக்கின்ற

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற கொறடா அவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும்! சட்டமன்ற உறுப்பினர்களுக்கும்! இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டுள்ள தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன் அவர்களுக்கும்! ஆளுநரின் முதன்மைச் செயலாளர் திரு.ரமேஷ்சந்த் மீனா அவர்களுக்கும்! அரசு அலுவலர்களுக்கும், பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களுக்கும், உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழுக்கும் தமிழருக்கும் பெருமை சேர்த்த மகளிரில் அவ்வையார் முதன்மையானவர் என்பதால்... அவருடைய சிலை திறப்பு விழாவில் கலந்து கொள்வதில் நான் பெருமையடைகின்றேன்.

மனித வாழ்வுக்கேற்ற மகத்தான தத்துவங்களை தனது பாடல்கள் மூலம் வாரி வழங்கிய அவ்வையாரை தமிழ் மக்கள் இன்றளவும் அறிவுக் கடவுளாக வணங்குவதை நாம் பார்க்கின்றோம்.

ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், மூதுரை, ஞானக்குறள் போன்ற காலத்தால் அழிக்கமுடியாத பாடல்களை தமிழுக்கு வழங்கியவர் அவ்வையார் அவர்கள்.

சங்க காலத்திலேயே தனிஒரு பெண்ணாக தன் அறிவுக்கூர்மையால் பாடல்கள் எழுதி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியவர் அவ்வையார். அதுபோல தமிழ்நாட்டில் ஆண்களின் ஆதிக்கம் நிறைந்த அரசியல் களத்தில் தனி ஒரு பெண்ணாக இருந்து அறிவையும் துணிவையும் தன் வலிமையாகக் கொண்டு வெற்றி கண்டு.....

தமிழகத்தின் தானைத் தலைவியாக, தன்னிகரற்ற சாதனைப் பெண்மணியாக தமிழ்நாட்டின் அரசுக்கட்டிலில் அமர்ந்து

முடியாட்சி மன்னர்கள் கூட செய்ய முடியாத பல தொலைநோக்கு நலத்திட்டங்களை குடியாட்சி அரசியாக இருந்து செய்து காட்டிய நமது இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு அவ்வையார் அவர்கள்தான் முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் திகழ்ந்திருக்கிறார். அவ்வையார் தன் பாக்களில் கூறிய அத்தனை இலக்கணங்களையும் கொண்டதால்தான் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களை உலகமெல்லாம் வாழும் தமிழ் மக்கள் ‘அம்மா’ என்று அன்போடு அழைக்கிறார்கள்.

தமிழர்கள் அவ்வையாரை ‘பாட்டி’ என்றும் புரட்சித்தலைவி அவர்களை ‘அம்மா’ என்றும் உறவுமுறையோடு, உள்ளன்போடு அழைக்கிறார்கள்.

இந்தப் பெருமை தமிழ் மண்ணில் வேறு எந்த புலவருக்கும், வேறு எந்த தலைவருக்கும் கிடைக்கவில்லை.

மாண்புமிகு அம்மா அவர்களின் முன்னோடியாகத் திகழ்ந்த அவ்வையாரை மேலும் பெருமைப்படுத்தும் வகையில், மாண்புமிகு அம்மா அவர்கள் 5ஆவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தவுடன் ‘அவ்வையார் விருது’ தோற்றுவித்தார்கள்.

அவ்வையார் விருது என்பது சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மத நல்லிணக்கம், மொழித்தொண்டு, கலை அறிவியல், பண்பாடு, கலாசாரம் போன்ற பல்வேறு துறைகளில் தொண்டாற்றும் மகளிரில் சிறந்த ஒருவரை ஒவ்வோர் ஆண்டும் தேர்ந்தெடுத்து அவருக்கு உலக மகளிர் தினத்தன்று அவ்வையார் விருதும், ஒரு இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையும் தங்கப்பதக்கமும் அளித்து சிறப்பிக்கப்படுகிறது.

இந்த விருதை 2012ஆம் ஆண்டில் திருமதி.ஒய்.ஜி. பார்த்தசாரதி அவர்கள் மாண்புமிகு அம்மாவின் திருக்கரங்களால் பெற்றார்கள்.

அவரைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் மருத்துவர் சாந்தா அவர்களும் மருத்துவர் கே. மாதங்கி அவர்களும், திருமதி சாந்தி ரங்கநாதன் அவர்களும், திருமதி எம்.சாரதா மேனன் அவர்களும் இவ்விருதினைப் பெற்றிருக்கிறார்கள்.

மகளிர் பொதுவாழ்க்கையில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த விருதை வழங்கி வருகிறார்கள்.

இத்தருனத்தில் அவ்வையாரின் அருமை பெருமைகளைப் பற்றி ஒரு சில நிகழ்வுகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

'அவ்வை' என்பதற்கு 'தாய்' என்பது பொருள். ஒரு தாயின் அறிவையும் அரவணைப்பையும் தன் பாடல்களின் வாயிலாக உலகுக்கு காட்டியவர் அவ்வையார் அவர்கள்.

பெண்கள் வெளியில் வருவதற்கே அஞ்சுகிற அந்த காலகட்டத்தில், இரு நாட்டு மன்னர்களுக்கிடையே இருந்த பகையை தூதுவராக சென்று தீர்த்து வைத்த பெருமையைப் பெற்றவர் அவ்வையார் அவர்கள்.

அதேபோல கணவன் மனைவியிடையே இருக்கிற பிணக்குகளை தீர்த்துவைக்கிற மருந்தாக இவருடைய பாடல்கள் விளங்குகின்றன.

அதற்கு நன்றி செலுத்தும் வகையில்தான் இன்றைக்கும் குடும்பப் பெண்கள் ஆடிமாதத்தில் செவ்வாய் கிழமைகளில் அவ்வையார் விரதம் மேற்கொள்கிறார்கள்.

அவருக்கு விருப்பமான உணவை படையலிட்டு வணங்குகிறார்கள். வள்ளல் அதியமான் என்னும் மன்னனுக்கு கிடைத்த நீண்ட ஆயுளை அளிக்கக்கூடிய நெல்லிக்கனியை அவ்வைக்கு கொடுத்தான்.

தனக்குப் பிறகு இந்த நாட்டை ஆள்வதற்கு தன் மகன் இருக்கிறான். ஆனால், அவ்வைக்குப் பிறகு தமிழைக் காக்க யார் இருப்பார்களோ! என்று எண்ணி தமிழுக்காகவே அவ்வையார் நீண்ட நெடிய நாள் வாழவேண்டும் என்று அந்த நெல்லிக்கனியைக் அவ்வையாருக்கு வழங்கினான்.

அதியமான் வழங்கிய நெல்லிக்கனியை உண்ட அவ்வையார் சிரஞ்சீவியாக வாழ்ந்திருக்கக்கூடுமென்றும் சில அறிஞர்கள் கருதுகிறார்கள்.

வேழமுடைத்து சேரநாடு
சோறுடைத்து மேதக்க சோழ வளநாடு
முத்துடைத்து பூழியர்கோன் தென்னாடு
சான்றோருடைத்து தென்னீர் வயல்
தொண்டை நன்னாடு

என்று வெண்பா பாடி சேர, சோழ, பாண்டிய, தொண்டை நாடுகளுக்கு அடையாளம் கொடுத்தவர் அவ்வையார்.

இந்நாடுகளுக்கு இதைவிட ஒரு சிறப்பான மேன்மையான அடையாளத்தை இலக்கியத்தில் யாராலும் இதுவரை சொல்லப்படவில்லை என்பதுதான் உண்மை.

உறையூரை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த இராஜேந்திர சோழனின் மகன் குலோத்துங்கச் சோழனது முடிசூட்டு விழாவில் அவ்வையாரும் கலந்து கொண்டார். குலோத்துங்கச் சோழனை வாழ்த்த முற்படும்போது, 'வரப்புயர' என்ற ஒரு வார்த்தையோடு தன் வாழ்த்தை நிறுத்திக் கொண்டார். கூட்டத்திலிருந்தவர்கள் குழம்பினார்கள்.

எல்லோரும் இராஜேந்திர சோழனின் முகத்தைப் பார்க்க இராஜேந்திரச் சோழனோ செய்வதறியாது அந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்த வரகவி, வீரகவி, தெய்வக்கவி என்றெல்லாம் புகழப்பட்ட

ஒட்டக்கூத்தரின் முகத்தைப் பார்த்தார்.

ஒட்டக்கூத்தரும் ஔவையார் சொன்ன ஒரு சொல்லைத் தொடர்ந்து மீதி சொற்களைப் பாடினார்.

‘வரப்பு உயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோல் உயரும்
கோல் உயரக் கோன் உயர்வான்’ என்றார்.

இதைக் கேட்ட அனைவரும் அவ்வையாரின் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் தன்மையை உணர்ந்து மகிழ்ந்தனர்.

அவ்வையாரின் புலமைக்கும், தொலைநோக்குப் பார்வைக்கும், எத்தனையோ நிகழ்வுகளையும், நிகழ்வுகளோடு சம்மந்தப்பட்ட பாடல்களையும், சொல்லிக் கொண்டே போகலாம்.

‘அறம் செய விரும்பு’ என்ற பாடலில் தொடங்கி,
‘ஓரம் சொல்லேல்’ என்ற பாடலில் முடியும்
109 ஆத்திச்சூடி பாடல்களும்,

உலக நீதிமுறைகளையும்,
வாழ்க்கை முறைகளையும்
பாடமாக நமக்கு கற்பிக்கின்றன.

அதைப்போல, அவ்வையார் அவர்களின் கொன்றை வேந்தன் என்ற “அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்” “ஆலயம் தொழுவது சாலவும் நன்று” – போன்ற 91 பாடல்கள் சிறந்த தத்துவங்களை நமக்கு சொல்லித் தருகின்றன.

இப்படி ஒரு வரியில் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் இனிமையான, எளிமையான பாமரருக்கும் விளங்கும் வகையில்,

பாடல்களை எழுதி உலகில் ஒரு புதிய விழிப்புணர்வை ஏற்படுத்தியவர் – அவ்வையார் அவர்கள்.

அவ்வையார் அவர்கள் மனித இனத்துக்கே பொதுமையாக பாடியதால், அவரை நினைவு கூரும் வகையில் அவர் பாடலின் வழியில் எதிர்காலச் சந்ததியினர் நடக்க வேண்டும் என்ற நோக்கத்தில், உலகம் முழுவதும், அவருடைய சிலைகள் நிறுவப்பட்டாலும் கூட, அதற்கு முழுத்தகுதியும் உடையவர் – அவ்வையார் அவர்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய நேரத்தில் அவ்வை வழியில் நடப்போம்! புதிய உலகை படைப்போம்! என்று கூறி எனது உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி!

வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் 14.07.2017 அன்று,*
சென்னை, ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற
அவ்வையார் திருவுருவச்சிலை திறப்பு விழாவில் ஆற்றிய உரை.

சேலம் மாவட்டம், எடப்பாடியில் ரூ.19.78 கோடி மதிப்பீட்டில் 1,306 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி, நான் தமிழகத்தினுடைய முதலமைச்சராக பொறுப்பேற்று, இரண்டாவது முறையாக நம்முடைய எடப்பாடி சட்டமன்ற தொகுதிக்கு வந்திருக்கின்றேன். முன்பெல்லாம் ஒவ்வொரு வாரமும் தவறாமல் நம்முடைய தொகுதிக்கு வந்து மக்களை சந்தித்து மக்களுக்கு என்னென்ன குறைகள், அவர்கள் கொடுக்கின்ற மனுக்களை வாங்கி தீர்வு கண்டு கொண்டிருந்தேன். இப்பொழுது, தமிழகத்தினுடைய முதலமைச்சராக பொறுப்பேற்ற நாளிலிருந்து, தமிழகத்திலுள்ள 234 தொகுதிக்கும் தேவையான திட்டங்களை வழங்குதல், அந்தப் பகுதி மக்களுக்கு என்ன தேவை என்று அறிந்து அதனை நிறைவேற்றக் கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே, முன்பு போல் என்னால் வர முடியவில்லை,

இருந்தாலும், பலபேர் சென்னைக்கு வந்து என்னிடத்திலே மனு கொடுக்கிறார்கள். தங்களுக்கு தெரிந்தவர்கள் மூலமாக மனுக்களை கொடுத்து அனுப்பி பிரச்சினையை தீர்க்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கின்றார்கள். அந்தக் கோரிக்கையின் அடிப்படையில், திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றேன்.

என்னைப் பொறுத்தவரைக்கும் எப்பொழுது வேண்டுமானாலும் என்னை வந்து சந்திக்கலாம். நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்திலும் சரி, அமைச்சராக இருந்த காலத்திலும் சரி, இன்றையதினம் முதலமைச்சராக இருக்கின்ற காலத்திலும் அதேநிலையில் தான் இருக்கின்றேன். உங்களுக்கு ஏதாவது பிரச்சினை ஏற்படுகின்ற போது, மனுக்கள் கொடுக்கிறீர்கள். அதேபோல, என்னை நீங்கள் எப்போது வேண்டுமானாலும் வந்து சந்திக்கலாம். சென்னையில் காலை 9 மணி முதல் 10 மணி வரையும், அதேபோல மாலை 6 மணி வரையிலும் வீட்டில் மக்களை சந்திக்கிறேன். ஆகவே, நம்முடைய தொகுதி மக்கள் தங்களுடைய குறைகள் எதுவாக இருந்தாலும் என்னால் முடிந்த அளவிற்கு தீர்த்து வைப்பேன் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011 சட்டமன்ற தேர்தலில் பல்வேறு வாக்குறுதிகளை அளித்தார்கள். அப்போது நான் இந்த சட்டமன்ற தொகுதியின் பல்வேறு இடங்களுக்கு சென்றபோது அங்கிருக்கின்ற பொதுமக்கள் குடிநீர் பிரச்சினையை முதலில் சுட்டிக்காட்டினார்கள். குறிப்பாக, எடப்பாடி நகரம், எடப்பாடி ஒன்றியம், கொங்கனாபுரம் ஒன்றியம், நங்கவள்ளி ஒன்றியம் பகுதிகளில் இருக்கின்ற பொதுமக்கள் என்னிடத்திலே, நிலையான பாதுகாக்கப்பட்ட காவிரி தண்ணீர் வேண்டுமென்ற கோரிக்கையை பிரதானமாக தெரிவித்தார்கள். அதன் அடிப்படையிலே மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் இடத்திலே சொன்ன உடனே நம்முடைய எடப்பாடி நகரத்திற்கு 20 கோடி ரூபாய் அளித்து அம்மாவினுடைய திருக்கரங்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, அம்மாவே திறந்து

வைத்து இன்றைக்கு எடப்பாடியில் உள்ள அனைத்து மக்களுக்கும் தங்குதடையில்லாமல் குடிநீர் வழங்குகின்ற ஆட்சி அம்மாவினுடைய ஆட்சி என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல, எடப்பாடி ஒன்றியம், கொங்கனாபுரம் ஒன்றியம், மகுடஞ்சாவடி ஒன்றியம் ஆகிய மூன்று ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கிய ஊராட்சி பகுதிகளுக்கு நிலையான பாதுகாக்கப்பட்ட காவிரி தண்ணீர் வேண்டுமென்று கோரிக்கை வைத்தீர்கள். அதையும் அம்மாவினிடத்திலே சொன்னவுடன் அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்து உடனடியாக தனி குடிநீர் திட்டத்தை வகுத்துக்கொடுத்து மூன்று ஒன்றியங்களிலும் நிலையான பாதுகாக்கப்பட்ட காவிரி தண்ணீர் அம்மா வழங்கினார்கள்.

அதேபோல, நங்கவள்ளியில் கடுமையான குடிநீர் பிரச்சினை ஏற்பட்டது. அதை மாண்புமிகு அம்மாவிடத்திலே சொன்னவுடனே மேற்படி ஒன்றியங்களிலுள்ள பகுதி மக்கள், அப்போது இருந்த உள்ளாட்சி பிரநிதிநிதிகள் ஆகியோர் என்னிடத்திலே கோரிக்கை வைத்தார்கள். மேச்சேரி, நங்கவள்ளி இரண்டு ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கிய ஒரு புதிய கூட்டுக் குடிநீர் திட்டத்தை உருவாக்கி தாருங்கள் என்று அந்த மக்களும், அங்கு இருக்கின்ற உள்ளாட்சி பிரதிநிதிகளும் வைத்த கோரிக்கையின் அடிப்படையிலே இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் கவனத்திற்கு கொண்டு சென்றவுடன் 158 கோடி ரூபாய் மதிப்பிலான கூட்டு குடிநீர் திட்டப் பணியை உருவாக்கி, அந்தப்பணி இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் நிறைவுபெற்று, மேச்சேரி, நங்கவள்ளி ஒன்றியங்களை சேர்ந்த மக்களுக்கு நிலையான பாதுகாக்கப்பட்ட தண்ணீர் வழங்கப்படும். ஆக, எடப்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அனைத்து கிராமங்கள், நகரங்கள், பேரூராட்சி உள்ளடக்கிய அனைத்து பகுதிகளுக்கும் நிலையான பாதுகாக்கப்பட்ட காவிரி தண்ணீர் அம்மாவின் ஆட்சியிலே கிடைத்திருக்கின்றது. எத்தனையோ ஆட்சிகள் வந்தன, ஆனால் அம்மாவினுடைய

ஆட்சியிலே தான் இதற்கு தீர்வு காணப்பட்டது என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, சுகாதார வசதி, மருத்துவமனை வேண்டுமென்று கேட்டீர்கள். அதற்கு 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அருமையான அரசாங்க மருத்துவமனையை கட்டிக் கொடுத்தார்கள். பாலம் வேண்டுமென்று கேட்டீர்கள். பாலத்தை கட்டி கொடுத்தார்கள். பேருந்து நிலையத்திற்கு இரண்டு பாலம், பக்கத்திலேயே இன்னொரு பாலம். அதேபோல, கவுண்டம்பட்டி–வெள்ளாண்டிவலசு இணைக்கின்ற பாலம் வேண்டுமென்று கேட்டீர்கள், பாலம் கட்டப்பட்டு, சாலை அமைத்து அம்மாவினுடைய அரசில் திறந்து வைக்கப்பட்டது. புதிய பாலம் வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். அதன்படி 1 கோடி 65 இலட்சம் ரூபாயில் 160 அடி நீளம், 15 அடி அகலத்தில் புதிய பாலம் ஒன்று கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல, கல்லூரி வேண்டுமென்று கேட்டீர்கள், அம்மா ஆட்சிக்கு வந்தவுடனே கல்லூரி கொடுத்தார்கள். எடப்பாடிக்கும் சங்ககிரிக்கும் இடையிலே அருமையான கல்லூரி கட்டிக் கொடுத்தார்கள். இன்றைய தினம் கிட்டத்திட்ட 1,200 மாணவர்கள் படிக்கிறார்கள். அம்மாவினுடைய ஆட்சியில் தான் ஏழை, எளிய, நசுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களினுடைய குழந்தைகள் எல்லாம் இன்றைக்கு குறைந்த கட்டணத்தில் உயர்கல்வி படிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை அம்மா உருவாக்கித் தந்தார்கள். பொதுமக்கள் இந்தப் பகுதிக்கு ஒரு கல்லூரி வேண்டுமென்று கேட்டார்கள். ஆகவே, அடுத்த ஆண்டு முதல் பாலிடெக்னிக் கல்லூரி வெங்ககிரி அரசினர் உயர்நிலைப்பள்ளி வளாகத்திலே திறக்கப்படும் அதற்கான கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, எடப்பாடி தொகுதிக்கும், சங்ககிரி தொகுதிக்கும் இடையில் எத்திக்கோட்டைமேட்டில் பி.டெக் கல்லூரி கட்ட ஆரம்பித்தாகிவிட்டது. இன்றைக்கு மாணவர்கள் உயர்கல்வி

படிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கிறோம். குடிநீர் பிரச்சினை தீர்க்கப்பட்டது, அதேபோல, கல்வி பிரச்சினை தீர்க்கப்பட்டது. புதிய மருத்துவமனைகள் கொடுத்திருக்கிறோம். நங்கவள்ளி ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதாரம் மையத்தை தந்திருக்கிறோம். புதிய கால்நடை மருந்தகம் கச்சுப்பள்ளி, பக்கநாட்டில் ஒன்றும் புதிதாக திறந்திருக்கிறோம். வாயில்லா ஜீவன்களுக்கும் உரிய சிகிச்சை வழங்க வேண்டுமென்று பெரியசோரகையில் 3 கால்நடை மருந்தகங்கள் திறந்திருக்கிறோம், வேளாண் அலுவலகம் நங்கவள்ளியில் கட்டிக் கொடுத்திருக்கிறோம், எடப்பாடியில் கட்ட இருக்கிறோம். இரங்கநாதபுரத்தில் ஒன்று கட்டிக் கொடுத்திருக்கிறோம். ஆகவே, என்னென்ன வசதிகள் வேண்டுமோ அத்தனையும் இந்த 5, 6 ஆண்டுகாலத்திலே செய்து கொடுத்திருக்கிறோம். தரமான ரோடுகள் போட்டுக் கொடுத்திருக்கிறோம். எடப்பாடியில் பூங்கா அமைக்கப்பட இருக்கிறது.

நந்தீஸ்வரம் ஆலயத்தில் சுமார் இரண்டரைகோடி செலவில் திருமண மண்டபம் ஒன்று விரைவாக கட்ட இருக்கிறோம். நந்தீஸ்வரம் திருக்கோவிலில் புனரமைப்புப் பணி நடக்கிறது. முருகன் திருக்கோயில் புதிதாக கட்ட இருக்கிறோம். பூலாம்பட்டியில் ஈஸ்வரன் கோவிலுக்கு கோபுரம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய இருக்கிறோம். இப்படி நிறைய திட்டங்கள் அம்மாவினுடைய ஆட்சியில் தான் பார்க்க முடியும். அதுமட்டுமல்லாமல், முதியோர் உதவித்தொகை, வீட்டுமனை இல்லாமல் பட்டா வேண்டுமென்று விண்ணப்பித்தவர்களுக்கு வீட்டுமனை பட்டா கொடுத்திருக்கிறோம். இன்று, அம்மாவினுடைய ஆட்சியில் இந்த திட்டங்களெல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

சரபங்காநதியின் குறுக்கே வருகின்ற நீரை தேக்கிவைப்பதற்காக இரண்டு தடுப்பணைகள் 6 கோடி ரூபாயில் டெண்டர் விடப்பட்டிருக்கிறது, அந்தப் பணிகள் துவங்க இருக்கின்றது.

மழைக்காலங்களில் பெய்கின்ற நீர் வீணாகாமல், அங்கேயே தேக்கப்பட்டு நிலத்தடி நீர், விவசாயிகளுக்கு தேவையான நீரை தேக்கி வைப்பதற்காக 6 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, இன்றைக்கு அந்தப்பணியும் துவங்க இருக்கிறது. அதேபோல, வாய்க்காலில் தண்ணீர் திறந்துவிடுகின்றபொழுது, கடைமடை பகுதிக்கு தண்ணீர் முழுமையாக செல்வதில்லை. இதை அம்மாவிடம் சொன்னவுடனே, கடந்த ஆண்டு நான் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தபொழுது, 28 கோடி ரூபாய் மற்றும் 25 கோடி ரூபாயில் இரண்டு டெண்டர் விட்டு பணி துவங்க இருக்கிறது. மேலும் இந்த ஆண்டு, எஞ்சிய தொகுதிகளில் 49 கோடி ரூபாய் செலவில் புதிய மதிப்பீடு போட்டு அந்தக் கால்வாயை கான்க்ரீட் கால்வாயாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். கடந்த ஆண்டு 50 கோடி, இந்த ஆண்டு 49 கோடி, ஆக 99 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு தேவையான நீர் கிடைப்பதற்காக அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஆக, இப்படி ஏராளமான திட்டங்கள்.

இன்றைக்கு ஏரி குளங்கள் எல்லாம் தூர்வாரப்படுகின்றது. இன்றைக்கு விவசாயிகளுக்கு இயற்கையான எரு தேவைப்படுகிறது. அதற்கான வண்டல்மண் ஏரியில் இருக்கின்றது. பல ஆண்டு காலமாக ஏரிகளை தூர்வாருகின்ற பணி நிறுத்தப்பட்டிருந்தது. இன்றைக்கு பல்வேறு விவசாய அமைப்புகளும், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், பொதுமக்கள், விவசாயிகளினுடைய கோரிக்கைகளை ஏற்று, ஆங்காங்கே இருக்கின்ற குளங்கள், ஏரிகளில் அந்த வண்டல் மண்ணை இலவசமாக அள்ளிக் கொள்ளலாம் என்ற ஒரு திட்டத்தை தீட்டி, அதற்காக முதல்கட்டமாக 100 கோடி ரூபாய் ஒதுக்கி, 1,019 ஏரிகளில் அந்தப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், 2,065 ஏரிகள், 300 கோடி ரூபாயில் தூர்வாருகின்ற பணி மேற்கொள்ளவிருக்கின்றன. விவசாயிகள் இயற்கையான வண்டல்

மண்ணை நிலத்திற்கு பயன்படுத்துகின்ற பொழுது அதிகமான விளைச்சல் பெறமுடியும். அப்படிப்பட்ட இயற்கை உரமான வண்டல் மண்ணை இலவசமாக விவசாயிகள் எடுத்துக் கொள்ளலாம். அதுவும் முதலில் டெண்டர் விடப்பட்டது. இப்பொழுது அது இல்லை. அங்குள்ள விவசாய சங்கத்தை சேர்ந்தவர்களே, அந்த விவசாய குழுவே ஒருங்கிணைந்து அவரிடத்திலே அந்த பணத்தைக் கொடுத்து, அந்த தூர்வாருகின்ற பணி அந்த பாசன விவசாய சங்கத்தின் மூலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அப்படிப்பட்ட சூழ்நிலையை நாம் உருவாக்கித் தந்திருக்கிறோம்.

அதேபோல, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கும்பொழுது, சட்டப்பேரவை விதி 110இன் கீழ் பல்வேறு அறிவிப்புகள் வெளியிட்டார்கள். அதையெல்லாம் இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். இன்றைக்கு இந்தியாவிலேயே மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தான் சட்டமன்றத்திலே 110 விதியின் கீழ் அறிவிக்கப்பட்ட அத்தனை திட்டங்களையும் நிறைவேற்றி, மக்களின் பயன்பாட்டிற்கு வரப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, சேலம் மாவட்டத்தில், நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக, பொதுப்பணித் துறையின் மூலமாக பல்வேறு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சுகாதாரத்துறையின் மூலமாக பல்வேறு ஆரம்ப சுகாதார நிலையங்கள் எல்லாம் இன்றைக்கு தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக உயர்த்தப்பட்டிருக்கின்றன. அம்மாவினுடைய ஆட்சியில்தான், இந்தியாவிலேயே தமிழ்நாடு சுகாதாரத்துறையில் முதன்மையாக விளங்கிக்கொண்டிருக்கிறது. அந்த அளவுக்கு சிறப்பான சிகிச்சையை அரசு அளித்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சியில்தான் இப்படிப்பட்ட அற்புதமான

திட்டங்களை மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற இந்த விழாவிலே கலந்துகொண்டதிலே நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்நாட்டிலேயே எடப்பாடி தொகுதி ஒரு பின்தங்கிய தொகுதியாக ஒருகாலத்தில் இருந்த நிலை மாறி, இன்றைக்கு மக்கள் என்னென்ன நினைத்தார்களோ, அத்தனையும் நிறைவேறப்பட்ட ஒரு தொகுதியாக காட்சியளிக்கிறது என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எனவே தான், தமிழகத்தினுடைய முதலமைச்சராக நான் இருக்கின்றேன். அது உங்களால், உங்களுடைய மிகுந்த ஆதரவினால், இன்றைக்கு இந்த உயர்ந்த பதவி கிடைத்திருக்கின்றது. நம்முடைய எடப்பாடி தொகுதி மக்களுக்கும், நம்முடைய சேலம் மாவட்ட மக்களுக்கும் என்னால் முடிகின்ற திட்டங்களை நிறைவேற்றுவேன் என்று இந்த நேரத்திலே தெரிவித்து, என்றைக்கும் அம்மாவினுடைய அரசுக்கு பக்கபலமாகவும் நீங்கள் இருக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்து, இன்றைக்கு இந்த ஆட்சி நடக்கின்றபோது, நான் முதலமைச்சராக ஆனவுடனே பலபேர் நினைத்தார்கள், இன்றைக்கு ஆட்சி போய்விடும், நாளைக்கு ஆட்சி போய்விடும், இது பத்து நாள் தாண்டுமா? 20 நாள் தாண்டுமா? அப்படியெல்லாம் சொல்லுகின்றவர்களுக்கெல்லாம் மூக்கின் மேல் விரலை வைத்து இந்த ஆட்சி நான்கு ஆண்டுகாலம் முழுமையாக நிறைவேற்றும் என்ற நிலையை நாங்கள் உருவாக்கித் தந்திருக்கின்றோம். நான் பதவியேற்ற 5 மாத காலத்திலே பல்வேறு திட்டப்பணிகள் நிறைவேற்றியிருக்கின்றேன்.தமிழகம் முழுவதும் இன்றைக்கு மக்களுக்கு என்ன தேவை, அதை உடனுக்குடன் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். எந்தக் கோப்பும் நிலுவையில் கிடையாது. என்னிடத்திலே, முதலமைச்சர் என்ற முறையிலே பல்வேறு துறைகளிலிருந்து வருகின்ற கோப்புகள் எல்லாம் உடனடியாக தீர்வு காணப்படுகின்ற காரணத்தினாலே, அந்தத் திட்டம்

விரைந்து செயல்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு வருகின்றன. ஆகவே, இன்றைக்கு அம்மாவழி ஆட்சியில் கல்வி சிறந்து விளங்குகின்றது, சுகாதாரம் சிறந்து விளங்குகின்றது.

கடுமையான வறட்சி, 140 ஆண்டுகாலம் இல்லாத ஒரு வறட்சி, மழையே கிடையாது. நம்முடைய பகுதியில் 1,000 அடி Bore போட்டாலும் தண்ணீர் கிடையாது. அப்படிப்பட்ட வறட்சியான இந்த கால கட்டத்தில் கூட, மக்களுக்கு தேவையான குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் அனைத்து செய்யப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆட்சி உங்கள் ஆட்சி, மக்கள் ஆட்சி, மக்கள் என்ன எண்ணுகின்றார்களோ அதை நிறைவேற்றுகின்ற அரசு அம்மாவினுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

❖ ❖ ❖

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இந்த விழாவில், 1,306 பயனாளிகளுக்கு 19.78 கோடி மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 3 கோடியே 92 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் மதிப்பில் 12 முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்தார்கள். பள்ளிக்கல்வித் துறை சார்பில் 1 கோடியே 60 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான அரசு உயர்நிலைப் பள்ளி கூடுதல் கட்டடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 23.07.2017 அன்று,*

சேலம் மாவட்டம், எடப்பாடியில் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரை.

மக்கள் நலத்திட்டங்களை அம்மாவின் வழியில் செயல்படுத்திவரும் அரசு! மக்களின் நலனுக்காகவே செயல்படும் அரசு!

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி ஒவ்வொரு வருடமும் சீரோடும், சிறப்போடும் சேலம் அரசு பொருட்காட்சி தொடக்கவிழா நிகழ்ச்சியிலே பங்குபெற்று, அதிலே திறந்து வைக்கின்ற நல்வாய்ப்பை இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொடங்கி வைக்கின்ற நல்வாய்ப்பை எனக்கு வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இப்பொழுது நம்மிடத்திலேயிருந்து மறைந்தாலும், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு இன்றையதினம் இந்த அரசு பொருட்காட்சியை துவக்கி வைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, இந்த அரசு பொருட்காட்சி நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருக்கின்ற மதிப்பிற்குரிய மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு கடம்பூர் ராஜு அவர்களே, வரவேற்புரை நிகழ்த்திய செய்தி மக்கள் தொடர்புத்துறை

இயக்குநர் திரு குமரகுருபரன் அவர்களே மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, கூட்டுறவு சங்க நிருவாகிகளே, முன்னாள் உள்ளாட்சிமன்ற நிர்வாகிகளே, முன்னாள் மேயர் திரு. சவுண்டப்பன் அவர்களே, மேடையிலே வீற்றிருக்கின்ற அரசு அலுவலர்களே, வருகை தந்துள்ள பெரியோர்களே, தாய்மார்களே, பயனாளிகளே, பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே, இறுதியாக நன்றியுரை ஆற்றவிருக்கின்ற நமது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே, அனைவருக்கும் பணிவான வணக்கத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக்கிறேன்.

தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்திற்கென்று தனி சிறப்புகள் உண்டு. விவசாயம், சிறு குறு தொழில்கள், இரும்பு, மற்றும் டெக்ஸ்டைல்ஸ் தொழிற்சாலைகள் என்று பல்வேறு தொழில்களை செய்பவர்கள் கலந்து வாழும் மாவட்டம், சேலம் மாவட்டம்.

அதேபோல பெரிய வசதிபடைத்தவர்களும், மிகவும் ஏழ்மையானவர்களும் சேலம் மாவட்டத்தில்தான் வசிக்கிறார்கள்.

சேலத்து மாங்கனியும், இரும்பும் உலகப் புகழ் பெற்றவை, எனவேதான் சேலத்து மக்கள் கனிவும் கண்டிப்பும் உடையவர்களாக பேசப்படுகின்றார்கள்.

தமிழ்த் திரைப்படங்களின் தொடக்கப் புள்ளியாக நமது சேலம் விளங்கியிருக்கிறது. திராவிட இயக்கத்தை உருவாக்கிய களமாகவும் இந்த சேலத்து மண் விளங்கியிருக்கிறது.

சேலத்துக்கு இன்னும் ஒரு சிறப்பு உண்டு.

நூற்றாண்டு விழா நாயகன், மாண்புமிகு புரட்சித்தலைவர் பொன்மனச்செம்மல், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின், விதையாகவும், வேராகவும் விளங்கிய மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், 1977இல் தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பேற்ற அடுத்த ஆண்டே அரசுப் பொருட்காட்சியை முதன்முதலில் சேலத்தில்தான்

தொடங்கினார்கள் என்ற பெருமையை சேலம் பெற்றது என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இதன்மூலம், சேலத்து மக்கள் மீது டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு எத்தனை ஈடுபாடும், அக்கறையும் இருந்திருக்கிறது என்பதை புரிந்துகொள்ள முடியும்.

அதேபோலவே புரட்சித்தலைவர் மீதும், புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மீதும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மீதும் இன்றளவும் ஒரு விழுக்காடு கூட குறைவில்லாமல் சேலத்து மக்கள் பாசமும் பக்தியும் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு ஒவ்வொரு தேர்தலின்போதும், இங்கிருந்து சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் அதிக எண்ணிக்கையே சாட்சியாக இருக்கின்றன.

தமிழகத்திலேயே சேலம் மாவட்டத்தில் தான் அதிக சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற மாவட்டம் சேலம் மாவட்டம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக. அப்படி புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய கோட்டை, அம்மா கோட்டையாக விளங்குவது சேலம் மாவட்டம். இந்த மாவட்டத்தில் விவசாயக் குடும்பத்தில் பிறந்து மக்கள் பணியில் படிப்படியாக உயர்ந்து இன்று சேலத்து மக்களின் பிரதிநிதியாக தமிழ்நாட்டின் முதலமைச்சராக அமர்த்தப்பட்டிருக்கிறேன் என்றால்..

அது சேலத்து மக்களுக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இருக்கும் யாராலும் அசைக்க முடியாத வலிமையான உறவையே காட்டுகிறது.

“முதலமைச்சர் என்பது பதவி அல்ல! அது ஒரு பணி” என்று டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம் அவர்களும், “பதவி என்பது தோளில் போட்டிருக்கின்ற துண்டு” என்று பேரறிஞர் அண்ணா அவர்களும் கூறியதைப் போல நான் என் பதவியை பணியாகக் கருதி எப்போதும் மக்களுக்காக பணியாற்றும் தொண்டனாகவே நான் இருக்க விரும்புகின்றேன்.

குறிப்பாக என்னை சட்டமன்றத்திற்கு அனுப்பி அழகு பார்த்த மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும், சேலத்து மக்களுக்கும் என்றைக்கும் நன்றி கடன்பட்டிருக்கிறேன்.

நான் முதலமைச்சராக செயல்பட்டாலும், சேலத்து மாவட்டத்தின் சட்டமன்ற உறுப்பினர் என்பதை உணர்ந்து உங்கள் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்து வருகிறேன் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மண்ணின் மைந்தனாகிய நான் முதலமைச்சர் பணியை ஏற்று ஆற்றி வருகின்ற தொண்டுகளையும், கொண்டு வருகின்ற நலத்திட்டங்களையும் இங்கே தொடங்கி வைக்கப்பட்டிருக்கின்ற பொருட்காட்சியின் மூலம் கண்டு களிப்பீர்கள் என நம்புகின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த அரசு தமிழக மாவட்டங்களை மண்டலங்களாக பிரித்து அந்தந்த மண்டலத்திற்கான திட்டப்பணிகளை வெவ்வேறு நாட்களில் தொடங்கி வைத்தேன்.

07.03.2017 அன்று சேலம் மண்டலத்திற்கு உட்பட்ட சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய நான்கு மாவட்டங்களிலும், மொத்தம் 330 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்ட 3,971 திட்டப்பணிகளும் தொடங்கி வைத்தேன்.

குறிப்பாக, சேலம் மாவட்டத்தில் 115 கோடியே 71 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 462 திட்டப்பணிகளை அன்றைய தினம் தொடங்கி வைத்தும் அடிக்கல் நாட்டியும் மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டன.

3,363 பயனாளிகளுக்கு, 21 கோடியே 16 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

மேலும், 18.03.2017 அன்று எடப்பாடி பொன்விழா ஆண்டு நினைவுத் தூண் திறப்பு விழா நிகழ்ச்சியில் 2 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 11 பொன்விழா ஆண்டு திட்டப்பணிகளையும்; 28.04.2017 அன்று 30 கோடியே 5 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில்

3 புதிய திட்டப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டி, 51 முடிவுற்ற திட்டப் பணிகளை துவக்கி வைத்தேன்.

27.05.2017 அன்று ஏற்காடு கோடைவிழா நிகழ்ச்சியில் 6,192 பயனாளிகளுக்கு 74 கோடியே 34 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத் திட்ட உதவிகள் வழங்கினேன்.

இன்று நடக்கும் இந்த இனிய விழாவில் 28 கோடியே 58 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 24 முடிவுற்றத் திட்டப் பணிகளை திறந்து வைப்பதிலும்; 11 கோடியே 65 இலட்சம் மதிப்பீட்டில் 14 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி வைப்பதிலும், 14 கோடியே 47 இலட்சம் மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை 3,233 பயனாளிகளுக்கு வழங்குவதிலும் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

தொடர்ந்து சேலத்திற்கு இத்தகைய அரசுத் திட்டங்களை காட்சிப்படுத்தி பாமர மக்களுக்கும் கொண்டு செல்லும் அரிய பணியைத்தான் செய்தி மக்கள் தொடர்புத்துறை இந்த அரசு பொருட்காட்சியின் மூலம் செய்து வருகிறது.

மக்களுக்கும் அரசுக்கும் நடுவில் பாலமாக இருந்து மக்களின் கருத்துக்களை அரசுக்கும் அரசின் திட்டங்களை மக்களுக்கும் கொண்டு செல்லும் ஒரு தூதுவரைப்போல் செய்தித்துறை செயல்படுகிறது.

குறிப்பாக ஏழை எளிய, பாமர மக்களிடையே அரசின் திட்டங்களைப் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி, அத்திட்டத்தின் மூலம் முழுப் பலனும் பயனாளிகளுக்கு கிடைப்பதற்கு செய்தித்துறைதான் மிகவும் பயன்படுகிறது.

அதிலும் செய்தித்துறையின் ஓர் அங்கமாக செயல்படுகின்ற அரசுப் பொருட்காட்சிகள் மூலம் பொதுமக்கள் அனைத்து விவரங்களையும் நேரில் அறிந்து உரிய பயன்களைப் பெறுகிறார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் “மக்களால் நான்! மக்களுக்காக நான்!” என்றார்கள்.

இன்றைக்கு அம்மா அவர்களின் அனைத்துத் திட்டங்களும் சிறு வீடுகளில் வசிக்கும் கூலித் தொழிலாளிகளையும் மகிழ்ச்சியூட்டுகிறது என்றால் அதற்கு முழு காரணம் அரசு பொருட்காட்சிதான்.

தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் 10 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

கோவை, மதுரை, சேலம், வேலூர், திருநெல்வேலி, திருச்சி மற்றும் சுழற்சி முறையில் ஏனைய 4 மாவட்டங்களிலும் அரசுப் பொருட்காட்சி நடத்தப்படுகின்றன.

1978ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் இதுவரை மொத்தம் 183 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக சேலத்தில் மட்டும் இதுவரை 34 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன என்பது நமக்கு பெருமையளிக்கிறது.

184ஆவது அரசுப் பொருட்காட்சி 25.06.2017 அன்று நெல்லையில் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

அரசுப் பொருட்காட்சிகளில் முன்னர் 15 அரசுத் துறைகள்தான் பங்கேற்றன.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மேலும் 12 அரசுத்துறைகள் பங்குபெற ஆணையிட்டதன் விளைவாக தற்போது 27 அரசுத் துறைகள் அரசுப் பொருட்காட்சியில் பங்கேற்று சிறப்பிக்கின்றன.

தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், தமிழ்நாடு கிராம கைத்தொழில் வாரியம், கோ–ஆப்டெக்ஸ், ஆவின், தாட்கோ, சேலம் மாநகராட்சி,

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு உப்பு நிறுவனம் போன்ற அரசு சார்பு நிறுவனங்களும் அரசுப் பொருட்காட்சியில் பங்கேற்கின்றன.

தமிழ்நாடு அரசின் சார்பில் செய்தி மக்கள் தொடர்புத்துறை, புதுடெல்லியில் 2014ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசு நாள் விழா அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில், பொங்கல் விழாவினைச் சித்தரிக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் வடிவமைக்கப்பட்ட அலங்கார ஊர்தி அகில இந்திய அளவில் இரண்டாம் பரிசு பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

2016ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசு நாள் விழா அலங்கார ஊர்திகள் அணிவகுப்பிற்கு தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள நீலகிரி மாவட்டத்தில் வசித்துவரும் “தோடர்கள்” என்ற மலைவாழ் பழங்குடி இனத்தினரைக் குறிக்கும் வகையில் அலங்கார ஊர்தி வடிவமைக்கப்பட்டு, பங்கேற்கப்பட்டது.

2017ஆம் ஆண்டின் குடியரசு நாள் விழா அணிவகுப்பில் தமிழ்நாட்டின் நாட்டுப்புறக் கலையான கரகாட்டத்தை விளக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் அலங்கார ஊர்தி அகில இந்திய அளவில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.

புதுடெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் மலர்ப்பேரணி விழாவில் இந்தியத் துணைக் கண்டத்தின் ஒருமைப்பாடு, மத நல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில், செய்தி மக்கள் தொடர்புத் துறை தொடர்ந்து பங்கேற்று வருகிறது.

2012, 2013, 2014, 2015 மற்றும் 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற மலர்ப்பேரணி விழாக்களில் தமிழ்நாடு அரசு பங்கேற்று முதல் பரிசு பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

எனக்கு முன்னாலே நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர் அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களும், அமைச்சர்

அவர்களும் அழகாகப் பேசினார்கள். இன்றைக்கு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு, மக்களுடைய அரசு, மக்கள் என்ன எண்ணுகின்றார்களோ, அதை நிறைவேற்றுகின்ற அரசு அம்மாவினுடைய அரசாக இன்றைக்கு செயல்பட்டு வருகின்றது. எனக்கு முன்னாலே இங்கே பேசினார் நாடாளுமன்ற உறுப்பினர். இந்த ஆட்சி இருக்குமா ? போகுமா ? நாளைக்கு இருக்குமா ? 4 நாளைக்கு இருக்குமா ? அல்லது நிதிநிலை அறிக்கையோடு போய்விடுமா ? அல்லது மானியக்கோரிக்கை வரை இருக்குமா ? தாக்கு பிடிக்குமா ? என்றெல்லாம் எதிர்க்கட்சியினர் விமர்சனம் செய்தார்கள். மக்களை போட்டு குழப்பினார்கள். ஆனால், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆசியோடும், ஆத்மாவோடும் இன்னும் 4 ஆண்டு காலம் ஆட்சி அதிகாரத்திலே இருந்து, மக்கள் சேவையை தொடர்ந்து செய்யும் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், இந்த ஆட்சி அம்மாவினுடைய ஆட்சி, நாங்கள் அந்த பணியைத்தான் செய்து கொண்டிருக்கின்றோம். இன்றைக்கு இந்த மண்ணிலேயிருந்து மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மறைந்தாலும், என்றைக்கும் மக்கள் மனதிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற முதலமைச்சராக நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். ஆகவே, அம்மாவினுடைய ஆசியும், அம்மாவினுடைய அன்பும், அதேபோல இன்றைக்கு மக்களுடைய அன்பும் இந்த ஆட்சிக்கு தொடர்ந்து இருக்கின்ற வரை எவராலும் இந்த அரசை அசைக்கவோ, ஆட்டவோ முடியாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, சேலத்திற்கு பெரிய பெருமை தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்கள் இருக்கின்றன. எந்த மாவட்டத்திற்கும் இல்லாத சிறப்பு இந்த மாவட்டத்திற்கு இருக்கின்றது. இன்றைக்கு நம்முடைய மாவட்ட மக்களுக்கு பல்வேறு திட்டங்களை நேரடியாக நான் பார்த்து பார்த்து, செய்யக்கூடிய பாக்கியம் முதலமைச்சர் என்ற மிகப்பெரிய பொறுப்பு இந்த மண்ணிற்கு கிடைத்திருக்கின்றது. ஆகவே, இந்த சேலம் மாவட்ட மக்களுடைய நலன் காக்கப்படும், சேலம்

மாவட்ட மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படும். இன்றைக்கு சேலம் மாவட்டம் ஒரு முதன்மை மாவட்டமாக விளங்கக்கூடிய அளவிற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். எனக்கு முன்னாலே அருமை சகோதரர் வெங்கடாசலம் குறிப்பிட்டார்கள், அதேபோல செய்தித்துறை அமைச்சர் இங்கே குறிப்பிட்டார்கள். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கின்றபொழுது, சேலம் மாவட்டத்திற்கு என்னென்ன கேட்டோமோ, அத்தனையையும் நிறைவேற்றித் தந்த முதலமைச்சர் நம்முடைய இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். இன்றைக்கு, நம்முடைய சேலம் மாநகரத்தில் மட்டும் எத்தனை பாலங்கள், எண்ணிப் பாருங்கள், எந்த மாவட்டத்திலாவது நடக்கிறதா ? ஒரே நேரத்தில், ஐந்தாண்டு கால அம்மாவினுடைய பொற்கால ஆட்சியில் அத்தனை பாலங்களையும் கண்கூடாக நாம் பார்க்கின்றோம். அருமையான அம்மாவினுடைய திட்டங்களை காட்சியாக இன்றைக்கு பார்க்கின்றோம். உன்னதமான திட்டங்களை அம்மா வாரிவாரி தந்தார்கள். அது மட்டுமல்ல, சாலை வசதி, அதுபோல சுகாதார வசதி, இன்றைக்கு 48 கோடி ரூபாயில், அருமையான மகப்பேறு மருத்துவமனை, 500 படுக்கை வசதி கொண்ட நவீன மருத்துவமனை அம்மாதான் நமக்கு கொடுத்தார்கள். இன்றைக்கு ஏழை தாய்மார்கள், தனியார் மருத்துவமனைக்கு சென்று பிரசவம் பார்த்தால் இன்றைக்கு 10,000, 15,000 ரூபாய் செலவாகும். அதை எண்ணிப்பார்த்து, அம்மா சேலம் மாவட்ட மக்கள், பக்கத்து மாவட்டம் தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல் மாவட்டங்களில் இருக்கின்ற ஏழை தாய்மார்கள் இன்றைக்கு நம்முடைய சேலம் அரசு மோகன்குமாரமங்கலம் மருத்துவமனையிலே வந்து இன்றைக்கு பிரசவம் பார்த்து செல்லக்கூடிய திட்டத்தை இன்றைக்கு கொடுத்திருக்கிறார்கள். மிகப்பெரிய திட்டம், 500 படுக்கை. அதில் பச்சிளங்குழந்தைகளுக்கு சிறப்பு சிகிச்சை முகாம். 2011இல் இருந்து அம்மா சேலம் மாவட்ட மக்களை மனதிலே

வைத்து, என்னென்ன தேவைகள் என்பதை அறிந்து, அறிந்து செய்தவர்கள் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். தாலிக்குத் தங்கம் திட்டம், அம்மா அரை பவுன் கொடுத்தார்கள், 25,000, 50,000, 2011இல் அறிவித்து சாதனையை செய்தார்கள். 2016இல் 4 கிராமை, 8 கிராமாக உயர்த்தினார்கள். இப்பொழுது 1 பவுன் தங்கம் தருகிறோம். இன்றைக்கு ஏழை குடும்பத்தில் பிறந்த பெண்கள் உரிய நேரத்திலே திருமணம் செய்யமுடியாத சூழ்நிலையை பார்த்து அம்மா, அரை பவுனை 1 பவுன் ஆக்கினார்கள். இப்படி வழங்கி வருகின்ற ஆட்சி அம்மாவினுடைய ஆட்சி. கல்வியிலே புரட்சி, மறுமலர்ச்சி, அறிவுபூர்வமான கல்வி, விஞ்ஞான கல்வி, நம்முடைய குழந்தைகளுக்கு கொடுத்தது யார், அம்மாதான். வல்லரசு நாட்டில் கூட, இலவச கம்ப்யூட்டர் கொடுக்கவில்லை, 14,000 ரூபாய் ஒரு கம்ப்யூட்டர் ஏழைஎளிய மாணவர்கள் கூட இன்றைக்கு கம்ப்யூட்டரை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். உலக நிகழ்ச்சிகளை ஒரு நொடியில் தெரிந்துகொள்கிறார்கள். அப்படிப்பட்ட உன்னதமான திட்டத்தை கொடுத்தவர் நம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். இன்றைக்கு தமிழகத்தை முன்னேற்றப் பாதையிலே கொண்டு செல்லுகின்ற ஆட்சியாக இருக்கிறது. அம்மா விட்டுச்சென்ற பணிகளை தொடர்ந்து செய்வோம் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இன்றையதினம் நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். 140 ஆண்டுகாலம் இல்லாத வறட்சி. கடுமையான வறட்சி, மழையே இல்லை, இன்றைக்கு குடிப்பதற்குக் கூட நீர் கிடைக்காத சூழ்நிலை. இன்றைக்கு 1,000 அடி Bore போட்டால் தான் சேலம் மாவட்டத்தில் தண்ணீர் கிடைக்கிறது. அந்த அளவிற்கு நீர்மட்டம் கீழே போய்விட்டது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் கூட, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் என்ன வழியைப் பின்பற்றி ஆட்சி நடத்தினார்களோ, அதே வழியில் பின்பற்றி அம்மாவினுடைய அரசு இன்றைக்கு ஒவ்வொரு வகையிலும் ஆய்வு செய்யவும், தூர்வாரவும் இந்த பிரச்சினையில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளாட்சித்துறை அமைச்சர், உயர் அதிகாரிகளுடன் கூடிபேசி, எங்கெங்கு எல்லாம் குடிநீர்

பிரச்சினை என்பதை ஆய்வு செய்து, உடனடியாக தீர்வு கண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கையின் காரணமாக குடிநீர் பிரச்சினை தீர்க்கப்பட்டது. சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அம்மா அவர்கள் இருக்கின்ற பொழுது, கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் நம்முடைய மாவட்ட மக்களுக்கு தேவையான குடிநீர் வழங்கிய தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே எண்ணிப் பார்க்கவேண்டும். இந்தியாவிலேயே இன்றைக்கு கல்வி கற்பவர்கள் எண்ணிக்கை தமிழகத்தில் தான் அதிகமாக இருக்கிறது. இன்றைக்கு 44 சதவீதம் பேர் உயர்கல்வி படிப்பதற்கான சூழ்நிலையை அம்மா அவர்கள் உருவாக்கித் தந்துள்ளார்கள். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி, மருத்துவக் கல்லூரி கொடுத்தார்கள். எண்ணற்ற கல்லூரிகளை கொடுத்ததன் விளைவு நம்முடைய மாவட்ட மாணவர்கள் உயர்கல்வியை படிக்கின்ற எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. எங்கே கல்வி கற்றவர்களுடைய எண்ணிக்கை அதிகம் இருக்கின்றதோ, அங்கு பொருளாதாரம் உயரும், அமைதி நிலவும். தமிழகம் இன்றைக்கு இந்தியாவிலேயே பீடுநடை போடுகின்ற சூழ்நிலையை கொண்டுவந்தவர் அம்மா அவர்கள். குடிமராமத்து திட்டத்திற்கு முதல் கட்டமாக 100 கோடி ரூபாய் கொடுத்தோம். வண்டல்மண்ணை விவசாயிகள் இலவசமாக எடுத்துக் கொள்ளலாம் என்ற திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம். ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏரிகள் இன்றைக்கு தூர்வாரப்பட்டுள்ளன. மேலும், கூடுதலாக 2,065 ஏரிகள் 300 கோடி ரூபாய் திட்டத்தில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இது முழுக்க முழுக்க விவசாயிகளின் பங்களிப்போடு செய்யப்பட்டு வருகிறது. இதற்கு டெண்டர் கிடையாது, அங்குள்ள பாசன விவசாயிகள் அணுகி, விவசாயிகள் பங்களிப்போடு இந்தத் திட்டம் உருவாக்கி செயல்படுத்தப்பட்டு வருகிறது. வண்டல் மண் இயற்கையான உரம். வண்டல் மண் பல ஆண்டுகளாக எடுக்கப்படாமல் இருந்தது. குளங்கள், ஏரிகள், அணைகளில் இருக்கின்ற வண்டல்மண்ணை விவசாயிகள் அள்ளிக் கொள்ளலாம் என்ற நிலை உள்ளது. இயற்கை வளமான

வண்டல் மண் விவசாயிகளுக்கு அதிக விளைச்சலை தரும். மக்கள் வீடுகட்டினால் பேஸ்மெண்ட் வரைக்கும் அதிகாரிகளிடம் தக்க அனுமதி பெற்று நிரப்பிக் கொள்ளலாம். அதேபோல, மணல் அரசாங்கமே ஏற்று நடத்துகிறது. ஒரு நாளைக்கு 8,500 லாரி மணல் அள்ளப்படுகிறது. இன்றைக்கு மக்களுக்கு குறைந்தவிலையில் மணல் கிடைக்கும் சூழ்நிலை உருவாக்கப்படும். தமிழக அரசுக்கு அதிகமான வருவாய் கிடைக்கிறது. அதேபோல, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 110 விதியின் கீழ் பல்வேறு திட்டங்களைத் தந்தார்கள். எதிர்க்கட்சிகள் எல்லாம் கேட்கிறார்கள் 110 அறிவிப்பின்கீழ் என்ன செய்தீர்கள் என்று கேட்கிறார்கள்? நாங்கள் என்ன திட்டத்தை செய்யவில்லை என்று கேட்டால் அதற்கு பதில் சொல்ல மறுக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்த அத்தனை திட்டங்களும் நிறைவேற்றப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு என்ன திட்டத்தை கொண்டு வந்திருக்கிறது என்பதை பொருட்காட்சி மூலம் அந்தந்த துறை அரங்கத்தில் பார்த்து தெரிந்து கொள்ளலாம். அருமையான பொருட்காட்சியை புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.அவர்களால் உருவாக்கப்பட்டு, மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களால் கட்டிக் காக்கப்பட்டது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அரங்கத்தில் நீங்கள் போய்ப் பார்த்தால், அம்மாவினுடைய அரசு எந்த திட்டங்களை தந்திருக்கிறது என்பதை தத்ரூபமாக பார்த்து தெரிந்துகொள்வதற்கு இந்த பொருட்காட்சி மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி,

எனவே அரசு நடத்தும் இந்தப் பொருட்காட்சிக்கு பொதுமக்கள் பெரும் திரளாக வருகை தந்து பயனடைய வேண்டுகின்றேன்.

இந்த இனிய பொருட்காட்சியை ஒருங்கிணைத்து அமைத்திருக்கின்ற செய்தி மக்கள் தொடர்புத்துறையை நான் உளமாற வாழ்த்துகின்றேன்.

மாண்புமிகு அம்மா வழியில் செயல்படும் அரசு. அம்மா அவர்களின் எண்ணங்களை நிறைவேற்றும் அரசு மக்கள் நலத்திட்டங்களை அம்மாவின் வழியில் செயல்படுத்தி வரும் அரசு மக்களின் நலனுக்காகவே செயல்படும் அரசு

இது உங்கள் அரசு – உங்கள் நலன் பேணும் அரசு எனச் சொல்லி

“மக்கள் என் பக்கம் இருக்கிறார்கள்
நான் மக்கள் பக்கம் இருக்கிறேன்”

என்ற புரட்சித்தலைவி அம்மாவின் பொன்மொழிக்கேற்ப இந்த அரசு மக்களின் சேவகனாகப் பணியாற்றும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி!

வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள் 23.07.2017 அன்று*
சேலம் அரசுப் பொருட்காட்சி தொடக்க விழாவில் ஆற்றிய உரை.

கிராம முன்னேற்றத்துக்கான திட்டங்களுக்கு நபார்டு வங்கி ஆண்டுக்கு ரூ.2,000 கோடி கடனுதவி!

அன்பின் உருவம், ஆற்றலின் இருப்பிடம், இன்றும் என்றும் என்றென்றும் மக்களின் மனதை விட்டு நீங்காத மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாழும் திசை நோக்கி பணிந்து வணங்குகிறேன்.

இந்த இனிய விழாவிற்கு வருகைப் புரிந்துள்ள மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்களே,

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களே,

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.பி. தங்கமணி அவர்களே,

மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களே,

மாண்புமிகு மீன் வளம், நிதி, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்களே,

ஊரக வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்களே!

வேளாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திரு. ககன் தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்களே !

வரவேற்புரை ஆற்றிய நபார்டு வங்கியின் தலைமை பொது மேலாளர் திரு.எஸ்.நாகூர் அலி ஜின்னா அவர்களே!

நன்றியுரை ஆற்ற உள்ள நபார்டு வங்கியின் பொது மேலாளர் திருமதி. மில்ரட் கெஸ் அவர்களே!

இந்த சிறப்பான நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியினுடைய தலைவர் சகோதரர் இளங்கோவன் அவர்களே,

இங்கே பெருந்திரளாக வருகை தந்துள்ள தமிழ்நாடு அரசு அலுவலர்களே!

நபார்டு வங்கி மற்றும் இதர வங்கிகளைச் சார்ந்த அலுவலர்களே!

சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளே! பயனாளிகளே!

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் என் உளமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாய வளர்ச்சிக்காகவும், ஊரக மேம்பாட்டுக்காகவும் கடந்த 35 ஆண்டுகளாக சீரிய முறையில் பங்காற்றி வரும்

நபார்டு என்கிற தேசிய வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கியின் 36ஆவது ஆண்டு துவக்க விழா மற்றும் சுய உதவிக் குழுக்களை வங்கிகளுடன் இணைக்கும் திட்டத்துக்கான விருது வழங்கும் விழாவில் கலந்து கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த தருணத்தில் நபார்டு வங்கிக்கு என் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் விவசாய கட்டமைப்புகளை மேம்படுத்தி விவசாய பெருமக்களின் வளர்ச்சிக்கும், கிராமப் பெண்களுடைய வாழ்வின் மலர்ச்சிக்கும் செயல்படுத்தப்பட்ட தமிழக அரசின் திட்டங்களில், அரசுடன் இணைந்து நபார்டு வங்கி ஆற்றிய சேவை குறிப்பிடத்தக்கது.

கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்படும் பயிர்கடனுக்கு நபார்டு வங்கி மறுநிதியுதவி அளித்து வருகிறது.

கிராமச்சாலைகள் முதல் பாடசாலைகள் வரை, கால்நடை மருத்துவ மையங்கள் முதல் மீன்பிடி துறைமுகங்கள் வரை, விவசாயக் கூட்டுறவு சங்கங்கள் முதல் பொது விநியோக கிடங்குகள் வரை அனைத்து விதமான கிராம முன்னேற்றத்துக்கான திட்டங்களிலும் நபார்டு வங்கி தனது ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியிலிருந்து தமிழ்நாடு அரசுக்கு ஆண்டுக்கு 2,000 கோடி ரூபாய் வரை கடனுதவி அளித்து வருவதை நான் இங்கே மகிழ்ச்சியோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இத்திட்டத்தில் அதிக நிதியுதவி பெறும் மாநிலங்களில் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

இந்த உதவிகளை பயன்படுத்தி, தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம், தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்

கழகம், தமிழ்நாடு மீன்வள பல்கலைக் கழகம் ஆகிய பல்கலைக் கழகங்களுக்கு கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தி கல்விக்கும் வேளாண்மை சார்ந்த ஆராய்ச்சி மற்றும் தொழில் வளர்ச்சிக்கும் நபார்டு வங்கி வழி வகுத்துள்ளது.

இந்த கட்டமைப்பு நிதியுதவியை தமிழ்நாடு பல முன்னோடி திட்டங்களைத் தீட்ட பயன்படுத்தி வருகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வளமான தமிழ்நாடு உருவாக பல்வேறு சீரிய திட்டங்களையும் செயல்படுத்தினார். அவர் வழியில், செயல்பட்டுவரும் தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டின் உழவர் பெருமக்கள், கைவினைக் கலைஞர்கள், நெசவாளர்கள் மற்றும் தாய்மார்களின் ஒளிமயமான எதிர்காலத்துக்கு பல்வேறு நலத்திட்டங்களையும் நபார்டு வங்கியின் உதவியோடு செயல்படுத்தி வருகிறது.

போதிய பருவ மழை பொய்த்து, தமிழ்நாடு வறட்சியை சந்தித்துக் கொண்டிருக்கும் வேளையில், குடிமராமத்துப் பணிகளுக்காகவும், நீராதாரங்களின் மேம்பாட்டுக்காகவும் நபார்டு வங்கியின் நிதி உதவியை அரசு கோரியுள்ளது. இதன் மூலமாக தமிழ்நாட்டில் உள்ள 41 ஆயிரம் நீர்பாசன ஏரிகள் புனரமைக்க வாய்ப்பு ஏற்படும்.

இந்த ஆண்டு தமிழக அரசின் வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள மானாவாரி நிலப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக வேளாண்மை உற்பத்தி கூட்டமைப்புக்களுக்கு நபார்டு வங்கி கடனுதவி அளிக்க உள்ளது

இது தவிர எளிதில் அழுகக் கூடிய காய்கறிகள், பழங்கள் உற்பத்தியை உயர்த்தி நிலை நிறுத்த, விநியோக தொடரமைப்பு மேலாண்மைக்கு (supply Chain Managment) 398 கோடி ரூபாய் கடனுதவியை நபார்டு வங்கி வழங்கியுள்ளது.

இத்திட்டம் நமது நாட்டிலேயே ஒரு முன்னோடித் திட்டமாகும். விவசாயப் பொருட்களுக்கு இலாபகரமான விலை கிடைத்தால்தான் விவசாயிகள் தொடர்ந்து விவசாயத்தில் ஈடுபட முடியும்.

அதற்கு உதவும் வகையில் APMC சட்டத்தில் தமிழக அரசு அவசியமான சில நல்ல மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கிறது.

இதன் மூலமாக ஒருங்கிணைந்த தேசிய விவசாயச் சந்தையில் தமிழக விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை சந்தைப் படுத்த முடியும்.

இதன் மூலமாக விவசாயிகள் தங்கள் பொருட்களை இலாபகரமான விலையில் விற்க முடியும் என்பது மட்டுமில்லாமல், அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பணம் உடனடியாக அவர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

விவசாயிகளையே முதலாளிகளாக மாற்றும் வகையில் விவசாயிகளை ஒருங்கிணைத்து உழவர் உற்பத்தி கூட்டமைப்புகளை உருவாக்கி அமைதியான விவசாயப் புரட்சியை நபார்டு வங்கி உதவியுடன் தமிழ்நாடு செய்து வருகிறது .

தமிழ்நாடு, இதன் மூலமாக விவசாயிகளுக்கு இடுபொருள் விலை சலுகை முதல் மேம்பட்ட சந்தை வாய்ப்புகள் வரை பல்வேறு வகையான பலன்கள் கிடைக்கின்றன.

இன்று தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் பல வெற்றிகரமான முறையில் செயல்பட்டு வருகின்றன.

நெசவாளர்களை ஒருங்கிணைத்து இத்தகைய இலாபகரமான அமைப்பினை நிறுவிடவும் நபார்டு முயற்சி எடுத்து வருகிறது.

பருவகால மாற்றங்களை எதிர்கொள்வது இன்று விவசாயிகளுக்கு ஒரு பெரிய சவாலாக உள்ளது. இந்த மாற்றங்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளத்தக்க வகையில் பல்வேறு பருவ கால மாற்ற திட்டங்களை, தமிழ்நாடு அரசின் வனம் மற்றும் சுற்றுச் சூழல்துறையுடன் இணைந்து நபார்டு வங்கி ஆறாயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள பல்வேறு திட்டங்களையும் தீட்டி உள்ளது. இதனால், தமிழக விவசாயப் பெருங்குடி மக்களும், மீனவ நண்பர்களும் பெரும் பயன் அடைவார்கள்.

இந்தியாவிலேயே பருவகால மாற்றங்கள் தொடர்பான திட்டங்களை செயல்படுத்துவதற்கு தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஒரே அமைப்பு என்ற சர்வதேச அங்கீகாரம் பெற்றுள்ள நபார்டு வங்கியை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

இதுமட்டுமில்லாமல் தமிழகத்தில் நதி நீர் இணைப்புத்திட்டங்களை செயல்படுத்தவும் நபார்டு வங்கி மாநில அரசுடன் கைகோர்ந்து, நீண்டகால நீர்பாசன நிதியின் மூலமாக உதவ இருக்கிறது. தாமிரபரணி–நம்பியாறு, அத்திக்கடவு திட்டம் போன்றவை இதில் அடங்கும். தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள “நீரா உற்பத்தி” திட்டத்துக்கான உற்பத்தி தொழிற்சாலைகள் அமைப்பதற்கு உணவுப் பொருள் பதப்படுத்தும் நிதியிலிருந்து உதவ வேண்டும் என்பது தமிழக அரசின் கோரிக்கை.

விவசாயத்துக்கு கடனுதவி வழங்குவதில் கூட்டுறவு வங்கிகள் முதுகெலும்பாகத் திகழ்கின்றன. கூட்டுறவு வங்கிகளும், நிதி ஆதாரம் மிகுந்த வர்த்தக வங்கிகளுக்கு இணையாக சேவை வழங்கவேண்டும் என்ற நோக்கத்துடன் நபார்டு வங்கி தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு வங்கிகள் Core Banking Solutionஐ செயல்படுத்தவும், ரூ–பே டெபிட் அட்டை வழங்கவும், ஏ.டி.எம் இயந்திரங்களை நிர்மாணிக்கவும் மானிய உதவி அளித்து உள்ளது.

கடந்த ஜுன் 12ஆம் தேதி, நடைபெற்ற நிகழ்ச்சியில் நான் கலந்துகொண்டு 40 ஏ.டி.எம். இயந்திரங்களை வாடிக்கையாளர்களுக்கு அர்ப்பணித்து, ரூ–பே டெபிட் அட்டை வழங்கினேன் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டின் எட்டு இலட்சம் கூட்டுறவு வங்கி வாடிக்கையாளர்களுக்கு ரூ–பே டெபிட் அட்டை விரைவில் வழங்க உள்ளது என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசு அறிவித்த ரூபாய் நோட்டுக்கள் சீர்திருத்த நடவடிக்கை காரணமாக, கூட்டுறவு வங்கிகள் பொது மக்களிடமிருந்து பெற்ற செல்லாத 500, 1,000 ரூபாய் நோட்டுக்களை இந்திய ரிசர்வ் வங்கியில் செலுத்துவதில் ஏற்பட்ட சிக்கல்களை களைய நபார்டு வங்கி ஆற்றிய உதவிக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவில் சுய உதவிக்குழுக்கள் உருவாவதற்கு நபார்டு வங்கி முக்கிய பங்காற்றியுள்ளது. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் நபார்டு வங்கி விதைத்த விதை இன்று இலட்சக்கணக்கான சுயஉதவிக் குழுக்களாகப் பெருகி, பெண்கள் சுயமதிப்புடன், தலை நிமிர்ந்து கிராமப்புறங்களில் வலம்வர வழி வகை செய்துள்ளது.

பெண்களின் முகங்களில் மலர்ச்சியையும், அவர்கள் வாழ்வில் வளர்ச்சியையும் அது ஏற்படுத்தி இருக்கிறது என்றால் அது மிகையில்லை.

நபார்டு வங்கி சுய உதவிக் குழுக்கள் என்ற திட்டம் துவக்கப்பட்ட வெள்ளிவிழா ஆண்டு இது.

மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு புரட்சித்தலைவி அம்மாவின் மனதில் என்றுமே ஒரு சிறப்பான இடம் உண்டு.

நபார்டு வங்கி, இந்த வெள்ளி விழாத் தருணத்தில், சுய உதவி குழுக்களை பொருளாதார ரீதியாக பலப்படுத்தும் வகையில் சுய உதவிக்குழுக்களை வங்கிகளோடு இணைக்கும் திட்டத்தில் மிகச் சிறப்பாகப் பணியாற்றிய வங்கிகளின் சாதனையை அங்கீகரிக்கும் விதமாக இங்கே விருதுகள் வழங்கப்படுகின்றன.

விருது பெறும் வங்கிகளுக்கு என் வாழ்த்துக்கள். வங்கிகள் மூலமாக பயன் பெற்ற இலட்சக்கணக்கான சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த தாய்மார்களுக்கும் என்னுடைய இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.

சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிவரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகம் வங்கிகள், தொண்டு நிறுவனங்கள், நுண்கடன் நிறுவனங்கள், உள்ளிட்ட அனைவரையும் நான் பாராட்டுகிறேன்.

இந்தத் தருணத்தில், தமிழ்நாட்டின் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்கள், தாங்கள் வாங்கிய வங்கிக் கடனை தவணை தவறாமல் திருப்பிச் செலுத்தி வருகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

அதே சமயம், சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் தற்போதுள்ள கடனுதவி 18 ஆயிரம் கோடி ரூபாய் அளவில் உள்ளது. இதில் வங்கிகளின் பங்களிப்பு 6,300 கோடி அளவில்தான் உள்ளது என்பது கவனிக்கத்தக்கது.

வரும் ஆண்டுகளில் அனைத்து வங்கிகளும் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கும் கடனுதவியை அதிகரித்து, வங்கிகளின் பங்களிப்பை பல மடங்கு அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தின் நீராதாரங்களை மேம்படுத்துவதற்கு அனைத்து விதமான நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசு எடுத்துவருகிறது. நபார்டு வங்கி இதற்கு உதவும் வகையில் தண்ணீர் குறித்த சிறப்பு விழிப்புணர்வு திட்டத்தை தமிழ்நாட்டின் நீர் வளம் குறைவான பதினாறு மாவட்டங்களில் செயல்படுத்தி வருகிறது.

தண்ணீரை பெருக்குவது, சேமிப்பது, காப்பது, மேலாண்மை செய்வது, மறு சுழற்சி செய்வது என பல்வேறு வகைகளிலும் மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் 6,500 கிராமங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவியோடு 67 ஆயிரம் தண்ணீர் தூதுவர்கள் நியமித்துள்ளது.வறட்சி இல்லாத தமிழகம் அமைவதற்கு நபார்டு ஆற்றிவரும் சீரிய பணியை தமிழக மக்கள் சார்பில் நான் பாராட்டுகிறேன்.

இந்தத் தருணத்தில், தமிழ்நாட்டின் நிலத்தடி நீர் மேம்பாட்டுக்காக புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கட்டாய மழைநீர் சேகரிப்புத் திட்டம் கொண்டு வந்ததை நான் நினைவு கூற விரும்புகிறேன்.

தண்ணீர் விழிப்புணர்வு பிரச்சாரத் திட்டத்தில் மாவட்ட நிர்வாகங்களும், அரசுத் துறைகளும், எடுக்கவுள்ள முயற்சிகளுக்கு வங்கிகளும், தொண்டு நிறுவனங்களும் இணைந்து செயல்பட்டு, அதன் மூலமாக தமிழ்நாடு பயன்பெற வழி செய்ய வேண்டும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் சார்பாக துவங்கப்பட விருக்கும் “இன்குபேஷன் மையத்துக்காக” நபார்டு 12.40 கோடி ரூபாய் அளவுக்கு மானிய உதவி வழங்குகிறது.

இதன் மூலமாக வேளாண் துறையில் புதிய தொழில்முனைவோர்கள் உருவாகி அவர்கள் மூலமாக தமிழ்நாடு பயன் பெறும்.

இத்தனை ஆண்டுகளாக விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சிக்காக தமிழ்நாடு அரசுக்கு உதவிக்கரம் நீட்டிவந்த நபார்டு வங்கி, இனி வரும் காலத்திலும் நமது மாநிலத்தின் வளர்ச்சிக்கு உதவிய வேளாண் துறையில் பொறியியல் துறை முனைவோர்கள் உருவாகுவார்கள், அவர்கள் மூலமாக தமிழ்நாடு பயன்பெறும். இத்தனை ஆண்டுகளாக விவசாயிகள் மற்றும் ஊரக வளர்ச்சிக்காக தமிழ்நாடு அரசு உதவிக்கரம் நீட்டி வந்த நபார்டு வங்கி, இனி வருங்காலங்களிலும் தொடர்ந்து இணைந்து சேவையாற்ற கோரிக்கை வைத்து நமது மாநிலத்தின் வளர்ச்சிக்கு உதவிய நபார்டு வங்கியை உளமார, மனமார வாழ்த்துகிறேன்.

இங்கே CGM அவர்கள் அருமையாக உரையாற்றினார்கள். இன்றைக்கு இந்த நபார்டு வங்கியைப் பொறுத்தவரைக்கும் கிராமப்புற மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர வேண்டும், கிராமப்புற மக்களுடைய பொருளாதார மேம்பாடு அடைய வேண்டும், கிராமத்தில் இருக்கக்கூடிய நீர்வளங்கள் பெறுக வேண்டும். அதேபோல, விவசாய உற்பத்தி பல மடங்கு பெருக வேண்டுமென்ற அடிப்படையிலே சேவை செய்து வருகிறது. அதற்கு மீண்டும் ஒரு முறை எனது பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்து, இந்த சிறப்பான விழாவினை ஏற்பாடு செய்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி!

வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் **26.07.2017** அன்று,*

*சென்னையில் நடைபெற்ற நபார்டு வங்கி **36**ஆவது ஆண்டு மற்றும்*

சுயஉதவிக்குழுக்கள் பரிசளிப்பு விழாவில் ஆற்றிய உரை

உண்மை, உழைப்பு, அன்பு, அறிவுக்கூர்மை, தன்னம்பிக்கையை மூலதனமாகக் கொண்டு உயர்ந்தவர் டாக்டர் அப்துல்கலாம்!

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.மோடிஜி அவர்களே,

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களே,

மாண்புமிகு இந்திய துணை ஜனாதிபதி திரு. வெங்கய்யா நாயுடு அவர்களே,

மாண்புமிகு மத்திய வர்த்தக மற்றும் தொழில் துறை இணை அமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் அவர்களே,

மாண்புமிகு மத்திய நெடுஞ்சாலை மற்றும் கப்பல் போக்குவரத்துத்துறை இணை அமைச்சர் திரு.பொன்.ராதாகிருஷ்ணன் அவர்களே,

மாண்புமிகு நிதி மற்றும் மீன்வளத் துறை அமைச்சர் திரு.ஜெயக்குமார் அவர்களே,

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. மணிகண்டன் அவர்களே,

மற்றும் இன்றைய இனிய நிகழ்ச்சியில் பங்குபெற்றுள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, அரசு அலுவலர்களே, பெரியோர்களே, தாய்மார்களே,

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே, உங்கள் அத்தனை பேருக்கும் என் வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

“இராமநாதபுரம் மாவட்ட மக்களும் மன்னர்களும் தமிழையும், ஆன்மீகத்தையும் இரண்டு கண்களாகப் போற்றியவர்கள்” என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புகழ்ந்துள்ளார்கள்.

இந்தியாவின் தென்கோடியில் உள்ள சைவ திருத்தலமாக விளங்கும் ராமேஸ்வரம் ராமாயணத்தால் புகழ் பெற்றதைப்போல மீண்டும் டாக்டர் அப்துல் கலாம் அவர்களால் புகழடைந்தது.

ஏழ்மை நிலையில் இருந்தாலும், முன்னோர்கள் பாமரர்களாக இருந்தாலும், எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லாத வளர்ச்சி அடையாத குக்கிராமத்தில் பிறந்து வளர்ந்தாலும், உண்மை, உழைப்பு, அன்பு, அறிவுக்கூர்மை, தன்னம்பிக்கை இவற்றை மட்டுமே மூலதனமாகக் கொண்டு நாட்டின் மிகப் பெரிய பதவிகளான, குடியரசுத்தலைவராகவும், பிரதமராகவும் உயர்ந்து சாதனை உச்சத்தைத் தொடமுடியும் என்பதற்கு டாக்டர் அப்துல் கலாம் அவர்களும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும் உதாரணமானவர்கள்.

அதனால்தான், டாக்டர் அப்துல் கலாம் அவர்களின் மணிமண்டபத்தை மாண்புமிகு பாரதப் பிரதமர்அவர்கள் தங்கள் திருக்கரங்களால் திறந்து வைப்பது மிகப் பொருத்தமாக அமைந்திருக்கிறது.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், டாக்டர் அப்துல் கலாம் அவர்களின் இறுதிச் சடங்கிற்கு வந்திருந்து மரியாதை செலுத்தினார்கள்.

தற்போது, அவரது மணி மண்டபத்தையும் திறந்து வைக்க வந்தமைக்கு தமிழ்நாட்டு மக்களின் சார்பாக என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

மணிமண்டபம் அமைக்கத் தேவையான நிலம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உத்தரவின் பேரில் வழங்கப்பட்டு, அதில் டாக்டர் அப்துல் கலாம் அவர்களின் மணிமண்டபம் கட்டப்பட்டுள்ளது.

இந்த வளாகத்தில், ஏவுகணை நாயகனின் அக்கினி ஏவுகணையின் மாதிரி மிகவும் அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

டாக்டர் அப்துல் கலாம் அவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவியல் வளர்ச்சிக்கும், இளைஞர் மற்றும் மனித வள மேம்பாட்டிற்கும் பணியாற்றிய தமிழகத்தைச் சார்ந்தவர்களுக்கு ஐந்து இலட்ச ரூபாயுடன் எட்டு கிராம் தங்கப்பதக்கத்தையும் உள்ளடக்கிய டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் விருது வழங்கப்படும் எனவும் அறிவித்து, அதனை தன் வாழ்நாளிலேயே செயல்படுத்தி டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் மீது தனக்கிருந்த மரியாதையை வெளிப்படுத்தினார்கள்.

இந்த அரிய சந்தர்ப்பத்தில் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் முன்னிலையில் இங்கே சில முக்கிய கருத்துக்களை தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

ராமநாதசுவாமி திருக்கோயில் மற்றும் டாக்டர் அப்துல்கலாம் பிறப்பிடம் ஆகியவை போன்று இன்னும் பல பெருமைகளை பெற்றிருக்கும் இராமேசுவரத்தை அழகுபடுத்தி வருவது இங்குள்ள

அமைதியான சமுத்திர அலைகளும், மீனவ வலைகளும் தான் என்பதை நாம் மறுக்க முடியாது. அதே நேரத்தில் ராமேசுவரத்து அலைகள் அமைதியாக இருந்தாலும், அதில் வலை விரிக்கின்ற மீனவர்களின் வாழ்க்கை, தொடர்ந்து அமைதியை இழந்து வந்திருக்கிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

பாக் வளைகுடாவை ஒட்டி தமிழ்நாட்டில் 5 கடலோர மாவட்டங்களில் உள்ள 305 மீனவ கிராமங்களில் 3 லட்சத்திற்கும் அதிகமான மீனவர்கள் மீன்பிடித் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள்.

தமிழ்நாடு மீனவர்கள் பாக் வளைகுடாவில் தொடர்ந்து சந்தித்துவரும் இன்னல்களைப் போக்குவதற்கு நிரந்தரத் தீர்வாக கட்சத் தீவை மீட்க வேண்டும் என்ற கோரிக்கையோடு, இழுவலை மீன்பிடிப்பினை ஆழ்கடல் தூண்டில் மற்றும் செவுள்வலை மீன்பிடிப்பு முறைக்கு பரவலாக்கம் செய்ய வேண்டும்.

அத்திட்டத்திற்கான சிறப்பு நிதியாக 1,520 கோடி ரூபாய் வழங்க வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 03.06.2014 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து, கோரிக்கையாக வைத்தார்கள். அக்கோரிக்கையை, 27.02.2017 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து நானும் வலியுறுத்தினேன்.

அக்கோரிக்கையினை ஏற்று, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் 11.05.2017 அன்று 750 இழுவலைப் படகுகளை ஆழ்கடல் தூண்டில் மற்றும் செவுள்வலை படகுகளாக மாற்றி அமைக்கும் திட்டத்திற்கு சிறப்பு நிதியுதவியாக 100 கோடி ரூபாயும், நீலப் புரட்சி திட்டத்தின்கீழ் 100 கோடி ரூபாயும் சேர்த்து, மத்திய அரசின் 50 விழுக்காடு பங்களிப்பாக மொத்தம் 200 கோடி ரூபாய் வழங்கினார்கள்.

தமிழ்நாடு அரசு தனது **20** விழுக்காடு பங்களிப்பு மற்றும் வாழ்வாதார நிதியுடன் சேர்த்து **86** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து முதற்கட்டமாக **500** இழுவலைப் படகுகளை ஆழ்கடல் தூண்டில் மற்றும் செவுள்வலை படகுகளாக மாற்றி அமைக்கும் திட்டத்தினை **286** கோடி ரூபாய் செலவில் செயல்படுத்திட ஆணையிட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், பாக் வளைகுடாவில் இருந்து **2** ஆயிரம் இழுவலைப் படகுகள் ஆயிரத்து **621** கோடி ரூபாய் செலவில் மூன்று கட்டங்களில் மாற்றி அமைத்து பரவலாக்கம் செய்யப்படும்.

தமிழ்நாடு மீனவர்களின் துயர்துடைக்கும் விதமாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கோரிக்கையினை ஏற்று, பாக் வளைகுடா மீன்பிடிப்பினை ஆழ்கடல் மீன்பிடிப்பிற்குப் பரவலாக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து, நேரிடையாக சம்பந்தப்பட்ட அமைச்சகங்களை அறிவுறுத்தி போதிய நிதியினை விடுவித்ததோடு, இன்றைய தினம் இங்கு வருகைபுரிந்து மீனவர்களுக்குப் பணியாணை வழங்கி, இத்திட்டத்தினைத் துவக்கி வைத்திட இருக்கும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் தமிழ்நாடு அரசின் சார்பாக எனது மனமார்ந்த நன்றியினை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

I wish to thank Hon'ble Prime Minister for extending financial Assistance of Rs.200 crore this year for conversion of 'Bottom Trawling Boats' to 'Deep Sea Long Liners', besides other Projects and launching this Scheme today.

இந்த அரிய திட்டத்தின் மூலம், பாக் வளைகுடாவில் தமிழ்நாடு மீனவர்கள் சந்தித்து வரும் துயரங்களும் இன்னல்களும் வெகுவாகக் குறைவதோடு, அவர்களின் வாழ்வாதாரமும் தழைத்தோங்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

குந்துகால் பகுதியில் அமையவுள்ள மீன் இறங்குதளத்திற்கான மத்திய அரசின் பங்களிப்பானது, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் நேரடி அறிவுறுத்தலால், மத்திய நிதி அமைச்சகம் ஒப்புதல் அளிக்கவுள்ள நிதியில் இருந்து மேற்கொள்ளப்படும்.

இவ்வாறாக, பாக் வளைகுடா மீனவர்கள் மீன்பிடிப்பதற்கான போதிய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு, உறுதுணையாக விளங்கும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு எனது நன்றியினை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூரில் கட்டப்பட்டு வரும் துறைமுகத்திற்கான மத்திய அரசின் பங்களிப்பினை விரைந்து விடுவித்திட சம்பந்தப்பட்ட அமைச்சகத்தை அறிவுறுத்துமாறும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் இந்த இனிய நேரத்தில் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சீரிய முயற்சி மற்றும் இந்திய அரசின் தொடர் நடவடிக்கைகளின் விளைவாக இலங்கை அரசால் பிடித்து வைக்கப்பட்டிருந்த 2 ஆயிரத்து 664 மீனவர்களும் தமிழ்நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

357 படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ளது. இதற்காக, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு தமிழ்நாட்டு மக்களின் சார்பாக, மீனவர்கள் சமுதாயத்தின் சார்பாக எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2015ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து இலங்கை அரசின் பிடியில் உள்ள தமிழ்நாடு மீனவர்களின் மீன்பிடிப் படகுகளை விடுவித்து, தமிழ்நாடு மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் காத்திட மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிநடக்கும் அம்மா அரசும் இதனையே தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

எனவே, தமிழ்நாடு மீனவர்களின் வாழ்வாதாரத்தைச் சீர்குலைக்கும் விதமாக இன்றைய தேதியில் இலங்கை அரசின் தொடர் பிடியில் இருக்கும் 75 மீனவர்களையும் 149 படகுகளையும் உடனடியாக விடுவித்திட இலங்கை அரசிற்கு அழுத்தம் தருமாறு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைத் தமிழ்நாடு மீனவ மக்களின் சார்பாக இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

On behalf of the people of Tamil Nadu in General and the fishermen in particular, I request the Hon'ble Prime Minister to kindly use your good office to persuade the Sri Lankan Government to release all the 75 Tamil Nadu Fisherman and 149 fishing boats apprehended by them.

மத்திய அரசின் சுற்றுலா அமைச்சகம் 'சுவதேஷ் தர்ஷன்' என்ற திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள முக்கிய சுற்றுலா இடங்களை அழகுபடுத்தவும், மேம்படுத்தவும் 99 கோடியே 91 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளமைக்கு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதில், இராமேசுவரத்திற்கு மட்டும் 15 கோடியே 86 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, சுற்றுலாப் பயணிகளுக்கான குடிநீர் வசதி, கடற்கரை சீரமைப்பு, சாலை வசதி, பூங்காக்கள் போன்ற பல பணிகள் நடந்து வருகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுற்றுலா பயணிகள் மற்றும் ஆன்மீகப் பயணிகளை கவர்ந்து இழுக்கவும் இராமேஸ்வரத்திற்கு அருகில் இருக்கும் தனுஷ்கோடி இயற்கைஅழகை ரசிக்கும் வண்ணமும், முகுந்தராயர் சத்திரம் –அரிச்சல் முனை இணைப்புச் சாலையை, சிறப்பாக புதுப்பிக்க மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் முயற்சியில், தேசிய

நெடுஞ்சாலை ஆண்டுத் திட்டத்தின்கீழ், 65 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சிறப்பாகப் புதுப்பிக்கப்பட்டு இன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் பொற்கரங்களினால் திறக்கப்படவுள்ளது.

இதன்மூலம், இராமேசுவரம் மக்களின் 50 ஆண்டு கால கனவு நிறைவேறக் காரணமாக இருந்த மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இராமேசுவரம் நகராட்சிக்கு 'சுவச் பாரத்' என்கிற மத்திய அரசின் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் 7 கோடியே 91 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு அதற்கான பணிகளும், மத்திய அரசின் 'அம்ருத்' திட்டத்தின்கீழ் 41 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளும் தற்போது நடைபெற்று வருகின்றன.

இத்தகைய அரிய திட்டங்களை அறிமுகப்படுத்தி, விரைந்து செயல்படுத்தும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராமாயணத்தோடு தொடர்புடைய இராமேசுவரத்தையும், அயோத்தியையும் இணைக்கும் விதத்தில், சுற்றுலா பயணிகள் பெரிதும் பயன்பெறும் வகையில் 'இராமேசுவரம் – அயோத்தி விரைவுத் தொடர் வண்டியை இன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் கொடியசைத்துத் துவக்கி வைத்தமைக்கு, தமிழ்நாட்டு மக்களின் சார்பாக எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியத் திருநாட்டிற்குப் பல்வேறு பெருமைகளைச் சேர்த்த நமது முன்னாள் குடியரசுத் தலைவரின் மணிமண்டபம் அமைந்திருக்கும் இந்த இராமேசுவரம் நகரைக் காண வரும் சுற்றுலாப் பயணிகளுக்கும், பொதுமக்களுக்கும் தேவைப்படும் அடிப்படை வசதிகளான தெரு விளக்குகள், குடிநீர், பாதாளச் சாக்கடை, கழிவு

நீர் அகற்றுதல் போன்றவற்றை மேம்படுத்தித் தருவதற்கு சுமார் 78 கோடியே 17 இலட்சம் ரூபாய் அளவிற்கு நகர வளர்ச்சித் திட்டம் ஒன்று தீட்டப்பட்டிருக்கிறது.

இதனைச் சிறப்பு நிதி ஒதுக்கீடாக மத்திய அரசு ஏற்று அனுமதிக்க வேண்டுமென இத்தருணத்தில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

தேசத் தலைவர்களைச் சிறப்பிக்கும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் இதனை மனமுவந்து ஏற்பார்கள் என்றும் நம்புகிறேன்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த விழாவில் கலந்து கொண்டு எங்களைப் பெருமைப்படுத்திய மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
27.07.2017 அன்று டாக்டர் A.P.J. அப்துல் கலாம் மணிமண்டபம் திறப்பு விழா, ராமேசுவரம் – அயோத்தி விரைவுத் தொடர் வண்டி துவக்க விழா, ஆழ்கடல் மீன்பிடிப்பினைப் பரவலாக்கும் திட்ட துவக்க விழாவில் ஆற்றிய உரை.

ரூ.58.5 கோடி மதிப்பீட்டில் திருவொற்றியூர் - மாட்டுமந்தை இரயில்வே மேம்பாலம்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களது பொற்கால ஆட்சியில் திருவொற்றியூர்– மாட்டுமந்தை இரயில்வே மேம்பாலத்தை இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கட்டுவதற்கு ஆணையிட்டு, இந்தப் பாலம் கட்டுவதற்காக 8 முறை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்தம் எடுக்க யாரும் முன்வராத நேரத்தில்கூட, 9ஆவது முறை

ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, இறுதி செய்யப்பட்டு, பாலப்பணிகள் துவங்கப்பட்டு, இன்றைக்கு நிறைவடைந்திருக்கின்றன. இன்றைக்கு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களிடத்திலே இந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள், சட்டப்பேரவை உறுப்பினர் வைத்த கோரிக்கையின் அடிப்படையில், இந்தப் பாலம் கட்டுவதற்கு அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்தார்கள். இந்தப் பாலத்தைப் பொறுத்தவரை 530 மீட்டர் நீளம் உள்ளது. இதற்காக 58 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இந்தப் பாலப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இன்றைக்கு நிறைவடைந்திருக்கின்றது. கிட்டத்தட்ட இந்தப் பாலப் பணிகளில் துவங்கப்பட்டு 5லிருந்து 6 ஆண்டுக்குள் பணி நிறைவு செய்து மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிப்பு செய்யப்பட்டிருக்கிறது. ஒரு இரயில்வே மேம்பாலம் கட்டவேண்டுமென்று சொன்னால் 6 முதல் 7 ஆண்டு காலம் ஆகும். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு, வேகமாக, துரிதமாக நடவடிக்கை எடுத்து, இந்தப் பணிகள் எல்லாம் 5லிருந்து 6 ஆண்டுக்குள் நிறைவுபெற்று மக்களுடைய பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டு சாதனை படைத்திருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்னும்கூட குறுகிய காலத்திலே திறந்திருக்கலாம். இந்த பாலத்திற்கு இருபுறமும் அணுகுசாலை அமைக்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே, இந்த அணுகு சாலை அமைப்பதற்கு தேவையான நிலத்தை கையகப்படுத்துவதில் சில பிரச்சினைகள் ஏற்பட்ட காரணத்தினாலே, அந்த நிலம் கையகப்படுத்துவதில் சற்று காலதாமதம் ஏற்பட்ட காரணத்தினால், விரைந்து அந்தப் பாலத்தை முடிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருந்தது. அந்த அணுகு சாலைக்கு தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்ட பிறகு, பணி வேகமாக, துரிதமாக செயல்பட்டு, இந்த பாலப்பணி நிறைவடைந்திருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியினை இந்த நேரத்திலே உங்களுக்கு தெரிவிப்பதற்கு

கடமைப்பட்டிருக்கின்றேன். இன்றைக்கு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவின் பொற்கால ஆட்சியில் இதுவரை 61 இரயில்வே மேம்பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளன என்ற மகிழ்ச்சியான செய்தியினை தெரிவித்துக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் 2006 முதல் 2011 வரைக்கும் 32 இரயில்வேபாலங்கள் கட்டி முடித்துத்திறந்துள்ளார்கள். அதேபோல, தமிழகம் முழுவதும் 85 இரயில்வே பாலப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இந்தப் பகுதி மக்கள், அடிக்கடி இரயில்வே–கேட் மூடப்படுவதால், மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்ற சூழ்நிலையை கருத்திலே கொண்டு பல நேரங்களிலே, பிரசவத்திற்கு செல்கின்ற தாய்மார்களுக்கு, ஆம்புலன்ஸ் வருகின்றபொழுது, இரயில்வே–கேட் மூடுகின்றபொழுது, இறப்பு ஏற்படுகின்ற சூழ்நிலையையெல்லாம் சுட்டிக்காட்டினார்கள். அவ்வளவு அதிகமாக இரயில் செல்லக்கூடிய கடவு, இந்த இரயில்வே கடவு. அதிகமாக இரயில் செல்கின்ற காரணத்தினால், அடிக்கடி இரயில்வே–கேட் மூடப்படுவதால், அங்கே இருக்கின்ற, சிகிச்சை பெறுகின்ற பொதுமக்கள் மருத்துவமனைக்கு செல்லமுடியாத ஒரு சூழ்நிலை. அதேபோல, பல தொழிற்சாலைகள் இருக்கின்றன. அந்த தொழிற்சாலைக்கு செல்கின்ற ஊழியர்கள் குறித்த நேரத்திலே பணிக்கு செல்லமுடியவில்லை. அடிக்கடி இரயில்வே–கேட் மூடப்படுவதால் அவர்கள் உரிய நேரத்திற்கு பணிக்கு செல்லமுடியாத ஒரு சூழ்நிலை. இதையெல்லாம் கருத்திலே கொண்டு தான், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இந்த திருவொற்றியூர்–மாட்டுமந்தை இரயில்வே மேம்பாலத்தை அறிவித்து, மாண்புமிகு அம்மாவினுடைய வழியில் செயல்படும், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு வேகமாக, துரிதமாக பாலப்பணிகளை மேற்கொண்டு மக்களுக்கு அர்ப்பணித்துள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை இத்தருணத்திலே தெரிவித்துக்கொண்டு, இந்தப்

பாலத்தின் வழியாக வாகனங்கள் செல்வதற்கு, உங்கள் அனைவரின் சார்பாக நான் திறந்துவைக்கின்றேன். மாண்புமிகு அம்மாவினுடைய அரசு மக்களுடைய அரசு, மக்களுக்குத் தேவையான திட்டங்களை செயல்படுத்தக்கூடிய அரசு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி இந்த சிறப்பான நிகழ்ச்சியில் பங்குபெற்ற தலைமைச் செயலாளர் அவர்களுக்கும், துறையினுடைய செயலாளர் அவர்களுக்கும், இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்ற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், முன்னாள் அமைச்சர் பெருமக்களுக்கும், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கும், முன்னாள் உள்ளாட்சித்துறை நிருவாகிகளுக்கும், கூட்டுறவு சங்க நிருவாகிகளுக்கும், வருகை தந்துள்ள, கழகத்திலே பல்வேறு பொறுப்புகளைப் பெற்ற பொறுப்பாளர்களுக்கும், பெரியோர்களுக்கும், தாய்மார்களுக்கும், நண்பர்களுக்கும், பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி,

வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
28.07.2017 அன்று திருவொற்றியூர் – மாட்டுமந்தை இரயில்வே மேம்பாலத்தை திறந்து வைத்து ஆற்றிய உரை.

கைத்தறி உடுத்துவோம்! காந்திய வழியில் நடப்போம்! கைத்தறி தொழிலாளர்களுக்கு உதவுவோம்!

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

சீரும் சிறப்புமாக நடந்து கொண்டிருக்கின்ற மூன்றாவது தேசிய கைத்தறி தினவிழாவில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

இச்சீர்மிகு விழாவில் தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஓ.எஸ்.மணியன் அவர்களே!

சிறப்புரையாற்றிய மாண்புமிகு மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.ஜெயக்குமார் அவர்களே!

வரவேற்புரையாற்றிய தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன் அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே

முன்னாள் அமைச்சர் பெருமக்களே,

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே

நன்றியுரையாற்றவுள்ள கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை அரசு முதன்மைச் செயலாளர், திரு.க.பணீந்திர ரெட்டி அவர்களே!

போற்றுதலுக்குரிய நெசவாள பெருங்குடி மக்களே,

அரசு அலுவலர்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே,

வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே,

உங்கள் அனைவருக்கும் முதற்கண்

எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

மகாத்மா காந்திஜி அவர்களையும் சுதந்திர போராட்ட வரலாற்றையும் சுதந்திரப் போராளிகளையும் இன்றைக்கும் நமக்கு நினைவூட்டிக் கொண்டிருப்பது.. இந்தக் கைத்தறிதான்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கைத்தறி ஆடையை இளம் வயதிலேயே மிகவும் விரும்பி உடுத்தி வந்தார்கள். எளிமைக்கும், உழைப்பிற்கும், தேசப்பற்றுக்கும் அடையாளமாக, திகழக்கூடியது கைத்தறியாகும்.

சுதந்திர போராட்டத்தின் போது, நாடு முழுக்க மகாத்மாவின் சீரிய தலைமையில் அந்நிய துணி மறுப்பு இயக்கம் தீவிரமாய் நடந்து கொண்டிருந்தது.

அக்கால நாடகக் கலைஞர்கள் பலர் 'காந்திஜியின்' அகிம்சை போராட்டத்திற்கு வலுசேர்க்கும் விதமாக 'நாடகங்களை' நடத்திக் கொண்டிருந்தனர். நாடகங்களில் 'வெள்ளையர்' எதிர்ப்புப் பாடல்களை பாடி நடித்தனர். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருக்கு அந்த வயதிலேயே சுதந்திரப் போராட்டம் பற்றிய உணர்வு ஏற்பட்டிருந்தது. தன்னை காங்கிரஸ் தொண்டனாய் மாற்றிக் கொண்டார். தூய கதர் சட்டை, வேட்டியை அணிந்து, 'தேச பக்தனாக'த் திகழ்ந்தார். 1930ஆம் ஆண்டில் பாய்ஸ் கம்பெனி, 'கதர்பக்தி' என்ற நாடகத்தை சென்னை ஒற்றை வாடைத் தியேட்டரில் நடத்தியது. அந்த நாடகத்தில் 'தேசபக்தி' சாமியாராய் அவர் நடித்தார். அவர் 'தேசபக்தி' சொற்பொழிவாற்றும் போது 'மக்கள் உணர்ச்சி வசப்பட்டு' ஆரவாரித்தனர். சிலர் 'காந்திஜிக்கு ஜே' போட்டனர்.

தாய்நாட்டின் மீது பற்றும், பாசமும் கொண்ட இந்தியர்கள் நிச்சயம் கைத்தறியை ஆதரிப்பார்கள். கைத்தறி ஆடையை அணிவார்கள். கைத்தறித் தொழிலை ஊக்குவிப்பார்கள், கைத்தறி ஆடையை அணிந்து கொண்டால், உடலுக்கும் மனதிற்கும் ஒரு உற்சாகம் ஏற்படுகிறது. நானும் ஒரு இந்தியன் என்கிற உணர்வு தானாகவே ஏற்படுகிறது.

பிரிட்டிஷ் பொருள்களுக்கு எதிராக உள்நாட்டு பொருள்களை ஆதரிப்பது என்ற நோக்கத்துடன் 1905ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7ம் நாள் கொல்கத்தாவில் சுதேசி போராட்டம் தொடங்கியது. அதை நினைவுகூரும் வகையில் 2015ம் ஆண்டு முதல் ஆகஸ்ட் 7ம் தேதி தேசிய கைத்தறி தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

ஆகஸ்ட் 15–ல் நடைபெறும் சுதந்திர தினத்திற்கு இந்த விழா ஒரு முன்னோட்டமாக, முன்மாதிரி விழாவாக நடைபெறுகிறது. தேசிய கைத்தறி தினம் அறிவிக்கப்பட்டதன் மூலம் உலகளாவிய சந்தைக்கு பன்னாட்டு தரத்தில் கைத்தறி பொருட்கள் உற்பத்தி செய்வதை ஊக்குவிக்க முடியும். தமிழகத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக, கிராமப்புற மக்களுக்கு, கைத்தறித்தொழில் பெருமளவில் வேலைவாய்ப்பினை வழங்கி வருகிறது. இத்தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 3 இலட்சத்திற்கும் அதிகமான கைத்தறி நெசவாளர்களின் நலன் காத்திட மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தார்கள். அதே போன்று, விசைத்தறி நெசவாளர்களின் நலனுக்காகவும் பல்வேறு நடவடிக்கைகளை அம்மாவின் வழியில் செயல்பட்டு வரும் இந்த அரசு எடுத்து வருகிறது.

நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் தொடர்ந்து செயல்படத் தேவையான காசுக்கடன் வசதி மற்றும் நடைமுறை மூலதனம் ஆகியவை கிடைத்திடும் வகையிலான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் ஆட்சி நடத்தும் அம்மாவின் அரசு எடுத்து வருகிறது. கைத்தறி நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கும் வகையிலும், கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்கள் பொங்கல் பண்டிகையின் போது, தமிழ்நாடு அரசின் சார்பில் வேட்டி சேலை பெற்றிடும் வகையிலும், விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன்மூலம் கூட்டுறவு சங்கங்களில் உள்ள 11 ஆயிரம் கைத்தறி நெசவாளர்களுக்கும், 54 ஆயிரம் விசைத்தறி தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது. வரும் ஆண்டு பொங்கலுக்கு 3 கோடியே 36 இலட்சம் பயனாளிகளுக்கு விலையில்லா வேட்டி

சேலை வழங்க இருக்கிறோம். அரசுத் திட்டங்களான விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம், விலையில்லா சீருடை வழங்கும் திட்டம், மற்றும் முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கு விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்தும் முகமை நிறுவனமாக 'கோ–ஆப்டெக்ஸ்' செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குத் திட்டத்தால்.. இன்றைக்கு 'கோ–ஆப்டெக்ஸ்' அரசுக்கு மட்டுமல்லாமல், தனியாருக்கும், பொது மக்களுக்கும் செய்து வரும் விற்பனை, மெச்சக்கூடிய அளவில் உள்ளது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடந்த தேர்தல் அறிக்கையில் தெரிவித்தபடி, "கைத்தறி நெசவாளர்களுக்கு இருமாதங்களுக்கு கட்டணமில்லாமல் 100 யூனிட் அளவுக்கு வழங்கப்பட்டு வந்த மின்சாரம் 200 யூனிட்டுகளாக உயர்த்தப்பட்டுள்ளது.

கைத்தறித்துறைக்கும், நெசவாளர்களுக்கும் பல்வேறு முன்னோடித் திட்டங்களை செயல்படுத்திய காரணத்தினால் தான் 1,156 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் 964 சங்கங்கள் லாபத்தில் இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டின் பொருளாதாரத்திலும், தொழில் உற்பத்தியிலும் ஜவுளித் தொழில், அதிலும் குறிப்பாக கைத்தறி, முக்கிய பங்கு வகிக்கிறது. கைத்தறித்துறையை மேம்படுத்தவும், நெசவாளர்கள் வாழ்வு வளம் பெறவும் பல்வேறு திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்படுத்தி வருகிறது. நெசவாளர்கள் தங்கள் இல்லங்களில் வசதியாக கைத்தறிகள் மூலம் நெசவுத் தொழில் செய்யும் வகையில் 365 சதுர அடி பரப்பளவு கொண்ட சூரிய சக்தியுடன் கூடிய 10,000 பசுமை வீடுகளை மாண்புமிகு அம்மா அவர்கள் கட்டிக் கொடுத்தார்கள்.

கைத்தறி நெசவாளர்களின் வேலைப்பளுவை குறைக்கவும், உற்பத்தியை அதிகரிக்கவும், அதன் மூலம் அவர்கள் கூடுதல் வருவாய் ஈட்டவும் அரை குதிரைத்திறன் மோட்டார் பொருத்தப்பட்ட பெடல்தறிகள் வழங்கப்படுகின்றன.

மின் மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரங்கள் நெசவாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு மின்சார பாவு சுற்றும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. கைத்தறி விற்பனைக்கு வழங்கப்படும் தள்ளுபடி மானிய நிதியானது 2017–2018ஆம் ஆண்டில் 100 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் 867 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் பயனடைந்து வருகின்றன.

நெசவாளர்களின் உடல் நலத்திலும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அதிக அக்கறை எடுத்துக் கொண்டுள்ளது. நெசவாளர்கள் மற்றும் நெசவினை சார்ந்த உபதொழில் பணியாளர்களுக்கு மருத்துவக்காப்பீட்டுத் திட்டம் 2004ல் அறிமுகப்படுத்தப்பட்டது. நெசவாளர்கள் முத்ரா திட்டத்தின் மூலம் இதுவரை 18 ஆயிரத்து 340 நெசவாளர்களுக்கு கடன் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த ஆட்சியில் திருச்சி, திருவண்ணாமலை, மற்றும் தூத்துக்குடியில் கோ ஆப்டெக்ஸ் நிறுவனம் 2 கோடி ரூபாயில் நவீனமயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொழில் நுட்ப ஜவுளி பிரிவிற்கு சிறப்பு கவனம் செலுத்த 25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்கள் விருப்பத்திற்கு ஏற்ப அஹிம்சா ரக பட்டுகள் கோஆப்டெக்சில் அறிமுகப்படுத்தப்படும். இயற்கை சாயமிடப்பட்ட பருத்தி சேலை ரகங்கள், திண்டுக்கல், கோவை வதம்பசேரி, திருச்சி மணமேடு ஆகிய பகுதிகளில் உற்பத்தி செய்ய நடவடிக்கை

எடுக்கப்பட்டு வருகிறது. இப்படி கைத்தறி மற்றும் விசைத்தறி தொழிலாளர்களும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசும், அம்மா அவர்களின் வழியில் வந்த அரசும் தொடர்ந்து பல திட்டங்களை செயல்படுத்தி.. அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்தி வருகின்றன.

“கைத்தறி நெசவாளர்கள் அரசின் திட்டங்களை பயன்படுத்தி தங்களது வாழ்வில் வளம் பெற வேண்டும்” என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வாழ்த்தினார்கள். அதன்படி நீங்கள் அனைவரும் அரசு திட்டங்களை முழுமையாக பயன்படுத்தி, எல்லா நலன்களும், வளங்களும் பெற வாழ்த்துகிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும் தொழிலாளர் பெருமக்கள்தான் அன்பு குழந்தைகளாக இருந்தீர்கள் அதிலும், உண்ண உணவளிக்கும் விவசாயிகள் மீதும், உடுக்க உடையளிக்கும் நெசவாளர்கள் மீதும் நமது இரண்டு மகத்தான தலைவர்களுக்கும் அக்கறை இருந்தது.

படிக்கும் நூல் மனதுக்கு இதம் அளிக்கிறது, பருத்தி நூல் உடலுக்கு இதம்அளிக்கிறது, படிக்கும் நூல் அறிவுக்கு அழகு சேர்க்கிறது, பருத்தி நூல் உடலுக்கு அழகு சேர்க்கிறது. எழுத்தாளர்களும் நெசவாளர்களும் படைப்பாளர்கள்தான். எழுத்தாளர்கள் வார்த்தைகளை கோர்க்கின்றார்கள். நெசவாளர்கள் இழைகளைக் கோர்க்கின்றார்கள். எழுத்தாளர்கள் இந்த நாட்டுக்கு எத்தனை முக்கியமோ—அதைப்போன்று நெசவாளர்கள் இந்த நாட்டுக்கு மிக மிக முக்கியம்.

அதனால் தான் நெசவாளர்களை ஊக்குவிக்கும் விதமாக, அதிக உற்பத்தியும், விற்பனையும் பெற்றுத்தந்த மாநில

அளவில் சிறந்த கைத்தறி நெசவாளருக்கு ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கப்பரிசும், கைத்தறியில் பருத்தி மற்றும் பட்டு இரகங்களில் சிறந்த வடிவமைப்புகளை உருவாக்கும் திறன்மிகு கைத்தறி நெசவாளர்களுக்கு பரிசுகளும், தமிழ்நாட்டிலுள்ள சிறந்த கைத்தறி ஏற்றுமதியாளர்களுக்கு கேடயம் மற்றும் சான்றிதழ் வழங்கும் திட்டங்களும் அம்மா வழியில் நடைபெறும் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்விழாவில் **2017–2018** ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான சிறந்த நெசவாளர் விருதின் வெகுமதியாக ஒரு இலட்சம் ரூபாய், சான்றிதழ் மற்றும் பொன்னாடை, திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர் எம்.ஆர்.இராஜசேகரன் அவர்களுக்கும், சிறந்த வடிவமைப்பு மற்றும் தரத்துடன் கூடிய கைத்தறி இரகங்களை நெசவு செய்தமைக்காக மொத்தம் **60** நெசவாளர்களுக்கு ஆறு லட்சம் ரூபாய் அளவிற்கு திறன்மிகு கைத்தறி நெசவாளர் விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்குவதில் பெருமிதம் கொள்கிறேன்.

இதேபோல ஒருங்கிணைந்த புதிய ஜவுளிக் கொள்கை உருவாக்கப்படும் என்று இந்த நேரத்திலே தெரிவித்து நெசவுத் தொழிலுக்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஏராளமான திட்டங்களை கொண்டு வந்திருக்கிறது என்று தெரிவித்து, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நடப்போம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து பல திட்டங்களால் நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை என்றும் முன்னேற்றும் என்று இந்த நேரத்திலே தெரிவித்து இங்கு நடக்கும் கண்காட்சியில் **42** அரங்குகள் சிறப்புற அமைக்கப்பட்டுள்ளது. கண்கவரும் வண்ணம் அசல் பட்டுசேலைகள், மென் பட்டுசேலைகள், பருத்தி சேலைகள், ஆர்கானிக் பருத்தி சேலைகள், வெண்பட்டு வேட்டிகள், கைலிகள், படுக்கை விரிப்புகள்,

திரைச்சீலைகள் போன்றவை நியாயமான விலையில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது, பாராட்டுக்குரியது.

இந்த இனிய விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்த அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சிறப்புமிக்க விழாவின் மூலம் உங்களை எல்லாம் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தமைக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறி உடுத்துவோம்! காந்திய வழியில் நடப்போம்! கைத்தறி தொழிலாளர்களுக்கு உதவுவோம்! என்று கூறி விடைபெறுகிறேன்.

நன்றி!

வணக்கம்!

அதே நேரத்தில் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற கைத்தறி துறை முதன்மைச் செயலாளர் அவர்களுக்கும், கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அவர்களுக்கும், கோ–ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் அவர்களுக்கும், வருகை தந்துள்ள அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்

நன்றி வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் 07.08.2017 அன்று*
சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற
3ஆவது தேசிய கைத்தறி தின விழாவில் ஆற்றிய உரை

இந்திய திருநாட்டை வல்லரசாக்கவும், தமிழ்நாட்டை வளம் மிக்க மாநிலம் ஆக்கவும், தொடர்ந்து செயல்படும் அரசு!

தமிழுக்கு உயிரெழுத்தாய்
தமிழ்நாட்டுக்கு உயிர்மூச்சாய்
எட்டுத்திசைகளையும் வென்ற
எட்டாவது அதிசயம்
மாண்புமிகு புரட்சித்தலைவி
'அம்மா' அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு மக்களவைத் துணைத்தலைவர்
டாக்டர் மு.தம்பிதுரை அவர்களே!
மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத்தலைவர்

திரு. தனபால் அவர்களே!
மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற
தலைமை நீதியரசர் அவர்களே !
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!
சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர்களே!
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!
தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர்
திருமதி கிரிஜா வைத்தியநாதன் அவர்களே!
தமிழ்நாடு அரசின் உயர் அதிகாரிகளே!
அலுவலர்களே!
காவல்துறை தலைமை இயக்குநர்
திரு.டி.கே.இராஜேந்திரன் அவர்களே !
காவல்துறை உயர் அதிகாரிகளே!
அலுவலர்களே! காவலர்களே!
தரைப்படை, விமானப்படை, கடற்படை
கடலோர பாதுகாப்பு மற்றும்
மத்திய பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகளே!
வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே!
இளைஞர்களே! மாணவ மாணவிகளே!
பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!
உங்கள் அனைவருக்கும்
எனது அன்பு கலந்த வணக்கத்தினையும்,
இனிய சுதந்திர தின நல்வாழ்த்துகளையும்
தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடிமை இந்தியாவை சுதந்திர இந்தியாவாக்கி நம் கைகளில் ஒப்படைப்பதற்காக அரும்பாடுபட்ட பல சுதந்திரப் போராட்ட வீரர்கள் தங்கள் இன்னுயிரை நீத்தார்கள். நம்நாட்டின் விடுதலைக்காக அயராது போராடிய பெரும்தலைவர்களுக்கும், பல ஆயிரக்கணக்கான சுதந்திர வீரர்களுக்கும், இந்நன்னாளில் வீர வணக்கம் செலுத்துவோம். ஆங்கிலேயர்களின் அடக்குமுறைகளுக்கு அஞ்சாமல் வீரமுழக்கமிட்ட வீரபாண்டிய கட்டபொம்மன்; விடுதலைப்

போர்க்களத்தில் வீர மரணம் எய்திய வெள்ளையத்தேவன்; வீரன் பூலித்தேவன்; ஆங்கியேலயர்களின் சூழ்ச்சியால் மரணம் எய்திய மருது சகோதரர்கள்; தாய் நாட்டின் மானத்துக்காக மரணத்தை தழுவிய வீரன் அழகு முத்துக்கோன்; தூக்குக் கயிறை முத்தமிட்ட வரலாற்று நாயகன் கோபால் நாயக்கர்; ஆங்கிலேயரிடம் மன்னிப்பு கேட்க மறுத்ததால் தூக்கிலிடப்பட்ட மாவீரன் தீரன் சின்னமலை; கொடி காக்க உயிர்துறந்த திருப்பூர் குமரன்; நாட்டுக்காக, தன்னைத்தானே சுட்டு மாய்த்துக் கொண்ட வீர வாஞ்சிநாதன்; சிறையில் செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார்; அனல் பறக்கும் ஆங்கிலேய எதிர்ப்பு பாடல்களுக்காக அடக்குமுறைக்கு ஆளான, மகாகவி பாரதியார்; பாவேந்தர் பாரதிதாசன்; தேசியமும், தெய்வீகமும் தனது இரு கண்களாய் வாழ்ந்த பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர்; ஆங்கிலேயரை கதிகலங்க வைத்த வீரர் சுந்தரலிங்கம்; பெண்களின் வீரத்துக்கு சாட்சியாக விளங்கிய வீரமங்கை வேலு நாச்சியார்; ஆங்கிலேயர்களின் போர் தளவாடங்களை அழித்து, தானும் மாண்ட வீரத்தாய் குயிலி; ஆங்கிலேயர்களை எதிர்த்து ஓய்வின்றி போராடியதால் நோய்வாய்ப்பட்டு இறந்த தில்லையாடி வள்ளியம்மை;

தமிழ்நாடு ஒத்துழையாமை இயக்கம் வெற்றி பெற பாடுபட்ட பகுத்தறிவு பகலவன் “தந்தை பெரியார்”; “நாடு உயர்ந்தால் நாம் உயர்வோம்” என்று முழங்கிய “பெருந்தலைவர் காமராசர்”; ஜாதி மத வேற்றுமைகளை வெறுத்த, “காந்தியடிகளின் மனசாட்சி” “மூதறிஞர் ராஜாஜி”; தேச வெறி பிடித்து அலைய வேண்டும் என்ற எண்ணத்தை தீயாய் எரிய விட்ட “சுப்பிரமணிய சிவா”;

தமிழ்நாட்டில் சுதந்திர தீயை அணையாமல் பாதுகாத்த “தீரர் சத்யமூர்த்தி”; போன்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த எண்ணற்ற தலைவர்கள் இந்திய விடுதலைக்காக எண்ணில்லா தியாகங்களை புரிந்துள்ளனர்.

பல விடுதலை வீரர்களின் தியாகங்களை போற்றும் வகையில் அவர்கள் வாழ்ந்த இடங்களில் நினைவகங்கள், மாண்புமிகு

புரட்சித்தலைவி அம்மா அவர்களால் நிறுவப்பட்டுள்ளன என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் விடுதலைப்போராட்ட வீரர் ஓய்வூதியத்திட்டம், மருத்துவ வசதி, கட்டணமில்லாப்பேருந்துவசதி, வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை, வீடுகள் ஒதுக்கீடு போன்ற பல திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

மன்னர் ஆட்சி போய், மாற்றான் ஆட்சி வந்து, இன்று மக்களை மக்களே ஆண்டுகொள்ளும் இந்திய குடியரசு நாட்டில் நாம் பாதுகாப்பாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

கடந்த 70 ஆண்டுகளாக நாம் கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்கின்ற நேரம் இது.

நாட்டின் வளர்ச்சி என்பது தனிமனிதன் முன்னேற்றத்தை அளவு கோலாகக் கொண்டது. சமுதாயத்தின் அடித்தளத்திலிருக்கும் ஒரு தனிமனிதன் அடிப்படை தேவைகளான பொருளாதாரம், உணவு, கல்வி, குடியிருப்பு, சுகாதாரம், தொழில், வேலைவாய்ப்பு, பாதுகாப்பு போன்ற அனைத்தும் தங்கு தடையின்றி கிடைக்கிறதா ? என்பதை உறுதிப்படுத்துவதில் தான் சுதந்திரத்தின் வெற்றி இருக்கிறது. அந்த வகையில், தமிழ்நாடு அளப்பறிய முன்னேற்றம் கண்டுள்ளது. தமிழ்நாடு அனைத்துத்துறைகளிலும் முன்னேறி, இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் கதர் ஆடையணிந்து காந்திய வழியில் பொதுவாழ்க்கையைத் தொடங்கியவர். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பாகிஸ்தான் போரின் போது தான் அணிந்திருந்த பொன் நகைகளை கழற்றி அப்போதைய பிரதமர் திரு.லால்பகதூர் சாஸ்திரி அவர்களிடம் வழங்கியவர். மகத்தான இரண்டு தலைவர்களுக்கும் இயல்பாகவே தேசப்பற்று இருந்ததன் காரணமாகத்தான் நாட்டை முன்னேற்றப் பாதையில் அவர்களால் கொண்டு செல்ல முடிந்தது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்றதிலிருந்து தமிழ்நாடு, அனைத்துத் துறைகளிலும் வேகமாக முன்னேறி வருகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் ஏற்றம் பெற்ற மக்கள், 2016 பொதுத்தேர்தலில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களையே மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி அழகுப் பார்த்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எங்களிடம் விட்டுச் சென்ற மக்கள் பணியை நாங்கள் சிறிதும் தொய்வில்லாமல் தொடர்ந்து செய்து வருகின்றோம்.

“அம்மா வழியில் ஆட்சி .. அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி” என்ற தாரக மந்திரத்தோடு, எங்கள் எதிரில் வருகின்ற தடைகளையெல்லாம் தகர்த்தெறிந்து விட்டு தமிழக மக்களுக்கு சேவை ஆற்றுவது மட்டுமே இலக்காகக் கொண்டு உழைத்து வருகின்றோம்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு இந்த அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து இன்று வரை மாநிலம் முழுவதும் நிறைவடைந்த 6 ஆயிரத்து 772 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டிலான 33 ஆயிரத்து 139 திட்டப்பணிகளைத் தொடங்கி வைத்தும், ஆயிரத்து 114 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 4 ஆயிரத்து 199 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் வைத்துள்ளேன்.

மாண்புமிகு அம்மா வழியில் நடக்கும் இந்த அரசு குறுகிய காலத்திலேயே இப்பணிகளை செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கல்வித்தரத்தைக் கொண்டுதான் ஒரு நாட்டின் முன்னேற்றம் கணக்கிடப்படுகின்றது என்பதால் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் நடக்கும் இந்த அரசு, பள்ளிக்கல்வித்துறைக்கு

முன்னுரிமை கொடுத்து 2017–2018ஆம் ஆண்டுக்கு 26 ஆயிரத்து 932 கோடியே 31 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.

தனியார் பள்ளி மாணவர்களுக்கு நிகராக அரசு பள்ளி மாணவர்களும் கணினி அறிவு பெற உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 438 கோடி ரூபாய் செலவில் உயர்தொழில்நுட்பக் 'கணினி ஆய்வகங்கள்', தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளுக்கு 60 கோடி ரூபாய் செலவில் 'அறிவுத்திறன் வகுப்பறைகள்' மற்றும் நடப்பாண்டில் 391 கோடி ரூபாய் செலவில் பள்ளிகளுக்கு 'உள் கட்டமைப்பு வசதிகள்' செய்யப்படும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, பொது சுகாதாரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது. முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் மூலம் 2012–ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை 20 இலட்சத்து 19 ஆயிரத்திற்கு மேலான நபர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

2011–12ஆம் ஆண்டில் இரண்டாம் பசுமை புரட்சி அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், 2011ஆம் ஆண்டு முதல், 2016ஆம் ஆண்டு வரை நான்கு முறை தமிழ்நாடு 100 இலட்சம் மெட்ரிக் டன்னுக்கும் அதிகமாக உணவு தானிய உற்பத்தி செய்து உயரிய சாதனை படைத்துள்ளது. இதற்கென மத்திய அரசிடமிருந்து கடந்த 5 ஆண்டுகளில், நான்கு முறை "கிருஷி கர்மான்" விருதினை, தமிழ்நாடு பெற்றுள்ளது.

தென்னை விவசாயிகள் வளம் பெற, தென்னையிலிருந்து நீரா பானம் உற்பத்தி செய்ய மாண்புமிகு அம்மாவின் அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தென்னை விவசாயிகளின் வருமானம் இருமடங்காக உயரும்.

வரலாறு காணாத வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, இடுபொருள் மானிய நிவாரணமாக 2 ஆயிரத்து 247 கோடி ரூபாய் வழங்க அம்மாவின் அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், அம்மாவின்

அரசு எடுத்து வரும் தொடர் முயற்சியினால், புதிய பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு 1,882 கோடி ரூபாய் இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டு வருகிறது.

உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இயற்கை மரணம் அடையும் விவசாயிகளின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வந்த 10,000/– ரூபாய் 20,000/– ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பொதுவிநியோகத் திட்டத்தின் அனைத்து நடவடிக்கைகளும் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் நடைமுறையில் இருந்த குடும்ப அட்டைகளுக்கு மாற்றாக, குடும்ப அட்டைதாரர்களின் மின்னணு குடும்ப அட்டைகள் அதாவது "Smart Cards" வழங்குத் திட்டம் 01.04.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டு, தற்போது மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது.

மீனவர்களுக்கு புதிய தூண்டில் மற்றும் செவுள்வலையுடன் கூடிய சூரை மீன்பிடி விசைப்படகுகள் கட்டுவதற்கு மத்திய அரசுடன் இணைந்து மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா வழியில் வந்த இந்த ஆட்சியில் தடையில்லாத மின்சாரம், சிறந்த உள்கட்டமைப்பு, தொழிலாளர் திறன், இலகுவான வழிமுறைகள் ஆகியவற்றால் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி அதிகரித்துள்ளது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் நடக்கும் இந்த ஆட்சி தொழில்துறையில் பல மாற்றங்கள் செய்து தமிழ்நாட்டில் எளிதாக முதலீடு செய்ய வழிவகை செய்துள்ளது.

2011ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை, அந்நிய நேரடி முதலீடாக ஒரு இலட்சத்து 26 ஆயிரத்து 19 கோடி ரூபாயை தமிழ்நாடு அரசு ஈர்த்துள்ளது. தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய தென் மாவட்டங்களான இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும்

கன்னியாகுமரி மாவட்டங்களில் சுமார் 19 ஆயிரத்து 615 ஏக்கர் பரப்பளவில் புதிய தொழிற் பூங்காக்களை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அனைவருக்கும் வீடு வழங்கும் நோக்கத்தை எய்திட பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி பகுதிகளில் வாழும் பொருளாதாரத்தில் நலிவுற்ற குடும்பங்களுக்கு 2015–2016ஆம் ஆண்டு முதல் நடப்பாண்டு வரை, 11 ஆயிரத்து 457 கோடி ரூபாய் செலவில், 3 இலட்சத்து 27 ஆயிரத்து, 714 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

2016–2017ஆம் ஆண்டில் 22 இலட்சத்து 71 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் 901 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 24 கூட்டுக்குடிநீர்த் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை இரட்டிப்பாக்கப்பட்டதன் மூலம் கடந்த ஆறு மாத காலத்தில் மட்டும் 57 ஆயிரம் பயனாளிகளுக்கு, 13 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் பங்களிப்புடன், ஏரிகளின் நீர்வளத்தை அதிகரிப்பதற்காக குடிமராமத்து பணிகள் திட்டத்தினை அம்மா வழியில் வந்த தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகின்றது. முதற்கட்டமாக, 1,519 ஏரிகளில் 100 கோடி ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அவை முடியும் தருவாயில் உள்ளது. விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, தற்போது 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 2,065 ஏரிகளை சீரமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள 23 மாவட்டங்களில் உள்ள நீர்நிலைகளை மேம்படுத்துவதற்காக நீர் வள, நில வள திட்டம் II ன் மூலம் 787 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 220 பணிகள் தற்போது எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. நிலத்தடி நீரை செறிவூட்டவும் ஆறுகளிலிருந்து ஏரிகளுக்கு தண்ணீரைக் கொண்டு செல்லவும், புதிய தடுப்பணைகள் நிலத்தடி கீழ் தடுப்புச் சுவர்கள் மற்றும் அணைக்கட்டுகள் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 ஆண்டுகளில் செயல்படுத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 75 இடங்களில் தடுப்பணைகள் மற்றும் நிலத்தடி கீழ் தடுப்புச்சுவர்களும், 10 இடங்களில் அணைக்கட்டுகளும் கட்டப்படும். பொதுமக்களுக்கு தங்குதடையின்றி மணல் கிடைப்பதற்காக மணல் குவாரிகளை அரசே ஏற்று நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

சின்னத்திரை, பெரியதிரை கலைஞர்களுக்கு விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவ்விருதுகள் விரைவில் வழங்கப்படும். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை போற்றும் வகையில், அவருடைய நூற்றாண்டு விழாவை அனைத்து மாவட்டங்களிலும் தமிழ்நாடு அரசு சீரும் சிறப்பாக நடத்தி வருகிறது.

நாட்டின் முன்னேற்றம் கருதி, அனைத்துத்தரப்பு மக்களின் நலன் கருதி, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா வழியில் நடைபெறும் இந்த அரசு பல புதிய திட்டங்களை வகுத்து அதனை விரைந்து செயல்படுத்துவதிலும், திட்டப் பலன்கள் பயனாளிகளுக்கு விரைந்து முழுமையாக சென்றடைவதைக் கண்காணிப்பதிலும் அதிக அக்கறை எடுத்துக் கொண்டுள்ளது.

இந்திய திருநாட்டின் சுதந்திரத்திற்காக தனது இன்னுயிரை துச்சமென மதித்து, உயிர் தியாகம் செய்த தியாக செம்மல்கள் நிறைந்திட்ட மாநிலம் நம் தமிழ்நாடு. வன்முறைகளுக்கு இடம் கொடாமல், அஹிம்சை மூலமே, அடிமை விலங்கை தகர்த்தெறிந்த தியாகச் செம்மல்கள் வலம் வந்த இடம் என்ற பெருமையும் பெற்றது நம் தமிழ்நாடு. நாட்டின் விடுதலை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு தங்களின் சொந்த நலன்களைக் கிஞ்சித்தும் சிந்திக்காமல் நாட்டு விடுதலைக்காகவே தங்கள் வாழ்நாளை அர்ப்பணித்த அந்த தியாகச் செம்மல்களை சிறப்பிக்கும் வகையில் தற்போது அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியம் 12 ஆயிரம் ரூபாயிலிருந்து 13 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் என்பதையும்; சுதந்திர போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடும்ப ஓய்வூதியம் 6 ஆயிரம் ரூபாயிலிருந்து 6 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதையும், விடுதலைப் போராட்டத்தில்

பங்கு கொண்டு, நாட்டிற்காக குறிப்பிடத்தக்க வகையில் சிறப்புற பணியாற்றியவர்களின் தியாகத்தை போற்றும் வகையில், அவர்களது வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சிறப்பு ஓய்வூதியம் 6 ஆயிரம் ரூபாயிலிருந்து 6 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நன்னாளில் பெற்ற சுதந்திரத்தை பேணி காக்கவும், இந்திய திருநாட்டை வல்லரசாக்கவும், அதில் தமிழ்நாட்டை வளம் மிக்க மாநிலமாக ஆக்கவும் இந்த அரசு தொடர்ந்து செயல்படும் என உறுதியளிக்கிறேன்.

பேரறிஞர் அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். நாமம் வாழ்க!

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் புகழ் ஓங்குக!

வளர்ச்சிமிக்க தமிழ்நாட்டை உருவாக்கி

வலிமை மிக்க பாரதத்தைப் படைப்போம்!

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்*

சுதந்திர தின உரை (15.08.2017).

பதக்கம் ஏந்தும், பொன்னான தருணமானது வாழ்நாளில் நெஞ்சைவிட்டு அகலாது!

ஏழைகளின் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா

அவர்களை வணங்குகிறேன்.
மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே!
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!
உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!
கூடுதல் தலைமைச் செயலாளர் உள்துறை அவர்களே!
வரவேற்புரை ஆற்றிய காவல்துறை தலைமை இயக்குநர்
திரு. டி.கே. இராஜேந்திரன் அவர்களே!
நன்றியுரை ஆற்றவுள்ள
சென்னை பெருநகர காவல் ஆணையர்
திரு.ஏ.கே. விஸ்வநாதன் அவர்களே!

முன்னாள் காவல்துறை தலைமை இயக்குநர் திரு. ஆர்.நடராஜ் அவர்களே!

காவல்துறை அதிகாரிகளே!
சீருடைப் பணியாளர்களே!
அவர்தம் குடும்பத்தினர்களே!
வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே!
உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் 71வது சுதந்திர தின விழாவை இன்று மகிழ்ச்சியோடு கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். பொதுச்சேவையில் சிறந்த முறையில் கடமையாற்றி, தனது தனித்திறமையை வெளிப்படுத்திய காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, சிறைத்துறை மற்றும் ஊர்க்காவல் படையைச் சேர்ந்த அலுவலர்களுக்குப் பதக்கம் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு பதக்கங்கள் வழங்கியதில் பெருமிதம் கொள்கிறேன்.

அறவழியைப் பின்பற்றி விடுதலை பெற்ற நாடு இந்தியா. விடுதலைக்குப்பிறகும் இந்திய மக்கள் அறவழியை பின்பற்றி குடியரசுக் கொள்கைக்கு வலிமை சேர்த்து வருகிறார்கள்.

இருப்பினும் மக்களாட்சியிலும் ‘பாதுகாப்பு’ என்பது அவசியமாகிறது, இந்தியாவைப் பொறுத்தவரை மக்கள் அன்புக்கும், ஆதரவுக்கும், அரவணைப்புக்கும் ஆயுதமாகதான் பாதுகாப்புப்பணி பயன்படுத்தப்படுகிறது.

பாதுகாப்புப்பணியில் ஈடுபடும் காவல்துறை, தீயணைப்புத்துறை, சிறைத்துறை, ஊர்க்காவல்படை என அனைத்துப் பிரிவுகளும் சேவை மனப்பான்மையோடு, தியாக உணர்வோடு தங்கள் பணிகளை மேற்கொள்கிறார்கள்.

‘செயற்கரிய செய்வார் பெரியர்’ என்ற குறளின் வரிகளுக்கு ஏற்ப, காலம் நேரம் கருதாமல், கண்துஞ்சாமல், உடல் வருத்தம் பாராமல், தத்தம் பணி ஒன்றை மட்டுமே கடமையாகக் கொண்டு அர்ப்பணிப்பு உணர்வுடன் செயலாற்றும் வீரர்களை, வீராங்கனைகளை

இனங்கண்டறிந்து, அவர்களின் தனித்திறமைகளை பொதுமக்களும் அறியும் வண்ணம் செய்வதற்காகவும், காவல்துறையினரை உற்சாகப்படுத்துவதற்காகவும், தமிழ்நாடு அரசு அவர்களுக்கு விருதுகள் மற்றும் பதக்கங்கள் வழங்கி சிறப்பித்து வருகின்றது.

இந்தியாவில் தமிழ்நாடு அமைதிப்பூங்காவாகவும், சிறந்த பாதுகாப்பான மாநிலமாகவும் விளங்கி மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக திகழ்கிறது. தமிழ்நாடு இத்தகைய உன்னத நிலையை அடைவதற்கு, அந்நிலையைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்வதற்கு, தமிழ்நாடு காவல்துறையில் பணியாற்றும் அனைவரது உழைப்பும் காரணமாக இருக்கிறது.

நாட்டில் நிலவும் போராட்டங்கள், தீவிரவாத போக்குகள், தீ விபத்துகள், இயற்கை சீற்றங்கள் ஆகியவற்றால், பொதுமக்களின் உயிர், உடைமைகளுக்கு சேதம் ஏற்படாதவாறு காப்பது காவல்துறையினர், தீயணைப்புத்துறையினர், சிறைத்துறையினர் என அனைத்து சீருடைப்பணியாளர்கள் மற்றும் அலுவலர்களின் தலையாய கடமையாகிறது. அந்தக் கடமையை தமிழ்நாடு சீருடைப்பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் சிறப்பாக செய்து வருகிறார்கள். அதனால் அவர்கள் அனைவரையும் நான் உளமாற பாராட்டுகிறேன்.

அண்மையில் சென்னை தியாகராயநகரில் ஒரு தனியார் துணிக்கடையில் ஏற்பட்ட தீ விபத்தில் கடையில் வேலை பார்த்த 14 பணியாளர்கள் 7வது மாடியில் தத்தளித்தார்கள். தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினர் செயல்திறனால் பணியாளர்கள் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

நெரிசல் மிகுந்த அந்த உஸ்மான் சாலை பகுதியில் தீ அக்கம் பக்கம் பரவாது தடுத்து நிறுத்தினார்கள். தீயணைப்புத்துறையினரின் இந்த மகத்தான களப்பணியை பத்திரிகைகளும் ஊடகங்களும் பொதுமக்களும் வெகுவாக பாராட்டினார்கள்.

இதே போன்று அண்மையில் சென்னை கொடுங்கையூரில் ஏற்பட்ட எரிவாயு சிலிண்டர் வெடித்துச் சிதறிய கோர விபத்தில்

தீயை அணைக்கச் சென்ற ஒரு ஊர்க்காவல் படைவீரர் உட்பட 54 மீட்புப்பணியாளர்கள் படுகாயம் அடைந்தனர். அவர்களில் ஒருவரான தீயணைப்பு வீரர் திரு.ஏசுராஜ் தன் இன்னுயிரை நீத்தார். இப்படி சீருடைப் பணியாளர்களின் வீரதீர செயல்களுக்கும், தியாகங்களுக்கும் கட்டியம் கூறும் பல சாதனைகளை வரிசைப்படுத்தலாம்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், சவால் நிறைந்த காவல் பணியாளர்களின் வாழ்க்கையில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டார்கள். காவல்துறையைச் சார்ந்த சகோதர, சகோதரிகள் தங்கள் கடமைகளை தங்கு தடையின்றி, ஈடுபாட்டோடு செய்வதற்கு அவர்களுடைய உள்ளமும், உடலும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று தாயுள்ளத்தோடு சிந்தித்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். அதனால்தான் முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு காவல்துறைக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தினார்கள்.

மாண்புமிகு அம்மா வழியில் வந்த அரசு கொண்டுவந்த சில முக்கிய திட்டங்களையும் இங்கே சுருக்கமாக குறிப்பிட விரும்புகிறேன். 40 வயது நிரம்பிய காவல் பணியாளர்களுக்கு ஆண்டிற்கு ஒருமுறை அரசு மருத்துவமனைகளில் கட்டணமில்லா முழு உடல் மருத்துவப் பரிசோதனை அளிக்கப்பட்டு வருகிறது.

சீருடைப் பணியாளர்களுக்கென மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் “உங்கள் சொந்த இல்லம்” என்ற திட்டம் காஞ்சிபுரம் மாவட்டம் மேலக்கோட்டையூரில் முதற்கட்டமாக துவக்கி வைக்கப்பட்டது. இங்கு 47.6 ஏக்கர் நிலப்பரப்பில், அனைத்து வசதிகளுடன் 2,673 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதே போன்று, தமிழ்நாட்டின் மற்றப் பகுதிகளிலும் இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த ஆறு ஆண்டுகளில் 14 ஆயிரத்து 977 காவல் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும், 6 ஆயிரத்து 257 காவல் குடியிருப்புகள் கட்டப்பட்டு

வருகின்றன. சீருடை பணியாளர்களின் சிரமம் அறிந்து, அவர்களது நலனுக்கென 2011–ம் வருடம் முதன் முதலாக மூன்று இடங்களில் "தமிழ்நாடு காவல் அங்காடி" துவங்கப்பட்டது. தற்போது, 7 கோடி ரூபாய் செலவில் 47 இடங்களில் இயங்கி வரும் தமிழ்நாடு காவல் அங்காடிகளால் காவல்துறை, சிறைத்துறை, வனத்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள்துறையினர் என ஒரு இலட்சத்து 2 ஆயிரத்து 880 பேர் பயன்பெற்று வருகின்றனர்.

இப்பயனை மேலும் விரிவாக்கும் வண்ணம், மேலும் ஒரு தமிழ்நாடு காவல் அங்காடியை கொண்டித்தோப்பிலும் நிறுவ அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டு நலனுக்காக பணியாற்றிக் கொண்டிருக்கும் காவல் துறையை வலுப்படுத்தும் வகையில் நவீன ஆயுதங்கள் மற்றும் வாகனங்களை வழங்குதல், ரோந்துப் பணியை அதிகப்படுத்துதல்

பொது இடங்களில் கண்காணிப்பு கேமராக்களை பொருத்துதல், சீருடைப் பணியாளர்களின் நலனை மேம்படுத்தும் வகையில் இடர்ப் படி மற்றும் உணவுப் படியை உயர்த்தி வழங்குதல், காவல் உணவகங்கள், துயில் கூடங்கள், உடற்பயிற்சி மையங்கள் ஆகியவற்றை ஏற்படுத்துதல், காவல் மருத்துவ மனையை மேம்படுத்துதல், காலத்தே பதவி உயர்வு வழங்குதல், போன்ற நடவடிக்கைகளையும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எடுத்துள்ளார்கள்.

நீங்கள் கடமையில் கண்ணாக இருந்து சட்டம், ஒழுங்கைப் பாதுகாப்பதால்தான் மக்கள் வீட்டிற்குள்ளேயும், வீட்டிற்கு வெளியேயும், நிம்மதியாக வாழ முடிகிறது. சுதந்திரமாக தங்களுடைய அன்றாட பணிகளைச் செய்ய முடிகிறது. "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற புனிதமொழியையே தாரக மந்திரமாகக் கொண்டு நீங்கள் மக்கள் பணி ஆற்றுங்கள்.

மக்கள்தான் இந்த நாட்டின் எஜமானர்கள். அவர்களுக்கு 24 மணிநேரமும் நீங்கள் பாதுகாப்பு அளியுங்கள். அந்த பாதுகாப்புதான் தமிழ்நாட்டை இன்று பல துறைகளிலும் முன்னேற்றி இருக்கிறது.

காவல் துறைப் பணி என்பது ஒரு மகத்தான பணி. சமுதாயத்தில், அநீதி இழைக்கப்பட்ட மக்கள் நியாயம் கோரி, காவல் நிலையங்களுக்கு வரும் போது அவர்களை மனித நேயத்தோடு அணுகி அன்பாகப் பேசி அவர்களது குறைகளைக் கேட்டறிந்து குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுத் தரும் போது அவர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். அதைப் பார்த்து அதற்கு காரணமான நீங்களும் மகிழ்ச்சி அடைகிறீர்கள். சட்டத்தின் மீதும் இந்த அரசின் மீதும் மக்களுக்கு அதீத நம்பிக்கை ஏற்படுகிறது.

பல்வேறு சவால்களை எதிர்கொண்டு அல்லும் பகலும் அயராது மக்கள் பணியாற்றிக் கொண்டிருக்கும் காவல் துறையினர் தங்கள் கடமையினை மேலும் சிறப்புற ஆற்றும் வகையில் அவர்களுக்குத் தேவைப்படும் ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்று பொதுமக்களையும் இந்தத் தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு சீருடை பணியாளர்களின் நலனில், அக்கறை காட்டுவதில் எப்போதும் முன்னோடியாக இருந்து வந்துள்ளது, அது தொடரும் என்பதையும் இந்த இனிய நாளில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசுப் பதக்கங்களான குடியரசுத் தலைவரின் வீரதீரப்பணிக்கான காவல் பதக்கம், தகைசால் பணிக்கான காவல் பதக்கம், மெச்சத்தகுந்த பணிக்கான காவல் பதக்கம், வீரதீர பணிக்கான தீயணைப்பு பணி பதக்கம், மெச்சத்தகுந்த பணிக்கான தீயணைப்பு பணி பதக்கம், ஊர்க்காவல் படை மற்றும் உள்நாட்டு பாதுகாப்பிற்கான பாராட்டத்தக்க பணி விருது மற்றும் தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் தமிழக முதல்வரின் வீரதீர பணிக்கான காவல் பதக்கம், சமூக சேவைக்கான காவல் சிறப்புப் பணிப்பதக்கம், காவல் புலன் விசாரணை சிறப்புப் பணிப்பதக்கம், அண்ணா பதக்கம் என வழங்கப் பெறும் காவல் பதக்கம், விரல் ரேகை அறிவியல் சீர்மிகு பணிப்பதக்கம், காவல் தொழில்நுட்ப சிறப்புப் பணிப்பதக்கம், சிறப்புப் பணிக்கான தீயணைப்பு பணிப்பதக்கம், ஊர்க்காவல் படைச் சிறப்பு பணிக்கான விருது ஆகியவற்றை பெற்ற 854 சீருடைப் பணியாளர்கள்

மற்றும் அலுவலர்களுக்கு எனது உளமார்ந்த பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பதக்கம் பெற்றிருக்கும் ஒவ்வொருவருக்கும் இந்த பதக்கமானது அவர்களது பணியில் மைல்கல்லாக இருப்பதோடு; பதக்கம் ஏந்தும், பொன்னான தருணமானது வாழ்நாளில் நெஞ்சை விட்டு அகலாது என்பதில் கடுகளவும் ஐயமில்லை. பணியில் அர்ப்பணிப்பு, தொடர் சேவை, பொதுமக்களின் பாதுகாப்பு என சீருடைப் பணியாளர்கள் தொடர்ந்து பணிபுரிய, முதுகெலும்பாய் செயல்படும் அவர்களின் குடும்பத்தினர்களும் இங்கு குழுமியுள்ளனர். உங்கள் துணையின்றி, தியாகமின்றி, அவர்களால் சாதனைகள் நிகழ்த்தியிருக்க இயலாது. அதனால், குடும்பத்தினர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

உங்களது மகிழ்ச்சிகரமான, வாழ்நாளில் மறக்க இயலாத இத்தருணத்தில், நானும் பங்கேற்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். உங்கள் பங்களிப்பு இன்று போல் என்றும் தொடர கேட்டுக் கொள்கிறேன்.

இன்று இவ்விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் மீண்டும் ஒருமுறை தெரிவித்து, தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக தொடர்ந்து சிறந்த பங்களிப்பை அனைவரும் வழங்க வேண்டுகிறேன்.

நன்றி,

வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 15.08.2017 அன்று*
சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற
தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கங்கள் வழங்கும் விழாவில்
கலந்து கொண்டு ஆற்றிய உரை.

வெற்றி தோல்வியை சரிநிலையில் வைத்து பார்ப்பதுதான் ஒரு வீரனின் குணம்!

இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்கி,

இந்த இனிய விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு. பெஞ்சமின் அவர்களே!

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாடு துறை அமைச்சர் திரு. பாண்டியராஜன் அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்குகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற திருவள்ளூர் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் வேணுகோபால் அவர்களே!

தமிழ் நாடு காவல் துறை தலைமை இயக்குநர் மரியாதைக்குரிய திரு. டி.கே.இராஜேந்திரன் அவர்களே!

சென்னை மாநகர காவல் ஆணையர் மரியாதைக்குரிய திரு. ஏ.கே.விசுவநாதன் அவர்களே!

இங்கே வரவேற்புரை நிகழ்த்திய சென்னை ரைபிள் கிளப் தலைவர் மதிப்பிற்கும், மரியாதைக்குரிய திரு. டி.வி.சீதாராமா ராவ் அவர்களே!

மற்றும் இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மரியாதைக்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே!

நன்றியுரை வழங்க இருக்கின்ற சென்னை ரைபிள் கிளப் செயலாளர் திரு. ஆர்.ரவி கிருஷ்ணன் அவர்களே!

இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் மரியாதைக்குரிய திரு. அலெக்ஸாண்டர் அவர்களே!

மரியாதைக்குரிய திரு. கே.எஸ்.விஜயகுமார் அவர்களே!

மரியாதைக்குரிய திரு. பலராமன் அவர்களே!

வருகை புரிந்துள்ள முன்னாள் அமைச்சர் பெருமக்களே,

சகோதரர் திரு. மாதவரம் மூர்த்தி அவர்களே!

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டிருக்கின்ற

காவல் துறையைச் சார்ந்த வீரர், வீராங்கனைகளே!

இங்கே பெருந்திரளாகக் கூடியிருக்கின்ற

பார்வையாளர்களே, பெரியோர்களே, தாய்மார்களே!

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய வணக்கத்தை இந்த நேரத்திலே சமர்ப்பித்து,

‘வில்லுக்கு விஜயன், சொல்லுக்கு அகத்தியன்’ என்பார்கள். வில் வித்தையில் மிகச் சிறந்த வீரனாக விளங்கிய அர்ச்சுனனின் பெயர் மகாபாரதத்தில் சிறந்த இடத்தைப் பிடித்திருக்கிறது. குறிதவறாமல் அம்பு எய்துவதற்கு இன்றைக்கும் மக்கள் அர்ச்சுனனையே உதாரணமாக கூறுகிறார்கள் என்றால்..

வில்வித்தை என்பது மனித வரலாற்றில் எத்தனை முக்கியத்துவம் பெற்றிருக்கிறது என்பதை நாம் உணர முடியும். அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தில் முன்னேற்றம் அடைந்த பின்னர் துப்பாக்கி சுடுதலும் அதே அளவிற்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது. குறிபார்த்து துப்பாக்கி சுடும் நுணுக்கத்தைப் பெற்றிருக்கின்ற உங்களையெல்லாம், நான் அர்ச்சுனனாகப் பார்க்கிறேன். இதிகாசத்தில் நீங்கா இடம் பெற்ற அர்ச்சுனனைப் போல இந்திய வரலாற்றில் நீங்களும் சிறந்த இடத்தைப் பெற வேண்டும் என்று மனதார வாழ்த்துகிறேன்.

இப்படிப்பட்ட துப்பாக்கி சுடும் கலையை மேலும் நவீனப் படுத்துவதற்காக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு காவல் துறைக்கு பல்வேறு திட்டங்களை கொண்டு வந்தார்கள்.

காவல் துறையை நவீன மயமாக்கும் திட்டத்தை தேசியத் திட்டமாக ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களே முன்னோடியாக திகழ்ந்திருக்கிறார்கள். இதை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களே 08.09.2011 அன்று நடைபெற்ற காவல் துறைக்கான 11வது அகில இந்திய துப்பாக்கி சுடும் போட்டியில் வென்றவர்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் **1991–ஆம்** ஆண்டில் முதலமைச்சராகப் பதவியேற்றபோது, தமிழ்நாடு காவல் துறையிடம் பயங்கரவாதத்தையும், தீவிரவாதத்தையும் எதிர்த்துப் போராட போதிய ஆயுதங்கள் இல்லாததை உணர்ந்து, அப்போதைய மத்திய உள் துறை அமைச்சர், நிதித் துறை அமைச்சர் ஆகியோரை சந்தித்து, தமிழ்நாடு காவல் துறையை நவீனப்படுத்த **30** கோடி ரூபாய் நிதி வழங்க வேண்டுமென்று வலியுறுத்தினார்கள். அதனால் மத்திய அரசின் கணிசமான நிதி உதவியுடன் AK 47 ரகம் மற்றும் M.P.5 போன்ற நவீன ஆயுதங்கள், நவீன வாகனங்கள், டிஜிட்டல் மைக்ரோவேவ் தொலைதொடர்பு இணைப்புமுறை உள்ளிட்டவைகளை வாங்கி தமிழ்நாடு காவல் துறையை நவீனப்படுத்தினார்கள்.

தமிழ்நாடு காவல் துறை நவீனப் படுத்தப்பட்டதை அறிந்து, மற்ற மாநிலங்களும் தங்கள் மாநில காவல் துறையை நவீனப்படுத்தத் தொடங்கின. எனவே, மற்ற மாநிலங்களுக்கெல்லாம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான, தமிழ்நாடு அரசுதான் வழிகாட்டியாக இருந்திருக்கிறது என்று நாம் பெருமை அடையலாம்.

அதனால்தான், தமிழ்நாடு காவல் துறையை ஸ்காட்லாந்து காவல் துறையோடுஒப்பிட்டுஉலகமேபோற்றுகிறது.இப்போதுதுப்பாக்கிசுடும் போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஆவடி வீராபுரம் தமிழ்நாடு சிறப்பு காவல் படை மூன்றாவது அணி வளாகத்தில் அமைந்துள்ள இந்த அரங்கமானது, **1995**ஆம் ஆண்டு நடைபெற்ற தெற்காசிய கூட்டமைப்பு நாடுகளின் விளையாட்டு போட்டிக்காக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது என்பதை பெருமையுடன் நினைவுகூற விரும்புகிறேன்.

சென்னை ரைபிள் கிளப், **2003**ஆம் ஆண்டில் தன் பொன் விழாவினைக் கொண்டாடியபோது **4** கோடியே **85** ஆயிரம் ரூபாய் செலவில் இந்த அரங்கம் ஒலிம்பிக் தரத்திற்கு

மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலங்களில், 2011ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாவட்டம், ஒத்திவாக்கத்தில் உள்ள தமிழ்நாடு கமாண்டோ பயிற்சி பள்ளியில் 26 இலட்சத்து 94 ஆயிரம் ரூபாய் செலவில் 11வது அனைத்திந்திய காவல் ரைபிள், ரிவால்வர் பிஸ்டல் சுடும் போட்டி நடத்தப்பட்டது.

மேலும், தேசிய அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ளும் தமிழ்நாடு காவல் துறை துப்பாக்கி சுடும் குழுவினரின் பயிற்சிக்காக தளவாடப் பொருட்கள் வாங்குவதற்கு 61 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் 2013ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

அதே 2013ஆம் ஆண்டிலேயே, இந்த அரங்கத்தின் மேம்பாடு உள்பட இதர பணிகளுக்காக 94 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 1995ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இந்த அரங்கின் புனரமைப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகளுக்கா சுமார் 50 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அந்தப் போட்டிக்கு இந்த ஆண்டு, ஏறத்தாழ 22 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த துப்பாக்கிச் சுடும் அரங்கமானது, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசின் நிதியுதவியுடன் செப்பனிடப்பட்டுள்ளது.

தளவாட பொருட்கள் மற்றும் மைதானத்தை சீர் செய்யும் பணிகள் என பொதுவான பணிகள் பல செய்யப்பட்டாலும், தனி மனிதனாக தன்னுடைய திறனை வெளிப்படுத்தி தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்க்கும் வீரர்களுக்கும் போதிய ஊக்குவிப்பினை அளிப்பதில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எப்போதுமே முதலிடத்தில் இருந்துள்ளார்கள்.

அந்த வகையில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பெயரிலேயே ஜெ.ஜெ.சுழற்கோப்பை என்று தனியாக ஒன்று உருவாக்கப்பட்டு பரிசுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன்படி துப்பாக்கி சுடும் போட்டியில் தேசிய அளவில் வெற்றி பெற்று தங்கப் பதக்கம், வெள்ளிப் பதக்கம் மற்றும் வெண்கலப் பதக்கம் பெறும் வீரர், வீராங்கனைகளுக்கு தலா 5 இலட்சம் ரூபாய், 3 இலட்சம் ரூபாய் மற்றும் 2 இலட்சம் ரூபாய் என ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதன் காரணமாக, ஏற்கனவே 2001, 2004 மற்றும் 2009 ஆகிய ஆண்டுகளில் தமிழ்நாடு ஒட்டுமொத்த வாகையர் பட்டம் சூடியிருந்தாலும், 2011 ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரை தொடர்ந்து தமிழ்நாடு வாகையர் பட்டம் சூடி வருகிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் புதுப்பிக்கப்பட்ட இந்த விளையாட்டு அரங்கத்தில் நடைபெறும் 9வது தென் மண்டல துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு பரிசுகள் வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்.

இந்தப் போட்டிகளில் ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு, புதுச்சேரி, அந்தமான் நிகோபர் தீவுகள்ஆகிய பகுதிகளிலிருந்து வீரர்கள் கலந்து கொண்டுள்ளதுமிக்க மகிழ்ச்சியை அளிக்கிறது. பல்வேறு பகுதிகளிலிருந்து இங்கே வருகைதந்திருக்கும் 800 வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை ஒரே இடத்தில் காண்பது கண் கொள்ளாக் காட்சியாக இருக்கிறது. இப்படிப்பட்ட போட்டிகளில் தான் மொழி, இனம், கலாச்சாரவேறுபாடுகளை மறந்து அனைவரையும் ஒரே இந்திய முகமாக பார்க்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

தமிழ்நாடு மிகவும் திறமை மிக்க பல துப்பாக்கி சுடும் வீரர்களை உருவாக்கியிருக்கிறது. ரூபா ஸ்ரீநாத், சர்வேஷ் சுவரூப் சங்கர், பிருதிவிராஜ் தொண்டைமான், நிவிதிதா, காயத்ரி, ஸ்ரீநிவிதிதா, வெங்கட்ராம், சந்தியா போன்ற வீரர்களும், வீராங்கனைகளும் – ஆசிய அளவிலான போட்டிகளிலும், காமன்வெல்த்

விளையாட்டுகளிலும், ஆசிய சாம்பியன்ஷிப் போட்டிகளிலும், உலகக் கோப்பை போட்டிகளிலும் பங்கெடுத்துள்ளதை நான் பெருமையாகக் கருதுகிறேன்.

திருமதி ரூபா ஸ்ரீநாத் கோலாலம்பூரில் நடைபெற்ற 16வது காமன்வெல்த் விளையாட்டுகளில் தங்கப் பதக்கம் வென்றிருப்பதுடன், அர்ஜுனா விருது பெற்ற முதல் தமிழ்நாட்டு வீராங்கனை என்ற பெருமையும் பெற்றுள்ளார்.

இது தவிர, இந்த கிளப்பின் உறுப்பினர்கள் இந்திய தேசிய ரைபிள் அசோசியேஷனில் தொழில்நுட்ப அலுவலர்களாகவும், பயிற்சியாளராகவும், மேலாளர்களாகவும் மற்றும் பன்னாட்டு போட்டிகளில் நடுவர்களாகவும் பணியாற்றியிருக்கின்றனர்.

துப்பாக்கி சுடும் பயிற்சி பெறுபவர்களுக்கு சலுகை விலையில் தளவாடப் பொருட்கள் வழங்கும் ஒரு சில கிளப்புகளில் இந்த கிளப்பும் ஒன்றாகும். மேலும், மாற்றுத் திறனாளி வீரர், வீராங்கனைகளை உற்சாகப்படுத்தும் வகையில் அவர்களுக்கு நுழைவு கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டதோடு, சிறப்பு வசதிகளும் செய்யப்பட்டுள்ளது பாராட்டுக்குரியதாகும்.

அன்பு, ஒழுக்கம், நம்பிக்கை, தலைமைப் பண்பு, சமாதானம், ஒத்துழைப்பு, அனைவரையும் மதித்தல், உடல் நலம் பேணுதல் உள்ளிட்ட உயர்ந்த பண்புகளை இப்படிப்பட்ட திறன் வளர்க்கும் போட்டிகள் மூலம் ஏற்படுத்திக் கொள்ள முடியும். தேசிய அளவிலான வளர்ச்சியைப் பெறுவதற்கான போட்டிகளாக இவை அமைந்திருக்கின்றன. வெற்றி தோல்வி என்பதை சரி நிலையில் வைத்து பார்ப்பதுதான் ஒரு வீரனின் குணமாக இருக்க வேண்டும். தோல்வி என்பது முடிவு அல்ல, வெற்றிக்கான தொடக்கம் என்பதை உணர்ந்து வெற்றியின் அடுத்த நிலையை அடைவதற்கான அதிகப்படியான முயற்சியை தொடங்கி வைக்கவே வெற்றி தோல்வி முடிவுகளை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற தத்துவத்தை புரிந்து கொள்ள வேண்டும்.

1952–ஆம் ஆண்டு குறைந்த உறுப்பினர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த சென்னை ரைபிள் கிளப், இப்போது **475** உறுப்பினர்களைக் கொண்டு பாராட்டும் படியான வளர்ச்சியடைந்துள்ளது. இதில் சேருகின்ற உறுப்பினர்கள் தமிழ்நாடு காவல் துறையினரால் நுணுக்கமாக கண்காணிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு, சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என்பதை அறிய முடிகிறது.

இந்த ரைபிள் கிளப் இப்போது **65**ஆம் ஆண்டில் பயணம் செய்து கொண்டிருப்பது பாராட்டுக்குரியது. இந்தக் கிளப்பில் பயிற்சி பெற்றவர்கள் பலர் தேசிய அளவிலும், உலக அளவிலும் பல வெற்றி பதக்கங்களைப் பெற்று தமிழ்நாட்டிற்கும் இந்தியாவிற்கும் பெருமை சேர்த்துள்ளனர். அத்தகைய வீரர்களையும், வீராங்கனைகளையும் இந்த இனிய நேரத்தில் பாராட்டி வாழ்த்துகிறேன்.

இன்று இந்தப் போட்டியில் கலந்து கொண்ட வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும், பயிற்சி அளித்து ஊக்குவித்த பயிற்சியாளர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் மீண்டும் ஒருமுறை தெரிவித்து, தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்காக தொடர்ந்து சிறந்த பங்களிப்பை அனைவரும் வழங்க வேண்டுகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள் 26.08.2017 அன்று*
திருவள்ளூர் மாவட்டம், ஆவடி, வீராப்புரத்தில் நடைபெற்ற
9ஆவது தென் மண்டல துப்பாக்கி சுடும் சாம்பியன்ஷிப் போட்டியில்
பரிசுகள் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரை.

வகுப்பறையை கவித்துவமாய் மாற்றும் ஒவ்வொரு ஆசிரியரும் நல்லாசிரியர் மட்டுமல்ல; மாணவர்களின் “கனவு ஆசிரியர்” ஆகவும் மாறலாம்!

சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற ஆசிரியர் தினவிழா நிகழ்ச்சியில் சிறப்பாக உரையாற்றி அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களே,

தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.ஏ. செங்கோட்டையன் அவர்களே!

இங்கே வருகை தந்து அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

முன்னிலை உரையாற்றிய பள்ளிக்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் திரு. பிரதீப் யாதவ் இ.ஆ.ப., அவர்களே!

பள்ளிக் கல்வித் துறை அரசு செயலாளர் திரு. த. உதயச்சந்திரன் இ.ஆ.ப., அவர்களே!

மற்றும் தலைமைச் செயலாளர் அவர்களே!

முன்னதாக வரவேற்புரை ஆற்றிய பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ரெ.இளங்கோவன் அவர்களே!

மரியாதைக்குரிய வாரியத்தலைவர் அக்கா வளர்மதி அவர்களே!

மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்றிருக்கும் அரசு உயர் அதிகாரிகளே! அலுவலர்களே!

நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களே! சட்டமன்ற உறுப்பினர்களே!

நல்லாசிரியர் விருது பெற்றிருக்கின்ற ஆசிரியப் பெருமக்களே,

விழாவிற்கு வருகை புரிந்துள்ள பெரியோர்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழைக் குடும்பத்தில் பிறந்தாலும், தன் கடின உழைப்பால், அறிவாற்றலால் பாரதத்தின் முதல் குடிமகனாய் உயர்ந்த முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளான இன்று, ஆசிரியர் தின விழாவாகப் பள்ளிக் கல்வித் துறையின் சார்பில், சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

இன்றைய தினம் டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன் விருது பெறும் ஆசிரியப் பெருமக்களை வாழ்த்துவதற்கான இந்த வாய்ப்பை எண்ணி பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.

எனக்கு கல்விச்செல்வத்தை அளித்து, என்னை ஆளாக்கிய எனதருமை ஆசிரியப் பெருமக்களை இந்த இனிய நன்னாளில்

நினைவு கூர்ந்து எனது ஆசிரியர் தின வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

செக்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழன் என்று அன்போடு அழைக்கப்படும் திரு. வ.உ.சி. அவர்களின் பிறந்த நாளான இன்று அவரையும் நினைவு கூறுவதில் பெருமை அடைகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, கல்வியின் முக்கியத்துவத்தையும், மேன்மையையும், அறிந்துள்ளதன் காரணமாகத்தான் பள்ளிக் கல்வித் துறைக்கு 2017–2018ஆம் ஆண்டிற்கு மட்டும் 26 ஆயிரத்து 932 கோடியே 31 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு பதவியேற்ற மே 2011 முதல் இந்த கல்வி ஆண்டு வரை பள்ளிக் கல்வித் துறைக்கான நிதி ஒதுக்கீடு 1 இலட்சத்து 37 ஆயிரத்து 261 கோடி ரூபாயினை எட்டியுள்ளது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 13.12.2012 அன்று மாணவ, மாணவியருக்கான நலத்திட்ட உதவிகள், ஆசிரியர்களுக்கான பணி நியமன ஆணை வழங்கும் விழாவில்,

“இன்றியமையாத் தன்மை வாய்ந்த கல்வியை அனைவரும் கற்கவேண்டும்.

கல்லாதவர்களே இல்லாத மாநிலமாகத் தமிழகத்தை ஆக்க வேண்டும்”

என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தனது லட்சியக் கனவினை தெரிவித்தார்கள்.

இந்தப் பரந்த பாரதத் திருநாட்டில் தமிழகத்தை கல்வி கற்போரின் புகலிடமாகவும், கல்வியென்றாலே தமிழகம்தான் என்று புகழும்

இடமாக – மாற்றும் வகையில் இன்றைக்கு பள்ளிக்கல்வித்துறை சார்ந்த திட்டங்களை வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

இதன் காரணமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பதவியேற்றதிலிருந்து கடந்த ஆறு ஆண்டுகளில்

❖ ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாக 40,433 ஆசிரியர்களும் அனைவருக்கும் கல்வி இயக்க திட்டத்தின் மூலமாக 15,169 பகுதி நேர ஆசிரியர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

❖ இதுவரை 4,362 ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் வெளிப்படைத் தன்மையுடன் தெரிவு செய்யப்பட்டு பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

❖ பள்ளிகளில் ஆசிரியர் பணியிடங்களை உடனுக்குடன் நிரப்ப வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு தேவைக்கேற்ப ஆசிரியர்களை நியமித்து வருகிறது.

❖ இதன் தொடர்ச்சியாக, நடப்பு கல்வியாண்டில் 3,336 முதுகலை பட்டதாரி ஆசிரியர் மற்றும் 748 கணினி ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படும்.

❖ மாணவர்கள் வெகுதொலைவு பள்ளிக்கு செல்வதை தவிர்க்கும் பொருட்டு தமிழகத்தில் இதுவரை 227 புதிய தொடக்கப் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. 116 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 829 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 402 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

❖ பள்ளிகளுக்கு தேவையான வகுப்பறைகள், ஆய்வகங்கள், கழிப்பறைகள் மற்றும் பள்ளிச் சுற்றுச் சுவர்கள் போன்றவைகள் அமைப்பதற்கு நபார்டு திட்டம், அனைவருக்கும் கல்வித் திட்டம்

மற்றும் அனைவருக்கும் இடைநிலை கல்வித் திட்டம் இவைகளின் வாயிலாக ரூபாய் 4 ஆயிரத்து 148 கோடி செலவிடப்பட்டுள்ளது.

❖ அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு 14 வகையான நலத்திட்டப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

❖ மாணவர்கள் இடைநிற்றல் இன்றி கல்வி பயிலவேண்டும் என்ற நோக்கத்தோடு, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் மேல்நிலைக் கல்வியை முடிக்கும் மாணவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் சிறப்பு ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

❖ தமிழகத்தில் மாணவர்களுக்கான பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுவதன் விளைவாக தொடக்க நிலை கல்வியில் மாணவர் சேர்க்கை 99.85 விழுக்காடாகவும், நடுநிலை கல்வியில் மாணவர் சேர்க்கை 99.20 விழுக்காடாகவும் உயர்ந்துள்ளது.

❖ கடந்த 5 ஆண்டுகளில் 12–ஆம் வகுப்பு பயின்ற 26 இலட்சத்து 96 ஆயிரம் மாணவர்களுக்கு 4 ஆயிரத்து 723 கோடி ரூபாய் செலவில் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டும் 5 இலட்சத்து 40 ஆயிரம் மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கப்படவுள்ளது.

❖ ஒளிவு மறைவற்ற ஆசிரியர் பணியிட மாறுதல் கலந்தாய்வு மூலம் 12,959ஆசிரியர்கள், மாறுதல் பெற்று பயனடைந்துள்ளனர்.

❖ இவையெல்லாம், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் வந்த அரசு ஒரு திறந்த புத்தகமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையே காட்டுகிறது.

❖ பல்வேறு பணிகளின் காரணமாக பெரு நகரங்களுக்கு வருகை தரும் ஆசிரியர்கள் குறைந்த கட்டணத்தில் வசதியாகத் தங்குவதற்காக சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியில் ஆசிரியர்

இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் மாநகருக்கும் இவ்வசதி விரிவுபடுத்தப்படவுள்ளது.

❖ 10–ஆம் வகுப்பு மற்றும் 12–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வு எழுதிய மாணவர்கள் 19 இலட்சத்து 59 ஆயிரத்து 599 மாணவர்களுக்கு அவர்கள் பெற்ற மதிப்பெண்களை இரண்டே நிமிடத்தில் குறுஞ்செய்தி (SMS) மூலம் அனுப்பப்பட்டது.

❖ குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009–ன்படி 25 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை, நலிவடைந்த மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினைச் சார்ந்த தகுதியான குழந்தைகளுக்கான சேர்க்கையில், வெளிப்படைத் தன்மையினை உறுதிசெய்யும் வகையில் 2017–2018 ஆண்டு முதல் இணைய வழியில் விண்ணப்பிக்கும் முறையினை அம்மாவின் அரசு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

❖ மாணவர்கள் எவ்வித மன அழுத்தமுமின்றி தேர்வு எழுதுவதற்கு ஆசிரியர்கள் மாணவர்களை தயார் செய்யும் வகையில் 2017–2018ஆம் ஆண்டிற்கான இடைநிலை, மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டுக்கான தேர்வுக்கால அட்டவணை கல்வியாண்டின் தொடக்கத்திலேயே வெளியிடப்பட்டுள்ளது.

❖ இத்தனை ஆண்டுகளில் இல்லாதவகையில் மாநில, மாவட்ட அளவிலான மாணவர்களின் தரப்பட்டியல் முறை முற்றிலுமாக ஒழிக்கப்பட்டிருக்கிறது.இது மாணவர்களிடையே உற்சாகத்தையும், உத்வேகத்தையும் ஏற்படுத்தி இருக்கிறது. இதனால் பெற்றோர்களின் மனச்சுமை குறைந்திருக்கிறது.

❖ பதினோறாம் வகுப்பிற்கு பொதுத்தேர்வு என்ற மாற்றத்தால், மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்புகளுக்கான போட்டித் தேர்வுகளை பயமின்றி எதிர்கொள்ளும் துணிவை மாணவர்களிடையே ஏற்படுத்தியிருக்கிறது.

❖ அடுத்த இரண்டு ஆண்டுகளில் மாற்றப்படப்போகும் கலைத்திட்ட வடிவமைப்பும், பாடத்திட்டங்களும் இந்தியாவிலேயே, தமிழகத்தை தனித்தன்மை வாய்ந்த மாநிலமாக மாற்றும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

❖ மாற்றங்களைப் பற்றி சொல்லும்போது எனக்கு ஒரு ஜென் கதை நினைவிற்கு வருகிறது. அதில் ஒரு கதையை நான் இங்கு நினைவு கூறவிரும்புகிறேன்.

ஒரு மலையின் அடிவாரத்தில் இரண்டு பாறைகள் நெடு நாட்களாக மழையிலும், காற்றிலும் கிடந்து தூசி நிறைந்து பாசி பிடித்து கிடந்தது.

அதில் முதல் கல்லுக்கு, நாம் ஏன் இப்படியே ஒரு அவலட்சணம் பொருந்திய கல்லாகவே இருக்க வேண்டும்? வேறு இடம், வேறு வடிவம் கொள்ளலாமே என நினைத்து, இரண்டாம் பாறையிடம் தன் விருப்பத்தை சொன்னது. உடனே அப்பாறை

நாம் எங்கிருந்தாலும், எப்படியிருந்தாலும் கல்லாகவே கிடப்போம். ஆகவே, இப்படியே இருத்தல் நலமே எனக்கூறியது.

கொஞ்ச நாட்களில் சிற்பிகளைக் கொண்ட ஒரு குழு அந்த இடத்திற்கு வந்தது. அவர்கள் ஒவ்வொரு பாறையாய் ஆராய்ந்து இவ்விரு பாறைகளே மிகச் சிறந்தவை என்ற முடிவுக்கு வருகிறார்கள்.

தலைமைச் சிற்பி, சரி, நாளை நாம் இங்கு வந்து இவ்விரு பாறைகளையும் எடுத்துச் செல்வோம் என்று கூறினார். அவர்கள் போன பின் முதல் பாறை சொல்லியது “ஆஹா! நாம் எதிர்பார்த்த மாற்றம் வரப்போகிறது. நாம் நல்ல சிலையாக, சிற்பமாக மாறப்போகிறோம்” என்று குதூகலித்தது.

ஆனால், இரண்டாம் பாறையோ, ‘அவர்கள் நம்மை சுத்தியால் அடிப்பார்கள், உளியால் செதுக்குவார்கள் – வலி உயிர் போகும்.

எனவே நாளை அவர்கள் வரும் போது நான் பெயர்த்து எடுக்க முடியாதபடி கடினமாக மாறி பூமியோடு ஒட்டிக் கொள்வேன்' என்றது.

மறு நாள் சிற்பிகளின் குழு வந்தது. முதல் பாறையை மட்டுமே அவர்களால் சுலபமாக பெயர்க்க முடிந்தது. எனவே, ஒரு பாறையே போதும் என்ற எண்ணத்தில் சென்றுவிட்டனர். கொண்டு சென்ற பாறையை அடித்து, உடைத்து, செதுக்கி தம் திறமைகளால் பொலிவு மிக்க புத்தர் சிலையை உருவாக்கினர்.

இந்நாட்களிலே பாறைகள் கிடந்த மலையின் மீது புத்தர் கோயில் கோலாகலமாக எழுப்பப்படுகிறது. ஒரு நன்னாளில் அந்த புத்தர் சிலை, கோயிலுக்குள் வைக்கப்பட்டு பூஜிக்கப்படும். கடவுளாய் மாறுகிறது.

மாற்றதை விரும்பியதால் தன்னுள் இருந்த புத்தனை வெளிக்கொணர்ந்தது முதல்பாறை. தன்னுள்ளும் ஞான முதல்வன் புத்தன் இருந்தாலும், மாற்றத்தை விரும்பாமல் மதிமயக்க மனதோடு இருந்ததால் இரண்டாவது பாறை மலையேறுவோரின் காலடிப் படியாய் மாறிப்போனது.

இரு பாறைகளுக்குமான வாய்ப்புகள் ஒன்றே. ஆனால் மாற்றத்தை மனதார ஏற்றுக் கொள்ளும் போது மட்டுமே நம் உள்ளிருக்கும் "புத்தன்" வெளிப்படுகிறான்.

உங்கள் வகுப்பறையில் உள்ள ஒவ்வொரு மாணவருக்குள்ளும் ஒரு மகிழ்ச்சி பொங்கக்கூடிய நிகழ்வுகளோ அல்லது சோகம் நிறைந்த கதையோ நிச்சயமாக இருக்கும். அவற்றை அவர்களின் உணர்வுகளுக்கு ஏற்ற வகையில் கேட்க ஆரம்பியுங்கள். இதுவே கற்பித்தலின் முதல்படி.

❖ வகுப்பறையில் கற்றுக் கொடுக்கின்ற ஆசிரியரைவிட, கற்றலைத் தூண்டுகின்ற ஆசிரியரைவிட, ஒரு மாணவனின் சுயசிந்தனையை தட்டி எழுப்புகின்ற, தூண்டுகின்ற ஆசிரியர்களைத்

தான் இன்றைய உலகம் எதிர்பார்க்கிறது. ஆகவே கற்றல்—கற்பித்தல் நிகழ்வுகளையும் தாண்டி, சுய சிந்தனையை வளர்த்தெடுக்கும் விதமாக உங்கள் கற்பித்தல் முறையை அமைத்துக் கொள்ளுதல் கற்பித்தலின் இரண்டாம் படியாகும்.

❖ நீங்கள் கற்றுக்கொடுக்கும் முறையில் ஒரு குழந்தையால் கற்றுக்கொள்ள இயலவில்லை எனில், அது கற்றுக் கொள்ளும் வகையில் உங்கள் கற்றல் முறைகளை மாற்றுங்கள். இது கற்பித்தலின் மூன்றாம் படியாகும்.

❖ இரும்பு குளிர்ந்து போன பிறகு, அதனை எவ்வளவுதான் வலுவாக அடித்தாலும், அதிலிருந்து புதியதாக எப்பொருளையும் உருவாக்க இயலாது. நெருப்பில் உருகி, இளகும் நிலையில் உள்ள இரும்பைத்தான் நாம் நினைத்தபடி மாற்ற முடியும். அதுபோல மாணவப் பருவத்தில், ஆசிரியர்கள், மாணவர்களை சிறந்த மாணக்கர்களாக உருவாக்கி, வருங்காலத்தில் பல டாக்டர் இராதாகிருஷ்ணன் போலவோ, டாக்டர் அப்துல்கலாம் போலவோ சிறந்த குடிமகன்களாக உருவாக்க வேண்டும். இதுபோன்று வாய்ப்பு ஒருமுறை கை நழுவி போய்விட்டால் பிறகு அவ்வாய்ப்பு நமக்கு கிடைக்காது ஆசிரியப் பெருமக்களாகிய நீங்களும், உங்கள் சுக துக்கங்களை மனதுள் அடக்கி, புன்னகை பூக்கும் முகத்தோடு, ஒவ்வொரு நாளும் மாணவர்களை எதிர்கொள்ளுங்கள் உங்கள் முக மலர்ச்சியே மாணவர்களுக்கு முழு வளர்ச்சியை கொடுக்கும்.

❖ நீங்கள் அவர்களின் மீது அக்கறை கொண்டவராக இருந்தால் மட்டும் போதும், நீங்கள் நினைத்த கல்வி மற்றும் நடத்தை மாற்றத்தை மாணவர்களிடம் ஏற்படுத்த முடியும்.

❖ வகுப்பறையை கவித்துவமாய் மாற்றும் ஒவ்வொரு ஆசிரியரும் நல்லாசிரியர் மட்டுமல்ல மாணவர்களின் “கனவு ஆசிரியர்” ஆகவும் மாறுவார் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

❖ இன்றைய ஆசிரியர் தின விழாவில் பெருமைக்குரிய டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது பெற்ற அனைத்து ஆசிரியர்களுக்கும்எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ விருது தருவதும் – பெறுவதும் ஒருவரை மேன்மேலும் ஊக்கப்படுத்துவதற்காகவே.

❖ விருது பெற்ற ஆசிரியர்களின் சிறப்பான பணியை அனைத்து ஆசிரியர்களும் பின்பற்றி மாணவச் செல்வங்களைச் சிறப்படையச் செய்து வருங்காலங்களில் விருது பெற வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் புகழ். காலத்தால் அழியாத செல்வம் கல்விச் செல்வம். இறுதிவரை நம்மோடு இருக்கின்ற ஒரே செல்வம் கல்விச் செல்வம் ஒன்றுதான். அப்படிப்பட்ட கல்விச் செல்வத்தை மாணவர்களுக்கு கற்பிக்கக்கூடிய நல்லாசிரியர் விருது பெற்றிருக்கின்ற அத்தனை ஆசிரியர் பெருமக்களையும் வாழ்த்தி வணங்கி விடைபெறுகின்றேன்.

நன்றி!

வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 5.9.2017 அன்று*
சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற
ஆசிரியர் தின விழாவில் ஆற்றிய உரை.

நீதித்துறையின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றும் உணர்வுள்ள அரசு!

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, இவ்விழாவிற்கு தலைமையேற்றிருக்கும் மாண்புமிகு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி, நீதியரசர் திரு. தீபக் மிஸ்ரா அவர்களே!

மத்திய அரசின் மாண்புமிகு சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் திரு. ரவிசங்கர் பிரசாத் அவர்களே!

மாண்புமிகு உச்சநீதிமன்ற நீதிபதி நீதியரசர் திரு. சு.மு.அகர்வால் அவர்களே!

மாண்புமிகு உச்சநீதிமன்ற நீதிபதி நீதியரசர் திருமதி R.பானுமதி அவர்களே!

மாண்புமிகு உச்சநீதிமன்ற நீதிபதி நீதியரசர் திரு. சஞ்ஜெய் கிஷன் கவுல் அவர்களே!

சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி நீதியரசர் குமாரி இந்திரா பானர்ஜி அவர்களே!

வரவேற்புரைநிகழ்த்திய சென்னை உயர்நீதிமன்றநீதிபதிநீதியரசர் திரு. எஸ். மணிக்குமார் அவர்களே!

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி நீதியரசர் திரு ஹுலுவாடி G. ரமேஷ் அவர்களே!

நன்றியுரை நிகழ்த்த உள்ள சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி நீதியரசர் திரு G. செல்வம் அவர்களே!

மரியாதைக்குரிய இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர் திரு. K.K. வேணுகோபால் அவர்களே!

மாண்புமிகு சட்டம்,நீதிமன்றங்கள் மற்றும் சிறைத்துறை அமைச்சர் திரு. சி.வி. சண்முகம் அவர்களே!

மரியாதைக்குரிய தமிழக அரசின் தலைமை வழக்குரைஞர் திரு. விஜய் நாராயன் அவர்களே!

அரசு வழக்கறிஞர்களே! அனைத்து வழக்கறிஞர் சங்கங்களின் தலைவர்களே! வழக்கறிஞர்களே!

உயர் நீதிமன்ற அலுவலர்களே!

பிற மாநிலத்திலிருந்து வருகை தந்துள்ள உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்களே

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை உயர்நீதிமன்ற பாரம்பரிய கட்டடத்தின் 125வது ஆண்டு விழாவில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

நீதி என்பது மக்களுக்கு அரசியலமைப்பு சாசனம் அளிக்கும் உரிமை. பொதுமக்கள் நம்பிக்கையின் இருப்பிடம் நீதித்துறை.

நமது நாட்டின் நீதி முறைகள் உலகத்திலேயே பழமையானவை. அதுமட்டுமல்லாமல் அது ஒருவரால் ஒரே நாளில் உருவாக்கப்பட்டது அல்ல. எண்ணற்ற திட்டங்கள், தலைமுறை தலைமுறையாகமக்களிடம் காணப்பட்ட பொறுமை ஆகியவற்றை மூலதனமாக கொண்டு தெளிவான திட்டமிடுதலாலும், பலரின் பெருமுயற்சியினாலும் ஏற்பட்டது.

கடந்த சில நூற்றாண்டுகளாக உலகம் முழுவதும் இயங்கிய சட்ட அமைப்புகளால் உருவான நன்முறைகளை உள்வாங்கி இத்துறையானது தன்னைத்தானே மாற்றிக் கொண்டு வளர்ந்து வருகிறது.

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் 'The Indian High Courts Act 1861' அதாவது இந்திய உயர்நீதிமன்றங்களின் சட்டம் 1861 என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டு, விக்டோரியா மகாராணியால் வெளியிடப்பட்ட சாசனத்தின் அடிப்படையில் மெட்ராஸ் உயர்நீதிமன்றம் 1862 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

இந்த உயர்நீதிமன்றம் ஆந்திரா, கேரளா பகுதிகளையும் உள்ளடக்கியதாக இருந்ததால் அப்போதைய மெட்ராஸ் பிரசிடென்ஸி முழுமைக்கும் இது High Court of Judicature at Madras என உயர்நீதிமன்றம் அமைந்துள்ள இடத்தை குறிக்கும் வகையில் பெயரிடப்பட்டது. தற்போதைய சென்னை உயர்நீதிமன்ற கட்டடத்துக்கு முன் உள்ள கொய்யா தோப்பு (ஜார்ஜ் டவுன்) என்ற இடத்தில்தான் சென்னை உயர்நீதிமன்றம் இயங்கி வந்தது.

பின்னர் விக்டோரியா மகாராணி ஒப்புதல் அளித்த பின்புதான் தற்போதைய உயர்நீதிமன்றக் கட்டடம் கட்டப்பட்டது. இந்தக்

கட்டடம் 12 இலட்சத்து 98 ஆயிரத்து 163 ரூபாய் செலவில் இந்தோ–சார்செனிக் முறையில் 1892ல் ஹென்றி இர்வின் என்பவரின் வழிகாட்டுதலின்படி கட்டப்பட்டது. இந்தக் கட்டடம் 1892ஆம் ஆண்டு ஜுலை 12 ஆம் நாள் தொடங்கப்பட்டது. இந்தியாவிலேயே சென்னை உயர்நீதிமன்றக் கட்டடம்தான் மிகச் சிறந்தது என அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கட்டடக்கலையின் சிறந்த உதாரணமாக இந்தக் கட்டடம் திகழ்கிறது. அழகான வண்ணம் தீட்டப்பட்டகட்டடத்தின் கூரைகளும் வண்ணக் கண்ணாடிகள் பொதிந்த கதவுகளும் மிக்க கலைநயத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு மிக உயரமான மாடகோபுரத்தில் கலங்கரை விளக்கம் செயல்பட்டு வந்தது. பின்னர் இந்தக் கலங்கரை விளக்கம் மெரினா கடற்கரைக்கு மாற்றப்பட்டது.

சென்னை உயர்நீதிமன்றம் பாரபட்சமின்றி நீதி வழங்கும் அமைப்பாக இன்று வரை செயல்பட்டுக் கொண்டு வருவது மிகவும் பெருமைக்குரிய விஷயமாகும். நீதியின் வரலாறு, கட்டடக்கலை, சட்ட சாஸ்திரங்களின் பாரம்பரியம் என்ற மூன்று பெருமைகளை உள்ளடக்கியது சென்னை உயர்நீதிமன்றம் என்றால் அது மிகையாகாது.

இந்திய அரசியலமைப்பில் நீதித்துறை, ஆட்சித்துறை, சட்டமன்றம் ஆகிய மூன்றும் தங்கள் எல்லைக்குள் சுதந்திரமாக செயல்பட வேண்டும். அப்போதுதான் பொதுமக்கள் அமைதியுடனும், மகிழ்ச்சியுடனும் வாழமுடியும். நமது மாநிலத்தைப் பொறுத்தவரை இம்மூன்று பிரிவுகளும் சுதந்திரமாக செயல்படுகின்றன என்பதை நான் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

விரைவாக நீதி கிடைக்கச் செய்வதைக் கருத்தில் கொண்டு, உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பணியாளர் உள்ளிட்ட அனைத்து

வசதிகளையும் நீதிமன்றங்களின் தேவைகளுக்கு உடனுக்குடன் நிறைவேற்றும் உணர்வு கொண்ட அரசாக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் அம்மா அரசும் செயல்பட்டு வருகிறது என்பதை பெருமிதத்துடன் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை கட்டடங்கள் கட்டுவதற்கு 56 கோடியே 34 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

அருங்காட்சியகம் மற்றும் கலையரங்கம் அமைப்பதற்கு 10 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 100 கோடி ரூபாய் செலவில் ஸ்ரீரங்கத்தில் தேசிய சட்டப்பள்ளி துவக்கப்பட்டுள்ளது. மாற்றுத் தீர்வு மையம் உருவாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு 2011–2012 முதல் 2016–2017 வரை ஆறு ஆண்டுகளில் மாவட்டம் மற்றும் கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள், சார்பு நீதிமன்றங்கள், மகளிர் நீதிமன்றங்கள் உள்ளிட்ட 33 வகையான 419 புதிய நீதிமன்றங்களை ஏற்படுத்த ஒப்புதல் வழங்கியுள்ளது என்பதை இங்கே பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

மேலும் மாண்புமிகு அம்மா அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தின் பெயரை தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என்று மாற்றியமைப்பதற்கு மத்திய அரசை வலியுறுத்தி சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டது.

குறைந்த செலவில் தரமான சட்டக்கல்வியை மாநிலம் முழுவதும் உள்ள மாணவர்களுக்கு வழங்கிட வசதியாக விழுப்புரம், தருமபுரி,

இராமநாதபுரம் ஆகிய நகரங்களில் புதியதாக சட்டக் கல்லூரி தற்போது இயங்கி வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள் வழக்கறிஞர்கள் தங்கள் சேமநல நிதியை உயர்த்தி வழங்க விடுத்த கோரிக்கையினை ஏற்று, சேமநல நிதியை 2 இலட்சம் ரூபாயிலிருந்து 5.25 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இதை 7 இலட்சம் ரூபாயாக சேமநல நிதி உயர்த்தி வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனை பெறுவதற்கு சேவை கால வரம்பு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களிலுள்ள உள்ள நீதிமன்றங்களுக்கு புதிய கட்டடங்கள், மாண்புமிகு நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் உட்பட நீதித் துறையின் உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாட்டிற்காக மாண்புமிகு அம்மாவின் அரசினால்பல்வேறு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அவற்றில் 47 நீதிமன்றக் கட்டடங்களில் 185 நீதிமன்ற அரங்கங்கள் கட்டும் பணிகளில், 21 கட்டடங்களில் 75 நீதிமன்ற அரங்கங்கள் கட்டி முடிக்கப்பட்டன 20 கட்டடங்களில் 83 நீதிமன்ற அரங்கங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 6 கட்டடங்களில் 27 நீதிமன்ற அரங்கங்கள் கட்டும் பணிகள் தொடங்கப்பட உள்ளன.

75 கோடியே 63 இலட்சம் மதிப்பீட்டில் நீதிபதிகளுக்கான 32 கட்டடங்களில், 107 குடியிருப்புகள் கட்டும் பணிகளில், 5 கட்டடங்களில் 11 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டன. 22 கட்டடங்களில் 67 குடியிருப்புகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 5 கட்டடங்களில் 29 குடியிருப்புகள் கட்டும்

பணிகள் தொடங்கப்பட உள்ளன. ஆக மொத்தம் 2011–2012 ஆம் ஆண்டு முதல் 2016–2017 ஆம் ஆண்டுவரைஇப்பணிகளுக்காக 883 கோடியே 61 இலட்சம் ரூபாய் நிதி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதி ஆண்டில் 51 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2 கட்டடங்களில் 20 நீதிமன்ற அரங்கங்கள் கட்டும் பணிகள் தொடங்கப்பட உள்ளன. மேலும் 16 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 26 குடியிருப்புகள் கட்டும் பணிகளும் தொடங்கப்பட உள்ளன.

நீதித்துறையின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றும் உணர்வுள்ள அரசாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து செயல்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாற்று சிறப்புமிக்க சென்னை உயர்நீதிமன்றத்தில் பல வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்புகளை வழங்கி நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளது. இந்த இனிய நன்னாளில், இவ்வரசு சிறப்புமிக்க விழாவில் கலந்து கொள்வதில் நான் பாக்கியமாக பெருமையாக கருதி விடைபெறுகிறேன்.

நன்றி

வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ***எடப்பாடி மு.பழனிசாமி*** *அவர்கள் 16.09.2017 அன்று சென்னை உயர்நீதிமன்ற பாரம்பரிய கட்டடத்தின் 125–வது ஆண்டு விழாவில் ஆற்றிய உரை.*

அமைதியையும், ஆனந்தத்தையும் ஒரு சேரக் கொடுப்பது கல்வி மட்டுமே!

மாண்புமிகு இதயதெய்வம் அம்மா தெய்வத்தை வணங்கி, ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணை வழங்க இருக்கின்ற சிறப்பான, எழுச்சியான இந்த நிகழ்ச்சிக்கு வரவேற்புரையாற்றிய பள்ளிக் கல்வித்துறையின் முதன்மைச் செயலாளர் மரியாதைக்குரிய திரு.பிரதீப் யாதவ் அவர்களே,

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே சிறப்பான கருத்தை உங்களிடத்திலே வழங்கி அமர்ந்திருக்கின்ற தமிழ்நாடு துணை முதலமைச்சர் மாண்புமிகு ஓ.பன்னீர்செல்வம் அவர்களே,

இந்த நிகழ்ச்சியிலே சிறப்பான கருத்துக்கள், இந்த பள்ளிக்கல்வித்துறை எப்படி இருக்கவேண்டுமென்று முன்மாதிரியாக அதிரடி நடவடிக்கை எடுத்து மக்கள் போற்றுகின்ற அளவிற்கு, கல்வியாளர்கள் போற்றுகின்ற அளவிற்கு, நம்முடைய மாணவ, மாணவியர்கள் எதிர்காலம் சிறக்க, செழிக்க சிறந்த கல்வி கிடைக்கவேண்டுமென்று அற்புதமான திட்டங்களை அறிவித்து, அதற்கு வடிவம் கொடுத்து, சிறப்பு

சேர்க்கின்ற மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. கே.செங்கோட்டையன் அவர்களே, இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்களே மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்றிருக்கின்ற அமைச்சர் பெருமக்களே,

அரசு தலைமை கொறடா அவர்களே,

இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்றிருக்கின்ற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்களே,

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற முன்னாள் அமைச்சர் பெருமக்களே, முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

நன்றியுரை ஆற்றவுள்ள பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர் இளங்கோவன் அவர்களே,

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் இயக்குநர் முனைவர் டி.ஜெகநாதன் அவர்களே,

பள்ளிக்கல்வித் துறையின் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த இயக்குநர்களே!

மற்றும் கல்வித் துறையைச் சார்ந்த அலுவலர்களே! கல்விச்செல்வத்தை கொடுக்கும் ஆசிரிய பெருமக்களே!

பணிநியமனஆணை பெற உள்ள ஆசிரியர்களே!

பத்திரிக்கை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்த நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு நாட்டிலும் அமைதி நிலவ வேண்டும். ஒவ்வொரு நாட்டிலும் அமைதி நிலவ வேண்டுமானால் அந்நாட்டு மக்களின் மனங்களில் அமைதியும், ஆனந்தமும் நிலவ வேண்டும்.

அந்த அமைதியையும், ஆனந்தத்தையும் ஒருசேரக் கொடுப்பது கல்வி மட்டுமே. அத்தகைய கல்வியை அளிக்க வல்லவர்கள் ஆசிரியபெருமக்களாகிய நீங்கள் தான். ஆக உலகத்தில் அமைதியை நிலைநாட்ட, நல்ல குடிமக்களை உருவாக்குபவர்கள் ஆசிரியர்களே. அந்த வகையில் உலக அமைதி தினமாகக் கடைப்பிடிக்கப்படுகின்ற செப்டம்பர் 21ஆம் தேதியான இன்று ஆசிரியர்களுக்கான பணிநியமன ஆணை வழங்கும் இவ்விழா அமைந்திருப்பது மிகச் சிறப்பானதாகும்.

இன்றைய தினம் பணிநியமன ஆணை பெறும் நீங்கள் அனைவரும், அதாவது 2 ஆயிரத்து 373 ஆசிரியர்களும், ஒளிவு மறைவற்ற வகையில் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்பட்ட போட்டித் தேர்வுகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றுள்ளீர்கள்.

உங்கள் அனைவருக்கும், தமிழ்நாடு அரசின் சார்பாகவும், எனது சார்பாகவும் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் 15.05.2013 அன்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், “மனித வாழ்க்கை வளம் பெறுவதற்கும், சமுதாய மேம்பாட்டிற்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் அடித்தளமாக விளங்குவது வற்றாத செல்வமாம் கல்வி என்பதை உணர்ந்த எனது தலைமையிலான அரசு தமிழ்நாட்டில் ஒரு கல்வி புரட்சியையே ஏற்படுத்தி உள்ளது”, என்று கூறியதை இங்கு நான் நினைவு படுத்த விரும்புகிறேன்.

அத்தகைய மாற்றத்தின் தொடர்ச்சியாகவே மாண்புமிகு அம்மாவின் அரசு பதவியேற்றதிலிருந்து, கல்வித்துறைக்கு அதிக

முக்கியத்துவம் கொடுத்து, மாணவர்களுக்கு நலம் பயக்கும் வகையில் பல அரிய திட்டங்களை உருவாக்கிக் கொண்டு வருகிறது.

மாணவர்களின் வீடுகளில் இருந்து பள்ளிகள் தொலைவில் இருப்பதால் ஒரு குழந்தையின் கல்வி கற்கும் கனவு தொலைந்து விடக் கூடாது என்பதற்காகவும், அவர்களின் வாழ்க்கை கல்வி இல்லா களர் நிலமாக மாறிவிடக் கூடாது என்பதற்காகவும் தமிழ் நாட்டில் இதுவரை கடந்த ஆறு ஆண்டுகளில் 227 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 116 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 829 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 402 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டு மாணவர்களின் வளமான வாழ்விற்கு வழி வகுத்துக் கொடுத்துள்ளோம்.

பள்ளிகளில் அவ்வப்போது ஏற்படும் ஆசிரியர் காலிப் பணியிடங்களால் மாணவர்களின் கற்றல் தடைபடக் கூடாது என்பதால் பள்ளிகளில் ஆசிரியர் பணியிடங்களை உடனுக்குடன் நிரப்ப வேண்டியதன் அவசியத்தை மாண்புமிகு அம்மாவின் அரசு நன்கு உணர்ந்துள்ளது. ஆகவேதான், இதுவரை, கடந்த ஆறு ஆண்டுகளில், 40 ஆயிரத்து 433 முழுநேர ஆசிரியர்களும், 15 ஆயிரத்து 169 பகுதி நேர ஆசிரியர்களும் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், 4,362 ஆய்வக உதவியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இன்றைய தினம் 2 ஆயிரத்து 315 முதுகலை ஆசிரியர்களுக்கும், 58 சிறப்பாசிரியர்களுக்கும் பணிநியமன ஆணைகள் வழங்கப்பட உள்ளன. மாண்புமிகு அம்மாவின் வழி வந்த அரசு மாணவர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு செயல்பட்டு வருகிறது என்பதற்கு இதுவே தக்க சான்றாகும்.

இன்றைய தினத்தை, பள்ளிக் கல்வித் துறையின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய தினமாக நான் பார்க்கின்றேன். ஏனென்று சொன்னால், தமிழ்நாட்டு கல்வித் துறை வரலாற்றிலேயே இதுவரை இல்லாத வகையில் முதல் முறையாக, கடவுளின் குழந்தைகளாய் போற்றிப் பாராட்டி நேசிக்கப்பட வேண்டிய சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான கல்வியை போதிக்க, 58 சிறப்பு ஆசிரியர்களை மாண்புமிகு அம்மாவின் அரசு நியமித்துள்ளது என்பதை இந்நேரத்தில் பெருமையுடன் கூறிக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

குழந்தைகளுக்கான உள்ளடங்கிய கல்வியை, அதாவது "Inclusive Education"ஐ செயல்படுத்துவதில் இந்திய அளவில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடி மாநிலமாக செயல்பட்டுக் கொண்டிருந்தாலும், அதன் தரத்தை மேலும் அதிகரிக்க, அவர்களுக்கு கல்வி போதிக்க, சிறப்பாசிரியர்கள் நியமிக்கப்படுவது கல்வித் துறை வரலாற்றில் ஒரு மைல்கல் என்பேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பதவியேற்ற 2011–2012ஆம் கல்வி ஆண்டிலிருந்து 2017–2018ஆம் ஆண்டு ஒதுக்கீட்டையும் சேர்த்து, நம் பள்ளிக் கல்வித் துறைக்கான இந்நிதி ஒதுக்கீடு 1 இலட்சத்து 37 ஆயிரத்து 261 கோடி ரூபாயினை எட்டியுள்ளது என்பதை இந்த தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

எந்த துறைக்கும் இல்லாத அளவிற்கு இந்த கல்வித்துறைக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்த அரசு அம்மாவினுடைய அரசு என்பதை இந்த நேரத்தில் நினைவு கூர கடமைப்பட்டுள்ளேன்.

இன்றைய மாண்புமிகு அம்மாவின் வழி வந்த தமிழ்நாடு அரசானது, கல்வியின் முக்கியத்துவத்தையும், மேன்மையையும் அறிந்துள்ளதன் காரணமாகத்தான் பள்ளிக் கல்வித் துறைக்கு 2017–2018ஆம் ஆண்டிற்கான மொத்த நிதி ஒதுக்கீடாக 26 ஆயிரத்து 932 கோடியே 31 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாடு புத்தாக்க முயற்சிக்காக 48 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதனை கூறிக்கொள்வதில் பெருமை அடைகிறேன். நம் அரசுப் பள்ளிகளின் தரத்தினை இன்னும் ஒருபடி மேல் ஏற்றும் வகையில் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உயர் தொழில்நுட்பக் கணினி ஆய்வகங்கள் (Hitech Labs) ஏற்படுத்தப்படவுள்ளன. இதற்கென 437 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3 ஆயிரத்து 90 உயர்நிலைப் பள்ளிகளுக்கு தலா 10 கணினிகளும், 2 ஆயிரத்து 939 மேல்நிலைப் பள்ளிகளுக்கு தலா 20 கணினிகளும் அதனுடன் தொடர்புடைய இதர சாதனங்களும் வழங்கப்பட உள்ளது.

“சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்” என்ற மகாகவி பாரதியின் வார்த்தைகளுக்கு உயிரூட்டும் வகையில் அறிவியல், தொழில்நுட்பம், கலை மற்றும் இலக்கியம் ஆகிய துறைகளில் தனித்திறமையோடு சிறந்து விளங்கும் மாணவர்களை தேர்ந்தெடுத்து அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு அதே துறைகளில் மிகுந்த முன்னேற்றம் அடைந்து விளங்கும் மேலை நாடுகளுக்கு கல்விப் பயணம் மேற்கொள்ள ஆண்டுதோறும் அரசுப் பள்ளிகளில் பயிலும் 100 மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட உள்ளது.

இந்தியாவின் வளமான எதிர்காலம் இன்றைய வகுப்பறையில் உள்ளது என்பதை நன்கு உணர்ந்த மாண்புமிகு அம்மாவின் அரசு மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு 14 வகையான மாணவர் நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

சத்துணவில் சத்தான 13 வகையான கலவைச்சாதம், இவை தவிர, நிற்றலைத் தடுக்க சிறப்பு ஊக்கத் தொகை, வருவாய் ஈட்டும் குடும்பத்தலைவரை இழந்த குழந்தைகளுக்கு 75,000 ரூபாய் நிதியுதவி, மேலும் 2013–2014 ஆம் ஆண்டு முதல் அரசு குடியரசு தின தடகளப் போட்டிகள், குடியரசு தினப் போட்டிகள், பாரதியார் தின

போட்டிகள் மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகள் நடத்திட 10 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்திருக்கின்றது.

மாண்புமிகு அம்மா வழியில் செயல்படும்அம்மாவின் அரசும், பள்ளிக்கல்வித் துறையின் மேம்பாட்டினை உறுதி செய்யும் வகையில்பல முன்னோடி திட்டங்களை செயல்படுத்த உள்ளது.

மத்திய அரசால் வழங்கப்பட்ட தூய்மை பள்ளிகள் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு விருது பெற்றுள்ளது. அவற்றில் சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மாணவர்களின் கலை, இலக்கியத் திறன்களை வெளிக் கொணரவும், தனித்திறன்களை வளர்க்கவும், தமிழர்தம் பாரம்பரிய கலை மற்றும் பண்பாடு மரபுகளைப் போற்றிடும் வகையிலும், கலை, இலக்கியம், நுண்கலை உள்ளிட்ட 150 வகைப் பிரிவுகளில் ஒரு மாபெரும் மாணவர் கலைத் திருவிழா இந்த ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பள்ளிகளில் மாணவர் சேர்க்கை அதிகரித்தல், கற்றல் திறனை மேம்படுத்துதல், புதுமையான கற்பித்தல் முறைகளைப் பின்பற்றுதல், அனைத்து அடிப்படை வசதிகளையும் நிறைவு செய்தல், பள்ளி மேலாண்மைக் குழுவுடன் ஒருங்கிணைந்து பள்ளி மற்றும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு சிறப்பாகச் செயல்படும் பள்ளிகளைக் கண்டறிந்து “புதுமைப்பள்ளி“ என்ற விருது வழங்கப்படவுள்ளது.

ஒரு மாவட்டத்திற்கு தலா 4 பள்ளிகளுக்கு இவ்விருது வழங்கப்படும். தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குத் தலா ஒரு இலட்சம் ரூபாயும், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும் வழங்கப்படவுள்ளது.

5 ஆயிரத்து 639 அரசு பெண்கள் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு நாப்கின் வழங்கும் இயந்திரம் மற்றும் எரியூட்டி

இயந்திரம் 22 கோடியே 56 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழக பள்ளிக் கல்வித்துறை, இவ்வாண்டு முதல் சிறந்த முறையில் கணினியைப் பயன்படுத்தி மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கும் சிறந்த ஆசிரியர், கல்வி இணைச் செயல்பாடுகளில் சிறந்து விளங்கும் ஆசிரியர்களைக் கண்டறிந்து ஒரு மாவட்டத்திற்கு தலா 6 ஆசிரியர்களைத் தேர்வு செய்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் "கனவு ஆசிரியர்" என்ற விருதும், 10 ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகையும் இந்த ஆண்டு முதல் வழங்கப்படும்.

கிராமப்புற மாணவர்களுக்கு கணினி மூலமாக பாடங்களை பயிற்றுவிக்கும் வகையில் முதற் கட்டமாக 3,000 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஒரு பள்ளிக்கு ஓர் அறிவுத் திறன் வகுப்பறை, அதாவது SMART Class Room ஏற்படுத்தப்படும்.

ஒவ்வொரு பள்ளிக்கும் 2 இலட்சம் ரூபாய் வீதம் 60 கோடி ரூபாய் இதற்கென செலவிடப்படும். எதிர்வரும் ஆண்டுகளில் 1 முதல் 12 வகுப்புகளுக்கான கலைத் திட்டம், பாடத் திட்டம், பாடநூல்கள் இந்திய அளவில் தரம் வாய்ந்ததாக, தேசிய அளவில் நடைபெறும் எத்தகைய போட்டித் தேர்வுகளையும் பயமின்றி எதிர்கொள்ளும் வகையில் மாற்றுவதற்கான செயல்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

❖ அவ்வகையில் 2018 – 2019 கல்வியாண்டில் 1, 6, 9 மற்றும் 11ஆம் வகுப்புகளுக்கும்,

❖ 2019 – 2020 கல்வியாண்டில் 2, 7, 10 மற்றும் 12ஆம் வகுப்புகளுக்கும்,

❖ 2020 – 2021 கல்வியாண்டில் 3, 4, 5 மற்றும் 8ஆம் வகுப்புகளுக்கும் பாடத்திட்டங்கள் மாற்றப்படவுள்ளன.

மேலும் அனைத்துப் பள்ளி மாணவர்களின் திறனை வளர்ப்பதற்கும், மனஅமைதி பெறுவதற்கும், உடல் வலிமை பெறுவதற்கும் யோகா பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். ஆகவே, எல்லாப் பள்ளிகளிலும் யோகா வகுப்புகள் தொடங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இத்திட்டங்களெல்லாம் எவ்வித தொய்வும் இன்றி சிறப்பாகச் செயல்பட பள்ளிகளில் போதுமான ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேயே அப் பணியிடங்கள் விரைந்து நிரப்பப்படுகின்றன.

இன்று பணிநியமனம் பெற்றுள்ள ஆசிரியர்களுக்கு ஒன்றை மட்டும் அழுத்தமாக சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். நீங்கள் கல்வி கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்கள் மட்டுமல்ல, உலகத்தின் உன்னதமான அறிவுத்திறன் கொண்ட குழந்தைகளை நிர்வகிக்கும் நிருவாகிகள் என்பதையும், ஒழுக்கம், நன்னடத்தை, காலம் தவறாமை போன்ற நல்ல பண்புகளையும் கற்றுக் கொடுத்து அவர்களின் முழுமையான வளர்ச்சியில் அக்கறை கொண்ட பெற்றோரே நீங்கள் தான் என்பதையும் நினைவில் கொண்டு செயல்படுங்கள்.

நீங்கள் சொல்வதே வேத வாக்கு என்று எண்ணி, இன்முகத்தோடு உங்களிடம் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் அந்த ஏதுமறியா இளம் சிறார்களின் புன்முறுவலில், புன்னகையில் இறைவன் இருக்கிறான் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டார் பேரறிஞர் அண்ணா. உங்களிடம் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் அந்த ஏதுமறியா சிறார்களின் சிரிப்பில் நீங்கள் இறைவனைக் காணுங்கள்.

நீங்கள் பள்ளிக்குச் சென்று கற்பிக்கும் பொழுது ஒவ்வொரு பாடப்பகுதியையும் எவ்வாறு கற்றுக் கொடுத்தால்

எளிதாக இருக்கும், அதற்காக எத்தகைய உபகரணங்களைப் பயன்படுத்தினால் மாணவருக்குஎளிதில் புரியவைக்கக் கூடியதாக இருக்கும் என்பதையெல்லாம் யோசித்து திட்டமிட்ட பின், உங்கள் வகுப்பறைக்குள் நுழைந்தீர்கள் என்றால் மாணவர்களுக்குக் கற்றல் சுமையாக இல்லாமல், சுவையாக இருக்கும்.

இந்நேரத்தில் ஓர் ஆசிரியர் பணி எவ்வளவு உன்னதமான, பெருமை மிக்க பணி என்பதை நினைக்கும் பொழுது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

முன்னொரு காலத்தில் ஒரு பேரரசருக்கு ஆண்மகன் பிறக்கின்றான். அந்த தருணத்தில் தன்னுடைய குடிமக்களுக்கெல்லாம் பொன்னையும் பொருளையும் பேரரசர் வாரி வழங்குகிறார். அதைப்பார்த்த அமைச்சர் ஒருவர், "தனக்கு ஆண் மகன் பிறந்த மகிழ்ச்சியை நம் பேரரசர் எவ்வளவு சிறப்பாகக் கொண்டாடி வருகிறார் என்பதைப் பாருங்கள்" என்று கூறுகிறார்.

உடனே, அதற்கு பேரரசர், "அமைச்சரே! நான் பொன்னையும் பொருளையும் மக்களுக்கு வழங்கியதற்குக் காரணம், எனக்கு ஆண் மகன் பிறந்துவிட்டான் என்ற மகிழ்ச்சியினால் அல்ல; என் மகன் என் குருநாதர் வாழுகின்ற காலத்திலேயே பிறந்து விட்டானே என்ற மகிழ்ச்சியிலேயே நான் மக்களுக்கு பொன்னையும் பொருளையும் வழங்கினேன். என் ஆசிரியர் என்னைப் போலவே என் மகனையும் ஒரு பேரரசனாக மாற்றுவார் என்ற மகிழ்ச்சியிலேயே வழங்கினேன்" என்றார்.

அத்தகைய சிறப்பு வாய்ந்தது ஆசிரியப்பணி. அர்சுனனுக்கு ஒரு துரோணாச்சாரியார் போல, விவேகானந்தருக்கு ஒரு ராமகிருஷ்ண பரமஹம்சரைப் போல, உங்களிடம் உள்ள ஒவ்வொரு மாணவருக்கும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் ஊட்டி கல்வி வளங்களை கசடற கற்பியுங்கள்.

“உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல் அனைத்தே புலவர் தொழில்”

என்ற குறள் வரிகளுக்கு ஏற்ப மீண்டும் ஒருமுறை இந்த ஆசிரியரை எங்கு காண்போம், எப்போது காண்போம் என்று மாணவர்கள் எதிர்பார்க்கும் வகையில் உங்கள் பணி அமைய வேண்டும்.

“ஆசிரியர் பணி என்பது வெறும் கல்வியை மட்டும் போதிப்பதல்ல. ஒழுக்கத்தை, பண்பை, பொது அறிவை, ஆன்மீகத்தை மாணவ மாணவியரிடையே எடுத்துச் சொல்லும் பணி ஆசிரியர் பணி. வருங்கால சந்ததியினருக்கு வழிகாட்டும் பணியை நீங்கள் மேற்கொள்ள இருக்கிறீர்கள். கரையாக் கல்விச் செல்வத்தை கற்றுக் கொடுக்க இருக்கிறீர்கள். எந்த ஒரு தொழிலிலும், தன்னிடம் வேலை செய்பவர் தன்னைவிட வளர்ச்சி பெறுவதை எந்த முதலாளியும் விரும்ப மாட்டார்.

ஆனால், தன்னிடம் பயிலும் மாணவர் புகழ் பெறுவதை, அறிஞர் ஆவதை ஆசிரியப் பெருமக்கள் கண்டு இன்புறுவர். அப்படிப்பட்ட உன்னதமான பணி ஆசிரியர் பணி. மாணவர்களின் ஆற்றலை வெளிப்படுத்தும் பணி ஆசிரியர் பணி. இப்படிப்பட்ட பொறுப்புள்ள பணியை நீங்கள் எல்லாம் திறம்பட மேற்கொண்டு அறிவுசார் சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

எந்தச் சவால்களையும் எதிர்கொள்ளக் கூடிய திறமையை மாணவர்களிடத்திலே உருவாக்க வேண்டும்” என்ற மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் வார்த்தைகளை சிரமேற்கொண்டு செயல்படுமாறு உங்களையெல்லாம் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

உங்கள் கடமையை, கண்ணியத்தோடும், சுயக் கட்டுப்பாட்டோடும், கருத்தோடும் செய்தால் நீங்களும்

மாணவர்களின் மனதில் என்றென்றும் வாழும் ஒரு நல்ல ஆசிரியராக மாறுவீர்கள் என்றும், இன்று புதிதாக பணி நியமனம் பெற்றிருக்கும் ஆசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் மீண்டும் ஒரு முறை எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு,

மாண்புமிகு துணை முதலமைச்சர் இங்கே அற்புதமான கருத்துக்களைச் சொன்னார்கள். ஆகவே, நீங்கள் உருவாக்குபவர்கள்தான் நல்ல அரசியல்வாதிகள் என்று சொன்னார்கள். அதுமட்டுமல்ல, அத்தனைபேரையும் உருவாக்கக்கூடியவர்கள் இங்கே அமர்ந்திருக்கின்ற ஆசிரியர் பெருமக்கள்தான். மருத்துவராக, இன்ஜினியராக, வழக்கறிஞராக, அரசியல்வாதியாக, அத்தனைபேரையும் உருவாக்கக்கூடிய அற்புதமான பணி ஆசிரியர் பணி, புனிதமான பணி ஆசிரியர் பணி, அந்த பணி ஆணையை நீங்கள் பெறுகின்றீர்கள். உங்கள் ஆசிரியர் பணி சிறக்க வாழ்த்துக்களை தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி!

வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 21.09.2017 அன்று*

சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா கலையரங்கத்தில்

நடைபெற்ற ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணை

வழங்கும் விழாவில் ஆற்றிய உரை..

சேலம் மாவட்டத்தில், ரூ.3 கோடி செலவில் ஆலயத்தின் நிலப்பரப்பில் புதிய திருமண மண்டபம்!

நஞ்சுண்டீஸ்வரர் ஆலயத்தினுடைய நிலப்பரப்பில் சுமார் 2.5 கோடியிலே புதிதாக திருமண மண்டபம் கட்டுகின்ற அடிக்கல் நாட்டு விழாவை தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருக்கின்ற மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே, இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு, சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேவூர் ராமச்சந்திரன் அவர்களே, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம் அவர்களே, முன்னாள் அமைச்சர், மேட்டூர் பகுதி சட்டப்பேரவை உறுப்பினர் திரு.செம்மலை அவர்களே, சேலம் மேற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜி.வெங்கடாசலம் அவர்களே,

சங்ககிரிசட்டமன்றஉறுப்பினர்திரு.எஸ்.ராஜா அவர்களே,ஓமலூர் சட்டப்பேரவை உறுப்பினர் திரு வெற்றிவேல் அவர்களே, வீரபாண்டி சட்டப்பேரவை உறுப்பினர் திருமதி மனோன்மணி அவர்களே, தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கித் தலைவர், சேலம் மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் திரு. இளங்கோ அவர்களே, ஆத்தூர் சட்டப்பேரவை உறுப்பினர் திரு சின்னத்தம்பி அவர்களே, முன்னாள் சேர்மேன் திரு. மாதேஷ் அவர்களே, திரு. கதிரேசன் அவர்களே,

திரு.மணி அவர்களே, எடப்பாடி நகரமன்றத் தலைவர் திரு. மாரியப்பன் அவர்களே, முன்னாள் எடப்பாடி நகரமன்ற துணைத்தலைவர் திரு.ராமன் அவர்களே, மற்றும் மேடையிலே வீற்றிருக்கின்ற அரசு உயரதிகாரிகளே, வருகை தந்திருக்கின்ற கழகத்தின் பல்வேறு பொறுப்புகளில் இருக்கின்ற நிருவாகிகளே, பெரியோர்களே, தாய்மார்களே, கழக உடன்பிறப்புகளே,ஊடக மற்றும் பத்திரிகை நண்பர்களே,

அத்தனை பேருக்கும் நன்றியைத் தெரிவித்து, இன்றைக்கு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்திலேயே இங்கே இருக்கின்ற பொதுமக்கள், கழக நிருவாகிகள் எல்லாம், நஞ்சுண்டீஸ்வரர் திருக்கோயிலினுடைய ஆலயத்திற்கு சொந்தமான இடத்தில் திருமண மண்டபம் கட்டிக் கொடுத்தால், இப்பகுதி மக்களின் இங்கே திருமண நிகழ்ச்சி நடக்கின்றபொழுது, இந்த மண்டபம் மிகுந்த பயனளிக்கும் என்று கோரிக்கை வைத்தார்கள். புரட்சித்தலைவி அம்மாவிடத்திலே நான் இதை சொன்னவுடன், 2015–2016 ஆம் ஆண்டே இதற்கு நிதி ஒதுக்கித் தந்தார்கள். ஆனால், இந்த நிதி ஒதுக்கீடு போதாது, பெரிய மண்டபாக கட்டவேண்டும் என்று கோரிக்கை வைத்து, இது பரிசீலனையில் இருந்து கொண்டிருந்தது. இப்பொழுது இந்த மண்டபத்திற்காக, தமிழ்நாடு அரசு வருவாய்த் துறை சார்பாக 2.53 கோடி நிதி ஒதுக்கீடு செய்து,

அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. இங்கே அறநிலையத் துறையை சேர்ந்த அதிகாரிகள் மேலும் கூடுதலாக நிதி தேவை, சுற்றுச்சுவர் கட்டவேண்டும், மேலே அறைகள் கட்டவேண்டும், கூடுதலாக நிதி ஒதுக்கீடு தரவேண்டும், மேலும் **50** இலட்சம் வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அறநிலையத் துறை அமைச்சர் அவர்களை கலந்து பேசி, **50** இலட்சம் ரூபாய் கூடுதலாக ஒதுக்கப்பட்டு, **3** கோடி ரூபாயில் பிரம்மாண்டமாக திருமண மண்டபம் இந்த இடத்திலே கட்டப்படும். இந்த மண்டபம் கிட்டத்தட்ட, ஓராண்டில் கட்டி முடிக்கப்படும், இந்தப் பகுதி மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த ஆலயத்தை புதுப்பிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அந்தக் கோரிக்கையையும் அம்மாவிடத்தில் சொன்னவுடன், அம்மா மனமுவந்து இதற்கு தேவையான நிதியை ஒதுக்கீடு செய்து இன்றைக்கு புதுப்பிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பொது மக்கள் வேண்டுகோளுக்கிணங்க, நஞ்சுண்டீஸ்வரர் ஆலயம் அருகில், இருக்கின்ற முருகன் கோயிலுக்கு, எடப்பாடியில், முருக பக்தர் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, கழகத்தின் சார்பாக அனைவரும் சேர்ந்து அங்கே முருகப் பெருமாள் எழுந்தருளியுள்ள மண்டபத்திற்கு அழகான ஒரு கட்டடத்தை கட்டுவதற்கான பணிகள் எல்லாம் துவங்கப்பட்டு, விரைவிலே அந்த முருகப் பெருமானுடைய ஆலயம் கட்டி உங்களுடைய அன்போடு, ஆதரவோடு திறக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குப் பக்கத்தில் இருக்கின்ற ஆஞ்சநேயர் கோயிலையும் புதுப்பிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அதுவும் புதுப்பிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். எடப்பாடி நகரமே ஒரு மாற்றத்தை கண்டிருக்கின்றது. **2011**க்கு முன்பு, எடப்பாடி நகரம் எப்படி இருந்தது, **2011**க்குப் பிறகு,

புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, எப்படி எடப்பாடி நகரம் வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். நான் 2011 தேர்தலில், வீடுவீடாக எடப்பாடி மக்களை சந்தித்து வாக்கு சேகரிக்கும் பொழுது அவர்கள் வைத்த கோரிக்கைகள் குடிநீர் பிரச்சினை, வெள்ளாண்டிவலசு போகும்பொழுது, அங்கு இருக்கின்ற ஒரு தாய்மார் ஒரு பாட்டில் எடுத்து வந்து தண்ணீர் பிடித்து சுமாராகத்தான் தண்ணீர் கிடைத்துக் கொண்டிருக்கிறது. நீங்கள் வந்தவுடனேயே அம்மா அவர்களிடம் எடுத்துச் சொல்லி எங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டுமென்று இந்த எடப்பாடி நகர மக்கள் அத்தனை பேரும் கழக நிர்வாகிகள் மூலமாக கோரிக்கை வைத்தார்கள். அந்தக் கோரிக்கையை அப்படியே அம்மாவிடத்தில் சொன்னவுடனே, 20 கோடி ரூபாய் கொடுத்து, எடப்பாடி நகர மக்களுக்கு தனியாக குழாய் மூலமாக சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் அளித்திருக்கிறோம். இதெல்லாம் எந்த ஆட்சியிலும் செய்ய முடியாத சாதனை, இன்றைக்கு அம்மாவினுடைய அரசு செய்து கொடுத்திருக்கின்றது. ஆகவே, இன்றைக்கு அம்மா நம்மிடத்திலே இல்லாவிட்டாலும், அம்மா செய்த சாதனை, இந்த மக்கள் மனதிலே என்றும் நிலைத்து நிற்கும். இந்த திட்டம் அம்மா கொண்டு வந்த திட்டம் என்று அத்தனை பேரும் சொல்லுகின்ற அளவிற்கு, இன்றைக்கு அற்புதமான அந்தக் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டு, எடப்பாடி நகர மக்களுக்கு தங்குதடையில்லாமல் காவிரி தண்ணீரை அம்மா வழங்கிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். என்னவெல்லாம் நீங்கள் கேட்டீர்களோ, அத்தனையையும் அம்மா அவர்கள் செய்து கொடுத்திருக்கிறார்கள். நல்ல சாலை வசதி கேட்டீர்கள், செய்து கொடுத்தார்கள். நெடுஞ்சாலைத் துறை மூலமாக கோட்ட அலுவலகம் கேட்டீர்கள், அதையும் செய்து கொடுத்தார்கள். டிவிஷன் ஆபீஸ் மேட்டூரில் இருந்தது, அதையும் கேட்டீர்கள், அம்மா அதையும் கொடுத்தார்கள்.

வேளாண் அலுவலகம் கேட்டீர்கள், அதுவும் வந்திருக்கிறது. மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை திறக்க இருக்கிறார்கள். அம்மா பெட்ரோல் பங்க் இங்கே திறக்க இருக்கிறது. இங்கு பாலம் வேண்டுமென்று கேட்டீர்கள், உடனடியாக அம்மா ஒப்புதல் அளித்து பாலம் கட்டி, திறக்கப்பட்டிருக்கிறது. எடப்பாடி பின்தங்கிய பகுதியாக இருக்கிறது, எடப்பாடி நகருக்கு அழகு சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தீர்கள். அம்மாவிடத்தில் சொன்னவுடனே அதற்கு நிதி ஒதுக்கீடு செய்து அழகான நீரூற்றை எடப்பாடி நகரத்தின் நுழைவுவாயிலேயே கொடுத்தார்கள். இதுமட்டுமல்ல, அருகில் பார்க் இருக்கிறது, இதை அழகுபடுத்த வேண்டுமென்று கோரிக்கை வைத்தீர்கள், அதற்கும் நிதிஒதுக்கீடு செய்தவர் முதலமைச்சர் அம்மா அவர்கள். எடப்பாடி நகரத்திலுள்ள மருத்துவமனையை கூடுதல் வசதிகளுடன், கூடுதல் படுக்கை வசதிகள் வேண்டுமென்று கோரிக்கை வைத்தவுடன், 4 கோடி ரூபாய் கொடுத்து கட்டடம் கட்டி, அம்மாவினுடைய திருக்கரங்களால் திறக்கப்பட்டு இன்றைக்கு மக்கள் பயன்பாட்டிற்கு வந்திருக்கிறது. வெள்ளாண்டிவலசு மற்றும் கண்டம்பட்டிக்கு இடையே பாலம் வேண்டுமென்று கேட்டீர்கள், அந்த பாலத்தையும் அம்மா கட்டிக் கொடுத்தார்கள். புதிதாக கண்டம்பட்டியிலிருந்து டவுனிற்கு செல்ல ஒரு பாலம் கேட்டீர்கள். அதற்கும் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது, அப்பணி விரைந்து துவக்கப்படும். இந்தப் பகுதிகளுக்கு Drainage வசதி கேட்டீர்கள், அதையும் அம்மா செய்து கொடுத்தார்கள். ரேஷன் கடையை கேட்டீர்கள், அதையும் அம்மா கொடுத்தார்கள். கூடுதல் பள்ளிக் கட்டடம் வேண்டுமென்று கேட்டார்கள், அதையும் கொடுத்தார்கள். கல்லூரி வேண்டுமென்று பல்லாண்டு காலமாக கோரிக்கை வைத்தீர்கள். அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்திலேயே 2011லேயே அருமையான கல்லூரி கொடுத்து, அற்புதமான கட்டடத்தை கொடுத்து, இன்றைக்கு 1,100 பேர் படிக்கிறார்கள்.

இப்பொழுது எடப்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில் இருக்கின்ற மாணவ மாணவிகள், சங்ககிரி, மேட்டூர், ஓமலூர் சட்டமன்றத் தொகுதியல் இருக்கின்ற மாணவ மாணவிகள் எல்லாம் உயர்கல்வி படிக்கவேண்டுமென்பதற்காக இன்றைக்கு வனவாசி பகுதியில் பாலிடெக்னிக் கல்லூரி கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. அதேபோல எட்டிகுட்டைமேடு பகுதியில் பி.எட். கல்லூரி அம்மாவினுடைய ஆட்சியிலே இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது, அதுவும் 2018 ஆம் வருடம் திறக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். எட்டிகுட்டைமேடு பகுதியில் சிட்கோ தொழிற்பேட்டை வேண்டுமென்று கோரிக்கை வைத்தீர்கள். அந்தப் பணி துவங்கப்பட்டுள்ளது. அங்கு தொழிற்பேட்டை அமைத்து, அங்கிருக்கின்ற மக்கள் எல்லாம் தொழிற்பேட்டை அமைக்கும் சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கிறோம்.

ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று கேட்டீர்கள், அதையும் கொடுத்திருக்கிறோம். வனவாசியில் கட்டடம் கட்டிக்கொடுத்திருக்கிறோம். புதிதாக கால்நடை மருத்துவம் பக்கநாடில் கொடுத்திருக்கிறோம். இப்படி தேவைப்பட்ட அனைத்தையும் செய்து கொடுத்த அரசு அம்மாவினுடைய அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுமட்டுமல்ல, 14,000 ரூபாய் போட்டு விலையில்லா மடிக்கணினி இலவசமாக கொடுத்து, விஞ்ஞான கல்வி, அறிவுபூர்வமான கல்வி ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு கிடைத்து, மக்களின் வாழ்க்கைத்தரம் உயர அம்மா கொண்டு வந்த திட்டம், தமிழ்நாட்டில் தான் கொடுத்திருக்கிறோம், இந்தியாவில் எந்த மாநிலத்திலும் கிடையாது. உலக அளவில் எங்கேயுமே கிடையாது. கிராமப்புறத்தில் இருக்கின்ற கோயில்கள் ஆதிதிராவிட கோயில்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட கோயில்கள் எல்லாம் சிறப்பாக இயங்கவேண்டும் என்பதற்காக அம்மா அவர்கள்

ரூ.25,000 கொடுத்திருக்கிறார்கள், பிறகு 50,000 ஆக்கினார்கள், இப்போது அம்மாவினுடைய அரசு 1 லட்சம் ரூபாய் வழங்குகிறது. 1,000 ஆதிதிராவிடர் கோயில், 1,000 பிற்படுத்தப்பட்ட கோயில்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு பல்வேறு ஆலயங்களில் பூஜை செய்வதற்காக பூஜை பொருட்கள் கொடுப்பதற்கு நானே நேரடியாக அவர்களை அழைத்து கொடுத்து, தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற ஆலயங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளன. இத்தனையும் அம்மாவினுடைய ஆட்சியிலே செய்யப்பட்ட சாதனை என்று சுட்டிக்காட்டி, மேலும் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற மனு கொடுத்திருக்கிறீர்கள், அதெல்லாம் நிறைவேற்றப்படும். நம்முடைய மாவட்டத்திற்கு மிகப்பெரிய பெருமை சேர்க்கப்பட்டிருக்கிறது. எடப்பாடி மக்களுக்கு பெரிய சிறப்பு கிடைத்திருக்கின்றது. தமிழகத்திலே 234 சட்டமன்றத் தொகுதிகள் இருந்தாலும், எடப்பாடி சட்டமன்ற தொகுதியிலே நான் இருக்கின்றேன், எனக்கு புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியாலும், உங்களுடைய ஆதரவோடும், இன்றைக்கு தமிழகத்தினுடைய முதலமைச்சராக பொறுப்பேற்று இந்த மேடையில் பேசுகின்ற பாக்கியத்தை இறைவன் அருளியிருக்கின்றார், அந்த நஞ்சுண்டீஸ்வரர் அருளால், இன்றைக்கு ஏழை, எளிய மக்கள் திருமணம் செய்வதற்காக, திருமண மண்டபம் அடிக்கல் நாட்டுவிழா நிகழ்ச்சியிலே பங்கு பெற்றதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன் என்று தெரிவித்து, அதோடு பேருந்து நிலையம், 17 புதிய பேருந்துகளை இயக்குகின்றோம். எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் எங்கெல்லாம் பேருந்து வேண்டுமென்று கேட்டீர்களோ, 2011லிருந்து 2017 வரைக்கும் 17 புதிய பேருந்துகளை பல்வேறு இடத்திற்கு அம்மாவினுடைய அரசு இயக்கிக் கொண்டிருக்கிறது. நீங்கள் கொடுத்த கோரிக்கைகளை அம்மாவிடத்திலே சொல்லி, அவ்வளவும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அம்மா அவர்கள் நம்முடைய தொகுதிக்கு மேலும் மேலும் வளங்களை சேர்ப்பார் என்று தெரிவித்து, தமிழ்நாடு முழுவதும் உள்ள மக்களுக்கு தேவையான

அத்தனை திட்டங்களும், இந்த மாவட்டத்திற்குள்ள அத்தனை திட்டங்களும், எங்களால் முடிந்த அளவிற்கு தருவோம் என்று இந்த நேரத்திலே தெரிவித்து, இந்த சிறப்பான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும், மாவட்ட ஆட்சித்தலைவருக்கும், அறநிலையத்துறை அதிகாரிகளுக்கும், அழைப்பை ஏற்று இந்த நிகழ்ச்சிக்கு வந்த மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் மாவட்டத்தை சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் 8.10.2017 அன்று சேலம் மாவட்டம், எடப்பாடியில் நடைபெற்ற பல்வேறு அரசு துறைகளுக்கு அடிக்கல் நாட்டும் விழா மற்றும் அரசு நலத் திட்டங்கள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை.*

பொதுமக்களின் வசதிக்காக பள்ளிப்பாளையம்-ஈரோடு ஆற்றின் குறுக்கே புதிய உயர்மட்ட பாலம்!

கோடானுகோடி தமிழ் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற புரட்சித்தலைவி அம்மாவை வணங்கி, பள்ளிப்பாளையம்–ஈரோடு காவிரி ஆற்றின் குறுக்கே புதிதாக கட்டப்பட்டுள்ள மட்ட பாலம் திறப்பு விழா நிகழ்ச்சியிலே தலைமை தாங்கி ஒரு சிறப்பான தலைமையுரையாற்றி அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே, மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் திருமதி வி.சரோஜா அவர்களே,மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.கே.சி.கருப்பணன் அவர்களே, நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.செல்வகுமார சின்னையன் அவர்களே, நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பி.ஆர்.சுந்தரம் அவர்களே,சட்டப்பேரவை உறுப்பினர்கள் திரு.கே.வி.ராமலிங்கம் அவர்களே, திரு கே.எஸ். தென்னரசு அவர்களே, திரு. கே.பி.பி.பாஸ்கர் அவர்களே, திரு.சி.சந்திரசேகரன் அவர்களே, திருமதி பொன்சரஸ்வதி அவர்களே, திரு.சிவசுப்பிரமணியம் அவர்களே, திரு.ராஜாகிருஷ்ணன் அவர்களே, திரு.ஈஸ்வரன்

அவர்களே, திரு.எஸ்.ராஜா அவர்களே, திரு.வெற்றிவேல் அவர்களே, மற்றும் வரவேற்புரையாற்றிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே, முன்னாள் அமைச்சர்களே, முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, முன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளே, வருகை தந்திருக்கின்ற கழக பொறுப்பாளர்களே மற்றும் அரசு உயரதிகாரிகளே, முக்கிய பிரமுகர்களே, பெரியோர்களே, தாய்மார்களே, பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் பணிவான வணக்கம்.

இந்தப் பாலத்தை பொறுத்தவரைக்கும், மிக கடினப்பட்டு இந்தப் பாலம் கட்டப்பட்டது. ஏனென்றால், அந்தப்பாலம் கட்டவேண்டுமென்று பலமுறை கோரிக்கை வைத்தார்கள். புரட்சித்தலைவி அம்மாவிடத்திலே நான் மாண்புமிகு அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள் சொன்ன கருத்தை சொன்னபொழுது, அம்மா அவர்கள் கட்டியே ஆகவேண்டுமா என்று கேட்டார்கள். நிச்சயம் கட்டி ஆக வேண்டும். ஏனென்று சொன்னால், நாம் பலமுறை இந்த பாலத்தின் செல்கின்றபொழுது, விழாக் காலங்களிலும், திருமண காலங்களிலும் கிட்டத்தட்ட 1 மணி நேரம் இங்கே போக்குவரத்து நெரிசல் ஏற்பட்ட பிறகு தான் பாலத்தை கடக்கவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. அதுமட்டுமல்ல, இரண்டு பகுதிகளிலுமே தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி. காவிரி ஆற்றின் குறுக்கே இந்தப் பாலத்தின் வழியாக செல்கின்ற பொழுது, தினந்தோறும் தொழில் ரீதியாக செல்கிறார்கள். இன்றைக்கு அதிகம் பேர் இருசக்கர வாகனத்தில செல்வதால் அதிக விபத்துக்கள் நேரிடுகிறது. இந்தப் பகுதி போக்குவரத்து நெரிசல் உள்ள பகுதியாக இருப்பதால், இந்தப்பாலம் மிகமிக அவசியம் என்று கூறியவுடனே அம்மா அவர்களால் பாலம் அறிவிக்கப்பட்டு, பலமுறை டெண்டர் கோரினோம். இது கடினமான பாறை நிறைந்த பகுதியாக இருப்பதால், யாரும் முன்வரவில்லை. இங்கு தண்ணீர் தேங்குவதால், இங்கு ஒரு குறிப்பிட்ட மாதங்களில் பணிகள் செய்ய இயலும், மற்ற காலங்களில் செய்ய இயலாது. மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சருக்கு துணையாக இருந்து அப்போதைய பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. கே.வி.ராமலிங்கம் அவர்களும்

இதற்கு கடுமையான முயற்சி எடுத்து, நானும், கவரப்பள்ளி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், ஈரோடு சட்டமன்ற உறுப்பினராக இருந்து திரு. கே.வி.ராமலிங்கம் அவர்களும், நாங்கள் மூன்று பேரும் சேர்ந்து சேர்ந்து கடுமையாக போராடிதான் இந்த பாலத்தையே கொண்டு வந்தோம். அப்பொழுது, நெடுஞ்சாலைத்துறை அமைச்சராக இருந்ததால், இந்தப் பாலம் கட்டி முடிந்து, இன்றைக்கு மக்களுடைய பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டிருக்கிறது. அவ்வளவு கடினப்பட்டு கட்டிய பாலம் இந்தப் பாலம் என்பதை கோடிட்டு காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டிலே, போக்குவரத்து வசதி நிறைந்த ஒரே மாவட்டம் நாமக்கல் மாவட்டம் தான். அதற்குக் காரணம், உங்களுடைய அமைச்சர் திரு.தங்கமணி அவர்கள்தான். ஒவ்வொரு முறை என்னை சந்திக்கின்ற பொழுதெல்லாம், எங்களுடைய மாவட்டம் தொழில் நிறைந்த மாவட்டம், தொழிற்சாலை நிறைந்த மாவட்டம், கல்லூரி, பள்ளிகள் நிறைந்த மாவட்டம். ஆகவே, போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ள மாவட்டமாக உள்ளதால், எல்லா சாலைகளையும் விரிவுபடுத்திக் கொடுக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார். ஆகவே, சங்ககிரியிலிருந்து பள்ளிப் பாளையத்திற்கு நான்கு வழிச்சாலைகள் அம்மாவோடு ஆசியோடு இன்றைக்கு அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதேபோல, ஈரோட்டிலிருந்து திருச்செங்கோட்டிற்கும் சாலை அகலப்படுத்தப்படும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, அவர் கோரிக்கை வைத்தார், இங்கே எஸ்.பி.பி.மில்லுக்கு போவதற்கு கீழ்ப்பாலம் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அதையும் அம்மா sanction செய்தார்கள். அம்மா இல்லாவிட்டாலும், அம்மாவினுடைய அரசு அதைத் தொடர்ந்து நிறைவேற்றும். எஸ்பிபி காலனியில் ஒரு பாலம் வேண்டுமென்றார்கள். அதையும் அம்மா அவர்கள் உடனே நிறைவேற்றி இன்னும் நான்கு மாதங்களில் பாலம் திறக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது, அதுவும் திறப்பு விழா செய்யப்படும். மாண்புமிகு அமைச்சர் திரு. தங்கமணி அவர்கள் திருச்செங்கோட்டிலிருந்து எல்லா பகுதிகளுக்கும் சாலையை விரிவுபடுத்த வேண்டும் என்று சொன்னார்கள்.

அங்கிருந்து பரமத்திவேலூர், அந்தப்பணி முடிவுற்றுள்ளது. திருச்செங்கோட்டிலிருந்து நாமக்கல்லுக்கு நான்கு வழிச்சாலை, திருச்செங்கோட்டிலிருந்து மல்லிக்கரைக்கு, ராசிபுரத்திலிருந்து மல்லிக்கரை வரைக்கும் சாலை அகலப்படுத்தும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. திருச்செங்கோட்டிலிருந்து ஓமலூர் வரை சங்ககிரி வழியாக நான்கு வழிச்சாலை அமைப்பதற்கும் sanction ஆகிவிட்டது. நாமக்கல்லிருந்து திருச்சி வரை செல்வதற்கு தேசிய நெடுஞ்சாலை மூலமாக சாலை நான்கு வழிச்சாலையாக உருவாக்குவதற்கும் அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஆக, ஒரு மாவட்டத்தில் பிரதான சாலைகள் அனைத்துமே அகலப்படுத்தப்பட்ட மாவட்டம் இந்த நாமக்கல் மாவட்டம் தான். அதற்குக் காரணம், உங்களுடைய மாவட்ட அமைச்சர் திரு. தங்கமணி அவர்களும், மாண்புமிகு அமைச்சர் டாக்டர் சரோஜா அவர்களும் என்னிடத்திலே வைத்த கோரிக்கை, அந்த கோரிக்கையை அம்மாவினுடைய அரசு நிறைவேற்றித் தந்திருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைக்கல்லூரி வேண்டுமென்று கேட்டார்கள், அதுவும் அம்மாவினுடைய ஆட்சியிலே கொடுக்கப்பட்டிருக்கின்றது. காவல் நிலையம் வேண்டுமென்று கேட்டார்கள், அதுவும் அம்மாவினுடைய sanction செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது. தீயணைப்பு நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இங்கே தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியாக இருப்பதால், தீ ஏற்பட்டால் உடனுக்குடன் அணைக்க வேண்டுமென்ற அடிப்படையில் தீயணைப்பு நிலையம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சுற்றுலா மாளிகை கேட்டார்கள், அதுவும் கட்டிக் கொடுக்கப்பட்டது. கேட்டதெல்லாம் நிறைவேற்றப்பட்ட ஒரே தொகுதி குமாரபாளையம் தொகுதி தான் என தெரிவித்துக் கொள்கிறேன்.

350 கோடி ரூபாயில் கூட்டுக்குடிநீர்த் திட்டம் தீட்டப்பட்டிருக்கின்றது. இந்தத் திட்டத்தின் வாயிலாக குமாரபாளையம் சட்டமன்றத் தொகுதி, திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதி, சங்ககிரி பேரூராட்சி, இதெல்லாம் ஒன்றாக

இணைந்து 350 கோடி ரூபாயில் காவிரி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு நிலையான காவிரி தண்ணீரை இந்த அம்மாவினுடைய அரசு விரைவாக மக்களுக்கு வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு எதிர்க்கட்சிகள் வேண்டுமென்றே திட்டமிட்டு தவறான பிரச்சாரத்தை சொல்லிக்கொண்டே இருக்கின்றார்கள். ஒரு பொய்யை திருப்பித்திருப்பிச் சொன்னால், மக்கள் நம்பிவிடுவார்கள் என்று எண்ணுகிறார்கள், அது நிச்சயமாக நடக்காது. ஏனென்றால், நாங்களே திட்டத்தை அறிவித்து, நாங்களே திறந்து வைக்கின்ற காட்சியை அண்ணா திமுக–வில் தான் பார்க்க முடியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்கமணி அவர்களும், சமூக நலத்துறை அமைச்சர் திருமதி சரோஜா அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் கி.ஆர்.சுந்தரம் அவர்களும், மற்றும் திரு. செல்வகுமார சின்னையன் அவர்களும், சட்டப்பேரவை உறுப்பினர்களெல்லாம் இங்கே வந்து அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து நாங்களே திறந்திருக்கின்றோம். ஆகவே, இதுவே சாட்சி. எனவே, ஒவ்வொரு திட்டமும் அம்மாவிடைய ஆட்சியிலே உருவாக்கப்பட்ட திட்டம்தான். 2011ல் அம்மா ஆட்சி பொறுப்பேற்ற பின்பு 2017 வரைக்கும் எவ்வளவு திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம், நாங்கள் சொன்ன திட்டங்களெல்லாம் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. 2011க்கு முன்பு பாருங்கள், என்ன அவர்கள் செய்தார்கள் ? சட்டமன்றத் தொகுதி இப்பொழுது திருச்செங்கோட்டிலிருந்து குமாரபாளையம் தொகுதி பிரிந்திருக்கின்றது. குமாரபாளையம் சட்டமன்றத் தொகுதிக்கோ அல்லது திருச்செங்கோட்டு தொகுதிக்கோ, அல்லது நாமக்கல் மாவட்டத்தில் இருக்கின்ற எந்த தொகுதிக்காவது என்ன திட்டங்களைக் கொடுத்தார்கள் ? ஒன்றையும் கொண்டு வரவில்லை. ஆனால், வேண்டுமென்றே திட்டமிட்டு எல்லா ஊடகங்களிலும், எல்லா மேடைகளிலுமே இந்த ஆட்சி, செயலிழந்த ஆட்சி என்று குறிப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் சொல்வதெல்லாம் அம்மாவினுடைய அரசு, செயல்படும் அரசு என்பதை நாங்கள் இப்பொழுது நிரூபித்துக் காட்டிக் கொண்டிருக்கின்றோம்.

எல்லா திட்டங்களுக்கும் நாங்களே நேரடியாக சென்று அடிக்கல் நாட்டுகின்றோம், அந்தப் பணி முடிந்தபிறகு, நாங்களே திறந்து வைக்கின்றோம். அப்படிப்பட்ட ஆட்சி அம்மாவினுடைய ஆட்சி. ஆகவே, மக்களுக்கு என்ன தேவையோ, அதை நிறைவேற்றுகின்ற ஆட்சியாக இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. வேண்டுமென்றே திட்டமிட்டு, இந்த ஆட்சி மீது ஏதாவது ஒரு களங்கம் கற்பிக்க வேண்டும், எதையாவது ஒன்றை கண்டுபிடித்து, ஒரு போராட்டத்தை உருவாக்கி, அதன்மூலம் இந்த ஆட்சிக்கு கெட்ட பெயரை உருவாக்க வேண்டும் என்று திட்டம் தீட்டி இன்றைக்கு செயலாக்கிக் கொண்டிருக்கின்றார்கள் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள். ஆனால், புரட்சித்தலைவி அம்மா விட்டுச் சென்ற பணியை நாம் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். அதுமட்டுமல்லாமல், மக்களுக்கு என்ன தேவை, என்ன திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று பார்த்துப் பார்த்து, திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்ற ஆட்சி அம்மாவினுடைய ஆட்சி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் ஒருபடி மேலே போய், சொல்கிறார், இந்த ஆட்சி கலைக்கப்பட வேண்டிய ஆட்சி, இந்த ஆட்சியில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து போய்விட்டது என்று, எங்கே சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து போனது சொல்லுங்கள் பார்க்கலாம். இன்றைக்கு இந்தியாவிலேயே அமைதிப் பூங்காவாக விளங்கக் கூடிய ஒரே மாநிலம் தமிழ்நாடு தான். ஆனால், மற்ற மாநிலத்தை ஒப்பிட்டுப் பாருங்கள். இவர்கள் சட்டமன்றத்திலே பேசினார்கள், பல புள்ளிவிவரங்களையெல்லாம் கொடுத்தார்கள். நாங்கள், காவல்துறை மானியக் கோரிக்கையின் போது அதற்குத் தகுந்த பதில்களை நாங்கள் கொடுத்தோம். தமிழகத்திலே புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிசெய்த பொழுதும் சரி, அம்மா மறைவிற்குப் பிறகு அம்மாவினுடைய திட்டங்களை நாங்கள் சிறப்பாக செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம், அம்மா அவர்கள் விட்டுச்சென்ற பணியை நாங்கள் தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம். சட்டம்,ஒழுங்கு சிறப்பாக பேணிக்காக்கப்படுகின்ற ஆட்சி,

அம்மாவினுடைய ஆட்சி. இன்றைக்கு வேறு எந்த மாநிலத்திலும் இந்த அளவிற்கு சட்டம், ஒழுங்கு கிடையாது. இவர்களுக்கு எதுவுமே கண்டுபிடிக்க முடியவில்லை, பூதக்கண்ணாடி வைத்து தேடித்தேடி பார்க்கிறார்கள், ஏதாவது குறையை கண்டுபிடித்து பேசலாம் என்றால். எந்தக்குறையும் காணமுடியாத அரசு அம்மாவினுடைய அரசு என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் திரு. தங்கமணி அவர்கள் சொல்லும்பொழுது, 140 ஆண்டுகாலம் இல்லாத வறட்சியை நாம் சந்தித்தோம். அப்பொழுதாவது விலைவாசி உயர்ந்ததா? குடிப்பதற்கு 1,000 அடி bore போட்டால் தான் தண்ணீர் கிடைக்கும். அப்படி bore போட்டாலும், 10 நாட்கள் 15 நாட்களுக்கு தான் தண்ணீர் கிடைக்கும், அதற்கப்புறம் அது வறண்டு போய்விடும். உடனடியாக அதற்கு அருகில் இன்னொரு bore போட்டு அந்த மக்களுக்கு தண்ணீர் கொடுத்தோம். பல்லாயிரக்கணக்கான கோடியை அள்ளிக் கொடுத்து, எங்கேயும் குடிநீர் பிரச்சினை இல்லாமல் அம்மாவினுடைய அரசு பார்த்துக் கொண்டுள்ளது. இன்றைக்கு, எல்லாம் வல்ல இறைவனுடைய அருளால், வருண பகவானுடைய அருளால், இன்றைக்கு நல்லமழை பொழிந்து கொண்டிருக்கின்றது. அவர் சொன்னதைப்போல குடிமராமத்து என்ற அற்புதமான திட்டம், விவசாயிகளுக்கு வரப்பிரசாதமான திட்டம். ஏரிகள், குளங்களில் இருக்கின்ற வண்டல் மண்ணை அங்கிருக்கின்ற விவசாயிகள் இலவசமாக எடுத்து அவர்களது நிலத்திற்கு இயற்கை உரமாக இன்றைக்கு வண்டல் மண் பயன்படுகிறது. அந்த நிலத்திற்கு இயற்கை உரமாக பயன்படுவது வண்டல்மண். இன்னொன்று, அந்த வண்டல மண்ணை அள்ளுகின்றபொழுது, ஏரி குளங்கள் ஆழப்படுகின்றது. ஆகவே, பருவமழை பெய்கின்றபொழுது, அந்த மழைநீர் முழுவதும் ஏரியிலே சேமிக்கப்படக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு உருவாகியிருக்கிறது. அதனால் தான், நல்ல மழை பொழிந்து கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் நாம் தூர்வாருவதால், ஆங்காங்கே ஏரிகளிலும், குளங்களிலும் நீர் நிரம்பியிருக்கின்ற காட்சியை தொலைக்காட்சியில் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். ஒரு சொட்டு தண்ணீர்

கூட வீணாகாமல் இருக்கவேண்டும் என்பதற்காக அம்மாவினுடைய அரசு 1,000 கோடி தடுப்பணை கட்டுவதற்காக ஒதுக்கி இருக்கிறோம். எங்கெங்கெல்லாம் ஓடை இருக்கிறதோ, எங்கெங்கெல்லாம் ஆறுகள் இருக்கிறதோ, ஆற்று ஓரப்பகுதியிலே ஓடுகின்ற பகுதியில் தடுப்பணை கட்டப்பட்டு, நீர் சேமிக்கப்பட்டு, நிலத்தடி நீர் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சில ஓடைகள், சிறுசிறு நதிகள் அதன் குறுக்கே தடுப்பணை கட்டப்பட்டு, தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டு, நிலத்தடி நீர் உயர்ந்து, குடிப்பதற்கு தேவையான நீரை, விவசாயிகளுக்கு தேவையான நீரை அம்மாவினுடைய அரசு உருவாக்கித் தந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு மக்கள் என்ன எண்ணுகிறார்களோ, அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். இன்றைக்கு எல்லாம் வல்ல இறைவன் அருளால் மேட்டூர் 95 அடியை எட்டிவிட்டது. இன்றைக்கு 15,000 கனஅடி தண்ணீர் வைத்திருக்கிறோம். இன்றைக்கு காலையில் 21,000 கன அடி தண்ணீர் மேட்டூருக்கு வந்து கொண்டிருக்கின்றது. ஆகவே, இன்றைக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய ஆசியால், அருளால், இன்றைக்கு தமிழகம் செழிக்கும், வளம் பெறும். எத்தனை எதிர்க்கட்சிகள் கூக்குரல் இட்டாலும் அம்மாவினுடைய ஆட்சியை வீழ்த்தவோ, அசைக்கவோ முடியாது என்பதை திட்டவட்டமாக இந்த நிகழ்ச்சியின் வாயிலாக குறிப்பிட்டு உங்களுடைய மாவட்ட மாண்புமிகு அமைச்சர் திரு பி.தங்கமணி அவர்கள் இந்தப் பாலத்திற்கு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இந்த மண்ணிலே மறைந்தாலும், மக்கள் மனதில் தெய்வமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்த தெய்வத்தின் பெயரை சூட்ட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். இந்த புதிதாக கட்டப்பட்ட உயர் மட்ட பாலத்திற்கு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா என்று பெயர் சூட்டப்படும் இந்தப் பாலத்திற்கு என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல புதிதாக துவங்கப்பட்ட கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா பெயரை சூட்டப்படும். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா என்ற பெயர் கல்லூரிக்கு

சூட்டப்படும் என்ற நற்செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு நல்ல மழை பெய்கிறது. எனவே, சீதோஷ்ண நிலை மாறுகின்றது. அப்படி மாறுகின்ற பொழுது காய்ச்சல் ஏற்படுகின்றது. இது வாடிக்கையாக வருவது. பல ஆண்டுகாலமாக இந்த காய்ச்சல் வருவது, அதற்கு அரசு தகுந்த நடவடிக்கை எடுத்து அதை குணப்படுகின்றது. ஆனால், இப்பொழுது புதிதாக டெங்கு காய்ச்சல் வந்திருக்கின்றது. இது நம் மாநிலத்திலிருந்து வரவில்லை, பக்கத்து மாநிலத்திலிருந்து நம் மாநிலத்திற்கு பரவியிருக்கிறது. இந்த டெங்கு காய்ச்சல் என்பது டெங்கு கொசு மூலமாக ஏற்படுகிறது. நல்ல தண்ணீரிலிருந்து தான் இந்த கொசு உற்பத்தியாகிறது. இது கழிவு நீரிலிருந்து வருவதில்லை. வீட்டில் குடிதண்ணீருக்காக இருக்கிற தொட்டியில் நீரை சேமித்து வைப்போம். சில நேரங்களில் அதை மூடியிருக்க மாட்டோம், 10, 15 நாட்களுக்கு தண்ணீரை மூடிவைக்காமல் வெளியூர் சென்று விடுவோம். அந்த நீரில் இந்த டெங்கு கொசு உற்பத்தியாகிறது. இது மக்களுக்கு தெரிவதில்லை. ஆகவே, தண்ணீரை மூடிவைக்கவேண்டும், வெளியூர் செல்லும்பொழுது குளியல் அறையில் நீங்கள் தண்ணீரை திறந்து வைத்துவிட்டுப் போகக்கூடாது, மூடிவைக்க வேண்டும் அல்லது அந்தத் தண்ணீரை அகற்றிவிட்டுப் போகவேண்டும். அதுபோல குளியல் அறையைச் சுற்றி தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும். ஏனென்றால் அதில் டெங்கு கொசு உற்பத்தியாகி, டெங்கு காய்ச்சல் வர வாய்ப்புள்ளது. இதை பொதுமக்கள் விழிப்போடு இருந்து, இதை தடுப்பதற்கு பொதுமக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும். அதுமட்டுமல்ல, இந்த காய்ச்சல் வந்தவுடனே நீங்கள் கடையில் சென்று மாத்திரை ஏதும் உட்கொள்ளாமல், உடனடியாக அரசு மருத்துவமனைக்கோ, தனியார் மருத்துவனைக்கோ சென்று, மருத்துவரை அணுகி, ரத்த பரிசோதனை செய்து, என்ன காய்ச்சல் என்பதைக் கண்டறிந்து அதற்குத் தகுந்தவாறு சிகிச்சை பெற்றுக்கொண்டால் இந்த டெங்கு காய்ச்சலை குணப்படுத்தி

விடலாம். அதை விட்டுவிட்டு நான்கைந்து நாட்கள் நீங்களே மாத்திரை சாப்பிட்டு விட்டு, பின்னர் மருத்துவரை அணுகினால், இந்தக் காய்ச்சல் முற்றிவிடும். அப்பொழுது எவ்வளவுதான் வைத்தியம் செய்தாலும், இந்த காய்ச்சலை குணப்படுத்த முடியாது. ஆகவே, வருகை தந்திருக்கின்ற அத்தனை பொதுமக்களும், கழக நிருவாகிகளும் மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள், எந்தக் காய்ச்சல் வந்தாலும் உடனடியாக மருத்துவரை அணுகுங்கள், அதற்குத் தேவையான சிகிச்சையைப் பெற்று குணமடைவதற்கு வழிவகைகளை செய்யுங்கள் என்று இங்கே வந்திருக்கின்ற பத்திரிகையாளர்களும், ஊடக நண்பர்களும் இதற்கு உதவி செய்ய வேண்டும். தொலைக்காட்சியில் பார்க்கின்ற பொழுது, இந்த டெங்கு காய்ச்சல் எப்படி உற்பத்தியாகிறது, எங்கு உற்பத்தியாகி, இது கடித்த பிறகு நோய் உண்டாகிறது, காய்ச்சல் வருகிறது. இதற்கான அறிகுறி இவையெல்லாம் குறும்படங்கள் மூலமாக, ஊடகத்தின் வாயிலாக காண்பித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொழுது, அவர்கள் மருத்துவரை அணுகி சிகிச்சை பெற்றுக் கொள்வார்கள். ஆகவே, இதுபோன்ற விழிப்புணர்வு அளிக்கும் நிகழ்ச்சியை ஒளிபரப்ப வேண்டும் என்று ஊடக நண்பர்களை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். பத்திரிகை வாயிலாகவும் இதை செய்தியாக வெளியிடுங்கள் என்று இந்த தருணத்தில் கேட்டுக் கொண்டு, மாண்புமிகு அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரைக்கும், இந்த டெங்கு காய்ச்சலை அனைத்து நடவடிக்கைகளும் எடுத்துள்ளது. இதற்காக 23.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆங்காங்கே ரத்தப்பரிசோதனை செய்வதற்காக, 834 கருவிகள் வாங்கி கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கருவியின் மூலமாக ரத்தப்பரிசோதனை செய்தால், அரை நிமிடத்தில் result கொடுத்து விடுவார்கள். அதற்கேற்றவாறு சிகிச்சை அளிக்கும்பொழுது, அந்த டெங்கு காய்ச்சலை குணப்படுத்த முடியும். ஆகவே, அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரைக்கும் தேவையான மருத்துவர்களும், செவிலியர்களும் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். அதுமட்டுமல்ல, டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்துவதற்காக, இன்றைக்கு

மருத்துவமனை, பள்ளிகள், பேருந்து நிலையம், ரயில் நிலையம் போன்ற மக்கள் அதிகமாக கூடுகின்ற பகுதியில் நிலவேம்பு சாறு கொடுக்கப்பட்டு, இந்த டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்துவதற்கு அம்மாவினுடைய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்பதை சுட்டிக்காட்டி, நீங்கள் அத்தனை பேரும் அரசுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று சொல்லி, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, உங்களுடைய அரசு, ஏழை, எளியவர்களுடைய அரசு, மக்கள் என்ன எண்ணுகிறார்களோ,அதை நிறைவேற்றுகின்ற அரசு , அம்மாவினுடைய அரசு என்பதை தெரிவித்து, மிக சிறப்பாக, ஒரு மாநாடு போல் இந்த நிகழ்ச்சியை ஏற்படுத்திய மாண்புமிகு அமைச்சர் திரு. தங்கமணி அவர்களுக்கு நன்றி தெரிவித்து மற்றும் அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் 8.10.2017 அன்று பள்ளிப்பாளைம்–ஈரோடு இடையே புதிதாக கட்டப்பட்டுள்ள உயர் மட்ட பாலத்தை திறந்து வைத்து ஆற்றிய உரை.*

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின்உற்பத்தியில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கின்றது!

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்கி,

இந்தச் சிறப்புமிக்க விழாவிற்கு வருகை தந்து ஆளுநர் மாளிகையில் அமைக்கப்பட்டிருக்கும் 400 கிலோ வாட் மின்திறன் கொண்ட சூரிய சக்தி உற்பத்தி நிலையத்தை திறந்து வைத்தும் தமிழ்நாட்டின் ஆளுநராகப் பணியாற்றிய காலத்தில் ஏற்பட்ட அனுபவங்களை நூலாக வடித்திருக்கும் மாண்புமிகு மகாராஷ்டிர ஆளுநர் அவர்களின் "Those Eventful days" நூலினை வெளியிட்டும் சிறப்பு சேர்த்திருக்கும்

மாண்புமிகு குடியரசுத் துணைத் தலைவர் அவர்களே!

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களே!

மாண்புமிகு மகாராஷ்டிர ஆளுநர் அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

மரியாதைக்குரிய நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

மதிப்பிற்குரிய தலைமைச் செயலாளர் அவர்களே!

வரவேற்புரை ஆற்றி அமர்ந்திருக்கும் ஆளுநரின் முதன்மைச் செயலாளர் அவர்களே!

நன்றியுரை ஆற்ற இருக்கும்

ஆளுநரின் துணைச் செயலாளர் அவர்களே!

இங்கு கூடியிருக்கும் அரசு உயர் அதிகாரிகளே!

பெரியோர்களே! தாய்மார்களே!

உங்கள் அனைவருக்கும்

முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் நம்முடன் வீற்றிருக்கும் நமது துணைக் குடியரசுத் தலைவர் அவர்கள், தமிழ் புரிந்தவர்; தமிழர் நலம்

அறிந்தவர்; தமிழ்நாட்டு நலன் காக்க உதவி வருபவர்; மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்;

23.07.2016 அன்று ஆர்.கே. நகரில் நடைபெற்ற மெட்ரோ இரயில் துவக்க விழாவில்

மாண்புமிகு அம்மா அவர்கள் இவரைப் பற்றி.......

“தமிழ்நாட்டின் உற்ற நண்பர் திரு. வெங்கையா நாயுடு அவர்கள் ஆவார். தமிழக நலன்களைக் காப்பதிலும் தமிழக அரசின் திட்டங்களுக்கு மத்திய அரசின் அனுமதியை விரைந்து பெற்றுத் தருவதிலும் முன் நிற்பவர் திரு. வெங்கையா நாயுடு என்று சொன்னால் அது மிகையல்ல” என்று அந்த விழாவில் பெருமை பொங்கக் குறிப்பிட்டார்கள்.

அப்படிப்பட்டவர் தற்போது இந்தியக் குடியரசுத் துணைத் தலைவராக இங்கு வந்து அமர்ந்திருப்பது தமிழர்களுக்கு எல்லாம் பெருமகிழ்ச்சியை அளித்துள்ளது.

மகாராஷ்டிர மாநில ஆளுநரும் நமது மாநில முன்னாள் ஆளுநருமாகிய மாண்புமிகு திரு. வித்யாசாகர் ராவ் அவர்கள் ஒரு சிறந்த வழக்கறிஞர்; முன்னாள் மத்திய அமைச்சர்; அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு, ஜனநாயக மரபுகளின்படி தனக்கு அளிக்கப்பட்ட பணியைச் சிறப்பாகச் செய்தவர்; செய்து வருபவர்; இந்த விழா நடைபெறக் காரணமானவர் என்பதையும் பெருமையுடன் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல, தெய்வப்புலவர் திருவள்ளுவருக்கு ஆளுநர் மாளிகை வளாகத்தில் சிலை அமைத்தவர்; தமிழ் மூதாட்டி அவ்வையாருக்கும் இவ்வளாகத்தில் சிலை அமைத்து, அச்சிலைக்கு அருகே ‘ஆத்திசூடி’ பலகையினை நிறுவி, தமிழ் மீதும், தமிழ்நாட்டு மக்கள் மீதும் தனக்கு உள்ள பற்றை வெளிப்படுத்தியவர்.

ஆளுநர் மாளிகையைப் பொதுமக்கள் பார்வையிட திறந்துவிட்டு தமிழ் மக்களின் இதயங்களில் இடம் பிடித்தவர் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

நமது மாநிலத்திற்கு ஆளுநராகப் புதியதாகப் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு பன்வாரிலால் புரோகித் அவர்கள் மகாராஷ்டிர மாநிலம், நாக்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகச் செயல்பட்டவர். மகாராஷ்டிர மாநில அமைச்சராகவும் தன்னை உயர்த்திக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டவர். நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். அசாம் மாநில ஆளுநராகத் தனது கடமையைச் சிறப்பாகச் செய்தவர். பழுத்த அரசியல் அனுபவம் பெற்றவர். இவர் தமிழ்நாட்டிற்கு ஆளுநராகப் பொறுப்பு ஏற்று இருப்பதால், தமிழ்நாடு மேன்மேலும் சிறப்பு பெறும் என்பதில் சந்தேகமில்லை.

இன்றைய தினம், மாண்புமிகு குடியரசுத் துணைத் தலைவர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ள சூரிய மின்சக்தி உற்பத்தி நிலையமானது ஆண்டொன்றுக்கு சுமார் ஆறு இலட்சம் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யும் திறன் கொண்டது என அறிந்தேன்.

இதன் மூலம் ஆளுநர் மாளிகையின் மொத்த மின் தேவையில் 80 விழுக்காடு பூர்த்தி செய்யப்படும் என்றும், ஆண்டுக்கு 45 இலட்சம் ரூபாய் மின்கட்டணச் செலவு சேமிக்கப்படும் எனவும் தெரிய வருகிறது. இது மிகவும் வரவேற்கத்தக்கது.

சூரிய மின் சக்தியை அதிக அளவில் உற்பத்தி செய்து சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது மாண்புமிகு அம்மா அவர்களின் விஷன் 2023–இல் உள்ள திட்டங்களில் முக்கியமானது ஆகும். புதுப்பிக்கத்தக்க மின்னாற்றலைப் பெருமளவில் உற்பத்தி செய்ய வேண்டும் என்பதில் மாண்புமிகு அம்மா அவர்கள் மிகுந்த முனைப்பு காட்டினார்கள்.

அதனடிப்படையில், தமிழ்நாடு சூரிய மின்சக்தி கொள்கையை 2012–இல் அறிவித்தார்கள். இதன்மூலம், தமிழ்நாட்டில் சூரிய மின் சக்தி தொடர்பாக பல்வேறு முன்னோடித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முன்னிலையில் 04.07.2015 அன்று, 648 மெகா வாட் அளவுக்கு சூரிய மின்சாரம் வாங்குவதற்கான கொள்முதல் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டது.

இதனைத்தொடர்ந்து, மாண்புமிகு அம்மா அவர்கள் 21.09.2016 அன்று கலந்து கொண்ட கடைசி அரசு நிகழ்ச்சியில் 4,536 கோடி ரூபாய் முதலீட்டில் நிறுவப்பட்டுள்ள 648 மெகா வாட் திறன் கொண்ட சூரிய மின் சக்தி உற்பத்தி நிலையத்தையும் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த இந்த அரசும் புதுப்பிக்கத்தக்க மின்சக்திக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது.

சமீபத்தில் 26.09.2017 அன்று எனது முன்னிலையில் தமிழ்நாட்டில் 9 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் நிறுவப்படவுள்ள 16 சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் 1,500 மெகாவாட் சூரிய மின் சக்தியை கொள்முதல் செய்ய ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது.

தற்போது தமிழ்நாட்டில், 1,786.48 மெகாவாட் சூரிய மின் சக்தி நிறுவுத் திறன் உள்ளது. இதில் 78.44 மெகாவாட் மேற்கூரை சூரிய மின் சக்தியும் அடங்கும்.

தமிழ்நாட்டில், சூரிய ஒளி மின்சாரம், பகல் பொழுதில் 800 முதல் 1,200 மெகாவாட் அளவிற்கு கிடைக்கப் பெறுகிறது. நாட்டிலேயே, தமிழ்நாடு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின் உற்பத்தியில் முன்னிலை வகிக்கின்றது என்ற செய்தியை இத்தருணத்தில் பெருமகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

இந்தச் சீர்மிகு விழாவில் கலந்து கொள்ள வாய்ப்பளித்த மாண்புமிகு குடியரசுத் துணைத் தலைவர் மற்றும் மாண்புமிகு ஆளுநர்கள் இருவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

நன்றி! வணக்கம்!

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 16.10.2017 அன்று சென்னை ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை.*

உங்கள் கடமைக் கரங்கள் எதிர்காலத்தில் பதக்கங்கள் பல குவிக்கும் திறமைக் கரங்களாகத் திகழ வேண்டும்!

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்கி, காவல்துறை பணிநியமன ஆணை வழங்கும் விழாவில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சீனிவாசன் அவர்களே!

மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே!

மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்களே!

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் திரு. எஸ்.பி.வேலுமணி அவர்களே!

மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு. டி.ஜெயக்குமார் அவர்களே!

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்களே!

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. கே.சி. கருப்பணன் அவர்களே!

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபில் அவர்களே!

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.பி. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! மாண்புமிகு நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களே!

தலைமைச் செயலாளர் முனைவர் திருமதி கிரிஜா வைத்தியநாதன் அவர்களே!

கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் உள்துறை செயலாளர் திரு. நிரஞ்சன் மார்டி அவர்களே!

காவல்துறை தலைமை இயக்குநர் திரு. டி.கே. ராஜேந்திரன் அவர்களே!

தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வு வாரியத்தின் தலைவர் திரு. ஜே.கே. திரிபாதி அவர்களே!

அனைத்து காவல்துறை உயர் அதிகாரிகளே! காவலர்களே!

பணி நியமண ஆணை பெற உள்ள காவலர்களே!

பத்திரிகை ஊடகத்துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

“மக்களால் நான், மக்களுக்காகவே நான்” என்று வாழ்ந்து தன்னலமற்ற சேவையை தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கி, தனது சிறந்த நிருவாகத் திறமையால் இந்தியாவிலேயே தமிழ் நாட்டை முதன்மை மாநிலமாக மாற்றியவர் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

‘அமைதி, வளம், வளர்ச்சி’ என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் தாரக மந்திரத்தின் வழிகாட்டுதலின்பேரில், மாண்புமிகு அம்மாவின் நல்லாட்சியைத் தொடர்ந்து நடத்தி வருகின்றோம்.

தமிழ்நாடு காவல்துறை தனிப் பெருமையோடு சிறப்பாக பணியாற்றி வருகிறது. சட்டம் ஒழுங்கைப் பராமரித்தும், குற்றங்களை தடுப்பதிலும், கண்டுபிடிப்பதிலும் ஸ்காட்லாந்து யார்ட் காவல்துறைக்கு இணையாக தமிழ்நாடு காவல்துறை விளங்கிக்கொண்டிருக்கிறது.

சட்டம் ஒழுங்கைப் பராமரித்தும், நல்லிணக்கத்தை நிலைநாட்டியும், தேசிய ஒருமைப்பாட்டை பேணிக்காத்தும், தீவிரவாதம் தலைதூக்காமல் இருக்கவும், தமிழ்நாடு காவல்துறையினர் சிறப்பாக பணிபுரிந்து வருகின்றனர்.

இயற்கைப் பேரிடர் ஏற்படும் தருணங்களில் காவல் துறையினர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர், பிற துறையினருடன் ஒருங்கிணைந்து சிறப்பாக பணியாற்றி வருகிறார்கள்.

சிறைத்துறையினரும் குற்றவாளிகளை நன்னடத்தை உடையவர்களாக மாற்ற சிறப்பான பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். பல்வேறு மாநிலங்களை ஒப்பிடுகையில், தமிழ்நாடு காவல்துறையில் அதிக எண்ணிக்கையில் காவலர்கள் இருக்கின்றனர்.

இருப்பினும், காவலர் எண்ணிக்கையை உயர்த்துவது மற்றும் காலி பணியிடங்களை நிரப்புவதன் மூலம் இன்னும் சிறப்பான பாதுகாப்பை பொதுமக்களுக்கு கொடுக்க முடியும் என்ற நோக்கத்தில் பல்வேறு சீருடைப் பணிகளுக்கு நீங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றீர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சீருடைப் பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு ஓர் தனி வாரியத்தை 1991ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடங்கினார்கள்.

இது மற்ற மாநிலங்களுக்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டாகவும், முன்னோடியாகவும் இன்று வரை நம்மையெல்லாம் பெருமைப்படுத்திக் கொண்டு இருக்கிறது. கடந்த ஆண்டு வரை, ஒரு இலட்சத்து இரண்டு ஆயிரத்து நானூற்று முப்பத்திரெண்டு (1,02,432) சீருடைப் பணியாளர்களை இத்தேர்வு வாரியம் தேர்ந்தெடுத்துள்ளது.

இந்த ஆண்டு நிதிநிலைக் கூட்டத் தொடரில் நான், காவலர்கள் பணி நியமனம் குறித்து சட்டமன்றத்தில் அறிவித்ததைத் தொடர்ந்து, மிகக்குறுகிய காலத்திலேயே பதினைந்தாயிரத்து அறுநூற்று இருபத்தொன்று (15,621) நபர்கள் பல்வேறு சீருடைப் பணிகளுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவற்றில், ஆயுதப்படைக்கு ஆறாயிரத்து நான்கு (6,004) இரண்டாம் நிலை ஆண் காவலர்களும், இரண்டாயிரத்து ஐநூற்று அறுபத்திநான்கு (2,564) இரண்டாம் நிலை பெண் காவலர்களும், தமிழக சிறப்புக் காவல் படைக்கு நாலாயிரத்து ஐநூற்று அறுபத்தேழு (4,567) இரண்டாம் நிலை ஆண் காவலர்களும், ஐந்து (5) பெண் காவலர்களும் என மொத்தம்

பதிமூன்றாயிரத்து நூற்று நாற்பது (13,140) இரண்டாம் நிலைக் காவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

மேலும் சிறைத்துறைக்கு தொள்ளாயிரத்து ஐம்பத்தி நான்கு (954) இரண்டாம் நிலை ஜெயில் வார்டர்களும், முப்பத்தாறு (36) இரண்டாம் நிலை பெண் ஜெயில் வார்டர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதுடன், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு ஆயிரத்து நானூற்று தொண்ணூற்று ஒன்று (1,491) தீயணைப்பு வீரர்கள் என மொத்தமாக பதினைந்தாயிரத்து அறுநூற்று இருபத்தி ஒன்று (15,621) நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து சரித்திரம் படைக்கும் வகையில், நான்கு (4) திருநங்கைகளும் காவலர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள். இங்கே நான் மிக்க மகிழ்ச்சியோடு சுட்டிக் காட்ட விரும்புவது என்னவென்றால், வங்கத்து கடலோரம் துயில் கொண்டு எங்களை வழி நடத்துகின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதன்முறையாக காவல் துறையில் திருநங்கைகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதுமட்டுமல்லாமல், ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட பணியிடங்கள் தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியம் வாயிலாக விரைவில் தேர்ந்தெடுக்கப்பட இருக்கிறார்கள் என்பதையும் இத்தருணத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் மூலமாக தமிழ்நாடு காவல்துறையில் காலி பணியிடங்களே இல்லை என்கிற உயரிய நிலையை உருவாக்கி தமிழ்நாடு காவல்துறையின் சிறப்பை இவ்வுலகே வியக்கும் வண்ணம் உயர்த்துவதே இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா வழியில் செயல்பட்டு வரும் இந்த அரசின் நோக்கமாகும்.

இந்தியாவிலேயே முதன்முறையாக 1992ம் ஆண்டு அனைத்து மகளிர் காவல் நிலையம் எங்கள் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உத்தரவின் பேரில் தொடங்கப்பட்டது. தமிழ்நாடு காவல்துறையின் மொத்த எண்ணிக்கையில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கு பெண் காவலர்கள் இருக்கிறார்கள் என்ற பெருமையை பெற்ற ஒரே மாநிலம் தமிழ்நாடு என்று சொன்னால் அது மிகையாகாது.

இதனால் தமிழ்நாட்டில் பெண்களுக்கெதிரான குற்றங்கள் வெகுவாக குறைந்திருக்கின்றன. தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்ற வாய்ப்பு பெற்றிருக்கின்ற உங்கள் அனைவருக்கும் வாழ்வில் இது ஒரு பெருமைமிக்க தருணம் ஆகும்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் லட்சியத்தின்படி, தமிழ்நாடு காவல்துறையில் கட்டுப்பாட்டையும், ஒழுக்கத்தையும் பேணி, நமது காவல்துறையின் வரலாற்று பெருமையை நிலைநாட்ட வேண்டிய கடமை உணர்வோடும், நடுநிலையோடும், தன்னலமற்ற சேவையை தமிழ்நாட்டு மக்களுக்கு நீங்கள் ஆற்ற வேண்டும் என்று இந்த நேரத்தில் உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட சிறப்புமிகு தமிழ்நாடு காவல்துறையில் உங்களுக்கு பணியாற்ற வாய்ப்பு கிடைத்திருப்பது, உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் பெருமை அளிப்பதாகும். இதனை எந்நாளும் நினைவில் கொண்டு நீங்கள் உங்கள் பணியை அர்ப்பணிப்பு உணர்வோடு செவ்வனே செய்ய வேண்டும்.

சீருடைப்பணியில் ஏராளமான சவால்களையும், பல்வேறு இடர்களையும் எதிர்கொள்ளவேண்டியிருக்கும். அல்லும் பகலும் அயராது உழைக்க வேண்டிவரும். “ஒரு தவறு செய்தால், அதைத் தெரிந்து செய்தால், அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்’’

என்ற மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாடல் வரிகளுக்கு ஏற்ப விருப்பு, வெறுப்பின்றி பணியாற்ற வேண்டும்.

மக்களுடைய குறைகளை கனிவுடனும், கவனத்துடனும், பணிவுடனும், பரிவுடனும் கேட்டு, நடுநிலையுடனும், நேர்மையாகவும் பணிபுரிய வேண்டும். இதுதான் உங்களுடைய தலையாய கடமை என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு அம்மாவின் அரசு "உங்கள் சொந்த இல்லம்'' திட்டத்தின் கீழ் சீருடைப் பணியாளர்களுக்கென வீடுகள் கட்டிக் கொடுத்து வருகிறது. சென்னை வண்டலூருக்கு அருகில் மேலக்கோட்டையூரில் வீடுகள் கட்டிக் கொடுத்தது போல, கீழக்கோட்டையூரிலும் வீடுகள் கட்டிக் கொடுக்க விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன.

இதே போல, பிற மாவட்டங்களிலும் வீடுகள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காவலர்களின் நலன்களில் எங்கள் அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது என்பதை இது காட்டுகிறது.

குற்றவாளிகள் விட்டுச் செல்லும் தடயத்தை கண்டறிந்து துப்பறிவதும், எதிர்வரும் இடர்பாடுகளை முறியடித்து வெற்றி காண்பதும், விபத்து மற்றும் பேரிடர்களின் போது சவால்களை தைரியமாக எதிர்கொள்வதும் என சீருடைப் பணி என்பது பல தியாகங்களும், கடமைகளும் நிறைந்தது என்பதை நாம் அறிவோம். இதனைச் சொல்லும்போது ஒரு கதை எனக்கு நினைவுக்கு வருகிறது.

முன்னொரு காலத்தில், ஒரு கிராமத்தில் வாழ்ந்த மக்கள் அனைவரும், அங்கு அடிக்கடி கொள்ளையடிக்க வரும் கொள்ளையர்களால் மிகவும் துன்பத்துக்குள்ளாகி இருந்தனர்.

ஒரு நாள் அந்த கிராமத்து தலைவர் தலைமையில் ஊர் மக்கள் அனைவரும் கூடி கொள்ளையர்களின் பிடியில் இருந்து கிராமத்தை

காப்பாற்றுவது குறித்து விவாதித்தனர். அப்பொழுது அந்த கிராமத் தலைவன், யாராவது ஒருவர் அந்த கொள்ளையர்களுள் ஒருவனாக இருந்து அவர்களது நடவடிக்கைகளை கண்காணித்து தகவல் அனுப்பினால் நாம் தக்க சமயத்தில், கொள்ளையர்களை சுலபமாக பிடித்து விடலாம் என யோசனை கூறினார். கொடூரமான அந்த கொள்ளையர்களை கண்டு கிராமமே அஞ்சியதால் யாரும் அங்கு செல்வதற்கு முன்வரவில்லை. அப்பொழுது கூட்டத்தில் இருந்து ஒரு இளைஞன் அந்தப் பணியை செய்ய தைரியத்துடன் முன்வந்தான்.

அதன்படி, அந்த இளைஞன், கொள்ளையர்கள் வசிக்கும் பகுதிக்கு அருகில் குடியமர்ந்து, கொள்ளையர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாகி, அவர்களுடைய உதவியாளனாகவே மாறினான். கொள்ளையர்களுடன் இருந்து கொண்டே அவர்களின் நடவடிக்கைகளை நன்கு அறிந்து கொண்டான். இந்த விவரத்தினை, கொள்ளையர்கள் இல்லாத நேரத்தில் அவன் ஒரு பனை ஓலையில் எழுதி அருகிலுள்ள ஆற்றில் மிதக்கவிட்டான்.

அந்த ஓலை, அந்த கிராமத்து தலைவரை சென்றடைந்தது. அதனை பார்த்த கிராமத் தலைவர், அந்த இளைஞன் எழுதிய விவரங்களை கிராம மக்களிடம் கூறி, ஒரு திட்டம் தீட்டினார். அதன்படி கிராம மக்கள் அனைவரும், கொள்ளையர்கள் இருக்கும் பகுதிக்கு வந்தனர். இளைஞனின் யோசனைப்படி கொள்ளையர்கள் உணவு அருந்திவிட்டு ஓய்வாக இருக்கும் சமயத்தில், தாக்கி, கொள்ளையர்களை சிறைப்பிடித்து, அவர்கள் களவாடிய பொருட்களை மீட்டனர்.

ஒரு இளைஞனின் துணிச்சலான செயலால் ஒரு கிராமமே கொடூரமான கொள்ளையர்களிடம் இருந்து காப்பாற்றப்பட்டது.

அதுபோல் இன்று முதல் பணியில் சேரும் ஒவ்வொரு காவலரும், கடமையுணர்வுடனும், துணிவுடனும், சமயோசிதமாக செயல்பட்டு, நாட்டில் அமைதி நிலவ பாடுபடவேண்டும்.

பூவை பார்த்து ஒரு குழந்தை கேட்டது, உன்னை பறிக்கும்போது மலர்ந்த முகத்துடன் மணம் வீசுகிறாயே எப்படி என்று.... அதற்கு மலர் சொன்னது பறித்தவர் முகத்தில் தெரியும் சந்தோஷத்தை பார்த்து எனது வலியெல்லாம் மறந்து போகிறது என்று..... காவல் பணியும் அதுபோல தான், நேரம் காலம் கடந்து பல தருணங்களில் பாடுபட்டு உழைக்க வேண்டிய தன்னலமற்ற சேவை. ஆனால் அந்த உழைப்பால் மக்கள் பெரும் அமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றை கண்முன்னே நிறுத்தி பார்க்கும்போது உங்களுக்குள் ஒரு பூரிப்பும், மிடுக்கும் நிச்சயம் ஏற்படும். இன்று பணி நியமனம் பெற்றுள்ள உங்கள் கடமைக் கரங்கள் எதிர்காலத்தில் பதக்கங்கள் பல குவிக்கும் திறமைக்கரங்களாக திகழ வேண்டும் என உளமாற வாழ்த்துகிறேன்.

ஒளிவு மறைவின்றி, நேர்மையான முறையில் தேர்வுகளை நடத்தி உங்களை எல்லாம் தேர்வு செய்த சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத் தலைவர், வாரிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ***எடப்பாடி கே.பழனிசாமி*** *அவர்கள்*
16.10.2017 *அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற*
தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தால்
தேர்வு செய்யப்பட்ட சீருடைப் பணியாளர்களுக்கு பணி நியமன
ஆணைகளை வழங்கி ஆற்றிய உரை.

கோயம்புத்தூரில் ரூ.120 கோடி செலவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கான பாலம்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு 120 கோடி ரூபாயில் ஒரு பகுதியில் பணிகள் நிறைவு பெற்று, மக்களுடைய பயன்பாட்டிற்காக இப்பாலம் இன்றைக்கு திறந்து வைக்கப்படுகின்றது. அதுமட்டுமல்ல, மற்றொரு பகுதியிலும் விரைவாக அந்தப் பணிகள் முடிக்கப்பட்டு திறக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா கோவை மாநகரத்திலே கொண்டாடுகின்ற மாபெரும் பொதுக்கூட்டத்திலே, கோயம்புத்தூர் மாவட்டத்திற்குத் தேவையான திட்டங்களையெல்லாம் நாங்கள் அறிவிப்போம் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே, உங்களுடைய, இந்த மாவட்ட அமைச்சர் திரு.வேலுமணி அவர்களின் ரவுண்டாணா வேண்டுமென்ற கோரிக்கையை அரசு செய்து கொடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பிட்ட காலத்தில், பாலப்பணிகள் நிறைவு செய்யப்பட்டு இன்றைக்கு திறக்கப்பட்டிருக்கிறது. கடந்தகால ஆட்சியில், திட்டமிடாமல் பணிகளை துவக்குவார்கள், பாதியில் கிடப்பிலே போட்டுவிடுவார்கள். ஆனால், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், எந்தப் பணி செய்தாலும் திட்டமிட்டு செயல்பட வேண்டும், குறித்த காலத்திலே பணிகள் செய்து முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரவேண்டுமென்று அப்பொழுது ஆணையிட்டார்கள். அம்மா வழியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அம்மாவினுடைய அரசும், எந்தத் திட்டத்தை அறிவித்தாலும், அப்பணிகள் குறித்த காலத்தில் நிறைவேற்றப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு செயல்படுகின்ற அரசு என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ரூபாய் 121 கோடியில் அனுமதி அளித்து, உக்கடம் ஆற்றுப்பாலம் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்தார்கள். விரைவாக டெண்டர் விடப்பட்டு அந்தப் பாலப்பணியும் துவங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். கோவை மருத்துவமனையில் இருந்து உப்பிலிப்பாளையம் வரை சுமார் 9 கிலோமீட்டர் தூரம், ரூபாய் 900 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டது. அதுவும் நிறைவேற்றித் தரப்படும் என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மேம்பாலப் பணிகள் எல்லாம் முடிவடையும்பொழுது, கோவை மாவட்டம் ஒரு நெரிசல் இல்லாத நகரமாக உருவாக்கித் தருவதற்கு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மேற்கு புறவழிச்சாலை அமைக்கின்றபொழுது, நகரத்திற்குள் செல்லுகின்ற வாகனங்களெல்லாம் வெளியிலே மேற்கு புறவழிச்சாலை வழியாக செல்கின்றபொழுது, நகரத்திலே போக்குவரத்து நெரிசல் முற்றிலும் குறைக்கப்படும். கனரக

வாகனங்கள் நகரத்திற்குள் வந்துசெல்லாமல், புறவழிச்சாலை வழியாக செல்லுகின்ற சூழ்நிலையை உருவாக்குவதற்கு மேற்கு புறவழிச்சாலை அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, மாண்புமிகு அம்மாவிடைய அரசு, உங்களுடைய அரசு, மக்களுடைய அரசு, மக்களுக்கு என்ன தேவையோ அதை நிறைவேற்றுகின்ற ஒரே அரசு அம்மாவினுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். இந்த கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஏராளமான திட்டங்களை அம்மா அவர்கள் அறிவித்தார்கள், மாண்புமிகு அம்மாவினுடைய வழியில் வந்த அம்மாவினுடைய அரசும் அறிவித்திருக்கின்றது. அந்த திட்டங்கள் அனைத்தையும் நிறைவேற்றி கோயம்புத்தூர் மாவட்டம் தன்னிறைவு பெறுகின்ற மாவட்டம் ஆகும்.

இந்த விழாவில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு.பொள்ளாச்சி ஜெயராமன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.டி.என். ஹரிஹரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ***எடப்பாடி கே.பழனிசாமி*** *அவர்கள்*
01.11.2017 *அன்று கோயம்புத்தூரில் நடைபெற்ற விழாவில்,*
நெடுஞ்சாலைத் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள
மேம்பாலத்தை திறந்து வைத்து ஆற்றிய உரை.

மரம் தனக்காக பழம் தருவதில்லை!
மழை தனக்காக பொழிவதில்லை!
ஞானிகள் தனக்காக வாழ்வதில்லை!

விழாவுக்கு வருகை தந்திருக்கும் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களே,

மாண்புமிகு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோஹித் அவர்களே,

மாண்புமிகு மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் அவர்களே,

மாண்புமிகு மத்திய இணை அமைச்சர் திரு.பொன் ராதாகிருஷ்ணன் அவர்களே

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர் செல்வம் அவர்களே

தினத்தந்தி நாளிதழின் இயக்குநர் திரு. பாலசுப்ரமணிய ஆதித்தன் அவர்களே,

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,

பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களே,

திரைப்படக் கலைஞர்களே,

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே,

உங்கள் அனைவருக்கும் முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

பாமர மக்களை பத்திரிகை படிக்கும் ஆர்வத்தை தூண்டிய தினத்தந்தி நாளிதழின் பவள விழாவில் கலந்து கொள்வதில் பெருமை கொள்கிறேன். நமது மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் தைரியம், அன்பு, பொறுமை ஆகியவற்றின் வடிவமாகவே அவர் திகழ்கிறார். பல தொலை நோக்கு மற்றும் சீரமைப்புத் திட்டங்களை செயல்படுத்தி இந்தியா மிகப் பெரிய வளர்ச்சியை அடைந்திட நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இந்தியாவை புதிய யுகத்திற்குக் கொண்டு செல்வார் என்று நம்பி மக்கள் வழங்கிய பொறுப்பினை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் நமது திருநாட்டிற்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வருகிறார்கள்.

இத்தகைய பெருமை மிக்க நமது பாரதப் பிரதமர் அவர்கள் முன்னிலையில் இந்த விழா நடைபெறுவது என்பதை ஒரு வரலாற்று நிகழ்வாகவே நான் கருதுகிறேன். இந்த நாளிதழின் இயக்குநர் திரு. பாலசுப்ரமணிய ஆதித்தன் அவர்கள், தனது பாட்டனார் திரு. சி.பா.ஆதித்தனாரைப் போலவும், தனது தந்தை திரு. சிவந்தி ஆதித்தனைப் போலவும், கடுமையாக உழைத்து லட்சக் கணக்கான வாசகர்களைக் கொண்ட இந்த நாளிதழை, தொடர்ந்து முதல்நிலை நாளேடாக நடத்தி வரும் பெருமைக்குரியவர்.

இவர் தொடர்ந்து இந்தத் துறையில் சிறந்த சாதனை படைத்து இந்த நாளிதழின் பெருமையையும், சிறப்பையும், நூற்றாண்டையும் கடந்து மேன்மேலும் வளர்ப்பார் என நான் உறுதியாக நம்புகிறேன்.

ஜனநாயகத்தின் நான்கு தூண்களாக இருப்பது ஆட்சி அதிகாரம், அரசு நிர்வாகம், நீதி பரிபாலனம் மற்றும் பத்திரிகைகள் ஆகும். பத்திரிகை துறை ஜனநாயகத்தின் நான்காவது தூணாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

NEWS என்றால் North, East, West and South என்று நான்கு திசைகளைக் குறிப்பதாகும். அதாவது உலகின் நான்கு திசைகளிலும் நடைபெறும் அன்றாடச் செய்திகளை உடனடியாக, உண்மையாக மற்றும் உணர்வுபூர்வமாக மக்களிடம் கொண்டு செல்லும் பணியை ஆற்றுவது பத்திரிகைகள் தான்.

மக்களின் நாடி நரம்புகளை பிடித்துப் பார்த்து, அவர்களின் எண்ணங்களை சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லும் ஒரு அமைப்பாக செயல்படுவது பத்திரிகைத் துறை தான்.

நாட்டில் ஜனநாயகம் தழைத்தோங்க அரசாங்கமும், பத்திரிகைத் துறையும் வண்டியின் இரு சக்கரங்கள் போல இணைந்து செயல்பட வேண்டும்.

படித்தவர்களும், வசதி படைத்தவர்களும் மட்டுமே நாளிதழை படித்துக் கொண்டிருந்த காலத்தில், படிக்காத பாமர மக்களும் நாட்டு நடப்பை அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் முதலில் ‘தமிழன்’ என்ற வார இதழை திரு. சி.பா.ஆதித்தனார் அவர்கள் தொடங்கினார்.

பின்னர் அவரே, 15.10.1942ல் முதன் முதலாக மதுரையில் ‘அன்றைய செய்தியை அன்றே படியுங்கள்’ என்ற முழக்கத்துடன் “தந்தி” என்ற பெயரில் ஒரு நாளிதழைத் தொடங்கினார். சென்னைக்கு வெளியே தொடங்கப்பட்ட முதல் நாளிதழ் இது தான்.

பின்னர் இதுவே, 1943ல் சென்னையில் “தினத்தந்தி” என்ற பெயரில் தொடங்கப்பட்டது. இந்தப் பத்திரிகையின் மூலம் தமிழ்நாட்டில் வாசிப்புப் பழக்கம் அதிகரிக்க வழி வகுத்தார்.

அடிப்படை எழுத்தறிவு பெற்றவர்கள்கூட, செய்தி வாசிக்கும் பழக்கம் ஏற்பட இவரது முயற்சிகள் வழிவகுத்தன. இதுமட்டுமல்லாமல், படிப்பறிவு இல்லாத பாமர மக்கள் கூட எழுத்துக்கூட்டி படிக்க ஆரம்பித்தது, இவரது எளிய தமிழ் நடைக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

'மாதம் ஒரு நாவல்' என்னும் நோக்கத்தின் கீழ் 'ராணி முத்து' என்னும் புத்தகத்தை ஒவ்வொரு மாதமும் வெளியிட்டு தமிழ் பத்திரிகை உலகில் ஒரு புதிய அத்தியாயத்திற்கு திரு. சி.பா.ஆதித்தனார் அவர்கள் வித்திட்டார்கள். இதன் மூலம் வாசகர்கள் கதைகளையும் படிக்க ஆரம்பித்தனர். இதனால் இது வெகுஜன பத்திரிகையாக வலம் வர ஆரம்பித்தது.

"தந்தை மகனுக்கு ஆற்றும் உதவி அவையத்து முந்தி இருப்பச் செயல்" என்ற வள்ளுவரின் குறளுக்கு ஏற்றவாறு திரு. சிவந்தி ஆதித்தன் அவர்களை திரு. சி.பா.ஆதித்தனார் அவர்கள் வளர்த்தார்.

அதன் அடிப்படையில், தினத்தந்தி நாளிதழின் பொறுப்பினை திரு. சிவந்தி ஆதித்தன் அவர்களுக்கு அளித்தார்.

'மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
எந்நோற்றான் கொல் எனும் சொல்"

என்ற வள்ளுவரின் கூற்றின்படி தனது தந்தைக்கு பெருமை சேர்க்கும் வகையில், தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட தினத்தந்தி நாளிதழின் பதிப்புகளின் எண்ணிக்கையை பன்மடங்காக உயர்த்தினார் திரு சிவந்தி ஆதித்தன்.

இவரது நிர்வாகத் திறமையின் காரணமாக, தினத்தந்தி நாளிதழ் தமிழ்நாட்டிலேயே அதிக விற்பனை உள்ள நாளிதழ் என்ற பெருமையை தொடர்ந்து பல ஆண்டுகளாக தக்க வைத்துக் கொண்டு வருகிறது.

இவர் தமிழ் நாட்டிலேயே பிற்பட்ட பகுதியான திருச்செந்தூர் பகுதியில் பல கல்வி நிறுவனங்களை நிறுவி, அப்பகுதியிலுள்ள ஏழை மக்களும் கல்வி கற்க வழிவகை செய்தார். இவர் பத்திரிகைத்துறை மட்டுமின்றி விளையாட்டு, கல்வி, தொழில் போன்ற பல்வேறு துறைகளில் சாதனை படைத்துள்ளார். மாண்புமிகு அம்மாவின் ஆட்சி காலத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் துணைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

இலக்கியம் மற்றும் கல்வித்துறையில் சிறந்த சேவை புரிந்ததற்காக கடந்த 2008–ஆம் ஆண்டில் மத்திய அரசு இவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கி கவுரவித்தது.

ஒரு தினசரி பத்திரிகையில் செய்திகள் மட்டும் இருந்தால் போதாது; பொழுதுபோக்குப் பகுதிகளும் இருக்கவேண்டும். அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில் அப்படித்தான் தினசரி பத்திரிகைகள் வெளியிடப்படுகின்றன.

தமிழ்நாட்டில் அந்த முறையை முதன் முதலில் புகுத்திய பெருமை தினத்தந்தியைச் சாரும். இந்தப் பத்திரிகையின் வெள்ளி விழாவில் கலந்துக் கொண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசுகையில் “வீட்டில் ஒரு வானொலி பெட்டகம் இருந்தால் எப்படி உலக செய்திகளில் இருந்து கலை, பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் வரை கேட்டு ரசிக்கிறோமோ, அப்படிப்பட்ட அனுபவத்தை தினத்தந்தி நாளேட்டை படிக்கும் இலட்சக்கணக்கான மக்கள் பெறுகிறார்கள்”, என்று பாராட்டினார்.

“தமிழனுடைய உரிமை பறிக்கப்படும் என்ற நிலை ஏற்படுகின்ற ஒவ்வொரு நேரத்திலும் தமிழர்கள் தங்களை பாதுகாத்துக் கொண்டு தீரவேண்டும் என்று கட்டாயம் வரும் ஒவ்வொரு நேரத்திலும் தினத்தந்தி நாளிதழ் வெறும் செய்திப் பத்திரிகையாக மட்டும் இல்லாமல் தமிழர்களுக்கு வாளாகவும், கேடயமாகவும், தமிழர்

உரிமையை பாதுகாக்கக் கூடிய ஒரு போர் வீரனாகவும் விளங்கிக் கொண்டு வருகிறது'', என்றும் பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் 24.5.1987 அன்று சென்னையில் திரு.சி.பா.ஆதித்தனார் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து, ''ஆதித்தனார் அவர்கள் அமைத்த நிறுவனங்களை அவருடைய மகன் திரு. சிவந்தி ஆதித்தன் அவர்கள் கட்டிக் காத்து வருவதுடன், மெச்சத் தகுந்த வழியில் வளர்த்து வருகிறார்'', என்று பாராட்டினார்.

தினத்தந்தி நாளிதழின் சிறப்பையும் நடுநிலைமையையும் அங்கீகரித்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2014 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலுக்காக வெளியிட்ட அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையின் முதல் பிரதியை தினத்தந்தி நிருபரிடம் வழங்கினார்கள்.

சென்னை எழும்பூரில் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட திரு. ஆதித்தனாருடைய திருவுருவச் சிலையை சுற்றியுள்ள பகுதியில் அமைந்துள்ள போக்குவரத்து பூங்காவை மேம்படுத்துவதற்காக தற்காலிகமாக தினந்தந்தி நிர்வாகத்திடம் அந்த திருவுருவச் சிலை ஒப்படைக்கப்பட்டது.

அன்னாரது பிறந்த நாளான 27.9.2017 அன்று பொதுமக்கள் கலந்துக் கொள்ளும் வகையில் அத்திருவுருவச்சிலை மீண்டும் அதே இடத்தில் வைக்கப்பட்டுள்ளது. மேலும், பீடத்தை சுற்றியுள்ள பகுதியினை அழகுப்படுத்தும் பணிகளை வரும் டிசம்பர் மாதத்திற்குள் சென்னை பெருநகர மாநகராட்சி முடிக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தினத்தந்தி பத்திரிகையானது தனது எழுத்துப் பணியினை பல நூற்றாண்டுகள் தொடர வாழ்த்துகிறேன்.

மரம் தனக்காக பழம் தருவதில்லை; ஆறு தனக்காக ஓடுவதில்லை;

காற்று தனக்காக வீசுவதில்லை;

சூரியன் தனக்காக ஒளி வீசுவதில்லை;

மழை தனக்காக பொழிவதில்லை;

ஞானிகளும் தனக்காக வாழ்வதில்லை.

அதுபோல அனைத்து பத்திரிகைகளும் தன்னலம் கருதாமல் நடுநிலைமையுடன் செயல்படவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த நிகழ்ச்சியில் என்னை அழைத்தமைக்காக தினதந்தி நிர்வாகத்திற்கும், இச்சிறப்புமிகு விழாவில் கலந்து கொள்ள புதுடில்லியிலிருந்து வந்திருக்கும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும், நிகழ்ச்சியில் பங்கு பெற்ற அனைவருக்கும், விழா குழுவினருக்கும் எனது மனமார்ந்த நன்றியைக் கூறி விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் **06.11.2017** அன்று சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா கலையரங்கத்தில் நடைபெற்ற தினத்தந்தி நாளிதழின் பவள விழாவில் ஆற்றிய உரை .*

எதிர்வரும் போட்டித் தேர்வுகளில் வெற்றிபெற்று, நீங்களும் உயர்ந்து, தமிழ் சமுதாயத்தையும் உயர்த்திட வேண்டும்!

தமிழ் மக்களின் இதயங்களில் என்றென்றும் நீக்கமற நிறைந்திருக்கும் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, இந்த இனிய விழாவில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்விழாவில் சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே !

தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.கே.ஏ. செங்கோட்டையன் அவர்களே!

வாழ்த்துரை வழங்கிய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் திரு. கே.பி.அன்பழகன் அவர்களே !

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே !

வருகை தந்துள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே !

வரவேற்புரை ஆற்றிய தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன் அவர்களே !

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திருமதி. பா.வளர்மதி அவர்களே !

நன்றியுரை ஆற்றவுள்ள பள்ளிக் கல்வித் துறையின் அரசு முதன்மை செயலாளர் திரு. பிரதீப் யாதவ் அவர்களே !

மற்றும் வருகை தந்துள்ள பள்ளிக் கல்வித்துறையின் பல அலகுகளின் இயக்குநர்களே

விழாவிற்கு வருகை புரிந்துள்ள முன்னாள் அமைச்சர் பெருமக்களே,

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

கல்வித்துறை அதிகாரிகளே,

ஆசிரியப் பெருமக்களே!

பெற்றோர்களே!

நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்க உள்ள

மாணவச் செல்வங்களே !

பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண்

எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

“மாணவ மாணவியருக்கு சிறப்பான கல்வி அளிப்பதாலும், மக்களின் உடல் நலம் பேணி பாதுகாக்கப்படுவதாலும் மனித வளம் மேம்பாடு அடையும். மனித வளம் மேம்பட்டால், அந்த மாநிலத்தில் வளர்ச்சி அதிகமாக இருக்கும்” என்று கூறிய மாண்புமிகு அம்மா அவர்கள், அதனை நடைமுறைப்படுத்தும் வகையில், பள்ளிக்

கல்வித் துறைக்கு வரலாறு காணாத அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்து, பல்வேறு வசதிகளை மாணாக்கர்களுக்கு செய்து கொடுத்துள்ளார்கள்.

குறிப்பாக,

❖ விலையில்லா புத்தகங்கள், புத்தகப் பை, சீருடை, காலணிகள், எழுதுபொருட்கள் உள்ளிட்ட 14 வகையான நலத்திட்டப் பொருட்கள் மாணாக்கர்களுக்கு விலையின்றி வழங்கப்படுகின்றன.

❖ மாணாக்கர்கள் பள்ளிக்குச் செல்ல வசதியாக மிதி வண்டிகளும், கற்றலை எளிதாக்கி இணையம் மூலம் கல்வி பயில வசதியாக மடிக் கணினிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசும் இத்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. மேலும்,

❖ மதிப்பெண் அடிப்படையிலான தரப்பட்டியல் முறை முழுவதுமாக கைவிடப்பட்டிருக்கிறது.

❖ அரசுப் பொதுத் தேர்வு எழுதிய மாணாக்கர்கள் தங்களின் தேர்வு முடிவுகள் அறிய அங்குமிங்கும் அலைவதை தவிர்க்கும் வகையில், குறுஞ்செய்தி மூலம் தேர்வு முடிவுகளை அனுப்பும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

❖ ஆண்டின் தொடக்கத்திலேயே பொதுத் தேர்வுக்கான கால அட்டவணை அறிவிக்கும் முறை அமல்படுத்தப்பட்டது.

❖ 11ஆம் வகுப்பிற்கும் பொதுத் தேர்வு முறை கொண்டுவரப்பட்டது.

❖ மேலும், ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் ஒளிவு மறைவின்றி இவ்வாண்டு 2,373 ஆசிரியர் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டு உள்ளன.

❖ 1 முதல் 12ஆம் வகுப்பு வரையிலான பாடத் திட்டங்களை மாற்றியமைக்கும் பணிக்கென ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

“பல்வேறு துறைகளைச் சார்ந்த உலகத் தரம் வாய்ந்த நிறுவனங்களாலும், மிகச் சிறந்த மனித வளத்தினாலும், புதுமைகளின் முக்கிய மையமாகவும், இந்தியாவின் அறிவின் தலைநகராகவும் தமிழ்நாடு அறியப்படும்” என்று “தமிழ்நாடு தொலைநோக்கு பார்வை – 2023”– கையேட்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குறிப்பிட்டுள்ளதை மெய்ப்பிக்கும் வண்ணமாக, இன்றைய தினம், மாணவர்களின் அறிவுத் திறனை மேலும் மெருகூட்டி, அடுத்த கட்டத்திற்கு முன்னெடுத்துச் செல்லும் விதத்தில் இப்பயிற்சி வகுப்பினை தொடங்கி வைத்து அதற்கான நூல்களை வெளியிடுவதில் மிகவும் பெருமிதம் கொள்கிறேன்.

தகுதி நுழைவு போட்டித் தேர்வுகளை மாணவர்கள் எவ்வித தயக்கமும், தளர்வும் இல்லாமல் உறுதியான எண்ணத்தோடு எதிர்கொள்ளும் வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு எடுத்த முடிவின்படி தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையும், ஸ்பீடு அறக்கட்டளையும் இணைந்து மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு, அது இன்று செயல் வடிவம் பெறுகிறது.

இத்திட்டத்தின் மூலம் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளை சேர்ந்த மாணாக்கர்கள் பயன் பெறுவர். இதுவரை இப்பயிற்சிக்காக இணையதளம் வாயிலாக 73 ஆயிரம் மாணவர்கள் தங்களின் பெயர்களை பதிவு செய்துள்ளனர் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கும் இத்திட்டமானது இவ்வாண்டு 12–ஆம் வகுப்பு மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்படுகிறது. இப்பயிற்சி மையத்தினை, ஒன்றியத்திற்கு ஒரு மையம் என்ற வீதத்தில் தமிழ்நாட்டில் மொத்தமாக 412

மையங்களில் நடத்த திட்டமிடப்பட்டு அதற்கான பணிகள் மிக விரைவாக நடைபெற்று வருகின்றன.

இன்றைய தினத்தில் முதல் கட்டமாக 100 மையங்களில் இப்பயிற்சி தொடங்கப்படுகிறது. மிக விரைவில் மீதமுள்ள 312 மையங்களும் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

மாணவர்களிடமிருந்து எவ்வித கட்டணத்தையும் பெறாமல் 12ஆம் வகுப்புக்கு பின் தொழில்சார் பட்டப் படிப்புகளில் சேர விருப்பம் உள்ள மாணவர்களுக்கு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

மேலும் தமிழ் மற்றும் ஆங்கில வழியில் பயிலும் மாணவர்கள் பாடப் பொருளை எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் அவர்களின் பயிற்று மொழியிலேயே மிகச் சிறந்த பாட வல்லுநர்களைக் கொண்டு இப்பாடங்கள் நடத்தப்படும்.

இதற்கான பாடப் பகுதிகள் மாணவர்களுக்கு 30 பயிற்சி கட்டகங்கள், அதாவது 30 புத்தகங்களாக வழங்கப்படும். பள்ளிகளில் பெறும் கல்விச் செயல்பாடுகளில் எவ்விதத் தேக்கமும் அடையா வண்ணம், மாணவர்களுக்கு இப்பயிற்சி வகுப்புகள் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை பள்ளி விடுமுறை நாட்களான சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும், பொதுத் தேர்வு முடிவடைந்த பிறகு தினந்தோறும் இதே நேரத்தில் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இப்புத்தகத்தில் இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் கொள்குறி வகை (Objective type) வினாக்களும் மற்றும் அதன் பாடப் பொருட்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

மாநில பாடத் திட்டத்தில் படித்த மாணவர்கள் அனைத்திந்திய அளவிலான போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற முடியுமா ? என்ற கேள்வி நிறையவே எழுந்து கொண்டிருக்கின்றன.

நான் ஒன்றை மட்டும் உறுதியாக சொல்லுவேன். தற்பொழுது உள்ள நம் மாநில பாடத் திட்டம் இந்தியாவில் உள்ள எந்த ஒரு பாடத்

திட்டத்திற்கும் சளைத்தது அல்ல. அத்தகைய போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ளும் வகையில் நம் மாணவர்களுக்கு சரியான முறையில் பயிற்சி அளிப்பதே தற்போதைய தேவையாகும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் வழிவந்த அம்மாவின் அரசு அதற்கான அடித்தளத்தை மாணவர்களுக்கு அமைத்துக் கொடுக்கிறது. முயற்சியும், பயிற்சியும் முறையாக இருந்தால் முன்னேறுவது உறுதி என்பதால்தான் இன்றைய தினம் முறையான பயிற்சியை மாணவர்களுக்கு கொண்டு சேர்க்கும் பணியை நாம் முன்னெடுத்து இருக்கிறோம்.

மிகச் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு இப்பயிற்சி கட்டணமின்றி வழங்கப்பட உள்ளதால், போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ள வேறு எந்தப் பயிற்சியும் எடுத்துக் கொள்ள தேவையும் இல்லை; அதற்கென வேறு எந்த செலவினமும் செய்ய வேண்டிய அவசியமும் இல்லை. ஆண்டு பொதுத் தேர்வுக்கும், மாணவர்கள் கடினமாக நினைத்துக் கொண்டிருக்கும் போட்டி தேர்வுகளுக்கும் அப்படி என்னதான் வேறுபாடு என எண்ணிப் பார்த்த பொழுது, எனக்கு ஒரு சிறிய கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு ஊரில் அனைத்து கலைகளையும் கற்றுத் தேர்ந்த குரு ஒருவர் வாழ்ந்து வந்தார். அவரைப் பற்றிக் கேள்விப்பட்ட மூன்று மாணவர்கள், அக்குருவிடம் சீடர்களாக சேர வருகிறார்கள். குருவினை வணங்கி, தங்கள் விருப்பத்தினை அவரிடம் தெரிவிக்கின்றனர்.

பொறுமையாக அவர்கள் கூறுவதை கேட்ட குரு, அவர்களிடம், நாளை வாருங்கள் பார்க்கலாம் என்று கூறி அவர்களை அனுப்பி வைக்கிறார். பின், அவர் தன் மனைவியிடம், நாளை அம்மாணவர்கள் வரும்போது, “நேற்று இரவு குரு உறங்கி கொண்டிருந்த போது அவரின் காதில் ஓணான் ஒன்று புகுந்து கடித்ததனால், குரு இறந்துவிட்டார்”, என்று தெரிவிக்குமாறு கூறுகிறார்.

அடுத்த நாள், அவர்களில் முதலாவதாக வந்த மாணவனிடம் குருவின் மனைவி, குரு சொன்னதை அப்படியே சொல்கிறார். அதைக் கேட்ட அம்மாணவன், "ஓ! அப்படியா, அவரின் ஜாதகப்படி இம்மாதத்தில் அவருக்கு ஒரு கண்டம் இருந்தது. அதனால்தான் அவர் இறந்து இருப்பார்", என்று தன்னைத்தானே தேற்றிக் கொண்டு திரும்பிச் சென்று விடுகிறான்.

சிறிது நேரத்தில் அங்கு வந்த இரண்டாம் மாணவனிடமும் குருவின் மனைவி அதே செய்தியை கூறுகிறார். இரண்டாம் மாணவரும், "ஓ! குரு இறந்துவிட்டாரா, அவரிடம் கல்வி கற்க ஆவலுடன் இருந்தேன். சரி, வேறு ஒரு குருவினைத் தேடி அவரிடம் கல்வி கற்றுக் கொள்கிறேன்", என்று கூறி திரும்பிச் சென்று விடுகிறார்.

மூன்றாம் மாணவனிடமும், அதே செய்தியை குருவின் மனைவி சொன்ன போது, அம்மாணவன் சற்று யோசித்துவிட்டு, "மன்னிக்கவும், தாங்கள் பொய் சொல்வதாக நினைக்கிறேன். குரு இறப்பதற்கான வாய்ப்பில்லை", என்று கூறுகிறான்.

மறைவிலிருந்து இதனைக் கேட்டுக் கொண்டிருந்த குரு, "ஆஹா, நீயே சரியான மாணவன் ! உன்னை நான் என் சீடனாக ஏற்றுக் கொள்கிறேன்", என்றார். குருவின் மனைவி ஆச்சரியத்துடன், அம்மாணவனைப் பார்த்து, "குரு இறக்கவில்லை என்பதை நீ எவ்வாறு அறிந்தாய் ?" எனக் கேட்கிறார்.

அதற்கு அந்த மாணவன், "தாயே, தங்கள் கணவர் இறந்ததாக தாங்கள் கூறிய போது உங்கள் முகத்தில் எந்தவிதமான துக்கத்தின் சாயலையும் நான் பார்க்கவில்லை.

மேலும் ஒரு மனிதனின் காதில் ஒணான் நுழைவதற்கு வாய்ப்பில்லை. அப்படியே நுழைந்து கடித்தாலும் அதனால் உயிருக்கு எவ்வித ஆபத்தும் வராது என்பதாலேயே, குரு இறக்கவில்லை என்று நான், உறுதியாகக் கூறினேன்", என்றான்.

மாணவச் செல்வங்களே, இக்கதையில் வரும் முதல் மாணவன் தன் மதியை நம்பாமல், விதியை நம்பி சென்று விடுகிறான். இரண்டாம் மாணவன், தான் கேட்ட செய்தியின் உண்மைத் தன்மையை அறியாமல், குருவின் மனைவி சொன்னதே உண்மை என்று எண்ணி, குரு இறந்து விட்டார், இனி என்ன செய்வது? என்ற கேள்விக்கு இறந்த மனிதரிடம் சீடராக சேர முடியாது. ஆகவே வேறு குருவை தேடிக் கொள்வோம் என்ற யதார்த்த சிந்தனையுடன் சென்று விடுகிறார்.

மூன்றாம் மாணவரிடம், அதே கேள்வி கேட்கப்பட்டபோது உடனே அம்மாணவன், அச்செய்தியில் உள்ள உண்மைத் தன்மையை அறிய, ஏன்? எதற்கு? எங்கே? எப்படி? எப்பொழுது? யாரால்? என்ற கேள்விகளின் துணை கொண்டு பகுத்தாய்ந்து, குரு இறக்கவில்லை, இறக்க வாய்ப்பில்லை என்ற உறுதியான நிலைபாட்டினை எடுக்கிறார்.

இத்தகைய சிந்தனையே போட்டித் தேர்வுகளுக்கான கேள்விகளை எதிர்கொள்ள தேவையானதாகும். ஆகவே மாணவர்களாகிய நீங்கள் எந்த நேரத்திலும் ஏன்? எதற்கு? எப்படி? எங்கே? எப்பொழுது? யாரால்? என்ற கேள்விகளை உங்களுக்கு துணையாக அழைத்துச் செல்லுங்கள்.

உங்களை சறுக்கி விழாமல் தாங்கிப் பிடிக்கும் தூண்களாக அவை செயல்படும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். இலக்கினை இறுதி செய். மனதினில் உறுதி கொள். விரும்பிய இலக்கினை நோக்கிய உன் பயணம் இனிதானதாகும்.

உன் இலக்கை நோக்கி பறந்து செல், பறக்க முடியவில்லை என்றால் ஓடு, ஓட முடியாவிட்டால் நடந்து செல், நடக்கவும் முடியாவிட்டால் தவழ்ந்து செல். இலக்கினை நோக்கிய பயணம் எத்தகையது என்பது முக்கியமல்ல. நீ, உன் இலக்கினை நோக்கி, இடையூறுகளை தகர்த்து எப்படி முன்னேறிக் கொண்டிருக்கிறாய் என்பதே முக்கியம்.

அரசும், அதன் அங்கமாகிய ஆசிரியர்களும் உங்களுக்கு நல்ல பாதையை மட்டுமே காட்ட முடியும். ஆனால் நீங்கள்தான் அந்தப் பாதையில் எங்ஙனம், எவ்வளவு தூரம் செல்ல முடியுமென முடிவு செய்து முன்னேற உங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆகவே தான் முயலுக்கும் ஆமைக்குமான போட்டியில் முயலும் வெல்லலாம், ஆமையும் வெல்லலாம். ஆனால் ஒருபோதும் முயலாமை வெல்லாது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

ஒரு செயலை தொடங்கும் போதே, என்னால் முடியாது என நினைத்து தொடங்காதீர்கள். என்னால் முடியாவிட்டால் இவ்வுலகில் வேறு யாரால் முடியும் என்ற எண்ணத்தில் செயலைத் தொடங்குங்கள். வெற்றி நிச்சயம்.

“மாற்றத்திற்கான தொடக்கமே
முன்னேற்றத்திற்கான அடையாளம்” என்பார்கள்.

ஆழ உழாத நிலமும், ஆழ்ந்து படிக்காத மனமும் ஆக்கம் பெறுவதில்லை. ஆகவே எதையும் ஆழ்ந்து படிக்க கற்றுக் கொள்ளுங்கள். அவ்வாறான ஆழ்ந்த கற்றலில் புரியாததை புரிந்து கொள்ளுங்கள்.

புரிந்ததை பகிர்ந்து கொள்ளுங்கள். முயற்சி செய்தால் முடியாதது ஒன்றுமில்லை ஆகவேதான் முயற்சியை பற்றி கூறும் போது தெய்வப்புலவர் திருவள்ளுவர், “அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும் பெருமை முயற்சி தரும்” – என்று கூறுகிறார்.

அதாவது எந்த ஒரு செயலையும் செய்ய ஆரம்பிக்கும் போது, இதை நம்மால் செய்ய இயலாது என்று மனத்தளர்ச்சி அடைந்து சோர்வு கொள்ளல் ஆகாது. என்னால் எதையும் சாதிக்க முடியும் என்ற மன வைராக்கியத்தோடு செயல்படுங்கள்.

“ மூச்சு விடுபவன் – மனிதன், மூச்சை அடக்குபவன் – ஞானி, மூச்சே போகும் என்றாலும் முயற்சியை கைவிடாதவன் தான் – மாமனிதன்” அத்தகைய மாமனிதனே உலகை வெல்லப் பிறந்தவன். முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் என்ற கூற்றிற்கிணங்க,

உங்களின் முழு ஆற்றலையும் வெளிக்கொணர்ந்து, தமிழ்நாடு அரசால் அளிக்கப்படும் இந்தப் பயிற்சியின் துணை கொண்டு, எதிர்வரும் போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற்று, நீங்களும் உயர்ந்து, நம் தமிழ் சமுதாயத்தையும் உயர்த்திட வேண்டுமாய் அன்போடு கேட்டுக் கொண்டு உங்களை எல்லாம் வாழ்த்தி விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ***எடப்பாடி கே.பழனிசாமி*** *அவர்கள்*
13.11.2017 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில்
நடைபெற்ற பள்ளி மாணவ, மாணவியருக்கு பல்வேறு
போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்பு தொடக்க விழா மற்றும்
கையேடு வெளியீட்டு விழாவில் ஆற்றிய உரை.

மருத்துவர்கள் மக்களுக்கு முழுமனதோடு பணியாற்றி, நாட்டிற்கு பெருமை சேர்க்க வேண்டும்!

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

பணி நியமன ஆணை பெறவிருக்கும் சிறப்பு மருத்துவர்களே!

தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வாகி பணி நியமனம் பெறவிருக்கும் தட்டச்சர்களே!

சுருக்கெழுத்து தட்டச்சர்களே!

பெரியோர்களே! தாய்மார்களே!

ஊடகம் மற்றும் பத்திரிகைத் துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு, இந்த இனிய விழாவில் கலந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு உயர்தர மருத்துவ சேவைகளை வழங்குவது மட்டுமல்லாமல், மிகச் சிறந்த மனிதவளம் மற்றும் கட்டமைப்பை தொடர்ந்து ஏற்படுத்தி வருவதனால், இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக விளங்கி வருகிறது.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, உலக சுகாதார நிறுவனத்தின் கோட்பாட்டின் அடிப்படையில், அனைவருக்கும் சமமான, எளிதில் கிடைக்கக்கூடிய தரமான மற்றும் இலவச மருத்துவ சேவைகள், மக்களுக்கு சிறப்பான முறையில் தொடர்ந்து வழங்கி வருகிறது.

“சமூக, பொருளாதாரப் பின்னணி எதுவாக இருந்தாலும், அதனைக் கருத்தில் கொள்ளாமல் மாநிலத்திலுள்ள அனைத்து மக்களுக்கும், மருத்துவ சிகிச்சை தொடர்பான அனைத்து நடைமுறைகள், தொழில்நுட்பங்கள், மருத்துவத்திறன் செயல்பாடுகள் ஆகியவற்றை கிடைக்கச் செய்வதே எனது நோக்கமாகும்” என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தெள்ளத் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும், வளர்ந்த நாடுகளுக்கு இணையாக சுகாதார குறியீடுகளை அடையும் வண்ணம் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் “தொலைநோக்கு திட்டம் 2023”–ல் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அதனை நிறைவேற்றிடும் வகையிலும் தமிழ்நாடு அரசு உறுதியுடன் செயல்பட்டு வருகிறது.

அரசு மருத்துவமனைகளில் உள்ள பணியிடங்களை உடனுக்குடன் நிரப்பி அரசு மருத்துவ நிலையங்களுக்கு வரும் ஏழை எளிய மக்களுக்கு தங்குதடையின்றி மருத்துவ சேவை

வழங்கப்பட வேண்டுமென்ற உயரிய நோக்கத்தில், வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழ்நாட்டில் மட்டும்தான் இந்தியாவிலேயே முதன்முறையாக மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறைக்கென தனியாக “மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம்” 2012–ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இவ்வாரியத்தின் மூலம் மக்கள் நல்வாழ்வுத் துறையில் ஏற்படும் காலிப் பணியிடங்களை நிரப்ப, ஆண்டு முழுவதும் ஒரு கால அட்டவணையை நிர்ணயித்து, சுழற்சி முறையில் தேர்வுகள் நடத்தி, தகுதி அடிப்படையில் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பிற பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகிறது.

இவ்வாரியத்தால் இதுவரை 10,858 மருத்துவர்கள் மற்றும் சிறப்பு மருத்துவர்கள் 9,533 செவிலியர்கள் மற்றும் இதர மருத்துவப் பணியாளர்கள் உட்பட 23,466 பணியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக இன்றைய தினம் மருத்துவ பணியாளர் தேர்வு வாரியத்தால் தெரிவு செய்யப்பட்டுள்ள 556 சிறப்பு மருத்துவர்கள் மற்றும் தமிழ்நாடு பணியாளர் தேர்வாணயத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட 175 இளநிலை உதவியாளர்கள்,

49 தட்டச்சர்கள் மற்றும் 7 சுருக்கெழுத்து தட்டச்சர்கள் ஆகியோருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட உள்ளது.

இன்று பணி நியமன ஆணை வழங்கப்பட்ட 556 சிறப்பு மருத்துவர்களுடன் சேர்த்து இவ்வாண்டு மட்டும் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் அரசால் 721 சிறப்பு மருத்துவர்களுக்கும் 1329 மருத்துவர்களுக்கும், என மொத்தம் 2050 மருத்துவர்களுக்கு பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசில் தமிழகத்திலுள்ள 1748 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உட்பட

அனைத்து அரசு மருத்துவமனைகளிலும், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் 96 சதவீத பணியிடங்களில் மருத்துவர்கள் பணியாற்றி வருகின்றனர் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்வதோடு, மீதமுள்ள 4 சதவீத மருத்துவர் பணியிடங்களும் விரைவில் நிரப்பப்படும் என்பதை இத்தருணத்தில் உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

மேலும், செவிலியர்கள், மருந்தாளுநர்கள், அடிப்படைப் பணியாளர்கள் உட்பட அனைத்து காலிப் பணியிடங்களும் உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகிறது. இதன் மூலம், தமிழ்நாட்டின் தாய்சேய் நல சேவைகள், தடுப்பூசிப் பணிகள், தொற்றுநோய் கட்டுப்பாடு போன்ற பல்வேறு சுகாதாரப் பணிகள் நாட்டிற்கே எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம்,

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்,

அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம்,

அம்மா ஆரோக்கிய திட்டம்,

அம்மா மகப்பேறு சஞ்சீவி திட்டம்,

அம்மா முழு உடல் பரிசோதனை திட்டம்

மற்றும் மகளிருக்காக அம்மா மகளிர் சிறப்பு

முழு உடல் பரிசோதனை திட்டம்,

விலையில்லா சானிடரி நாப்கின் வழங்கும் திட்டம்,

நடமாடும் மருத்துவமனை திட்டம்,

தொற்றாநோய் தடுப்பு, கட்டுப்படுத்தல் மற்றும் சிகிச்சை அளிக்கும் திட்டம்,

தரணி போற்றும் தாய்ப்பால் வங்கி திட்டம்,

உயர்நிலை மருத்துவமனைகளில் கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்துதல்,

தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை,

விபத்து சேவை மையங்களுடன் கூடிய உயர் சிறப்பு மருத்துவமனைகள் நிறுவுதல்,

'108' – அவசர கால ஊர்தி சேவை மற்றும்

'104' – தகவல், ஆலோசனை மற்றும் புகார் உதவி மையம்

போன்ற பல்வேறு சிறப்புத் திட்டங்கள் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் தொடங்கப்பட்டு, தொடர்ந்து சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் செயல்பாட்டினை கருத்தில் கொண்டு ஜப்பானிய வளர்ச்சி நிறுவனமான JICA அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளை உலக தரத்திற்கு மேம்படுத்த, 2016 ஆம் ஆண்டு 1 ஆயிரத்து 634 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

மேலும், பன்னாட்டு வளர்ச்சி நிறுவனமான உலக வங்கி தமிழ்நாடு சுகாதார திட்டம்–2க்கு சமீபத்தில் ரூபாய் 2 ஆயிரத்து 685 கோடி நிதி வழங்கிட முதல் கட்ட ஒப்புதல் அளித்துள்ளது.

புயல் வெள்ளம் போன்ற பேரிடர் நிகழ்வுகளாக இருந்தாலும், காலிப்பணியிடங்களை நிரப்புகின்ற பணியாக இருந்தாலும், விரைந்து செயல்படும் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையை நான் மனதார பாராட்டுகிறேன்.

மக்கள் நன்மைக்காக, தியாகங்கள் செய்வது, மக்களுக்கு உதவி செய்ய உறுதி எடுத்துக் கொள்வது, அவர்களின் மகிழ்ச்சியிலும், துயரத்திலும் பங்கு கொள்வது ஆகிய பல்வேறு கடமைகள் உங்கள் முன்னால் உள்ளன.

மருத்துவத் துறையில் தன்னலமற்ற சேவை ஆற்றுவதும், தேவைப்படுவோருக்கு மருத்துவ உதவிகளை அளிப்பதும் உங்கள் முக்கிய கடமையாக இருக்க வேண்டும். இது உண்மையிலேயே மிகப்பெரிய பொறுப்புதான்.

இந்த பொறுப்பை நீங்கள் சிறப்பாக நிறைவேற்றும்போது, சம்மந்தப்பட்ட நோயாளியின் புன்னகையில், உங்களுக்கு மிகச்சிறந்த மனநிறைவு கிடைக்கும் என்ற மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கூற்றை இந்த நிகழ்ச்சியின் மூலம் நினைவு கூறுகின்றேன்.

தெய்வப்புலவர் திருவள்ளுவரின் வாக்கிற்கிணங்க உங்கள் பெற்றோர்க்கு பெருமை சேர்த்தும், அரசுக்கு நற்பெயர் ஈட்டித் தரும் வகையிலும் உங்கள் பணி சிறந்திட வாழ்த்துகிறேன்.

அதுமட்டுமல்ல, மருத்துவர்களாக பணி ஆணைகளை பெற்று மருத்துவ சேவை புரியவிருக்கின்ற உங்களுக்கு மனதார என் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, யாருக்கும் கிடைக்காத பெருமை மருத்துவர்களுக்குத்தான் கிடைக்கின்றது. உயிருக்குப் போராடுகின்ற ஒரு நோயாளியை நீங்கள் காப்பாற்றுகின்றபொழுது, அந்த நோயாளி குணமடைந்து உங்களை சந்திக்கின்றபோது உங்களைப் பார்த்து, இறைவன்போல் என்னைக் காப்பாற்றினீர்கள் என்று அந்த நோயாளி பெருமையோடு சொல்லுகின்ற பாக்கியம் மருத்துவர்களுக்குத்தான் கிடைக்கும். அப்படிப்பட்ட சிறப்பான சேவைப்பணி உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. நீங்கள் மக்களுக்கு முழுமனதோடு பணியாற்றி, நாட்டிற்கும் உங்கள் வீட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டுமென்று வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

நன்றி ! வணக்கம்.

---

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
21.11.2017 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில்
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் நடைபெற்ற
நிகழ்ச்சியில், மருத்துவர்கள் மற்றும் அமைச்சு பணியாளர்களுக்கு
பணி நியமன ஆணைகளை வழங்கி ஆற்றிய உரை.

உடல் உறுப்பு தானம் செய்வோம்!
மனித உயிர்களைக் காப்போம்!

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே நல்லதொரு கருத்துக்களை வழங்கி அமர்ந்து இருக்கின்ற மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்களே !

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்களே !

நிகழ்ச்சியிலே பங்கு கொண்டிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே !

தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன் அவர்களே !

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களே !

புது டெல்லி நோட்டோ இயக்குநர் டாக்டர் விமல் பண்டாரி அவர்களே !

வருகை தந்துள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,
முன்னாள் அமைச்சர் பெருமக்களே,
முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையில் உள்ள துறைத் தலைவர்களே ! அலுவலர்களே !

உடல் உறுப்பு தானம் செய்தோரின் குடும்ப உறுப்பினர்களே!
சிகிச்சை அளித்த மருத்துவ நிபுணர்கள் மற்றும் செவிலியர்களே !

வருகை தந்துள்ள பெரியோர்களே தாய்மார்களே !

பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல் உறுப்பு தானத்தை ஊக்குவிக்கும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் இறுதி வாரம் உடல் உறுப்பு தான வாரமாக கொண்டாடப்படுகிறது.

அந்த வகையில், இன்று உடல் உறுப்பு தான விழிப்பு நாள் நிகழ்ச்சியும், இந்த நிகழ்ச்சியில் உறுப்பு தானம் செய்தோர் குடும்பத்தினர், சிகிச்சை அளித்த மருத்துவ நிபுணர்கள், செவிலியர்கள் மற்றும் தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்பட்ட அரசு மருத்துவமனைகளை கௌரவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா ஆசியுடன் நடைபெறும் அரசு, உலகத்தரம் வாய்ந்த சிகிச்சையினை மக்களுக்கு அளிக்கும் பொருட்டு, சுகாதார கட்டமைப்பை வலுப்படுத்துதல், மருத்துவ மனித வளத்தை பெருக்குதல் போன்றவைகளில் தனி கவனம் செலுத்தி இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒரு முன்மாதிரி மாநிலமாக விளங்கி வருகிறது.

தாய்சேய் நலம் மற்றும் குடும்ப நல சேவைத் திட்டங்களை செயல்படுத்துவதில், முன்னோடி மாநிலமாக திகழ்வதோடு, நோய்களைத் தடுப்பதற்காக பல முன்னோடித் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

“நலமான மாநிலமே வளமான மாநிலம் ஆகும். மேம்பட்ட சுகாதாரம் உள்ள மாநிலம் தான் உயரளவு உற்பத்தியையும், மேம்பாட்டினையும் கொண்டிருக்கும்” என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 12.6.2013 அன்றுநடைபெற்ற புற்று நோய் சிகிச்சை நிறுவனத்தின் வைர விழாவில் குறிப்பிட்டிருந்தார்கள். அதற்கேற்ப கடந்த ஆறு ஆண்டுகளில் சுகாதாரத் துறைக்கு மட்டும் 51 ஆயிரத்து 66 கோடியே 45 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்தியாவில் உயரிய மருத்துவ சேவை பெற வசதியுள்ள இடமாக தமிழ்நாடு திகழ்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுகாதாரக் குறியீடுகளின் இலக்கை அடைவதில், தமிழ்நாடு எப்பொழுதுமே முன்னிலை மாநிலமாக இருந்து வருகிறது. தாய்மார்கள் இறப்பு விகிதம், குழந்தை இறப்பு விகிதம் போன்ற சுகாதாரக் குறியீடுகளில் ஐக்கிய நாடுகளின் மில்லினியம் வளர்ச்சி இலக்குகளையும், தேசிய இலக்குகளையும் அடைவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

அனைத்து மக்களுக்கும் தரமான சுகாதார சேவை கிடைக்கும் நோக்கத்துடன், பல முன்னோடித் திட்டங்களை தமிழ்நாடு அரசு

செயல்படுத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக, மத்திய அரசு மட்டுமின்றி, பல மாநில அரசுகளும் பாராட்டும் வகையில் ‘‘தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்’’ துவக்கப்பட்டது.

‘‘ஒருவருடைய சிறந்த உடல்நிலை, அவருக்கு நம்பிக்கையை வளர்க்கிறது. அந்த நம்பிக்கை அவருக்கு எல்லாவற்றையும் வழங்குகிறது’’ என்று ஒரு அரேபிய பழமொழி உண்டு. அதன்படி மக்களுக்கு நல்ல சுகாதார வசதி செய்து கொடுப்பதன் மூலம், அவர்களுக்கு தன்னம்பிக்கை ஏற்படுத்தி வாழ்வில் வெற்றி பெற வழிவகை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தை அடையும் வண்ணம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பல்வேறு திட்டங்களை அமல்படுத்தி வருகிறது.

அதில் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24 மணி நேரமும் தாய்சேய் நலச் சேவைகளை வழங்குதல், 30 படுக்கை வசதிகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை ஒவ்வொரு வட்டாரத்திலும் துவக்குதல், தேவைக்கேற்ப இரத்த வங்கிகளை ஏற்படுத்துதல், நாடு தழுவிய தடுப்பூசித் திட்டம், 108 இலவச அவசரகால ஆம்புலன்ஸ் சேவையை வலுப்படுத்துதல், 104 மருத்துவ தகவல் சேவை போன்ற பல்வேறு முன்னோடித் திட்டங்களோடு, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், கூடுதல் நிதி உதவியுடன் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம், அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம், அம்மா மகப்பேறு சஞ்சீவி, அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம், தாய்ப்பால் வங்கி போன்ற பல முன்னோடித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இது மட்டுமின்றி இருதய நோய், புற்றுநோய், நீரிழிவு நோய் போன்ற தொற்றா நோய்களின் தாக்கத்தையும், பூச்சிகளால் பரவும் நோய்களின் தாக்கத்தையும் கட்டுப்படுத்த இந்த அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

ஏழை, எளிய மக்களின் உயிரோடு விளையாடும் உடல் உறுப்பு வியாபாரத்தை தடுப்பதற்காக, மனித உறுப்புகள் நீக்குதல், சேமித்து வைத்தல் மற்றும் உறுப்பு மாற்றம் செய்தல் ஆகியவற்றை முறைப்படுத்தி சிகிச்சை அளிக்கும் நோக்கில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதன்முதலாக உடல் உறுப்பு மாற்று சிகிச்சை ஆணையம் (TRANSTAN) என்ற அமைப்பு 2014–ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இந்த அமைப்பு உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையை முறைப்படுத்தும் ஒழுங்குமுறை அமைப்பாக செயல்பட்டு வருகிறது.

மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அதிக அளவிலான உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் நடைபெறுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த திட்டம் துவக்கப்பட்டதிலிருந்து இதுவரை 1056 இறந்த கொடையாளர்களிடமிருந்து 5933 முக்கிய உறுப்புகள் தானமாகப் பெறப்பட்டு நோயாளிகளுக்கு பொருத்தி மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சிறுநீரகம், இருதயம், கல்லீரல், நுரையீரல் மற்றும் இருதய வால்வுகள் போன்ற மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் செய்ய 70 மருத்துவமனைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதில் மிகச் சிறப்பாக செயல்பட்டதற்காக, 2015 மற்றும் 2016–ஆம் ஆண்டுகளில் நாட்டிலேயே முதல் மாநிலத்திற்கான தேசிய விருதுகளை தமிழ்நாடு வென்றுள்ளது. தொடர்ந்து இவ்வாண்டும் தமிழ்நாடு முதல் மாநிலம் என்ற தேசிய விருதை பெற, Hat-trick சாதனை படைக்கும் என்று

இங்கே மரியாதைக்குரிய டாக்டர் விமல் பண்டாரி அவர்கள் தெரிவித்து இருந்தார்கள்.

இங்கிலாந்திலிருந்து வெளியாகும் 'British Medical Journal' என்ற பத்திரிக்கை தமிழகத்தின் உடல் உறுப்பு தான செயல்பாடுகள் பிற நாடுகளும் பின்பற்றத்தக்கதாக உள்ளது என புகழாரம் சூட்டியுள்ளது.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் தன்னுடைய 'மனதின் குரல்' பதிப்பில் உடல் உறுப்பு தானத்தில் தமிழ் நாட்டின் செயல்பாடுகள் மிக சிறப்பாக இருப்பதால் மற்ற மாநிலங்களுக்கு தமிழகம் ஒரு முன்மாதிரி மாநிலமாக, சிறந்து விளங்குவதாக பாராட்டு தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் எந்த செலவும் இன்றி உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. இது தவிர, அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகளில் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது.

இதற்காக ஏழை எளிய மக்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் **35** இலட்சம் ரூபாய் வரை உடல் உறுப்பு மாற்று சிகிச்சைக்காக அரசு நிதி உதவி வழங்குகிறது. இந்தத் தொகை, இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் வழங்கப்படாத அளவிற்கு மிக அதிகமான தொகையாகும்.

உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்குப் பின் தேவைப்படும் விலை அதிகமான இம்யுனோ சப்ரசிவ் மருந்துகள் கூட கட்டணமில்லாமல் வழங்கப்படுகிறது.

மூளைச்சாவு அடைந்தவரின் உறுப்புகள் செயற்கை சுவாசக் கருவி மூலமாக இயங்குவதால், இதயத்தின் செயல்பாடு திடீரென நின்று விட்டால் எல்லா உறுப்புகளின் செயல்பாடுகளும் தானாகவே

நின்றுவிடும். எனவே மூளைச்சாவு அடைந்தவரின் உறவினர்கள் அதை உறுதி செய்து கொண்டு, ஒரு விநாடி கூட தாமதிக்காமல் உறுப்புகளை தானம் செய்வது குறித்து நல்லதொரு முடிவினை எடுக்க வேண்டும்.

மூளைச்சாவு அடைந்த ஒருவரிடமிருந்து எடுக்கப்பட்ட இதயம், இதய வால்வு, இரத்தக் குழாய், நுரையீரல், கல்லீரல், கணையம், சிறுகுடல், தோல், சிறுநீரகங்கள், கண்கள் உள்ளிட்ட உறுப்புகள் மூலம் அதிகபட்சம் 8 பேருக்கு வாழ்வளிக்க முடியும்.

இத்திட்டத்தின் முழு பயனும் மக்களுக்கு தகுந்த நேரத்தில் சென்றடையும் பொருட்டு உருவாக்கப்பட்ட டிரான்ஸ்டான் (TRANSTAN) அமைப்பு இதற்கென தனியாக ஒரு இணைய வலைவரிசை ஏற்படுத்தி உள்ளது.

இந்த இணைய வலைவரிசை மூலம் உடல் உறுப்பு செயல் இழந்தவர்கள், அவர்களுக்கு மாற்று உறுப்பு தேவை எனில் அவர்களின் பெயரை பதிவு செய்துகொள்ளலாம்.

ஒரு சிறு கதையின் மூலம் உடல் உறுப்புக்களின் முக்கியத்துவத்தை நான் விளக்க விரும்புகிறேன்.

வெளிநாட்டில் வாழ்ந்து வந்த ஒரு பெரிய செல்வந்தர் ஒருவர், ஒரு நாள் செய்தித் தாளில் ஒரு விளம்பரம் செய்தார். அவ்விளம்பரத்தில், தான் இதுவரை கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தில் வாங்கிய உலகிலேயே மிக விலை உயர்ந்த தனது காரினை மண்ணில் புதைக்கப் போவதாக கூறியிருந்தார்.

அவ்விளம்பரத்தைப் பார்த்த அந்நாட்டு மக்களின் ஒரு பிரிவினர், இவருக்கு என்ன பைத்தியம் பிடித்து விட்டதா? இப்படி விலை உயர்ந்த காரினை மண்ணில் புதைக்கிறாரே என்றும், மற்றொரு பிரிவினர், இவருக்கு என்ன ஏகப்பட்ட பணம் உள்ளது, கார் என்ன, புது வீட்டையே கட்டி இடித்துவிட்டு மீண்டும் ஒரு வீட்டினை கட்டுவார் என்றும் தங்களுக்குள் பேசிக் கொண்டனர். அந்த குறிப்பிட்ட நாளும்

வந்தது. அப்பகுதி மக்கள் அனைவரும் அங்கு குழுமினர். அப்போது விலை உயர்ந்த காருடன் வந்த அந்த செல்வந்தர் குழுமியிருந்த மக்களை பார்த்து, அந்த காரிலுள்ள வசதிகளை விரிவாக எடுத்துரைத்தார். பிறகு அந்த காரினை மண்ணில் புதைத்தும் விட்டார். பிறகு அங்கு குழுமியிருந்த மக்களிடம், உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால் நீங்கள் கேட்கலாம் என்று கூறினார்.

அங்கே குழுமியிருந்த மக்கள் அனைவரும் இவ்வளவு விலை உயர்ந்த காரினை நீங்கள் புதைத்தீர்கள், உங்கள் உறவினர்களுக்கோ, நண்பர்களுக்கோ அல்லது வேறு யாரேனும் ஒரு ஏழைக்கோ கொடுத்திருக்கலாமே என்று கேள்வி எழுப்பினர். அப்போது செல்வந்தர் அவர்களைப் பார்த்து, நான் நீங்கள் கேட்கும் பணத்தைத் தருகிறேன், பதிலுக்கு நீங்கள் உங்களது இதயம், இதயவால்வு, ரத்தக்குழாய், நுரையீரல், கல்லீரல், கணையம், சிறுகுடல், தோல், சிறுநீரகங்கள், கண்கள் ஆகியவற்றைத் தருவீர்களா என்று கேட்டார். அதைக் கேட்ட மக்கள், பதில் சொல்லமுடியாமல் திகைத்து நின்றனர். அப்போது செல்வந்தர், திகைத்து நின்ற மக்களைப் பார்த்து, உயிரற்ற ஒரு காரை புதைக்கும்போது இவ்வளவு வருத்தப்படும் நீங்கள், இவ்வளவு மதிப்பு வாய்ந்த உங்களது உடல் உறுப்புக்கள், யாருக்கும் பயனில்லாமல் மண்ணில் புதைப்பது எந்த விதத்தில் நியாயம் என்று கேள்வி எழுப்பினார். உங்கள் அனைவருக்கும் எளிதில் விளங்க வேண்டும் என்பதற்காகத் தான் எனது விலை உயர்ந்த காரினை புதைத்தேன் என்று கூறி, உடல் தானத்தின் சிறப்புகளை கூறினார்.

“கொடை இல்லாத வாழ்வு வேறில்லாத மரம் போன்றது” என்பது போல உடல் உறுப்பு தானம் மூலம் நமது உறுப்புகள் பிற உயிர்களில் வாழும். எனவே இதை வலியுறுத்தும் வகையில், ஆகஸ்ட் மாதம் **13–**ம் நாள் முதல் நவம்பர் மாதம் **27–**ம் தேதி வரை உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடம் ஏற்படுத்திட தமிழக அரசால் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

நாம் மானிடப் பிறப்பு எடுத்ததன் பயன் மற்றவர்களுக்கு உதவுவதே ஆகும். எல்லோரும் கொடையாளிகள் ஆகி விட்டால், இப்பூவுலகமே சொர்க்க லோகம் ஆகி விடும். இக்கூற்றுக்கு உயிர் கொடுக்கும் விதத்தில் செயல்பட்டு 1056 மூளை சாவு அடைந்த தங்கள் உறவினர்களின் உடல் உறுப்புகளை தானம் செய்து, மற்றவர்களின் உயிர்களை காப்பாற்ற காரணமாக இருந்த குடும்ப உறுப்பினர்களுக்கு அரசின் சார்பாகவும், எனது சார்பாகவும் பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை என்ற நுணுக்கமான பணியினை சிறப்பாக செய்து கொண்டிருக்கிற அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள், அனைத்து மருத்துவ நிபுணர்கள் மற்றும் தொடர்புடைய இதர பணியாளர்களுக்கும், அவர்களுக்கு தடையில்லா போக்குவரத்து போன்ற இதர வசதிகளை செய்து கொடுக்கும் காவல் துறையினருக்கும் தனியார் அமைப்பினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உறுப்பு தானம் செய்வோம் – உயிர்களைக் காப்போம் என்று கூறி, இந்த இனிய விழாவிற்கு ஏற்பாடு செய்த அனைவருக்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 24.11.2017 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற உடல் உறுப்பு தானம் – வார விழாவில் ஆற்றிய உரை.

சேலம் மாவட்டம், திருவாக்கவுண்டனூரில் மக்கள் சிரமத்தை போக்கிட ரூ.26.77 கோடி மதிப்பீட்டில் மேம்பாலம்!

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கின்ற காலத்திலே சேலம் மாநகரம் மற்றும் பல்வேறு பகுதிகளில் வசிக்கின்ற கனரக வாகனங்கள், இருசக்கர வாகனங்கள், பொதுமக்கள் இவ்வழியாக செல்லும்பொழுது கடுமையான போக்குவரத்திற்கு உட்படுகின்றார்கள். ஆகவே, திருவாக்கவுண்டனூர் ரவுண்டாவிலே ஒரு மேம்பாலம் கட்டித்தர வேண்டுமென்று கோரிக்கை வைத்தோம். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மக்களுடைய கோரிக்கையை ஏற்று, உடனடியாக இங்கே உயர்மட்ட பாலம் ஒன்று கட்டித்தரப்படும் என்ற அறிவிப்பை தந்து இன்றையதினம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இறைவனால் எடுத்துக்கொள்ளப்பட்டாலும், மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டம் நம் கண் முன் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது. இந்த மண்ணிலிருந்து மறைந்தாலும், நான்

மக்கள் உள்ளத்தில் வாழ்ந்து கொண்டிருப்பேன் என்று இந்தப் பாலம் சொல்லிக் கொண்டிருக்கின்றது என்பதை நான் மகிழ்ச்சியோடு இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்தில், சேலம் மாவட்டத்திற்குட்பட்ட பகுதியில் எந்தெந்த பகுதியில் போக்குவரத்து நெரிசல் இருக்கின்றதோ, போக்குவரத்து பிரச்சினை இருக்கின்றதோ அந்தப் பகுதிக்கெல்லாம் உயர்மட்ட பாலம், கீழ்மட்ட பாலம், சாலையை அகலப்படுத்துதல், சாலையை விரிவுபடுத்துதல், தரம் உயர்த்தல் போன்ற கோரிக்கையை நாம் வைத்தோம். அத்தனையையும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றித் தந்து, சேலம் மாவட்டம், போக்குவரத்து நெரிசல் இல்லாத மாவட்டம் என்ற சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். தமிழகத்தில் எத்தனையோ முதலமைச்சர்கள் தோன்றினாலும், நம்முடைய சேலம் மாவட்டத்திற்கு பல்வேறு திட்டங்களை அறிவித்த ஒப்பற்ற முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தான். இன்னும் விரைவாக நம்முடைய

AVR ரவுன்டானா அங்கு ஒரு உயர்மட்ட பாலம் குறுகிய காலத்தில் கட்டித் திறக்கப்பட இருக்கிறது. அதற்குப் பின்னர், சேலம் ஸ்டீல் பிளாண்ட் பிரிவு ரோடு, விரைவில் அடிக்கல் நாட்ட இருக்கிறோம். அந்த பாலம் முடித்துவிட்டால், இங்கேயிருந்து பெங்களூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி மற்றும் சென்னை செல்கின்றவர்கள் எந்தவித போக்குவரத்து நெரிசலும் இல்லாமல் செல்லலாம். ஆகவே, கனரக வாகனம் செல்லுகின்றபொழுது, பேருந்துகள் உரிய நேரத்தில் செல்ல இயலவில்லை. எனவே, கார், பைக் போன்றவைகளெல்லாம் இந்த வழியாக செல்லமுடியாத சூழ்நிலை, காலையிலும், மாலையிலும், பள்ளிக்கு செல்பவர்கள், வேலைக்கு செல்பவர்கள் குறித்த நேரத்தில் செல்லமுடியாத சூழ்நிலை அங்கு இருந்தது. கிட்டத்தட்ட, ஒருசில காலகட்டத்தில், காலையிலும், மாலையிலும் அரை மணி நேரம் போக்குவரத்து நெரிசல் உண்டாகின்றது. ஆகவே, மாண்புமிகு

அம்மா அவர்கள், இந்த போக்குவரத்து நெரிசலை முற்றிலும் குறைப்பதற்காக நமக்கு இந்த பாலத்தை தந்து சேலம் மாவட்ட மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள். இறைவனாய் காட்சி அளிக்கின்ற அம்மா அவர்களுக்கு சேலம் மாவட்ட மக்களின் சார்பாக, எனது சார்பாக மனமார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கின்றேன். அதேபோல, சேலம் ஜங்ஷன் அருகில் கீழ்ப்பாலம் கட்டி திறக்கப்பட்டது. செவ்வாப்பேட்டை பக்கத்தில் ஒரு பாலம் கட்டும்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, விரைவாக முடிக்கப்பட்டு அதுவும் திறக்கப்படும். அதேபோல, ஐந்து ரோடிலிருந்து மிக நீளமான பாலம் தமிழ்நாட்டிலேயே இரண்டு அடுக்கு பாலம் என்று சொன்னால் அந்த பாலம்தான், அதை மாண்புமிகு அம்மா அவர்கள் நமக்கு அளித்து, சேலத்தில் இருக்கின்ற மக்கள் அத்தனைபேரும் ஐந்துரோடின் வழியாக செல்லவேண்டிய சூழ்நிலை இருப்பதாலே, போக்குவரத்து நெரிசலை முற்றிலும் குறைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள், உயர்மட்ட பாலம், இரண்டு அடுக்கு பாலம் அங்கே கட்டப்படும் என்ற அறிவிப்பை தந்து, பணி வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அந்த பணி முடிந்தவுடன், அந்தப் பாலம் திறக்கப்பட்டு, எந்தவொரு நெரிசலும் இல்லாமல் வாகன ஓட்டிகள் செல்லக்கூடிய ஒரு சூழ்நிலையை அம்மாவினுடைய அரசு கொடுக்கும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, முள்ளுவாடி கேட் அந்த இரண்டு railway gate–லும் அடிக்கடி ரயில் செல்கின்ற காரணத்தினாலே அந்த கேட் மூடப்படுகின்றன. இதன் காரணமாக அதிகமான போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே, முள்ளுவாரி கேட் பகுதியில் உயர்மட்ட பாலம் கட்டுவதற்கு அம்மா அவர்கள் அறிவித்து, அதற்குண்டான பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நில எடுப்பு பணி முடிந்தவுடன் உயர்மட்ட பாலப்பணி துவங்கும். மணல்மேடு பகுதியிலும் உயர்மட்ட பாலம் கட்டுவதற்கு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள், அந்தப் பகுதியில் நில எடுப்பு பணி முடிந்தவுடன், அங்கேயும் உயர்மட்ட

பாலம் கட்டப்படும். எனவே, சேலம் மாநகரத்திற்குட்பட்ட பகுதியில் எங்கெங்கெல்லாம் போக்குவரத்து நெரிசல் இருக்கின்றதோ, அந்தப் பகுதிக்கெல்லாம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உயர்மட்ட பாலம் அறிவித்து, விரைவாக பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை தெரிவித்து, முதல்கட்டமாக இந்த திருவாக்கவுண்டனூர் ரவுன்டானா அருகில் உயர்மட்டப் பாலத்தை அம்மா அவர்களின் அருளாசியோடு, இறைவனுடைய அருளாசியோடு இன்றைக்கு திறந்து வைத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்து, இந்த நிகழ்ச்சிக்கு தலைமைதாங்கிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், முன்னாள் அமைச்சர், சட்டப்பேரவை உறுப்பினா திரு செம்மலை அவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் பன்னீர்செல்வம் அவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் திரு காமராஜ், திரு சுந்தரம் ஆகியோர்களுக்கும், சட்டப்பேரவை உறுப்பினர் திரு வெங்கடாசலம், திரு சக்திவேல், திரு வெற்றிவேல், திரு ராஜா, திருமதி பி மனோன்மணி திருமதி சித்ரா, திரு சின்னத்தம்பி அவர்களுக்கும், மத்திய, மாநில கூட்டுறவு வங்கித்தலைவர் திரு இளங்கோ அவர்களுக்கும், நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த பொறியாளர்களுக்கும், பாலத்தை கட்டிய ஒப்பந்ததாரர்களுக்கும், அனைத்து முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், வருகை தந்துள்ள அத்தனை நல்ல உள்ளங்களுக்கும், பொதுமக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்து விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

*திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள்*

2.12.2017 அன்று சேலத்தில் ரூபாய் 26.77 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள திருவாக்கவுண்டனூர் மேம்பாலத்தை திறந்து வைத்து ஆற்றிய உரை.

கன்னியாகுமரி மாவட்டத்தில், ஓகி புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனைத்து உதவியையும் மிக வேகமாகவும், துரிதமாகவும் செயல்படுத்திவரும் அரசு!

அனைவருக்கும் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, எதிர்பாராதவிதமாக, துரதிர்ஷ்டவசமாக பேரிடர் காரணமாக உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு முதலிலே என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொண்டு அவர்களை இழந்து வாடி துடிக்கின்ற குடும்பத்தாருக்கு என்னுடைய ஆறுதலையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோல், மீனவ சமுதாயம் எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கின்றது என்று இங்கே பேசிய பேராயர்கள் குறிப்பிட்டார்கள். அரசைப் பொறுத்தவரைக்கும் புயல் அடித்த மறுகணமே மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்

திரு.ஆர்.பி. உதயகுமார் அவர்களை உடனடியாக கன்னியாகுமரி மாவட்டத்திற்குச் சென்று நிவாரணப் பணிகளை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உதவி செய்யவேண்டும் என்று ஆணையிட்டு, அவரும் திருச்சியிலிருந்து நேரடியாக அன்றைய தினமே கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வந்து தங்கியிருந்து பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு எந்தெந்த விதத்திலே உதவி செய்யவேண்டுமோ அனைத்து உதவிகளும் அரசால் செய்யப்பட்டுள்ளது. கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களுக்கு கரை சேரமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. எனவே, அப்படிப்பட்ட மீனவர்களை உடனடியாக காப்பாற்ற வேண்டும் என்பதற்காக உடனடியாக பாரதப் பிரதமர் அவர்களை தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் புயலால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்கள் இன்னும் கரை திரும்பவில்லை. கரை திரும்புவதற்கும், அவர்களை காப்பாற்றுவதற்கும் தேவையான கப்பல்களும், விமானங்களும், ஹெலிகாப்டர்களும் அனுப்பிவைத்து தேடுதல் பணிகளை மேற்கொண்டு அவர்களை பத்திரமாக மீட்டெடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தேன். அதேபோல, மத்திய உள்துறை அமைச்சரிடத்திலும் இரண்டு முறை தொலைபேசியில் தொடர்பு கொண்டு கடலுக்குச் சென்ற மீனவர்களை பத்திரமாக மீட்பதற்குண்டான நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கோரிக்கை வைத்தேன். அதேபோல, மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சரிடத்திலும் கோரிக்கை வைத்தோம். அவர்களும் 18 கப்பல்கள், ஹெலிகாப்டர்கள், விமானங்கள் மூலமாக தேடுதல் பணிகளை மேற்கொள்வதாக எங்களிடத்திலே தெரிவித்தார்கள். அதுமட்டுமல்ல, தலைமைச் செயலகத்தில் இரண்டு முறை கடலோர காவல்படை, கப்பற்படை, விமானப்படை, அதிகாரிகளை அழைத்து மீனவர்களை தேடுகின்ற பணியை முடுக்கிவிட வேண்டும் விரைந்து செயல்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டோம். அவர்களும் அதை செய்வதாக எங்களிடத்திலே உறுதியளித்தார்கள்.

அதோடல்லாமல், மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை உடனடியாக கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அனுப்பி வைத்து, அதில் பல ஐஏஎஸ் அதிகாரிகள் அங்கேயே மாவட்ட ஆட்சித்தலைவர்களாக பணிபுரிந்தவர்கள், அந்த மாவட்டத்தைப் பற்றி நன்கு தெரிந்தவர்கள் என்ற காரணத்திற்காக அவர்களை அனுப்பி அந்தப் பகுதிகளில் என்ன தேவையோ அதை மக்களுக்கு உடனடியாக செய்து கொடுக்கவேண்டுமென்று கூறி இருந்தேன். அதன்படி ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும் இங்கேயே தங்கி முகாமிட்டு நிவாரணப்பணிகளை மேற்கொண்டார்கள். அதேபோல வேளாண்மைத்துறையின் முதன்மை செயலாளர் அவர்கள் இங்கேயே முகாமிட்டு விரைந்து செயல்படவேண்டும், கடலுக்குச் சென்று மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களை தேடுகின்ற பணிகளை வேகமாக, துரிதமாக முடுக்கிவிடவேண்டும் என்று அவர்களிடத்தில் ஆணையிட்டோம். அவர்களும் இங்கேயே தங்கி அந்தப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். அரசைப் பொறுத்தவரைக்கும், ஆழ்கடல் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களையும், நாட்டுப் படகில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களையும் தொடர்ந்து தேடுகின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கடைசி மீனவர் கிடைக்கின்ற வரை தேடுதல் பணி மேற்கொள்ளப்படுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேராயர் அவர்கள் பேசியது போல, உயிர் விலை மதிக்க முடியாதது, ஆகவே, எதை வேண்டுமானாலும் வாங்கலாம், உயிரை வாங்க முடியாது. எனவே விலை மதிக்க முடியாத உயிரை மீட்பது தான் எங்களது தலையாய கடமை. அதற்காக, அரசு முழுமூச்சில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு, இங்கே புயல் வருகின்றபொழுது மீனவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். இங்கே ஹெலிபேட் அமைத்தால் புயல் வருகின்ற காலங்களில் மீனவர்களை உடனடியாக காப்பாற்ற முடியும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். இதை ஏற்கனவே மத்திய அரசிடம் நாங்கள் கோரிக்கையாக வைத்திருக்கின்றோம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு ஹெலிபேட் அமைத்தால், புயல் அடிக்கின்றபொழுது மீனவர்களை உடனடியாக கரை சேர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும். அதுமட்டுமல்லாமல், வீடுகள் இழந்தவர்களுக்குத் தேவையான நிவாரண உதவிகளை வழங்குவதற்கு அரசு தயாராக இருக்கிறது. அதுமட்டுமல்ல, பசுமை வீடு திட்டத்தின் கீழ், தேவையான வீடுகளை கட்டித் தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, அருகாமையில் இருக்கின்ற கேரள அரசு, மீன்பிடிக்கச் சென்று இறந்த மீனவர்களுக்கு நிவாரணத் தொகையாக 20 லட்சம் ரூபாய் அறிவித்துள்ளது. தமிழ்நாடு அரசும் இதேபோன்று அறிவிக்க வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு அம்மாவினுடைய அரசு மக்களுடைய குறைகளை போக்குகின்ற அரசு. மக்களுக்கு எந்த நேரத்திலும் துன்பம் ஏற்பட்டாலும் அதை தீர்க்கின்ற அரசாக இருக்கின்ற காரணத்தினாலே 20 லட்சம் ரூபாய் அவர்களுக்கு வழங்கப்படும் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, புயலினால் மீன்பிடி தொழிலை செய்யமுடியாத நிலையை கருத்தில் கொண்டு, வாழ்வாதாரம் இழந்த கன்னியாகுமரி மாவட்டத்தின் அனைத்து மீனவர் குடும்பத்திற்கும் வாழ்வாதார நிதியாக தலா ரூபாய் 2500 நிதி ஒதுக்குவதாக நான் ஏற்கனவே அறிவித்திருந்தேன். அதில் கிட்டத்தட்ட 31000 மீனவர் குடும்பங்கள் பயன்பெறுகின்றன. அதற்கு மேலும் 2500 ரூபாய் கூடுதலாக வழங்குவதற்கும் அரசு உத்தரவிட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். புயலால் பாதிக்கப்பட்டு இறந்த மீனவர் குடும்பத்திற்கு அரசு வேலை வாய்ப்பு தரவேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அவர்களுடைய கோரிக்கை நியாயமானது என்பதால், அரசு இறந்த மீனவர் குடும்பத்தில் ஒருவருக்கு அவரவர் கல்வித் தகுதிக்கேற்றவாறு தமிழ்நாடு அரசால், தமிழ்நாடு அரசு நிறுவனத்தில் வேலைவாய்ப்பு வழங்கப்படுமென்ற செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, காணாமல் போன மீனவர்களை தேடுகின்ற பணி முடுக்கிவிடப்பட்டு, இறுதிக்கட்டம் வரையிலும் தொடரும் என்பதைத் தெரிவித்திருந்தேன். அதில் எந்தவித மாற்றமும் இல்லை. காணாமல் போன மீனவர் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க ஏதுவாக சட்டபூர்வமான நடவடிக்கை வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். உறுதியாக அதற்குரிய அரசாணையை வெளியிட்டு வருவாய் நிருவாக ஆணையர் தலைமையில் ஒரு குழுவை நியமித்து உத்தரவிட்டுள்ளேன். இங்குள்ள மீனவர்களின் குடும்ப நிலைமையை கருத்தில் கொண்டு இக்குழு தனது அறிக்கையை உடனடியாக கொடுக்க உத்தரவிட்டுள்ளேன். மேலும், காணாமல் போன மீனவர் குடும்பத்தினர் விரைந்து நிவாரண உதவிகள் பெற ஏதுவாக காத்திருக்கும் காலத்தை எவ்வளவு தளர்வு செய்ய இயலுமோ அவ்வளவு தளர்வு செய்ய அறிவுறுத்தியுள்ளேன். ஆகவே, காணாமல் போன மீனவர்களுக்கும் குறிப்பிட்ட காலத்திற்குள் நிவாரணம் அளிக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேடையிலே நீங்கள் என்ன கோரிக்கை வைத்தீர்களோ, அதில் பெரும்பாலான கோரிக்கைகளை நாங்கள் நிறைவேற்றியிருக்கின்றோம்.

அதேபோல விவசாயிகள் இன்றைக்கு பயிரிட்டவைகளெல்லாம் புயலினால் சேதம் அடைந்திருக்கிறது, நெற்பயிரும் சேதம் அடைந்திருக்கிறது. அதற்கு தேவையான இழப்பீடு தொகையையும், அரசு வழங்க இருக்கிறது. வாழை மரங்கள் சேதம் அடைந்திருக்கிறது, அதற்குத் தேவையான நிவாரணமும் அரசு வழங்க இருக்கிறது. ரப்பர் மரங்கள் சேதடைந்திருக்கிறது, அந்த விவசாயிகளுக்கும் நிவாரணத் தொகை வழங்கப்படும். அந்த இழப்பீட்டுத் தொகை நேற்றே நான் அறிவித்திருக்கின்றேன். நிவாரணத் தொகை புயலால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் வழங்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, புயலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு என்னுடைய அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு அறிவிக்கப்பட்ட அனைத்தையும் அரசு விரைந்து செயல்படுத்தும்

என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மிக வேகமாக, துரிதமாக அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, மீனவர்களுக்கு உடனடியாக தகவல் கொடுக்கவேண்டும், அப்படி தகவல் கொடுத்தால் அவர்கள் உடனடியாக உயிருக்கு ஆபத்தின்றி கரை திரும்பிவிடுவார்கள் என்ற ஒரு கருத்தை சொன்னார்கள். ஆகவே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு மீனவர்களுக்கு, தற்போது உலக வங்கி நிதியுடன் ரூபாய் 65 கோடி மதிப்பில், 300 அடி உயரமுள்ள கோபுரங்கள் அமைத்து 25w VHS கருவிகளும், 5w VHS கருவிகளும், 31.3.2018–க்குள் வழங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோல, புயலால் சேதமடைந்த படகுகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்ற ஒரு கருத்தையும் சொல்லியிருக்கின்றார்கள். அதற்கும் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கின்றது. விரைந்து அந்த குழுக்கள், சேதமடைந்த அந்த படகுகளை பார்த்து, கணக்கிட்டு, சேதாரம் எவ்வளவு என்பதை அரசுக்கு தெரிவிக்கின்றபொழுது, சேதமடைந்த படகுகளுக்குண்டான நிவாரணத் தொகையும் அரசால் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆகவே, நீங்கள் வைத்த கோரிக்கைகள் அனைத்தும் அரசு விரைந்து செயல்படுத்தும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 12.12.2017 அன்று கன்னியாகுமரி மாவட்டம், தூத்தூர் கிராமத்தில், மீனவ கிராமப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களை சந்தித்து, "ஒகி" புயலால் பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு ஆறுதல் கூறி, சிறப்பு நிவாரண உதவிகளை அறிவித்து ஆற்றிய உரை.*

ஏழை, எளிய மக்களுக்கான மருத்துவ சேவையை மேலும் மேலும் விரிவுபடுத்திவரும் அரசு!

ஏழைகளை ஏந்தி நிற்கும் எங்கள் குல தெய்வம் பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி, சிறப்புமிக்க இந்த நிகழ்ச்சியில் உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த நிகழ்ச்சிக்கு தலைமையேற்று சிறப்பான உரையாற்றிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்களே !

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு இதய அறுவை சிகிச்சை செய்த அந்த மருத்துவர்களுக்கும் சிறப்புகள் செய்து, புதிய பணியானை வழங்குகின்ற நிகழ்ச்சியில் பங்குபெற்று இருக்கின்ற மாண்புமிகு துணைமுதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற தலைமைச் செயலாளர் (பொறுப்பு) திரு. க. சண்முகம் இ.ஆ.ப., அவர்களே !

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்களே !

தேசிய நலவாழ்வு குழும திட்ட இயக்குநர்
டாக்டர் தாரேஸ் அகமது, இ.ஆ.ப., அவர்களே !

மருத்துவப் பணியாளர் தேர்வு வாரிய தலைவர்
திரு வே. ராஜாராமன், இ.ஆ.ப., அவர்களே !

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர்
டாக்டர் கே. குழந்தைசாமி அவர்களே !

மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற சுகாதார அலுவலர்களே! பணியாளர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, முன்னாள் அமைச்சர் பெருமக்களே, முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையில் உள்ள துறைத் தலைவர்களே! அலுவலர்களே !

பொதுமக்களே! புதிதாக பணியாணை பெறவிருக்கின்ற செவிலியர்களே! பத்திரிக்கை மற்றும் ஊடக நண்பர்களே உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு சுகாதாரத் துறையில் தன்னிறைவு பெற்று இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகவும், முன்மாதிரி மாநிலமாகவும் திகழ்கிறது. அதற்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்கு பார்வையுடன் கூடிய சுகாதார திட்டங்கள்தான் காரணம்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அடித்தட்டு மக்கள் மற்றும் நடுத்தர மக்களின் சுகாதாரத்தில் அதிக அக்கறையும், ஈடுபாடும் கொண்டு சுகாதாரத்துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து தமிழ்நாட்டில் அளிக்கப்படும் மருத்துவத்தை உலகத்தரத்திற்கு உயர்த்தினார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில்தான் அம்மாவினுடைய அரசும் சுகாதாரத்துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது.

ஒரு மாநிலத்தின் சுகாதாரத்துறைக்கென தனியாக மருத்துவப்பணிகள் தேர்வு வாரியம் அமைக்கப்பட்டது முதன்முதலில் தமிழ் நாட்டில்தான் என்பதிலும், இன்றைய தேதிவரை இந்தத் தேர்வு வாரியம் மூலம் 10,680 மருத்துவர்கள், 9,533 சிறப்பு மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் உட்பட 23,466 பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது தவிர, செவிலியர்கள், முதுநிலை பேராசியர்கள், ஆய்வக நுட்புநர்கள், சித்தா, ஆயுர்வேத, ஓமியோபதி, யுனானி மருந்தாளுநர்கள், நுண்கதிர் சிகிச்சை நுட்புநர்கள், யோகா மற்றும் இயற்கை வைத்திய உதவி மருத்துவ அலுவலர்கள் என சுமார் 2,900 பணியிடங்களை நிரப்ப இவ்வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

குறிப்பாக, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மகளிர் சுகாதாரத்தில் அதிக அக்கறை எடுத்துக்கொண்டார்கள்.

'அம்மா குழந்தை நல பரிசுப்பெட்டகம்'

'அம்மா மகப்பேறு சஞ்சீவி பெட்டகம்'

'வளர் இளம் பெண்களுக்கு சானிடரி நாப்கின்'

'முதலமைச்சரின் விரிவான
மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்'

'அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம்' ஆகிய தொலை

நோக்குடன் கூடிய திட்டங்களை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தி செயல்படுத்தினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் வழியில் செயல்படும் அம்மாவினுடைய அரசும், ஏழை, எளிய மக்களுக்கான மருத்துவ சேவையை மேலும் மேலும் விரிவு படுத்திவருகிறது.

தங்குதடையின்றி சுகாதாரச் சேவை பொதுமக்களுக்கு கிடைப்பதற்காக சுகாதாரத்துறையில் போதுமான மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்கள் மருத்துவ பணிகள் தேர்வு வாரியத்தின்மூலம் தேர்வு செய்யப்படுகிறார்கள். அதன் விளைவாகத்தான் சமீப காலத்தில் தமிழ்நாட்டில் டெங்கு காய்ச்சல் என்ற பேராபத்து வந்த போது சுகாதார அலுவலர்களும், பணியாளர்களும், பொதுமக்கள் ஒத்துழைப்போடு அதனை ஒழிப்பதிலும், கட்டுப்படுத்துவதிலும் முழுமுனைப்போடு செயல்பட்டார்கள். அது மட்டுமல்லாமல் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட விஷகாய்ச்சல் ஏற்படாதவாறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்தார்கள்.

மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அதிக அளவிலான உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதில் மிகச் சிறப்பாக செயல்பட்டதற்காக, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் நாட்டிலேயே முதல் மாநிலத்திற்கான தேசிய விருதுகளை தமிழ்நாடு வென்றுள்ளது.

இங்கிலாந்திலிருந்து வெளியாகும் ‘British Medical Journal’ என்ற பத்திரிகை தமிழ்நாட்டின் உடல் உறுப்பு தான செயல்பாடுகள்

பிற நாடுகளும் பின்பற்றத்தக்கதாக உள்ளது என புகழாரம் சூட்டியுள்ளது. இவையெல்லாம் நம் தமிழ்நாட்டிற்குப் பெருமை.

அதைபோல தமிழ்நாட்டில் தடுப்பூசித் திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருவதால் போலியோ, கக்குவான் இருமல், தொண்டை அடைப்பான் மற்றும் இரணஜன்னி போன்ற நோய்கள் இல்லாத ஒரு நிலையை தமிழ்நாடு பெற்றுள்ளது.

குறிப்பாக நமது துணை சுகாதார நிலைய அளவிலான மருத்துவ சேவைகள் மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

தமிழ்நாடு அரசின் மருத்துவ சேவைகளை மாநிலத்தின் ஊரகப்பகுதிகளுக்கும், மூலைமுடுக்குகளுக்கெல்லாம் கொண்டு சென்று செயல்படுத்துவதில் கிராம சுகாதார செவிலியர்களின் பணி மிகமிக அவசியமானது ஆகும். இதைக் கருத்தில் கொண்டுதான் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியால் நடைபெறும் அம்மாவினுடைய அரசு அதிகமான செவிலியர்களை பணிநியமனம் செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாகத்தான் இன்று 390 பேர் பயிற்சி முடித்து கிராம சுகாதார செவிலியர்களாக பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், சென்னை பெருநகர மாநகராட்சியில் 15 மருத்துவக்குழுக்கள் ஏற்படுத்தும் விதமாக 15 வாகனங்களின் சேவையை கொடி அசைத்து துவக்கி வைத்துள்ளேன். நோயாளிகள் மருத்துவமனைக்கு வரும்போது எந்தவித காலதாமதமும் இன்றி உடனடியாக சிகிச்சை அளிக்கும் வகையில் 8 படுக்கைகள் கொண்ட காலதாமதம் இல்லாத நவீன அவசர சிகிச்சை பிரிவு (Zero Delay Causalty Ward), குளிர்சாத வசதியுடன் செயற்கை சுவாசக் கருவிகள், மல்டி பாரா மானிட்டர் போன்ற நவீன மருத்துவ உபகரணங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிகிச்சை சிறப்பு மருத்துவமனையில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச்

சேர்ந்த திரு அ. பஷீர் (வயது 39) என்பவருக்கு இருதய மாற்று அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக செய்து முடித்த டாக்டர்எஸ்.மனோகரன் தலைமையிலான மருத்துவக் குழுவினருக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பொழுது மேடையிலே நாம் பலபேருக்கு சான்றிதழ்களையும் பதக்கங்களையும் வழங்கினோம். அவர்களுடைய மகத்தான சேவையை கரவொளி எழுப்பி அவர்களை பாராட்டி, மேலும் ஊக்குவிக்கின்ற விதத்திலே இருக்கவேண்டுமென அன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

இன்றைக்கு தமிழக சுகாதாரத்துறை இந்தியாவிலேயே ஒரு முன்மாதிரியாக இருதய மாற்று அறுவை சிகிச்சையின் மூலமாக நம்முடைய மருத்துவர்களும், அவர்களோடு துணை நின்றவர்களும் சாதித்துக்காட்டிய சாதனைக்கு நான் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

கிராம சுகாதார செவிலியர்கள் அரசுக்கும் கிராம மக்களுக்கும் ஒரு பாலமாக செயல்படக்கூடியவர்கள். காவல்பணியிலும், கல்வி பணியிலும் இருப்பவர்கள் ஓர் அர்ப்பணிப்பு உணர்வோடு செயலாற்ற வேண்டும் என்பார்கள், அதையும் தாண்டி தியாக உணர்வோடும், சகிப்புத் தன்மையோடும், அன்புள்ளத்தோடும் செயலாற்றக் கூடியவர்கள் கிராம சுகாதார செவிலியர்கள் ஆவார்கள்.

செவிலியர் பணி என்பது இறைவனால் வழங்கப்பட்ட பணி! என்பதை இந்த தருணத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். மனம் கோணாது சேவையில் சிறந்து விளங்கும் செவிலியரை தாய்க்கு நிகராக மக்கள் மதித்துப் போற்றுவார்கள்.

ஒரு நாடு முன்னேறியிருக்கிறது என்பதை அந்த நாட்டின் சுகாதாரத்தை மையமாக வைத்துத்தான் அளவிடமுடியும் என்றால்,

அந்த நாட்டின் முன்னேற்றத்திற்கு உங்களைப்போன்ற அன்புள்ளம் கொண்ட செவிலியர்களுக்கும் பங்கு இருக்கிறது என்பதை நீங்கள் உணர வேண்டும்.

உங்கள் சேவைதான் இந்த நாட்டிற்கு மிக மிக முக்கியமான தேவையாக கருதப்படுகிறது. எனவே, இங்கே புதியதாக பணிநியமன ஆணை பெற்றிருக்கும் உங்களை நான் மனமார வாழ்த்துகிறேன்.

இன்றிலிருந்து நீங்கள் புது வாழ்க்கையையும், பொது வாழ்க்கையையும் தொடங்குகிறீர்கள், இனிமேல் மக்களுடைய சுகாதாரம்தான் உங்கள் சுகாதாரம்.

'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால், தன் பிள்ளை தானே வளரும்' என்ற ஒரு கிராமத்து பழமொழியையே மனத்தில் தாரக மந்திரமாக ஏற்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில், ஆசியில் நடைபெறும் இந்த அரசோடு இணைந்து பொதுமக்களுக்கு சேவை செய்யவேண்டுமென்று அன்போடு உங்களை கேட்டுக் கொள்கின்றேன்.

நைட்டிங்கேல் என்று அழைக்கப்பட்ட பிளாரன்ஸ் பிரிட்டனில் செல்வச் செழிப்பு மிக்க ஒரு குடும்பத்தில் பிறந்தவர். பெற்றோரின் எதிர்ப்பையும் மீறி நோயாளிகளைப் பராமரிக்கும் பணியை அவர் மேற்கொண்டார். நைட்டிங்கேல் வறியவர்கள் மீதும், இயலாதவர்கள் மீதும் அக்கறை கொண்டிருந்தார்.

1854 ஆம் ஆண்டு நடைபெற்ற கிரிமியன் போரில் பாதிக்கப்பட்ட இராணுவ வீரர்களுக்கு 30 செவிலியர்களுடன் சென்று சிகிச்சை வழங்கினார். மின் வசதி இல்லாத காலத்தில் இரவு நேரங்களில் விளக்கு ஏந்தி சென்று நோயாளிகளுக்கு சிகிச்சை செய்து வந்தார். அதனால்தான் அந்த ராணுவ வீரர்கள் நைட்டிங்கேல் அவர்களை 'விண்ணிலிருந்து வந்த தேவதை' என அழைத்தனர். தனக்குக் கிடைத்த பரிசுப்பொருள்களையும், அன்பளிப்பு நிதியையும் கொண்டு ஒரு நர்சிங் பள்ளியை தொடங்கினார்.

அது தற்போது லண்டனில் நைட்டிங்கேல் செவிலியர் பயிற்சி கூடமாக வளர்ந்துள்ளது. நைட்டிங்கேல் அவர்களின் அரிய செவிலியர் சேவையை பாராட்டி இங்கிலாந்து ராணி 'order of Merit' என்ற உயரிய பட்டத்தை வழங்கி சிறப்பித்தார்.

விக்டோரியா ராணிக்கு அடுத்தபடியாக மக்களால் மிகவும் அறியப்பட்ட பெண்மணியாக திகழ்ந்தவர் நைட்டிங்கேல் என்று பிபிசி பாராட்டியது.

இந்த பெருமையெல்லாம் நைட்டிங்கேல் அவர்களுக்கு செவிலியர் பணியால்தான் கிடைத்தது. அப்பணியை அவர் புனிதமாக கருதியதால் இத்தனை சிறப்புகள் ஏற்பட்டது. எனவே, நீங்கள் ஒவ்வொருவரும் நைட்டிங்கேல்களாக சேவையாற்ற வேண்டுமென்று அன்போடு உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மீண்டும் ஒரு முறை உங்களுக்கு எனது பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்வதோடு உங்கள் அனைவருக்கும் எனது புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி ! வணக்கம் !

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் 05.01.2018 அன்று*
சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள
தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிகிச்சை
சிறப்பு மருத்துவமனை கூட்ட அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில்,
390 கிராம சுகாதார செவிலியர்களுக்கு
பணி நியமன ஆணைகளை வழங்கி ஆற்றிய உரை.

மக்களின் தேவைகளை பூர்த்தி செய்கின்ற அரசு! மக்களுக்காக பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற அரசு!

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விவசாயிகளுக்காக இறுதி மூச்சு உள்ள வரை பாடுபட்டு, அவருடைய சக்தி முழுவதும், தமிழக விவசாயிகளின் நலன்காக்க பாடுபட்டு பெற்ற வெற்றியை இன்றைக்கு நினைவுகூரும்விதமாக இங்கே காட்சியளிக்கின்ற இந்த இனிய நிகழ்ச்சிக்கு தலைமைப் பொறுப்பேற்றிருக்கின்ற மதிப்புக்கும், மரியாதைக்கும் உரிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே, இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பழகன் அவர்களே, இங்கே சுருக்கமாகச் சொன்னாலும், தெளிவாக இந்த அணையினுடைய சிறப்பு, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கை, இந்தப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகளை சுருக்கமாக எடுத்துரைத்த மேட்டூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர், மதிப்புக்கும், மரியாதைக்குமுரிய முன்னாள் அமைச்சர் திரு.செம்மலை அவர்களே, இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பன்னீர்செல்வம் அவர்களே, நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.ஆர்.சுந்தரம் அவர்களே, சேலம் மேற்குத் தொகுதியினுடைய சட்டப்பேரவை உறுப்பினர் திரு.வெங்கடாசலம் அவர்களே, சேலம் தெற்குத் தொகுதியினுடைய சட்டப்பேரவை உறுப்பினர் திரு.சக்திவேல் அவர்களே, சங்ககிரி சட்டப்பேரவை உறுப்பினர் திரு.ராஜா அவர்களே, ஓமலூர்

சட்டப்பேரவை உறுப்பினர் திரு.வெற்றிவேல் அவர்களே, வீரபாண்டி சட்டப்பேரவை உறுப்பினர் சகோதரி மனோன்மணி அவர்களே, ஏற்காடு சட்டப்பேரவை உறுப்பினர் மரியாதைக்குரிய சகோதரி சித்ரா அவர்களே, கெங்கவள்ளி சட்டப்பேரவை உறுப்பினர் திரு.மருதமுத்து அவர்களே, ஆத்தூர் சட்டப்பேரவை உறுப்பினர் திரு.சின்னத்தம்பி அவர்களே, மற்றும் இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற திரு.குருசாமி அவர்களே, நகர்மன்றச் செயலாளர் திரு.சந்திரசேகர் அவர்களே, முன்னாள் சேர்மன் திரு.சரவணன் அவர்களே, சகோதரி பொற்செல்வி சதாசிவம் அவர்களே, திரு.அருணாச்சலம் அவர்களே மற்றும் இந்த மேடையிலே வீற்றிருக்கின்ற கழகத்தின் நிர்வாகிகளே, அரசு அலுவலர்களே, பொதுப்பணித்துறையைச் சார்ந்த உயர் அதிகாரிகளே, வருகை தந்துள்ள முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்களே, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களே, முன்னாள் ஊராட்சி ஒன்றிய பிரதிநிதிகளே, கூட்டுறவு சங்க நிர்வாகிகளே, கழக முன்னோடி நிர்வாகிகளே, பெரியோர்களே, தாய்மார்களே, விவசாயிகளே, பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே, அத்தனைபேருக்கும் பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்து, இந்த நிகழ்வு ஒரு வரலாற்று நிகழ்வு.

நாம் எத்தனையோ நிகழ்ச்சிகளை துவக்கி வைத்திருக்கின்றோம், அடிக்கல் நாட்டியிருக்கின்றேன், ஆனால், இந்த நிகழ்ச்சியை பொறுத்தவரைக்கும் நான் ஒரு விவசாயி என்ற அடிப்படையிலே, விவசாய குடும்பங்களுக்கும், குடிநீருக்கும் பயன்படுகின்ற அணைக்கு முன்னே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தன் உயிர் இருக்கின்றவரை, விவசாயிகளுக்காக, தமிழ்நாட்டுக்காக பாடுபட்டு, சட்டப்போராட்டம் நடத்தி, சட்டத்தின் வாயிலாக காவிரி மேலாண்மை இறுதி ஆணையை பெற்று, அதனுடைய நினைவாக இங்கே நினைவுத் தூண் அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்த

வரலாற்று சிறப்புமிக்க இந்த நிகழ்ச்சி, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, இந்த நினைவுத் தூண் எழுப்பப்பட்டு, இன்றைக்கு நிறைவு பெற்று, அதனை திறக்கின்ற ஒரு நல்ல பாக்கியத்தை, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அளித்ததற்கும், இறைவன் அளித்ததற்கும், இந்த நேரத்திலே நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எத்தனையோ தலைவர்கள் பிறக்கின்றார்கள், நாட்டை ஆளுகின்றார்கள், மறைகின்றார்கள். ஆனால், நாட்டுக்காக பிறந்து, மக்களுக்காக வளர்ந்து, வாழ்ந்து, மக்களுக்காகவே சேவை செய்து மறைந்த தலைவர் புரட்சித்தலைவி அம்மா என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். காவிரி நடுவர்மன்ற ஆணையை அரசிதழில் வெளியிடுவதற்கு உத்தரவிட்ட பிறகு, அது நடைமுறைபடுத்தப்பட்ட பிறகு, அம்மாவுக்கு நன்றி தெரிவிக்க தஞ்சையிலே விவசாயப் பெருங்குடி மக்கள் விழா எடுத்தார்கள். அந்த விழாவிலே இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அற்புதமான கருத்தை அப்பொழுது பதிய வைத்தார்கள். “என்னைப் பொறுத்தவரையில் தனிப்பட்ட முறையில் என் வாழ்க்கையில் கிடைத்த மகத்தான, பிரம்மாண்டமான வெற்றி இதுவே என்று கூறலாம். என்னுடைய 30 ஆண்டுகால அரசியல் பொதுவாழ்வில் இன்று தான் சாதனை புரிந்ததாக நான் மனநிறைவடைகின்றேன். நான் எவ்வளவோ சாதனைகள் செய்ததாக எத்தனையோ பேர் பாராட்டினாலும், அவற்றையெல்லாம் நான் சாதனையாகக் கருதவில்லை, இதைத்தான் மகத்தான சாதனையாகக் கருதி, நான் மனநிறைவு பெறுகின்றேன். எனக்கும், எனது தலைமையிலான அரசுக்கும், காவிரி டெல்டா விவசாயிகளுக்கும் கிடைத்த மகத்தான வெற்றி இது” என்று அந்த நிகழ்ச்சியின் வாயிலாக அற்புதமான, ஆழமான கருத்தை நமக்கு தெரிவித்து, இன்றையதினம் மறைந்திருக்கின்றார்கள். அவர்கள் சொன்ன கருத்தை வைத்து,

எந்தளவிற்கு பாடுபட்டு இந்தத் தீர்ப்பை பெற்றிருக்கின்றார்கள் என்று இந்த நேரத்திலே எண்ணிப்பார்க்க முடிகின்றது.

அதேபோல, இந்த மேட்டூர் அணை 1925–ஆம் ஆண்டு கட்டுவதற்கு தொடங்கப்பட்டு, 1934–ஆம் ஆண்டு கர்னல் எல்லீஸ் வடிவமைத்தபடி ரூ.4.80 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டது. இந்த அணை கட்டி முடிக்கப்பட்டு கிட்டத்தட்ட 83 ஆண்டுகளாகின்றது. இந்த அணை கட்டும்போது, 90 சதவீதம் பேர் நாம் பிறந்திருக்கவே மாட்டோம். அந்த காலகட்டத்திலேயே, இந்த அணையை கட்டி, 12 மாவட்டங்களைச் சார்ந்த காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகள் இதனால் பாசன வசதி பெறுகின்றார்கள். 16 மாவட்ட மக்கள், குடிநீர் ஆதாரமாக இந்த தண்ணீரை பயன்படுத்தி வருகின்றார்கள். இப்படி ஒரு அற்புதமான திட்டத்தை அந்தக் காலத்திலே கட்டி நமக்கு வழங்கியிருக்கின்ற அந்த பெருமக்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியை சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழ்நாட்டினுடைய ஜீவநதியான இந்த காவிரி நதி நீரை மேட்டூர் அணையின் மூலமாக தேக்கி, கிடைக்கக்கூடிய தண்ணீரின் மூலமாக 16.5 இலட்சம் ஏக்கர் நிலம் பாசனவசதி பெறுகிறது. 16 மாவட்ட மக்கள், குடிநீர் ஆதாரமாக இந்த நீரை பயன்படுத்தி வருகின்றார்கள். அப்படிப்பட்ட சிறப்புடைய அணை மேட்டூர் அணை. அது நம்முடைய சேலம் மாவட்டத்தில் அமைந்தது நம் அனைவருக்கும் பெருமையாக இருக்கின்றது. மேட்டூர் அணையின் முகப்பு வாயிலை அமைக்க, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்திலே ஆணையிடப்பட்டு, இதற்கு நிதிஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டு இன்றைக்கு நிறைவடைந்திருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, இந்த அணையில் கிட்டத்தட்ட 83 ஆண்டுகாலமாக சேர்ந்துள்ள வண்டல் மண்ணை நாம்

அகற்றவேண்டும். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு, மேலும் நீரை சேமித்து வைக்க, அதிக கொள்ளவுள்ள நீரை நிரம்பச் செய்ய, இந்த மேட்டூர் அணையில் வண்டல் மண் அள்ளக்கூடிய ஒரு சூழலை உருவாக்கினோம். அதன் மூலமாக இதுவரை 12.01.2018 வரை, 2,09,387 கனமீட்டர் வண்டல் மண்ணை, விவசாய பெருங்குடி மக்கள் இலவசமாக இன்றைக்கு எடுத்துச் சென்று அவருடைய நிலங்களுக்கு எருவாக இட்டிருக்கின்றார்கள். இது ஒரு அற்புதமான திட்டம். இத்திட்டம், 28.5.2017 அன்று விவசாயிகளுக்கு இலவசமாக வண்டல் மண்ணை அள்ளும் திட்டத்தை நாங்கள் துவக்கி வைத்தோம். அந்தத் திட்டம் இன்றைக்கு வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இதுமட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் குடிமராமத்து என்னும் அற்புதமான திட்டத்தை அம்மாவினுடைய அரசு அறிவித்து, முதற்கட்டமாக, 1519 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டு அந்தப் பணிகள் 90 சதவீதம் இன்றைக்கு நிறைவு பெற்றிருக்கின்றது. மேலும், இரண்டாவது கட்டமாக, விவசாயிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்று, மேலும் 2065 ஏரிகளை தூர்வாருவதற்காக அம்மாவினுடைய அரசால் ரூபாய் 331 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்தப் பணியும் விரைவாக துவங்கப்பட உள்ளது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். விவசாயிகளுக்கு உயிராக இருக்கின்ற நீரினை எந்தெந்த வகையிலே அரசு சேமிக்க முடியுமோ, அத்தனை வழிகளிலும் சேமித்து, விவசாயத்திற்கும், குடிப்பதற்காகவும், அம்மாவினுடைய அரசு திட்டமிட்டு செயல்பட்டு கொண்டிருக்கின்றது.

இன்றைக்கு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள், விவசாய பெருங்குடி மக்கள் எல்லாம், பொழிகின்ற மழைநீரில் ஒரு சொட்டுகூட வீணாகாமல் அதை தேக்கி வைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள்.

அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அம்மாவினுடைய அரசு, மூன்று ஆண்டுகள் திட்டமாக தடுப்பணை கட்டுவதற்காக ரூ. 1000 கோடி ஒதுக்கியிருக்கின்றது. முதற்கட்டமாக, இந்த ஆண்டு ரூ. 350 கோடி தடுப்பணை கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. எஞ்சிய தொகை ரூ. 650 கோடிக்கான பணி அடுத்த இரண்டாண்டுகளில் தொடங்கப்படும். பொழிகின்ற மழைநீர் முழுவதும் ஓடைகளிலும், நதிகளிலும் தடுப்பணை கட்டப்பட்டு, திறக்கப்பட்டு, நிலத்தடி நீர் உயர்ந்து விவசாயிகளுக்கும், குடிப்பதற்கும் தேவையான நீர் கிடைக்கும். இவையெல்லாம் ஒரு வரலாற்று சாதனை. ஆகவே, நீரை எந்தவிதத்திலும் வீணாக்காமல் தேக்குவது அரசினுடைய நோக்கம் என்பதை திட்டவட்டமாக இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த அரசு விவசாயிகளுக்கும், விவசாய பெருங்குடி மக்களுக்கும் என்றென்றும் உறுதுணையாக விளங்கும் என்பதை இந்த நேரத்திலே கோடிட்டுக்காட்டி, இந்த அரசு பல்வேறு சாதனைகளை புரிந்து கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், இந்த நிகழ்ச்சியின் வாயிலாக பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியிருக்கின்றோம். இந்த மேட்டூர் நகராட்சியில், அத்தனை ஏழை, எளிய மக்கள் எந்தவித இடையூறும் இல்லாமல் சொந்தமாக வீடு கட்டுவதற்காக, அம்மாவினுடைய அரசால் ஒவ்வொரு வீட்டிற்கும் எந்தவித நிபந்தனையும் இல்லாமல், ரூபாய் 2 இலட்சத்து 10 ஆயிரம் இலவசமாக வழங்கப்படும். கிட்டத்தட்ட 1970 பேர் மனு கொடுத்திருக்கின்றார்கள், தகுதியான 308 பேர் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றார்கள். மேலும் 1664 பேர் கட்டுவதற்கு அரசால் அனுமதி வழங்கவுள்ளது. இதற்காக, அரசிற்கு முறைப்படி விண்ணப்பம் செய்தால் அவர்களுக்கு ஒவ்வொரு

வீட்டிற்கும் ரூபாய் 2 இலட்சத்து 10 ஆயிரம் இலவசமாக வழங்கப்படும் என்ற நற்செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், அம்மாவினுடைய அரசு பொறுப்பேற்றபிறகு தான் இன்றைக்கு அருமையான சாலைகள் கொடுத்திருக்கின்றது. இந்த பிரதான சாலை அம்மா ஆட்சிக்கு வந்ததற்கு முன்பு எப்படியிருந்தது, அம்மா ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னும் எப்படி சிறப்புற்றிக்கின்றது ? மேலும், 16 கண் பாலத்திற்கு மாற்றாக, மக்கள் பயன்படுத்துவதற்காக ஒரு புதிய பாலம் வேண்டுமென்று கட்டுவதற்கு பொதுமக்கள் மற்றும் பல்வேறு தரப்பினரால் கோரிக்கை வைக்கப்பட்டதற்கு, அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு, அது கட்டிமுடிக்கப்பட்டு திறக்கப்பட்டிருக்கின்றது.

அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரையில், எதை அறிவித்தாலும், அதை அந்த காலஅளவிற்குள் கட்டி முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படுகிறது. அது தான் சாதனை. அதேபோல இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் தான் குடிநீர் பிரச்சினை பற்றி கேட்டார்கள். இந்த மேட்டூர் மக்களுக்குத் தேவையான குடிநீர் வழங்குவதற்கு பாதுகாக்கப்பட்ட காவிரி தண்ணீர் இந்த பகுதி மக்களுக்கு கிடைக்கவில்லை என்ற ஒரு நிலை இருந்தது, அதை சுட்டிக்காட்டியவுடன் அம்மா அவர்கள் அதற்கும் நிதி ஒதுக்கீடு செய்து, அந்த பணி மேற்கொள்ளப்பட்டு, இன்றைக்கு மேட்டூர் நகர மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட காவிரி தண்ணீரும் அம்மாவினுடைய ஆட்சியில் தான் வந்தது.

அதேபோல, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தான், மேட்டூர் நகர மக்களுக்கு பாதாள சாக்கடை திட்டத்தையும் நிறைவேற்றி தந்திருக்கின்றார்கள். அம்மா ஆட்சியில் தான் மேட்டூர் நகர மக்களுக்கு இத்தனை நன்மைகளும்

கிடைத்திருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இதயதெய்வம் புரட்சித்தலைவி ஆட்சி மக்களாட்சி, மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் அரசு, மக்களுக்காக பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற அரசு அம்மாவினுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, மிகச் சிறப்பாக, எழுச்சியாக இந்த நிகழ்ச்சியை ஏற்படுத்தி தந்த மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும், பொதுமக்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும், ஊடக நண்பர்களுக்கும் நன்றி தெரிவித்து விடை பெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

*திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள்*

***13.01.2018** அன்று சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் புனரமைக்கப்பட்ட மேட்டூர் அணை பூங்கா மற்றும் காவிரி நடுவர்மன்ற இறுதி ஆணையினை மத்திய அரசிதழில் வெளியிட செய்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சாதனையை போற்றிடும் நிறுவப்பட்ட நினைவுத் தூண் ஆகியவற்றை திறந்து வைத்து ஆற்றிய உரை.*

வாழும் கலை முதல் ஆளும் கலை வரை கற்றுத்தரும் ஒரே நூல் திருக்குறள்!

“முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப்படும்” மன்னர்கள் காத்த தமிழ்! அறிஞர்கள் ஆய்ந்த தமிழ் ! சங்கம் வளர்த்த தமிழ் ! சமயம் செழித்த தமிழ்!

இயல் தமிழ் ! இசைத் தமிழ் ! நாடகத் தமிழ் ! என முத்தமிழாக இருந்ததை ‘அறிவியல் தமிழ்’ என்று நான்காம் தமிழாக்கி – இன்று ‘அம்மா தமிழ்’’ என்று ஐந்தாம் தமிழாக, தமிழர்களின் நாவில் நர்த்தனம் புரியும் நற்றமிழ் நாயகி, எங்கள் இல்லங்களிலும், உள்ளங்களிலும் குடியிருக்கும் எங்கள் குல தெய்வம்! இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

வான்புகழ் வள்ளுவர் பெயரில் நடைபெறும் இந்த தமிழ் மணம் கமழும் விழாவில் கலந்து கொண்டு (அறிஞர் பெருமக்களையும்) உங்களையும் சந்திப்பதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த இனிய விழாவில் தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

முன்னிலையுரை ஆற்றிய மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு. க.பாண்டியராஜன் அவர்களே!

சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி.ஜெயக்குமார் அவர்களே!

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்களே! மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. பா.பென்ஜமின் அவர்களே!

வரவேற்புரை ஆற்றிய தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, அரசு செயலாளர் திரு. இரா. வெங்கடேசன் அவர்களே!

நன்றியுரை ஆற்ற உள்ள தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் திரு. கோ.விசயராகவன் அவர்களே !

இந்த விழாவிற்கு வருகை தந்துள்ள மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்களே,

மாண்புமிகு சமூகநலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் டாக்டர் வி.சரோஜா அவர்களே,

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. எம்.சி.சம்பத் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்களே,

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் நீலோபர் கபீல் அவர்களே,

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.பி.பாலகிருஷ்ணா ரெட்டி அவர்களே,

புதுடெல்லிக்கான தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு.தளவாய் சுந்தரம் அவர்களே,

முன்னாள் அமைச்சர் பெருமக்களே! முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே! உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகளே! அரசு அலுவலர்களே! தமிழறிஞர் பெருமக்களே ! வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே! இளைஞர்களே! மாணவ மாணவிகளே! பரத நாட்டியக் கலைஞர்களே! தமிழ்நாடு அரசின் சிறப்பிற்குரிய விருதுகளை பெற்ற தமிழ் அறிஞர்களே! பத்திரிக்கை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

நம் உயிருக்கு மேலான தமிழை தேன்தமிழே ! செந்தமிழே! நற்றமிழே! முத்தமிழே! காப்பியத்தமிழே! கன்னித் தமிழே! பூந்தமிழே! என்று அழைப்பதைவிட 'தமிழே! தாய்த்தமிழே!' என்று அழைப்பதில்தான் உணர்வு இருக்கிறது, அழகு இருக்கிறது.

மம்மி, மதர், அன்னை, தாய் என்று அழைப்பதைவிட 'அம்மா' என்று அழைப்பதில்தான் உயிர் இருக்கிறது. காரணம், 'அ' என்கின்ற உயிரெழுத்தும் 'ம்' என்கின்ற மெய்யெழுத்தும் 'மா' என்கின்ற உயிர்மெய் எழுத்தும் சேர்ந்திருக்கும் ஒற்றை தமிழ்ச் சொல் தான் 'அம்மா' என்கின்ற வேத சொல்.

அதனால்தான் 'அம்மா' என்கின்ற சொல்லுக்கு அத்தனை சக்தி இருக்கிறது. இனி எத்தனை காலமானாலும் 'அம்மா' என்கின்ற சொல்லால் மட்டுமே தமிழையும், தமிழரையும் காக்கவும், வளர்க்கவும் முடியும் என்பதையும் உறுதியாகத் தெரிவித்துக் கொண்டு என் உரையை தொடங்குகிறேன்.

தமிழர் திருநாளாகக் கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகையில் தை மாதத்தின் இரண்டாம் நாளை திருவள்ளுவர் திருநாளாக நாம் கொண்டாடி மகிழ்கிறோம். தெய்வப் புலவர் திருவள்ளுவரை நினைவுகூரும் நாளாகவும், திருக்குறள் என்னும்

நீதி நெறி நூலை மானுடத்திற்கு வழங்கி தமிழரின் பெருமையை உலகமெல்லாம் பரவச்செய்த திருவள்ளுவருக்கு நன்றி நல்கிடும் விழாவாகவும் இத்திருநாளை நாம் கொண்டாடுகின்றோம். 'தமிழ்' மொழி தமிழருக்கு அடையாளம் என்றால், திருக்குறள் தமிழருக்கு முகமாக இருக்கிறது. தமிழை நேசித்தால் பிறந்த நாட்டையும், வணங்கும் தெய்வங்களையும், ஈன்ற பெற்றோரையும் நேசிப்பதற்கும், வணங்குவதற்கும் சமம் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

'தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை தாய்மொழியிற் சிறந்த வேறு மொழியுமில்லை' என்பதை நமக்கு நினைவுபடுத்தவே இப்படிப்பட்ட நாட்கள் அனுசரிக்கப்படுகின்றன.

தமிழ் என்பது தமிழர்களின் அறிவு, பண்பாடு, வீரம், நாகரிகம், பழக்கவழக்கம் ஆகிய ஐந்தும் கலந்த ஒரு சுவைமிகு கூட்டுக் கலவை. அதை நாம் பஞ்சாமிருதமாக சுவைக்கலாம் என்று தமிழர் பண்டிகைகள் உலகிற்கு பறைசாற்றுகின்றன.

மனிதர்கள் நம் செவியோடு பேசுகிறார்கள் நண்பர்கள் நம் உணர்வுகளோடு பேசுகிறார்கள் இறைவன் நம் ஆன்மாவோடு பேசுகிறார் புத்தகங்கள் மட்டும்தான் நம் மனதோடு பேசுகின்றன என்பார்கள்.

எந்த நூல்கள் மனிதர்களின் மனதோடு பேசி அவர்களுக்குள்ளே தாக்கத்தையும், மாற்றத்தையும் ஏற்படுத்துகின்றனவோ, அவைதான் உலகத்தில் தலை சிறந்த நூல்களாக, படைப்புகளாக மதிக்கப்படுகின்றன, போற்றப்படுகின்றன. அவற்றையும் மிஞ்சும் அளவிற்கு ஒரு நூல் போற்றி வணங்கப்படுகிறது என்றால் அது திருக்குறள் மட்டும்தான். உலகில் உள்ள அத்தனை மனிதர்களாலும் வணங்கப்படுகிறது.

நம் மண்ணுக்கு சொந்தக்காரர், நம் தமிழ் நாட்டில் பிறந்து, வளர்ந்து தமிழை சுவாசித்த மகாகவி பாரதியார் அவர்கள் 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்று கூறினார்.

ஆனால், தமிழ் மொழி அறியாத வெளிநாட்டில் பிறந்து தமிழை ஆராய்ச்சி செய்த ராபர்ட் கால்டுவெல், ‘தமிழ் மொழி தனித்தியங்கக் கூடிய வல்லமை உடையது’ என்று கூறுவது தமிழ் மொழிக்கு மேலும் சிறப்பு. திரு. ராபர்ட் கால்டுவெல், திரு வீரமாமுனிவர், திரு. ஜி.யு போப், திரு. எல்லீசு போன்ற பல வெளிநாட்டு அறிஞர்கள்தான் பழமைமிக்க தமிழை உலகளாவிய அளவிற்கு கொண்டு சென்றார்கள்.

இன்றைக்கு சுமார் 40 நாடுகளில் தமிழர்கள் பரவி வாழ்கிறார்கள், அந்தந்த நாடுகளில் தமிழ்ச் சங்கங்கள் இருக்கின்றன. வெளிநாட்டினரும் தமிழ் அறியா பிற மாநிலத்தவர் மற்றும் பிற நாட்டினர் தமிழ் பேசுகிறார்கள், தமிழ் எழுதுகிறார்கள்.

ஆனால், தமிழ் நாட்டிலேயே பிறந்து , தமிழ் நாட்டிலேயே வாழும் சிலர் பிற மொழி மோகத்தில் தமிழை தவிர்ப்பது, வேதனை அளிக்கிறது. ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைப்பதற்காக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு 10 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறது.

சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் தமிழ்மொழி தேசியமொழியாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. பொருள்தேடி கடல் கடந்து சென்று குடியேறிய நாடுகளிலும் தமிழர் என்ற தன் அடையாளத்தை, தன் பண்பாட்டை, மறக்காமல் இருக்கும் தமிழர்களின் மொழியுணர்வே அதற்குக் காரணம்.

இந்தியாவிலேயே முதன்முதலில் அச்சுக்கு வந்த மொழி தமிழ் என்பதைப்போலவே, முதன்முதலில் கணினிக்குள் புகுந்த மொழியும் தமிழ்தான். இன்று இணையதளம் தமிழ் இலக்கியங்களை உலகம் முழுவதும் கொண்டு சேர்க்கிறது.

‘தமிழ் விக்கிபீடியா’ வலை தளத்தை ஒரே நாளில் அதாவது 24 மணி நேரத்தில் சுமார் 3 இலட்சம் பேர் படிக்கின்றனர். இணையம் வழியாக தமிழ் பரவ நம் இளைஞர்கள் தான் காரணம். இதற்காக அவர்களுக்கு முதற்கண் என் மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவள்ளுவர், கம்பர், அவ்வையார், இளங்கோவடிகள், ஒட்டக்கூத்தர், காளமேகப்புலவர், பாரதியார், பாரதிதாசன் போன்ற பல தமிழ் புலவர்களை நாம் இன்னமும் நம்முடைய இதயத்தில் வைத்து போற்றி வருகிறோம்.

தமிழ் தான் அவர்களுக்கு சாகாவரம் கொடுத்தது. அதனால்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ‘தே மதுர தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்’ என்பதையே,

தாரக மந்திரமாக ஏற்று, உலகில் அதிக மக்கள் பேசும் சீனம், அரபு, கொரிய மொழிகளில் திருக்குறள், ஆத்திச்சூடி, பாரதியார், பாரதிதாசன் கவிதைகளை மொழிபெயர்க்கச் செய்து வெளியிட்டார்கள்,

இன்றைக்கு தமிழ்மொழி நீதி நூல் படைப்புகளாக உலகம் முழுவதும் பரவி தமிழுக்கு மகுடம் சூட்டியிருப்பதற்கு முழுமுதற்காரணம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்தான்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பிற மொழியில் உள்ள அரிய படைப்புகளை தமிழிலும், தமிழில் உள்ள அரிய நூல்களை பிறமொழிகளிலும் மொழிபெயர்க்கச் செய்வதன் மூலம் தமிழை, மேலும் வளர்க்க முடியும் என்று எண்ணித்தான், ‘மொழி பெயர்ப்பாளர் விருது’ உருவாக்கி, வருடாவருடம் சித்திரை புத்தாண்டு விழாவில் 10 சிறந்த மொழிப்பெயர்ப்பாளர்களுக்கு விருது வழங்கினார்கள். மாண்புமிகு அம்மாவின் அரசும் அதனை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

கீதை, பைபிள், குரான் போன்ற நூல்கள் உலகத்தின் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது நாம் அனைவரும் அறிந்ததே. ஆனால், எந்த மதத்தையும் சாராத திருக்குறள் தான் சுமார் 100 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட ஒரே நூல். திருக்குறளை சுமார் 140 பேர் மொழி பெயர்த்திருக்கிறார்கள்.

ஆங்கிலத்தில் மட்டும் சுமார் **50** பேர் மொழி பெயர்த்திருக்கிறார்கள். காரணம், உலக சமயத் தலைவர்கள், உலக சான்றோர்கள், அறிஞர்கள் கூறுகின்ற அத்தனை கருத்துக்களும், நீதிகளும் – ஒரே நூலில் கருத்துக் குவியலாக, நீதி களஞ்சியமாக இருக்கின்றன என்றால் அது திருக்குறளில் மட்டும்தான்.

வழி காட்டும் ஒளி விளக்காய் ஒளியூட்டும் பெருவிளக்காய், பிணி நீக்கும் அரு மருந்தாய், உணர்வூட்டும் உயர்மருந்தாய் – உலகத்தில் இணையற்று திகழ்வதுதான் திருக்குறள்.

தமிழ்தாய்க்கு அணிகலன்களாக சிலப்பதிகாரமும், சிந்தாமணியும், குண்டலகேசியும், வளையாபதியும் இன்னும் பல காப்பியங்களும் நீதி நூல்களும் அழகு சேர்த்தாலும், தன் கையில் திருக்குறளை செங்கோலாக வைத்துக் கொண்டுதான் தமிழ்த்தாய் உலகையே ஆட்சி செய்கிறாள். திருக்குறளைப் போல் அறம் சொன்ன நீதி நூல், உலகில் ஒரு சிலவே, அதனால்தான் இங்கிலாந்து நாட்டின் விக்டோரியா மகாராணி, காலையில் கண் விழித்ததும் திருக்குறளை முதலில் படிப்பார்.

திருக்குறளை படித்து உணர்வதற்கென்றே இன்னொரு பிறவி எடுத்து, தமிழனாக பிறக்கவேண்டும் என்று மகாத்மா காந்திஜி அவர்கள் கூறினார்கள். திருக்குறள் தொடர்பான தங்கக் காசு வெளியிட்டார் எல்லீசு என்ற ஆங்கிலேயே அதிகாரி.

ரஷ்யாவிலுள்ள கிரெம்ளின் மாளிகைச் சுரங்க அறையில் திருக்குறள் பத்திரமாக வைத்து பாதுகாக்கப்படுகிறது. கன்னியாகுமரி புதுடெல்லி விரைவு ரயிலுக்கு ‘திருக்குறள் எக்ஸ்பிரஸ்’ என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

திருநெல்வேலியிலுள்ள ஆசியாவின் முதல் ஈரடுக்கு மேம்பாலத்திற்கு ‘திருவள்ளுவர் மேம்பாலம்’ என்று பெயர் சூட்டியிருக்கின்றோம். திருவள்ளுவர் பெயரில் ஆயிரக்கணக்கான தமிழ்ச் சங்கங்கள் உலகமெங்கும் இயங்கி வருகிறது. திருவள்ளுவர் பெயரைக்கொண்டு தமிழையும் , தமிழைக்கொண்டு

திருவள்ளுவரையும் சிறப்பிக்க தமிழ் ஆண்டுகளை திருவள்ளுவர் ஆண்டு என்று அழைக்கப்படுகிறது.

திருக்குறள் ஒன்றாம் வகுப்பு பாடத்திட்டத்திலும் இருக்கிறது. ஆராய்ச்சி பாடத்திலும் இருக்கிறது. வயது வரம்பு இல்லாமல், எல்லோருக்கும், பொதுவான ஒரு வாழ்வியல் நூல் திருக்குறள் மட்டும் தான்.

இந்த பெருமை வேறு எந்த நூலுக்கும் , எந்த நாட்டிலும் கிடையாது. திருக்குறளுக்கு 226 பேர் உரை எழுதியுள்ளார்கள். ஒரு நூலை புகழ்ந்து பேச திருவள்ளுவமாலை என்னும் இன்னொரு நூல் எழுதப்பெற்றது திருக்குறளுக்கு மட்டும்தான்.

இன்றுவரை திருக்குறளைப் பற்றி ஆய்வுகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இன்றைக்கும் திருக்குறளை ஆய்வு செய்ய புதிய புதிய கருத்துகளும், சிந்தனைகளும் உருவாகின்றன.

அறம், பொருள், இன்பம் என்று முப்பாலாக திருக்குறள் பகுக்கப்பட்டுள்ளது.நூலை வடிப்பதைவிட நூலை படிப்பதை விட ஒரு நூலாக வாழ்வதே சிறந்தது. திருக்குறளில் கூறப்பட்டுள்ள குறள்களில் உள்ள கருத்துக்கள்படி, நாம் வாழ வேண்டும். அப்போதுதான் இந்தப் பிறவியும், வாழ்வும் நிறைவுபெறும்.

ஒரு தனிமனிதன் எப்படி வாழவேண்டும் ? ஒரு இல்லறம் எப்படி நடக்கவேண்டும் ? ஒரு சமுதாயம் எப்படி இயங்க வேண்டும் ? ஒரு மன்னன் எப்படி ஆட்சி செய்ய வேண்டும் ? ஒரு நாடு எப்படி இருக்க வேண்டும் ? என்று அத்தனை வழிமுறைகளும் திருக்குறளில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது வாழும் கலை முதல் ஆளும் கலை வரை கற்றுத் தரும் ஒரே நூல் திருக்குறள்.

ஒரு சமையல் நூலை வைத்துக் கொண்டு சுவையாக சமைத்து விடுவதைப்போல, ஒரு சுற்றுலா வரைபடத்தை வைத்துக்கொண்டு சிறப்பாக பயணம் மேற்கொள்வதைப்போல திருக்குறள் என்ற

ஒரே ஒரு நூலை கையில் வைத்துக்கொண்டு இவ்வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து விடலாம்.

எனவே, “வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாட்டில்” நாம் பிறந்ததற்காக பெருமைப்பட வேண்டும்.

‘தை பிறந்தால் வழி பிறக்கும்’ என்பார்கள். அதைப்போல ‘திருக்குறளை’ படித்தாலும் வாழ வழி கிடைக்கும். எனவே தான் ‘தை’ மாதத் தொடக்கத்திலேயே, பொங்கல் பண்டிகைக்கு அடுத்த நாளே வரும் பண்டிகையை நாம் திருவள்ளுவர் திருநாள் என்று கொண்டாடுகின்றோம்.

திருவள்ளுவன் உழவுத் தொழில்தான் உலகின் அச்சாணி என்று சொன்னதோடு, ‘சுழன்றும் ஏர் பின்னது உலகம்’ என்று ‘உழவனின் ஏரை மையப்புள்ளியாகக்கொண்டு தான் இந்த உலகம் சுற்றுகிறது’ என்றார்.

அதனால்தான் மூன்றாம் நாளை உழவர் திருநாள் என்று நாம் கொண்டாடுகின்றோம் வாழ வகை சொன்ன வள்ளுவரையும் வாழ உணவு கொடுக்கும் உழவரையும் ஒரே நேரத்தில் சிறப்பிக்கவே இந்த விழாவை நாம் பொங்கலின் மூன்றாம் நாளான உழவர் திருநாளில் வைத்திருக்கிறோம்.

காரணம், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், வயிற்றுப் பசியைப்போக்கும் உழவர்களையும் அறிவு பசியை போக்கும் புலவர்களையும் மிகவும் நேசித்தார்கள். அவர்களின் நலனில் அதிக அக்கறை எடுத்துக்கொண்டார்கள்.

நம் தாய்மொழி தமிழ் சுமார் 5000 ஆண்டுகால வரலாறு உடையது. தொல்காப்பியர் காலத்திலிருந்து, இன்று வரை தமிழின் தனித்தன்மையை, வழிவழியாக காத்து வருபவர்கள், நமது தமிழ் புலவர்களும், சான்றோர் பெருமக்களும் ஆவார்கள்.

ராஜ சபைக்கு வந்து, மன்னனின் புகழைப்பாடி பரிசு பெறுகிற புலவன் கூட, கையேந்திப் பரிசு பெற்றதில்லை. பரிசுத் தட்டுக்கும் மேல்தான் புலவனின் கை இருக்குமே தவிர, கீழே இருந்ததில்லை அப்படி தன்மானமும், ஞானமும் மிக்கவர்களாக புலவர்கள் இருந்தார்கள், வாழ்ந்தார்கள்.

எந்த நாட்டிலே புலவர்கள் ஆதரிக்கப்படுகிறார்களோ அந்த நாட்டில்தான் மொழி வளரும். ஆகவேதான், புலவர்களை ஆதரிக்கவேண்டும், தமிழ் மொழியை வளர்க்க வேண்டும், அவர்களுடைய படைப்புகளையெல்லாம் ஆதரித்து காப்பாற்ற வேண்டும் என பேரறிஞர் அண்ணா அவர்களும், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும் ‘விழிபோல எண்ணி நம் மொழி காக்க வேண்டும்’ என்ற எண்ணத்தில் தமிழறிஞர்களுக்கு புதிய புதிய விருதுகளை அளித்து சிறப்பித்தார்கள்.

❖ பேரறிஞர் அண்ணா அவர்கள் இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டையும்,

❖ மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டையும்,

❖ மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டையும் நடத்தி தமிழுக்கு புத்துணர்ச்சி ஊட்டினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழுக்கென்று தஞ்சையில் தமிழ் பல்கலைக்கழகத்தை தொடங்கி வைத்தார்கள். மதுரையில் உலகத் தமிழ் சங்கம் நிறுவ வேண்டும் என்று அறிவித்தார்கள். அதை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சுமார் 38 கோடி ரூபாய் செலவில் பெருந்திட்ட வளாகமாக செயல்படுத்தினார்கள்.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு ஓய்வூதியத் தொகை உயர்த்தி வழங்கப்படுகிறது. ஓய்வூதியம் பெறும் அறிஞர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது. பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு கட்டுரை, பேச்சு, கவிதை போன்ற போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன.

இலக்கியத்தில் ஆர்வம் மிக்க 200 கல்லூரி இளைஞர்களை ஒவ்வொரு ஆண்டும் தேர்வு செய்து 'இளந்தமிழர் இலக்கியப் பட்டறை' யின் மூலம் அவர்களுக்கு மொழி புத்துணர்வு அளிக்கப்படுகிறது.

தமிழின் பாதுகாப்பிலும், வளர்ச்சியிலும் பெரும் பாங்காற்றும் தமிழ் அறிஞர்களுக்கு நமது இருபெரும் தலைவர்களால் அறிவிக்கப்பட்டு இதுவரை 55 விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும் தமிழுக்கும் தமிழறிஞர்களுக்கும் பல்வேறு திட்டங்கள் மூலம் நற்பணி ஆற்றி வந்தார்கள். அவர்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டிலிருந்து சிறிதும் பிறழாமல், நாங்கள் தமிழ் தொண்டாற்றி வருகிறோம்.

அதன் வெளிப்பாடாகத்தான் இந்த இனிய திருவள்ளுவர் திருநாளில் தமிழ் தொண்டாற்றி வரும் ஏழு தமிழறிஞர்களுக்கும், சமுதாயத் தொண்டாற்றி வரும் இரண்டு பொதுநலவாதிகளுக்கும் இந்த மாபெரும் சபையில் பலருடைய பாராட்டுகளோடும், வாழ்த்துகளோடும், நான் விருதுகள் வழங்கி சிறப்பிக்க உள்ளேன்.

திருவள்ளுவர் விருது பெறும் முனைவர் கோ. பெரியண்ணன் அவர்களுக்கும், தந்தைபெரியார் விருது பெறும் திருமதி. பா. வளர்மதி அவர்களுக்கும், அண்ணல் அம்பேத்கர் விருது பெறும் டாக்டர் சகோதரர். ஜார்ஜ். கே.ஜே, அவர்களுக்கும், பேரறிஞர் அண்ணா விருது பெறும் திரு. அ. சுப்ரமணியன் அவர்களுக்கும், பெருந்தலைவர் காமராசர் விருது பெறும் திரு. தா. ரா. தினகரன் அவர்களுக்கும், மகாகவி பாரதியார் விருது பெறும் முனைவர்

சு. பாலசுப்ரமணியன் (எ) பாரதிபாலன் அவர்களுக்கும், பாவேந்தர் பாரதிதாசன் விருது பெறும் திரு. கே. ஜீவபாரதி அவர்களுக்கும், தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது பெறும் எழுத்தாளர் திரு. வை.பாலகுமாரன் அவர்களுக்கும், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது பெறும் முனைவர் ப.மருதநாயகம் அவர்களுக்கும் தமிழ்நாடு அரசின் சார்பில் எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சங்க காலத்திலும் சரி, சங்கம் மருவிய காலத்திலும் சரி, ஒரு படைப்பாளியை, சங்கம் சாதாரணமாக அங்கீகரித்ததில்லை. அவரது படைப்பைப் பற்றி, மதுரை தமிழ்ச் சங்கத்தில் உள்ள பெரும் புலவர்களால் ஆய்வு செய்யப்பட்ட பிறகே, அவர் சிறந்த புலவர் என ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கிறது. அவர்களுடைய இலக்கியமும் அரங்கேற்றப்படும். தெய்வப் புலவர் திருவள்ளுவரும், அவர் இயற்றிய உலகப் பொதுமறை திருக்குறளும் கூட தமிழ்ச் சங்கத்தில் பல சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட பிறகே, அரங்கேற்றம் செய்யப்பட்டதாக நான் கேள்விப்பட்டு இருக்கிறேன்.

தமிழ்ச் சங்கத்தில், எப்படியும் திருக்குறளை அரங்கேற்றிவிட வேண்டும் என்ற எண்ணத்தில், தமிழ் மூதாட்டி ஔவையார் மற்றும் பெரும்புலவர் இடைக்காட்டு சித்தர் ஆகியோரை அழைத்துக் கொண்டு, தமிழ்ச் சங்கத்திற்கு திருவள்ளுவர் சென்றதாகவும், அங்கே அறிவும், புலமையும் மிக்க சான்றோர்கள் சபையில், பல சான்றோர்களுடைய கேள்விக் கணைகளையும், சந்தேகங்களையும் எதிர்கொண்டு, திருவள்ளுவர் வெற்றி பெற்ற பிறகே, சபையில் இருந்த முதுபெரும் புலவர்கள் எல்லாம் ஒருமனதாக திருக்குறளை ஏற்றுக் கொண்டார்கள். அதன் பிறகே, திருக்குறள் அரங்கேற்றப்பட்டதாகவும் கூறுவார்கள்.

அரங்கேற்றம் முடிந்ததும், அங்கிருந்த புலவர்கள் சிலர், இடைக்காட்டு சித்தரிடம் திருக்குறளைப் புகழ்ந்து, திருக்குறளைப் போலவே இரண்டு வரியில் பாடுமாறு கேட்கவே, அவரும்,

“கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகுத்தி குறுகத் தரித்த குறள்” எனப்பாடி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியிருக்கிறார். அங்கிருந்த தமிழ் மூதாட்டி ஔவையாரிடமும், திருக்குறளைப் புகழ்ந்து பாடும்படி புலவர்கள் கேட்கவே, புலவர்களுக்கு எல்லாம் புலவர் திருவள்ளுவரைப் பற்றி மிகப்பெரிய கருத்தை பாடிய பிறகு, அதற்கு மேல் நான் என்ன பாடப் போகிறேன், வேண்டுமானால் அவர் பாடிய “கடுகைத் துளைத்து ஏழ் கடலை புகுத்திய” என்ற வரியில் கடுகுக்குப் பதிலாக, “அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகுத்தி குறுகத் தரித்த குறள்” என்று பாடியதாகச் சொல்வார்கள்.

இன்று விருது பெறும் நீங்கள் இன்னும் பல உயரிய விருதுகளைப் பெற்று நீண்ட நெடுங்காலம் தமிழ் வாழ்வதற்காக நீங்கள் வாழ வேண்டுமென்று வாழ்த்துகிறேன். ‘பிறந்த நாடே சிறந்த கோயில் பேசும் மொழியே தெய்வம் என்பதை மறந்திடாமல் வாழ்ந்து வந்தால் கொள்கை கோபுரமாகும்’ என்று கூறிக்கொள்வதோடு பூமிக்கு வந்த புண்ணியம் ஏழைகளின் இல்லங்களில் விளக்கேற்றிய ஒளி விளக்கு தாய்மையின் உறைவிடம் தர்மத்தின் மறு உருவம் உலக தமிழர்களின் காவலர் அன்னைத் தமிழ் பூமியில் உயர்ந்து நிற்கும் ‘அம்மா’ என்னும் கோபுரத்தையும், அறிவுத் திருக்கோயிலான திருவள்ளுவரையும் வணங்கி நிறைவு செய்கிறேன்.

வருகை தந்துள்ள அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் என்னுடைய இதயங்கனிந்த பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள்*
__16.1.2018__ அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை.

மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் புனிதமானவை; அவற்றை நிறைவேற்றுவது எனது தலையாய கடமை.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி** K.**பழனிசாமி** அவர்கள்